வெளியீடு 18-3-2003

Issued 18-3-2003

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, மே 3, 2002 – தொகுதி 27 – எண் 1

**Friday the 3rd May, 2002 – Volume 27 – No. 1**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George.**

**Chennai - 600 009**

**[Price Rs. 3.00**

359/2005

3-5-2002

## உள்ளடக்கம்


பக்கங்கள்

ஆளுநரும் அமைச்சரவையும் v-ix

**Governor and Council of Ministers** xi-xiv

பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் xv-xix

பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) xxi-xxxi

1. வினாக்கள்-விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள் 1-49

2. தகவல் கோரல்—

(அ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்பு 50

(ஆ) காவிரி நீர் 2001-2002-ல் பெறப்பட்ட அளவு 50-52

3. கவன ஈர்ப்பு—

(அ) வைகை ஆறு மற்றும் அதன் அருகில் விதிகளுக்குப் புறம்பாக மண் எடுத்தல் 53-57

(ஆ) கைத்தறித் துணிகள் தேக்கத்தால் நெசவாளர்கள் பாதிப்பு 58-65

4. அறிக்கை அளித்தல்—

(அ) பொதுக் கணக்குக் குழு 65

(ஆ) பொது நிறுவனங்கள் குழு 65-66

(இ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு 66

5. மானியக் கோரிக்கைகள் 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி


| | |
|---|---|
| (அ) கோரிக்கை எண் 46 - போக்குவரத்துத் துறை<br>(ஆ) கோரிக்கை எண் 24 - உள் துறை - இயக்கங்கள் குறித்த சட்டங்கள் நிருவாகம் | 66-230 |
| மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன் | 66, 80, 85, 87, 88, 89-90, 91, 94, 95, 96, 97, 98, 107, 109, 111, 120-121, 127-128, 129, 130, 131, 133-134, 135, 179-229 |
| திரு. எ.வ. வேலு | 86-102 |
| திரு. ஆர். சாமி | 101, 103-106, 111-118 |
| திரு. சு. சிவராஜ் | 119-124 |
| திரு. ஐ. கணேசன் | 124-127, 136-142 |
| திரு. கே. கோபிநாத் | 142-150 |
| திரு. ந. இராமு | 150-155 |
| திரு. ஜே. ஹேமச்சந்திரன் | 156-166, 221 |
| திரு. வை. சிவபுண்ணியம் | 166-175 |
| திரு. ஜெக. வீரபாண்டியன் | 175-179, 226 |




225507

பக்கங்கள்

5. மானியக் கோரிக்கைகள் 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி


| | |
|---|---|
| (இ) கோரிக்கை எண் 3 - நீதி நிருவாகம்<br>(ஈ) கோரிக்கை எண் 32 - சட்டத் துறை | 231-244 |
| (உ) கோரிக்கை எண் 31 - தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | 244-313 |
| மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் | 231, 239, 243-244, 274-275 |
| மாண்புமிகு திரு. வ. து. நடராஜன் | 244, 252, 265, 266, 275, 276, 277, 278, 286, 287 |
| டாக்டர் க. பொன்முடி | 253-269, 275 |
| திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன் | 269-274 |
| திரு. கோவை தங்கம் | 277-286 |
| திரு. மே.ப. காமராஜ் | 287-293 |
| திருமதி எஸ். மகேஸ்வரி | 293-300 |
| திரு. கே.சி. கருணாகரன் | 253, 300-307 |
| திரு. ஏ.எஸ். கண்ணன் | 307-313 |
| 6. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்— | 314-318 |

# ஆளுநரும் அமைச்சரவையும்

## ஆளுநர்—திரு. பெ.ஸ்ரீ. ராமமோகன் ராவ்

## அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. முதலமைச்சர் .. மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா :

   பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை மற்றும் சிறுபான்மையினர் நலன்.

2. பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் :

   பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள், சிறுபாசனம் உட்பட பாசனம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, இலஞ்ச ஒழிப்பு மற்றும் சிறைகள்.

3. நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

   நிதி, திட்டமிடல், தேர்தல் மற்றும் சட்டமன்றம், சட்டமியற்றல், எடைகள், மற்றும் அளவைகள், கடன் கொடுத்தல் மீதான சட்டம் உட்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள், நிறுவனங்களைப் பதிவு செய்தல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல்.

**4. கல்வி அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:**

கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல், விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், தொல்பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

**5. சட்டத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் :**

சட்டம் மற்றும் நீதிமன்றங்கள்.

**6. இந்து-சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி :**

இந்து-சமய மற்றும் அறநிலையங்கள்.

**7. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. செ. செம்மலை :**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி, குடும்ப நலன்.

**8. உள்ளாட்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி. துரைராஜ் :**

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

**9. கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ப. தனபால் :**

கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், விலைக் கட்டுப்பாடு மற்றும் புள்ளியியல்.



**10. வருவாய்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம் :**

வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத் தாள் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம் மற்றும் கடவுச் சீட்டுகள்.

**11. வேளாண்மைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம் :**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு.

**12. சமூக நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி :**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு இல்லங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.

**13. ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி :**

ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.

**14. போக்குவரத்துத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன் :**

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம், துறைமுகங்கள்.

15. மின்துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன் :**
மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு.

16. தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி :**
தொழிற்சாலைகள், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள், கனிமங்கள், மின்னணுவியல் மற்றும் வணிக வரிகள்.

17. வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ப. மோகன் :**
வனம், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.

18. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இரா. விஸ்வநாதன் :**
குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள், கதர் கிராமத் தொழில் வாரியம்.

19. வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் :**
வீட்டுவசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

20. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் :**
கால்நடை பராமரிப்பு.

21. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே. சுதர்சனம் :**
பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்.



22. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. வ.து. நடராஜன் :**
தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வக்ஃபு.

23. பால் வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன் :**
பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.

24. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. க.க. பாலசுப்ரமணியன் :**
செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம், செய்தித்தாள் கட்டுப்பாடு.

25. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம் :**
கைத்தறி மற்றும் துணித் தொழில்.

26. மீன் வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன் :**
மீன்வளம்.

27. சுற்றுலாத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அ. மில்லர் :**
சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

# GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR—Thiru P.S. RAMAMOHAN RAO

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | |
|---|---|---|
| 1. | **Chief Minister** | .. **The Hon. Selvi J Jayalalithaa:** Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police and Minorities Welfare. |
| 2. | **Minister for Public Works and Prohibition and Excise** | .. **The Hon. Thiru O. Panneerselvam:** Public Works, Highways, Irrigation including Minor irrigation, Prohibition and Excise, Molasses, Prevention of Corruption and Prisons. |
| 3. | **Minister for Finance and Information Technology** | .. **The Hon. Thiru C. Ponnaiyan:** Finance, Planning, Elections and Legislature, Legislation, Weights and Measures, Debt Relief including Legislation on Money lending, Chits and Registration of Companies and Information Technology. |
| 4. | **Minister of Education** | .. **The Hon. Dr. M. Thambidurai:** Education, Technical Education, Science and Technology, Sports and Youth Welfare, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians Overseas, Refugees and Evacuees. |

5. **Minister for Law** .. **The Hon. Thiru D. Jayakumar:**

Law and Courts.

6. **Minister for Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Thiru P.C. Ramasamy:**

Hindu Religious and Charitable Endowments.

7. **Minister for Health** .. **The Hon. Thiru S. Semmalai:**

Health, Medical Education and Family Welfare.

8. **Minister for Local Administration** .. **The Hon. Thiru C. Durairaj:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply.

9. **Minister for Co-operation, Food and Civil Supplies and Consumer Protection** .. **The Hon. Thiru P. Dhanabal:**

Co-operation, Food, Civil Supplies, Price Control and Statistics.

10. **Minister for Revenue** .. **The Hon. Thiru N. Thalavai Sundaram:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery and Printing, Government Press, Bhoodhan and Gramdhan and Passports.

11. **Minister for Agriculture** .. **The Hon. Thiru R. Jeevanantham:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development.



12. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. B. Valarmathi:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration.

13. **Minister for Adi-Dravidar Welfare** .. **The Hon. Thiru S. Karuppasamy:**

Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-Servicemen.

14. **Minister for Transport** .. **The Hon. Thiru R. Viswanathan:**

Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

15. **Minister for Electricity** .. **The Hon. Thiru Nainar Nagendran:**

Electricity, Non-conventional Energy Development.

16. **Minister for Industries and Commercial Taxes** .. **The Hon. Thiru Se. Ma. Velusamy:**

Industries, Iron and Steel Control, Mines and Minerals, Electronics and Commercial Taxes.

17. **Minister for Forests and Environment** .. **The Hon. Thiru P. Mohan:**

Forests and Environment and Pollution Control.

18. **Minister for Rural Industries** .. **The Hon. Thiru R. Viiwanathan:**

Rural Industries including Cottage Industries, Small Scale Industries, Khadi and Village Industries Board.

19. **Minister for Housing and Urban Development** .. **The Hon. Thiru M.C. Sampath:**

Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and C.M.D.A.,

20. **Minister for Animal Husbandry** .. **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:**

Animal Husbandry.

21. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru K. Sudarsanam:**

Backward Classes, Most Backward Classes and De-notified Communities.

22. **Minister for Labour** .. **The Hon. Thiru Va. Thu. Natarajan:**

Labour, Employment and Training, Urban and Rural Employment, Census and Wakfs.

23. **Minister for Dairy Development** .. **The Hon. Thiru S. Ramachandran:**

Milk and Dairy Development.

24. **Minister for Information and Publicity** .. **The Hon. Thiru K.K. Balasubramanian:**

Information and Publicity, Film Technology, Cinematograph Act, Newsprint Control.

25. **Minister for Handlooms and Textiles** .. **The Hon. Thiru V. Somasundaram:**

Handlooms and Textiles.

26. **Minister for Fisheries** .. **The Hon. Thiru M. Radhakrishnan:**

Fisheries.

27. **Minister for Tourism** .. **The Hon. Thiru A. Miller:**

Tourism and Tourism Development Corporation.



## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

*பேரவைத் தலைவர்*

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து**

*பேரவைத் துணைத் தலைவர்*

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம்**

*மாற்றுத் தலைவர்கள்**

**திரு. பி.ஆர். சுந்தரம்**

**திரு. அ. பாப்பா சுந்தரம்**

**திரு. ப. இராஜரெத்தினம்**

**திரு. எம்.ஏ. ஹக்கீம்**

**திரு. செ.கு. தமிழரசன்**

**திரு. லா. சந்தானம்**

*முதன்மைச் செயலாளர்*

**திரு. செ.சு. ஜானகிராமன்**

*செயலாளர்*

**திரு. வெ. இராசாராமன்**

---

*12-3-2002 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | | |
|---|---|---|
| திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்.சி., பி.ஜி.எல். | .. | கூடுதல் செயலாளர் |
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல்., | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல்., | .. | இணைச் செயலாளர் |
| திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| திரு. செ. சந்திரகுமார், எம்.ஏ., பி.ஜி.எல்., | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி வீ.நா. உமா, பி.ஏ., (விடுப்பு) | .. | குழு அலுவலர் |
| திரு. தி. திருமாவளவன், பி.எஸ்.சி., பி.எல்., | .. | துணைச் செயலாளர் |
| திரு. வே. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. | பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| திரு. சி. சடகோபி, எம்.ஏ., எம்.பி.ஏ., | .. | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| திரு. சு. ராஜகுரு | .. | குழு அலுவலர் |
| திரு. கு. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்.சி., பி.எல்., | .. | துணைச் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ., | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. | துணைச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல்., | .. | **துணைச் செயலாளர்** |
| திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | .. | **துணைச் செயலாளர் (பதிப்பாளர்)** |
| திரு. மா. செல்வராஜ், பி.எஸ்.சி., பி.எல்., | .. | **துணைச் செயலாளர்** |
| திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல்., | .. | **குழு அலுவலர்** |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல்., | .. | **குழு அலுவலர்** |
| திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ., (விடுப்பு) | .. | **துணைச் செயலாளர் (பதிப்பாளர்)** |
| திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ., | .. | **குழு அலுவலர்** |
| திரு. டி கோவிந்தராஜு எம்.ஏ., பி.எல். | .. | **சார்புச் செயலாளர்** |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்.சி., பி.எல்., | .. | **சார்புச் செயலாளர்** |
| திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்.சி., பி.எல்., | .. | **சார்புச் செயலாளர்** |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல்., | .. | **சார்புச் செயலாளர்** |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல்., | .. | **சார்புச் செயலாளர்** |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | **தலைமை நிருபர்** |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல்., | .. | **சார்புச் செயலாளர்** |
| திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல்.,, | .. | **தலைமை நிருபர்** |
| திரு. தி. உமாபதி, பி.ஏ., | .. | **தலைமை நிருபர்** |



| | | |
|---|---|---|
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல்., | .. | சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ., | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி ச. இரா. சுகுணா, பி.ஏ., (விடுப்பு) | .. | தலைமை நிருபர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல்., | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. ந. ருத்திரமணி, எம்.ஏ., | .. | சார்புச் செயலாளர் |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ., | .. | சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ., | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம்., | .. | தலைமை நிருபர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல்., | .. | தலைமை நிருபர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | .. | தலைமை நிருபர் |
| செல்வி சு. வத்சலா, பி.ஏ., பி.ஜி.எல்., | .. | சார்புச் செயலாளர் |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள்

### (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. அசோகன், திரு. அ. | .. | திருவாரூர் (செ.வ.) |
| 2. அண்ணாதுரை, திரு. செ. | .. | ஜெயங்கொண்டம் |
| 3. அண்ணாமலை, திரு. கு. | .. | தென்காசி |
| 4. அண்ணாவி, திரு. ப. | .. | தொட்டியம் |
| 5. அப்பாவு, திரு. மு. | .. | ராதாபுரம் |
| 6. அய்யாறு வாண்டையார், திரு. கே. | .. | திருவையாறு |
| 7. அரசன், திரு. ப. | .. | அறந்தாங்கி |
| 8. அருணாசலம், திரு. அ. | .. | வரகூர் (செ.வ.) |
| 9. அருள், திரு. பி.எஸ். | .. | புவனகிரி |
| 10. அழகம்மாள், திருமதி, வி. | .. | தலைவாசல் (செ.வ.) |
| 11. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. | திருச்செந்தூர் |
| 12. அன்பழகன், திரு. ஆ.கு.சி. | .. | பெரணமல்லூர் |
| 13. அன்பழகன், திரு. கு. | .. | நிலக்கோட்டை (செ.வ.) |
| 14. அன்பழகன், திரு. கே.பி. | .. | பாலக்கோடு |
| 15. அன்பழகன், திரு. ஜெ. | .. | தியாகராய நகர் |
| 16. அன்பழகன், பேராசிரியர் க. | .. | துறைமுகம் |
| 17. அன்பில் பெரியசாமி, திரு. | .. | திருச்சிராப்பள்ளி-2 |
| 18. அன்வர் ராஜா, திரு. அ. | .. | இராமநாதபுரம் |
| 19. ஆண்டிவேல், திரு. ப. | .. | வேடசந்தூர் |
| 20. ஆறுமுகம், திரு. கே. | .. | செங்கல்பட்டு |

21. ஆறுமுகம், திரு. த. .. திருவொற்றியூர்
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணா நகர்
23. ஆஸ்டின், திரு. .. நாகர்கோவில்
24. இரவிராஜ், திரு. கோ. .. திருத்தணி
25. இராசேந்திரன், திரு. சி. .. திருவோணம்
26. இராசேந்திரன், திரு. சோ. .. கோவில்பட்டி
27. இராமசாமி, திரு. கே.ஆர். .. திருவாடனை
28. இராமசாமி, திரு. பி.சி. .. மொடக்குறிச்சி
29. இராமச்சந்திரன், திரு. எஸ். .. கலசப்பாக்கம்
30. இராமச்சந்திரன், திரு. ஒ.ஆர். .. கம்பம்
31. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். .. சாத்தூர்
32. இராமு, திரு. ந. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
33. இராம் பிரபு, திரு. இரா. .. பரமக்குடி (செ.வ.)
34. இராஜசேகர், திரு. மா. .. ராஜபாளையம் (செ.வ.)
35. இராஜரெத்தினம், திரு. ப. .. பெரம்பலூர் (செ.வ.)
36. இராஜா, திரு. டி.கே. .. திருப்பத்தூர்
37. இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. .. பத்மநாபபுரம்
38. இராஜேந்திரன், திரு. பி.ஜி. .. ஆலங்குளம்
39. இலட்சுமணன், திரு. கே.என். .. மயிலாப்பூர்
40. இளவழகன், திரு. ப. .. அரியலூர்
41. இளையகண்ணு, திரு. கா.தி. .. ஏற்காடு (ஆ.வா.)
42. இன்பத் தமிழன், திரு. இரா.தா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
43. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)



44. உசேன், திரு. எஸ்.ஏ.எம். .. திருவல்லிக்கேணி
45. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்
46. உமாதேவன், திரு. கே.கே. .. திருப்பத்தூர்
47. உலகரட்சகன், திரு. பி.எஸ். .. செய்யாறு
48. ஏழுமலை, திரு. வெ. .. செஞ்சி
49. கணபதி, திரு. ந. .. வானூர் (செ.வ.)
50. கணேசன், திரு. ஐ. .. எடப்பாடி
51. கணேசன், திரு. ஆர்.டி. .. தேனி
52. கண்ணன், திரு. ஏ.எஸ். .. பொன்னேரி (செ.வ.)
53. கந்தசாமி, திரு. க.ரா. .. சத்தியமங்கலம்
54. கந்தசாமி, திரு. கா. .. குன்னூர் (செ.வ.)
55. கருணாகரன், திரு. கே.சி. .. சிங்காநல்லூர்
56. கருணாநிதி, திரு. மு. .. சேப்பாக்கம்
57. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செவ)
58. கருப்பணன், திரு. கே.சி. .. பவானி
59. கருப்பாயி, டாக்டர் ஆ. .. குளத்தூர் (செ.வ.)
60. கலாவதி, திருமதி கு. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
61. கனகதாரா, செல்வி சி. .. பேரணாம்பட்டு (செ.வ.)
62. கனிதா சம்பத், திருமதி எஸ். .. திருப்போரூர் (செ.வ.)
63. காசாம்பு பூமாலை, திருமதி .. சங்கராபுரம்
64. காமராஜ், திரு. மே.ப. .. தாரமங்கலம்
65. கார்த்தி, திரு. மு. .. சேலம்-2
66. காளிமுத்து, டாக்டர் கா. .. திருமங்கலம்

67. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. .. அரூர் (செ.வ.)
68. கிருஷ்ணன், திரு. ஆர். .. அந்தியூர் (செ.வ.)
69. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்
70. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. .. ஆண்டிமடம்
71. கோதண்டராமன், திரு. ஜி. .. முகையூர்
72. கோபிநாத், திரு. கே. .. ஓசூர்
73. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். .. விருத்தாசலம்
74. கோவிந்தராஜ், திரு. வெ. .. கிருஷ்ணகிரி
75. கோவை தங்கம், திரு. .. வால்பாறை (செ.வ.)
76. சக்திவேல் முருகன், திரு. எம். .. அம்பாசமுத்திரம்
77. சக்ரபாணி, திரு. ஆர் .. ஒட்டன்சத்திரம்
78. சசிகலா, திருமதி ஆர். .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
79. சண்முகநாதன், திரு. எஸ்.பி. .. ஸ்ரீவைகுண்டம்
80. சண்முகம், திரு. சி. .. பூந்தமல்லி
81. சண்முகம், திரு. சி.வி. .. திண்டிவனம்
82. சண்முகவேலு, திரு. சி. .. உடுமலைப்பேட்டை
83. சந்தானம், திரு. லா. .. உசிலம்பட்டி
84. சந்திரசேகரன், திரு. எம்.எஸ். .. இராணிப்பேட்டை
85. சந்திரமோகன், திரு. நா. .. சீர்காழி (செ.வ.)
86. சந்திரன், திரு. வீ. .. சிவகங்கை
87. சம்பத், திரு. எம்.சி. .. நெல்லிக்குப்பம்
88. சரவணன், திரு. துரை. இ. .. சிதம்பரம்
89. சரோஜா, திருமதி இரா. .. உப்பிலியாபுரம் (ஆ.வா.)



90. சாமி, திரு. ஆர். .. மேலூர்
91. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
92. சிதம்பரம், திரு. ப. .. பவானிசாகர்
93. சிவகாமி, திருமதி வி. .. தாராபுரம் (செ.வ.)
94. சிவசாமி, திரு. கே.கே. .. அருப்புக்கோட்டை
95. சிவசாமி, திரு. சி. .. திருப்பூர்
96. சிவசுப்பிரமணியன், திரு. டி.என். .. கரூர்
97. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
98. சிவபெருமாள், திரு. அ. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
99. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்
100. சின்னசாமி, திரு. மா. .. பழனி (செ.வ.)
101. சீனிவேல், திரு. எஸ்.எம். .. திருப்பரங்குன்றம்
102. சுதர்சனம், திரு. கே. .. கும்மிடிப்பூண்டி
103. சுதர்சனம், திரு. டி. .. திருவள்ளூர்
104. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்
105. சுந்தராம்பாள், திருமதி செ. .. மேட்டூர்
106. சுப்பிரமணியன், திரு. வீ. .. கண்டமங்கலம் (செ.வ.)
107. சுப்பையா பாண்டியன், திரு. எம். .. கடையநல்லூர்
108. சூரியகலா, திருமதி சி.எம். .. குடியாத்தம்
109. செம்மலை, திரு. செ. .. ஓமலூர்
110. செல்லையா, திரு. வி.ஏ. .. மருங்காபுரி
111. செல்வம், திரு. எஸ்.கே. .. வீரபாண்டி
112. செல்வராஜ், திரு. ஏ.கே. .. மேட்டுப்பாளையம்

| | | |
|---|---|---|
| 113. செல்வி முருகேசன், திருமதி | .. | காங்கேயம் |
| 114. சேகரன், திரு. கே.என். | .. | திருவெறும்பூர் |
| 115. சேகர்பாபு, திரு. பி.கே. | .. | டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் |
| 116. சோமசுந்தரம், திரு. வி. | .. | உத்திரமேரூர் |
| 117. ஞானசேகரன், திரு. சி. | .. | வேலூர் |
| 118. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. | .. | திருநாவலூர் |
| 119. தமிழரசன், திரு. செ.கு. | .. | நன்னிலம் (செ.வ.) |
| 120. தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி | .. | மேல்மலையனூர் |
| 121. தம்பிதுரை, டாக்டர் மு. | .. | பர்கூர் |
| 122. தவமணி, திரு. க. | .. | திருவிடைமருதூர் |
| 123. தளவாய் சுந்தரம், திரு. ந. | .. | கன்னியாகுமரி |
| 124. தனபால், திரு. ப. | .. | சங்கரி (செ.வ.) |
| 125. தாமோதரன், திரு. எஸ். | .. | விருதுநகர் |
| 126. தாமோதரன், திரு. செ. | .. | கிணத்துக்கடவு |
| 127. தாமோதிரன், திரு. ப.வெ. | .. | பொங்கலூர் |
| 128. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. | .. | பேராவூரணி |
| 129. திருநாவுக்கரசு, திரு. எஸ்.எஸ். | .. | காஞ்சிபுரம் |
| 130. திருமாவளவன், திரு. இரா. | .. | மங்களூர் (செ.வ.) |
| 131. துரைமுருகன், திரு. | .. | காட்பாடி |
| 132. துரைராஜ், திரு. சி. | .. | சேடப்பட்டி |
| 133. தென்னரசு, திரு. கே.எஸ். | .. | ஈரோடு |
| 134. நடராஜன், திரு. அ. | .. | குத்தாலம் |



| | | |
|---|---|---|
| 135. நடராஜன், திரு. எஸ். | .. | நாட்ராம்பள்ளி |
| 136. நடராஜன், திரு. பி.கே.டி. | .. | ஆத்தூர் |
| 137. நடராஜன், திரு. வது. | .. | இளையான்குடி |
| 138. நயினார் நாகேந்திரன், திரு. | .. | திருநெல்வேலி |
| 139. நரசிம்மன், திரு. பி.எம். | .. | பள்ளிப்பட்டு |
| 140. நளினி மனோகரன், திருமதி | .. | போளூர் |
| 141. நன்மாறன், திரு. என். | .. | மதுரை கிழக்கு |
| 142. நீலகண்டன், திரு. ப. | .. | ஆற்காடு |
| 143. நெப்போலியன், திரு. து. | .. | வில்லிவாக்கம் |
| 144. பச்சைமால், திரு. தா. | .. | குளச்சல் |
| 145. பதினெட்டாம்படியான், திரு. க. | .. | முதுகுளத்தூர் |
| 146. பரணிகுமார், திரு. பா. | .. | திருச்சிராப்பள்ளி-I |
| 147. பரிதி இளம்வழுதி, திரு. | .. | எழும்பூர் (செ.வ.) |
| 148. பவானி கருணாகரன், திருமதி கே. | .. | அரக்கோணம் (செ.வ.) |
| 149. பழனிசாமி, திரு. கே.எஸ். | .. | பெருந்துறை |
| 150. பழனிசாமி, திரு. ஜி. | .. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 151. பழனியப்பன், திரு. பெ. | .. | மொரப்பூர் |
| 152. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. | .. | குறிஞ்சிப்பாடி |
| 153. பன்னீர்செல்வம், திரு. ஓ. | .. | பெரியகுளம் |
| 154. பாண்டுரங்கன், திரு. கே. | .. | அணைக்கட்டு |
| 155. பாப்பா சுந்தரம், திரு. அ. | .. | குளித்தலை |
| 156. பாரமலை, திரு. க. | .. | மானாமதுரை (செ.வ.) |
| 157. பாரிமோகன், திரு. கி. | .. | தருமபுரி |

158. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. கடலாடி
159. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். .. தொண்டாமுத்தூர்
160. பாலசுப்ரமணியன், திரு. க.க. .. ஸ்ரீரங்கம்
161. பாலபாரதி, செல்வி க. .. திண்டுக்கல்
162. பாலன், திரு. எஸ்.எம். .. லால்குடி
163. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். .. சேரன்மகாதேவி
164. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
165. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
166. பூபதி மாரியப்பன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)
167. பெருமாள், திரு. என்.கே. .. விளாத்திகுளம்
168. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
169. பொன்னம்பலம், திரு. ப. .. சமயநல்லூர் (செ.வ.)
170. பொன்னையன், திரு. சி. .. திருச்செங்கோடு
171. போளூர் வரதன், திரு. .. செங்கம் (செ.வ.)
172. மகாலிங்கம், திரு. எஸ். .. அவினாசி (செ.வ.)
173. மகேந்திரன், திரு. கே. .. பெரம்பூர் (செ.வ.)
174. மகேஸ்வரி, திருமதி எஸ். .. கோயம்புத்தூர் மேற்கு
175. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
176. மணி, திரு. டி. .. விளவங்கோடு
177. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்
178. மணி நாடார், திரு. எஸ்.எஸ். .. சாத்தான்குளம்
179. மலையப்பசாமி, திரு. அ.இரா. .. கபிலர்மலை



180. மல்லிகா சின்னசாமி, திருமதி .. முசிறி
181. மாணிக்கராஜ், திரு. எஸ். .. நாங்குநேரி
182. மில்லர், திரு. அ. .. கூடலூர்
183. முரளிதரன், திரு. கே.வி. .. தளி
184. முருகவேல் ராஜன், திரு. க. .. வந்தவாசி (செ.வ.)
185. முருகேசன், திரு. ஆகு. .. ஆத்தூர்
186. முனுசாமி, திரு. கா.பூ. .. காவேரிப்பட்டினம்
187. மைதீன்கான், திரு. டி.பி.எம். .. பாளையங்கோட்டை
188. மோகன், திரு. ப. .. சின்னசேலம்
189. யசோதா, திருமதி டி. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
190. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
191. ரங்கராஜன், திரு. என்.ஆர். .. பட்டுக்கோட்டை
192. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். .. கோபிசெட்டிப்பாளையம்
193. ராதாகிருஷ்ணன், திரு. எம். .. திருமயம்
194. ராமராஜ், திரு. ச. .. போடிநாயக்கனூர்
195. ராம்குமார், திரு. எம். .. பாபநாசம்
196. ராஜகோபால், திரு. ஆ. .. சிவகாசி
197. ராஜம்மாள், திருமதி எஸ். .. தூத்துக்குடி
198. ராஜா, திரு. எச். .. காரைக்குடி
199. ராஜாங்கம், திரு. வி.ஆர். .. சோழவந்தான்
200. ராஜு, திரு. எச்.எம். .. உதகமண்டலம்
201. ரெங்கநாதன், திரு. என். .. பூம்புகார்
202. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. .. பேரூர்

| | |
|---|---|
| 203. லட்சுமணன், திரு. வி.கே. | .. கோயம்புத்தூர் கிழக்கு |
| 204. லியாவுதீன் சேட், திரு. இ.ஏ. | .. அரவக்குறிச்சி |
| 205. வளர்மதி, திருமதி பா. | .. ஆலந்தூர் |
| 206. வளர்மதி ஜெபராஜ், திருமதி | .. மதுரை மேற்கு |
| 207. வள்ளல் பெருமான், டாக்டர் பி. | .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 208. வாசுதேவன், திரு. பெ. | .. மதுராந்தகம் |
| 209. விசுவநாதன், திரு. இரா. | .. நத்தம் |
| 210. வில்வநாதன், திரு. இரா. | .. சோளிங்கர் |
| 211. வினாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. | .. பூங்கா நகர் |
| 212. விஜயபாஸ்கர், டாக்டர் சி. | .. புதுக்கோட்டை |
| 213. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. | .. பனமரத்துப்பட்டி |
| 214. வீரபாண்டியன், திரு. ஜெக. | .. மயிலாடுதுறை |
| 215. வெங்கடாசலம், திரு. அ. | .. ஆலங்குடி |
| 216. வெங்கடாஜலம், திரு. செ. | .. சேலம்-I |
| 217. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. வேதாரண்யம் |
| 218. வேலுசாமி, திரு. செ.ம. | .. பல்லடம் |
| 219. வேலு, திரு. எ.வ. | .. தண்டராம்பட்டு |
| 220. வேல் முருகன், திரு. தி. | .. பண்ருட்டி |
| 221. வைதியலிங்கம், திரு. மீ.அ. | .. தாம்பரம் |
| 222. வைத்திலிங்கம், திரு. ஆர். | .. ஒரத்தநாடு |
| 223. ஜீவானந்தம், திரு. இரா. | .. நாகப்பட்டினம் |
| 224. ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. | .. ஆரணி |



| | |
|---|---|
| 225. ஜெயக்குமார், திரு. கு. | .. நாமக்கல் (செ.வ.) |
| 226. ஜெயக்குமார், திரு. டி. | .. இராயபுரம் |
| 227. ஜெயராமன், திரு. வி. | .. பொள்ளாச்சி |
| 228. ஜெயலலிதா, செல்வி ஜெ | .. ஆண்டிப்பட்டி |
| 229. ஸ்டாலின், திரு. மு.க. | .. ஆயிரம் விளக்கு |
| 230. ஹக்கீம், திரு. எம்.ஏ. | .. மதுரை மத்தி |
| 231. ஹேமச்சந்திரன், திரு. ஜே. | .. திருவட்டாறு |
| 232. சான்ட்ரா டான் க்ரவல், திருமதி | .. (நியமனம்) |
| 233. (வெற்றிடம்) | .. சைதாப்பேட்டை |
| 234. (வெற்றிடம்) | .. வாணியம்பாடி |
| 235. (வெற்றிடம்) | .. அச்சரப்பாக்கம் (செ.வ.) |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. என்.ஆர். சந்திரன் .. தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**சித்திரை 20, சித்ரபானு - திருவள்ளுவர் ஆண்டு 2033**

**2002 மே 3, வெள்ளிக்கிழமை**

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"நாடோறும் நாடுக மன்னன் வினைசெய்வான்*
*கோடாமை கோடா துலகு"*

*உழைப்போர் உள்ளம் வாடாமல் இருக்கும் வரையில் உலகின் செழிப்பும் வாடாமல் இருக்கும். எனவே, உழைப்போர் நிலையை ஒவ்வொரு நாளும் அரசினர் ஆய்ந்து அறிந்து ஆவன செய்ய வேண்டும்.*

## 1. வினாக்கள் - விடைகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்-விடைகள். வினா எண் 275, திரு. நா. சந்திரமோகன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்.*

**275—**

**விவசாயத்திற்குத் தண்ணீர்**

***4290—திரு. நா. சந்திரமோகன்:**

*மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதியிலுள்ள கொள்ளிடம் ஆற்றின் வழியாக கடலில் கலக்கும் உபரி தண்ணீரைத் தேக்கி ராட்சத என்ஜின் மூலம் விவசாயத்திற்குத் தண்ணீர் வழங்க அரசிடம் திட்டம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2002 மே 3

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய வினாக்களுக்கான விடை :

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதியிலுள்ள கொள்ளிடம் ஆற்றின் வழியாக கடலில் கலக்கும் உபரி தண்ணீரைத் தேக்கி ராட்சத என்ஜின் மூலம் விவசாயத்திற்குத் தண்ணீர் வழங்க அரசிடம் திட்டம் ஏதுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சீர்காழி தொகுதியானது பெரும்பாலும் விவசாயத்தையே நம்பியுள்ள தொகுதியாகும். சீர்காழி தொகுதியில் குறைந்தது 50 ஆயிரம் ஏக்கர் சாகுபடி நிலம் உள்ளது. அந்த நிலமானது 3 போகமும் விளையக்கூடிய நிலமாகும். எனது சீர்காழி தொகுதியில் ஓடுகின்ற கொள்ளிடம் ஆறானது, சீர்காழியிலிருந்து 6 கிலோமீட்டர் தொலைவில் கடலில் போய்ச் சேருகிறது. குறிப்பாக, சீர்காழி தொகுதியிலுள்ள கொள்ளிடம் ஆற்றில் தினசரி சுமார் 500 கன அடி உபரி நீர், கடலில் கலந்து வீணாகிறது. எதற்கும் பயன்படாமல் இப்படி வீணாகும் நீரை பனங்காட்டான்குடி என்ற ஊரின் அருகே கொள்ளிடம் ஆற்றில் ஒரு Bed Dam கட்டி, அதன்மூலம் நீரைத் தேக்கி வைத்து ராட்சத என்ஜின் மூலம் இறைத்துக் கொடுத்தால் கடைமடைப் பகுதியான எனது சீர்காழி தொகுதியில் குறுவை, சம்பா, குள்ளகார் போன்ற நெல்லை 3 போகமும் சாகுபடி செய்து விவசாயிகள் பயனடைவார்கள். எனவே, கொள்ளிடம் ஆற்றில் Bed Dam கட்டி, ராட்சத என்ஜின் மூலம் தண்ணீரை இறைத்துக் கொடுக்க அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதியில் கொள்ளிடம் ஆற்றின் கீழ் அணை, மைல் 67/2-ன்கீழ் பாசனநீர்ப் பங்கீடு, முறையில்லாமல் முழுவதுமாக வடிகாலாகப் பயன்பட்டு வருகிறது. வெள்ளக் காலங்களில் மட்டும் உபரியாக வரும் வெள்ளநீர், கொள்ளிடம் ஆற்றில் திறந்து விடப்பட்டு கடலில் கலக்க வகை செய்யப்பட்டுள்ளது. விவசாய மேம்பாட்டிற்காக தமிழக அரசின் துரித ஆழ்குழாய்த் திட்டத்தின்கீழ் கொள்ளிடம் வடிகால் ஆற்றின் இரு கரைகளின் அருகில், பல ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு, அதன்மூலம் நிலத்தடி நீர் எடுக்கப்பட்டு விவசாயத்திற்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், ஆற்றின் இரு



2002 மே 3]

பக்கங்களிலும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு, நாகப்பட்டினம் மாவட்டத்தில் பல கிராமங்களில் குடிநீர் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. எனவே, ஊற்று நீரில் உபரி நீர் கிடைக்கும் வாய்ப்பு மிகக் குறைவாகும். வெள்ளக் காலங்களில் வரும் வெள்ள நீரைத் தேக்கிப் பயன்படுத்த சாத்தியமும், நீர்த் தேவையும் இல்லை என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழைநீர் சேகரிப்பதற்காக பல திட்டங்களை இப்போது அரசாங்கம் உருவாக்கி வருகிறது. ஆனால், ஏற்கெனவே இயற்கையாகக் கிடைக்கக்கூடிய தண்ணீரைக் கொள்ளிடம் ஆற்றின் வழியாக கடலில் கலந்து வீணாகப் போவதைத் தடுப்பதற்கு அரசு முயற்சி எடுக்க வேண்டுமேயொழிய, அதற்குப் பதிலாக அதிக ஆழ்குழாய்க் கிணறுகளை எல்லாம் நீங்கள் போட்டால்கூட, பூமிக்கு அடியில் இருக்கக்கூடிய நிலத்தடி நீரை நாம் உறிஞ்சி மீண்டும் விவசாயத்திற்குப் பயன்படுத்தினால் பிரச்சினைதான் உருவாகுமேயொழிய, உபரியாக இருக்கக்கூடிய அந்தத் தண்ணீரைத் தேக்கி வைத்தால்தான் நம்முடைய பகுதியில் விவசாயத்திற்கு அது பயனுள்ளதாக இருக்கும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த மழைநீர் சேகரிப்புத் திட்டத்தின்கீழ், ஹட்கோ, World Bank என்று பல துறைகளிலேயிருந்து நிதி இப்போது உங்களுக்குக் கிடைக்கிறது. அதிலே கடைமடைப் பகுதியான இடத்திலே ஒரு Bed Dam கட்டி அந்த இடத்திலே ஒரு Bed Dam கட்டி தண்ணீரைச் சேர்த்து விவசாயத்திற்குப் பயன்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா? ஏனென்றால், தண்ணீர் இப்போது உங்களுக்கு, .....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியோடு முடியுங்கள்; மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

(முற்பகல் 10-05)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்ளிடம் ஆற்றின் கீழ் அணையின்கீழ், வெள்ளக் காலங்களில்தான் உபரியாக வருகின்ற நீரை, கீழ்ப் பகுதிக்குத் திருப்பி விடுவதற்கு வகை செய்யப்பட்டிருக்கிறது. அதில் வருகின்ற உபரி நீர் ஊற்றுநீர், ஊற்று நீரில் உபரி நீர் கிடைக்க வாய்ப்பு மிகக் குறைவாகவே

உள்ளது என்று சொல்லப்பட்டு இருக்கிறது. உபரி நீர், மிகுதியாக அந்தப் பகுதிகளில் வருகின்றதா என்ற சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து ஆய்வு செய்யப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 276, திரு வெ. கோவிந்தராஜ், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்.

**276—**

## தடுப்பணை கட்டுதல்

***6495—திரு. வெ. கோவிந்தராஜ்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி தொகுதி, பெரிய மணவாரணப்பள்ளி ஊராட்சி, கங்கமடுகு கிராமத்தின் ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டி பாசன வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வினாக்களுக்குண்டான விடை:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி தொகுதி, பெரிய மணவாரணப்பள்ளி ஊராட்சி, கங்கமடுகு கிராமத்தின் ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டி பாசன வசதி செய்யும் திட்டம் ஏதும் தற்போது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வெ. கோவிந்தராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத் தொழிலைப் பெருக்க, நீராதாரத்தைப் பெருக்க, குட்டைகளையும், ஏரிகளையும் ஆழப்படுத்தி தடுப்பணைகளைக் கட்ட உத்தரவிட்ட அம்மா அவர்களுடைய அரசுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய கிருஷ்ணகிரி தொகுதியிலுள்ள வேப்பணப்பள்ளி ஒன்றியத்திலே, பெரிய மணவாரணப்பள்ளி



ஊராட்சிக்கு உட்பட்ட கங்கமடுகு அணைத் திட்டம், [illegible] ஆண்டுகாலமாக நிலுவையில் உள்ளது. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தினால், கர்நாடக மாநிலம், ஆந்திரா மாநிலத்திலிருந்து வருகின்ற நீர், கிருஷ்ணகிரி அணைக்குச் சென்று, அங்கிருந்து உபரி நீராக 10,000 மில்லியன் கனஅடி நீர், கடலில் சென்று கலக்கின்ற நிலையை மாற்றி, அந்தப் பகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கிற விவசாயப் பெருங்குடி மக்களுக்கு, விவசாயத்தையே நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிற அந்த மக்களுக்கு, அந்த அணையின் மூலமாகக் குறைந்தது 2,000 ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறும் நிலைமையை உண்டாக்க, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டம், சிங்கிரிபள்ளி கிராமத்தின் அருகே நாச்சிக்குப்பம் ஆற்றின் குறுக்கே [illegible] அமைக்கும் திட்டத்திற்கான மதிப்பீடு ரூ.345 இலட்சங்களுக்குத் தயாரிக்கப்பட்டுள்ளது. இதனால் சிங்கிரிபள்ளி, கங்கமடுகு, பெரிய மணவாரணப்பள்ளி, கொள்ளப்பள்ளி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 645 ஏக்கர் நிலங்கள் பயன் அடையும் வாய்ப்பு உள்ளது. எனினும், [illegible] தல அதிகாரிகளிடமிருந்து மதிப்பீடு பெறப்பட்டிருக்கிறது. புரட்சித் தலைவரின் ஒத்திசைவு பெறப்பட்டு, நிதிநிலைமைக்கேற்ப பணி மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 277, திரு. எம். சுப்பையா பாண்டியன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**277—**

## பெண்கள் கல்லூரி

***1031—திரு. எம். சுப்பையா பாண்டியன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடையநல்லூர் நகரில், இஸ்லாமியப் பெண்கள் பயன்பெறும் வகையில், அரசு பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கப்படுமா?

[2002 மே 3

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கடையநல்லூரில் புதிய அரசு மகளிர் கலைக் கல்லூரி தொடங்குவதற்கான செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கடையநல்லூர் தொகுதியில், கடையநல்லூர் நகரம், இஸ்லாமிய சமுதாயத்துப் பெண்கள் அதிகமாக வாழக்கூடிய இடம். கடந்த ஆண்டு சட்டமன்றக் கூட்டத் தொடரில், கடையநல்லூர் தொகுதியில் அரசு கலைக் கல்லூரி அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொண்டேன். கடையநல்லூர் தொகுதி, வாசுதேவநல்லூர் தொகுதி இந்த இரண்டு தொகுதிகளிலும் மக்களின் நீண்டநாள் கோரிக்கையாக இது உள்ளது. இப்பகுதியில் பயிலும் மாணவ, மாணவியர்கள் கல்லூரியில் படிப்பதற்கு, வெளி இடங்களில் தங்கிப் படிப்பதற்கு, முடியாத நிலைமை, வறுமை சூழ்நிலை காரணமாக உள்ளதால், கடையநல்லூரை மையமாகக் கொண்டு அரசு கலைக் கல்லூரி மற்றும் அறிவியல் கல்லூரியைத் தொடங்க பாகுபா புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இந்த நடப்பு ஆண்டில்—என்னுடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பணம் எவ்வளவு கட்டச் சொல்லி உத்தரவிட்டாலும் அதை நான் கட்டத் தயாராக இருக்கிறேன்—மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அமைத்துத்தர முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வி ஆனாலும், உயர் கல்வி ஆனாலும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பல்வேறு திட்டங்கள் வகுக்கப்பட்டு கல்வியினுடைய நிலையை உயர்த்திக் கொண்டு இருப்பது இந்த அரசு ஆகும். பல்வேறு கலைக் கல்லூரிகளும், பொறியியல் கல்லூரிகளும், புரட்சித் தலைவர் ஆட்சியிலும், புரட்சித் தலைவி ஆட்சியிலும் உருவாக்கப்பட்டன. அரசினுடைய நிதிநிலைக்கு ஏற்ப, அரசானது சில கல்லூரிகளைத் தொடங்குகிறது. நிதிப் பற்றாக்குறை



2002 மே 3]

இருப்பதன் காரணமாக, தனியார் சுயநிதிக் கல்லூரி தொடங்குவதற்கு அரசு ஆதரவு தருகிறது. அதிலும், சில வழிமுறைகள் வகுக்கப்பட்டு இருக்கின்றன. ஒரு கல்லூரி இருந்தால், அதே இடத்தில் இன்னொரு கல்லூரிக்கு அனுமதி தருவதில்லை. அதுபோல, சில வழிமுறைகளை வகுத்துள்ளோம். கடையநல்லூரில் கல்லூரி தொடங்குவதற்கு இப்போது இந்த ஆண்டு அரசினுடைய நிதிநிலைமையைப் பொறுத்து, நிதிப் பிரச்சினையின் காரணமாக தொடங்க முடியாத நிலையில் இருக்கின்றோம். நிதிநிலைமை ஓரளவு சீர்படும்போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை இந்த அரசு பரிசீலனை செய்யும். இல்லாவிட்டால், யாராவது சுயநிதிக் கல்லூரி தொடங்குவதற்கு அந்தப் பகுதியில் முன் வருவார்கள் என்றால், புரட்சித் தலைவி அம்மாவினுடைய அனுமதியைப் பெற்று, அத்தகைய கல்லூரியைத் தொடங்குவதற்கு இந்த அரசு அனுமதிதர பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 278, திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**278—**

**பயிற்சி மையங்கள்**

***5343—திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருத்துவம் மற்றும் பொறியியல் நுழைவுத் தேர்வுக்கான பயிற்சி மையங்கள் நடத்தும் சிலர் அதிக கட்டணம் வசூலிப்பது குறித்து அரசு அறியுமா?

(ஆ) அப்பயிற்சி மையங்களை வரைமுறைப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மருத்துவம் மற்றும் பொறியியல் தேர்வுகளுக்கான நுழைவுத் தேர்வு பயிற்சி மையங்கள் பல தனியார்கள் நடத்துவதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லி இருக்கின்றார்கள். இதுபற்றி எந்தப்

புகாரும் அரசுக்கு எழுத்துமூலமாக வரவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நுழைவுத் தேர்வுகள் எல்லாம் நடைபெறுகின்றபோது, பிளஸ்-1, பிளஸ்-2 வகுப்புகளில் எந்த subjects படிக்கிறார்களோ, அதே subjectsதான் நுழைவுத் தேர்வுகளுக்கும் வைக்கப்படுகின்றன. பள்ளிக்கூடத்தில் மேல்நிலைப் பள்ளிகளிலே 2 வருடம் படிக்கின்றபோது முறையான பயிற்சி கொடுக்காமல், பள்ளிகளிலே இருக்கின்ற ஆசிரியர்களே ஒரு கூட்டாக, syndicateபோல அமைத்துக்கொண்டு மிக அதிக அளவிலே பயிற்சிக்கான கட்டணத்தை வசூல் செய்கிறார்கள். மருத்துவக் கல்லூரிகளிலே, பொறியியல் கல்லூரிகளிலே சேரவேண்டுமென்ற மாணவ மாணவியர்களுடைய ஆர்வத்தை exploit செய்வதைபபோல, இது அமைந்திருக்கிறது. ரூ.4,000-லிருந்து ரூ.6,000 வரை வசூல் செய்கின்றார்கள். இதை அரசு ஆய்வு செய்து இதற்கான வரைமுறைகளை ஏற்படுத்துகின்ற திட்டம் ஏதேனும் இருக்கின்றதா என்று கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிளஸ்-1, பிளஸ்-2-ல் பாடம் சொல்லிக் கொடுக்கும் ஆசிரியர்கள் தேர்வு முறைக்கு ஏற்ற பாடம் சொல்லிக் கொடுத்தாலும், சில நேரங்களில் பொதுவாக, பல ஆசிரியர்கள் - நான் அனைவரையும் சொல்லவில்லை—தனியாக தனிப் பயிற்சி tuition போன்ற வகையில் - வீடுகளிலே நடத்துகிறார்கள். ஒருபுறம் நடந்துகொண்டுதான் இருக்கிறது. இதுபற்றிப் புகார்கள் எழுத்து வடிவமாக வராவிட்டாலும், வாய்மொழியாக பலர் சொல்லுகின்றார்கள். இந்தக் கருத்து எல்லோருக்கும் தெரிந்த ஒன்றுதான் ஆகும். ஆனால் அரசினுடைய நெறிமுறைகள்படி, இத்தகைய ஆசிரியர்கள் இதர தனி tuition எடுக்கக் கூடாது. அவர்களுக்கு நம் அரசு நல்ல சம்பளத்தைத் தருவதன்மூலமாக மாணவர்களுக்குச் சரியாக நன்கு பாடம் சொல்லிக் கொடுக்கவேண்டும் என்பதுதான் முறை. மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுபோல, மருத்துவக் கல்லூரியிலும், பொறியியல் கல்லூரியிலும் சேர்வதற்கு மாணவர்கள் ஆர்வம் காட்டுகிறார்கள், என்றாலும், அத்தகைய கல்வியைப் படிப்பதன் மூலமாக எதிர்காலம் சரியாக அமையும் என்ற ஆர்வம் இருக்கிறது. அந்த ஆர்வத்தின் காரணமாக இந்தத் தேர்விற்கு எவ்வாறு தயார் செய்யவேண்டும் என்பதற்காக சில பேர், மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுபோல் சில ஆசிரியர்களோ, தனியார்களோ சேர்ந்து இதுபோல்



tuition எடுப்பது, இது எழுத்துமூலம் வராவிட்டாலும் நடைமுறையில் நடைபெறுகின்ற ஓர் உண்மையான செய்தி ஆகும். இதை மறுப்பதற்கு இல்லை. ஆகவே, இத்தகைய பள்ளிகளிலே Coaching Center-களில் அதிகமான பணம் வசூலிக்கின்றார்கள் என்பதை உணர்ந்து — தான் அரசானது கடந்த 15 ஆண்டுகளாகவே ஒரு தனி பயிற்சியாக நடத்துகிறது. இதற்குப் பெற்றோர்—ஆசிரியர் கழகத்தின் மூலமாக - 100 Center-களிலே இத்தகைய 100 இடங்களில் தமிழகத்திலே பயிற்சியை இலவசமாக அரசு தருகிறது. தாங்கள் சொன்னதுபோல, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல, ஆசிரியர்களும் சிலரும் இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்தி, ஏழை மாணவர்களிடம் அதிகமான பணம் வசூலிக்கின்றார்கள் என்று தெரிந்துதான், ஏழை மாணவர்களுக்கும், கிராமப்புற மாணவர்களுக்கும், நல்ல ஒரு பயிற்சியைத் தரவேண்டும்; அந்தப் பயிற்சியைத் தருவதன் மூலமாக பிளஸ்-1, பிளஸ்-2, படித்தால்கூட, அதே பாடங்கள் இருந்தால்கூட, சில நேரங்களிலே இத்தகைய ஒரு தேர்வுக்காக ஆயத்தம் செய்வதற்காக, அந்தப் பயிற்சியைத் தருவதற்காக அரசானது இந்தத் திட்டங்களை வகுத்து, 100 Center-களிலே அது நடைபெறுகிறது. இதற்காக, ஆண்டுக்கு 10 இலட்சம் பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் மூலமாக ஒப்புதல் பெற்று ரூபாய் செலவு செய்கின்றோம். அதில் இலவசமாகவே மாணவ மாணவிகள் சேர்வார். அதற்கு எந்தவிதமான கட்டணமும் மாணவ மாணவிகளிடம் வசூலிப்பதில்லை. ஆனால் ஒரு Guide போடுகிறார்கள். சுமார் 50 ரூபாய் என்று ஒவ்வொரு பாடத்திற்கும் ஒரு புத்தகம். அந்த அளவில் அதைக் கட்டும் வசூல் செய்கிறார்களேயொழிய, நீங்கள் சொல்வது போல, மற்ற தனியார் துறையில் நடைபெறும் திட்டத்தில் நடத்துவது போல, இந்த அரசு மூலம் நடைபெறுவதில்லை. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் கேட்டது போல, எந்தவிதமான தவறும் நடைபெறுவதில்லை. ஏழை மாணவர்களுக்காகவும், கிராமப்புற மாணவர்களுக்காகவும் தனியாக இதுபோன்ற பயிற்சியை பெற்றோர் ஆசிரியர் கழகத்தின்மூலம் அரசே நடத்துகிறது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவம் மற்றும் பொறியியல் படிப்புகளுக்கான நுழைவுத் தேர்வு வகுப்புகளை தனியார் நிறுவனங்கள் நிறைய நடத்தி வருகின்றன.

அமைச்சர் அவர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இப்படி நடத்தப்படக்கூடிய தனியார் கல்வி நிறுவனங்கள், ஒரு சிலர், நிறுவனங்கள் அல்லாதவர்கள்கூட, இந்தப் பயிற்சிக்கான கட்டணத்தை அவர்கள் விருப்பம்போல் வசூலிக்கிறார்கள். மாணவர்கள் மத்தியிலே, பெற்றோர்கள் மத்தியிலே, ஏதோ தனியார் பயிற்சி மையங்களுக்குச் சென்றால்தான் கூடுதலான மதிப்பெண்கள் பெறமுடியும் என்ற அந்தக் கண்ணோட்டத்தோடு, தனியார் பயிற்சி மையங்களுக்குச் செல்கிறார்கள். ஆகவே, இப்படி தனியார் நடத்தக்கூடிய பயிற்சி மையங்களுக்கு அரசு ஒப்புதல் அளிக்குமா? அதை அங்கீகரிப்பதற்கு அரசு முன்வருமா? அல்லது, அவர்கள் விருப்பப்படியே நடத்திக் கொள்ளலாமா என்பதை அறிய விரும்புகிறேன். அடுத்து, நுழைவுத் தேர்விலே தேர்ச்சி பெற்று வருகிறார்கள். அங்கு செல்கின்ற நேரத்திலே நுழைவுத் தேர்வு தேர்வு செய்யப்பட்டவர்களும், Management quota-விலே சேரக்கூடியவர்களும், அவர்கள் விருப்பத்திற்கேற்ப, மருத்துவப் படிப்புக்கு 20 இலட்சம், அதேமாதிரி பொறியியல் படிப்புக்கு இன்னும் ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, பயிற்சி மையத்திற்குக் கட்டணம், அவ்வளவுதான். நீங்கள் அதற்கு மேலே போனால், அமைச்சர் பதில் சொல்ல முடியாது.

**திரு. ஜி.கே. மணி:** இப்படிக் கூடுதலாகக் கட்டணம் வசூலிக்கிறார்களே, இதை வரைமுறைப்படுத்துவதற்கு, குறைந்த கட்டணம் வசூலிப்பதற்கு, அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வியைப் பொறுத்தவரையில், தமிழகத்தில் நல்லதொரு கல்வியைத் தரவேண்டும்; அந்தக் கல்வியும் ஏழைகள் படிக்கின்ற வகையில் வாய்ப்புத் தரவேண்டும் என்பதுதான் அரசினுடைய குறிக்கோள். அதன்படிதான் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. ஆனாலும், சிலர், சில எதிர்பார்ப்புகளோடு, வசதி உள்ளவர்கள், சில இடங்களிலே சேர்ந்து அதிகமாகப் பணம் கட்டுகிறார்கள். உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால், Matriculation Schools-ஐக் கூட எடுத்துக்கொள்ளுங்கள். அதிலேயும் சில குறைபாடுகள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் சரி செய்வதற்காகத்தான், அதற்காகத் தனி இயக்குநரகம் ஏற்படுத்தப்பட்டு, இப்போது செயல்பட்டு வருகிறது. அரசானது, எந்த ஒரு திட்டத்தைச் செயல்படுத்தினாலும், அதற்குக் காரணங்களைக் கற்பிப்பது என்று நடைமுறையில் சிலர் செய்கிறார்கள்.



அது ஒரு பக்கம் நடந்து கொண்டிருக்கிறது. இருப்பினும், நல்ல எண்ணத்துடன்தான், எப்படி Matriculation-ஐச் சரி செய்ய வேண்டுமென்று திட்டத்தைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோமோ, அதுபோல, இந்தப் பயிற்சி மையங்களிலும் இவ்வளவு பணம் அதிகமாக வசூலிக்கிறார்கள் என்ற புகார்கள் எழுத்து மூலமாக வந்தால், அதைச் சரி செய்வதற்கு இந்த அரசு முன்வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி.

**திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 100 இடங்களிலே இத்தகைய பயிற்சிகள் கொடுக்கப்படுவதாகச் சொல்லி இருக்கிறார்கள். மிக்க மகிழ்ச்சி. அதே நேரத்தில் ஒவ்வொரு மேல்நிலைப் பள்ளியிலும் இத்தகைய பயிற்சி கொடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுமா? இல்லையானால், குறைந்தபட்சம் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் ஒரு பயிற்சிக் கூடம் ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் கருத்தானது மிகவும் சிறந்ததொரு கருத்தாகும். நிதிநிலைமைக்கேற்ப அரசானது இதைப் பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 279, திருமதி மல்லிகா சின்னசாமி. மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**279—**

**சமயபுரம் கோயில்**

***13531 —திருமதி மல்லிகா சின்னசாமி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா

திருச்சிராப்பள்ளி மாவட்டம், சமயபுரம் கோயில் சுற்றுப்புறச் சூழலை மேம்படுத்தி தூய்மையாக வைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2002 மே 3

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருக்கோயில் பகுதிகள் அவ்வப்போது சுத்தம் செய்யப்பட்டு தூய்மையாக வைக்கப்படுகின்றன. திருக்கோயிலின் சுற்றுப்புறத் தூய்மையினைத் தொடர்ந்து பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர், தமிழகத்தின் விடிவெள்ளி, ஏழைகளின் துயர் துடைக்கும் இதய தெய்வம் அம்மா அவர்களின் பொன் மலர்ப் பாதங்களைத் தொட்டு வணங்கி என் வினாவினைத் தொடங்குகின்றேன்.

தமிழகத்திலேயே இரண்டாவது இடத்தைப்பெறும் சமயபுரம் மாரியம்மன் திருக்கோயிலுக்கு தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தும் பக்தர்கள் ஆயிரக்கணக்கில் வந்தவண்ணம் இருக்கின்றார்கள். அங்கு பக்தர்களுக்கு வசதிகள் குறைவாகவும், கோயிலைச் சுற்றியுள்ள பாதை மிகவும் குப்பைகள் நிறைந்து தூய்மையற்றும் இருக்கிறது. பாதையில் உள்ள குப்பைகளை வெளியேற்றி, சுற்றுச் சூழலை மேம்படுத்திக் கொடுக்க வேண்டும். அதற்குண்டான நிதி கோயிலில் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துப்புரவுப் பணியாளர்களை நியமனம் செய்து, கோயிலைச் சுற்றியுள்ள பகுதியை மேம்படுத்தித் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளி மாவட்டம், சமயபுரம் அருள்மிகு மாரியம்மன திருக்கோயில் வரிவிதிப்பு வருமானம் ஆண்டொன்றுக்கு ரூ.9,02,15,549/- வருவாய் வருகிறது. இத்திருக்கோயில் இணை ஆணையாளர்/செயல் அலுவலர் அவர்களால் நிருவகிக்கப்பட்டு வருகிறது. 5 அறங்காவலர்கள் கொண்ட அறங்காவலர் குழு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஏற்படுத்தப்பட்டது. இன்னும் பதவியில் இருந்து கொண்டிருக்கிறார்கள். திருக்கோயிலுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள மண்டபங்கள், மாவிளக்கு மண்டபம், பிரகாரங்கள் ஆகியவை தினசரி காலை, மாலை இருவேளைகளிலும் 14 துப்புரவுப் பணியாளர்களால் அவ்வப்போது சுத்தம் செய்யப்பட்டு குப்பைகள் அகற்றப்பட்டு



2002 மே 3]

வருகின்றன. மேலும், வாரத்தில் மூன்று நாட்கள் தண்ணீர் இறைக்கும் இயந்திரம் மூலம் தண்ணீர் அடித்து சுத்தமாகக் கழுவி விடப்படுகிறது. திருக்கோயில் முன்புள்ள சன்னதி வீதி, மண்டபங்கள் போன்றவை வாரத்தில் ஒருமுறை தண்ணீரால் கழுவி சுத்தம் செய்யப்படுகின்றன. திருக்கோயிலின் திருப்பணி வேலைகள் தொடங்கி தூய்மையாகப் பராமரிப்பதற்கு துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன. தற்போதுள்ள துப்புரவுப் பணியாளர்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாததால் கூடுதலாக துப்புரவுப் பணியாளர்களை தேவைக்கேற்ப தினக்கூலி அடிப்படையில் நியமனம் செய்ய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், 27-2-2002 ஆம் தேதி, சட்டமன்ற உறுதிமொழிக் குழு, இத்திருக்கோயிலை வந்து பார்வையிட்டபோது தெரிவித்த கருத்துகளுக்கு இணங்க 7-3-2002 ஆம் தேதியன்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் முசிறி சட்டமன்ற உறுப்பினர், காவல் துறை அதிகாரிகள், திருக்கோயில் அறங்காவலர் குழு மற்றும் மேலாண்மை நிருவாகத்தினர், பொதுமக்கள் கலந்துகொண்டு திருக்கோயில் சுற்றுப்புறத் தூய்மை குறித்து செய்ய வேண்டிய பணிகள் குறித்து விவாதிக்கப்பட்டது. அதன்படி திருக்கோயில், அதனைச் சுற்றியுள்ள இடங்களைத் தூய்மையாகப் பராமரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 280, திரு. சி. சிவசாமி. மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**280—**

## உயர்நிலைப் பள்ளிக்கு நிலம்

***18635—திரு. சி. சிவசாமி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் வட்டம், இடுவம்பாளையம் கிராமத்திலுள்ள இடும்பகுமாரசாமி ஆலயத்திற்குரிய நிலத்தில் 7 ஏக்கர் நிலத்தை அந்த கிராமத்திலுள்ள உயர்நிலைப் பள்ளிக்கு கிரயம் செய்து தருவதற்கான நடவடிக்கைகள் எந்நிலையில் உள்ளன?

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோவை மாவட்டம், திருப்பூர் வட்டம், இடுவம்பாளையம், அருள்மிகு இடும்ப குமாரசாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான சர்வே எண் 115-ல் உள்ள 7.06 ஏக்கர் புஞ்சை நிலத்தை அரசு உயர்நிலைப் பள்ளிக் கட்டடம் கட்டுவதற்கு இலவசமாக வழங்க முருகம்பாளையம் ஊராட்சி மன்றத் தலைவரால் கேட்கப்பட்டது. ஆலய நிலத்தை அரசு உயர்நிலைப் பள்ளிக்கூடம் கட்டுவதற்கு இலவசமாக வழங்க இயலாது என்ற விவரம் தெரிவிக்கப்பட்டது. தற்போது மேற்படி திருக்கோயில் நிலத்தை அறநிலையத் துறை சட்டவிதிகளுக்கு உட்பட்டு துறை நிர்ணயிக்கும் விலையைக் கொடுக்க கல்வித் துறை இயக்குநரிடம் சம்மதம் பெறப்பட்டுள்ளது. சட்டப் பிரிவு 34-ன் கீழான விற்பனை குறித்து கோவை உதவி ஆணையரிடம் அறிக்கை கேட்கப்பட்டுள்ளது. மாவட்ட வருவாய் அலுவலரிடம் உதவி ஆணையரால் சந்தை மதிப்பு கேட்கப்பட்டு தற்சமயம் நிலுவையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர், முருகம்பாளையம் ஊராட்சியிலுள்ள இடுவம்பாளையம் அருள்மிகு இடும்ப குமாரசாமி ஆலயத்திற்கு ஏராளமான நிலங்கள் இருக்கின்றன. அருகிலுள்ள பள்ளிக்கு அந்த நிலத்தை ஒதுக்க வேண்டுமென்று, அதற்குரிய கட்டணத்தைச் செலுத்துவதற்கு அப்பகுதி மக்கள் தயாராக இருக்கிறார்கள் என ஓராண்டுக்கு முன்பாகவே அதற்குரிய மனு கொடுக்கப்பட்டுள்ளது. அதிகாரிகளை அழைத்துச் சென்று இடத்தைப் பார்வையிட்டு விரைவாக முடித்துக் கொடுக்க வேண்டுமென்று நான் பலமுறை அதிகாரிகளிடம் தெரிவித்து இருக்கிறேன். வருகின்ற கல்வியாண்டில் அங்கே பள்ளி தொடங்குகின்ற விதமாக காலதாமதமின்றி அதற்குரிய பணத்தைப் பெற்றுக்கொண்டு அந்த இடத்தை அந்தப் பள்ளிக்கு விரைவாக வழங்க அரசு ஆவன செய்யுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குரிய தொகையைக் கொடுப்பதற்கு மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினரவர்கள் அந்தப் பகுதியிலுள்ள ஊராட்சி மன்றத் தலைவர் மூலம் முயற்சி எடுத்து வருவார்களானால், கூடிய விரைவிலே அறநிலையத் துறை இடத்தை பள்ளிக் கட்டடம் கட்டுவதற்கு இந்த



அரசு கொடுப்பதற்கு முயற்சி எடுக்கும் என்பதை இந்த நேரத்தில் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 281, திரு. க. பாரமலை மற்றும் திரு. ஐ. கணேசன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**281—**

**டிப்ளமோ மருந்தாளுநர்**

***6052—திரு. க. பாரமலை:**

**திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) டிப்ளமோ மருந்தாளுநர் படித்து தேர்ச்சி பெற்று வேலை தேடித் தரும் அலுவலகத்தில் பதிந்து வைத்திருக்கும் நபர்களின் எண்ணிக்கை 31-3-2001 அன்று உள்ளவாறு மொத்தம் எவ்வளவு?

(ஆ) அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க சிறப்புத் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மருந்தாளுநர் பட்டயம் படித்து தேர்ச்சி பெற்று வேலை தேடித் தரும் அலுவலகத்தில் பதிந்து வைத்திருக்கும் நபர்களின் எண்ணிக்கை (31-3-2001-ல் உள்ளவாறு) மொத்தம் 10,752 ஆகும். இதில் ஆண்கள் 6,749 மற்றும் பெண்கள் 4,003.

(ஆ) அரசு மருத்துவமனைகளில் படுக்கை எண்ணிக்கைக்கேற்ப மருந்தாளுநர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு, மருந்தாளுநர்கள் நியமிக்கப்படுகின்றனர். மருத்துவமனைகளில் படுக்கை எண்ணிக்கை அதிகரிக்கப்படும்போது அதற்கேற்றவாறு கூடுதல் மருந்தாளுநர் பணியிடங்களும் அரசால் உருவாக்கப்படுகின்றன.

முற்பகல் 10-25

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 10,752 பேர்

வேலைவாய்ப்பு அலுவலகத்திலே பதிவு செய்து வைத்திருக்கிறார்கள் என்ற தகவலைச் சொன்னார்கள். கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக படித்தவர்கள் பொதுவாக, வேலைவாய்ப்பு அலுவலகத்திலே பதிவு பெற்றிருந்தாலும், அந்தத் துறையினுடைய தலைமை அலுவலகத்திலேதான் பதிவு செய்து வைத்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே seniority அடிப்படையிலே வேலை வந்து சேரும் கடந்த 10 ஆண்டுகளிலே நாம் வேலைக்கு அதிகமாக ஆள் எடுக்காத காரணத்தினாலே, இந்த நிலை அதிகரித்திருக்கிறது. இதில் விரைவாக நடவடிக்கை எடுத்து, அல்லது ஒரு குறிப்பிட்ட தரத்திற்குமேல் நடக்கிற தனியார் மருத்துவமனைகளில்கூட ஒரு குறிப்பிட்ட அளவு சம்பளம் கொடுக்க வேண்டும் என்ற விதியைப் பயன்படுத்தினால், தற்சமயம் அதிலே அவர்கள் வேலைக்காரனைப் போல் பயன்படுத்தப்படுவதையும், கூலிவேலை செய்வதைப் போல செய்துகொண்டிருப்பதையும் தடுக்க முடியும். அப்படி பெரிய ஆஸ்பத்திரிகளிலே சேர்கிறபோது, ஒரு குறைந்தபட்ச சம்பளத்தை நிர்ணயம் செய்து வேலைக்கு வைத்துக்கொள்ள வேண்டுமென்று ஓர் ஆணை பிறப்பிக்க வேண்டும். குறிப்பாக பெண்கள் அதிகமாக இந்த வேலைகளில் இருக்கிற நிலை இருக்கிறது. அதை விரைவாக நிறைவேற்றி அவர்கள் வாட்டத்தைப் போக்குவதற்கு அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய பணியிடங்களை நிரப்ப பணியாளர்கள் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் அரசாணையின்படி, தடையாணை விதிக்கப்பட்டிருந்தாலும், மக்கள் நல்வாழ்வுத் துறையைப் பொறுத்தவரையிலே அதற்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டு, நம்முடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில், டாக்டர்கள், செவிலியர்கள், மருத்துவம் சாரா பணியாளர்கள் ஆகியவற்றுக்கு பணியிடங்களை நிரப்புவதற்கு தனியாக அரசாணை போடப்பட்டு, அந்தப் பணியிடங்கள் எல்லாம் நிரப்பப்பட்டு வருகின்றன. அந்த வகையிலே 1,500 மருத்துவம் சாரா பணியாளர்களுடைய பணியிடங்கள் நிரப்புவதற்கு இந்த அரசு உத்தரவிட்டு அந்தப் பணியிடங்கள் எல்லாம் நிரப்பப்பட்டு வருகின்றன. அந்த வகையிலே இதுவரை நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அரசு பொறுப்பேற்ற பிறகு, 149 மருந்தாளுநர் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. இருக்கிற காலியிடங்கள் இப்போது வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலமாக, பதிவு மூப்பின் அடிப்படையிலே, seniority அடிப்படையிலே, communal rotation-ஐ வைத்து இப்போது பணியிடங்கள் நிரப்பப்பட்டு வருகின்றன.



மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியார் மருத்துவமனைகளில் இதுபோன்ற பணிகள் நிரப்பப்படுகின்றபோது, ஊதியத்தை நிர்ணயிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். நல்ல கருத்துதான். ஆனால் இதிலே அரசாங்கம் தலையிடமுடியுமா என்ற அந்தக் கேள்வியும் இருக்கிறது. இருந்தாலும் இதுபோன்று படித்துவிட்டு இருக்கிறவர்கள் தனியாக தொழிலகம் நடத்துவதற்கு மருந்தகங்களை - அதாவது pharmacy-களை வைத்துக்கொள்வதற்கு அவர்களுக்கு வழிவகை இருக்கிறது. எனவே, அரசாங்கம், முடிந்த அளவிற்கு, அந்தப் பட்டயம் பெற்றவர்களுக்கு பணியிடங்களை நிரப்புவதற்கு இப்போது நடவடிக்கை எடுத்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஈ. கணேசன்.

**திரு. ஈ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, 31-3-2001 வரை மருந்தாளுநர்களாக கிட்டத்தட்ட 10,752 பேர் பதிவு செய்திருக்கிறார்கள்; அதிலே பெண்கள் 4,003 பேர் பதிவு செய்திருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். பெண்களுக்கு மிக முக்கியத்துவம் கொடுக்கக்கூடிய இந்த அரசு, கிட்டத்தட்ட பல ஆண்டு காலமாக பெண்கள் வேலையிலே அமர்த்தப்படவில்லை என்பதை உணர்ந்திருக்கிறதா? 10,752 பேர்களில் 149 பேர்களை மட்டும்தான் இதுவரை நியமித்திருக்கிறீர்கள் என்று சொல்லும்போது எவ்வளவு வேதனையாக இருக்கிறது. படித்த அந்த இளைஞர்களுக்கு வாழ்வளிக்கக்கூடிய வகையிலே உடனடியாக ஒரு சிறப்புத் திட்டத்தை தீட்டியாவது, அவர்களுக்கு வேலை கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை உங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படித்தவர்களுக்கு எல்லாம் வேலைவாய்ப்பு கொடுப்பது என்பது எந்த அரசாங்கத்தாலும் முடியாது. சைனாவிலே ஒரு பழமொழி சொல்வார்கள். 'பசித்தவனுக்கு மீன் துண்டு கொடுப்பதற்குப் பதிலாக தூண்டிலைக் கொடுங்கள்' என்று சொல்வார்கள். காரணம், பசி எடுத்தவனுக்கு மீன் துண்டைக் கொடுத்தால் அந்த நேரத்திற்குப் பசியாற்றிவிட்டு அடுத்த வேளைப் பசிக்கு அடுத்தவனிடம் கையேந்துவான். எனவே, அவனுக்கு தூண்டிலைக் கொடுத்தால், அந்தத் தூண்டிலை வைத்து மீனைப் பிடித்து, அன்றாடம் அவன் வயிற்றுப் பசியைப் போக்குகிற ஒரு நிலைமையை உருவாக்கலாம். (மேசையைத்

தட்டும் ஒலி) எனவே, அந்த வகையிலேதான் ஒரு பட்டயப் படிப்போ அல்லது பட்டப் படிப்போ படிக்க வைப்பதற்குத்தான் அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்ளும். அப்படி அவர்கள் படித்துவிட்ட பிறகு, அவர்களாகவே சுயமாக தொழிலிலே ஈடுபட்டுக்கொள்ளலாம். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, பெண்கள் 4,003 பேர் படித்துவிட்டு இருக்கிறார்கள். நான் ஏற்கெனவே சொன்னதைப்போல அவர்கள் தனியாக மருந்துக்கடைகளை வைத்து வாழ்க்கை நடத்திக்கொள்ளலாம்.

இருந்தாலும் அரசாங்கம் முடிந்த அளவிற்கு அதாவது காலியாக உள்ள இடங்களைத்தான் எங்களாலே நிரப்ப முடியும். அல்லது புதிய பணியிடங்களை நான் ஏற்கெனவே சொன்னதைப்போல படுக்கையினுடைய எண்ணிக்கைக்கேற்ப பதவிகளை உருவாக்கி அதை நிரப்ப முடியும். இருந்தாலும் தொடர்ந்து பணியிடங்கள் — அதாவது வேலை கிடைக்காமல் அவர்களுக்கு வயதாகிவிட்ட காரணத்தினாலே சில பேருக்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. அதற்காக அரசு இந்தத் துறையைப் பொறுத்தவரையில் இந்தப் பதவிக்கு அரசு நிர்ணயித்துள்ள வயது உச்ச வரம்பைக்கூட தளர்த்தி இருக்கிறது. எனவே, இதில் வயதுக் கட்டுப்பாடுகூட இல்லை. எனவே, வாய்ப்பு வருகின்றபோது இவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. பாரமலை.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் ஒரு நல்ல கருத்தைச் சொன்னார்கள். மீன் கொடுப்பதற்குப் பதிலாகத் தூண்டில் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். நல்ல முயற்சி. அதைப்போல மருந்துக் கடைகள் வைத்துக்கொள்ளலாம் என்று சொன்னார்கள். ஒரு மருந்துக் கடை வைக்க வேண்டும் என்று சொன்னால், அதற்கு உரிமம் வழங்க வேண்டும் என்று சொன்னால், D.Pharm. அல்லது B.Pharm. படித்தவர்கள் கையெழுத்துப் போட்டால்தான் வரும். அப்படி பெரும்பாலான கடைகள் அவர்களிடம் கையெழுத்து வாங்கி, ஏதோ remuneration மாதிரிக் கொடுத்துவிட்டு அவர்கள் கடையை நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். அப்படிப்பட்ட கடைகளை அடையாளம் கண்டு ஒன்று D.Pharm. படித்தவர்கள் பங்குதாரர்களாக இருக்க வேண்டும் அல்லது அங்கே பணிபுரிய வேண்டும். சாதாரணமாக



விவசாயத் தொழிலாளர்களுக்குக் கூட நாம் குறைந்தபட்சக் கூலி நிர்ணயிப்பதற்குக்கூட அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக்கிறது என்று சொல்கிறபோது, இப்படிப்பட்ட வேலை பார்க்கிறவர்களுக்கும் ஒரு குறைந்தபட்சக் கூலியை நிர்ணயித்து, மருந்துக் கடைகளிலே பணியாற்றுகிறவர்களுக்கு குறைந்தபட்சம் இவ்வளவு சம்பளம் கொடுக்க வேண்டும் என்ற ஒரு விதியை வைத்தால், அந்தக் கடைக்காரர்களேகூட இவர்களை எடுத்துக்கொள்ளக்கூடும். அந்த வகையிலே அரசு முயற்சி எடுக்குமா என நான் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் பாரமலை அவர்கள் சொல்வதைப்போல, இப்படி படித்துவிட்டு, வேலை இல்லாமல் இருப்பவர்கள் சுயமாகத் தொழில் நடத்துவதற்கு அவர்களுக்கு வசதி வாய்ப்புகள் இல்லாத காரணத்தினாலே, பட்டயப் படிப்பு படித்த அவர்கள் வேறு கடை வைப்பவர்களுக்கு அந்த உரிமத்தைக் கொடுத்து, அவர்களுக்கு கடை வைப்பதற்கு உதவுகிறார்கள். உள்ளபடியே அவர்களுக்கு இருக்கிற வேலையில்லாத் திண்டாட்டம்தான் அதற்குக் காரணம். இருந்தாலும் அதற்காகவும் அரசாங்கம் நல்ல முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. அப்படி பட்டயத்தை வேறு ஒருவருக்குக் கொடுக்காத அளவிற்கு அவர்களுக்குச் சொந்தமாக, சுயமாகத் தொழில் செய்வதற்கு அவர்கள் மருந்துக் கடை வைப்பதற்கு கடனும் வழங்கப்படுகிறது. எனவே, அந்த அரசாங்க உதவியைப் பயன்படுத்தி, அவர்கள் சுயமாகத் தொழிலை மேற்கொள்வதற்கும் வழிமுறை இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாக, ஒரு நல்ல கதையைச் சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கதை இல்லை, பழமொழி.

**திரு. ஐ. கணேசன்:** பழமொழி. தமிழ் திருத்தினால் திருத்திக்கொள்ளலாம். நல்ல பழமொழி. தமிழ்நாட்டிலே எந்தக் குளத்திலுமே தண்ணீர் இல்லை என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அப்படி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பழமொழியை உதாரணத்திற்குச் சொன்னதை வைத்துக் கொண்டு நீங்கள் இப்படிப் பேசுகிறீர்களே?

**திரு. ஐ. கணேசன்:** அப்படி தண்ணீர் இல்லாததால் குளத்திலே மீன் இல்லை. மீன் இருக்கக்கூடிய இடத்திலே சென்று சாப்பிட்ட வரதராஜன், பி.எஸ்.சி., என்ன ஆனார் என்பதனை அமைச்சர் அவர்கள் உணருவாரா?—கோயம்புத்தூரிலே எம்.பி.-யாக இருந்த வரதராஜன், பி.எஸ்.சி. அவர்கள். படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கக்கூடிய இளைஞர்களை ஊக்குவிக்கக்கூடிய வகையிலே அவர்களுக்கு மருந்துக் கடை வைக்க ஒரு சிறப்புத் திட்டத்தையாவது தீட்டி கடன் வழங்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதுவரை எவ்வளவு பேர்களுக்கு கடன் வழங்கியிருக்கிறீர்கள்? எத்தனை பேர்களுக்கு மறுவாழ்வு அளிக்க இந்தத் திட்டத்திலே செயற்குறிப்பு இருக்கிறது என்பதனை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ரொம்ப ஆவேசமாகப் பேசி இருக்கிறீர்கள்! (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடன் வழங்குவது என்னுடைய துறையைச் சார்ந்ததல்ல, எனவே, அந்த விவரங்கள் என்னிடம் இல்லை. இருந்தாலும் கடன் பெற்று, சொந்தமாக சுயதொழில் செய்வதற்கு கடை வைப்பதற்கு வழிமுறை இருக்கிறது. இந்த வழிமுறையை அவர்கள் பயன்படுத்திக்கொள்வது நல்லது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. பாலகிருஷ்ணன்.

முற்பகல் 10-35

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் மீனைப் பற்றி ஒரு பழமொழி சொன்னார்கள். நபிகள் நாயகம் அவர்கள், அவரிடம் வந்த ஒருவருக்கு ஓர் ஆலோசனையைச் சொன்னார்கள்.

'நீ பசித்தவனுக்கு மீனைக் கொடுப்பதைவிட மீன் பிடிப்பதற்கு கற்றுக்கொடு' என்று சொன்னதாக நபிகள் நாயகத்தினுடைய அறிவுரையிலிருந்து வருகிறது. ஆகவே, அதையும் நம்முடைய அமைச்சர்



அவர்கள் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு (குறுக்கீடு) ஆமாம், சேர்த்துக்கொண்டு, சித்தா மருத்துவ முறையில் இன்று ஏராளமான மருந்துகள் வந்திருக்கின்றன. கிராமப்புறங்களில் அதற்கு நல்ல வரவேற்பு இருக்கின்றது. ஆகவே, சித்தா முறையில் பயின்ற அந்த மருந்தாளுநர்களுக்கு இந்த அரசு உதவிகள் செய்யுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் பாலகிருஷ்ணன் அவர்கள் சொன்னதைப்போல, நபிகள் நாயகம் சொன்ன அந்தத் தத்துவக் கருத்தைத்தான் சைனாவிலே பழமொழியாக வைத்திருக்கிறார்கள். எனவே, தூண்டிலும் தேவை, தூண்டிலை வைத்து மீனைப் பிடிப்பதற்கு பயிற்சியும் தேவை, எனவே, அந்தப் பயிற்சியைத்தான் நாங்கள் இங்கே அந்தப் பட்டயப் படிப்புக்குக் கொடுத்து வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, சித்தா வைத்திய முறை இப்போது மக்கள் மத்தியிலே பிரபலமாக இருக்கின்றது; நல்ல வரவேற்பு இருக்கின்றது. அதற்கும் தனியாக மருந்தாளுநர்கள் இருக்கின்றார்கள். இப்போது நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அரசு, அரசாங்க மருத்துவமனைகளில் அல்லது ஆரம்ப சுகாதார நிலையங்களில் இருக்கின்ற மருந்தாளுநர்களுக்கு அலோபதி, சித்தா இரண்டு பயிற்சியையுமே கொடுத்து, அவர்களுக்கு அந்த இரண்டு மருந்துகளையும், நோயாளிகளுக்கு கொடுக்கின்ற அளவிற்கு பயிற்சி கொடுத்து, அதுபோன்ற வாய்ப்பையும் நாங்கள் கொடுத்திருக்கிறோம். எனவே, அந்த முறையிலே அந்த மருந்தாளுநர் பயிற்சி பெற்றவர்கள், அந்த சித்தா முறை சிகிச்சை முறை பயிற்சி பெற்று, அதையும் அவர்கள் அங்கே மருந்தகங்களிலே, மருத்துவமனைகளிலே அல்லது ஆரம்ப சுகாதார நிலையங்களிலே செய்து வருகிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, கூடுதலான வாய்ப்புகளையும் அவர்களுக்கு கொடுப்பதற்கு இந்த அரசு யோசனை செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 282, திரு. த. ஆறுமுகம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**282—** [2002 மே 3

## மருத்துவமனை

***8194—திரு. த. ஆறுமுகம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர் தொகுதி, கவியரசு கண்ணதாசன் நகரில் அரசு மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவொற்றியூர் தொகுதியிலுள்ள சென்னை மாநகராட்சியினுடைய ஒன்றாவது வட்டம், இரண்டாவது வட்டம் பகுதியில் அடங்கியுள்ள கவியரசு கண்ணாதாசன் நகர், அதனை சுற்றி இருக்கின்ற கிராமங்கள் 1981-82ல் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்காக வீட்டுவசதித் துறையின் மூலமாக உலக வங்கி நிதியுதவியுடன் ஒதுக்கீடு செய்யப்பட்ட பகுதியாகும். இப்பகுதியைச் சுற்றிலும் சூழ்புனல்கரை, எருக்கஞ்சேரி, ஆர்.ஆர். நகர், சசிகலா நகர், திருவள்ளுவர் நகர், முத்தமிழ் நகர், கொடுங்கையூர், கிருஷ்ணமூர்த்தி நகர், கட்டபொம்மன் நகர் போன்றவை இருப்பினும் பல தனியார் கலைக் கல்லூரிகளும், சிறுதொழிற்சாலைகளும் அதிகமாக இருக்கின்றன. மேலும் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட வகுப்பினைச் சேர்ந்த மக்களும் இங்கே வாழ்கின்றார்கள். இந்த மக்களுடைய அடிப்படை தேவையைக் கருத்தில் கொண்டு, இங்கு இயங்கி வரும் அரசு மருந்தகத்தை விரிவுபடுத்துகின்ற வகையிலே, அதிகமான நோயாளிகள் வருகை தருவதால் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அங்கே இருக்கின்ற அந்த மருந்தகத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றுவதோடு மட்டுமல்லாமல், திருவொற்றியூர், எண்ணூர், மாதவரம் பகுதியிலே இருக்கின்ற மருத்துவமனைகளில் முன்பு ஆம்புலென்ஸ் வண்டிகள் இருந்தன. அவை பழுதடைந்து இருக்கின்றன.



2002 மே 3]

அவற்றைப் புதுப்பிப்பதோடு மட்டுமல்லாமல் புதிய ஆம்புலென்ஸ் வண்டி வசதியை செய்து கொடுக்க மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அரசு பரிசீலனை செய்வதோடு இவற்றை வழங்க முன்வருமா என்று மாண்புமிகு...

(முற்பகல் 10-40)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆறுமுகம், ஆம்புலன்ஸ் வேண்டுமா? ஆஸ்பத்திரி வேண்டுமா?

**திரு. த. ஆறுமுகம்:** இரண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லி முடியுங்கள்.

**திரு. த. ஆறுமுகம்:** நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களிடம் பேரவைத் தலைவரின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன குடியிருப்புப் பகுதிகள் எல்லாம் திருவொற்றியூர் நகராட்சிப் பகுதிக்கு உட்பட்டவை. அந்த திருவொற்றியூர் நகராட்சிப் பகுதி மக்களுக்கு தற்போது தண்டையார்பேட்டை புறநகர்ப் மருத்துவமனை, R.S.R.M. மருத்துவமனை, ஸ்டான்லி மருத்துவமனை ஆகிய மூன்று மருத்துவமனைகள்தான் அந்த மருத்துவ சேவையை செய்து வருகின்றன. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே இருக்கிற மருந்தகத்தை மருத்துவமனையாக மாற்றுவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று கேட்டிருக்கிறார்கள். நகரப் பகுதிகளில் சுகாதாரப் பணிகளை மாநகராட்சி மற்றும் நகராட்சி நிருவாகம்தான் இப்போது கவனித்து வருகிறது. எனவே, நகர சுகாதாரப் பணிகளை மேலும் மேம்படுத்த வேண்டுமென்ற அந்த உயரிய நோக்கத்தில்தான் மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய அரசு Urban Health Policy என்ற புதிய நகர சுகாதாரக் கொள்கையை வகுத்துள்ளது. அந்தத் திட்டம் நிறைவேற்றப்படுகிறபோது திருவொற்றியூர் பகுதி மக்களுக்கு கூடுதலான மருத்துவ வசதிகள் கிடைக்கும். அந்தத் திட்டத்தின் அடிப்படையில் நகரப் பகுதிகளிலும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பதற்கான வழிமுறைகள் எல்லாம் ஆராயப்பட்டு வருகிறது. அது 6-ஆம் தேதி நடைபெற இருக்கிற மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கையின்போது விவரமாக அறிவிக்கப்படும். எனவே, அந்த வகையிலே இந்தப் பகுதி மக்கள் எதிர்காலத்திலே நல்ல மருத்துவ

வசதி பெறுவதற்கான நல்ல திட்டங்களை அங்கு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அரசு வகுத்து வருகிறது. அது விரைவில் நடைமுறைப்படுத்தப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 283, திரு. தி. வேல் முருகன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**283—**

## குடிநீர்த் தேக்கத் தொட்டி

***1644—திரு. தி. வேல் முருகன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், கடலூர் வட்டம், கேசவநாராயணபுரம் காலனிக்கு மேல்நிலை குடிநீர்த் தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கடலூர் மாவட்டம் முழுமையாக குடிநீர் திட்டப் பணிகளான ராஜீவ் காந்தி தேசிய குடிநீர் மற்றும் சுகாதார திட்டத்தில் வருவதால் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட கேசவநாராயணபுரத்திற்கு தனியே தொட்டி கட்டுவதற்கு, நான் சொன்ன ராஜீவ் காந்தி திட்டத்திற்கு மக்கள் பங்களிப்புத் தொகை கட்டுவார்களேயானால், அங்கே தனியே தொட்டி கட்டுவதற்கு அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், பண்ருட்டி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கேசவநாராயணபுரம் காலனி மக்களுக்கு புதிய போர்வெல்லுடன் கூடிய குடிநீர் மேல்நிலைத் தொட்டி கேட்டு நான் வினா எழுப்பியிருந்தேன். ஆனால், இந்த வினா புதிய மேல்நிலைத் தொட்டிக்கு மட்டும் வந்திருக்கிறது. இருந்தாலும்கூட அந்த கேசவநாராயணபுரம் காலனி மக்கள் அன்றாடம் விவசாய மற்றும் கூலிகளாக வேலை செய்யக் கூடிய மக்கள். அந்த மக்களுக்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வது போல், ராஜீவ் காந்தி திட்டத்தின்கீழ்



மக்கள் பங்களிப்புடன் கூடிய பணத் தொகையைக் கட்டி, அந்த ஊருக்கு குடிநீர் வசதி செய்துகொள்ள முடியாத ஒரு சூழ்நிலையில் வாழுகிற ஆதிதிராவிடர், ஏழை மக்கள், தினக்கூலி மக்களாக அவர்கள் இருக்கின்றார்கள். ஆதலால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நம்முடைய தமிழக அரசினுடைய சார்பாக அந்த ஏழை மக்களுக்கு ராஜீவ் காந்தி குடிநீர் திட்டத்தின்கீழ் வராமல், தமிழ்நாடு அரசு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாகவோ அல்லது வேறு ஏதாவது ஒரு திட்டத்தின் மூலமாகவோ, அந்த மக்களுக்கு குடிநீர் வழங்குவதற்கு நம்முடைய அரசு முயற்சி எடுக்குமா என்பதை தங்கள் வாயிலாக கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட கேசவநாராயணபுரம் பகுதியில், ஏற்கெனவே தம்பிப்பேட்டை என்கிற ஊராட்சியில் பொதுமக்களுடைய பங்களிப்போடு ராஜீவ் காந்தி குடிநீர்த் திட்டத்தின் மூலமாக, மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டப்பட்டு வருகிறது. அந்தத் திட்டத்தின் மூலமாக கேசவநாராயணபுரம் பகுதிக்கு, குழாய்கள் பதித்து, தண்ணீர் விடுவதற்கு வேண்டிய வேலைகள் எல்லாம் நடைபெற்று கொண்டிருக்கின்றன. வேலைகள் விரைவாக நடந்து முடிகின்றபோது நிச்சயமாக கேசவநாராயணபுரம் பகுதி மக்களுக்கு போதுமான அளவு குடிநீர் வழங்கப்படும் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 284, திரு. என். ரெங்கநாதன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**284—**

## புதிய பேருந்து நிலையம்

***2733—திரு. என். ரெங்கநாதன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, தரங்கம்பாடி பேரூராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைக்க நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது பேருந்து நிலையம் அமைக்கப்படும்?

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பூம்புகார் தொகுதி, தரங்கம்பாடி பேரூராட்சியில் புதியதாக பேருந்து நிலையம் அமைப்பதற்கு நிலம் ஏதும் கையகப்படுத்தப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) வினா எழவில்லை.

முற்பகல் 10-45

**திரு. என். ரெங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் தொகுதி தரங்கம்பாடி பேரூராட்சி, ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலேயே டேனிஷ்காரர்களால் ஆட்சி புரிந்த இடமாகும். வரலாற்றுச் சிறப்பு மிக்க பகுதி. இது ஒரு தேர்வுநிலைப் பேரூராட்சியாகும். பேரூராட்சிக்கு நிரந்தர பேருந்து நிலையம் இதுவரை அமைக்கப்பெறவில்லை. தரங்கம்பாடி வட்டத்தின் தலைமையிடமாகவும் உள்ளது. அங்கே இரண்டு கல்லூரிகளும், இரண்டு ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளும், இரண்டு உயர்நிலைப் பள்ளிகளும் இருக்கின்றன. இதற்கும் மேலாக, சுற்றுலாத் தலமாகவும் இருக்கிறது. உலகத்திலேயே ஓசோன் காற்று வரக்கூடிய இடங்களிலே தரங்கம்பாடி கடற்கரைப் பகுதியும் ஒன்றாகும். வெளிநாட்டுப் பயணிகளும் நிறைய சுற்றுப்பயணம் வந்து செல்கின்றனர். ஆகவே, இந்த இடத்தில் அரசு ஒரு நிரந்தர பேருந்து நிலையத்தை அமைத்துக் கொடுப்பதற்கு ஆவன செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூராட்சியின் மூலமாக இடத்தைத் தேர்வு செய்து அரசுக்கு அவர்கள் தீர்மானம் மூலமாக அனுப்புகின்றபோது, அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 285, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.



285—

### குளிர்சாதனக் கிடங்கு

***427—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், கொங்கணாபுரத்தில் திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தின் சார்பாக காய்கறிகளைப் பாதுகாக்க குளிர்சாதனக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய உரிய தகவலை அரசு தெரிவிக்குமா?

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கிடங்கு அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மாவட்ட மண்ணுக்குச் சொந்தக்காரர் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலிலே (அ) இல்லை, (ஆ) இக்கேள்விக்கே இடம் இல்லையென்று சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இருக்கிறதைத்தானே சொல்கிறார்? உள்ளதைத்தானே சொல்கிறார்?

**திரு. ஐ. கணேசன்:** அதுதான். திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக—ஆசியாவிலேயே மிகச் சிறப்பான ஒரு கூட்டுறவுச் சங்கம் என்றால், அது என்னுடைய தொகுதியிலே உள்ள கொங்கணாபுரத்திலே அமைந்திருக்கக்கூடிய அந்தக் கூட்டுறவு விற்பனைச் சங்கம்தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆசியாவிலேயே..

[2002 மே 3

**திரு. ஐ. கணேசன்:** ஆமாம், ஆசியா கண்டத்திலேயே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Very Good.

**திரு. ஐ. கணேசன்:** அப்பேர்ப்பட்ட சிறப்புமிக்க, அந்த ஆசியா கண்டத்தின் சிறப்பு வாய்ந்த கூட்டுறவு சொசைட்டி உங்களுடைய நிர்வாகத்தின்கீழ் வருகிறது. இடைப்பாடி பகுதி, புதுப்பாளையம், சமுத்திரம், கோரணம்பட்டி, கோணசமுத்திரம், கொங்கணாபுரம், பூமுனையூர், சித்தூர், பூலாம்பட்டி, காவேரிப்பட்டி, உங்களுடைய சங்ககிரி தொகுதியில், அனைத்துப் பகுதிகளிலேயும் புகையிலை பயிரிட்டு வந்தார்கள். மாசுக்கட்டுப்பாடு என்ற முறையிலே இப்போது புகையிலை பயிரிடுவதை விட்டுவிட்டு, சுப்பிரமணிய கவுண்டர் இருக்கிற பகுதியில், காய்கறிப் பயிரைப் பயிரிட்டு, வளர்த்து, அதை சேலம், ஈரோடு, பவானி முதலிய பகுதிகளுக்கு எடுத்துச்செல்ல மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகையாலே, அங்கே ஒரு குளிரூட்டு கிடங்கு வைப்பீர்களேயானால், நம்முடைய முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், சோ. பாலகிருஷ்ணன் அவர்களுடைய நெருங்கிய நண்பருமான சுப்பிரமணிய கவுண்டருடைய காலத்தில் மிகச் சிறப்பான விற்பனைச் சங்கமாக இருந்த அந்த சொசைட்டியின் மூலமாக இந்த குளிர்சாதனக் கிடங்கை ஏற்படுத்தினால், விவசாயிகளுக்கு மிகவும் உதவியாக இருக்கும். விவசாயிகளுடைய நண்பனாக விளங்கக்கூடிய இந்த அரசு (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகளுக்கு ஒரு குளிர்சாதனக் கிடங்கை ஏற்படுத்திக் கொடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஐ. கணேசன் அவர்கள் சொன்னதைப்போல், திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திலே, இந்த கொங்கணாபுரம் கிளை ஒரு சிறந்த கிளையாக, கூட்டுறவுக்கே வழி காட்டுகிற ஒரு நல்ல கிளையாக, சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறது. அதிலே மாற்றுக் கருத்து இல்லை. ஆனாலும், அந்தப் பகுதியிலே, அவருக்கும் எனக்கும் மிக நன்றாகத் தெரியும், முழுக்க முழுக்க நிலக்கடலை, ஆமணக்கு, பருத்தி போன்ற மானாவாரிப் பயிர்கள்தான் அதிகப்படியாக உற்பத்தியாகி, அந்த கொங்கணாபுரம் சங்கத்திற்கு வந்து கொண்டிருக்கின்றன. காய்கறிகள் பயிரிடுவது அதிகப்படியாக இல்லை. உறுப்பினர்கள் யாரும் அப்படிப்பட்ட காய்கறிகளை இந்தச் சங்கத்திலே கொண்டு வந்து விற்பனை செய்வதற்கு வருவது இல்லை. வந்தாலும், அழுகுகிற அந்தப் பொருட்கள் அதிகப்படியாக வருகிறபோதுதான், இதுபோன்ற



2002 மே 3]

குளிர்சாதனக் கிடங்குகள் அமைக்கிற அவசியம் ஏற்படும். ஆகவே, உறுப்பினர் அண்ணன் கணேசன் அவர்கள் சொன்னதைப்போல், தேவையில்லாமல் இந்தக் குளிர்சாதனக் கிடங்கைக் கட்டுவோம் என்று சொன்னால் இலாபத்தில் நடந்து கொண்டிருக்கிற இந்தச் சங்கம் தேவையில்லாத ஒரு சூழ்நிலைக்கு, நஷ்டத்திற்குக் கொண்டு போகக்கூடிய அளவுக்கு மாறிவிடும் என்கிற காரணத்தாலே, சிறப்பாக நடக்கிற சங்கம் சிறப்பாக நடக்க வேண்டும் என்பதற்காக, அந்த வாய்ப்பு வருகிறபோது அதனைப் பரிசீலிக்கலாம் என்பதனை தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே தெளிவாகச் சொன்னேன். எங்களுடைய மேட்டுப் பகுதியாக இருக்கக்கூடிய பகுதிகளில், உங்களுக்குத் தெரியும், நிலக்கடலை பயிரிடுவார்கள். தோட்டப் பயிர் நிறைந்த புதுப்பாளையம், சமுத்திரம், கோரணம்பட்டி, கோணசமுத்திரம், கோனேரிப்பட்டி, நெடுங்குளம், காவேரிப்பட்டி, கல்லாங்காடு ஆகிய பகுதிகளில் புகையிலை பயிரிட்டு வந்தார்கள். இப்போது புகையிலை பயிரிடுவதை நிறுத்திவிட்டதால், அங்கே காய்கறிகள் மிகப் பெரிய அளவிலே பயிரிட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால், அந்த விவசாயிகள் வாழ்வை வளப்படுத்தி மிகப் பிரம்மாண்டமாக 4, 5 மாநிலங்களிலிருந்து ஆர்டர்கள் வரக்கூடிய அந்த சொசைட்டியில் ஆண்டு ஒன்றுக்கு 100 கோடி ரூபாய்க்கு மேலே கமிஷன் இலாபமாக வருகிறது. அந்த இடத்திலே 100 கோடி ரூபாய்க்கு மேல் வருவதால் குளிர்சாதன வசதியோடு ஒரு கிடங்கு கட்டிக் கொடுப்பீர்களானால், பல்வேறு பகுதிகளில் இருந்து அந்த இடத்திற்கு வந்து, நல்ல விலை கிடைக்கும், நன்கு விற்பனை ஆகும், இலாபம் கிட்டும் என்பதை அமைச்சர் அவர்கள் சிந்தித்து, மீண்டும் பரிசீலனை செய்து, நிச்சயமாக கட்ட ஆவன செய்வார்களா என்பதனை உங்கள் மூலம் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு முன்னாலேயே தெளிவான பதிலைச் சொல்லிவிட்டேன். இருந்தாலும் வற்புறுத்திக் கேட்கிற காரணத்தாலே, காய்கறிகள் பயிரிட்டு அந்தச் சங்கத்திற்குக் கொண்டு வந்து விற்பனை செய்கிற விவசாயிகளுடைய எண்ணிக்கை

கூடுகிறபோது, அந்த விற்பனையும் கூடுகிறபோது, நிச்சயமாக இந்தச் சங்கம் இலாபத்தில் இயங்கும் என்கிற காரணத்தாலே குளிர்சாதனக் கிடங்கு கட்டுவதிலே சிரமம் இருக்காது. அப்படிப்பட்ட வாய்ப்பு வருகிறபோது நிச்சயம் இந்த அரசு, விவசாயிகள் அரசு—அவர் சொன்னதுபோல—நிச்சயம் விவசாயிகளுக்கு நன்மை செய்வதற்காக இந்த அரசு நிச்சயம் இதைப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 286, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**286—**

## பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம்

***7633—திரு. ஜி. பழனிசாமி:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) அரசின் ஏழைகள் பராமரிப்பு இல்லம் 1-3-1954 முதல் திருவள்ளூர் மாவட்டம், மேல்பாக்கத்தில் இயங்கி வருகிறது. 1945ஆம் ஆண்டு தமிழ்நாடு பிச்சைத் தடுப்பு சட்டத்தின்கீழ் தண்டனை விதிக்கப்பட்டவர்கள் நீதிமன்றம் நிர்ணயித்த காலத்திற்கு இவ்வில்லத்தில் அனுமதிக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகின்றனர். தண்டனை காலம் ஒரு வருடத்திலிருந்து மூன்று வருடங்களாக அனுபவித்து வருகிறார்கள். இவ்வில்லம் உடல் வலிமையுள்ள பிச்சைக்காரர்கள் ஏதாவது ஒரு சிறு தொழிலில் ஈடுபடுவதற்காக ஏற்படுத்தப்பட்டதாகும். இந்த இல்லவாசிகளுக்கு பைண்டிங், நெசவு, தச்சு, தையல், மண்பாண்டங்கள் செய்தல் போன்ற சிறு தொழில்களிலும் பயிற்சி அளிக்கப்படுகிறது.



பயிற்சி அளிப்பதற்கு பயிற்சி பெற்ற போதகர்கள் உள்ளனர் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு நீண்ட விளக்கத்தை, பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வுத் திட்டத்தின் மூலமாக அவர்களுடைய வாழ்க்கைக்கு மாற்று வேலைத் திட்டத்தையும் அரசு செய்து கொண்டிருப்பதாக இன்றையதினத்திலே அறிவித்தார்கள். ஆனால் இன்றைக்குத் தமிழகம் முழுமையும் பெரு நகரங்களிலும் சரி, சிறிய நகரங்களிலும் சரி, போக்குவரத்து நிறுத்தும் இடத்தில் எல்லாம் பார்த்தால், கைக்குழந்தையோடு பிச்சை எடுக்கின்ற அவலமான நிலைமை இருக்கிறது. சாலை ஓரங்களிலும், பாதாளப் பாதைகளிலும் பச்சிளங் குழந்தைகளைக் கீழே போட்டு பிச்சை எடுத்துக் கொண்டிருக்கின்ற கொடுமையான நிகழ்ச்சிகளை மனித நேயம் உள்ளவர்கள் யாரும் சகித்துக்கொள்ள முடியாத அளவுக்குப் பிச்சை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இதற்கு மேலாகச் சொல்லவேண்டும் என்று சொன்னால், கிராமங்களில் இருந்து ஓடி வரக்கூடிய சிறார்கள் பலபேர், ஓட்டல்களிலே வேலை செய்யக்கூடியவர்கள், இதுபோன்ற பிச்சைக்காரர்கள் என்று தனியாக இருக்கக்கூடியவர்கள், அவர்களைப் பிச்சை எடுப்பதற்குப் பயன்படுத்தி காலையில் ஊனமுற்றவர்களை எல்லாம் கொண்டுவந்து சாலை ஓரங்களிலே பிச்சை எடுக்க வைத்து, மாலையிலே அவர்கள் பிச்சை எடுத்த அந்தப் பணத்தை அவர்கள் பறித்துக்கொண்டு போகிறார்கள். ஆகவே, இதுபோன்ற நிலைகளிலே அரசு அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமா? இப்படி பிச்சை எடுக்கிறவர்கள்தான் பின்னாலே பெரிய நகரங்களிலே அவர்களுடைய தவறான நடவடிக்கையின் மூலமாகத் தாதாவாக மாறிக் கொண்டிருக்கிற நிலைமை எல்லாம் அவர்கள் சொல்லுகின்ற வாக்குமூலத்தின் மூலமாகச் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, இதைத் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? அப்படி அரசு என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துள்ளது என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-55

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் சொன்ன

கருத்துகள் ஏற்கெனவே அரசின் கவனத்திற்கு வந்துள்ளன. பல்வேறு தரப்பினைச் சார்ந்தவர்கள் இதுபோன்று சென்னை மாநகரம், கோவை, மதுரை போன்ற மாநகரங்களினுடைய பகுதிகளில், சிக்னலில் நிற்கும்போதும் சரி, இரயில்வே நிலையங்களிலும் சரி, இதுபோன்று கைக்குழந்தைகளை வைத்துக்கொண்டு, பிச்சை எடுப்பதையே தொழிலாக வைத்துக்கொண்டு இருக்கிறார்கள் என்கிற செய்தி அரசினுடைய கவனத்திற்கு வந்து, உடனடியாக சம்பந்தப்பட்ட காவல் துறை அலுவலர்களோடு தொடர்புகொண்டு, அவர்களைக் கைது செய்ய வேண்டுமென்று சொல்லி, உடனடியாகக் கைது செய்யப்பட்டு, அவர்களுக்குத் தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், தண்டனை வழங்குகிறபோது சிறுவர்களாக இருந்தால் சிறுவர் சீர்திருத்தப் பள்ளியிலே கொண்டுபோய் அந்தப் பிள்ளைகளை வைக்கிறபோது, பெற்றோர்கள் உடனடியாக வந்து இனிமேல் எங்களுடைய பிள்ளைகள் இதுபோன்று தவறு செய்யமாட்டார்கள் என்று சொன்னதற்குப் பிறகு, கருணையின் அடிப்படையிலே அனுப்பிவிடுகிறார்கள். பெரியவர்களாக இருந்தால், அவர்களை மேல்பாக்கத்திலுள்ள விடுதியிலே கொண்டு போய் அடைத்து, இதுபோன்ற பயிற்சிகளை தந்து, இனிமேல் பிச்சை எடுக்கக்கூடாது என்று அரசின் சார்பில் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள் என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சமூகப் பாதுகாப்புத் துறை மூலமாகப் பிச்சைத் தொழிலைத் தடுப்பதற்கு அரசு எடுத்த நடவடிக்கை என்ன என்பதையும், பிச்சைத் தடுப்புச் சட்டத்தின்கீழ் இதுவரை தண்டிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர் என்பதையும், விடுதலை ஆனவர்கள் எத்தனை பேர் என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலுள்ள மேல்பாக்கம் விடுதியிலே தங்க வைக்கப்பட்ட பிச்சைக்காரர்கள், 1997-லேயிருந்து 1998 வரை 64 ஆண்கள், 19 பெண்கள் ஆகமொத்தம் 83 பேர். 1998-99-ல் 140 பேர். 1999-2000-ல் 202 பேர். 2000-2001-ல் 186 பேர். 2001-2002-ல் 95 பேர். சென்னையைத் தவிர வேறு நகரங்களிலே பிச்சைக்காரர்களைப்





பிடிப்பதற்குப் போகிறபோது, தப்பித்துவிடுகிறார்கள் என்கிற தகவல் நமக்குக் கிடைத்திருக்கிறது. இந்தப் பிச்சைக்காரர்களை ஒழிப்பதற்காகவே, அவர்களை விடுவித்து, மறுவாழ்வு அளிப்பதற்காக, இந்தியக் குழந்தைகள் நலச் சங்கம் என்கிற அமைப்பு, தன்னார்வத் தொண்டு நிறுவனம், இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. அவர்களுக்குப் பல்வேறு வழிகளிலே நல்ல வழிகளைச் சொல்லித்தந்து, இனிமேல் பிச்சை எடுப்பதைச் செய்யக் கூடாது என்கிற அறிவுறுத்தலின் பேரில், அந்த நலச் சங்கம் செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே பிச்சைக்காரர்கள் கோயில்களிலே உட்கார்ந்து கொண்டுதான் பிச்சை எடுத்துக்கொண்டிருந்தார்கள். அதற்குப் பின்னாலே திருவிழாக்கள் நடக்கிறபோது அங்கே இருப்பார்கள். ஆனால், நிறையபேர் காலையிலே walking — பீச்சுக்கு எல்லாம் போய் இருப்பார்கள் என்று நினைக்கிறேன். காலையிலே 5 மணிக்கெல்லாம்கூட அங்கே உட்கார்ந்து கொண்டு, உலகத்திலேயே நம்முடைய சென்னை கடற்கரை தான் இரண்டாவது இடத்தைப் பெற்றிருக்கிறது என்று சொல்வார்கள். அப்படிப்பட்ட கடற்கரைச் சாலையிலே, நடக்கிற நேரத்தில், இரண்டு பக்கங்களிலேயும் உட்கார்ந்துகொண்டு (குறுக்கீடு) உலகத்திலேயே இரண்டாவது இடத்தைப் பெற்றிருப்பதாகச் சொல்கிறார்கள். அப்படி இருக்கிற நேரத்தில், காலையிலே நடக்கிறவர்கள் கையிலே காசு இல்லாமல், அவர்கள் அரைக்கால் சட்டை போட்டுக்கொண்டு ஓடிக் கொண்டிருப்பார்கள். ஓடுகிற நேரத்தில் கையேந்துகிறார்கள். நானே பல இடங்களில் பார்த்திருக்கிறேன். அதனால் தகராறு வந்தாலும் வரலாம். (சிரிப்பு) ஆகவே, அப்படிப்பட்ட சூழ்நிலையில் யாரும் இதைக் கேட்கவில்லை. இப்படி அவர்கள் பார்க்கிறபோது, அவர்கள் வரிசையாக உட்கார்ந்துகொண்டு கேட்டுக்கொண்டேயிருக்கிறார்கள். காலை 5 மணிக்கே ஆரம்பிக்கிறார்கள். நாம் போகும்போதெல்லாம் பார்க்கலாம். அந்தக் கடற்கரையைச் சீரழிக்கிற வகையிலே, அசிங்கப்படுத்துகிற வகையிலே உட்கார்ந்துக்கொண்டு, காலையிலேயே பிச்சை கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அப்படியெல்லாம் அவர்களுக்குத் தண்டனை கொடுக்காமல், அவர்களை அழைத்து, நம்முடைய அரசு

[2002 மே 3

போட்டிருக்கிற திட்டங்களாலே, அவர்களுக்கு ஏதாவது உதவி கொடுத்து, மறுவாழ்வு அளிக்கப்படுமா என்பதை உங்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிச்சைக்காரர்களை ஒழிப்பதற்கான திட்டத்திற்கென்றே தனியாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. 2001-2002 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு ரூ.41,89,000/- ஆகும். 2002-2003 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு ரூ.43,39,000/- ஆகும்.

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** பிச்சை எடுப்பதை ஒழிக்க வேண்டும் என்பதுதான் அரசினுடைய தலையாய நோக்கம். கடற்கரைச் சாலையிலே பிச்சை எடுத்துக்கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். சென்னை மாநகரத்தின் எந்தப் பகுதியிலே பிச்சை எடுத்தாலும், உடனடியாகக் காவல் துறை அலுவலர்களுக்குத் தகவல் தெரிவித்தால், அவர்களை அழைத்து, காவல் நிலையத்திலே கொண்டுபோய் வைத்து, அறிவுறுத்தி அனுப்ப வேண்டுமென்று ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிறது. இந்த முறையை, மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம், எந்த இடங்களிலே கண்டறிந்தாலும்கூட, காவல் நிலையத்திற்குத் தகவல் தெரிவிக்கிறபோது, அவர்களுக்குத் தக்க பாடத்தை அறிவுறுத்தி திருப்பி அனுப்புவார்கள் என்று ஏற்கெனவே சொல்லி இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது, இங்கே திருவள்ளூர் மாவட்டத்தில் மேல்பாக்கத்தில் மட்டும் ஒரு மறுவாழ்வு இல்லம் இருப்பதாகத் தெரிவித்தார்கள். நம்முடைய பேரவைத் துணைத் தலைவர் சொன்னது போல, கடற்கரைச் சாலையிலிருந்து ஆரம்பித்து, வாலாஜா ரோடாக இருந்தாலும் சரி, ஒவ்வொரு சிக்னலிலும்கூட நின்று கொண்டிருக்கிறார்கள். எல்லாக் கோயில்களிலும் பிச்சைக்காரர்கள் வரிசையாக அமர்ந்து கொண்டிருக்கிறார்கள். இப்படி தமிழ்நாடு முழுக்க பிச்சைக்காரர்களுடைய எண்ணிக்கையை எடுத்துப் பார்ப்போம் என்று



2002 மே 3]

சொன்னால், மாவட்டத்திற்கு 15, 20 பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லங்களைத் தொடங்க வேண்டிய ஒரு நிலைதான் இருக்கிறது. இப்பொழுது அந்த அளவிற்கு அதிகமாக இருக்கிறது. அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது ஓர் ஆண்டுக்கு 64 பேர், 22 பேர்கள்தான் கைது செய்யப்பட்டதாகச் சொல்லியிருக்கிறார்கள். சென்னையில் மட்டுமே நாம் கணக்கு எடுத்தாலும்கூட 2,000 பேரை இப்பொழுது அந்தப் பிச்சைத் தடுப்புச் சட்டத்திலே கொண்டு போடலாம். ஆனால், போலிசார் எதிரிலேயே பிச்சை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் சொன்னதுபோல, சில தாதாக்கள் பிச்சைக்காரர்களையெல்லாம் ஊக்கப்படுத்தி, அவர்களுக்கு மாதச் சம்பளம் கொடுத்து, அவர்களிடமிருந்து பணத்தை பெரிய அளவிலே, அவர்கள் சம்பாதித்ததைப் பிரித்துக் கொடுக்கிறார்கள்..........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி என்ன என்று கேளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கெல்லாம் ஒரு தனிக் குழு போட்டு, திருவள்ளூர் மாவட்டத்திலே மட்டும் போதாது, எல்லா மாவட்டங்களிலும் குறைந்தது ஒரு மாவட்டத்திற்கு 5 அல்லது 10 பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லங்களை நீங்கள் திறந்து வைத்து, போலீசாரை வைத்து வழக்குப் போட்டு, பிச்சைக்காரர்கள் இனி தமிழகத்திலே இருக்கக்கூடாது என்கிற ஒரு நிலையை ஏற்படுத்தித் தருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் சொன்னது, ஏதோ தெலுங்கு சினிமாவிலே பார்ப்பது போல ஒரு நல்ல கதையை இங்கே சொன்னார். ஆனால், தமிழ்நாட்டிலே அதைப்போன்ற தாதாக்கள் இருப்பதாக அரசினுடைய கவனத்திற்கு இதுவரைக்கும் வரவில்லை. பல இடங்களிலே இன்னும் தொடங்க வேண்டும் என்று சொன்னார். அதை மாண்புமிகு உறுப்பினர் விரும்புகிறாரா என்பது எனக்குத் தெரியவில்லை. காரணம், பிச்சை எடுப்பதே குற்றம் என்று சொல்கிறோம். பிச்சை எடுப்பதையே தடை செய்ய வேண்டும் என்று சொல்கிறபோது, இதுபோன்ற இல்லங்கள் அதிகமாகத் தொடங்கப்படுமேயானால், சில பேர் மிகவும் சௌகரியமாக அந்த இடத்திலே வந்து தங்கக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாக்கப்பட்டுவிடும். முதலில் பிச்சை இடுவதும் குற்றம், பிச்சை எடுப்பதும் குற்றம் என்பதுதான் நம்முடைய நாட்டிலே தொடர்ந்து கடைப்பிடித்து வருகின்ற ஒன்று. மாண்புமிகு உறுப்பினர்

[2002 மே 3

அதை விரும்புகிறாரா என்று எனக்குத் தெரியவில்லை. ஆகவே, பிச்சை எடுப்பதைத் தடுப்பதற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் அரசோடு ஒத்துழைக்க வேண்டுமென்று தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லக்கூடிய நேரத்திலே பிச்சை எடுப்பது ஒரு குற்றம் என்ற முறையிலே சொன்னார்கள். ஆனால், பல நேரங்களிலே நாம் பல ரோடு ஓரங்களிலேயும், அதே மாதிரி பேருந்து நிலையங்களிலேயும் சந்திக்கக்கூடியவர்களில் அதிகமானவர்கள் பெண்கள். கணவனால் கைவிடப்பட்டு வாழ்க்கை நடத்திக்கொள்ள முடியாமல், வேறு வழியில்லை என்ற காரணத்தினாலே அவர்கள் பிச்சை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு மறுவாழ்வு ஏற்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமே தவிர, அதைக் குற்றம் என்ற முறையிலே மட்டும் பார்ப்பது சரியல்ல. அது ஒரு சமூகப் பிரச்சினை என்ற முறையிலே, இப்படிப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு கொடுப்பதற்கு அதுவும் குறிப்பாக கணவனால் கைவிடப்பட்டவர்களுக்கு வாழ்வு கொடுப்பதற்கு ஒரு திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கின்ற நேரத்தில், அந்தத் திட்டத்தின்கீழ் பெண்களுக்கு மறுவாழ்வு கொடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் கேட்ட கேள்விக்கே நான் சொல்லியிருக்கிறேன். இந்தப் பிச்சைக்காரர்கள் பிச்சை எடுக்கக் கூடாது என்பதற்காகவே பல்வேறு கைத்தொழில்களை நாங்கள் கற்றுத் தருவதற்காகத்தான் இல்லத்திலே கொண்டுபோய் அடைத்து வைத்து, அவர்கள் செய்யக் கூடிய வேலைகளுக்குக்கூட, அவர்களுக்கு செய்யக்கூடிய சலுகைகளை எல்லாம் பார்த்தால், இல்லவாசிகளுக்கு உணவு, மருத்துவ வசதி, தங்கும் வசதி, உடை, எல்லாமே கொடுத்து, இந்தத் தொழில்களை அந்த இல்லங்களிலேயே கற்றுக்கொண்டால்கூட கூலியும் சேர்த்துத் தருகிறோம். ஆனால், என்ன காரணத்தினாலோ தெரியவில்லை, இவர்கள் வெளியே இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார்களே தவிர, உள்ளே இருந்து அந்தத் தொழிலைக் கற்றுக்கொள்வதற்கு விரும்புவது இல்லை என்பதுதான் நாங்கள் அறிந்த ஒன்று. இருந்தாலும், குழந்தைகள் பிச்சை எடுப்பவர்களாக இருந்தால்,



2002 மே 3]

பெற்றோர்களையும் அழைத்து இளைஞர் வழிகாட்டி மையம் என்ற ஒரு மையத்தின் மூலமாக இதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். பெண்களைப் பொறுத்தவரை குழந்தைகளை வைத்துக் கொண்டிருப்பவர்கள்—நான் என்னுடைய அனுபவத்திலே சொல்ல விரும்புகிறேன்—சிக்னல் பகுதிகளிலே எல்லாம் பார்த்தால், ஒரு அரசாங்க முத்திரை பதித்த அல்லது விளக்கு போட்ட வண்டி வருகிறது என்று சொன்னால், உடனே பக்கத்திலே ஏதாவது ஒரு பகுதியிலே போய் ஒளிந்துகொள்கிறார்கள், நம்மைப் பிடித்துவிடுவார்கள் என்று சொல்லி. அதற்குப் பிறகு சாதாரணமான வண்டிகள் போகிறபோது, உடனே வெளியே வந்து பிச்சை எடுக்கிறார்கள். இதுபோன்ற தவறுகளை அவர்களே செய்து, பிச்சை எடுக்க வேண்டுமென்கிற ஓர் உறுதியான எண்ணத்தை மனதிலே வைத்துக்கொண்டு செய்து கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும், அரசு இதைக் கடுமையாக எச்சரித்து, பிச்சை எடுப்பதைத் தடுப்பதற்கு எல்லா வழிகளிலேயும் முயற்சி எடுக்கும் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் [illegible]-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிச்சைக்காரர்கள் போல் மாறுவேடத்திலே கொள்ளையர்கள் வந்து பல்வேறு இடங்களில் திருட்டுகள் நடைபெறுவதாக பத்திரிகைகளிலே அடிக்கடி செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, நம்முடைய சமூக நலத் துறை அமைச்சர் — இன்றைக்குக்கூட மன நோயாளிகளாக பல்வேறு நெடுஞ்சாலைகளிலே, வட இந்தியாவிலே இருந்து வந்து, திரிந்து கொண்டு — அதிலும்கூட, பல தீவிரவாதிகள் நடமாடுவதாகச் சொல்லப்படுகிறது — இன்றைக்கு மறுவாழ்வு இல்லத்திலே இருக்கக்கூடியவர்கள் 66 பேர்கள்தான் என்று சொல்லுகிறார்கள். ஆனால், தமிழகத்திலே அப்படிப்பட்டவர்கள் இன்றைக்குப் பல்லாயிரக்கணக்கிலே இருக்கிறார்கள். அந்தத் துறையில் காவல் துறையோடு இணைந்து இதற்கான எந்தவொரு பணியும் நடைபெறுவதாக இதுவரை தெரியவில்லை. ஆகவே, இந்த நிலையை மாற்றுகின்ற வகையில் நடவடிக்கை எடுக்க இந்த அரசு முன்வருமா? தலைவர் கலைஞர் அவர்கள் மறுவாழ்வு இல்லங்களை அமைத்து, தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்காகப் பல்வேறு இடங்களிலே இல்லங்களை ஆரம்பித்திருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து நடத்தி,

[2002 மே 3

அங்கேயும், இப்படிப்பட்ட மறுவாழ்வு இல்லங்களிலே அப்படிப்பட்டவர்களை அனுமதித்து, அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிச்சைக்காரர்கள் என்கிற போர்வையிலே தீவிரவாதம் வளர்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் பிச்சாண்டி அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். அது எந்த மாதிரி தீவிரவாதம் என்கிற குறிப்புகளெல்லாம் அரசின் கவனத்திலே இல்லை. இன்னும் மொத்தமாகச் சொல்லப்போனால், பிச்சைக்காரர்கள் என்பவர்கள், உண்மையிலேயே தெரிந்து பிச்சை எடுப்பவர்கள் என்பவர்கள் ஓர் இரகம். தெரியாமல், வறுமையின் காரணத்தால் பிச்சை எடுப்பவர்கள் என்பவர்கள் ஓர் இரகம். வறுமையின் காரணத்தால் பிச்சை எடுக்கிறவர்கள் தெரிந்தும் தெரியாமலும் எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். தெரிந்தே, பிச்சை எடுத்துதான் வாழ வேண்டும் என்கிற எண்ணத்தில் சோம்பேறித்தனமாகத் தங்களுடைய வாழ்க்கையை நடத்திக்கொள்ள வேண்டும் என்று எண்ணுகிறவர்கள் இதுபோன்ற தவறுகளில், சமுதாய விரோதச் செயல்களில் ஈடுபட்டிருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அப்படி ஏதாவது திருவண்ணாமலை பகுதியிலே, மாண்புமிகு உறுப்பினர் பிச்சாண்டி அவர்களின் கவனத்திற்கு வந்து, தீவிரவாதிகள் பிச்சை எடுப்பார்கள் என்று சொன்னால், உடனடியாகக் காவல் துறையின் மூலமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், நீண்ட நேரமாகக் கையைத் தூக்கிக் கொண்டிருக்கிறீர்கள்!

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி கேட்பதற்காகக் கையேந்தி, பல நிமிடங்கள் காத்திருந்ததற்குப்பின் அனுமதித்ததற்கு நன்றி. பிச்சைக்காரர்கள் தமிழகத்திலே அதிகமாக இருக்கிறார்கள் என்ற செய்தியைப் பேசிக் கொண்டிருக்கிற இந்த நேரத்திலே வெளி மாநிலத்தைச் சேர்ந்த பிச்சைக்காரர்கள் அதிகமாக தமிழகத்திற்கு வந்திருப்பதாகத் தகவல் தெரிகிறது. அதிலும் குறிப்பாக, சென்னை நகரத்திலே அதிகமாக வெளி மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் பிச்சை எடுக்கும் தொழிலில் ஈடுபடுவதாகத் தெரிகிறதே, இதைப் பற்றி அரசுக்கு ஏதாவது தகவல் இருக்கிறதா? இப்படிப் பிச்சை எடுத்துத் தொழிலைச் செய்பவர்களைக் காவல் துறையே ஊக்கப்படுத்துகிறது என்ற செய்தியும் இருக்கிறது.



2002 மே 3]

ஆகவே, தாதாக்களைப் பற்றிச் சொல்கிறபோது, காவல் துறைக்கும் இணைந்த முறையிலே அந்தத் தொழிலிலே பங்கு இருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அதைப் பற்றிய செய்தியும் அரசிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்கள் தவறான தகவலை அவைக்குத் தருகிறார். காவல் துறையே பிச்சைக்காரர்களுக்கு உடந்தை என்று சொல்வது என்பது முழுக்க முழுக்க தவறான வாதமாகும். அதை ஏற்றுக்கொள்வதற்கு அரசு தயாராக இல்லை. வெளி மாநிலங்களிலிருந்து பிச்சைக்காரர்கள் வருவது என்பது உண்மை. அதிலே சிறு பிள்ளைகள் சில பேர் இரயிலிலே வந்து மாட்டிக்கொள்கிறார்கள். சில பேர் 15 வயது மதிக்கத்தக்க குழந்தைகள் எல்லாம் தெருவோரங்களிலே பிச்சை எடுத்துக்கொண்டிருப்பதாகத் தகவல் வந்தவுடன் சமூகப் பாதுகாப்புத் துறையின் சார்பில் அவர்களையெல்லாம் பிடித்து வந்து, சென்னையிலே இருக்கிற புரசைவாக்கத்திலே இருக்கக்கூடிய, கூர்நோக்கு இல்லங்களிலே கொண்டுபோய், அந்தக் குழந்தைகளை வைத்து விசாரிக்கிறபோது, தாங்கள் திருடுவதற்காக வந்த குழந்தைகள் என்று அவர்கள் ஒத்துக்கொள்வதில்லை. பெற்றோர் அடித்துவிட்டார்கள், நாங்கள் தப்பித்து வந்துவிட்டோம் என்றுதான் தகவல் தருகிறார்கள். ஆகவே குழந்தைகளைக் கவனிக்கிறபோது, இந்த அரசு மனித நேயத்தோடு கவனிக்க வேண்டும் என்பதற்காக அவர்களை அறிவுறுத்தி, பல்வேறு தொழில்களை அந்த இல்லங்களிலே வைத்து கற்றுக்கொடுக்கிறோம். பெரியவர்களாக இருந்தால், மேல்பாக்கத்திலே இருக்கிற விடுதிகளுக்கு அழைத்துச் சென்று, அவர்களையும் அறிவுறுத்தி, இன்னும் கைத்தொழில்களைக் கற்றுத் தருகிறோம் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் இருந்தபோது, தொழுநோய் பிச்சை எடுப்பு ஒழிப்புத் திட்டத்தைக் கொண்டுவந்து, அதன் மூலமாக மறுவாழ்வு இல்லங்கள் அமைக்கப்பட்டன. செங்கல்பட்டு மாவட்டம்,

[2002 மே 3

புதுக்கோட்டை, தஞ்சாவூர் ஆகிய பகுதிகளிலே அமைக்கப்பட்டன. இப்பொழுது தொழுநோய் பிச்சைக்காரர்கள் ஆங்காங்கு தென்படுகின்ற காரணத்தினால், அங்கே அந்த மறுவாழ்வு இல்லங்களுக்குக் கொண்டு செல்கின்ற பணியை அரசு செய்துகொண்டிருக்கிறதா? அந்த மறுவாழ்வு இல்லங்கள் தொடர்ந்து பராமரிக்கப்படுகின்றனவா என்பதைத் தங்கள் மூலமாக அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழுநோய் பாதுகாப்பு இல்லம், பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லம் என்று ** இதிலே மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் அந்தத் தொழுநோயாளிகள் இல்லத்தையெல்லாம் எங்களுடைய இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தத் துறைக்கு என்னை அமைச்சராகப் பொறுப்பாக்கியதற்குப் பிறகு, தமிழ்நாட்டிலே இருக்கிற அத்தனை இல்லங்களுக்கும் போய்ப் பார்வையிட்டு வந்தபோது அவர்கள் படுகின்ற துயரமெல்லாம் ** என்று அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்தபோது, மிக முக்கியமான சலுகை, தொழுநோயாளிகளுக்காகப் போர்வை 3 ஆண்டு காலத்திற்கு ஒருமுறை வழங்கவேண்டும் என்பது அரசினுடைய சட்டம். ஆனால் 3 ஆண்டு காலத்திற்கு வழங்கக்கூடிய அந்தப் போர்வையைக்கூட, தொழுநோயாளிகளுக்கு வழங்கப்படும் போர்வையைக்கூட ** இன்றைக்கு அம்மா அவர்கள் இப்பொழுது போர்வையை உடனடியாக வழங்க வேண்டும் என்று சொல்லி கடந்த மாதம், அந்தப் போர்வையை தமிழ்நாட்டிலே இருக்கிற 10 இல்லங்களுக்கும் நாங்கள் வழங்கியிருக்கிறோம். எல்லாவற்றிற்கும் மேலாக, ஒரு தொழுநோயாளி இறந்து போய்விட்டால், 200 ரூபாய் அந்த ஈமக்கிரியை செய்வதற்காக வழங்கப்படும் தொகையை மாண்புமிகு அம்மா அவர்கள் 500 ரூபாயாக உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள் என்பதையும் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். காரணம் தொழுநோயாளிகளும் இந்த நாட்டிலே இருக்கிற பிரஜைகள்தான். நீங்கள் தெருவிலே போய் பிச்சை எடுக்கக்கூடாது. ஆலயத்திற்கு அருகிலே பிச்சை எடுக்கக்கூடாது என்று நாங்கள் அந்தந்த இல்லங்களுக்குப் போய் அறிவுறுத்தியிருக்கிறோம் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2002 மே 3]

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிறபொழுது, பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லத்தை நாங்கள் பராமரிக்கிறோம் அல்லது அவர்களுக்கு சௌகரியம் செய்து கொடுக்கிறோம் என்றுதான் பதிலிலே சொல்லவேண்டுமே தவிர ** ஒரு குறை சொல்கிறார்கள். குறை சொல்லக்கூடாது என்றுகூட சொல்லவில்லை. ஆனால் இது அல்ல நேரம். கேள்வி நேரத்தில் ** இது செய்யவில்லை, அது செய்யவில்லை என்ற குற்றச்சாட்டை சொல்லக்கூடாது என்பது இந்த மன்றத்தினுடைய மரபு. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய தீர்ப்பினை எதிர்பார்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி நேரத்திலே குற்றச்சாட்டு கூடாது. இப்பொழுது செய்யப்பட்டிருக்கிற பணிகளைப்பற்றி நீங்கள் சொன்னவை எல்லாம் அவைக்குறிப்பிலே இருக்கும்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** இல்லை, இல்லை, நான் சொல்லிவிடுகிறேன். நீங்கள் அடிக்கொரு தடவை அறிவுறுத்துகிற அறிவுரையை நாங்கள் கேட்டுத்தான் இந்த அவையிலே இருக்கிறோம். கேள்வி நேரத்தின்போது குற்றச்சாட்டு கூடாது என்று நீங்கள் எங்களுக்கெல்லாம் பாடம் சொல்லியிருக்கிறீர்கள். மாண்புமிகு உறுப்பினர் புகழேந்தி அவர்கள் சொன்ன கேள்விக்கு நான் பதில் அளித்திருக்கிறேனே தவிர வேறு ஒன்றுமில்லை. அவர்களுடைய ஆட்சிக்காலத்திலே அவர்கள் செய்ததைத் தொடர்கிறீர்களா என்று கேட்டார். நீங்கள் விட்டதை நாங்கள் தொடர்கிறோம் என்று சொல்லியிருக்கிறேனே தவிர, ** நான் இங்கே சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, உட்காருங்கள். மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் திரு. புகழேந்தியின் கேள்விக்குரிய பதிலைச் சொன்னார்கள். இந்த அரசு தொழுநோய் பிச்சைக்காரர்கள் இல்லங்களை எப்படிப் பராமரித்துக் கொண்டிருக்கிறது. எந்தெந்த வகையிலே உதவி செய்து கொண்டிருக்கிறது. போர்வை எப்படியெல்லாம் வழங்கப்பட்டிருக்கிறது என்று அவர்கள் சொன்ன அந்தத் தகவல் அவைக்குறிப்பில் இருக்கும். மற்றவை மட்டும் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

வினா எண் 287. திரு. என்.கே. பெருமாள், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர். [2002 மே 3

**287—**

**அருந்ததியர் காலனியில் வீடுகள்**

***14530— திரு. என்.கே. பெருமாள்:**

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடிசைமாற்று வாரியத் திட்டத்தின்கீழ் விளாத்திகுளம் அருந்ததியர் காலனியில் வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்ற இலக்கை அடைந்திடவும் அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமையை நிலைநாட்டி, அவர்தம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திடவும் அயராது பாடுபட்டுவரும் மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எனது விளாத்திகுளம் தொகுதியிலே விவசாயிகளினுடைய நலன் கருதி குளிரூட்டி பதப்படுத்தும் நிலையம் ஒன்றும், அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்திற்கு திருப்பணித் தேவைக்கு 10 இலட்சம் ரூபாய் வழங்கி...

முற்பகல் 11-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெருமாள், அருந்ததியர் காலனி வீடுகள். அதை மட்டும் கேளுங்கள்.



2002 மே 3]

**திரு. என்.கே. பெருமாள்:** விளாத்திகுளத்தில், பனையடிப்பட்டியில் அரசுக்குச் சொந்தமான நிலம் உள்ளது. இந்த நிலத்திற்கு அருந்ததியர் சமுதாய மக்களுக்கு. பட்டா வழங்கி, இவர்கள் வாழ்வில் ஒளியேற்றிட வேண்டும். 'வாம்பே' திட்டத்தில்—அருந்ததியர் மக்கள், விளாத்திகுளத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட குடிசைகளில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற இந்த மக்களுக்கு, குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாசியுடன், வீடுகள் கட்டித் தரப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் பேரூராட்சிப் பகுதியில், அருந்ததியர் காலனியில் சுமார் 85 குடும்பங்கள் குடிசைப் பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர். இக்குடும்பங்களுக்குத் தற்போது மைய அரசால் அறிவிக்கப்பட்டுள்ள 50 சதவீதம் மானிய உதவியுடன், 'வால்மீகி அம்பேத்கர் ஆவாஸ் யோஜனா (வாம்பே) வீட்டுவசதித் திட்டத்தின்' கீழ் பயனாளிகள் 10 சதவீதம் மதிப்பீட்டுத் தொகையை முன்பணமாகவும், 40 சதவீதம் பணத்தை ஹட்கோ கடன் உதவியுடனும், 15 வருட காலத்தில் குறைந்த வட்டியுடன் திரும்பச் செலுத்த சம்மதம் தெரிவித்தால், குடும்பம் ஒன்றுக்கு, ஒரு வீட்டிற்கு 40,000 ரூபாய் வீதம் இக்குடும்பங்களுக்கு தனி வீடுகள் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினருக்கு அவையின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 288, திரு. எஸ்.எம். சீனிவேல், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

**288—**

**பொருட்காட்சி**

***21514—திரு. எஸ்.எம். சீனிவேல்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை, சித்திரை அரசு பொருட்காட்சியைத் தொடர்ந்து ஆண்டு முழுவதும் நடத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. க.க. பாலசுப்ரமணியன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மதுரை, சித்திரைப் பொருட்காட்சியை ஆண்டு முழுவதும் நடத்துவது குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.எம். சீனிவேல்:** அம்மாவின் திசைநோக்கி வணங்கி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகராட்சியின் மையப் பகுதியில் இன்றைக்கு சித்திரைப் பொருட்காட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த சித்திரைப் பொருட்காட்சிக்கு 45 நாட்களுக்கு மட்டும்தான் அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், சுந்த ஆண்டு, அந்த 45 நாட்களுக்கு வருவாய் நிகர இலாபம் 28.66 இலட்சம் ரூபாய் கிடைக்கப்பெற்றிருக்கிறது. மதுரை மாநகரம் சுமார் 16½ இலட்சம் பேர் வாழக்கூடிய ஒரு மாநகரமாகும். அதிலும் குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால், அந்த மதுரை மாநகரத்திற்கு 'தூங்கா நகரம்' என்று ஒரு இணைப் பெயரும் உண்டு. அந்த மாநகரத்திலே இருக்கக்கூடிய மக்கள் போய் கண்டு களித்து வரக்கூடிய ஒரு இடம், இந்த மாநகராட்சிப் பொருட்காட்சியைத் தவிர வேறு இடம் கிடையாது. கொடைக்கானல், ஊட்டி என்றால் அங்கே இருக்கக்கூடிய மக்களில், வசதி படைத்தவர்கள்தான் அங்கே போகமுடியும்; ஏழையெளிய மக்கள், நடுத்தர மக்கள் போகக்கூடிய வாய்ப்பு கிடையாது; கடற்கரையும் கிடையாது. ஆகவே, என்னுடைய கையிலே அரசாணை இருக்கிறது. கடந்த ஓராண்டில், நிகர இலாபம் 45 நாட்களுக்கு 28.66 இலட்சம் ரூபாய் கிடைக்கப்பெற்றிருக்கிறது. ஏற்கெனவே, சுஜானா காலியாக இருக்கக்கூடிய நேரத்தில், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திறம்பட கொள்கையோடு, கொள்கை விளக்கக் குறிப்பிலே நிறைய திட்டங்கள் இன்றைக்கு வகுத்துக் கொண்டிருக்கக்கூடிய இந்தக் காலக்கட்டத்தில், இன்னுமொ ஓராண்டுக்கு நீட்டித்துத்தர நான் கேட்டிருக்கிறேன். பேரவைத் தலைவருக்கு நன்றாகத் தெரியும். ஏனென்றால், அது அவர் பிறந்த மாநகரம்தானே. ஆகவே, அங்கு வாழ்த்திப் பேசுகையில், அதை நீட்டித்துக் கொடுக்கவேண்டுமென்று பேசியிருக்கின்றார்கள். ஆகவே, மதுரை மாநகரத்திலே அங்கே ஸ்டால் வைத்திருக்கக்கூடிய



சுய வேலைவாய்ப்பு பெறும் பெண்களுக்கு ஒரு நாளைக்கு மட்டும் கடைக்கு, 800 ரூபாயிலிருந்து, 1,000 ரூபாய் வரை இலாபம் கிடைக்கிறது. இந்த 3 மாதம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன சீனிவேல், என்ன செய்யவேண்டும்?

**திரு. எஸ்.எம். சீனிவேல்:** ஆகவே, நான் அமைச்சர் அவர்களைக் கேட்பதெல்லாம், ஓராண்டு இல்லையென்றாலும், 3 மாதங்கள் அல்லது 6 மாதங்கள் நீட்டித்துக் கொடுத்தால், 1.00 கோடி ரூபாய் வரையில் இலாபம் கிடைக்கும். மதுரை மாநகரத்திலே இருக்கக்கூடிய மக்கள் உல்லாசமாகப் போய் வரக்கூடிய வகையிலும், இன்பமாக நேரத்தைக் களிப்பதற்கும் ஒரு வாய்ப்பு கிடைக்கும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை நீட்டித்துக் கொடுப்பார்களா என்று நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க.க. பாலசுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே நடைபெறுகிற பொருட்காட்சிகள் மதுரை, சேலம், கோயம்புத்தூர் போன்ற மாநகரங்களில் 45 நாட்கள், 60 நாட்கள் என்று ஆண்டுதோறும் நடைபெற்று அதிகமான இலாபங்களை அடைவதற்கு, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆலோசனையின்பேரில் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, இதய தெய்வம் அம்மா அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று நீடிப்பது சம்பந்தமாக இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-20)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி வளர்மதி ஜெபராஜ்.

**திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகரில் ஒவ்வோர் ஆண்டும் அரசின் சார்பாக நடைபெறுகின்ற அந்த சித்திரைப் பொருட்காட்சி, மதுரை மேற்கு

தொகுதியிலே உள்ள தமுக்கம் மைதானத்தில் நடைபெற்று வருகிறது என்பதைத் தாங்கள் அறிவீர்கள். கோவில் மாநகரம் என்று போற்றப்படுகின்ற, புகழப்படுகின்ற அந்த மதுரை மாநகரில், எனக்கு முன்னால் பேசிய அண்ணன் மாண்புமிகு உறுப்பினர் சீனிவேல் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல, இயற்கை நீர்வீழ்ச்சிகளோ, கடற்கரைகளோ, பொழுதுபோக்கு அம்சங்களோ எதுவுமே கிடையாது. இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், மிகப் பெரிய நகரங்களான சென்னை, கோயம்புத்தூர் போன்ற பகுதிகளிலேயெல்லாம் வீட்டிற்குத் தேவையான உபயோகப் பொருட்களை வாங்குகின்றபொழுது, ஒரே இடத்தில் வாங்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆனால், மதுரையிலே மட்டும் வாழ்க்கைக்குத் தேவையான வீட்டு உபயோகப் பொருட்களை வாங்குவதற்கு, துணிமணிகளை வாங்குவதற்கு அம்மன் சன்னதி மற்றும் கோவிலைச் சுற்றியுள்ள பகுதிகளிலே, பாத்திரங்களை வாங்குவதற்கு காமராஜர் சாலை போன்ற பகுதிகளிலே, சென்று மக்கள் வெயிலிலே வாடி வதங்க வேண்டிய சூழ்நிலை, அலைந்து திரியவேண்டிய சூழ்நிலை மதுரையிலே இருக்கிறது. எனவே, மதுரை மக்களின் வாட்டத்தைப் போக்க, அண்ணன் சீனிவேல் அவர்கள் சொன்னார்கள்; பொருட்காட்சியை நீட்டித்துத் தரவேண்டுமென்று. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புவது, மதுரை மக்களுடைய எண்ணம், மதுரை மக்களுடைய ஏக்கம், மதுரை மக்களுடைய ஆசை என்னவென்றால், அங்கே நிரந்தரப் பொருட்காட்சி வேண்டும் என்பதுதான். எனவே, நம்முடைய அன்னை அவர்களுடைய பொற்கால ஆட்சியில், மதுரை மாநகரில் என்னுடைய தொகுதிக்கு உட்பட்ட அந்த தமுக்கம் மைதானத்தில் அனைத்துப் பொருட்களையும் ஒரேயிடத்தில் வாங்கக்கூடிய அளவிற்கு ஒரு Complex-ம், நம்முடைய அன்னை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்த நாட்டிற்கு செய்து வருகின்ற திட்டங்களை மக்கள் அறிந்துகொள்ளும்முகமாக, அரசின் திட்டங்களை மக்களுக்கு எடுத்துக்கூறும்முகமாக, பொருட்காட்சியையும் அமைப்பதற்கு, நிரந்தரமாக



அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அமைச்சர் அவர்களிடத்திலே தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க.க. பாலசுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகரத்தில் சித்திரைப் பொருட்காட்சி இந்த ஆண்டு அதிக இலாபத்தைக் கொடுக்கின்ற வகையிலே சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இருந்தாலும், நிரந்தரப் பொருட்காட்சியாக ஆக்க வேண்டுமென்ற மதுரை மக்களின் கோரிக்கைக்கிணங்க, பாண்டிய மண்டலத்திலே வெற்றி பெற்று இன்று தமிழகத்திலே முதலமைச்சராகப் பொறுப்பேற்று இருக்கிற மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அறிவுரையைப் பெற்று அதை நிரந்தரப் பொருட்காட்சியாக அமைப்பதற்குண்டான நடவடிக்கையை எடுப்பதற்கு இந்த அரசு பரிசீலிக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள், சேலம், கோவை, மதுரை போன்ற பெருநகரங்களிலே இருக்கக்கூடிய பொருட்காட்சியின் நிலைபற்றிச் சொன்னார்கள். ஆனால், இன்றைய சூழ்நிலையிலே, இன்று வேலைவாய்ப்பு இல்லாதவர்கள், சுய தொழில் தொடங்கி, இன்னும் மகளிர் சுய உதவிக் குழுக்களெல்லாம் நிறைய பொருட்களை உற்பத்தி செய்கிறார்கள். அதை விற்கமுடியாமல், தவிக்கக்கூடிய ஒரு நிலையும் இருந்துகொண்டிருக்கிறது. அதைப்போலவே, கிராமப்புறத்திலே இருக்கக்கூடிய சாதாரண ஏழையெளிய மக்கள், குக்கிராமத்திலே இருக்கக்கூடியவர்கள்கூட, பெரு நகரங்களிலே இருக்கக்கூடிய பொருட்காட்சிக்குச் செல்வது கடினம். ஆகவே, இதையெல்லாம் மனதிலே கொண்டு, மாவட்ட அளவிலே, இன்னும் கீழே இறங்கி வட்ட அளவிலேகூட பொருட்காட்சியை நடத்துவோம் என்று சொன்னால், உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களும் விற்பனையாகும். எனவே, மற்ற எல்லா வாய்ப்புகளும் இருக்கின்ற காரணத்தினாலே, கீழ்மட்ட அளவிலே, வட்ட அளவிலே, மாவட்ட அளவிலே பொருட்காட்சிகளைத் தொடங்குவதற்கு, ஒரு நல்ல விற்பனைச் சந்தையைத் தொடங்குவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[2002 மே 3

முற்பகல் 11-25

**மாண்புமிகு திரு. க.க. பாலசுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்த செலவில் பொருட்காட்சிகளை நடத்தி இலாபம் அடைகின்ற நோக்கத்தோடு இன்று புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அறிவுரையைப் பெற்று ஒவ்வோர் இடத்திலும் பொருட்காட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று இந்த அரசு ஒவ்வொரு மாவட்டத்திலும் நடத்துவதற்குண்டான சூழ்நிலையை உருவாக்குவதற்கு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 289, திரு. ஏ.எஸ். கண்ணன், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

**289—**

**பழவேற்காடு ஏரி**

***20596—திரு. ஏ.எஸ். கண்ணன்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரி தொகுதி, பழவேற்காடு ஏரி முகத்துவாரம் தூர்ந்து போய் தண்ணீர் வரத்து நின்றுவிட்டதால், மீனவர்கள் மீன்பிடிக்க இயலாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், முகத்துவாரத்தை உடனடியாக தூர்வார அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம் என்று அரசியல் தலைவர்கள் வீர வசனம் பேசிக்கொண்டு இருக்கின்ற இந்தக் காலக்கட்டத்திலே, சொன்னதைச் செய்து முடிக்கின்ற நமது முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பழவேற்காடு ஏரி முகத்துவாரத்தைத் தூர்வார 30 இலட்சம்



2002 மே 3]

ரூபாயை இந்தத் திட்டத்திற்காக ஆணையிட்டுள்ளார்கள். அதன் அடிப்படையிலே நேற்று எனது மானியக் கோரிக்கையில் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க இதை அறிவித்துள்ளேன். இந்த ஆண்டு இந்தப் பணி தொடங்கப்படும் என்பதை பேரவைத் தலைவர் வாயிலாக இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொன்னேரி தொகுதி, பழவேற்காடு பகுதி மீனவ சமுதாய மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கை ஏற்கப்பட்டு, நிதியொதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்காக என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மீன்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும், நெஞ்சார்ந்த நன்றியை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேநேரத்தில் அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்வது, காலத்தைக் கடத்தாமல் உடனடியாக போர்க்கால நடவடிக்கையில் தூர்வாருவதற்கான ஏற்பாட்டினைச் செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் இருபுறமும் தடுப்புச் சுவர் அமைப்பதற்கான நடவடிக்கையினை அரசு எடுக்குமா, அமைச்சர் செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலில் சொல்கின்றபோதே நிச்சயமாக இந்தப் பணி விரைவில் தொடங்கப்படும் என்று சொல்லிவிட்டேன். தடுப்புச் சுவர் கட்டுவதற்கான ஏற்பாடுகளும் இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று சிந்திக்கப்படும் என்பதைக் கூறிக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[2002 மே 3

## 2. தகவல் கோரல்

### (அ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 10 நாட்களாக, சோமனூர் மற்றும் பல பகுதிகளில் விசைத்தறி நெசவாளர்கள் வேலைநிறுத்தம் செய்து வருகிறார்கள். அவர்களுடைய நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. எனவே, ஒத்திவைப்பு அறிவிப்பை உங்களிடத்திலே கொடுத்திருந்தேன். அந்த ஒத்திவைப்பு அறிவிப்பை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது எனது ஆய்வில் இருக்கிறது. சம்பந்தப்பட்டத் துறையிடம் விளக்கம் கேட்டு, பிறகு அதனை எப்போது எடுத்துக்கொள்வது என்று சொல்கிறேன்.

### (ஆ) காவிரி நீர் 2001-2002-ல் பெறப்பட்ட அளவு

**திரு. ஜி. பழனிசாமி:** தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடகாவினுடைய மாண்புமிகு அமைச்சர் எச்.எம். பட்டேல் அவர்கள் —நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுடைய பதிலுரையின்போது கர்நாடகாவிலிருந்து சரியாக தண்ணீர் வழங்கப்படவில்லையென்று கூறினார்கள்—தற்போது 185 டி.எம்.சி. தண்ணீரை நாங்கள் வழங்கிக் கொண்டிருக்கிறோம், அமைச்சரவர்கள் தவறான தகவலை அவையிலே அறிவித்திருக்கிறார் என்று இந்த நேரத்திலே தெரிவித்திருக்கிறார். அவர் சொல்வது உண்மையா? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே சட்டமன்ற கூட்டத் தொடரிலே, பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையிலே பதில் அளித்துச் சொன்னது உண்மையா? இதைத் தங்கள் மூலமாக அமைச்சர் அவர்களிடத்தில் விளக்கம் பெற விரும்புகிறோம். அப்படி கொடுக்காத தண்ணீர் பற்றிய விவரங்களுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.



2002 மே 3]

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடகாவின் மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் இன்று பத்திரிகையின் வாயிலாக அளித்த செய்தியை நானும் பார்த்தேன். அவர் சொன்னது போல, மேட்டூரில் நாம் அந்த அளவிற்கு நீர் பெறவில்லை என்பதனை இந்த மன்றத்திற்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். நடுவர் மன்றத்தினுடைய தீர்ப்பின்பிரகாரம், நம்முடைய மேட்டூர் அணையில் 3-5-2002 அன்றைய நிலவரப்படி, 203.20 டி.எம்.சி. நீர் பெறப்பட வேண்டும். அது ஒவ்வொரு மாதம்வாரியாகவும், மாதத்தில் பெறுகின்ற நீர் ஒவ்வொரு வாரம் வாரியாகவும் நம்முடைய மேட்டூர் நீர்த்தேக்கத்திற்கு வந்து சேர வேண்டுமென்று நடுவர் மன்றத்தின் தீர்ப்பில் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. ஜூன் மாதத்திலிருந்து செப்டம்பர் மாதம் வரை 2001 ஆம் ஆண்டு 137 டி.எம்.சி. நீர் நம்முடைய மேட்டூர் நீர்த் தேக்கத்திற்கு அவர்கள் தர வேண்டும். ஆனால், 73.76 டி.எம்.சி. தண்ணீர்தான் வந்து சேர்ந்திருக்கிறது. அதேபோல, அக்டோபரிலிருந்து டிசம்பர் 2001 வரை 56.59 டி.எம்.சி. நீர் பெறப்பட வேண்டும். ஆனால் கூடுதலாக அந்த மாதம் 77.51 டி.எம்.சி. நீர் வந்து சேர்ந்திருக்கிறது.

முற்பகல் 11-30

ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் 2002 ஆம் ஆண்டு 4.68 டி.எம்.சி. நீர் வந்து சேர்ந்திருக்க வேண்டும். ஆனால், 4.05 டி.எம்.சி. தான் வந்து சேர்ந்திருக்கின்றது. 2002 மார்ச் மாதம் 2.40 டி.எம்.சி. நீர் வந்து சேர்ந்திருக்க வேண்டும். 2.62 டி.எம்.சி. நீர் வந்து சேர்ந்திருக்கின்றது. ஏப்ரல் மாதம் 2002 அன்று 2.32 டி.எம்.சி. நீர் வந்து சேர்ந்திருக்க வேண்டும். 2.58 டி.எம்.சி. நீர் வந்து சேர்ந்திருக்கின்றது. ஆக மொத்தம் நாம் பெறவேண்டிய நீரின் அளவு ஒரு வருடத்தில் 203.20 டி.எம்.சி. அளவு. ஆனால், நமக்கு 160.67 டி.எம்.சி. நீர்தான் வந்து சேர்ந்திருக்கிறது. ஆக 42.53 டி.எம்.சி. நீர் குறைவாக இந்த ஆண்டு வந்து சேர்ந்திருக்கிறதுதான் உண்மையான நிலை என்பதனை இந்த மாமன்றத்திற்கு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்த மாதிரியான குழப்பங்களினால், அவர்களுடைய releasing point-லிருந்து நமக்கு வந்து சேரவேண்டிய entry point-ல் கணக்குகளில் வித்தியாசம் வருகின்றது. அந்த அளவைக் கண்காணிப்பதற்கும், அதனை நடைமுறைப் படுத்துவதற்கும் 'காவிரி ஆணையம்' என்று இருக்கின்றது. அந்த ஆணையத்தின் வாயிலாக இந்த மாதிரியான குறைகளைச் சரி செய்ய,

ஓர் அதிகாரம் உள்ள ஆணையம் தேவை என்றுதான் நாம் வலியுறுத்திச் சொல்லிக்கொண்டு இருக்கின்றோம். அதற்குத்தான் நாம் இன்று உச்ச நீதிமன்றத்தையும் நாடியிருக்கிறோம். இந்த ஆண்டில் மட்டும் 42.53 டி.எம்.சி. குறைவாக தண்ணீர் பெறப்பட்டிருக்கிறது. இடையில் அந்த நீர் காவிரி பாசனப் பகுதிகளுக்குச் செல்லவேண்டிய ஒரு சூழ்நிலை அங்கே இருக்கின்றது. ஆக, நடுவர் மன்றத்தினுடைய தீர்ப்பின்படி மேட்டூர் நீர்த்தேக்கத்தில் நாம் பெறப்போகின்ற நீரைத்தான் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நடுவர் மன்றத்தின் தீர்ப்பு இருக்கிறது. அந்தத் தீர்ப்பை ஒட்டித்தான் நாம் நீரைக் கேட்டுக்கொண்டிருக்கின்றோம். அதை அதிகாரம் உள்ள ஆணையம் மூலம் செயல்படுத்தித் தரவேண்டுமென்றுதான் நாம் இன்றையதினம் உச்ச நீதிமன்றத்தையும் நாடி இருக்கின்றோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அவருடைய பதிலிலே குறுக்கிடவில்லை. ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்கின்றபோது ஓர் ஆண்டுக்கு நமக்குத் தரவேண்டிய நீர் 203.20 டி.எம்.சி. என்று சொல்கிறார். 205 டி.எம்.சி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 205 தான்.

**திரு. துரைமுருகன்:** 205 தான். ஆனால் மாண்புமிகு அமைச்சர் தெரிவிக்கின்றபோது 203.20 டி.எம்.சி. என்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை 205 டி.எம்.சி.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன ஹேமச்சந்திரன்?

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் 8-4-2002 அன்று......... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. என்னுடைய ஆய்வில் இருக்கின்றது. அறைக்கு வாருங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடுவர் மன்றத்தின் தீர்ப்பின்படி 205 டி.எம்.சி. என்றுதான் உத்தரவு இருக்கின்றது. அளவில் 2 டி.எம்.சி. வேறுபாடு இருக்கின்றது. அதில் நாம் 6 டி.எம்.சி. பாண்டிச்சேரி மாநிலத்திற்குத் தரவேண்டுமென்று இருக்கின்றது.





## 3. கவன ஈர்ப்பு

### (அ) வைகை ஆறு மற்றும் அதன் அருகில் விதிகளுக்குப் புறம்பாக மண் எடுத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55-இன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. க. பாரமலை அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வைகை ஆற்றிலும் அதன் அருகே தனியார் இடங்களிலும் மணல் எடுக்க உரிமம் வழங்கப்பட்டிருப்பதால், விதிகளுக்குப் புறம்பாக மணல் எடுப்பதால் ஏற்படும் ஆபத்து குறித்த", அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொருள் குறித்த விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**அறிக்கை**

வைகை ஆற்றுப் படுகைக்குட்பட்ட மாவட்டங்களில் மணல் குவாரிகளை ஒழுங்குபடுத்தவும், விதிகளுக்கு முரணாக மணல் எடுப்பதைத் தடை செய்யவும் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் பின்வருமாறு:

2. மதுரை மாவட்டத்தில் குடிநீர் மற்றும் பாசனத்திற்காகவும், இருக்கும் மணலைப் பாதுகாப்பதைக் கருத்தில் கொண்டும் வீரகனூர் முதல் மேலக்கால் வரை இடைப்பட்ட பகுதியிலுள்ள வைகை ஆற்றுப் படுகையில் மணல் எடுப்பதை மதுரை மாவட்ட ஆட்சியரின் 28-11-1988 நாளிட்ட செயல்முறை ஆணை மூலம் தடை செய்து ஆணையிடப்பட்டுள்ளது. இத்தடை தற்பொழுதும் அமலில் உள்ளது. மதுரை மாநகராட்சி, திருமங்கலம் நகராட்சி, சோழவந்தான் பேரூராட்சி, கீழ்மாத்தூர் மற்றும் திருவேடகம் கிராமப் பஞ்சாயத்துப் பகுதிகளில் அமல்படுத்தப்படும் குடிநீர்த் திட்டப் பணிகளைக் கருத்தில் கொண்டு

[திரு. செ.ம. வேலுசாமி] [2002 மே 3

வைகை ஆற்றுப் படுகையின் இதரப் பகுதியிலும் மணல் எடுப்பது மதுரை மாவட்ட ஆட்சியரின் 10-3-2002 ஆம் நாளிட்ட கடிதத்தின்படி தடை செய்யப்பட்டுள்ளது.

3. சிவகங்கை மாவட்டத்தில் வைகை ஆற்றுப் படுகையில் மணல் எடுக்கக்கூடாது என அம்மாவட்ட பொதுப் பணித் துறையால் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது சிவகங்கை மாவட்டத்தில் வைகை ஆற்றுப் படுகையில் மணல் குவாரி நடைபெறவில்லை.

4. திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள வைகை ஆற்றுப் படுகையில் மணல் எடுக்க தடைவிதிக்கப்படாவிட்டாலும், 21 பகுதிகளில் மிக அதிகமாக மணல் எடுக்கப்பட்டுவிட்டதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எனவே, திண்டுக்கல் மாவட்டத்தில் வைகை ஆற்றுப் படுகையில் மணல் எடுக்க ஏற்ற இடம் எதுவுமில்லை என மாவட்ட நிர்வாகம் கருதுகிறது.

5. இராமநாதபுரம் மாவட்டத்தில் வைகை ஆற்றுப் படுகையில் மணல் எடுப்பது தடைசெய்யப்படவில்லை. மாவட்ட நிர்வாகத்தினால் 23 பகுதிகள் மணல் எடுப்பதற்கு ஏற்ற இடம் என இனம் கண்டு கொள்ளப்பட்டுள்ளது.

6. மாவட்ட ஆட்சியர்களால் விதிக்கப்பட்ட தடையாணையைத் தவிர பாலங்கள், குடிநீர் ஆதார நீர் உறிஞ்சு கிணறுகள், நீர் ஏற்று நிலையங்கள் ஆகியவற்றுக்கு 500 மீட்டர் தூரத்திற்குள் மணல் எடுக்கக் கூடாது என்று தமிழ்நாடு சிறு கனிம சலுகை விதிகள் 1959 விதி எண் 36 (1)ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முற்பகல் 11-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. பாரமலை.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்ல விளக்கத்தைக் கொடுத்திருக்கிறார்கள். பொதுவாக, அவர்களுடைய இந்த அறிக்கையிலே, சிவகங்கை மாவட்டத்தில் வைகை ஆற்றுப் படுகையில் மணல் எடுக்கக்கூடாது என அம்மாவட்ட பொதுப் பணித் துறையால் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. தற்பொழுது சிவகங்கை மாவட்டத்தில் வைகை ஆற்றுப் படுகையில் மணல் குவாரி நடைபெறவில்லை என்றும் சொல்லியிருக்கிறார்கள்.



2002 மே 3] [திரு. க. பாரமலை]

இந்தக் கவன ஈர்ப்பு சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் அந்தத் துறையைச் சார்ந்த அதிகாரிகளுடன் பேசி நடவடிக்கை வருகிறது என்று தெரிந்த பின்னாலே மணல் எடுப்பது குறைந்திருக்கிறது. இதுவரை அதிக அளவில் எடுத்து வந்தார்கள். இப்போது மணல் எடுப்பது குறைந்து இருக்கிறது. பொதுவாக, இப்படி மணல் எடுப்பதிலே இரண்டு வகையான ஆபத்துகள் இருக்கின்றன என்பதை நான் முதலிலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஒன்று, தனியாருக்கு உரிமம் வழங்கப்படுகிறது, வைகை ஆற்றுக் கரைக்குப் பக்கத்திலே மணல் எடுக்கலாம் என்று. அதிகாரிகளிடம் கேட்கிறபோது, 50 மீட்டர் தொலைவிற்கு அப்பால்தான் மணல் எடுக்கவேண்டுமென்று விதி இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் லாரி செல்வதற்கு மட்டும் இடத்தை வைத்துவிட்டு, பக்கத்திலேயே வெகு ஆழமாக மணல் எடுக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பாரமலை அவர்கள், ஒரு கேள்வியைக் கேட்கலாம்.

**திரு. க. பாரமலை:** மன்னிக்கவும், விவரத்தைச் சொல்லிக் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவரத்தைச் சொல்லிக் கேட்க நேரம் இல்லை. உங்கள் கேள்வி என்ன என்று கேட்டுக்கொள்ளுங்கள். அமைச்சரிடம் என்ன விளக்கம் பெறவேண்டுமோ அதை மட்டும் கேளுங்கள்.

**திரு. க. பாரமலை:** சாதாரணமான கேள்விக்கே நீங்கள் இரண்டு நிமிடம் கொடுக்கிறீர்கள். அமைச்சர் அவர்களிடம் நான் ஒரு முக்கியமான பிரச்சினையைப் பற்றிக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். விவரம் அமைச்சருக்குச் சொல்லவேண்டும். அவர்கள் நல்லமுறையில் விசாரித்து தகவல் சொல்லியிருக்கிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன். அமைச்சர் சொல்கிறபோது பத்து அடிக்கு அந்தப் பக்கம் தனியார் நிலங்களை விலைக்கு வாங்கி மணல் எடுக்கிறார்கள். அங்கே 25 அடி, 50 அடி ஆழத்திற்கு மணல் எடுக்கிறார்கள். நான்கூட தாங்கள் அனுமதித்தால் அந்தப் படத்தைக் காண்பிக்கிறேன் வைகை ஆற்றில் தண்ணீர் இப்போது இல்லை. ஆனால் பக்கத் எடுக்கிற மணல் குவாரியில், தனியார் நடத்தும் குவாரியில் 25 அடிக்குத் தண்ணீர் இருக்கிறது. காரணம் அந்த அளவுக்கு ஒரு நாளைக்கு ஆயிரக் கணக்கான லாரிகள் மூலம் மணல் எடுத்துச் செல்கிறார்கள். ஏற்கெனவே

நம்முடைய அமைச்சருடைய பதிலில் பாலங்கள், குடிநீர் ஆதார நீர் உறிஞ்சு கிணறுகள், நீர் ஏற்று நிலையங்கள் ஆகியவற்றிற்குப் பக்கத்தில் 500 மீட்டர் தூரத்திற்குள் மணல் எடுக்கக்கூடாது என்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இது மிக மிக அவசியமான ஒன்று. ஆனால், இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்குத் தண்ணீர் வழங்குகிற கிணறுகள் எல்லாம் அங்கேதான் இருக்கின்றன. அந்த இடங்களிலும் 100 மீட்டர் தொலைவிலேயே மணல் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதன் காரணமாக, வைகையிலே தண்ணீர் குறைகிறது. மணல் எடுப்பதால் நமக்கு கொஞ்சம்தான் வருமானம் வருகிறது. ஆனால் திருப்புவனத்தில் மிகப் பெரிய பாலம் உடைபட்டு பல இலட்சக்கணக்கான ரூபாய் செலவில் அதைக் கட்டவேண்டிய அவசியம் வந்தது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சரிடம் என்ன விளக்கம் கேட்க விரும்புகிறீர்களோ அதை மட்டும் கேளுங்கள்.

**திரு. க. பாரமலை:** ஆகவே நான் கேட்டுக்கொள்வது, தனியார் நிலங்களிலே மணல் எடுக்கிறபோது, அங்கே மிக ஆழமாக எடுப்பதால் வெள்ளக்காலங்களிலே அந்த ஆற்றின் போக்கே மாறக்கூடிய அபாயம் இருக்கிறது என்றுதான் சொல்கிறேன். ஓர் இடத்தில் வைகைக் கரை உடைந்து விட்டால், வைகை ஆறு, திருப்புவனம், திருப்பாச்சேத்தி வழியாக மானாமதுரைக்குச் செல்வதற்குப் பதிலாக திருப்புவனம், சிவகங்கை வழியாக வைகை ஆறு ஓடுகிற ஓர் அபாயம் ஏற்பட இருக்கிறது. ஆகவே வைகைக் கரையில் 500 மீட்டர் தூரத்திற்குள்ளாக மணல் எடுக்கக்கூடாது என்று உத்தரவிட வேண்டும்.

எப்படி குடிநீர் ஆதாரம் இருக்கிற இடங்கள், பாலங்கள் இருக்கிற இடங்களில் 500 மீட்டர் தூரத்திற்குள் மணல் எடுக்கக் கூடாது என்று இருக்கிறதோ, அதைப்போல வைகைக் கரையினுடைய இரண்டு பகுதிகளிலும் 500 மீட்டர் தொலைவிற்குள் தனியார் இடத்திலும் மணல் எடுக்கக்கூடாது என்று ஆணை பிறப்பிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு இப்படி மணல் எடுக்கப்படுவதால் ஆற்றில் பள்ளமாகப் போகிறது. இதனால் பக்கத்தில் இருக்கிற கால்வாய்களுக்குத் தண்ணீர் ஏறாமல், மறுபடியும் ஒரு தடுப்புச் சுவர் கட்டித்தான் தண்ணீரை ஏற்றவேண்டிய ஓர் அபாயகரமான நிலை இருக்கிறது. ஆகவே நான் கேட்டுக்கொள்வது, இதனுடைய செலவு அதிகமாகப்





போய்க்கொண்டிருக்கிறது. கருங்குளம் என்ற கிராமத்திலே, ஆதிதிராவிடர் காலனி நாமே கட்டிக் கொடுத்த காலனி, அந்தக் காலனியிலேயே இடத்தை விலை கொடுத்து வாங்கி மணல் எடுத்துவிட்டார்கள். சுடுகாடு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்ற விளக்கங்கள் இருந்தால் அதை அமைச்சரிடத்தில் தனியாகக் கொடுத்துவிடுங்கள். கேள்வி மட்டும் கேளுங்கள்.

**திரு. க. பாரமலை:** ஆகவே அப்படிப்பட்ட தனியார் நிலங்களில் மணல் எடுப்பதற்கு, எப்படி ஆற்றுக்குள் மணல் எடுப்பதற்கு 500 மீட்டர் தொலைவிற்கு எடுக்கக்கூடாது என்று சொல்லப்படுகிறதோ அதே சட்டத்தை இதற்கும் பயன்படுத்த வேண்டும். அதோடு தாராளமாக லைசென்ஸ் வழங்குகிறார்கள். அங்கே ஓர் உதவி இயக்குநர், இரண்டு ஆய்வாளர்கள் 3 பேர்தான் இருக்கிறார்கள். எல்லாவற்றையும் அவர்களால் மேற்பார்வையிட முடியாது. ஆயிரக்கணக்கான லாரிகள் வருவதால் ஆபத்தும் அதிகமாக இருக்கிறது. இதற்கு உடனடியாக ஒரு குழுவை நியமித்து எந்தெந்த இடங்களில் எல்லாம் மணல் எடுக்கலாம் என்பதைக் கண்டறிந்து, வேறு இடங்களில் மணல் எடுக்கக் கூடாது என்று ஆணை பிறப்பிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பகுதி சிவகங்கை, திருப்புவனம் பகுதியைச் சார்ந்தது. அங்கே தனியாருடைய பட்டாவுக்கு மட்டும் 22 குவாரிகளுக்கு கடந்த ஆட்சிக் காலத்தில் உரிமம் கொடுக்கப்பட்டது. அதிலே, மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, இரண்டு குவாரிகள் விதிமுறைகளை மீறி செயல்பட்டதைக் கண்டறிந்து உரிமம் இரத்து செய்யப்பட்டது. மேலும் 12 குவாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இதுபோன்ற கருத்துகளை மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு கவனத்தில் கொண்டு, வரக்கூடிய காலங்களில் பெய்யக்கூடிய மழைக் காலத்தில் நடைபெற்ற சிறப்பாகச் செயல்பட்டு கடந்த ஆட்சிக் காலத்தில் ... அளவிலே சீர்திருத்தமாகச் செயலாற்றும் முறையைக் ... என்பதை ... தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-40 [2002 மே 3

**(ஆ) கைத்தறித் துணிகள் தேக்கத்தால் நெசவாளர்கள் பாதிப்பு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த கவன ஈர்ப்பு. திரு. ப. அரசன், திரு. ஜி.கே. மணி, திரு. கே. ஆறுமுகம் ஆகியோரில் ஒருவர், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ப. அரசன்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில், ரூ. 500 கோடி மதிப்பிலான கைத்தறித் துணிகள் தேங்கியுள்ளதால், நெசவாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளது குறித்த", அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொருள் குறித்த விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**அறிக்கை**

தமிழ்நாட்டில் 1,375 பிரதம கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. அவற்றில் 98 பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும் அடங்கும். அனைத்துச் சங்கங்களும் பல்வேறு விலை மதிப்பில் பட்டு மற்றும் பருத்தித் துணிகளை உற்பத்தி செய்கின்றன. நாளது தேதியில் ரூ. 129.24 கோடி மதிப்புள்ள பட்டுத் துணிகள் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலும், ரூ. 104.12 கோடி மதிப்புள்ள பருத்தித் துணிகள் பருத்தி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலும் இருப்பில் உள்ளன. சந்தையில் நிலவிவரும் மந்தப் போக்கினாலும், உலக வர்த்தக சந்தையின் தாக்கத்தினாலும், கைத்தறித் துணிகளின் விற்பனை வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. சங்கங்களின் உற்பத்தியில் 30 சதவீதம் மட்டுமே கோ-ஆப்டெக்ஸ்-ஆல் கொள்முதல் செய்யப்படுகிறது. மீதமுள்ள 70 சதவீதம் வெளிச் சந்தையை நம்பியுள்ளது. பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் வெளி மாநிலங்களிலும், தமிழகத்திலுள்ள விற்பனை நிலையங்கள் வாயிலாகவும் துணிகளை விற்பனை செய்து வருகின்றன.

சங்கங்களில் சரக்கு தேக்கத்தைக் குறைக்கும் வகையில் துறை கீழ்க்கண்ட பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது:



2002 மே 3] [திரு. வி. சோமசுந்தரம்]

(1) பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் விற்பனை விலையில் 35 சதவீத மற்றும் 45 சதவீத சிறப்பு சங்கக் கழிவு ஓராண்டு மற்றும் இரண்டாண்டுகளுக்கு மேற்பட்ட துணிகளுக்கு வழங்கப்பட்டு விற்பனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(2) சங்கங்களில் கோரிக்கைகளுக்கு ஏற்ப பருத்தி இரகங்களுக்கு 10 சதவீத சிறப்பு சங்கக் கழிவு வழங்கி விற்பனை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(3) சென்னை மற்றும் முக்கிய நகரங்களில் கண்காட்சி நடத்தப்பட்டு விற்பனை மேம்படுத்தப்பட்டுள்ளது. மேலும் தமிழ்ப் புத்தாண்டையொட்டி சென்னை, சேலம், மதுரை மற்றும் கோவை ஆகிய நகரங்களில் கண்காட்சி நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில், விவசாயத்திற்கு அடுத்தபடியாக, கைத்தறி நெசவிலேதான் நம்முடைய மக்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். விவசாயத்திற்கு அடுத்தபடியாக, தமிழகத்திலே இருக்கிற 1,375 பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலே, இலட்சக்கணக்கான மக்கள், இன்று நெசவிலே ஈடுபட்டு இருக்கிறார்கள். ஏறத்தாழ, 500 கோடி ரூபாய் மதிப்பிலான கைத்தறித் துணிகள் தேங்கி இருக்கின்றன. பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களிலே, கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களினுடைய அந்த அதிகாரிகள், கைத்தறிச் சங்கங்கள், திருப்பிப் பணத்தைச் செலுத்த வேண்டுமென நெருக்கடி கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம், தேங்கி இருக்கின்ற கைத்தறித் துணிகளை விற்பதற்கு ஏதாவது அவசர அவசியமான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

30 ஆண்டு காலத்திற்கு முன்னாலே, தமிழக அரசு ஒரு சட்டம் போட்டது. அலுவலர் பெருமக்கள், ஆசிரியப் பெருமக்கள் எல்லாம் பண்டிகைக் காலங்களிலே, கதர்த் துணிகளை வாங்க வேண்டுமென்று ஓர் உத்தரவுப் போடப்பட்டது. அதேபோல, நம்முடைய அரசும், சட்டமன்ற உறுப்பினர்கள், ஆசிரியப் பெருமக்கள், அரசு அலுவலர்கள் எல்லோரும், கைத்தறி நெசவாளர்களுடைய துன்பத்தைப் போக்குகிற

[திரு. ப. அரசன்] [2002 மே 3

வகையிலே. தேங்கி இருக்கிற துணிகள் விற்கப்படுகிற வகையிலே ஓர் உத்தரவைப் போட்டு. கைத்தறித் துணிகளைத்தான் அணிய வேண்டுமென்று சொல்லி. ஓர் உத்தரவு போடலாம் என்று என்னுடைய கருத்தை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்; இது மானியக் கோரிக்கை இல்லை. கேள்வியைக் கேளுங்கள்; அமைச்சர் பதில் சொல்வார், உட்காருங்கள், அமைச்சர், சொல்லுங்கள். (குறுக்கீடு)

**திரு. ப. அரசன்:** உத்தரவிடுவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஒரு தவறான புள்ளிவிவரத்தை இந்த அவையிலே கொடுத்திருக்கிறார். இன்று. தமிழகத்திலே. சுமார் 129.24 கோடி ரூபாய் பட்டுச் சேலைகளும். சுமார் 104.12 கோடி ரூபாய் மதிப்புள்ள பருத்தித் துணிகளும்தான் தேங்கி இருக்கின்றன என்பதை முதலிலே தெரிவித்துக் கொண்டு. தேங்கியுள்ள துணிகளைப் பல்வேறு விற்பனை நிலையங்கள் மூலமாக. பல்வேறு தள்ளுபடி விற்பனையைக் கொடுத்து. இப்போது விற்பனை செய்து கொண்டிருக்கிறோம். குறிப்பாக, தமிழகத்திலே இருக்கின்ற முக்கிய நகரங்களிலே, சிறப்புக் கண்காட்சிகளை அமைத்து. அந்தத் தேக்க நிலையைப் போக்க, இந்த அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது என்பதைத் தங்கள் மூலமாக இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்ததுபோல், இன்று தேங்கியிருக்கும் கைத்தறித் துணிகளில் பெரும்பாலானவை, விலையுயர்ந்த பட்டுப் புடவைகளாகும். அவை எல்லாம், இந்த ஆட்சிக் காலத்தில் தயாரிக்கப்பட்டவை அல்ல; ஏற்கெனவே தயாரிக்கப்பட்டு விற்க முடியாமல் தேங்கிக் கிடப்பவை. அவற்றை விற்பதற்கு அரசு பல முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன. பல்வேறு விற்பனைக் கூடங்கள் மூலமாக ஆண்டு முழுவதும் தள்ளுபடி அளிக்கப்பட்டும் வருகிறது. இருப்பினும், கையிருப்பில் இருக்கின்ற ஸ்டாக்குகளை விற்க முடியவில்லை. ஆகவே, நான் ஒரு யோசனையை இந்தத் துறைக்குக் கூறி இருக்கிறேன். இப்போது சென்னை மாநகரில் மட்டுமல்லாது தமிழகம் எங்கும் Ready-made ஆடைகள் தயாரித்து விற்கின்ற



2002 மே 3] [செல்வி ஜெ ஜெயலலிதா]

நிறுவனங்கள் ஏராளமாக உள்ளன. ஆகவே, அந்த நிறுவனங்களை எல்லாம் அழைத்து. இந்த விலை உயர்ந்த பட்டுப் புடவைகளை ஏலத்தில் விடலாம் என்ற யோசனையை இந்தத் துறைக்குக் கூறி இருக்கிறேன். அப்படிச் செய்தால் விரைவிலேயே தேங்கிக் கிடக்கின்ற விலை உயர்ந்த கைத்தறித் துணிகளை விற்க முடியும் என்ற நம்பிக்கை அரசுக்கு உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)....

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு கேள்வி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2, 3 கேள்விகள் கேட்டுவிட்டீர்கள்; உட்காருங்கள். திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் இந்தக் கைத்தறி நெசவை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இப்படி கோடிக்கணக்கான ரூபாய் விலை மதிப்புள்ள கைத்தறித் துணிகள் தேங்கி இருக்கின்ற காரணத்தினாலும், விற்பனை செய்ய முடியாத காரணத்தினாலும், இந்த நெசவுத் தொழிலில் ஈடுபட்டு இருக்கின்ற தொழிலாளிகள் இப்போது வேலைக்குச் செல்லவில்லை; வேலை இழந்து இருக்கிறார்கள். உற்பத்தி செய்யக்கூடிய துணிகளை தேக்கி வைத்திருக்கக்கூடிய கூட்டுறவுச் சங்கங்கள் இன்று விற்பனை செய்ய முடியாமல் மூடக்கூடிய அபாய நிலையை எட்டி இருக்கின்றன. ஆகவே இப்படிப்பட்ட சங்கடமான நிலை வந்து இருக்கக்கூடிய நேரத்திலே, அந்த நெசவாளர்கள் எல்லாம் வைத்திருக்கக்கூடிய மிகப் பெரிய கோரிக்கை என்னவென்று சொன்னால், இந்த நெசவாளர்கள் உற்பத்தி செய்யக்கூடிய அந்தத் துணிகள், இலவச வேட்டி, சேலைகள் வழங்கும் திட்டம் மூலமாக வழங்கப்படும். அதுவும் நிறுத்தி வைக்கப்பட்டு இருக்கிறது. அதுமாத்திரமல்லாமல் கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த சலுகை மானியம் இப்போது குறைக்கப்பட்டு இருக்கிறது. இப்படிப்பட்ட நிலை எல்லாம் மாற வேண்டுமென்று அவர்கள் கோரிக்கையும் வைத்து இருக்கிறார்கள்.

அதைபம்பாலவே நம்முடைய முதலமைச்சர் அவர்கள், பட்டுச் சேலைகளைப் பற்றி சொன்னார்கள். நெசவாளர்களுடைய கோரிக்கை என்பது ரூ.3.000-க்கு மேல் விலை மதிப்புள்ள பட்டுச் சேலைகளுக்கு இப்போது வரி விதிக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட பல்வேறு சங்கடங்கள் இருக்கிற காரணத்தால், கைத்தறி நெசவாளர்கள் அந்தத் தொழிலை மீண்டும் தொடர்ந்து செய்ய இயலாத நிலையிலே, குடும்பத்தோடு விஷம் குடித்து தற்கொலை செய்யக்கூடிய நிலைக்கு தள்ளப்பட்டு இருக்கிறோம் என்று சொல்கிற நிலைக்கு அவர்கள் உருவாகி இருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட அவல நிலையைப் போக்குவதற்கு இந்த அரசு முன்வர வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கிறேன்.

ஆரம்ப காலத்திலிருந்து கைத்தறி நெசவை ஊக்குவிப்பதற்காக நமமுடைய மரியாதைக்குரிய பேரறிஞர் அண்ணா அவர்கள் தன்னுடைய தலையிலே சுமந்து தமிழ்நாடு முழுவதும் விற்பனை செய்து இந்தக் கைத்தறித் துறைக்குப் பெருமை சேர்த்திருக்கிறார்கள். ஆகவே, அதையெல்லாம் கவனத்திலே வைத்துக்கொண்டு நம்முடைய அரசு இந்தக் கைத்தறி நெசவாளர்கள் வாழ்க்கையிலே ஒரு மறுமலர்ச்சி ஏற்பட, மறுவாழ்வு கொடுத்திட, இந்த வரிகளை தள்ளுபடி செய்து, சலுகை மானியத்தை மீண்டும் கொடுத்து—கைக்குட்டைக்குக்கூட வரி விதிக்கப்பட்டு இருக்கிறது; அதையெல்லாம் தள்ளுபடி செய்து அவர்கள் வாழ்க்கைக்கு உத்தரவாதம் அளிக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைத்து, அரசு நிறைவேற்றுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்வேறு கருத்துகளை எடுத்துக் கூறினார்கள். இன்று தமிழகத்தில் உள்ள பட்டுச் சேலைகள் அனைத்தையும் சிறப்புத் தள்ளுபடி மூலமாக, 35 சதவீதம் மற்றும் 45 சதவீதம் என்று தள்ளுபடி தொகையை அளித்து, இப்போது விற்பனை செய்து கொண்டிருக்கின்றோம். விரைவிலே அத்தனை துணிகளும் விற்கக்கூடிய ஒரு நிலை இருந்து கொண்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல் இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒரு நிகழ்வினைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கடந்த 1996 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 16 ஆம் தேதி இந்த அவையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசிய ஒரு பேச்சை இங்கே அவருக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த வகுத்தலும் வல்லது அரசு"

என்று அப்போது இருந்த முதல்வர் ஏழை நெசவாளர்கள் பிரச்சினையைத் தீர்ப்பார்; ஒரு நல்ல அமைச்சரை இங்கே உருவாக்கி இருக்கிறார்; அதனால் ஏழை நெசவாளர்கள் நலம் பெறுவார்கள்" என்று அப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசி இருந்தார்கள். இப்போது தேக்கத்திற்குக் காரணம், கடந்த 4 ஆண்டு காலமாக, கடந்த கால ஆட்சியினால் செய்த தவறினால் ஏற்பட்ட விளைவினால் இன்று அந்தப் பட்டுச் சேலைகள் தேக்கம் அடைந்துள்ளது என்பதையும்; (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, நீங்கள் எப்படி அந்த அரசு மீது ஒரு நம்பிக்கை வைத்தீர்களோ, அந்த நம்பிக்கை வீண்போய்விட்டது என்பதைச் சொல்ல நான் கடமைப்பட்டுள்ளேன். அதுபோல இந்த அரசுமீது அன்றும் சரி, இன்றும் சரி, என்றும் சரி, எங்களது இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவியை நம்பிக் கெட்டவர்கள் யாரும் இல்லை (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்தில் கூறி இந்த அரசானது...

முற்பகல் 11-50

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இங்கே பேசுகின்றபோது 3,000 ரூபாய்க்கு மேல் விலையுள்ள பட்டுச் சேலைகளுக்கு வரி விதிக்கப்பட்டுள்ளது என்பதைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். பட்டுச் சேலை விற்கின்ற கடைகளில் ஆண்டுக்கு 50 இலட்சம் ரூபாய்க்குக் குறைவாக turnover உள்ள கடைகளுக்கு வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர், சொல்லி முடித்து விடுங்கள்.

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** நெசவாளர்களின் துயர் துடைக்கும் அரசாக அம்மாவின் அரசு இருக்கும் என்பதைத் தங்களின் மூலமாக இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். (குறுக்கீடு)

[2002 மே 3

**திரு. கே. ஆறுமுகம்:** நானும் கவன ஈர்ப்பு கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. நீங்களும் ஒரு கேள்வி கேளுங்கள்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் அவர்கள் இங்கே விவர அறிக்கையை கொடுத்து இருக்கிறார்கள். அதையெல்லாம் படித்துப் பார்த்தேன். அதிலே பட்டு மற்றும் பருத்தித் துணிகள் ரூ.233.36 கோடிக்கு தேக்கம் உள்ளதாக அறிவித்திருக்கிறார்கள். இந்த அறிவிப்பு சற்று வேதனையாக இருக்கிறது. ஏனென்று சொன்னால் கோ-ஆப்டெக்ஸ் மூலமாக 30 சதவீதம் மட்டுமே நாங்கள் கொள்முதல் செய்வோம் என்று சொல்லி இருக்கிறார்கள். இங்கிருக்கிற இந்த 250 கோடி ரூபாய் துணிகளை அரசாங்கமே நேரடியாக கொள்முதல் செய்தால் நல்லது. இப்போது தமிழகத்தில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக இரண்டாவது தொழிலாக இருக்கின்ற நெசவுத் தொழிலை நம்பியிருக்கிற பல இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலையின்றி தவிக்கிறார்கள். ஒரு வேளைக்கு சாப்பிடுவதற்குகூட இன்றைக்கு மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நான், காஞ்சிபுரம், திருக்கழுக்குன்றம், மாமண்டி போன்ற பகுதிகளுக்கெல்லாம் செல்கிறபோது சொல்கிறார்கள். எனவே, இந்த 233.36 கோடி ரூபாய் துணிகளை அரசாங்கமே கொள்முதல் செய்து அந்தத் தொழிலாளர்களுக்கு ஒரு மறுவாழ்வு அளிக்க வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், நம்முடைய சிறைத் துறையிலேகூட ஒரு அறிவிப்பு செய்திருக்கிறார்கள். கைதிகளுக்கு அவர்கள் அணியும் பருத்தித் துணிகளுக்குப் பதிலாக பாலியஸ்டர் துணிகளை வழங்குவதாக ஏறக்குறைய 50 இலட்சம் ரூபாய்க்கு வழங்குகிறோம் என்று இந்த வருடம் அறிவித்திருக்கிறார்கள். இப்படி தொடர்ந்து அரசாங்கமே— ஏனென்றால் ஏற்கெனவே இலவச வேட்டி, சேலை வழங்குவதை நிறுத்திவிட்டது; அதனாலே கைத்தறித் துணிகள் தேங்கி இருக்கின்றன. இப்படி பருத்தித் துணிகளை அரசாங்கம் செலவழிக்கிற இந்தக் காரியங்களுக்குச் செலவழிக்காமல் நிறுத்துவதனாலே இப்போது அதிகமாக தேக்கம் இருக்கிற ஒரு நிலைமை இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் கண்காட்சிகள் மூலமாக விற்கவும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. கே. ஆறுமுகம்:** தலைவர் அவர்களே, ஒரு கருத்தைச் சொல்கிறேன்.



2002 மே 3]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கருத்துகள் பரிமாறுகிற நேரம் அல்ல இது. இது கவன ஈர்ப்பு கேள்வியைக் கேளுங்கள். அமைச்சர் பதில் சொல்லட்டும். மானியக் கோரிக்கை எல்லாம் இருக்கிறது.

**திரு. கே. ஆறுமுகம்:** எனவே, உழைத்துக் கொண்டிருக்கிற நெசவாளர்களுடைய நிலையை உயர்த்துவதற்கு, ஒரு வேளை சாப்பாடாவது நிரந்தரமாக, வருடம் 365 நாட்களும் கிடைப்பதற்கு தேங்கியிருக்கிற துணிகளை மொத்தமாக அரசு கொள்முதல் செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கோ-ஆப்டெக்ஸின் மூலமாக சுமார் 217 கோடி ரூபாய் அளவிற்கு துணிகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, சங்கத்தின் மொத்த உற்பத்தியினை, கோ-ஆப்டெக்ஸ் கொள்முதல் செய்ய இயலாத நிலையிலே, சங்கங்களில் துணிகள் தேக்கம் அடைந்துள்ளதில் 2001-2002 ஆம் ஆண்டில் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்தும் சுமார் 139.95 கோடி ரூபாய் அளவிற்கு கைத்தறித் துணிகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது என்பதை இந்த அவை மூலமாக தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 4. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல், திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2001-2002ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 80 முதல் 89 வரையிலான பத்து அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி.

**திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2001-2002 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 27 முதல் 29 வரையிலான மூன்று அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

முற்பகல் 11-55

### (இ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. பி.எம். நரசிம்மன்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2001-2002 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் 7 முதல் 12 வரையிலான ஆறு அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

## 5. மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 46—போக்குவரத்துத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002-2003 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 46, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கை எண் 46-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,50,74,93,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.1,19,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 4136, திரு. இ. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கடலூர்–தாழங்குடா வழித் தடத்தில் புதிய பேருந்தினை இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,74,93,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,19,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 625, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலூரில் உள்ள அரசுப் போக்குவரத்துக் கழகத்தில் மோசமான நிலையில் உள்ள 600 பேருந்துகளை மாற்றி புதிய பேருந்துகள் இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,74,93,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,19,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7472, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,74,93,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,19,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6872, திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'போனஸ் வழங்கக் கோரி போக்குவரத்துக் கழகங்களிலுள்ள சங்கங்கள் போராட்டம் நடத்தியதில் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,74,93,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,19,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3828, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,74,93,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,19,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7971, திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4469. திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சென்னை புறநகர்ப் பகுதியான தாம்பரம் தொகுதியில் சில வழித்தடங்களில் நிறுத்தப்பட்டுள்ள பேருந்துகளை மீண்டும் இயக்க வேண்டியது குறித்தும் பேருந்துகளை உரிய நேரத்தில் இயக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,74,93,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,19,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3934, திரு. எச்.எம். ராஜு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3945, திரு. ஐ. கணேசன்.



**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,74,93,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,19,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1372, திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,74,93,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,19,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8046, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதி, திருவாலங்காடு கூட்டுறவு சர்க்கரை ஆலை, காவல் நிலையம், வட்டார வளர்ச்சி அலுவலகம், சார்பதிவாளர் அலுவலகம், துணை மின் நிலையம், பிரசித்தி பெற்ற ஈசுவரன் கோயில் ஆகியவை கொண்ட நகரமாகும். இங்கு வரும் பொது மக்களுக்குப் பேருந்து வசதி மிக மிகக் குறைவாக உள்ளதால் சென்னையிலிருந்து செல்லும் பல வழித்தடங்களில் சிலவற்றை திருவாலங்காடு வழியாக இயக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,74,93,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,19,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6602, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,74,93,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,19,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1979, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,74,93,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,19,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6985, திரு. அ. அசோகன்.

**திரு. அ. அசோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவாரூர் நகரத்திலிருந்து கூடுதல் அதிவேக விரைவுப் பேருந்துகள் இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,74,93,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,19,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5093, திரு. மே.ப. காமராஜ்.



**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,74,93,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,19,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7337, திரு. க. முருகவேல் ராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5600, திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,74,93,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,19,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6706, திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,74,93,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,19,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 858, திரு. க. சிவராஜ்.

**திரு. க. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,74,93,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,19,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7188, திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி.

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மறியல் மற்றும் போராட்டங்கள் நடத்தும்போது பொதுச் சொத்தாக உள்ள அரசுப் பேருந்துகளைச் சேதப்படுத்தும் நபர்கள்மீது கடுமையாக நடவடிக்கை எடுப்பதுடன் நஷ்ட ஈட்டுத் தொகையும் வசூலிக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,74,93,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,19,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1857, திரு. ரா. ஈஸ்வரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7005, திரு. க. பாரமலை.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மானாமதுரை SIPCOT வளாகத்தில் கட்டப்பட்டு வரும் பணிமனையை விரைவாகக் கட்டி முடித்து பயன்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,74,93,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,19,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1040, திரு. ப. ரங்கநாதன்.



**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,74,93,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,19,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8289, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,74,93,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,19,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7039, டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,74,93,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,19,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5893, திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'போக்குவரத்துத் துறையை அதிகாரிகளும் தொழிலாளர்களும் சேர்ந்து வேண்டுமென்றே நஷ்டத்தில் இயக்குவதாலும், அரசு, பொது மக்கள் லாபப் பணத்தின்மூலம் அந்த நஷ்டத்தை ஈடு செய்வதாலும், இந்தத்

துறையை முற்றிலுமாக தனியார்மயமாக்க வேண்டியது குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,74,93,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,19,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1439, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நெல்லை மாவட்டம், ராதாபுரம் வட்டம், இருக்கன்துறை ஊராட்சி, பொன்னார்குளம் கிராமத்திற்குப் பேருந்து வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,74,93,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,19,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7798, திரு. ஜெக. வீரபாண்டியன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,74,93,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,19,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6035, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,74,93,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,19,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2684, திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவண்ணாமலையிலிருந்து நேரடியாக கன்னியாகுமரி, இராமேஸ்வரம், குருவாயூர், குற்றாலம் போன்ற இடங்களுக்குச் செல்ல விரைவுப் பேருந்துகள் இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்;

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,74,93,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,19,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 420, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வால்பாறையில் உள்ள தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் வசிக்கின்ற எஸ்டேட் பகுதிகளுக்கு பேருந்துகள் சென்று வரவேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,74,93,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,19,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5528, திரு. கே.என். சேகரன்.

**திரு. கே.என். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே 'திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் பகுதியில் உள்ள எழில் நகர், சின்ன சூரியூர், எலந்தப்பட்டி போன்ற ஊர்களுக்கு ஏற்கெனவே இயக்கப்பட்டு வந்த பேருந்துகளை மீண்டும் அவ்வூர்களுக்கு இயக்க

வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,74,93,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,19,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2417, திரு. எம். ராம்குமார்.

**திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பாபநாசம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட நகர வழித்தடங்கள், 30, 37, 42, 6, 69, 1, 18 ஆகியவற்றில் பழைய பேருந்துகளை மாற்றி புதிய பேருந்துகள் இயக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,74,93,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,19,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5709, திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் சட்டமன்ற உறுப்பினர்கள் கோரும் இரண்டு வழித் தடங்களில் அரசுப் பேருந்துகளை இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,74,93,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,19,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5990, திரு. டி. மணி.



**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கன்னியாகுமரி மாவட்டம், கன்னியாகுமரியிலிருந்து திருவனந்தபுரம், நாகர்கோவிலிருந்து திருவனந்தபுரம் வழித்தடங்களில் புதிய பேருந்துகள் இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,74,93,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,19,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5219, திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,74,93,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,19,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 353, திரு. கா. சுந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6470, திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, நாராயணபுரத்தில் உள்ள பிரசித்திபெற்ற மயில்பாறை பாலமுருகன் கோயிலுக்கு அதிக அளவில் வரும் பொது மக்கள் பயன்பெறும் வகையில் நாராயணபுரம் கிராமத்திற்குப் பேருந்து வசதி ஏற்படுத்தித் தர வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,74,93,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,19,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7166, திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஈரோடு மாவட்டம், வெள்ளக்கோவில் தொகுதி, தாராபுரம் வட்டம், மூலனூர் ஒன்றியம், துலக்கம்வலசு, சிலுக்கநாயக்கன்பட்டி, இராமப்பட்டணப்பிரிவு வழியாக அரசுப் பேருந்து இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,74,93,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,19,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 100, திரு. துரை. கி. சரவணன்.

**திரு. துரை. கி. சரவணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சிதம்பரம் பகுதியில் இயங்கிக் கொண்டிருக்கும் பேருந்துகளைப் பழுதுபார்த்து சீர்செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,74,93,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,19,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7349, திரு. ஆ. ராஜகோபால்.

**திரு. ஆ. ராஜகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சிவகாசி சட்டமன்றத் தொகுதி, சிவகாசி-ஆலங்குளம், சிவகாசி-செவல்பட்டி ஆகிய வழித்தடங்களில் கூடுதல் பேருந்துகள் இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,74,93,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,19,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4626, செல்வி க. பாலபாரதி.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சிறுநாயக்கன்பட்டி, நல்லமநாயக்கன்பட்டி, கொட்டப்பட்டி, புதுப்பட்டி மற்றும் தோட்டனூத்து பஞ்சாயத்துப் பகுதிகளில் பேருந்துகளை இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,74,93,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,19,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6697, திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி தொகுதிக்கு உட்பட்ட கிராமங்களுக்குக் கூடுதல் பேருந்துகள் இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,74,93,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,19,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6370, திரு. ஆர். சக்ரபாணி, இருக்கையில் இல்லை.

நண்பகல் 12-00

## (ஆ) கோரிக்கை எண் 24—உள்துறை-இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 24, உள்துறை-இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"உள்துறை—இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் பற்றிய மானியக் கோரிக்கை எண் 24-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.45,43,93,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 6369, திரு. ஆர். சக்ரபாணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 729, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மினி பஸ்கள் சர்வீஸ் ரோடில் 4 கி.மீ. செல்ல அனுமதி அளித்துள்ளதை 5 கி.மீ. என்று நீட்டித்து தர வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள்துறை—இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,43,93,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7350, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள்துறை—இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,43,93,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7894, திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4073, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள்துறை—இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,43,93,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1352, திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள்துறை—இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,43,93,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4154, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள்துறை—இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,43,93,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1958, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள்துறை—இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,43,93,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5022. திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள்துறை—இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,43,93,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6773, திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள்துறை—இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,43,93,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5467, திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள்துறை—இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,43,93,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 835, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள்துறை—இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 45,43,93,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1879, திரு. ரா. ஈஸ்வரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1018, திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள்துறை—இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,43,93,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6983, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள்துறை—இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ 45,43,93,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7014, டாக்டர் தே. குமாரதாஸ்.

[2002 மே 3

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள்துறை—இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 45,43,93,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7796, திரு. ஜெக. வீரபாண்டியன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள்துறை—இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 45,43,93,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5703, திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழகத்தில் மூட்டை தூக்கும் தொழிலாளர்கள் பயன்படுத்தும் வண்டிகள்மீது மோட்டார் வாகன ஆய்வாளர்கள் வழக்குகள் பதிவுசெய்து துன்பத்திற்குள்ளாக்குவதைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள்துறை—இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 45,43,93,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 370, திரு. கா. கந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6467, திரு. டி.கே. இராஜா.



2002 மே 3]

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'இயக்கூர்திகள் பயன்படுத்த சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள்துறை—இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 45,43,93,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4575, திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள்துறை—இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 45,43,93,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்காக வைக்கப்படுகின்றன. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறை மற்றும் உள்துறை-இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பெற்று உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பேரவைப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கின்றேன் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

@ 319 முதல் 362 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I மற்றும் II ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள் மீது விவாதம். 11 உறுப்பினர்கள் பேச வேண்டும். 10 மணித் துளிகளுக்குள்ளே அவசியம் உரையை முடித்துவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். திரு. எ.வ. வேலு.

***திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை எண் 46 மற்றும் மானியக் கோரிக்கை எண் 24 இவற்றின்மீது என்னுடைய கருத்துகளை இந்த மாமன்றத்திலே பதிய வைப்பதற்கு வாய்ப்பளித்த உங்களுக்கு எனது நன்றியினை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

1972 ஆம் ஆண்டு அரசுப் போக்குவரத்துத் துறையாகச் செயல்பட்ட இந்தத் துறை, 1973 ஆம் ஆண்டு 2,247 பேருந்துகளை உள்ளடக்கி மூன்று போக்குவரத்துக் கழகங்களாக எங்களுடைய கழகத்தினுடைய தலைவர் முன்னாள் முதலமைச்சர், மாண்புமிகு அண்ணன் கலைஞருடைய காலத்திலே உருவாக்கப்பட்டது. அவை 21 கழகங்களாக இன்றைக்கு உருவெடுத்து, சுமார் 17,035 பேருந்துகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. அதன்மூலம் இன்றைக்கு தமிழ்நாட்டில் இருக்கின்ற பொதுமக்கள் கிட்டத்தட்ட 2 கோடி மக்கள் அந்தப் பேருந்துகளிலே பயணம் செய்து பயனடைந்து கொண்டிருக்கிறார்கள். அதேபோல், கிட்டத்தட்ட போக்குவரத்துத் தொழிலாளிகள் 1½ இலட்சம் பேர் இன்றைக்கு பணியாற்றிக் கொண்டு அதன்மூலமாகப் பயனடைந்து கொண்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 12-05

பொதுவாக, இந்தப் போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்தளவுக்கு, ஓர் அமைப்பு எப்படி இருக்கிறது என்று சொன்னால், சிறப்பான பேரவைத் தலைவர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் எப்படி ஒரு நாற்காலியில் அழகாக உட்கார்ந்து அழகு பார்க்கிறோமோ அதைப்போல இந்தப் போக்குவரத்துக் கழகம் என்பது நாற்காலியைப் போன்றது. காரணம், ஒன்று அரசு, இன்னொன்று அரசு அலுவலர்கள், இன்னொன்று பொது மக்களுடைய ஆதரவு, இன்னொன்று தொழிலாளர்கள் நலன். ஆக இந்த நான்கையும் உள்ளடக்கிதான் இந்தப் போக்குவரத்துக் கழகங்கள் இன்றைக்குச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனால் அந்த நான்கிலே ஒரு கால் போனால் முக்காலியாக ஆகிவிடும். நாற்காலியாக இருந்தால்தான் அதைப் பயன்படுத்த முடியும். எனவே, இந்தப் போக்குவரத்துக்



கழகங்களைப் பொறுத்தளவுக்கு நான்கும் சரியாக இருந்தால்தான் அது சிறப்பாக நடைபெற முடியும். ஆனால், இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற இந்த கொள்கை விளக்கப் புத்தகத்திலே பக்கம் 10-லே ஒரு குளறுபடி இருக்கிறது. இந்த அரசு எண்ணிக்கை குழப்பத்தின் மொத்த உருவமாக தொடர்ந்து செயல்பட்டு வருகிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

உதாரணமாக ஒன்றைச் சொல்கிறேன். பக்கம் 10-லே 1999-2000 ஆம் ஆண்டினுடைய ரொக்க இழப்பு ரூ. 317.91 கோடி என்று இருக்கிறது. ஆனால், சென்ற ஆண்டு இதே மானியக் கோரிக்கையில், அதாவது 2001-2002 மானியக் கோரிக்கையில் ரூ. 317.77 கோடி என்று அன்றைய மானியக் கோரிக்கை (2001-2002) பக்கம் 19-லே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆக, அதற்கும் இதற்கும் நீங்கள் அளித்த மானியக் கோரிக்கை கொள்கை விளக்கப் புத்தகத்திலே சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு பதிவு செய்யப்பட்டிருப்பது, அதிலே வித்தியாசம் இருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிகாட்ட விரும்புகிறேன். அதைப்போன்று இன்றைக்கு...

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது கொடுத்திருக்கிற 1999-2000 ஆம் ஆண்டு விவரம், தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட நட்டம் என்பது ரூ. 317.91 கோடி ரூபாய் என்பது தணிக்கை செய்யப்பட்டதற்குப் பின்பு சரியாக கணக்கிடப்பட்டு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்பொழுதும், தணிக்கை ஆகவில்லை என்று சொன்னால், அதற்கு ஸ்டார் போடுவார்கள். சென்ற முறைகூட அதில் ஸ்டார் போடவில்லை. ஸ்டார் போட்டிருந்தால் தணிக்கையில் இருக்கிறது என்று பொருள். அடுத்தபடியாக, பக்கம் 11-ல் அதாவது டீசல் விலை '2000-2001-ல் ரூ. 916.10 கோடியாகவும் 2001-2002-ல் ரூ. 958.82 கோடியாகவும் உயர்ந்துள்ளது' என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். சென்ற ஆண்டு இந்த அரசு பொறுப்பேற்றபோது-அதாவது நாங்கள் ஆட்சியை விட்டு, நீங்கள் ஆட்சி பொறுப்பேற்றபோது-எங்கள் ஆட்சியிலே [illegible] 22,991 இலட்சம் கி.மீ. ஓடியிருக்கின்றன. ஆனால் இந்த ஓராண்டு காலத்தில், இன்றைக்கு நீங்கள் கொடுத்திருக்கிற குறிப்பிலே, 22,358 இலட்சம் கி.மீ. ஓடியிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். எங்கள் ஆட்சிக்கும், இந்த ஆட்சிக்கும்

இடையே உள்ள வித்தியாசம் பஸ்கள் 633 இலட்சம் கி.மீ. குறைவாக ஓடியிருக்கின்றன. அதேநேரத்திலே இப்பொழுது டீசல் விலைகூட எங்கள் ஆட்சியில் இருந்ததைவிட விலை குறைவாக இருக்கிறது. ஓடி இருக்கிற தூரம் குறைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், செலவு வித்தியாசம் என்ன வந்திருக்கிறது என்று சொன்னால், சென்ற ஆண்டுக்கும் இந்த ஆண்டுக்கும், 42.72 கோடி ரூபாய் அதிகமாக செலவாகியதாக கணக்கு காட்டப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையிலே இது ஏன் அதிகமாகியிருக்கிறது என்பதைத் தெளிவுப்படுத்துவார்கள் என்று நான் நம்புகிறேன். அதேநேரத்தில் பேருந்துகளின் எண்ணிக்கை..

பிற்பகல் 12-10

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, டீசல் செலவு 2000-2001-ல் ரூ.916.10 கோடியாகவும், 2001-2002-இல் ரூ.958.82 கோடியாகவும் உயர்ந்துள்ளதைப் பற்றி உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆயினும், கொள்கைக் குறிப்பிலே இருக்கிற அடுத்த வரியையும் அவர் சொல்லியிருந்தால் நன்றாக இருந்திருக்கும். 'ஆயினும் பேருந்துகள் ஒரு லிட்டர் டீசலில் ஓடும் தூரம், ஏறத்தாழ ஒரே சீராக 4.30 கிலோ மீட்டர்/லிட்டர் என்ற அளவிலேயே உள்ளது' ஒரு லிட்டர் அளவிற்கு 4.30 கிலோ மீட்டர் என்ற அளவில் எப்போதும்போல் இப்போதும் பேருந்துகள் ஓடிக்கொண்டிருக்கின்றன என்பதை நான் உறுப்பினர் அவர்களுக்குப் பதிலாக தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதோடு மட்டுமல்ல. சென்ற ஆட்சிக் காலத்திலே நீங்கள் நிர்வகித்த அந்தப் பேருந்துகள் மிகப் பழுதடைந்த நிலையில் இருந்து, வயதான பேருந்துகளின் எண்ணிக்கை கூடிவிட்டதன் காரணமாக சில செலவுகளும், டீசல் செலவும் சற்றுக் கூடுதலாக வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்குக் காரணமே சென்ற தி.மு.க. ஆட்சிதான் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுக்குப் பணிவுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்துகள் அதிகமாக ஓடிய காரணத்தினால் இங்கே டீசல் விலை கூடியதாகச் சொன்னார்கள். ஆனால், பேருந்துகளின் எண்ணிக்கையைப் பொறுத்த அளவுக்கு 17,035 பேருந்துகள் நீங்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்கிறபோது எங்களுடைய கைவசமிருந்து எடுத்தீர்கள். ஆனால்



உங்களுடைய குறிப்பிலே என்ன இருக்கிறதென்று சொன்னால், 16,797 பேருந்துகள் இன்றைக்கு உங்கள் ஆட்சியில் ஓடிக்கொண்டிருக்கின்றன என்று சொல்கிறீர்கள். ஆனால், இதில் இடைப்பட்ட 238 வண்டிகள் இன்றைக்கு இயக்கப்படவே இல்லை. எனவே, பேருந்துகள்கூட குறைக்கப்பட்டிருக்கின்றன.

அதுமட்டுமல்ல, வழித்தடங்கள்—புதியதாக வழித்தடங்களை உருவாக்குவது—அதிலே கிட்டத்தட்ட 1999-2000-இல் 8,997 வழித்தடங்கள் இருந்தன. ஆனால், 8,252 வழித்தடங்கள் இன்றைக்கு ஓடிக்கொண்டிருக்கின்றன என்று சொல்கிறீர்கள். இதிலே இடைப்பட்ட 745 வழித்தடங்கள் இன்றைக்கு நிறுத்தப்பட்டிருக்கின்றன. ஆக வழித்தடங்களும் இன்றைக்கு குறைக்கப்பட்டிருக்கின்றன; டீசல் விலையும் ஏற்றப்பட்டிருக்கின்றது. அதேபோன்று டீசல் விலை சென்ற ஆண்டுக்கும் இந்த ஆண்டுக்கும் கூடுதலாக செலவு செய்யப்பட்டிருக்கிறது. அதே நேரத்திலே புதிய பஸ்கள் விடுவதில் கூட இன்றைக்கு 238 வண்டிகள் குறைக்கப்பட்டிருக்கின்றன. இதையும் மாண்புமிகு அமைச்சர் பதிலுரையில் தெளிவுபடுத்த வேண்டுகின்றேன்.

பக்கம் 12-ல் கடந்த 4 ஆண்டுகளாக பழையப் பேருந்துகளை உரிய நேரத்தில் மாற்றி, போக்குவரத்துத் தேவைக்கேற்ப போதுமான புதிய பேருந்துகளை வாங்கி இயக்க முடியவில்லை' என்கிற வாசகம் பொறிக்கப்பட்டிருக்கிறது. நான்காண்டு கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பழையப் பேருந்துகளை நீக்கி புதியப் பேருந்துகள், கிட்டத்தட்ட 9,923 பேருந்துகள் விடப்பட்டிருக்கின்றன. சென்ற ஆண்டுகூட இதே மாமன்றத்திலே மானியக் கோரிக்கையிலே குறிப்பிடுகிறபோது, நாங்கள் கிட்டத்தட்ட 2001-லே 1,550 பேருந்துகளை விட இருக்கிறோம் என்று குறிப்பிட்டீர்கள். ஆனால் 305 பேருந்து வண்டிகள்தான் விடப்பட்டிருக்கின்றன என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆக சென்ற ஆண்டிலேகூட 1,245 பேருந்துகளை விடவேண்டியது அப்படியே...

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் தொடர்ந்து சில தவறான தகவல்களைத் தெரிவித்து வருகிறார். புதிய வழித்தடங்கள் ஏற்படுத்தியதில் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஏதோ கூடுதல் வழித்தடங்கள் ஏற்படுத்தப்பட்டதாகவும், அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் குறைவாக ஏற்படுத்தியதாகவும் ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்.

தி.மு.க. ஆட்சிக் காலத்தைவிட—புள்ளிவிவரம், தகுந்த ஆதாரத்துடன் அவருக்குத் தெரிவிக்கத் தயார்—அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் மிகப் பெரிய அளவிலே இல்லை என்றாலும்கூட, சிறிய அளவிலேதான் வித்தியாசம் இருக்கிறது. தி.மு.க. ஆட்சியைக் காட்டிலும் அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் 39 வழித்தடங்கள் கூடுதலாக இயக்கப்பட்டன. ஆகவே, உறுப்பினர் தவறான தகவலைத் தரவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, புதியதாக வாங்கப்பட்ட பஸ்களைப் பற்றிச் சொன்னார்கள். அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் வாங்கப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை தி.மு.க. ஆட்சிக் காலத்தில் வாங்கப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கைக்குக் குறைவாக இருக்கிறது என்று தவறாகச் சொல்கிறார். தி.மு.க. ஆட்சிக் காலத்தில், ஐந்தாண்டு காலம், புதிய பேருந்துகள் வாங்கியதைக் காட்டிலும், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் 361 பஸ்கள் கூடுதலாக வாங்கப்பட்டிருக்கின்றன என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு கொடுத்திருக்கிற இந்தக் குறிப்புப் புத்தகத்திலேயிருந்து படிக்கிறேனே ஒழிய, புதியதாக அல்ல. காரணம், பக்கம் 7-ல் போக்குவரத்துக் கழகங்களின் செயல்திறன் என்ற புத்தகத்தில் இந்த அரசு அச்சடித்துக்கொடுத்து இருப்பதைத்தான் நான் தொடர்ந்து படிக்கிறேனே ஒழிய, புதிதாக எந்த ஆதாரத்தையும் நான் எடுத்துச் சொல்லவில்லை.

உங்களால் கொடுக்கப்பட்டிருக்கிற புத்தகத்தில் 1999-2000-ல் எவ்வளவு பேருந்துகள், என்னென்ன வழித்தடங்கள் இருந்தன என்பது பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு என்னென்ன என்று இதிலே இருக்கிறது. அதைத்தான் நான் எடுத்துப் படிக்கின்றேன். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் மீண்டும் அந்தப் புத்தகத்தைப் படிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-15

இன்னொன்று, பேரவைத் தலைவர் அவர்களுக்கு நான் குறிப்பிட விரும்புவது நான் சொல்வதற்கு, இங்கு பதிவு செய்வதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலிலே விடை சொல்ல வேண்டும். இப்படி



ஒவ்வொன்றுக்கும் அவர் எழுந்து என்னுடைய நேரத்தை எல்லாம் எடுத்துக் கொண்டால் பேரவைத் தலைவர் மணியைத் தட்டி என்னை உட்கார வைத்துவிடுவீர்கள். இதை நான் அவருக்கு நினைவூட்ட விரும்புகின்றேன். (குறுக்கீடு) தவறான கருத்தல்ல. ஏற்கெனவே கொள்கை விளக்கக் குறிப்பிலே கொடுக்கப்பட்டுள்ள விவரத்தைத்தான் நான் படிக்கிறேனே தவிர, நான் தனியாக ஒன்றையும் எழுதிப் படிக்கவில்லை. என்னவென்று வேண்டுமானால் அவர் பார்க்கட்டும். அதில் இருப்பது தான் 1999-2000, இதைத்தான் நான் சொல்கிறேன். மேற்கொண்டு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது....

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருத்திய பதிலை, இறுதி எண்ணிக்கையை நான் சொன்னேன்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது நான்கு கால் இருந்தால்தான் நாற்காலி என்று சொன்னார். நான்கு காலாக இருந்ததை ஒரு காலை எடுத்துவிட்டு முக்காலி ஆக்கியது அவர்களுடைய ஆட்சியில்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ.வ. வேலு.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தைக் கொடுக்கின்றபோது, வருவாய், செலவு, ஆதாய இழப்பு, ரொக்கம் என்று இப்படி அடித்துக் கொடுத்தால், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அது புரிவதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும். இந்தக் கொள்கைக் குறிப்புப் புத்தகத்தைப் பொறுத்த அளவுக்கு அந்த அடிப்படையிலே அச்சடித்துக் கொடுக்கமுடியாத காரணத்தினாலே, இரண்டு புத்தகமாக இருக்கிறபோது, குழப்ப நிலை ஏற்படுகிறது. எனவே, எங்களுடைய ஆட்சியிலே அது தெளிவாக வருவாய், செலவு, ஆதாயம், இழப்பு, மொத்த வருவாய் என்கிற அடிப்படையிலே புத்தகத்தை அடித்துக் கொடுத்ததன் மூலமாக நம்முடைய உறுப்பினர்கள் அதை எளிதாகத் தெரிந்துகொள்வதற்கு ஒரு வாய்ப்பாக அமைந்தது.

இன்னொன்று, பக்கம் 12-லே மாண்புமிகு அமைச்சர் என்ன குறிப்பிட்டிருக்கிறார் என்று சொன்னால், மாற்றப்பட வேண்டிய பழைய

பேருந்துகள் மொத்தப் பேருந்துகளின் எண்ணிக்கையில் 36.45 விழுக்காடு என்பதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். எங்களுடைய ஆட்சியிலே பழைய பேருந்துகளை மாற்றி புதிய பேருந்துகளாக்குகிற விகிதாச்சாரம் 23 சதவிகிதமாக இருந்தது என்பதையும் இந்த நேரத்திலே நான் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

பக்கம் 24-ல் பேருந்துகளின் இயக்கம் படிப்படியாகத் தனியார்மயமாக்கப்படும் என்ற அடிப்படையிலே இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது ஆளுநர் உரையிலும் சரி, அறிக்கையிலும் சரி, தொடர்ந்து இன்றைக்கு இந்தத் துறை மானியக் கோரிக்கையிலும் சொல்லப்பட்டு இருக்கிறது. என்னைப் பொறுத்த அளவிற்கு, நான் இந்த மாமன்றத்திலே குறிப்பிட விரும்புவது, இந்த அரசு, பேருந்துகளைப் படிப்படியாகத் தனியார்மயமாக்கும் என்று தெரிவித்ததை மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன். ஏனென்று சொன்னால், அந்தக் காலத்திலே தனியார் பஸ்களை இந்த அரசு தேசியமயமாக்க எடுத்துக் கொண்ட நேரத்தில், அன்றைக்கு பஸ் முதலாளிகள் எல்லாம் நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். அப்போது அரசாங்கம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 15 மணித் துளிகள் ஆகியிருக்கின்றன. இன்னும் ஓரிரு மணித் துளிகளில் பேசிமுடித்துக் கொள்ளுங்கள். (குறுக்கீடு) இந்த குறுக்கீடு எல்லாம் சேர்த்துத்தான் எப்போதும் கணக்குப் பார்ப்பது. எல்லா ஆட்சிக் காலத்திலும். (குறுக்கீடு) கன்னிப் பேச்சா?

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றைககு நீதிமன்றத்திலே இந்த அரசாங்கம் counter file என்ன file செய்தார்கள் என்று சொன்னால், தனிப்பட்ட முதலாளிகளை ஒடுக்க வேண்டும் என்பதற்காக இந்த பஸ்களை நாங்கள் தேசியமயமாக்கவில்லை. இதை எதற்காக எடுக்கின்றோம் என்று சொன்னால், பொதுமக்களுக்கு, அவர்கள் நலனுக்குப் பயன்படும் என்பதற்காக, அவர்களுடைய இன்னலைத் துடைப்பதற்காக நாங்கள் தேசியமயமாக்குகிறோம் என்று அன்றைக்கு அரசு நீதிமன்றத்திலே வாதாடினார்கள். அப்போது நீதிபதிகள், பொதுமக்களுக்குப் பயன்படுகிற ஒரு துறையை நாம் உருவாக்கலாம் என்று அன்றைக்குத் தனி முதலாளிகளுடைய வழக்கை தள்ளுபடி செய்து, அரசுக்குச் சாதகமாக நீதிமன்றத்திலே தீர்ப்பு வழங்கினார்கள். ஆனால் இப்போது தனியார்மயமாக்குவதன் மூலமாக அன்றைக்கு உச்ச நீதிமன்றமும்,



உயர் நீதிமன்றமும் கொடுத்த அந்தத் தீர்ப்பு என்பது இப்போது அது குலைந்துவிடும். எனவே, தயவுசெய்து நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்வதெல்லாம், இப்போது இந்த அரசாங்க பஸ்களில் செல்ல பள்ளி மாணவர்கள் பாஸ் பெறுகிறார்கள். இன்னொன்று, சீசன் டிக்கட் இப்போது சென்னையிலே வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், இன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் இலவசமாகப் போய்க் கொண்டிருக்கிறோம். நாடகக் கலைஞர்கள் அதைப் பயன்படுத்துகிறார்கள். இந்த நாட்டிற்காக உழைத்த தியாகிகள் இருக்கிறார்களே, அவர்கள்கூட பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேலு, இலவசமாகப் போய்க் கொண்டிருக்கிறோம் என்கிறீர்களே, பஸ்ஸில்தான் போகிறீர்களா?

**திரு. எ.வ. வேலு:** நான் நேற்றையதினம்கூட பஸ்ஸில்தான் வந்தேன். எனவே, இன்றைக்கு இப்படிப் பல பேர், அதே போன்று பத்திரிகை நண்பர்கள் அதை இலவசமாக ஒரு குறிப்பிட்ட சலுகையோடு பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, இன்றைக்கு பணிமனையிலே இருக்கின்ற பணியாளர்கள் இருக்கிறார்களே, அவர்களுக்கு அங்கே கேன்டீன் இருக்கிறது. அந்த கேன்டீனிலே ஒரு ரூபாய் கொடுத்தால் போதும், வாழை இலையிலே சாதம் போட்டு தொழிலாளர்கள் சாப்பிட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், தனியார்மயமாக்கிவிட்டால் அவையெல்லாம் * குலைந்துவிடும். எனவேதான், நீங்கள் மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, இன்றைக்கு மக்கள் நல்வாழ்வுத் துறை இருக்கிறது.

பிற்பகல் 12-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித்துளிகளில் பேசி முடித்துவிடுங்கள். கடைசி வாக்கியத்திற்கு வாருங்கள்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறாக சொல்லவில்லை. செய்துதான் சொல்கிறேன். இன்றைக்கு கல்வித் துறை இருக்கிறது. அதற்கு இந்த அரசாங்கம் செலவு செய்கிறது. அதில் இலாப-நஷ்டம் பார்ப்பதில்லை. மக்கள் நல்வாழ்வுத் துறை இருக்கிறது. அதில் இலாப-நஷ்டம் பார்ப்பதில்லை. காவல் துறை

இருக்கிறது. அதிலே இலாப-நஷ்டம் பார்ப்பதில்லை. மக்களுக்காகவே இப்படிப்பட்ட துறைகள் எல்லாம் பயன்பட வேண்டும் என்று சில துறைகளை வைத்திருக்கிறோமே. அப்படித்தான் இந்த போக்குவரத்துத் துறையையும் பயன்படுத்தி, மக்கள் நலனுக்காக இந்த அரசு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். காரணம் இன்றைக்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசி முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) இல்லை, இந்த வாக்கியத்தோடு பேசி முடியுங்கள். (குறுக்கீடு) இந்த வாக்கியத்தோடு பேசி முடியுங்கள்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** ஒரே ஒரு விளக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுத் துறை பற்றி இவ்வளவு அக்கறையாக பேசுகின்ற மாண்புமிகு உறுப்பினர், அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், 4 ஆயிரத்திற்கு மேற்பட்ட மினி பேருந்துகளை, சிற்றுந்துகளை ஏன் அரசுத் துறையின்மூலமாக விடாமல், தனியாருக்கு தாரை வார்த்துக் கொடுத்தார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை விளக்குவாரா? இன்னும் சொல்லப்போனால்.... (குறுக்கீடு) மற்றொன்றையும் அவருக்கு நான் என்னுடைய மானியக் கோரிக்கை பதிலுரையில் விரிவாகச் சொல்லலாம் என்று கருதியிருக்கின்றேன். பொதுத் துறையான போக்குவரத்துத் துறையில், தனியார் துறையையும் ஈடுபடுத்துகின்ற முடிவை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏன் எடுத்தார்கள் என்ற சூழ்நிலையை உங்களுக்கு விளக்கிச் சொல்ல இருக்கின்றேன். இப்படிப்பட்ட ஒரு முடிவை எடுப்பதற்குக் காரணமே, சென்ற திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சீர்கேடான நிர்வாகம்தான் என்பதை பின்னாலே விளக்கிச் சொல்ல இருக்கின்றேன் என்பதை அவருக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மினி பஸ்ஸை பொறுத்தவரைக்கும், நான் சென்ற முறை சட்டமன்ற உறுப்பினராக வரவில்லை. ஆனால், அந்தப் புத்தகத்தை நான் எடுத்துப் பார்க்கிறபோது, இதே மாமன்றத்திலே இருக்கின்ற சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள், பெரும்பாலான சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழ் மாநில காங்கிரசிலேயிருந்து, இங்கே இருக்கின்ற உறுப்பினர்கள் பல பேர் அப்போது இருந்திருக்கின்றார்கள். பல பேரும் இந்த மினி பஸ் திட்டம் என்பது அருமையான திட்டம், ஏனென்று சொன்னால்,



அதிகமாக இருக்கைகள் இருக்கின்ற பஸ் எந்த கிராமத்திற்கும் உள்ளே போக முடியவில்லை, சாதாரண குக்கிராமத்திற்குக்கூட மினி பஸ் போகலாம் என்கிற அடிப்படையிலேதான் அன்றைக்கு....(குறுக்கீடுகள்)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் சொல்வார்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்றொரு கூடுதல் தகவலையும் நான் அவருக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த மினி பஸ்களை அறிமுகப்படுத்தியதால்தான், அரசு பேருந்துகள் பல கோடி ரூபாய் நஷ்டத்தில்—2 ஆயிரம் கோடிக்கு மேல் நஷ்டத்தை ஏற்படுத்துவதற்கு மூலக் காரணமே, இவர்கள் அறிமுகப்படுத்திய மினி பஸ்தான். அதிலே இவர்கள் தனியார் துறைக்காகவும், அவர்களுடைய கட்சிக்காரர்களுடைய நலனுக்காகவும், கொண்டு வந்து, பொதுத் துறையைச் சீரழித்து விட்டார்கள் என்பதை அவர்களுக்கு பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மினி பஸ் விடப்பட்டது, இருக்கின்ற பேருந்துகளை நிறுத்திவிட்டு விடவில்லை, முதல் கூற்று. மினி பஸ் விடப்பட்டது 1998-99-ல்தான். அவர்கள் ஆட்சியிலே இருக்கிறபோது, 96-லே விட்டுவிட்டு போகும்போது, 533 கோடி ரூபாய், loss-ஆக, இழப்பாக விட்டுவிட்டுச் சென்றார்களே, அப்போது அதற்கு என்ன காரணம்? மினி பஸ் ஓடியதா?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் சொல்ல வருகிறேன். சிறிய அளவிலே இருந்த நட்டத்தை 2,135 கோடி ரூபாய்க்குக் கூட்டியது, (மேசையைத் தட்டும் ஒலி) 1,498.2 கோடி ரூபாய் உங்களுடைய ஆட்சிக் காலத்திலே மட்டும் கூடுதலாக நட்டத்தை ஏற்படுத்தியது இந்த மினி பஸ்களும் ஒரு காரணம். (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுடைய நிர்வாகச் சீர்கேடும் ஒரு காரணம். உங்களுடைய அந்தத் திட்டமே மக்களுக்காக என்று சொல்லிவிட்டு, உங்களுடைய மகன்களுக்காக கொண்டு வந்த திட்டத்தினால் இந்த துறை சீரழிந்திருக்கிறது என்பதை உங்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மினி பஸ்களை தனியாருக்குக் கொடுத்து, அதனால் அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் பெரும் நஷ்டத்தை ஏற்க வேண்டியதாயிற்று என்பதைச் சுட்டிக்காட்டுகின்றபோது, மாண்புமிகு உறுப்பினர் வேலு அவர்கள் திரும்பத் திரும்ப அப்போது தான் சட்டமன்ற உறுப்பினராக இல்லையென்று திரும்பத் திரும்ப சொல்லிக்கொண்டிருக்கிறாரே, அப்படியானால், அப்படி தி.மு.க. ஆட்சிக் காலத்தில் எடுத்த நடவடிக்கை தவறான நடவடிக்கை, இவர் சட்டமன்ற உறுப்பினராக இருந்திருந்தால் அதைத் தடுத்திருப்பேன் என்று சொல்ல வருகிறாரா? (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 12-25

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, அவருடைய நேரத்தை எடுக்க வேண்டாம்.

**டாக்டர் க. பொன்முடி:** மினி பஸ் இயக்கப்பட்டதே 1998-99-ல் தான். 1998-99-ல் ஏற்பட்ட இழப்பு நீங்கள் கொடுத்ததின்படியே 411.39 கோடி ரூபாய் தான். அதற்கு முதலில் அதிக இழப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, மினி பஸ்களினால்தான் ஏற்பட்டது இழப்பு என்பது-ஓரளவுக்கு ஏற்பட்டிருக்கலாம். இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், இவர்கள் சொல்வதைப் போல்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டீர்கள். உட்காருங்கள். வேலு.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓரளவு அல்ல. பெருமளவுக்கு அரசுத் துறைக்கு இவ்வளவு பெரிய இக்கட்டான நிதி நெருக்கடி வந்ததற்குக் காரணமே மினி பஸ் அறிமுகப்படுத்தியது தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டீர்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகவே, மினி பேருந்துகளை இயக்கியதுதான் இந்த இழப்புக்கு முழு காரணம் என்று சொல்வது தவறான குற்றச்சாட்டாகும். அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே சொன்னதைப்போல, 533 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுகிறபோது மினி பேருந்துகள் இல்லை. இந்த நிகழ்ச்சியைப் பொறுத்தவரையில், பேருந்துக் கட்டணம் உயர்த்தாமை, அவர்களே இந்த வெள்ளை அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். அப்போது ஏற்பட்ட establishment expenses, அப்போது ஏற்பட்ட ஊதிய ஒப்பந்தங்கள், டீசல் விலை உயர்வு அவற்றின் மூலமாக ஏற்பட்டதே தவிர, மினி பேருந்துகள், அல்ல. மேலும், இருக்கின்ற பேருந்துகளை நிறுத்திவிட்டு, மினி பேருந்துகள் கொடுக்கப்படவில்லை. ஆனால், நீங்கள் இங்கே சொல்லியிருப்பது, விடப்பட்டதால் போக்குவரத்துக் கழகங்களில் ஓடுகின்ற பேருந்துகளை நிறுத்திவிட்டு தனியார்மயமாக்குகிறோம் என்று சொல்கிறீர்கள். அதைத்தான் நாங்கள் முழுமையாக எதிர்க்கிறோம். நீங்கள் தனியாக இன்னும் கொஞ்சம் பேருக்கு கொடுப்பதைப் பற்றி எங்களுக்கு ஒன்றுமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேலு, ஒரு மணித்துளியில் பேசி முடித்து விடுங்கள். பொன்முடி வேறு பேசியிருக்கிறார். கணக்கிலே அதையும் வரவு வைத்துக் கொள்ளுங்கள்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருக்கின்ற பேருந்துகளை நிறுத்திவிட்டு, நாங்கள் மினி பஸ்களை இயக்கவில்லை. அதனால் நஷ்டம் ஏற்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி சொல்கிறார். இருக்கின்ற பஸ்களை நிறுத்தாமல், அப்படியே அரசுப் பேருந்துகள் ஓடிக்கொண்டிருக்கும்போது, அதற்கு முன்பாக, அதற்கு போட்டியாக, சில தனியார்களுக்காக, அவர்களுடைய நலன்களுக்காக இந்த மினி பஸ்ஸை விடும்போது பாதிப்பு வருமா, வராதா என்பதை அவர் விளக்கிச் சொல்ல வேண்டும்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. அவர் வேலுவுக்கு பதில் சொல்கிறார். உட்காருங்கள். உட்காருங்கள். நீங்கள் உட்காருங்கள். வேலு உரையை முடியுங்கள். (குறுக்கீடு) இல்லை. வேண்டாம். (குறுக்கீடு) உட்காருங்கள் பொன்முடி. சொல்ல வேண்டிய விளக்கத்தை நீங்கள் சொல்லி விட்டீர்கள். உட்காருங்கள். வேலு நிற்கிறார் அவருடைய நேரம் போய்விடுகிறது. உட்காருங்கள். வேலு உட்காருங்கள். அமைச்சருடைய பதிலுரை முடிந்த பிறகு ஏதாவது சந்தேகம் இருந்தால் கேட்டுச் சொல்கிறேன். சொல்லுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மினி பேருந்துகள் ஓடுகின்றபோது 20 கி.மீ. வரை ஓடலாம். போக்குவரத்துக் கழகங்களோ மற்ற பேருந்துகளோ ஓடுகின்ற சாலைகளில் 4 கி.மீ. தான் ஓட்டப்பட வேண்டுமென்று சட்ட விதியிலே உள்ளது. இந்த 16 கி.மீ. ஓட்டப்படாத இடங்களில் தான் ஓட்டப்பட வேண்டும். மீறி இருந்தால் அதற்கு அதிகாரிகள்தான் பொறுப்பு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. 20 கி.மீ. ஓட்டலாம். மினி பஸ் அறிமுகமானபோது. 20 கி.மீ. unserved route-வும். 4 கி.மீ. ஏற்கெனவே பஸ் வசதியிருக்கிற பகுதியிலேயும் ஓட்டலாமென்று சொன்னார்கள். அது உண்மைதான். ஆனால், ஏட்டளவிலே அப்படிச் செய்து விட்டு, வாய்மொழி உத்தரவாக அனைத்து இடங்களிலும் (குறுக்கீடுகள்) ஏனென்றால் ஓர் உண்மையை நான் இப்போது சொல்கிறேன். இப்போது அம்மா அவர்களின் ஆட்சிக் காலம் வந்ததற்குப் பின்னர்தான் தி.மு.க. ஆட்சியில் செய்த தவறுகளை இன்றைக்கு தடுத்து நிறுத்தி, முறையாக இயக்குவதற்கு, அரசு கடுமையான நடவடிக்கை எடுத்து வருகிறது. அதன்மூலமாக, இன்றைக்கு அரசுக்குக்கூட ஏறக்குறைய 1 கோடி ரூபாய்க்கு மேல் fine கட்டணம் கூட வசூல் செய்யப்பட்டிருக்கிறது. வாய் மொழி உத்தரவு மூலமாக அனைவருக்கும், எல்லா இடங்களிலும்-அவர்கள் route பெறுவது ஒரு பக்கம். ஆனால் இயக்குவது ஒரு பக்கம். இந்த நிலை இருந்ததா, இல்லையா என்பதை உங்களுடைய மனச்சாட்சிக்கே விட்டு விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேலு, ஒரே ஒரு மணித்துளியில் பேசி முடித்துவிடுங்கள்.



**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்த நேரத்தையும் நீங்கள் எடுத்துக் கொண்டீர்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்திருந்தால் கொடுத்ததைத் தடுத்திருப்பாரா என்றெல்லாம் சொன்னார். அப்படியல்ல. நான் சொன்னது என்னவென்று சொன்னால். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்திருந்தால் என்பது, பெரும்பான்மையான சட்டமன்ற உறுப்பினர்கள் மினி பஸ் வேண்டுமென்று கேட்டார்கள். அதை மதித்து அந்த அரசாங்கம் மினி பஸ் கொண்டு வந்தது என்பதைத் தான் அப்படிக் குறிப்பிட்டேனே ஒழிய வேறு ஒன்றுமில்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, அதுவரை முடியுங்கள்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்தவரையில், அவற்றை இயக்க வேண்டுமென்று சொன்னால்—மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையில் சொல்லட்டும், அத்தனை நேரத்தையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துக் கொண்டார்கள். எனவே, உங்களிடம் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணித்துளியில் பேசி முடியுங்கள்.

பிற்பகல் 12-30

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். திரு. வேலு உரையை முடிக்க மாட்டேன் என்கிறார். திரு. சுந்தரம் உட்காருங்கள்.

**திரு. எ.வ. வேலு:** எங்களுக்கு ஒரு குறிப்பிட்ட கருத்தைச் சொல்வதற்குக்கூட இந்த மாமன்றத்திலே அனுமதிக்கவில்லை என்று சொன்னால், எப்படி எங்களுடைய கருத்தை நாங்கள் சொல்ல முடியும்?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், கூப்பிடுகிறேன்.

**திரு. எ.வ. வேலு:** எனவே, இந்தப் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரையில் சிறப்பான அளவிற்கு இயக்க வேண்டும் என்று சொன்னால், நான் சொன்னதைப்போல் தொழிலாளர் பெருமக்கள் வேண்டும். இன்றைக்கு 1½ இலட்சம் தொழிலாளர் பெருமக்கள் இந்த நாட்டிலே..

[2002 மே 3

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேலு, கடைசி வாக்கியத்திற்கு வாருங்கள்.

**திரு. எ.வ. வேலு:** இல்லை, தொழிலாளர்கள் பற்றியே பேசவில்லையே? அதிலே இருக்கிறதே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை இன்னொரு நாளைக்குப் பேசலாம்.

**திரு. எ.வ. வேலு:** இல்லை, சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுவெல்லாம் தொழிலாளர் நலத் துறை மானியக் கோரிக்கையிலே பேசலாம்.

**திரு. எ.வ. வேலு:** இல்லை. சொல்லிவிடுகிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குக் கிட்டத்தட்ட 1½ இலட்சம் தொழிலாளர்கள் அதிலே பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தொடர்ந்து 20 சதவீதம் போனஸ் பெற்றுக் கொண்டிருந்தார்கள். ஆனால், இந்த ஆட்சி வந்தவுடனே, எங்களுக்கு 20 சதவீதம் போனஸ் கொடுங்கள் என்று கேட்டார்கள். பணம் இல்லை, 8.33 சதவீதம் நாங்கள் தருகிறோம் என்று சொல்லி கொடுத்தீர்கள். பணம் வரும், இன்னும் குறை பணம் வரும், வரும் என்று தொழிலாளி காத்துக்கொண்டிருந்தான். வரவில்லை. எனவே, குடும்பத்தோடு, இன்றையதினம் தமிழ்நாடு பூராவிலும் இன்றைக்கு 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர் பெருமக்கள் உண்ணாவிரதம் இருந்துகொண்டிருக்கின்றார்கள். அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், அமைச்சர் அவர்களும் கருத்திலே கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

சென்றமுறை தங்களுக்கு வேண்டிய போனசுக்காக, உரிமைக்காக 17 தினங்கள் அவர்கள் போராடினார்கள். தங்களுடைய உரிமைக்காக என்கிற காரணத்தால், அன்றைக்கு அவர்கள் எல்லாம் சிறையிலே அடைக்கப்பட்டார்கள். மீண்டும் அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று 457 பேருக்கு மீண்டும் வேலை கிடைத்தது. ஆனால், இன்றைக்கும் 472 பேருக்கு வேலை கிடைக்கவில்லை. ஆனால், உயர் நீதிமன்றத்திலே என்ன சொன்னார்கள் என்று சொன்னால், அரசு பரிசீலனை செய்ய



2002 மே 3] [திரு. எ.வ. வேலு]

வேண்டும். 20(A) என்கிற பிரிவிலே அவர்களுக்கு நோட்டீஸ் கொடுக்காமல் நீக்கிய காரணத்தினால் மீண்டும் இந்த அரசாங்கம் பரிசீலனை செய்ய வேண்டும் என்று நீதிமன்றமே சொல்லியிருக்கிற காரணத்தினால், அந்தத் தொழிலாளர்கள் மீது கருணை வைத்து மீண்டும் அவர்களுக்குப் பணியைத் தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன். காரணம்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதோடு உரையை முடியுங்கள். திரு. ஆர். சாமி.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

**திரு. எ.வ. வேலு:** ஒரேயொரு கருத்தைச் சொல்லி முடித்துவிடுகிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் இதய தெய்வம் கழகத்தினுடைய நிரந்தரப் பொதுச் செயலாளர், மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதம் தொட்டு, சாதாரண . . . (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சாமி.

**திரு. ஆர். சாமி:** சாதாரண ஏழை விவசாயக்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சாமி, சாமி. சாமியைக் கெஞ்ச வேண்டியதாக இருக்கிறது. திரு. சாமி அவர்களே, கொஞ்சம் உட்காருங்கள். திரு. வேலு, ஒரு நிமிடத்திலே முடித்துவிடுகிறேன் என்று சொல்கிறார். ஒன்றும் கோபப்படாதீர்கள். உட்காருங்கள்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிலாளர் விரோத போக்கு என்பதை தயவுசெய்து எடுத்துவிட்டீர்கள் என்றால், ஏனென்றால் தொழிலாளர்கள் பொதுவாக இருப்பவர்கள்தான். இந்த ஆட்சி, அந்த ஆட்சி என்று கிடையாது. உங்களுடைய ஆட்சி வந்[illegible] அவர்கள் வந்து சந்தா வாங்கிக்கொள்வார்கள். அந்த ஆட்சி வந்தால் இப்படி சந்தா

225807

கட்டுவார்கள். தொழிலாளர்கள் பொதுவாக இருப்பவர்கள். காந்தியாருடைய வழியிலே உண்ணாவிரதம் இருந்தார்கள் வள்ளுவர் கோட்டத்திலே, மாண்புமிகு நம்முடைய மேயர் அவர்கள். அப்போது, அந்த இடம்தான் ஸ்டேஜ். அங்கே டிக்கெட் கொடுத்துக் கொண்டிருக்கிறார் கண்டக்டர். அப்போது அங்கே பஸ்சிலே இருந்தவர்கள் எல்லாம் இறங்கி, ஓடிப்போய், வாழ்த்துகளைத் தெரிவிக்க வேண்டும் என்று மேயரிடம் போகிறார்கள். போகும்போது, டிக்கெட் கொடுக்கும்போது, பாதி பேர் இறங்கிவிட்டார்களே, என்று கண்டக்டர் திரும்பிப் பார்க்கிறபோது, அங்கே பெரும்பான்மையான கூட்டம் இருக்கிறது. இந்த கண்டக்டர் அங்கே போய் பஸ்சிலே ஏறுங்கள், பஸ்சை எடுக்க வேண்டும், டைம் ஆகிவிட்டது என்று கூப்பிட்டுக் கொண்டு வருவதற்காகப் போகிறார். போய், திரும்பி அழைத்துக் கொண்டு வந்தவுடனேயே, நீ, மேயரிடம் சென்று சால்வை போட்டாய் என்று அந்தத் தொழிலாளியை இன்றைக்கு சஸ்பெண்ட் செய்திருக்கிறார்கள். அது எந்த விதத்தில் நியாயம் என்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுந்தரம், உட்காருங்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வேலு அவர்கள் தெரிந்தே ஒரு தவறான தகவலை இந்த அவைக்குத் தந்துகொண்டிருக்கிறார். அவர் குறிப்பிட்டுச் சொன்ன அந்த உண்ணாவிரதம், வள்ளுவர் கோட்டத்திற்கு அருகே நடைபெற்றுக்கொண்டிருந்தபோது, அந்த வழியாக பல வாகனங்கள் சென்று கொண்டிருந்தன. அப்போது அங்கே போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டதால், வாகனங்கள் அப்படியே நின்றன. அப்போது அரசுக்குச் சொந்தமான ஒரு போக்குவரத்துக் கழகப் பேருந்து, நிறைந்த பயணிகளுடன், அந்த வழியாகச் சென்று கொண்டிருந்தது. போக்குவரத்து நெரிசலால் உண்ணாவிரதம் நடக்கின்ற இடத்திற்கு அருகே, அந்தப் பேருந்து அப்படியே நின்றது. அந்தப் பேருந்தில் இருக்கின்ற பயணிகள் அப்படியே அமர்ந்திருந்த நேரத்தில், ஓட்டுநருக்கும் தெரியாமல் அந்தப் பேருந்தில் இருந்த கண்டக்டர் இறங்கிச் சென்று, உண்ணாவிரத மேடைக்குச் சென்று, திரு. ஸ்டாலின் அவர்களுடைய உண்ணாவிரதத்தைப் பாராட்டி, அவருக்கு கை கொடுத்து, அவரை வாழ்த்தி, அவருக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துவிட்டு, ஒலிபெருக்கியிலும்



பேசியிருக்கிறார். 'நான் இப்போது டியூட்டியில் ' நக்கிறேன். அத னால் நான் அதிக நேரம் இங்கே இருக்க முடியவில்லை. நான் சென்றுவிட்டு, மீண்டும் பிற்பகல் இங்கே வருகிறேன்' என்று ஒலிப்பெருக்கியில் அறிவித்துவிட்டு, திரும்பவும் பேருந்துக்குச் சென்றிருக்கிறார். ஆகவே, ஒரு பஸ் கண்டக்டர், ஒரு நடத்துநர் - டியூட்டியில் இருக்கின்ற நேரத்திலே, ஒரு பேருந்து ஓடி ,கொண்டிரு க்கின்ற நேரத்தில், போக்குவரத்து நெரிசலால் ஒரு பேருந்து நின்றபோது தன்னுடைய கடமைகளை மறந்து, பயணிகளை அப்படியே விட்டுவிட்டு, ஓட்டுநருக்கும் தெரியாமல் அவர் இறங்கிச் சென்று, அரசியல் ரீதியாக நடந்துகொண்டிருக்கின்ற ஒரு நிகழ்ச்சியில் பங்கேற்கிறார் என்று சொன்னால், அவர்மீது சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அவர் சஸ்பெண்ட் செய்யப்பட்டது நியாயமான, சட்ட ரீதியான நடவடிக்கை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சாமி, பேச ஆரம்பியுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** ஒன்றே ஒன்று. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வேலு அவர்கள் பேசும்போது, சென்ற அரசின் சட்டமன்ற கூட்டத்தொடரில் பல சட்டமன்ற உறுப்பினர்கள் மினி பஸ் விடும்படி கேட்டார்கள் என்று சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுந்தரம், உட்காருங்கள்.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம், கழகத்தினுடைய நிரந்தர பொதுச் செயலாளர், மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்குகிறேன். ஏழை விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை, ஒரு சாதாரண கட்சித் தொண்டனாக இருந்த என்னை, வட்டக் கழகச் செயலாளராக ஆக்கி, அதற்குப் பிறகு நகரமன்ற உறுப்பினராக ஆக்கி, நகரமன்ற கழகத்தினுடைய செயலாளராக ஆக்கி, அதற்குப் பிறகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கழகத்தினுடைய எம்.ஜி.ஆர். இளைஞர் அணியினுடைய மாநில செயலாளராக நியமனம் செய்து, அதற்குப் பிறகு, மேலூர் சட்டமன்ற தொகுதியின் வேட்பாளராக என்னைப்

போட்டியிட வைத்து, எனக்காக, நான் வெற்றி பெறுவதற்காக இரண்டு முறை வந்து பிரச்சாரம் செய்து என்னை வெற்றி பெற வைத்து, இந்தச் சபையில் பேச வைத்த இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய உடம்பில் ஒரு சொட்டு ரத்தம் ஓடும் வரை, என் உயிர் மூச்சு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவுக்காகவே வாழ்ந்து கொண்டிருப்பேன் என்பதை கூறிக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், எங்களுடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை முதலமைச்சர் ஆக்குவதற்காகவே, ஒட்டுமொத்தமாக அனைவரும் ஒன்று சேர்ந்து, அதிக வாக்கு வித்தியாசத்தில் என்னை வெற்றி பெற வைத்த மேலூர் தொகுதி வாக்காளர் பெருங்குடி மக்களுக்கும் இந்த அவையின் மூலம் நன்றியைத் தெரிவித்து என்னுடைய கன்னிப் பேச்சை பேச விரும்புகிறேன்.

இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு ஒரு சில அரசுப் போக்குவரத்துக் கழகங்களை, நட்டத்தில் ஓடும் தடங்களை தனியாருக்கு விடுவதாக அறிவித்தது. அதற்கெல்லாம் காரணம்-முன்னாள் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசும், முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி அவர்களும், முன்னாள் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த பொன்முடியும்தான் அந்த நட்டத்திற்கு எல்லாம் காரணமாக இருந்தார்கள். அதை விட்டுவிட்டு ஏதோ தனியாருக்கு தாரை வார்க்கக்கூடாது என்று சொல்லி, இப்போது ஒரு முழக்கத்தை, ஒரு குரலைக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு பஸ்களைப் பற்றி பேசுவதற்கு எந்த ஒரு யோக்கியதையும் கிடையாது என்று கூறிக்கொள்கிறேன். ஏனென்றால், போக்குவரத்தை மட்டும் அவர்கள் நஷ்டப்படுத்தவில்லை. ஏழை எளியோர்கள், கூலித் தொழிலாளர்கள், 10 ரூபாய்க்கு ஆட்டோ ஓட்டி பிழைத்தவர்கள், 10 ரூபாய்க்கு ரிக்ஷா ஓட்டிப் பிழைத்தவர்களை எல்லாம் 4 ஆயிரம் மினி பஸ்களை விட்டு அவர்களுடைய பிழைப்பிலே, அவர்களுடைய வயிற்றிலே அடித்ததுதான் முந்தைய தி.மு.க.வினுடைய அரசு என்பதை யாராலும் மறந்துவிட முடியாது என்று கூறிக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கன்னிப் பேச்சு, பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு) பொன்முடி, அவர் கன்னிப் பேச்சு பேசுகிறார். பேசி



முடிக்கட்டும். உங்களுக்கு ஏதாவது விளக்கம் வேண்டும் என்றால், அமைச்சர் பதிலுரையை முடித்த பிறகு கேளுங்கள். (குறுக்கீடு) அமைச்சர் பதிலுரையை முடித்த பிறகு கேளுங்கள். (குறுக்கீடு) இல்லை நீங்கள்தானே பழைய போக்குவரத்துத் துறை அமைச்சர், உங்கள் பெயரைச் சொல்லாமல் எப்படிப் பேச முடியும்? பெயரைச் சொல்லாமல் எப்படிப் பேச முடியும்?

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுக்குத் தெரிந்திருக்கும். 10 ரூபாய்க்கு ஆட்டோ ஓட்டி பிழைத்தவர்கள், 15 ரூபாய்க்கு ரிக்ஷா ஓட்டி பிழைத்தவர்களுடைய பிழைப்பில் மண்ணை அள்ளிப் போட்டவர்கள் யார் என்று தெரியும். 4 ஆயிரம் மினி பஸ்களை ஓட்டிய காரணத்தால், அந்த ஏழை எளியவர்கள் 10 ரூபாய்க்கு ஓட்டி பிழைத்த பிழைப்பெல்லாம் கெட்டுவிட்டது. அதற்கு முழுக் காரணம் முந்தைய தி.மு.க.-வினுடைய அரசுதான் என்பதை என்னுடைய குற்றச்சாட்டாக நான் பதிய வைக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கடந்த 1991-95 ஆம் ஆண்டுகளிலே முதலமைச்சராக இருந்தபோது, போக்குவரத்துத் துறையை முன்னேற்றப் பாதைக்கு கொண்டு சென்றார்கள். வெளியூர் செல்லும் பஸ்களை, வெளி மாநிலங்கள் செல்லும் பஸ்களை எல்லாம், புதிய வண்டிகளாக உருவாக்கி, அதிலே புதிய தொலைக்காட்சிப் பெட்டிகள் அமைத்து, ஏ.சி. மாட்டி, குளு குளு வசதியுடன் வெளி மாநிலங்களுக்குச் செல்வதற்கு ஏற்ப டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த காலத்தில் போக்குவரத்துத் துறையை நடத்தி வந்தார்கள். அதற்குப் பிறகு வந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு போக்குவரத்துத் துறையை ஒரு மோசமான நிலைமைக்கு கொண்டு சென்றது. அரசு போக்குவரத்து என்றாலே-தி.மு.க.வினுடைய அரசு காலத்தில் மக்கள் பயந்து, பஸ்ஸில் பயணம் செய்யக்கூட ஓடி ஒளிகிற அவலநிலையை திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு கொண்டு வந்ததை யாராலும் மறக்க முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-40

தி.மு.க.வினுடைய ஆட்சிக்காலத்தில் யாராவது வெள்ளைச் சட்டை, வெள்ளை வேட்டி கட்டிக்கொண்டு பஸ்சில் ஏறினால், இறங்குகின்றபோது கறுப்பு நிறத்தில்தான் இறங்க முடியும். அது அனைவரும் அறிந்த உண்மையாகும். ஆனால், எங்களுடைய இதய

தெய்வை டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 5 ஆண்டுகாலம் அருமையாக அந்தப் போககுவரத்துத் துறையை நல்ல முறையிலே இயக்கிக் கொண்டு வந்தார்கள். புதிய பேருந்துகளைக் கொண்டுவந்தார்கள்.

பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த தி.மு.க. ஆட்சியினுடைய நிர்வாகத்திலே இருந்த அமைச்சர்கள், தங்களுடைய துறை நிர்வாக வேலைகளிலேகூட கவனம் செலுத்தாமல், அவர்களுடைய சொந்த நிர்வாகத்திலே கவனம் செலுத்தி வந்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 11-1-2001 அன்று லாரி ஒன்று வநதது. அப்போது கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த வருவாய் அதிகாரி செல்வராசு என்பவர் அந்த லாரியை மறித்து சோதனை செய்தார்கள். அப்போது லாரியில் மணல் இருக்கிறது. அப்போது. மணலுக்குள்ள பெர்மிட் எங்கே என்று கேட்கின்றபோது இதற்கு பெர்மிட கிடையாது என்று சொல்கிறார்கள். உடனடியாக அந்த லாரியை அந்த அதிகாரி சீஸ் பண்ணுகிறார். அந்த லாரியை சீஸ் பண்ணிய தேதி 11-1-2001. பேரவைக் தலைவர் அவர்களே, அந்த லாரியினுடைய உரிமையாளர் பெயர் திருமதி விசாலாட்சி பொன்முடி. அந்த லாரியில் மணல் கடத்தப்பட்டது என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அந்த லாரிக்கு ரூபாய் 25,000-த்தை அபராதத் தொகையாகப் போட்டு. fine கட்டியிருக்கிறார்கள். அந்த லாரியினுடைய எண் டி.என்.ஏ.32 எ 3789 என்ற லாரி. திருட்டு மணலைக் கடத்தியவர்கள்தான் (மேசையைத் தட்டும் ஒலி) அந்த தி.மு.க.வினுடைய அரசில் இருந்த அமைச்சர் பொன்முடி அவர்களுடைய மனைவி, துணைவியாருடைய பெயரிலேயுள்ள அந்த லாரியில்தான் இந்த மணல் கடத்தப்பட்டது.

பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி கி.மு.க.வினுடைய அமைச்சர் அவர்களே மணல் கடத்தியிருந்தால் அது எவ்வளவு பெரிய குற்றம் என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்பதற்காக இதை நான் கூறுகிறேன். (குறுக்கீடுகள்) அந்த 25,000 ரூபாய்க்கான.... (குறுக்கீடு) ஆதாரம் இருக்கிறது. (குறுக்கீடுகள்) ஆதாரம் இருக்கிறது. (குறுக்கீடுகள்) ஆதாரம் இருக்கிறது. (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் அவர்களே, ஆதாரம் இருக்கிறது. (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் அவர்களே, ஆதாரம் இருக்கிறது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஆர். சாமி:** அந்த லாரிக்கு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, மாண்புமிகு சாமி அவர்கள் (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள், நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு) பொன்முடி, நான் சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு சாமி அவர்கள் ஒரு குற்றச்சாட்டைத் தெரிவித்திருக்கிறார். ஒரு லாரி பிடிக்கப்பட்டது. அதிலே மணல் கடத்தி வரப்பட்டது. அந்த லாரிக்கு உரிமையாளர் இன்னார் என்று ஒரு குற்றச்சாட்டைத் தெரிவித்திருக்கிறார். அந்தக் குற்றச்சாட்டை சாமி அவர்கள் என்னிடத்திலே கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நான் அதைப் பரிசீலனை செய்து அந்தக் குற்றச்சாட்டு உண்மையானது என்று நான் கண்டால், அதை நான் அவைக்குறிப்பிலே ஏற்றிக்கொள்கிறேன். அதுவரைக்கும் அது அவைக்குறிப்பிலே ஏறாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** தலைவர் அவர்களே, ஒரு விஷயம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குற்றச்சாட்டை நீங்கள் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். காரணம், அவர் ஆதாரத்தோடு சொல்லியிருக்கிறார். லாரி நம்பரைச் சொல்லியிருக்கிறார். வாகன உரிமையாளரைச் சொல்லியிருக்கிறார்: இன்னார் மனைவி என்று சொல்லியிருக்கிறார். அதைவிடக் கூடுதல் விவரங்களை உங்களுக்கு நான் சொல்ல விரும்புகிறேன். சென்ற சட்டமன்றத்திலே நாங்கள் எல்லாம் எதிர்க்கட்சியாக இருக்கும்போது, இதே பிரச்சினை எழுப்பப்பட்டு, அதற்கு அன்றைய மாண்புமிகு அமைச்சராக இருந்த பொன்முடி அவர்கள் அந்தக் குற்றச்சாட்டை ஒத்துக் கொண்டிருக்கிறார். ஆகவே, அவரே ஒத்துக்கொண்டு பல விவரங்களை (மேசையைத் தட்டும் ஒலி) இதற்குப் பதிலுரையாக அளித்திருக்கிறார். ஆகவே, இந்தக் குற்றச்சாட்டைப் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும், இந்தக் குற்றச்சாட்டுக்குப் பொறுப்பு ஏற்றுக்கொள்கின்ற காரணத்தினால், இந்தக் குற்றச்சாட்டை நான் இப்போது அனுமதிக்கிறேன். (குறுக்கீடுகள்)

**டாக்டர் க. பொன்முடி:** தலைவர் அவர்களே, பதில் சொல்ல விடுங்கள். (குறுக்கீடுகள்)

***திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய தீர்ப்பில், பொதுவாக இந்த மாமன்றத்திலே இருக்கிற உறுப்பினர்மீது இன்னொரு உறுப்பினர் குற்றச்சாட்டைச் சுமத்துகிறபோது பேரவைத் தலைவர் அவர்களிடத்திலே, அதைக்காட்டி அனுமதி பெற்றிருக்க வேண்டும். அதனாலே, அந்த மரபுப்படிதான், நீங்கள் முதலிலே தீர்ப்பு வழங்கினீர்கள். என்னிடத்திலே காட்டுங்கள். எனக்கு அது திருப்தியானால் அவைக் குறிப்பிலே ஏற்றுகிறேன் என்று தெரிவித்தீர்கள். ஆனால், நீங்கள் மறுபடியும் அதைப் பதிவு செய்கிறேன் என்று சொல்வது....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அமைச்சர் அவர்கள் அதற்குப் பொறுப்பேற்றுக்கொள்கிறார்கள்.

**திரு. துரைமுருகன்:** இல்லை, வேறொன்றும் இல்லை. இந்த மாமன்றத்திலே இருக்கிற ஒரு உறுப்பினர், அப்படியானால் (குறுக்கீடு) அப்படியானால் நீங்கள் இரண்டைச் செய்ய வேண்டும். ஒன்று, மாண்புமிகு உறுப்பினர் குற்றச்சாட்டு சொன்னார்கள். அந்த குற்றச்சாட்டுக்குரிய பதிலை இந்த மாமன்றத்திலே உட்கார்ந்திருக்கிற உறுப்பினர் பொன்முடி அவர்களுக்கு, விளக்கம் அளிப்பதற்கு அவகாசத்தைத் தர வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விளக்கம் அளிப்பதற்கு வாய்ப்பு அளிக்கப்படும். (குறுக்கீடு) வாய்ப்பு அளிக்கப்படும். திரு. பொன்முடி. (குறுக்கீடு)

*பிற்பகல் 12-45*

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது என்னுடைய பெயரிலே இருந்த லாரி. அதற்கு fine கட்டியது எல்லாம் உண்மை. என்னைப் பொறுத்தவரை (மேசையைத் தட்டும் ஒலி) பேச விடுங்களேன். இதுதான் நான் சொல்வது. ஆளுங் கட்சியிலே



ஓர் அமைச்சராக இருக்கிற காலக்கட்டத்திலேயே ஒரு லாரியிலே அப்படி செய்யப்பட்டபோதும்கூட அதை ஏற்றுக் கொண்டு fine கட்டுகிற பெருந்தன்மை எங்களுக்கு இருந்தது. அடைத்து வைத்து அதிகாரிகளை அடிக்கிற மனப்பான்மை எங்களுக்கு இல்லை. (குறுக்கீடுகள்) இன்னும் ஒன்று. (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடுகள்) மற்றொன்று, மற்றொன்று, பேரவைத் தலைவர் அவர்களே, மற்றொன்று, அது மட்டுமல்ல (குறுக்கீடு) உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். சிவசாமி, உட்காருங்கள். (குறுக்கீடு) பொன்முடி, நான் சொல்வது, அவர் ஒரு குற்றச்சாட்டை சொல்கிறார். அந்தக் குற்றச்சாட்டுக்கு விளக்கத்தை அளிப்பதற்கான வாய்ப்பு உங்களுக்குத் தரப்படுகிறது. (குறுக்கீடு) அந்த விளக்கத்தை மட்டும் தயவுசெய்து சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்ன பிறகு அவர் சொல்லட்டும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். அமைச்சர் பதில் சொன்ன பிறகு பொன்முடி விளக்கம் அளிப்பதற்கான வாய்ப்பை அளிக்கிறேன். (குறுக்கீடு)

**டாக்டர் க. பொன்முடி:** நான் சொல்கிறேன். தயவுசெய்து சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் குற்றச்சாட்டை ஒத்துக்கொண்டதற்கு முதலிலே எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கு அடுத்தபடியாக பெருந்தன்மையாக நாங்கள் fine கட்டினோம். அபராதம் கட்டினோம் என்று சொல்கிறவர், முதலிலே பிடித்த அந்த அதிகாரியை, உடனே பணி மாற்றம் மாதிரி, அவருக்குத் தண்டனை கொடுக்கின்ற விதமாக அப்பொழுது அவரை அந்த இடத்திலிருந்து மாற்றிவிட்டார். ஆகவே, இதற்குப் பெயர் பெருந்தன்மையா? (மேசையைத் தட்டும் ஒலி) குற்றத்தை ஏன் கண்டுபிடித்தாய் என்று கண்டுபிடித்த அதிகாரிக்கு தண்டனை கொடுப்பதற்குப் பெயர் பெருந்தன்மையா? (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், பொன்முடி விளக்கம் சொல்லுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓட்டுநர்கள் செய்கின்ற தவறுகளுக்குக்கூட உரிமையாளர்கள் எப்பொழுதுமே தண்டிக்கப்படுவது உண்டு. பல நேரங்களிலே, அப்படி நடந்தபோதுகூட அவரை நான் காட்டிக்கொடுக்காமல், அதை ஏற்றுக் கொண்டு fine கட்டினேன் என்பது உண்மை. அது போலவே (குறுக்கீடுகள்) அதிகாரி request transfer-லே போனார். மற்றொன்று (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்றொன்று...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, மாறுதல் செய்யப்பட்டாரா, இல்லையா?

**டாக்டர் க. பொன்முடி:** request transfer-லே request-லே போவது வேறு. நாங்களாக மாற்றுவது வேறு. 4-வது மாதம். அதற்குப் பிறகு 4 மாதம் தள்ளி எலெக்‌ஷனுக்கு முதலிலேதான் போனாரே தவிர, அப்பொழுது நாங்கள் ஒன்றும் பண்ணவேயில்லை. எதையும் செய்யவில்லை. மற்றொன்று, இப்பொழுது போளூர் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் மணல், ஜல்லி கட்டிக் கொண்டு 1½ இலட்சம் ரூபாய்க்கு இப்பொழுது fine போடப்பட்டிருக்கிறது. அது எது? (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, அது எப்படி?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, ஒரு தவறுக்கு (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, பொன்முடி (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு துரைமுருகன் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க உங்களை விளக்கம் சொல்வதற்கு நான் அனுமதித்தேன். ஒரு குற்றச்சாட்டை மேலூர் சாமி அவர்கள் தெரிவித்தார். அந்த லாரியைப் பற்றிக் குறிப்பிட்டார். நான்கூட குறிப்பிட்டேன். ஆதாரப்பூர்வமாகக் கொடுத்ததற்குப் பிறகு அவைக்குறிப்பில் ஏற்றிக் கொள்ளலாம் என்று சொன்னேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இதைப்பற்றி நீங்கள் ஏற்கெனவே ஒப்புக் கொண்டிருக்கிறீர்கள். ஆகவே, இதை அவைக்குறிப்பிலே ஏற்றுக்கொள்வதிலே எந்தத் தவறும் இல்லை என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இப்பொழுது நீங்கள் விளக்கம் சொல்லியிருக்கிறீர்கள் நீங்கள் சொல்கிற அந்த விளக்கத்தோடு நில்லுங்கள். இன்னொரு குற்றச்சாட்டை நீங்கள் சொல்வதாக இருந்தால், அதற்கு நீங்கள் ஆதாரம் தர வேண்டாமா? (குறுக்கீடு) ஆதாரம் கொடுங்கள். (குறுக்கீடு) ஆதாரத்தைக் கொடுங்கள். (குறுக்கீடு)



**டாக்டர் க. பொன்முடி:** நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன். அவர்கள் பொறுப்பேற்று....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, அவர் லாரி எண்ணைச் சொல்கிறார், நாளை சொல்கிறார். பிடித்த அதிகாரியைச் சொல்கிறார். அதை நீங்கள் ஒத்துக்கொண்டீர்கள். நீங்கள் ஏற்றுக் கொண்டீர்கள். பெருந்தன்மையாக நான் ஒத்துக்கொண்டேன், அபராதம் கட்டி இருக்கிறேன் என்று சொல்கிறீர்கள். நீங்கள் இன்னொரு குற்றச்சாட்டைச் சொல்கிறபோது, அந்தக் குற்றச்சாட்டுக்கு உரியவருக்கு விளக்கம் சொல்வதற்கு வ ய்ப்பு அளிக்க வேண்டும், அதற்கான வாய்ப்பு அளிக்க வேண்டும். அதற்கான ஆதாரத்தைத் தர வேண்டும். எந்த லாரி, லாரி எண் என்ன? அந்த விளக்கத்தை எல்லாம் தர வேண்டும். அந்த விளக்கத்தையெல்லாம் நீங்கள் தருவதாக இருந்தால் நான் அதைப் பரிசீலிக்கிறேன்.(குறுக்கீடுகள்).

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே அவர் மணல் திருட்டை ஒத்துக்கொண்டதற்கு நன்றி. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சண்முகம், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** அவர் திருடு என்பதை ஒத்துக்கொள்கிறாரா? (குறுக்கீடுகள்) முதலிலே (குறுக்கீடுகள்) அது திருடுதான். அதில் ஏதும் தப்பில்லை. மணல் திருடுதான் அது. அதிலே தப்பு ஒன்றும் இல்லை. மணல் திருட்டை ஒத்துக்கொண்டதற்கு நன்றி. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, சாமி அடுத்த கருத்துக்குப் போங்கள் நீங்கள். (குறுக்கீடு) சாமி, அடுத்த கருத்துக்குப் போங்கள். இந்தக் குற்றச்சாட்டை பொன்முடியும் ஒத்துக் கொண்ட காரணத்தால் அவைக்குறிப்பில் ஏற்றப்படுகிறது. அடுத்த கருத்துக்குப் போங்கள். (குறுக்கீடு) விளக்கத்தை ஏற்றுக் கொண்டேன். அவ்வளவுதான். உங்களது விளக்கத்தை ஏற்றுக்கொண்டு பதிவு செய்தேன்.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளை மற்றவர்கள் எப்படி திருட மாட்டார்கள் என்பதற்காகத்தான் ... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, நீங்கள் அந்த குற்றச்சாட்டுக்கு சொன்ன விளக்கத்தை ஏற்றுக்கொண்டு அதையும் பதிவுசெய்து கொண்டேன். (குறுக்கீடுகள்)

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய குற்றச்சாட்டு எல்லாம், அமைச்சராக இருக்கிறவரே மணலைத் திருடினால், மற்றவர்கள் எப்படித் திருட மாட்டார்கள் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டுக்காகச் சொல்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் அதற்கு விளக்கம் சொல்லிவிட்டார். நீங்கள் அந்தக் குற்றச்சாட்டைச் சொன்னீர்கள். அத்துடன் முடிந்தது. அடுத்த பிரச்சினைக்குப் போங்கள். (குறுக்கீடு)

பிற்பகல் 12-50

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக அரசு திறமையாக ஆட்சி நடத்தியதாக அவர்கள் கூறிக்கொண்டிருக்கிறார்கள். அப்படி ஆட்சியினை நடத்தியிருந்தால் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1996ஆம் ஆண்டு, ஆட்சியை விட்டு இறங்கிய பிறகு, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கின்றபோது அவர்களுடைய ஆட்சியில் போக்குவரத்துத் துறையில் நஷ்டம் இருந்ததை ஈடு செய்து, குறைத்து, அப்போது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விட்டுப்போன நஷ்டத்தைக் குறைத்து, இலாபத்தில் ஓட்டியிருந்தால் அந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி, உறுப்பினர் பேசி முடிக்கட்டும்.

**திரு. ஆர். சாமி:** நல்லாட்சி என்று நாம் எல்லாம் பாராட்டலாம். ஆனால் அவர்கள் அதற்கு மாறாக, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 500 கோடி ரூபாயை நஷ்டமாக போக்குவரத்துத் துறையில் வைத்துவிட்டுப் போனார்கள். ஆனால் அதற்குப் பிறகு வந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு, வைத்த மொத்த இழப்பு 2000 கோடிக்கு மேல், எப்படி இந்த அளவுக்கு போக்குவரத்துத் துறைக்கு நஷ்டம் வந்தது என்பதைக் கேட்டுக்கொள்கிறேன். அதற்குக் காரணம், இந்த மாதிரி துறையில் அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தாத காரணத்தினால், அவர்களுடைய சொந்த வேலையிலேயே கவனத்தைச் செலுத்தியதனால், அதுவும் ஒருசில பெரிய வயது முதிர்ந்த



அமைச்சர்களாக இருந்தவர்கள் எல்லாம், முதலமைச்சருடைய பின்னாலே செல்வதும், இளைஞராக இருந்த அமைச்சர்கள் எல்லாம், அப்போதைய முதல்வருடைய மகன் உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் பின்னாலே...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஆர். சாமி:** நாட்டு மக்களுக்கு நல்லது செய்வதற்காக அப்போது இருந்த அமைச்சர்கள் யாரும் கிடையாது என்பதை என்னுடைய குற்றச்சாட்டாகப் பதிய வைக்கிறேன். ஏனென்றால் நாட்டு மக்களுக்கு நல்லது செய்வதற்காக அமைச்சர்கள் எல்லோரும் பின் செல்லவில்லை. மாவட்டங்களுக்குச் செல்வது கிடையாது. முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் எங்கு செல்கிறாரோ அங்கு..(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், உறுப்பினர் பேசி முடித்துவிட்டும். (குறுக்கீடு) உறுப்பினர், பேசி முடியுங்கள். (குறுக்கீடு) துரைமுருகன், சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய பேச்சில் நான் குறுக்கிடவில்லை. ஆனால் எங்கள் கட்சியில் நாங்கள் எப்படி நடந்துகொள்கிறோம்; தலைவரோடு போகிறோமா இல்லையா என்பது அல்ல இந்த debate. (குறுக்கீடு) அமைச்சர்களுக்கு—முதலமைச்சர் பின்னாலே போவதும், முதலமைச்சர் சொல்வதைச் செய்வதும்தான் அமைச்சருடைய வேலை. அப்படித்தான் இன்றைக்கு இருக்கிற முதலமைச்சர் இடத்திலேயும் மற்ற அமைச்சர்கள் இருக்கிறார்கள். இது அமைச்சருக்கும், முதலமைச்சருக்கும் உள்ள உறவு. இதை உறுப்பினர் பேசுவது முறையாகாது. தயவுசெய்து அதை நீங்கள் அவைக்குறிப்பிலிருந்து எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அவர் பேசினார். நீங்கள் விளக்கம் சொல்லிவிட்டீர்கள். அவ்வளவுதான். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அமைச்சர் பெருமக்களுக்கும், எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அவ்வாறு அறிவுரை கூறவில்லை. நேரடியாக ஒரு நாள், உங்களுக்கு ஒரு மணி நேரம் டைம் கிடைத்தாலும் வாக்களித்து

வெற்றி பெறச் செய்த மக்களுக்குப் பணி செய்ய, அந்தத் தொகுதியிலேதான் நீங்கள் போய் முழுவதும் சுற்ற வேண்டுமே தவிர என் பின்னாலேயே வர வேண்டாம் என்று (மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். வாக்களித்த, ஏழையெளிய மக்களுக்கு, அந்தத் தொகுதி மக்களுக்கு நல்லது செய்யுங்கள் என்று சொல்லி எங்களுக்கெல்லாம் அறிவுரை வழங்கியிருக்கிறார்கள். அதன் பேரில்தான் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம், ஒரு நாள் லீவு கிடைத்தால்கூட, அந்தத் தொகுதியை முழுவதும் சுற்றி, அந்த மக்களுக்கு வேண்டிய நல்ல திட்டங்களைச் செய்து கொண்டிருக்கிறோம்.

தி.மு.க.வினுடைய ஆட்சிக் காலத்தில் போக்குவரத்துத் துறை-அதாவது ஓட்டை, உடைசல், ஈயம், பித்தளைக்கு பேரிச்சம் பழம் என்று சொல்லி விற்பார்கள். நான் கண்ணாலே நேரடியாகப் பார்த்தேன். பேரவைத் தலைவர் அவர்களே, சிரிப்புக்காகச் சொல்லவில்லை. பள்ளிக்கூடத்திற்கு வந்த பையன்கள் படிக்கட்டைச் சுற்றி தொங்கி வந்தார்கள். வரும்போது, ஒவ்வொருவரும் கையிலே ஒருவன் அந்தக் கண்ணாடியை பிய்த்து வைத்திருக்கிறான், பேருந்து படிக்கட்டிலே இருக்கிற கீழ் படிக்கட்டை கையிலே ஒருவன் பிடித்து வைத்துக்கொண்டு பாட்டு படித்துக்கொண்டு வருகிறான். ஓட்டை, உடைசல், ஈயம், பித்தளைக்கு பேரிச்சம் பழம் என்று சொல்லி, அந்த தகரத்தையெல்லாம் பிய்த்து, கையிலே வைத்துக் கொண்டு வந்த ஆட்சிதான், அந்த அவல ஆட்சிதான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நான் இந்த மாமன்றத்திலே கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சாமி, இன்னும் எவ்வளவு நேரம் பேச வேண்டும்?

**திரு. ஆர். சாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, தொகுதியைப் பற்றிப் பேசுகிறேன். ஏனென்றால், 22 ஆண்டு காலத்திற்குப் பிறகு ஆளுங்கட்சியைச் சேர்ந்த, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினராக இந்த முறை புரட்சித் தலைவர் அம்மா அவர்கள் தேர்ந்தெடுத்து, என்னை அங்கே வெற்றி பெற வைத்திருக்கின்றார்கள். அதனால் என்னுடைய தொகுதி மக்களுக்கு, முதலிலே என்னுடைய தொகுதிக்குத் தேவையான திட்டங்களைப் பற்றிக் கூற விரும்புகிறேன்.



மேலூர் நகரில் கடந்த 50 ஆண்டு காலமாக குடிநீர்ப் பற்றாக்குறையாக இருந்து, மக்கள் அவல நிலையில் இருந்தார்கள். ஆனால் கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியாளர்கள் ஒரு திட்டத்தினைக் கிடப்பிலே போட்டு, குடிநீருக்கு என்று ஒரு திட்டமும் வழங்காமல் கிடப்பிலே போட்டுவிட்டுப் போனார்கள். அதற்குப் பிறகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வந்தவுடனே, மேலூர் நகருக்கு குடிதண்ணீர்ப் பற்றாக்குறை இருப்பதை நாங்கள் அம்மா அவர்களிடத்திலே சொன்னவுடனேயே, உடனடியாக சம்பந்தப்பட்ட அமைச்சருக்கும், அதிகாரிகளுக்கும் சொல்லி, அவர்களை அழைத்து, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2½ கோடி ரூபாயில், தி.மு.க. அரசால் கிடப்பில் போடப்பட்டிருந்த திட்டத்தை உடனடியாக நிறைவேற்றிக் கொடுத்ததற்கு மேலூர் தொகுதி மக்களின் சார்பாக (மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-55

மேலூர் தொகுதியிலே இருந்த ஒரேயொரு கூட்டுறவு நூற்பாலை, 1965ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, நல்ல நிலையில் ஓடிக்கொண்டிருந்தது. சுமார் 1,000 தொழிலாளர்கள் வேலை பார்த்தார்கள். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1991 முதல் 1996 ஆம் ஆண்டு வரை முதலமைச்சராக இருக்கின்ற நேரத்தில் மாதந்தோறும் 7ஆம் தேதி அன்றைக்கு காலையில் 10 மணிக்கு அவர்களுக்கு சம்பளம் போட ஆரம்பித்துவிடுவார்கள். ஒரு பைசாகூட பாக்கி இல்லாமல் மாதம்தோறும் 5 ஆண்டுகளும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்த கூட்டுறவு நூற்பாலையில் வேலை பார்த்தவர்களுக்கு சம்பளத்தைக் கொடுத்து வந்தார்கள். அதற்குப் பிறகு வந்த தி.மு.க.வினுடைய ஆட்சியில் கருணாநிதி முதலமைச்சராக வந்த உடனேயே மேலூர் கூட்டுறவு நூற்பாலையை 4-1-1999 முதல் மூடிவிட்டார்கள். அங்கு சுமார் ஆயிரம் தொழிலாளர்கள் வேலைபார்த்தவர்கள், ஏழை எளிய, அகதிகளாக வந்தவர்கள் எல்லாம் சாப்பாட்டுக்குக் கூட வழியில்லாமல், தி.மு.க.வினுடைய அரசால் ரோட்டிலே நிற்கக்கூடிய நிலைமையை உருவாக்கிக் கொடுத்தார்கள். இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஏழைகள் மீது இரக்கம் கொண்ட அம்மா அவர்கள் மூடிக்கிடக்கின்ற அந்த ஆலையை அரசு நடத்த முடியாவிட்டாலும்--புதிய அண்ணா மறுமலர்ச்சித்

[திரு. ஆர். சாமி] [2002 மே 3

திட்டத்திற்கு ஒரு ஒன்றியத்திற்கு ஒரு கோடி ரூபாயில் ஒரு தொழிற்சாலையை அமைப்போம் என்று நமது அரசு அறிவித்திருக்கிறது. மேலூரில், இரண்டு ஒன்றியங்கள் இருக்கின்றன. அந்த 2 கோடி ரூபாயை அந்த மில்லில் முதலீடு செய்து அந்த மில்லை இயக்குவதற்கு, ஆயிரம் தொழிலாளர்கள் பிழைப்பதற்கு, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு முன்வர வேண்டுமென்று அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், இந்த அரசு பல்வேறு தொழிற்சாலைகளை அமைக்க முன்வர உள்ளது. ஆகையால், மேலூர் தொகுதியில் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏதாவது ஒரு தொழிற்சாலையை அமைத்துத் தருமாறு பொற்பாதம் தொட்டு கேட்டுக்கொள்கிறேன்.

மேலூர் பகுதியிலே அதிக வாகனங்கள் உள்ளன. வாகனங்களைப் பதிவுசெய்யப் போகவேண்டுமென்றாலும், வரி கட்ட வேண்டும் என்றாலும், ஓட்டுநர்கள் உரிமம் பெறுவதாக இருந்தாலும், நாங்கள் மதுரைக்குத்தான் செல்லவேண்டியிருக்கிறது. மதுரை மாநகரத்திலே அங்கே அலுவலகம் இருப்பதால் ரொம்பவும் சிரமமாக இருக்கின்றது. ஆகையினால், மேலூர் பகுதியினுடைய மக்கள் ரொம்பவும் சிரமப்படுகின்றார்கள். ஆகையால் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, இந்த ஆண்டிலேயே மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் ஒன்றை மேலூர் தொகுதியிலேயே அமைத்துத் தருமாறு பொற்பாதம் தொட்டு அம்மா அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

மேலூர் தொகுதியிலே ஒரே ஒரு கல்லூரிதான் இருக்கிறது. மாணவர்களும், மாணவியர்களும் படிப்பதால் இட வசதி ரொம்ப நெரிசலாக இருக்கின்றது. ஆகையால் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மகளிர் கல்லூரி ஒன்றை மேலூரில் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலூர் தொகுதியில் கம்ப்யூட்டர் வசதியுடன் கூடிய ஒரு பாலிடெக்னிக் ஒன்றை அமைத்துத் தருமாறு அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலூர் தொகுதியில் ஏற்கெனவே ஓர் ஆசிரியர் பயிற்சி மையம் இருந்தது. அது கடந்த காலத்தில் மூடப்பட்டுவிட்டது. அதை மீண்டும் தொடங்கித் தருமாறு அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



2002 மே 3] [திரு. ஆர். சாமி]

மேலூர், கொட்டாம்பட்டி ஒன்றியத்தில், நீண்ட நாள் பிரச்சினையான 70 கிராம கண்மாய் வாய்க்கால் பிரச்சினை நீண்ட நாளாக கோரிக்கையாக இருந்து வருகிறது. அம்மா அவர்கள், பெரியாறு பாசனத்திலிருந்து பிரிந்துவரும் வாய்க்காலிலிருந்து அந்த கொட்டாம்பட்டி ஒன்றியத்திற்கு 70 கிராமங்கள் பாசனம் அடையும் என்பதனாலே அந்த வாய்க்காலை பெரியாறு பிரிவிலிருந்து அமைத்துத் தருமாறு அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கொட்டாம்பட்டி பகுதியில் பெண்கள் மேல்நிலைப் பள்ளி ஒன்றை அமைத்துத் தருமாறு புரட்சித் தலைவி அம்மாவை கேட்டுக்கொள்கிறேன். மேலூரிலிருந்து கொட்டாம்பட்டி 30 கிலோமீட்டர் தூரம் இருக்கிறது. 30 கிலோமீட்டரிலிருந்து வந்து அந்தப் பெண்கள் படிப்பதற்கு ரொம்ப கஷ்டப்படுகிறார்கள். ஆகையால், கொட்டாம்பட்டி பகுதியிலேயே ஒரு மேல்நிலைப் பள்ளியை அமைத்துத் தருமாறு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், மேலூர், கொட்டாம்பட்டி பகுதியிலேயிருந்து ஆஸ்பத்திரிக்குச் செல்ல வேண்டுமென்றால், மேலூருக்குத்தான் வரவேண்டியுள்ளது. அது 30 கிலோமீட்டர் தூரம் இருப்பதால், ரொம்பவும் அவதிப்படுகிறார்கள். கொட்டாம்பட்டி பகுதியிலேயே ஒரு அரசு ஆஸ்பத்திரி அமைத்துத் தருமாறு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலூர் நகரில் ஓர் அரசு ஆஸ்பத்திரி இருக்கின்றது. அதில் படுக்கை வசதிகள் மிகவும் குறைவாக இருக்கின்றன. ஆகவே, படுக்கை வசதியை அதிகப்படுத்திக் கொடுத்து, நவீன வசதிகளான இரத்த வங்கி, ஸ்கேன் வசதியோடு அந்த ஆஸ்பத்திரியை விரிவாக்கம் பண்ணித் தருமாறு புரட்சித் தலைவி அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலூர் தொகுதியில் போக்குவரத்து, மேலூர் டெப்போவிலே மொத்தம் 48 பேருந்துகள்தான் இருக்கின்றன. பல்வேறு கிராமங்களுக்கு மக்கள் செல்வதற்கான வழித்தடங்களில் பேருந்து பற்றாக்குறையாக இருக்கிறது. ஆகையால் கருணை உள்ளம் கொண்ட இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கூடுதலாக புதிய 20 பேருந்துகளைத் தருமாறு புரட்சித் தலைவி அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஆர். சாமி] [2002 மே 3

எங்களுடைய மேலூர் தொகுதியுடைய நீண்ட நாள் கோரிக்கையாக முல்லை பெரியாறு அணையை 152 அடியாக உயர்த்தித்தர வேண்டுமென்று சொல்லி பல ஆண்டு காலமாக போராடிக்கொண்டு வருகிறோம். மதுரை மாவட்டத்தில் இருக்கின்ற அனைவரும் போராடி வருகின்றார்கள். யாராலும் நிச்சயம் முடித்துக் கொடுக்க முடியாது. ஆனால், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிச்சயம் போராடியாவது இந்த முல்லை பெரியாறு அணையை, விவசாயிகளுடைய கோரிக்கையை ஏற்று, 152 அடியாக ஆக்கித் தருமாறு புரட்சித் தலைவி அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-00

பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே பிரசித்தி பெற்ற ஆலயங்களில் கள்ளழகர் திருக்கோயிலும் ஒன்றாகும். அங்கு மூலிகை கலந்த தீர்த்தத்துடன் தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அந்தத் தீர்த்தம் எங்கிருந்து வருகிறது என்றே தெரியாது. ஆனால், ஒரு மோட்டாரிலிருந்து இறைத்தால் எவ்வளவு தண்ணீர் வருமோ, அவ்வளவு தண்ணீர் அங்கிருந்து, அந்தச் சுரங்கப் பாதையிலிருந்து விழுந்து கொண்டிருக்கிறது. மஞ்சள் காமாலை நோய் வந்தால்கூட, அந்தத் தீர்த்தத்திலே குளித்தால் மஞ்சள் காமாலை நோய் போய்விடும். அதற்காக தினந்தோறும் பல்வேறு ஆயிரக்கணக்கான பக்தர்கள் அங்கு வருகிறார்கள். வெளிநாட்டுப் பயணிகளும் அங்கு வந்து கண்டு களிக்கிறார்கள். ஆகையால், அந்த அழகர்கோயில் பகுதியை புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு சுற்றுலாத் தலமாக அறிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு அந்தக் கோயிலுக்கு வருகின்ற வெளிநாட்டுப் பயணிகளுக்கும், வெளியூர்களிலிருந்து வருபவர்களுக்கும் தங்குவதற்கு இடவசதியில்லாமல் இருக்கிறது. ஆகையால், அந்த கோயில் நிர்வாகமே காட்டேஜ் ஒன்றை அமைத்துத் தரவேண்டுமென்று சொல்லி இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அவையை வந்து பார்ப்பதற்குக்கூட வரிசையிலே நின்று, ஒரு மணி நேரம் காத்திருந்து, பார்க்க முடியாமல் போன இந்தச் சிறியவனுக்கு இந்த அவையிலேயே பேச வாய்ப்பளித்த இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம், (மேசையைத் தட்டும் ஒலி)



2002 மே 3]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கையிலே எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் போக்குவரத்துத் துறை பொதுமக்களோடு ஒரு நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கக்கூடிய துறையாகும். இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கக்கூடிய போக்குவரத்துக் கழகங்களிலே, ஏறத்தாழ 15,271 பேருந்துகளும், மாற்றுப் பேருந்து, பழுதடைந்த பேருந்து என்று 1,526 பேருந்துகளும், ஆக 16,797 பேருந்துகளும் இன்றைக்கு போக்குவரத்துக் கழகங்களிலே இருக்கின்றன. இதிலே பயணம் செய்யக்கூடிய பயணிகள் நாள் ஒன்றுக்கு சராசரியாக 1 கோடியே 62 இலட்சத்து 31 ஆயிரம் பேர் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. பொதுமக்களுடைய தேவைகளை எந்த அளவிற்கு இந்தத் துறை பூர்த்தி செய்கின்றது என்பதை இந்தப் புள்ளி விவரங்களைப் பார்த்தாலே தெரியும்.

அதுமட்டுமல்லாமல், தனியார் துறையின் மூலம் 4,500 பேருந்துகளும், 2,500 மினி பஸ்களும் இன்றைக்கு இயக்கப்பட்டு பொது மக்களுடைய பயன்பாட்டிலே இருந்து கொண்டிருக்கின்றன. ஏற்கெனவே, 3 போக்குவரத்துக் கழகங்கள் இணைக்கப்பட்டு தற்போதுள்ள 18 போக்குவரத்துக் கழகங்களையும் சேர்த்து, ஆக, 21 போக்குவரத்துக் கழகங்களையும், 7 போக்குவரத்துக் கழகங்களாக இணைத்து, அதன்மூலம் நிர்வாகச் செலவை குறைக்கப்போகின்றோம் என்ற அரசின் முடிவை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய போக்குவரத்துக் கழகங்களுடைய நிதிநிலைமையைப் பார்க்கும்போது, கடந்த 1990-91 ஆம் ஆண்டில் இழப்பாக 164 கோடியே, 13 இலட்சம் ரூபாய் என்று இருந்த நிலை மாறி, 1991-92-லே இழப்பு 21 கோடியே, 78 இலட்சம் ரூபாய் என்று குறைந்து, 1992-93-லே, 50 கோடியே, 46 இலட்சம் ரூபாய் என்றும், 1994-95-ல 41 கோடியே, 21 இலட்சம் ரூபாய் என்றும், 1998-99-லே 411.00 கோடி ரூபாய் என்றும், அது 2001-2002 ஆம் ஆண்டிலே மொத்த நட்டமாக 2,160 கோடி ரூபாய் என்றும் இந்தப் போக்குவரத்துக் கழகங்கள் இன்றைக்கு அரசுக்கு இழப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

அதேபோல நிர்வாகச் செலவைப் பொறுத்தவரையிலே, 1991-92 ஆம் ஆண்டில், 388.00 கோடி ரூபாய் என்றிருந்த செலவினம் நிலை

மாறி, 2001-2002 ஆம் ஆண்டிலே 1,269.30 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது.

அதேபோல மூலதனச் செலவு, 1991-1992-லே 229 கோடியே, 23 இலட்சம் ரூபாய் என்றிருந்தது. 2001-2002-லே 958.82 கோடி ரூபாயாக ஏறத்தாழ நான்கு மடங்கு அதிகமாக உயர்ந்துள்ளது.

அதேபோல, டீசல், பஸ் கூண்டு கட்டுதல், டயர், உதிரி பாகங்கள் போன்றவற்றின் விலைகள் பல மடங்கு உயர்ந்துள்ளன. இந்த காலகட்டத்தில், இந்த அளவிற்கு பேருந்துக் கட்டணம் உயர்த்தப்படவில்லை என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. அதேசமயம், இந்தியாவில் உள்ள மாநிலங்களிலே தமிழகத்தில்தான் இன்றையதினம் வரை, பேருந்துக் கட்டணம் மிகவும் குறைவு என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

பிற்பகல் 1-05

போக்குவரத்துக் கழகங்களின் தற்போதைய நிலை குறித்து கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருப்பது, உடனடியாக மாற்றப்பட வேண்டிய, re-placement செய்யப்பட வேண்டிய பேருந்துகளின் எண்ணிக்கை 6,123 என்றும், ஆனால் இன்றைய வரை மாற்றப்பட்டிருப்பது வெறும் 305 மட்டுமே என்பதையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். 1000 புதிய பேருந்துகள் வாங்க தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்திடமிருந்து கடன் கோரப்பட்டுள்ளது; விரைவில் மாற்றப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. நீண்ட வழித்தடத்திலே ஐந்து ஆண்டுகளுக்கு...

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சிவராஜ் அவர்கள், 1,550 பேருந்துகள் வாங்கப்படும் என்று அறிவித்துவிட்டு, 305 பேருந்துகள் மட்டும்தான் வாங்கப்பட்டிருக்கின்றன என்று கொள்கை குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கின்றார்கள். அவருக்கு நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்; இப்போது 1,550 புதிய பேருந்துகளும் வாங்கப்படுகின்ற நடவடிக்கை இறுதி செய்யப்பட்டுவிட்டது. அதன் தொடர்ச்சியாக இப்போதுகூட 97 அடிச்சட்டங்கள் சப்ளை செய்திருக்கிறார்கள். படிப்படியாக இந்த நடவடிக்கையெல்லாம் பூர்த்தி செய்யப்பட்டு, முறையாக டெண்டர்களெல்லாம் கோரப்பட்டு, அங்கீகாரம் அளிக்கப்பட்டு, 1,550 பேருந்துகளும் இந்த மாத இறுதிக்குள்ளாகவே அனைத்தும் நடைமுறைக்கு வந்துவிடும், ஓடிவிடும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய விளக்கத்திற்கு நன்றி. தற்போது நீண்ட வழித்தடத்திலே இயக்கப்படுகின்ற பேருந்துகள் எக்காரணத்தைக் கொண்டும் ஐந்து ஆண்டுகளுக்கு மேல் அந்த வழித் தடங்களிலே இயக்கப்படக்கூடாது என்றும், எட்டு ஆண்டுகளுக்கு மேல் மற்ற வழித்தடங்களிலே அதுபோல இயக்கினால் அந்தப் பேருந்துகளை இயக்கக்கூடாது என்றும், அது பேருந்துகளை இயக்குவதால் போக்குவரத்துக் கழகங்களுக்கு இலாபகரமாக இருக்காது என்றும், காலங்கடந்து ஓடிவிட்ட பேருந்துகள் அவ்வப்போது செலவினம் வைத்துக்கொண்டு இருக்கும் என்றும் தெரிவித்து, பேருந்துகளை உடனுக்குடன் மாற்றி, போக்குவரத்துக் கழகத்தினுடைய நட்டத்தைக் குறைக்க வேண்டுமென்றும் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்துக் கழகங்களின் நட்டத்திற்கு, பேருந்துகள் இயக்கப்படும் சாலைகளும் ஒரு காரணம் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இன்றைக்கு தேசிய நெடுஞ்சாலை, மாநில நெடுஞ்சாலை போன்ற சாலைகளெல்லாம் ஓரளவிற்கு நல்லமுறையிலே இருந்தாலும்கூட, மாவட்டங்களிலே இருக்கக்கூடிய மாவட்டச் சாலைகள், இதர மாவட்டச் சாலைகளெல்லாம் கடந்த 4, 5 ஆண்டு காலமாக சரிவரப் பராமரிக்கப்படாமல், மிகவும் மோசமான நிலையிலே இருக்கின்ற காரணத்தினால், அந்தச் சாலைகளிலே இயக்கப்படுகின்ற பேருந்துகள் தினமும் பிரேக் டவுன் ஆகின்றன. டயர் வெடித்தது, ஸ்பிரிங் பட்டை போனது என்று இப்படி பல்வேறு செலவினங்களை இன்றைக்கு அந்தப் பேருந்துகள் வைத்து விடுகின்ற காரணத்தினால், அதுவும் ஒரு வகையிலே நட்டத்திற்குக் காரணமாக அமைந்து விடுகின்றது. ஆகவே, இந்தச் சாலைகளைச் சரியாகப் போட்டால், பேருந்துகள் இலாபத்தில் இயங்குவதற்குண்டான வாய்ப்பு கிடைக்கும். 2000 கோடி ரூபாயை நாம் 10 ஆண்டுகளிலே நட்டமாகப் போக்குவரத்துக் கழகங்களுக்குக் கொடுத்திருக்கிறோம். இந்த 2000 கோடி ரூபாய் இன்றைக்கு மீதியாக இருந்தால், தமிழகத்தில் இருக்கக்கூடிய கிராமங்களிலே பாலங்களாக, சாலைகளாக, பள்ளிக் கட்டடங்களாக இப்படி பல்வேறு வளர்ச்சிப் பணிகளுக்கு பயன்பட்டிருக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

[திரு. சு. சிவராஜ்] [2002 மே 3

இன்றைக்கு மாறி வருகின்ற பொருளாதாரச் சூழலில் Globalisation, Liberalisation— உலகமயமாக்கல் தாராளமயமாக்கல் என்று பல துறைகளிலே கையாளப்படுகின்றது. மத்திய அரசுகூட இலாபத்திலே இயங்கிக் கொண்டிருக்கிற பல்வேறு துறைகளை, பல்வேறு நிறுவனங்களை இன்றைக்கு தனியாருக்குத் தாரை வார்க்கின்ற நிலையை நாம் பார்க்கின்றோம். குறிப்பாக, பி.எஸ்.என்.எல்., என்.எல்.சி. போன்ற நிறுவனங்களை இன்றைக்குத் தனியாருக்குக் கொடுக்கின்ற நிலையிலே, மத்திய அரசு இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, இன்றைக்கு நட்டத்திலே இயங்கக்கூடிய இந்தப் போக்குவரத்துத் துறையிலே தனியாரை ஈடுபடுத்தி, அதன்மூலம் அரசாங்கத்தினுடைய நட்டத்தைக் குறைப்பதற்கும், பொதுமக்களுடைய தேவைகளை முழுமையாகப் பூர்த்தி செய்து கொடுப்பதற்கும் இந்த அரசு, புரட்சித் தலைவியினுடைய அரசு எடுத்திருக்கின்ற இந்த தனியார்மயக் கொள்கையை நான் தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியின் சார்பாக வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்திலே, இந்தத் துறையிலே பணியாற்றக்கூடிய தொழிலாளர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாத வண்ணம் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட வேண்டுமென்று நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, போக்குவரத்துத் தொழிலாளர்களுக்குக் கடந்த ஆண்டு வழங்கப்படாத போனஸ் தொகையை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அத்துடன் போனஸ் கேட்டு போராட்டம் நடத்திய தொழிலாளர்கள்மீது போடப்பட்ட வழக்குகளைத் திரும்பப் பெற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-10

இன்றைக்கு வாகனப் போக்குவரத்து பலமடங்கு பெருகியிருக்கிறது. அரசு தெரிவித்த புள்ளி விவரப்படி 1996ஆம் ஆண்டிலே 27,71,846 என்று இருந்த வாகனங்களுடைய எண்ணிக்கை மாறி, தற்போது 55,59,731 எனறு இருமடங்காக உயர்ந்திருக்கிறது. ஆனால், இந்த வாகனங்கள் பயணம் செய்கின்ற சாலைகள் அப்படியேதான் உள்ளன. பல ஊர்களில் சாலையோரங்களில் ஆக்கிரமிப்புகள்கூட செய்யப்பட்டிருக்கின்றன. சென்னை போன்ற பெருநகரங்களில் ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் செல்ல பல மணி நேரம் செலவழிக்க வேண்டிய நிலையுள்ளது. ஆகவே, பெருநகரங்கள், நகரங்களில் போக்குவரத்து நெரிசலைச் சமாளிக்க அரசு தொலைநோக்குத் திட்டம் ஒன்றைத் தயாரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



2002 மே 3] [திரு. சு. சிவராஜ்]

விபத்துகளைக் குறைக்கும் நோக்கத்துடன், ஓட்டுநர்களின் சிரமததைக் குறைக்க, அவர்கள் இரவில் நான்கு மணி நேரத்திற்கு மேலாகத் தொடர்ச்சியாக பேருந்துகளை இயக்கக்கூடாது என்று அரசு அறிவுறுத்தியுள்ளதாக கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. நிறைய இடங்களில் விபத்துகளைப் பார்த்தால், லாரியும்-பஸ்சும் மோதியது, லாரியும்-காரும் மோதியது, பலியானவர்கள் எண்ணிக்கை 10, 20 என்று நாள்தோறும் செய்திகள் வருகின்றன. அதனால், பரீட்சார்த்தமாக ஒரு தேசிய நெடுஞ்சாலையை தேர்வு செய்து, ஒரு மாத காலத்திற்கு அந்தச் சாலையில் இரவு 12 மணி முதல் அதிகாலை 5 மணி வரை லாரி போக்குவரத்தை தடை செய்து பார்த்து, விபத்துகள் குறைந்தால், அந்த நடைமுறையை விபத்துகள் அதிகம் நடக்கும் சாலைகளில் அமல்படுத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, ஓட்டுநர் உரிமம் வழங்கும் விதிகளை மேலும் கடுமையாக்க வேண்டும். தொடர்ச்சியாக விபத்துகளை ஏற்படுத்தும் ஓட்டுநர் உரிமம் பறிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதி மக்களின் சார்பாக, சில கோரிக்கைகளை நான் முன்வைக்க கடமைப்பட்டிருக்கிறேன். சங்கராபுரம் தாலுகா தலைநகரமாக்கப்பட்டு 7 ஆண்டுகள் ஆகியும் அங்கே அரசுப் போக்குவரத்துக் கழகக் கிளை தொடங்கப்படவில்லை. உடன் அங்கே போக்குவரத்துக் கழகக் கிளை ஒன்றைத் தொடங்கி சங்கராபுரத்தைச் சுற்றியுள்ள கிராமங்களுக்கு நகரப் பேருந்து வசதியினை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

திருக்கோவிலூர் அரசுப் போக்குவரத்துக் கழகப் பணிமனைக்குச் சொந்தமாக இடம் வாங்கி பல ஆண்டுகளாகியும்கூட, இன்னும் அந்த இடத்தில் புதிய பணிமனைக் கட்டடம் கட்டப்படவில்லை. உடன் அங்கு கட்டடம் கட்டவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருக்கோவிலூரிலிருந்து திருவண்ணாமலை-ஆரணி வழியாக காஞ்சிபுரம் வரை பேருந்து ஒன்றும், திருக்கோவிலூரிலிருந்து சோழபாண்டியபுரம்-பாசாறு வழியாக கள்ளக்குறிச்சிக்கு பேருந்து ஒன்றும், திருவண்ணாமலையிலிருந்து மணலூர்பேட்டை வழியாக தியாகதுருகம் வரை பேருந்து ஒன்றும், திருக்கோவிலூரிலிருந்து திருவரங்கம் வரை ஜம்படை-ஈருடையான்பட்டு வழியாக நகரப் பேருந்து ஒன்றும், சங்கராபுரத்திலிருந்து ஓடியந்தரம்-சீர்ப்பனந்தல்-திருவரங்கம்

வழியாக மணலூர்பேட்டைக்கு பேருந்து ஒன்றும் இயக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் லாரி உரிமையாளர்கள் சங்கம் 13 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து ஒரு நாள் வேலைநிறுத்தம் செய்வது என்று முடிவு செய்திருக்கின்றார்கள். அவர்களை அழைத்துப் பேசி, அவர்களுடைய குறைகளுக்கு தீர்வு காண வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, எங்கள் வேலூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோள். வேலூரை தலைநகரமாகக் கொண்டு விளங்கும் தமிழ்நாடு போக்குவரத்துக் கழகத்தில் 600 பஸ்கள் பழைய பஸ்களாக இருக்கின்றன. அவற்றை மாற்றி புதிய பஸ்களை விட வேண்டுமென்று கேட்டிருக்கின்றார். வேலூர் ஒரு [illegible] 7 மண்டல அலுவலகங்கள் அமைக்கப்படும்போது, வேலூரை ஒரு மண்டலத்தினுடைய தலைமையிடமாக அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கின்றார். அதையும் வழங்கவேண்டுமென்று கேட்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறை மானியத்தின் மீது பேச என்னை அழைத்த தங்களுக்கு என்னுடைய உளங்கனிந்த நன்றியை முதலிலே சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

தினசரி 16,797-க்கு மேற்பட்ட பேருந்துகளை இயக்கி, 61.25 இலட்சம் கி.மீ. தூரம் நாள்தோறும் செல்லக்கூடிய இந்தப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் ஒரு நாளைக்கு ஒரு கோடியே 62 இலட்சத்து 31 ஆயிரம் பேர்களை ஏற்றிச் செல்லக்கூடிய ஒரு மாபெரும் பொறுப்பினை ஏற்றிருக்கின்றன. இந்தப் போக்குவரத்துக் கழகங்கள் 21 கழகங்களாக இருந்து இன்று 7 கழகங்களாக மாற்றப்பட்டிருக்கின்றன.

பிற்பகல் 1-15

பல்வேறு காலகட்டத்திலே பெரும் நட்டத்திலே இயங்கி வந்த இந்தப் போக்குவரத்துக் கழகங்களைச் சீர் செய்வதாகச் சொல்லி, தமிழக அரசு, நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள், கிட்டத்தட்ட 1,030 கோடி ரூபாய்க்கு போக்குவரத்திலே வரியைப் போட்டார்கள்



ஆனால், தமிழ் நாட்டின் மக்களுடைய அந்த உணர்வுகளை மதித்து, 330 கோடி ரூபாய்க்கு அந்த வரியை தள்ளுபடி செய்தார்கள். அதற்காக என்னுடைய அண்ணன் சபாநாயகர் அவர்கள் மூலமாக நம்முடைய தமிழக அரசுக்கும், முதலமைச்சருக்கும், வருவாய்த் துறை, நிதி அமைச்சருக்கும் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைச் சொல்லிக்கொள்கிறேன். மீதி 700 கோடி ரூபாய்க்கு போக்குவரத்திலே வரியைப் போட்டிருக்கிறார்கள். நான் இந்த நேரத்திலே ஒன்றை சிந்தித்துப் பார்க்கின்றேன். பஸ் ஆள் மீது ஏறினால் விபத்து.

பஸ் ஆள் மீது ஏறினால் விபத்து. பஸ்ஸில் ஆள் ஏறினால் கட்டண விபத்து.

பஸ்ஸில் ஆள் ஏறினால் கட்டண விபத்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** புதுக் கவிதை மாதிரி இருக்கிறதே!

(சிரிப்பு)

**திரு. ஐ. கணேசன்:** இது பழைய கவிதை. நாட்டு உணர்வு. நாட்டு மக்களுடைய உணர்வுகளைச் சொல்கின்றேன். 22 பைசாவாக இருந்ததை, 28 பைசாவாக உயர்த்தி, 25 பைசாவை 32 பைசாவாக உயர்த்தினார்கள். அதிலே, கிட்டத்தட்ட 700 கோடி ரூபாய்க்கு வருமானம் கிட்டி இருந்தபோதிலும், மொத்த நட்டத்திலே 2,160 கோடி ரூபாய் நட்டத்திலே, ஓரளவிற்குத்தான் இது சீர் செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் நான் மனப்பூர்வமாக ஒத்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

எது எப்படியிருந்தாலும் இந்தப் போக்குவரத்துக் கழகம், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொன் முட்டை இடும் வாத்துக்குச் சமமானது. இந்தப் போக்குவரத்துக் கழகத்தை சாதாரணமாக அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. இந்தப் போக்குவரத்துக் கழகத்தை அரசுக் கழகமாக ஆக்கவேண்டுமென்பதற்காக, அந்த பஸ் முதலாளிகளிடத்திலிருந்து இந்தக் கழகத்தை அரசு ஏற்று நடத்தவேண்டுமென்பதற்காக, கிட்டத்தட்ட 40 ஆண்டு காலம் போராடினார் பெருந்தகை, அறிவு உலக மேதை, அறிவுக் கடல், அறிஞர் அண்ணா அவர்கள் இந்த நாட்டிலும், சட்டமன்றத்திலும் பல்வேறுமுறை குரல்களை எழுப்பி, இதனால் ஏற்படக்கூடிய நன்மை என்ன, தீமை என்ன, இது எப்படி சமுதாயத்திற்கு உதவக்கூடியது என்பதனைத் தெள்ளத் தெளிவாக பேரறிஞர் அண்ணா அவர்கள் புரிந்து, அவர் இந்த ஆட்சி அதிகாரத்திற்கு வந்தபோது, இந்த பஸ்களை தேசியமயமாக்க உத்தரவு வழங்கக்கூடிய காலகட்டத்திலே இந்த பஸ் முதலாளிகள் சாதாரணமாக ஒப்புக்கொண்டார்களா? இங்கே இருக்கக்கூடிய ஹைகோர்ட்டிலிருந்து

சுப்ரீம் கோர்ட் வரைக்கும் அவர்கள் சென்று வாதிட்டு தோல்வியுற்ற
பிறகு, அந்தத் தனியார் முதலாளிகளிடமிருந்து பேருந்துகளை
தேசியமயமாக்கியது திராவிடக் கழகம் அல்லவா? அந்த திராவிடக்
கழகத்தினுடைய உணர்வு அதனுடைய உயிர் நாடி பேரறிஞர் அண்ணா
கண்ட கனவு அல்லவா? அண்ணாவின் பெயரில் இந்த ஆட்சி
அமைத்திருக்கக்கூடிய, இந்த ஆட்சி அதிகாரத்திலே அமர்ந்திருக்கக்கூடிய
நீங்கள் ஒரு பஸ்சை தனியாருக்கு விற்றால், விட்டுக்கொடுத்தால் இது
அண்ணாவிற்கு செய்த துரோகம் அல்லவா? தயவுசெய்து சிந்தித்துப்
பாருங்கள். இது அண்ணாவிற்கு இழைக்கக்கூடிய மாபெரும் துரோகம்.
திராவிட நாட்டினுடைய கொள்கை, திராவிடர்களுடைய கொள்கை,
நம்முடைய உணர்வுகளை மதித்து, அண்ணாவை மதித்து, அண்ணாவின்
மூலம் ஆட்சிக்கு வந்த நீங்கள், அண்ணாவின் பெயரில் ஆளக்கூடிய
நீங்கள், எந்தக் காரணத்தைக் கொண்டும், இந்தப் பொன் முட்டை
இடும் வாத்தை, அறுத்து விடாதீர்கள் என்பதனை பாட்டாளி மக்கள்
கட்சியின் சார்பாக அழுத்தம் திருத்தமாக உங்களுக்கு நான்
சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 1-20

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

பஸ் நஷ்டத்திலே ஓடுகிறது. அதை எப்படி சீர் செய்யவேண்டும்
என்று சிந்திக்க வேண்டும். நஷ்டத்திலே ஓடுகிற பஸ்சை சீர் செய்ய
வேண்டும். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கு மிகத் தெளிவாகத்
தெரியும். பஸ் உரிமையாளர்கள் யார்? உங்களுக்குத் தெரியாதா?
இந்தப் போக்குவரத்துத் துறையின் அமைச்சராக நீங்கள் இருந்தீர்களே,
உங்களுக்குத் தெரியாமல் ஒரு அணுகூட அசையுமா? நம்முடைய
மாவட்டத்திலே பஸ் கம்பெனி நடத்துகிறார்களே அவர்கள் என்ன
ஐ.ஏ.எஸ். படித்தவர்களா? ஐ.பி.எஸ். படித்தவர்களா? படித்த சட்ட
மேதைகளா? கையெழுத்துகூட போடத் தெரியாதவர்கள் ஆயிற்றே!
கையெழுத்து போடத் தெரியாதவர்கள் எல்லாம் இலட்சம் இலட்சமாக,
கோடி கோடியாக செலவு செய்து பஸ்களை விடுகிறார்கள்.
திரு. துரைமுருகன் அண்ணன் அவர்களுக்கு வேண்டுமானால்
தெரியாமல் இருக்கலாம். சேலத்திலிருந்து ஈரோட்டுக்கு ஒரு பஸ் ரூட்-
உங்களுக்குத் தெரியும் 60 இலட்சம் ரூபாய். ஈரோட்டிலிரு 'து
கோயம்புத்தூருக்கு பஸ் ரூட் 1 கோடி ரூபாய். சேலத்திலி ந்து
கோயம்புத்தூருக்கு 1 கோடி 20 இலட்சம் ரூபாய். பஸ் ரூட் • லை
போகிறது என்றால், அந்த வழித்தடம் விலை போகிறது எ ரால்,



அவர்களால் எப்படி இவ்வளவு பெரிய முதலீட்டைப் போட்டு அந்த
பஸ்சை இலாபத்தில் நடத்தமுடிகிறது? சிந்திக்க வேண்டாமா?

என்னுடைய அருமை நண்பர்தான் இங்கே போக்குவரத்துத் துறை
அமைச்சராக இருக்கிறார். சிந்தித்துப் பாருங்கள். படிக்காத கைநாட்டுப்
பேர்வழிகள் எல்லாம் பஸ் வைத்து நடத்தும்போது, ஓராண்டிலே ஒரு
பஸ், இரண்டு மூன்று ஆண்டுகள் ஆனால் ஐந்தாறு பஸ்கள் வருகிறது.
அதன்பிறகு சொகுசான பங்களா, மகன், மகளுக்கு நல்ல முறையில்
திருமணம், இப்படியெல்லாம் நடத்தி நல்ல முறையில் இருக்கிறார்கள்.
இருக்கட்டும். ஆனால், அவர்களால் முடிவது ஏன் நம்மால் முடியாது?
நம்மிடத்திலே இருக்கிற ஒருசில அதிகாரிகளுடைய நிர்வாகச் சீர்கேடு—
முதலமைச்சருக்குக் கூட இரண்டு ஏ.சி.தான். அந்த ரூமுக்கு ஒருநாள்
மலர்ச்செண்டு கொடுக்கப் போனோம். இரண்டு ஏ.சி.தான் இருந்தன.
ஆனால், அந்த எம்.டி. என்று சொல்கிற அந்த அதிகாரிக்கு நான்கைந்து
ஏ.சி.யா? இங்கே உட்கார்ந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். அவர்
எப்படி நிர்வாகத்தைப் பார்க்கமுடியும்? காலையில் 10 மணிக்குப்
போனால் ஃபுல் ஏ.சி.யில் உட்கார்ந்துகொண்டு, சூடாக ஒரு கப் டீ,
மத்தியானம் வரைக்கும் என்னவோ பார்த்துக்கொண்டு,
படித்துக்கொண்டு, கேட்டுக்கொண்டு இருக்கிறார்களேயொழிய, ரோட்டில்
ஓடுகிற பஸ்சைப் பற்றி சிந்தித்திருப்பாரா? பிரைவேட் வண்டி எங்காவது
நின்று பார்த்திருக்கிறீர்களா?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுக்கு சற்று இடைவெளி
விட்டது போல இருக்கட்டும் என்று குறுக்கிடுகிறேன். (சிரிப்பு)
மாண்புமிகு உறுப்பினர் ஐ. கணேசன் அவர்கள் சொல்கிறபோது,
'பொன் முட்டையிடுகிற வாத்து போன்றது' என்று போக்குவரத்துத்
துறையைப் பற்றிக் குறிப்பிட்டு நீங்கள் அதை அறுத்துவிடாதீர்கள்
என்று சொன்னார்கள். நான் அவருக்குப் பணிவோடு
தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய பதிலுரையில் விரிவாகச்
சொல்லலாம் என்று கருதுகிறேன். இப்படிப்பட்ட பொன் முட்டையிடும்
வாத்தை அதனுடைய தலையை அறுத்ததே முன்னாள் அமைச்சர்
பொன்முடிதான் என்று மிகத் தெளிவாகச் சொல்ல இருக்கிறேன்.
அதற்கு அடுத்தபடியாக இப்போது இன்னொன்றைச் சொன்னார்கள்.
(குறுக்கிடு) இவ்வளவு நிர்வாக இயக்குநர்கள் எல்லாம் சொகுசு வாழ்க்கை
வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். நீங்கள் சொல்வது
பழைய ஆட்சிக் காலத்திலே நடந்தது என்பது உண்மைதான். நானும்
ஒத்துக்கொள்கிறேன். ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள

[திரு. இரா. விசுவநாதன்] [2002 மே 3

ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பிறகு இந்த நிலைமையை எல்லாம் மாற்றி சிக்கன நடவடிக்கையை, மேலதிகாரிகளிடத்திலிருந்து அமல்படுத்தியிருக்கிறோம். கடும் நடவடிக்கை எடுத்து, இப்போது சிக்கனமாக நிர்வாகச் செலவுகளைச் செய்து வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்த நிலை, சென்ற ஆட்சிக்காலத்தில் இருந்தது என்பது உண்மைதான். இப்போது அந்த நிலை மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது என்பதை அவருக்குத் தகவலாக தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அனுமதிக்க மாட்டேன் என்கிறார். உட்காருங்கள். பாயின்ட் ஆப் ஆர்டரில் இது வராது.

பிற்பகல் 1-25

**திரு. துரைமுருகன்:** பாயின்ட் ஆப் ஆர்டர். துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் பல மாண்புமிகு அமைச்சர்கள் இருக்கிறார்கள். உறுப்பினர்கள் பேசும்போது குறிப்பிட்ட இடத்தில் ஏதோ ஒருமுறை அவர்கள் குறுக்கிடுகிறார்கள். பிறகு கடைசியில் அவர்கள் பதில் சொல்கிறார்கள். அதில் நான் தலையிடவில்லை. மாண்புமிகு அமைச்சர் விசுவநாதன் அவர்கள் தனது பதிலுரையில் என்னென்ன சொல்லவேண்டுமோ அதை அப்போது தெரிவிக்கட்டும். ஆனால், ஒவ்வொரு உறுப்பினர் பேசுகிறபோதும் நான் என்னுடைய பதிலுரையில் இதைச் சொல்லப் போகிறேன்; இதைச் சொல்லப் போகிறேன் என்று இப்போது தலைப்புச் செய்தியைச் சொல்கிறார். Preview chance இல்லை. ஆகையினால், நீங்கள் எவ்வளவு வேண்டுமென்றாலும் பேசுங்கள். Member-களைப் பேச விட்டுவிடுங்கள். அதற்குப் பிறகு உங்களுக்கு என்ன கருத்தோ, என்ன சொல்ல வேண்டுமோ சொல்லுங்கள்; வேண்டாம் என்று சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் பேசுங்கள். (குறுக்கீடு) உறுப்பினர், பேசுங்கள். (குறுக்கீடு)

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்கள் துணைத் தலைவர் பேசிவிட்டார். (குறுக்கீடுகள்)



2002 மே 3]

**டாக்டர் க. பொன்முடி:** கடைசியிலே அமைச்சர் பேசட்டும்...(குறுக்கீடுகள்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் கடைசியிலே பேசுங்கள்; உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மந்திரி சொல்கிறார்; நீங்கள் உட்காருங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பதிலுரை சொல்லும்போது சொல்வார், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** நான் பதிலுரை சொல்லும்போது சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைச்சர், பதிலுரை சொல்லும்போது சொல்லுங்கள். உறுப்பினர்கள் உட்காருங்கள்; அமைச்சர் பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**டாக்டர் க. பொன்முடி:** கடந்தகால ஆட்சியிலே, 1991-லிருந்து 1996 வரை நடைபெற்ற ஆட்சியிலேதான், கடைசி 1995-96-லே cash loss என்று 75 கோடி ரூபாய் ஆரம்பித்ததே அப்போதுதான். **

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அது அவைக்குறிப்பிலே இருந்து நீக்கப்படுகிறது.

**டாக்டர் க. பொன்முடி:** சட்டமன்றத்திலே எங்களுக்கு இருக்கிற...(குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. **

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அது அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது.

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** அதை சபைக் குறிப்பிலே இருந்து நீக்குங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. வி.ஆர். ராஜாங்கம்:** Point of order. Point of order. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள் சொன்னதை சபைக் குறிப்பிலே இருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீக்கியாகிவிட்டது. (குறுக்கீடுகள்) நீக்கியாகிவிட்டது.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** காரணம், கடைசியில் ஏற்பட்ட— 'அவர்கள் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட நட்டத்திற்காக சிறைத் தண்டனை பெற்றிருக்கிறார்கள்' என்று சொன்னார்கள். அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது என்பதும் உங்களுக்குத் தெரியும். (குறுக்கீடுகள்) Sorry (interruption) sorry. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. (குறுக்கீடுகள்) அந்த வழக்கு—(குறுக்கீடுகள்) இல்லை, நான் சொல்லிவிடுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடுகள்) முழுமையாக...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் உட்காருங்கள். அமைச்சர் உங்களுக்கு பதில் சொல்லிவிடட்டும். (குறுக்கீடுகள்) அமைச்சர் பதில் சொல்லிவிடட்டும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 75 கோடி ருபாய் நட்டம் ஏற்பட்டதற்கு....(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், பொன்முடி



**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** ஐந்தாண்டு கால சிறை தண்டனை என்று சொன்னால், அவர்களுடைய ஆட்சியிலே, 1,498 கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டதற்கு, எத்தனை ஆண்டுகாலம் இவர்கள் சிறையிலே இருக்க வேண்டும் என்பதை உங்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) 75 கோடி ரூபாய்க்கு 5 ஆண்டுகாலம் தண்டனை என்று சொன்னால், 1,498 கோடி ரூபாய் நட்டத்தை ஏற்படுத்திய அவர்களுக்கு எத்தனை ஆண்டு காலம் தண்டனை கொடுப்பது என்பதை இந்த நேரத்தில் உங்கள் மூலமாகக் கேட்க விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன, எதிர்க் கட்சி துணைத் தலைவர் அவர்களே, என்ன விளக்கம் கேட்கப் போகிறீர்கள்?

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே சொன்னேன். மாண்புமிகு அமைச்சர் — நான் இந்த மன்றத்தில் தொடர்ந்து உட்கார்ந்து கொண்டு பார்க்கிறேன். மற்ற அமைச்சர்கள் பதில் சொல்கிறார்கள்; இல்லை என்று சொல்லவில்லை. அவருடைய கட்சியின் கருத்து; அவர் கருத்தைச் சொல்கிறார். ஆனால், மாண்புமிகு அமைச்சர் திரு. விசுவநாதன் அவர்கள் எடுத்ததற்கெல்லாம் இப்படி ஒரு வம்பை வளர்ப்பதிலே இருக்கிறார். இரண்டாவது, ஒரு தீர்ப்பைக்கூட சொல்லக்கூடாது என்று சொல்வது, அது நியாயமாகாது. எனவே, தாங்கள்தான் இதுகுறித்துச் சொல்ல வேண்டும். அவர் என்ன கருத்தைச் சொல்கிறாரோ, சொல்லட்டும், ஒவ்வொரு வரிக்கும், வார்த்தைக்கும் சொல்லிக் கொண்டிருந்தால், எப்படிப் பொறுக்க முடியும்? (குறுக்கீடுகள்) So, நீங்கள்தான் அவருக்கு அறிவுரை சொல்ல வேண்டும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) இப்போது பிரச்சினை என்ன? (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.. (குறுக்கீடுகள்) மன்னிக்க வேண்டும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை எழுந்ததற்கே காரணம், 1991-96-லே cash loss நிறைய ஏற்பட்டது என்று மாண்புமிகு திரு. பொன்முடி அவர்கள் சொன்னார்கள். (குறுக்கீடுகள்) அவர்கள் சொன்னதற்குச் சொன்னார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். அமைச்சர் பேசியதற்குப் பிறகு சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** அவர்கள் சொன்னதற்கு சொன்னார்கள். ஆனால், உண்மை நிலை வேறு. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்...(குறுக்கீடு) சொல்லி முடித்துவிடுகிறேன் நான். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், இறுதியிலே இதைச் சொல்ல இருக்கிறார்கள். 1991-லே cash loss என்பது, 1991-லே 61 கோடி ரூபாய். 1992-லே 57 கோடி ரூபாய்; 1993-லே, 34 கோடி ரூபாய்; 1995-லே 60 கோடி ரூபாய்; 1996-லே minus 71 crores. ஆக, முன்பு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, 142 கோடி ரூபாய் cash, plus level-லே இருந்தது. Loss அல்ல. ஆனால் 1996-97-லே cash loss 130 கோடி ரூபாய்; 1997 ஆம் ஆண்டு 59 கோடி ரூபாய் நட்டம். 1998 ஆம் ஆண்டு 21 கோடி ரூபாய் நட்டம். 1999 ஆம் ஆண்டு 149 கோடி ரூபாய் நட்டம். 2000 ஆம் ஆண்டிலே, 75 கோடி ரூபாய் நட்டம். ஒட்டுமொத்தமாக கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்திலே, 674 கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டதே; அந்தத் தகவல் தரப்பட்டிருக்கிறதே; புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்திலே cash loss என்பது இல்லை. 142 கோடி ரூபாய் இலாபம் ஏற்பட்டிருக்கிறது. இறுதி ஆண்டிலே 71 கோடி ரூபாய்; எல்லா ஆண்டுகளிலும் இது இலாபத்திலே ஓடி இருக்கிறது. இந்தப் புள்ளிவிவரத்தை, இறுதியிலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரிவாகக் கூறுவார்கள்.

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையின் அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. பொன்முடி.

**டாக்டர் க. பொன்முடி:** அவர் விவரமாகச் சொல்லட்டும்; பொன்முடியால் ஒழிந்துபோச்சு என்று ஆதாரம் சொன்னால், நான் திருப்பி ஆதாரத்திற்குப் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடைசியில், 75 கோடி ரூபாய் ரொக்க இழப்பு என்பது, முதன் முதலாக போக்குவரத்துக் கழகத்தில் ஆரம்பித்தது 1995-96-ல் இல்லையா? அதற்கு முன்பு ரொம்ப இழப்பே கிடையாது. போக்குவரத்துக் கழகங்களில் no Cash loss before 1995-96. cash loss was started only in 1995-96. அது உண்மையா இல்லையா?



**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் போக்குவரத்துத் துறை அமைச்சர் சபைக்கு ஏற்கெனவே ஒரு தவறான தகவலை சொல்லி இருக்கிறார். மீண்டும் நான் அவரை கேட்க விரும்புவதெல்லாம், ஏற்கெனவே சபையிலே பேசும்போது, 14-3-2002 ஆம் நாள் இந்த அவையிலே முன்னாள் போக்குவரத்துத் துறை அமைச்சர் சொல்லி இருக்கிறார். தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட மொத்த ரொக்க இழப்பு 75 கோடிதான் என்று குறிப்பிட்டு இருக்கிறார். (குறுக்கீடு) அவருடைய பேச்சை சபைக் குறிப்பிலே இருப்பதை எடுத்து வைத்துக்கொண்டுதான் பேசுகிறேன். இப்போது, நான் அவர் சொன்னதைக்கூட திருப்பி சொல்கிறேன். ரொக்க இழப்பு cumulative loss-ஐ பற்றி நீங்கள் சொல்கிறீர்களே; திரண்ட இழப்பைப் பற்றி நீங்கள் கணக்கு சொல்கின்றபோது, ஏன் cash loss கணக்கைப் பற்றி நீங்கள் தகவல் சொல்லவில்லை; கணக்கு கொடுக்கவில்லை என்று சொல்லி இருக்கிறார். ரொக்க வரவு-செலவைப்பற்றி சொல்ல வேண்டும் என்று சொல்லி இருக்கிறார். சொல்லிவிட்டு, தி.மு.க. ஆட்சியில் 75 கோடி தான் ரொக்க இழப்பு என்று சொல்லி இருக்கிறார். அவர் சொன்னதை நான் அப்படியே படித்துக் காட்டுகிறேன். ரொக்க இழப்பு 2000-2001-ல் கலைஞர் பொறுப்பு ஏற்றிருந்த போது சுமார் 75 கோடி ரூபாய்தான் ரொக்க இழப்பு; மீண்டும் சொல்கிறேன். ரொக்க இழப்பு 75 கோடி ரூபாய்; நிதி அமைச்சர் அவர்களே, நீங்கள் சரி பார்த்துக்கொள்ளுங்கள்; ரொக்க இழப்பு 75 கோடி ரூபாய் தான். மொத்தம் 3 தடவை அழுத்தம் திருத்தமாக சொல்லி இருக்கிறார். அவருக்கு நான் இப்போது சொல்லிக்கொள்ள விரும்புகிறேன் நிதி அமைச்சர் இப்போது சொல்லி இருக்கிறார். அதையேதான் திருப்பிச் சொல்கிறேன். ஏற்கெனவே 1996-97-ல் 180.18 கோடி ரூபாய் உங்களுடைய ஆட்சிக் காலத்திலே ரொக்க இழப்பு. 1997-98-ல் 59.3 கோடி ரூபாய் ரொக்க இழப்பு. 1998-99-ல் 211.05 கோடி ரூபாய். 1999-2000-ல் 149.03 கோடி ரூபாய். 2000-2001 ஆம் ஆண்டு மட்டிலும்தான். நீங்கள் செல்கின்றபோது 75 கோடி ரூபாயே தவிர, அதற்குமுன்பு 4 ஆண்டுகாலம் யாருடைய ஆட்சி நடந்தது? உங்களுடைய ஆட்சிதானே நடந்தது. அப்போது மொத்தம் உங்களுடைய ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட நட்டம், ரொக்கக் கணக்கில், ரொக்க இழப்பு 674.99 கோடி ரூபாய் ஏற்பட்டு இருக்கும்போது, நீங்கள் எப்படி 75 கோடி ரூபாய்தான் எங்களுடைய ஆட்சி காலத்தில் இழப்பு என்று சொல்கிறீர்கள்? இது முழு பூசணிக்காயை சோற்றில் மறைத்த கதையாக

இல்லையா? (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் சொல்லப்போனால், (குறுக்கீடு) முழுவதையும் சொல்லிவிடுகிறேன்; இவ்வளவு பெரிய இழப்பை ஏற்படுத்திவிட்டு 75 கோடி ரூபாய் மட்டும்தான் நட்டம் என்று ஒரு மாயத் தோற்றத்தை, ஒரு தவறான தகவலை சொல்லி இருப்பதால், உங்கள்மீது நடவடிக்கைகூட எடுக்க முடியும். இருந்தாலும், தாங்கள் உங்கள் தவறான தகவலை திருத்திக் கொள்ள வேண்டும் என்றுதான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கணேசன், 5 மணித் துளியில் முடித்துவிடுங்கள் (குறுக்கீடுகள்)

**டாக்டர் க. பொன்முடி:** 2000-2001-ல் 75 கோடி ரூபாய் என்று படித்து இருக்கிறார் என்றுதான் நான் சொன்னேன். நான் ஆர்கியூமென்ட்டில் சொல்கிறபோதுகூட, நீங்கள் கடைசி வருடம் சொல்கிறபோது 75 கோடி இருந்தது. நாங்கள் 2000-2001-ல் போகும்போது 75 கோடி இருந்தது. அதைத்தான் நான் சொன்னேனே தவிர—நான் எல்லா அறிக்கையிலேயும் கொடுத்து இருக்கிறேன். என்னுடைய அறிக்கைகள் அத்தனையிலும் எங்கள் 5 ஆண்டு காலத்தில் ஏற்பட்ட cash loss 700 கோடி ரூபாய் அளவுக்கு இருக்கிறது என்பதைச் சட்டமன்றத்திலே பேசி இருக்கிறேன்; அறிக்கைகளிலே கொடுத்து இருக்கிறேன். வேண்டுமானால் போக்குவரத்துத் துறை அமைச்சர் சரியாகப் பார்த்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓராண்டுக்கு மட்டும் ஏற்பட்ட நட்டத்தைச் சொல்லி விட்டு, உங்களுடைய மொத்த 5 ஆண்டு காலத்திலே ஏற்பட்ட நட்டத்தை நீங்கள் ஏன் சொல்லவில்லை? (மேசையைத் தட்டும் ஒலி) முதல் 4 வருடம் யாருடைய ஆட்சி நடந்தது? அதுவும் தி.மு.க. ஆட்சிதான். உங்களுடைய ஆட்சிதானே இருந்தது. மொத்தம் 5 ஆண்டு காலத்தில் 674 கோடி ரூபாயை முழுங்கிவிட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் கொஞ்சம்கூட—அம்மா அவர்கள் சொன்னதுபோல, கொஞ்சம்கூட மனசாட்சியே இல்லாமல் பேசுகிறீர்கள் என்பதைத்தான் நான் வருத்தத்தோடு சொல்ல வேண்டியிருக்கிறது; மனசாட்சி இருந்தால்தானே உங்களைப்பற்றி வருத்தப்படுவதற்கு, (குறுக்கீடுகள்) இல்லாதவர்களிடம் நாங்கள் என்ன சொல்வது?

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொன்னார்கள்; நீங்களும் விளக்கம் சொன்னீர்கள். இரண்டு பேர்களுடைய விளக்கமும் அவைக்குறிப்பிலே இருக்கிறது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். கணேசன், 5 மணித் துளிகளில் உரையை முடித்துவிடுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். பொன்முடி நீங்கள் சொன்ன விளக்கம் ஏற்கெனவே அவைக்குறிப்பில் இருக்கிறது; அவ்வளவுதான். (குறுக்கீடுகள்) நீங்கள் மறுபடியும் பேசினால், மறுபடியும் அமைச்சர் பதில் சொல்லுவார். (குறுக்கீடுகள்) கணேசன். (குறுக்கீடுகள்)

பிற்பகல் 1-35

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதனால்தான் மறுபடியும் சொல்கிறேன். அன்று நான் சொன்னது நிதி அமைச்சருக்கும் தெரியும். அன்று நான் சொன்னது இரண்டு ஆட்சிகளின் கடைசி ஆண்டுகளையும் ஒப்பிட்டுக் காண்பித்தேன். மொத்த இழப்பு 700 கோடி ரூபாய் என்பதை இவராவது 698 கோடி என்று சொன்னார், நான் சொன்னது சுமார் Cash loss சுமார் 700 கோடி இருக்கிறது என்பதைச் சட்டமன்றத்திலேயும் சொல்லியிருக்கிறேன். வெளியிலேயும் சொல்லியிருக்கிறேன். 5 ஆண்டுகளிலே ஏற்பட்டது ரூ.700 கோடி என்று சொல்லியிருக்கிறேன். ஆனால், நான் கேட்டது, ரொக்க இழப்பைச் சொல்லாமல் திரண்ட இழப்பை மட்டும் சொல்லிக் கொண்டிருக்கிறீர்களே, ஏன் என்றுதான் அன்றுகூட நான் கேள்வி கேட்டேனே தவிர— இது நடந்தது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கணேசன், 5 மணித் துளிகளில் பேசி முடியுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** ** என்று சொல்வது தவறான கருத்து. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஐ. கணேசன் அவர்கள் தவறான வாதத்தை வைக்கிறார்கள். அதை அவைக்குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

---

****மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.**

**திரு. ஐ. கணேசன்:** எடுத்துவிடுங்கள் சுமுகமாக நடந்தால் சரி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்வது உண்மையாக, போக்குவரத்துக் கழகம் இலாபத்தில் ஓடவேண்டும் என்பதுதான். இந்த நாட்டுக்கு 400, 500 கோடி ரூபாய் இழப்பு வந்து, மருத்துவத்திற்கு, கல்விக்கு மற்ற நிர்வாகங்களுக்கு போகக்கூடிய பணம், ஏழை எளியவர்களுக்கு போக வேண்டிய பணம், அநியாயமாக, போக்குவரத்துத் துறையின் நிர்வாகச் சீர்கேட்டினால் போய்விடுகிறது என்று மனம் வெதும்பி, ரொம்ப சித்ரவதைப்பட்டு நான் உங்களுக்குச் சொல்கிறேன். இதிலே யாரையும் எதற்கும், நான் புண்படுத்திச்சொல்ல வேண்டும் என்ற எண்ணம் எனக்கு இல்லை. தயவுசெய்து என்னுடைய உண்மையான ஆதங்கத்தை, நியாயமான திராவிட உணர்வு உள்ள இரண்டுபேரும் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக மீண்டும் நான் உங்களுக்கு சொல்லிக்கொள்வதெல்லாம் ஒன்றே ஒன்றுதான். எந்தக் காரணத்தை முன்னிட்டும் ஒரு பஸ்ஸைக் கூட தனியாருக்கு விட்டுவிடக்கூடாது என்பதனை ஆணித்தரமாக, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய நிர்வாகத்தினுடைய சீர்கேட்டினால்தான் இவ்வளவு பெரிய நட்டம் வருகிறது. தனியாருடைய மிகச் சிறந்த நிர்வாகத்தின் காரணமாகத்தான் பல இலட்சக்கணக்கான ரூபாய் செலவு செய்து ரூட்டை வாங்கி, கோடிக்கணக்கிலே செலவு செய்து ரூட்டை வாங்கி, அவ்வளவு முதலீடு போட்டு இலாபத்தை ஈட்டும்போது, நமது அரசாங்கம் அதே வழித் தடத்திலே பஸ்ஸை விட்டு, ஏன் நட்டத்திற்கு வருகிறது என்பதை சிநதித்துப் பார்த்து, அந்த நட்டத்தையெல்லாம் சீர்செய்ய அரசு அதிகாரிகளை அழைத்து, வண்டியினுடைய நிர்வாகத்தை சீராக்க வேண்டும்; சீர்செய்ய வேண்டுமென்று சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, தனியாருடைய பஸ்—இந்த அவையிலே இருக்கக்கூடிய 234 சட்டமன்ற உறுப்பினர்களையும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.—எங்கேயாவது, எப்போதாவது, விரைவுப் பேருந்து, தனியாருடைய பேருந்து நின்றதைப் பார்த்திருக்கிறீர்களா? ஆனால், நம்முடைய அரசாங்க பஸ் எத்தனை இடங்களிலே நின்றிருக்கிறது? ஏன் பொது மக்கள் நம்முடைய அரசாங்க பஸ்ஸிலே ஏற மறுக்கிறார்கள்? அரசாங்க பஸ்ஸிலே ஏறினால்தானே வருமானம் வரும். வருமானம் வந்தால்தானே மக்களுக்கு ஒரு படி



அரிசி 3 ரூபாய் 50 காசுக்கு விற்க முடியும்? அதற்கு வரி போடாமல் இருக்க முடியும்? மருத்துவத்திற்கு ஆயிரமாயிரம் கோடி ரூபாய் செலவு செய்ய முடியும்? நாம் பெற்றேடுக்கக்கூடிய குழந்தைகளுக்கு நல்ல கல்வியைத் தர முடியும்? அந்த உணர்வுள்ள அந்த மக்களை அந்த உணர்விலே திரட்ட வேண்டியது இந்த அரசாங்கத்தினுடைய கடமை அல்லவா? சிந்தித்துப் பாருங்கள். (மணியடிக்கப்பெற்றது) தயவுசெய்து 1971-வது ஆண்டு வரை அரசாங்க பஸ்ஸாக போக்குவரத்துத் துறையின்கீழ் இருந்த அந்தப் பேருந்துகள் போக்குவரத்துக் கழகங்களுக்கு 1971ஆம் ஆண்டு ஒப்படைக்கப்பட்டன.

பிற்பகல் 1-40

1974 வரை அரசாங்கத்தினுடைய சம்பள விகிதம் அப்படியே இருந்தது. தற்போதைய நிதியமைச்சர் போக்குவரத்துத் துறை அமைச்சராக வந்தபோது 1977-லே அரசாங்கத்தில் பணியாற்றக் கூடியவர்களுக்கு கொடுக்கக்கூடிய சம்பளத்தைவிட மிக அதிகமான சம்பளத்தை போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு 1977 வரை கொடுத்துக் கொண்டு இருந்தார்கள். ஆனால் பிறகு ஜப்பான் திட்டம் என்ற ஒரு திட்டத்தைக் கொண்டு வந்து 3 ஆண்டு காலத்திற்கு ஓர் ஒப்பந்தம் என்று தொழிலாளர்களுக்கு கொண்டு வந்து, 1980, 1983, 1986, 1989, 1992, 1995, 1998 வரை ஒப்பந்தம் போடப்பட்டது. அந்த 1998 வரை போட்ட ஒப்பந்தத்திலே படிப்படியாக அந்தத் தொழிலாளர்களுடைய சம்பளம் அப்படியே குறைந்து வந்து, இன்று அரசாங்கத்திலே பணியாற்றக்கூடிய கார், ஜீப் ஓட்டக்கூடிய அந்தப் போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு கொடுக்கக்கூடிய சம்பளமும், 60 பேரிலிருந்து, 100 பேர் வரை ஏற்றிச் செல்லக்கூடிய, அந்த உயிர்களை எல்லாம் கொண்டு செல்கிறானே, அந்தக் தொழிலாளிக்கு வழங்கக்கூடிய சம்பளமும், மலைக்கும், மடுவுக்கும் உள்ள வித்தியாசம். அதே கர்நாடகத்திலே . . . (மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2 மணித்துளியில் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** அண்ணா, முடியாது அண்ணா. ஒரு 5 நிமிடம் இதுவரைக்கும் நான் எதுவுமே பேசவில்லை. தலைவர் சொன்னதற்கு அப்படியே கட்டுப்பட்டு இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரியாக 5 நிமிடத்தில் முடித்து விடுகிறீர்களா?

**திரு. ஐ. கணேசன்:** சரி, முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது மணி 1-41.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை, பாதி வைத்துவிட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1-46-க்கு முடித்துவிடுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** சரி. முடித்துவிடுகிறேன். நான் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி.

**திரு. ஐ. கணேசன்:** கர்நாடகத்திலே தொழிலாளர்களுக்கு 13,932 ரூபாய் சம்பளம் கொடுக்கிறார்கள். ஆனால் தமிழ்நாட்டிலே 7,500 ரூபாய்தான் சம்பளம் வழங்கப்படுகிறது. 20 ஆண்டுகாலம் பணியாற்றினால்கூட ரூ.7,500-க்கு மேல் சம்பளம் செல்லவில்லை. இதையெல்லாம் சட்டமன்ற உறுப்பினர்கள் சிந்திக்க வேண்டாமா? கர்நாடகத்திலே இருக்கக்கூடியவனுக்கு ரூ.13,932 சம்பளம் இன்றைய போக்குவரத்துத் துறை, இந்த அரசாங்கம் கொடுத்த அறிக்கையில் இதிலே நீங்கள் பார்த்துக்கொள்ளுங்கள். நான் எதற்காகவும் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. எனக்கு அந்த அவசியம் இல்லை.

தமிழ்நாட்டிலே கட்டணம் 28 பைசா. இந்தியாவிலே குறைந்த கட்டணம் முன்னால். இந்த பஸ் கட்டணம் உயர்த்துவதற்கு முன்னால், இன்று தமிழ்நாட்டைவிட குறைவு கர்நாடகத்திலே, 25.75 பைசா. யாரோ ஒருவர் சொன்னார், தமிழ்நாட்டிலேதான் ரொம்ப குறைவு என்று. இல்லை தப்பு. கர்நாடகத்திலே 25.75 பைசா. இதையும் நான் சொல்லவில்லை தலைவரே, நீங்கள் கொடுத்த புக் தான். இந்த டேபிள் மேலே வைத்த புக் தான். அதை இப்போது இலாபத்திலே ஓட்டிக்கொண்டு இருக்கிறார்கள் என்பதனைச் சொல்லி, அதிகாரிகளிடத்திலே எல்லாம் சொல்லி, பஸ் வழியிலே நிற்பதைத் தடுக்க, நல்ல முறையில் நிர்வாகத்தை முடுக்கிவிட வேண்டும். பொதுமக்களிடத்திலே ஒரு நம்பிக்கை பெறவேண்டும், அரசாங்க பஸ். பொதுமக்களிடத்திலே நம்பிக்கை பெற்றால்தான் நல்லது, நம்முடைய பஸ். நாம் அந்த பஸ்சிலே போனால்தான் நம்முடைய குழந்தைகள் படிப்பதற்கு பணம் கொடுப்பார்கள் அரசாங்கம் என்ற ஓர் உணர்வினை ஊட்டவேண்டும். அந்த அளவிற்கு பொதுமக்களுக்கு ஒரு



விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டுமென்று நான் உங்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

ஓர் ஆண்டிற்கு அரசு அதிகாரிகள் 1,740 மணி நேரம் வேலை செய்கிறார்கள். 1,740 மணி நேரம் அரசு ஊழியர்கள் வேலை செய்கிறார்கள். ஆனால் தொழிலாளர்கள் எத்தனை மணி நேரம் வேலை செய்கிறார்கள் தெரியுமா தலைவரே? 2,496 மணி நேரம் ஒரு ஆண்டிற்கு பணியாற்றுகிறார்கள். சிந்தித்துப் பாருங்கள். 1,740 மணி நேரம். இங்கே 2,496 மணி நேரம். இதையெல்லாம் நீங்கள் உணராமல், அந்த பஸ் டிரைவருக்கும், கண்டக்டருக்கும் கொடுக்கிற சம்பளம்தான் அதிகம். அதனாலேதான் நட்டம் என்று சொல்வது தப்பு. நிர்வாகச் சீர்கேடு இருக்கிறது. நிர்வாகக் குறைபாடு இருக்கிறது. நிர்வாகத்தில் பல கொள்ளைகள் இருக்கிறது. அதனால்தான் போக்குவரத்துத் தொழில் நட்டத்தில் இருக்கிறது. அந்த நட்டத்தை நிச்சயமாக இந்த ஆண்டிலிருந்து, நிவர்த்தி செய்து—சென்ற ஆண்டு தி.மு.க. ஆட்சியிலே 4, 5 கார்ப்பரேஷன் இலாபத்திலே ஓடியது. 21-லே மீதி 16, 17 கார்ப்பரேஷன்கள் நட்டத்திலே இருந்தன. இந்த ஆண்டு 21 கார்ப்பரேஷன்களும், நல்ல வருவாயை ஈட்ட வேண்டும் என்று முழு மனதோடு வாழ்த்தி, இந்தப் போக்குவரத்துத் துறையிலே இலாபத்தை ஈட்ட வேண்டும்—நான் சொல்லவில்லை. நம்மை உருவாக்கிய, உங்களை உருவாக்கிய, பேரறிஞர் பெருந்தகை, அறிவுலக மேதை, அறிவுக்கடல், அறிஞர் அண்ணா கண்ட கனவு இது. அந்தக் கனவை நனவாக்க நீங்கள் பாடுபட வேண்டும். போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு சென்ற ஆண்டுவரை 20 சதவீதம் போனஸ். ஆனால் இந்த ஆண்டு, இத்தனை மணி நேரம் கஷ்டப்படக்கூடிய அந்தத் தொழிலாளர்களுக்கு . . .

பிற்பகல் 1-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்து விடுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** முடித்துவிடுகிறேன். 8.33 சதவீதம்தான் அளிக்கப்பட்டது. மீதி கருணைத் தொகையாக வைத்து, அம்மா அரசு, 11.67 சதவீதத்தை உடனடியாக அந்தத் தொழிலாளர்களுடைய குடும்பங்களினுடைய பரிதாப நிலையைக் கருதி அளிக்க வேண்டும்.

அதேபோல, போராட்டத்தில் இடைநீக்கம் செய்யப்பட்டவர்கள், நீதிமன்றத்திற்குச் சென்று உத்தரவினைப் பெற்றும், பணி வழங்கப்படாமல் இன்னும் நிறையப் பேர் விடுபட்டிருக்கிறார்கள். அவர்களை உடனடியாகப் பணியமர்த்த வேண்டும்.

அடுத்ததாக, இடமாற்றம் செய்தவர்களை—பழி வாங்கப்பட்டது என்று அல்ல தயவுசெய்து, அதை மாற்றி, அவர்களை அந்த இடத்திலேயே போட வேண்டும்.

அதேபோல, 2001-ல் வழங்க வேண்டிய பொங்கல் இனாம் 625 ரூபாயை—தயவுசெய்து, இரண்டு நிமிடங்களில் முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, வேண்டாம். நேரமாகி விட்டது.

**திரு. ஐ. கணேசன்:** இரண்டு நிமிடங்களில் பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் போய்விட்டு வரவேண்டும். திரும்பவும் 4.30 மணிக்கு வரவேண்டும். இரண்டு மானியக் கோரிக்கைகள் இருக்கின்றன. அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும். சீக்கிரம் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** முடித்து விடுகிறேன். ரூ.625-ஐ—அந்த செயல்திறன் ஊக்கத் தொகை ரூ.625-ஐ வழங்க வேண்டும். 2001 ஊதிய ஒப்பந்தத்தை உடனடியாக நீங்கள் பேசித் தீர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், தொழிலாளர்கள்மீது போடப்பட்டுள்ள அனைத்து வழக்குகளையும் வாபஸ் வாங்க வேண்டும்.

மே தினத்தின்போது நம்முடைய தமிழக முதலமைச்சர் அம்மையார் அவர்கள், 'தொழிலாளர்களுடைய வாழ்க்கைத் தரத்தை மேம்பாடு அடையச் செய்தல் என்பதனை எனது தலைமையிலான அரசு தனது குறிக்கோளாகக் கொண்டுள்ளது' என்று மே தின உரையிலே, சிறப்பாக உரையாற்றினார்கள். இதையெல்லாம் தொழிலாளர்களுடைய நலனில் அக்கறை கொண்ட இந்த அரசு, அவர்களுடைய 6 அம்சக் கோரிக்கையை உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டும் என்று சொல்லி..... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணியாகி விட்டது. உரையை முடித்து விடுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** ஒரே நிமிடத்தில் முடித்து விடுகிறேன். உங்களுக்காகத்தான் நான் பேசுகிறேன்.



நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் பட்ஜெட் உரையிலே, 2,275 புதிய பேருந்துகளை வாங்க அரசு முடிவு எடுத்துள்ளது என்று சொல்லியிருக்கிறார். நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். 2,275 புதிய பேருந்துகள் ரூ.227.50 கோடி ரூபாய்க்கு வாங்குவதாக அறிவித்திருக்கிறார்கள். அதிலே 300, 400 பேருந்துகள் விட்டிருக்கிறார்கள். மீதியை விடும்போது சென்ற முறை சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்று இரண்டு bus-ஐ வழங்கினார்கள். (குறுக்கீடு) இரண்டு route-ஐ வழங்கினார்கள். நமக்குக் கொடுக்கவில்லை. Route வழங்கினார்கள். இரண்டு Bus route-ஐ வழங்கினார்கள். இந்த முறை, சபாநாயகர் அவர்களே, உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் 3 bus route (குறுக்கீடு) பேசும்போதே 'கோவிந்தா' என்றால் எவன் கொடுப்பான்? (சிரிப்பு) 3 route வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்கள் M.L.A.-க்கள் எல்லாம் தொகுதியிலே தலைநிமிர்ந்து நடக்க வேண்டும். அந்த இரண்டு Bus routes-ஐ விடும்போது எங்களுக்கெல்லாம் என்ன வரவேற்பு கிடைத்தது தெரியுமா? (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கணேசன், உரையை முடியுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** முடித்து விடுகிறேன். அந்த வகையிலே நீங்கள் bus விட வேண்டும்.

ஒன்றே ஒன்று, ஒரே நிமிடத்தில் முடித்து விடுகிறேன். எடப்பாடி தொகுதி பற்றி ஒன்றுகூடச் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை பிறகு வைத்துக்கொள்ளலாம்.

**திரு. ஐ. கணேசன்:** இதுவரைக்கும் நான் பேசவில்லை. ஒன்றே ஒன்றைச் சொல்லி முடித்துவிடுகிறேன். எடப்பாடியிலிருந்து சென்னை வரை வந்து சென்று கொண்டிருந்த அந்த bus-ஐ நிறுத்தியிருக்கிறார்கள். ஏன் நிறுத்தினார்கள் என்று தெரியவில்லை. உடனடியாக அந்த bus-ஐ மீண்டும் விடவேண்டும்.

அதேபோல, மீதம் 2, 3, 4 கோரிக்கைகளை நான் உங்களிடம் எழுதிக் கொடுத்திருக்கிறேன். லாரி உரிமையாளர்கள் 13 கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அந்த லாரி உரிமையாளர்கள் மிக மிகக் கஷ்டப்படுகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே திரு. சிவராஜ் பேசியிருக்கிறார். அமைச்சரிடம் கொடுத்துவிடுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். என்று சொல்லி—ஐயா, அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டார்கள். நான் கடைசியாக சொல்கிறேன். பொன் முட்டையிடும் வாத்தை அறுத்துவிடாதீர்கள் என்று சொன்னதால் உங்கள் மனம் புண்பட்டிருக்கலாம். ஆனால், திராவிட உணர்வுள்ள எந்த ஒரு மனிதனும்—பேரறிஞர் அண்ணா அவர்கள். இந்த அவையிலே எத்தனை முறை கர்ஜித்திருக்கிறார். அவரது உணர்வுகள் 40 ஆண்டு காலம் இந்தத் தமிழ்நாட்டு மண்ணிலே விதைக்கப்பட்டிருக்கிறது. ஆகையாலே, அண்ணாவின் பெயராலே கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல்* 1-50

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். இதயத்திலே ஏந்திய அந்த அண்ணாவின் பெயரிலே கேட்டுக்கொள்கிறேன். ஒரு வழித்தடத்தையாவது பிரைவேட்டில் தனிப்பட்டவர்களுக்கு விட்டீர்களானால், அது அண்ணாவுக்கு துரோகம் செய்ததாக அர்த்தம் என்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக சொல்லி, விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் மாலை 4-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-50 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

*பிற்பகல்* 4-30

பிற்பகல் 4-30 மணியளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் **திரு. அ. அருணாசலம்** அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. கோபிநாத் அவர்கள்.



***THIRU K. GOPINATH:** Hon. Deputy Speaker, Sir, First I should say thanks to you, for giving me this opportunity to talk in the Transport Demand. Last time, when I spoke in Telugu, Hon. Members had difficulty in understanding my language. This time, I am going to talk in Tamil. If I make any mistake kindly excuse and allot me more time to talk. Transport is the backbone of our country. நான் நினைக்கிறேன் இப்போது தமிழிலே பேசிவிடலாம் என்று. காரணம், நான் last time தெலுங்கிலே பேசும்போது நம்முடைய திராவிட கழகத்தைச் சேர்ந்த members நிறைய பேர்—sorry திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய members நிறைய பேர் அதற்கு மறுப்புத் தெரிவித்தார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் நன்றாக, அழகாகத் தமிழிலே பேசுகிறீர்கள், அப்படியே பேசுங்கள்.

**திரு. கே. கோபிநாத்:** அதுதான் நான் முன்னாலேயே சொன்னேன். If I make any mistake, kindly excuse. தமிழுக்கு நான் விரோதியும் அல்ல. நான் தமிழுக்கு opposition கிடையாது. But தமிழ் எங்களுக்குத் தெரியாது. நான் இந்த அவையிலே என்ன பேசினாலும் அது பதிவாகிறது. அதிலே தவறு இருந்தால் அது பதிவாகிவிடக் கூடாது என்பதுதான் நான் தெலுங்கிலே பேசுவதற்கு காரணமே.

இன்றைக்கு டிரான்ஸ்போர்ட் நிலைமையைப் பொறுத்தவரையிலும் ஒரு சின்ன பிரச்சினையானாலும் சரி, ஸ்டிரைக் ஆனாலும் அரசியல் பிரச்சினையானாலும்சரி, அல்லது village-லே சின்னச்சின்ன பிரச்சினையானாலும்சரி, strike ஆனாலும்சரி, முதலிலே பாதிக்கப்படுவது நம் டிரான்ஸ்போர்ட்தான். முதலிலே பாதிக்கப்படுவது நம்முடைய டிரான்ஸ்போர்ட். நம்முடைய டிரான்ஸ்போர்ட்டைப் பொறுத்தவரையிலே இன்றைக்கு நல்ல service கொடுக்கிறது ஒரு பக்கம். Service மட்டுமல்லாமல் ஒரு அளவுக்கு finance-லேயும் நமக்கு இன்றைக்கு டிரான்ஸ்போர்ட் co-operate பண்ணுகிறது. அதே நேரத்திலே நம் அமைச்சர் அவர்கள் கிட்டத்தட்ட 16,797 vehicles இன்றைக்கு on the road இருக்கிறது என்று அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். But இன்றைக்கு காலையிலே பேசும்போது, மாண்புமிகு ஒரு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். டிரான்ஸ்போர்ட்டை தனியார்மயம்—privatisation பண்ணக்கூடாது என்று. தனியார் மயம் privatisation பண்ணுவதுகூட, இருக்கிற பேருந்துகளை கொடுக்காமல் கிட்டத்தட்ட 16,000 permits private operators-க்கு நாம் கொடுக்கிற மாதிரி இருந்தால்,

ஒரு நல்ல ஆரோக்கியமான போட்டி ஏற்படும். Corporation-க்கும் சரி as well as private-க்கும் சரி ஒரு நல்ல competition இருக்கும். அந்த competition இருக்கும்போது நல்ல service கிடைக்கும். We can give a very good service.

அதேநேரத்திலே இன்றைக்கு டிரான்ஸ்போர்ட் பொறுத்தவரையிலே நல்ல நிர்வாகம் that is administration, maintenance plus road, basically. இந்த மூன்றும் நல்லபடி இருந்தால்தான் இந்த டிரான்ஸ்போர்ட் ஆனது நல்லபடியாக இருக்கமுடியும். ஆனால் நம் அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலும் நம் ரோடு என்பது மட்டும் நாம் private கையிலே கொடுத்து contract மூலமாக நல்ல ரோடு இன்றைக்கு நாம் போட்டுக்கொண்டிருக்கிறோம். நல்ல roads நாம் develop பண்ணிக்கொண்டிருக்கிறோம். ஆனால் maintenance of the transport--ஐப் பொறுத்தவரை நமது அரசாங்கம் கையிலே நாம் வைத்துக்கொண்டிருக்கிறோம். என்னுடைய கருத்தெல்லாம் ஏன் அந்த maintenance என்பதை private-க்குக் கொடுக்கக்கூடாது? இன்றைக்கு private--ல் பார்க்கும்போது நன்றாக maintain பண்ணுவதற்கு private operators-இடம் நல்ல powers இருக்கிறது. அதை நாம் பண்ணலாம். இன்றைக்குப் பெரிய பெரிய டிரான்ஸ்போர்ட்டிலே அந்தக் காலத்திலிருந்து இந்தக் காலம் வரை பெயர் வாங்கிய, like T.V.S., then V.S.T. இந்த மாதிரி மோட்டார்ஸ் எல்லாம் இருக்கின்றன. அதைப் போல நாம் பண்ணலாம்.

பிற்பகல் 4-35

அதேமாதிரி இன்றைக்குப் பார்த்தீர்கள் என்றால், நமது financial crisis-னாலே இன்றைக்கு இருக்கிற நமது அரசாங்கம் புது பஸ் விட முடியாத காலத்திலே, ஸ்டேஜிலே நாம் இருக்கிறோம். புது பஸ் விட முடியாத காரணத்தினாலே நமது பக்கத்து State-லே கர்நாடகாவிலேயும் சரி, ஆந்திராவிலேயும்சரி சென்று பார்த்தோம் என்றால் நிறைய Bus routes - Government routes. நிறைய பஸ்கள் புது பஸ்கள், பிரைவேட்டில் கொடுத்து, கிலோ மீட்டர் basis-ல் fix பண்ணியிருக்கிறார்கள். அதாவது, ஒரு நாளைக்கு ஒரு வண்டி 250 கிலோ மீட்டர் தான் ஓடும் அந்த ரூட்டிலே. 250 கிலோ மீட்டர் ஓடிய அந்த ரூட்டிற்கு உண்டான வண்டி, புது வண்டி, ஒரு தனியாருக்குக் கொடுக்கிறார்கள். அந்தத் தனியாருக்கு நாம் கிலோ மீட்டருக்கு இவ்வளவு basis என்று fix பண்ணி பணம் கொடுத்தால் கிட்டத்தட்ட இன்றைக்கு 250 கிலோ மீட்டர் ஓடக்கூடிய வண்டி



கிட்டத்தட்ட 3,500-லிருந்து 4,000 ரூபாய் வரை வசூல் காட்டுகிற சூழ்நிலை இப்போது இருக்கிறது. ஒரு கிலோ மீட்டருக்கு கர்நாடகாவிலே ஒரு பஸ்ஸிற்கு பிரைவேட்டிற்கு கிலோ மீட்டருக்கு 9 ரூபாய் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இங்கே நாம் 10 ரூபாய் கொடுத்தால்கூட 250 கிலோ மீட்டருக்கு 2,500 ரூபாய்தான் நாம் தனியாருக்குக் கொடுக்கின்றோம். மீதி, 1,000-லிருந்து 1,500 ரூபாய் இருப்பு காட்டுகிறது. net-லேயே. அந்த 1,500 ரூபாயிலே நம்முடைய சார்பிலே இருக்கின்ற conductor-க்கு சரி, administration-க்கும் சரி 250, 300 ரூபாய் போனால்கூட, கிட்டத்தட்ட 1,000-லிருந்து 1,200 ரூபாய் இப்போது ஒரு பஸ்ஸுக்கு நமக்கு save ஆகக்கூடிய சூழ்நிலையை கொண்டு வரலாம்.

அதேபோல நான் last time Assembly-யில் பேசும்போதுகூட சொன்னேன். நமது தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் சேல்ஸ் டாக்ஸ் 13% இருக்கிறது. பக்கத்து ஸ்டேட்டான கர்நாடகாவிலே 4% தான் இருக்கிறது. அதாவது 10 wheel chasis-க்கு நமது கவர்ன்மென்ட் சேல்ஸ் டாக்ஸினாலே, நமது ஸ்டேட்டில் இருக்கின்ற நிறைய ஆப்பரேட்டர்கள், கர்நாடகாவிலும்சரி, பாண்டிச்சேரியிலும்சரி chasis அங்கே பர்ச்சேஸ் பண்ணுகிறார்கள். அவர்கள் அப்படி பர்ச்சேஸ் பண்ணும்போது நமக்கு வரக்கூடிய இந்த 4 சதவிகிதம் வருவதில்லை plus road tax நமக்கு வருவதில்லை. அதேமாதிரி கர்நாடகாவிலே இருக்கின்ற chasis அங்கே இருக்கின்ற லாரி ஓனர்ஸ் அங்கே ரெஜிஸ்ட்ரேஷன் பண்ணி பெரும்பாலும் நமது தமிழ்நாட்டிலே தான் வண்டி இன்றைக்கு operate பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். நமது தமிழ்நாட்டிலே operate பண்ணும்போது ஒரு வருடத்திற்கு, 2,380 ரூபாய் மட்டும் நமக்கு tax வருகிறது. ஆனால், கர்நாடகாவிலே பிரைமரியாக அவர்கள் ரெஜிஸ்ட்ரேஷன் பண்ணுவதால், கிட்டத்தட்ட 10,850 ரூபாய் ஒரு வருடத்திற்கு அவர்கள் benefit enjoy பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இதை நாம் சிந்தித்தால் கண்டிப்பாக பல கோடி ரூபாய் நமது ஸ்டேட்டிற்கு வர ஒரு நல்ல வாய்ப்பு இருக்கிறது.

அதேபோல இந்த Inter State Agreement என்பது முதன்முதலிலே 1-5-1973-லே போடப்பட்டது between Tamil Nadu and Karnataka. அதற்குப் பிறகு 12-6-1975-ல் மீண்டும் ஒரு agreement போடப்பட்டது. கிட்டத்தட்ட 20 years gap-லே 7-12-1995-லே ஒரு draft agreement மட்டும்தான் போடப்பட்டிருக்கிறது. ஆனால், இன்றைக்கு இருக்கின்ற இதே அரசாங்கம், 1995-ல் இருந்த அரசாங்கம், அது என்ன

காரணத்தினாலே என்று தெரியவில்லை, அந்த அரசாங்கம் பண்ணிய ஒரு draft scheme-ஐ அடுத்தபடியாக வந்த ஆட்சி, அதில் சில மாற்றங்கள் செய்து மீண்டும் 3-8-1998-ல் வெறும் draft agreement தான் போட்டார்கள். அந்தக் காரணத்தினாலே கர்நாடகாவில் இருக்கின்ற சில ஆப்பரேட்டர்கள், சில பஸ் அதிபர்கள், கோர்ட்டிலே வழக்குப் பதிவு செய்து அது இப்போது stay-யிலே இருக்கிறது. In case அந்த stay vacate ஆகிவிட்டால், கிட்டத்தட்ட 150 வண்டிக்குண்டான வரி, நாம் கர்நாடகாவிற்கு செலுத்த வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்படும். அப்படி இல்லையென்றால், நமது வண்டிகள் அத்தனை வண்டிகளுமே, நமது பார்டரில் நிற்க வேண்டிய ஒரு மோசமான சூழ்நிலை வந்துவிடும். தயவுசெய்து மாண்புமிகு டிரான்ஸ்போர்ட் அமைச்சருக்கு ஒரு சின்ன request. இதை நீங்கள் கொஞ்சம் deep ஆக பார்க்கவேண்டும். நமது அறிக்கையில் சொல்லி இருக்கிறீர்கள், அது நல்ல process-ல் போய்க்கொண்டிருக்கிறது என்று. இன்னும் கொஞ்சம் fast-ஆக செய்தால், immediate-ஆக between Tamilnadu and Karnataka agreement முடிந்துவிட்டால் private Bus Operators பார்க்கும்போது நம்முடைய தமிழ்நாட்டை பொறுத்தவரையில் எட்டு ஆப்பரேட்டர்ஸ், கர்நாடகாவை பொறுத்தவரை 12 ஆப்பரேட்டர்ஸ்தான் benefit enjoy பண்ணுகிறார்கள். இங்கே அப்படி நடக்காத காரணத்தினால், stay vacate-ஆனால் இன்று இருக்கின்ற பல கோடி ரூபாய் நம்முடைய தமிழ்நாடு கவர்மென்ட் கர்நாடகாவுக்கு கட்ட வேண்டிய சூழ்நிலை ஏற்படும். தயவுசெய்து அதை கொஞ்சம் நீங்கள் பார்க்க வேண்டுமென்று ஒரு வேண்டுகோள்.

பிற்பகல் 4-40

அதே மாதிரி, நம்முடைய Transport Department-ஐ பொறுத்தவரை Transport Commissioner, அவர்களுக்குக் கீழே Joint Transport Commissioner அதற்குக் கீழே Deputy Transport Commissioner என்று கிட்டத்தட்ட Zonal Level-ல் 6 D.T.C.-கள், S.T.C. level-ல் 3 D.T.C.-கள் இருக்கிறார்கள். கிட்டத்தட்ட 9 D.T.C.-கள் நம்முடைய தமிழ்நாடு அளவில் இருக்கிறார்கள். இந்த 9 D.T.C.-கள் நமக்குத் தேவையா என்பதை நீங்கள் deep-ஆக பார்க்க வேண்டும். காரணம், இந்த D.T.C.- Deputy Transport Commissioner-க்கு எந்தவித வேலையும் கிடையாது. ஏற்கெனவே இருந்த அரசாங்கத்திலே R.T.As- இடமிருந்த powers-ஐ D.T.C. பார்த்துக்கொண்டிருந்தார். It has come back to



R.T.A. இன்று District Collectors கையில் போய் இருக்கிறது. ஏனென்றால் இன்றைக்கு D.T.C.ஐ பொறுத்தவரையில் they are simply keeping quite. தயவுசெய்து இந்த D.T.C. post நமக்கு தேவையா? அதைக் கொஞ்சம் பார்க்க வேண்டுமென்பது ஒரு வேண்டுகோள்.

அதேமாதிரி சேலம் கார்ப்பரேஷனில் கடந்த ஆட்சியாளர்களால் NTUC-ஐச் சேர்ந்த 85 workers நீக்கப்பட்டுவிட்டார்கள். INTUC-ஐச் சேர்ந்த 85 workers Labour Court-க்குப் போய் அங்கே கேஸ் அவர்களுக்குச் சாதகமாக வந்தது. அதற்குப் பிறகு திரும்ப High Court போனார்கள். அதற்குப் பிறகு Supreme Court-க்கு போனார்கள்—they had gone to Supreme Court. Even Supreme Court-ல்கூட அவர்களுக்குச் சாதகமாக ஒரு தீர்ப்பு கொடுக்கப்பட்டது. இப்படி Supreme Court-ல் தீர்ப்பு கொடுத்தும்கூட இன்றுவரை அந்தத் தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கவில்லை. தயவுசெய்து அதைக் கொஞ்சம் நீங்கள் பார்க்க வேண்டும்.

அதேபோல, last strike-ல் that means, between 9-11-2001 and 26-11-2001 strike நடந்தது. அந்த strike period-ல் ~INTUC plus 6 Unions, combined-ஆக அந்த strike நடந்தது. 23 ஆம் தேதி INTUC வாபஸ் பெற்றுக்கொண்டது. இந்த அரசாங்கத்தின் மேல் நம்பிக்கையோடு வாபஸ் பெற்றுக்கொண்ட அந்த INTUC-யானாலும் சரி, மற்ற யூனியன்களானாலும் சரி, இதுவரை அவர்களுக்கு எதுவும் நல்லபடியாக நடக்கவில்லை. தயவுசெய்து அதைக் கொஞ்சம் பார்க்க வேண்டும்.

அதேபோல, இந்த National Highways-ல் Accident Zone-ல்—National Highway-4, National Highway-7, National Highway 45 and 46—Accident Trauma Care Centres-க்கு ரூ. 3.38 கோடிக்கு நம்முடைய அரசாங்கம் செலவு செய்ய இருக்கிறது. நம்முடைய அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். அதிலே, especially, நம்முடைய ஓசூர் பொறுத்தவரையில், 68 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்ததற்காக என்னுடைய சார்பிலும் சரி, என்னுடைய மக்கள் சார்பிலும் சரி, நான் இந்த அரசாங்கத்திற்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்தபடியாக பார்த்தீர்கள் என்றால், என்னுடைய தொகுதியில், ஓசூரில், Joint Venture-ல் there is a company called Asian Bearings கிட்டத்தட்ட 20 வருட காலமாக அந்த கம்பெனி ஓசூரில் இயங்கிக் கொண்டிருக்கிறது. அந்த Joint Venture-ல் ஆகஸ்ட் 2000-ல் ஒரு settlement போட்டார்கள். அந்த settlement போட்ட பிறகு,

படிப்படியாக அந்த workers-க்கு நிறைய pressurise பண்ணி இன்றைக்கு அதனுடைய நிலைமை என்னவென்றால், மாதத்திற்கு 15 நாள் மட்டும் வேலை கொடுக்கிறார்கள். மீதி 15 நாள் வேலையில்லை அங்கே. நான் என்னுடைய சார்பிலே நம்முடைய Industries Minister-க்கும் சரி, Labour Minister-க்கும் சரி, விடுக்கும் ஓர் அன்பான வேண்டுகோள் என்னவென்றால் நம்முடைய கவர்ன்மென்ட் share எவ்வளவு இருக்கிறது அந்தக் கம்பெனியில் என்று தெரியவில்லை. அதே மாதிரி இன்றைக்கும் சரி, மாதத்திற்கு 5 கோடி ரூபாய் turnover ஆகிற அந்தக் கம்பெனி 15 நாட்கள் மட்டும்தான் labourers-க்கு வேலை கொடுத்துக் கொண்டிருக்கிறது. மீதி 15 நாட்கள் வேலை கொடுக்கவில்லை. அதைவிட மோசமான நிலைமை என்னவென்றால் L.I.C. Loan, P.F.-Provident Fund. இன்னமும் கீழே போனால், E.S.I பணம் கட்டாமல் இருக்கிறார்கள். அந்த நிர்வாகம் E.S.I. பணம் கட்டவில்லை. அந்த E.S.I.-க்கு செலுத்த வேண்டிய தொகையை 4 மாதத்திற்கு, 5 மாதத்திற்கு ஒரு தடவை செலுத்துகிறார்கள். அந்தக் காரணத்தினால் இன்றைக்கு workers-ம் சரி, அவர்களுடைய family-யும் சரி, ESI hospital-க்கு போனால், அவர்களுக்கு அங்கே treatment கொடுக்க முடியாது என்று சொல்கிறார்கள். அதைச் சொல்லி வெளியே அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். தயவுசெய்து immediate-ஆக, நம்முடைய Labour Minister Plus Industries Minister இரண்டு பேர்....
(மணியடிக்கப்பெற்றது)

பிற்பகல் 4-45

நான் தெலுங்கை விட்டுவிட்டு, தமிழிலே முதன்முதலாக கன்னிப் பேச்சைப பேசுகிறேன். தலைவர் அவர்களே இரண்டு நிமிடத்தில் முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 15 நிமிடம் கொடுத்து விட்டேன்.

**திரு. கே. கோபிநாத்:** தமிழிலே நான் பேசுகிற கன்னிப் பேச்சு, கொஞ்சம் அனுமதியுங்கள். அதேபோன்று உடனடியாக அந்த Asian Bearings நிருவாகத்தை கூப்பிட்டு என்ன நிலைமை என்று நாம் தெரிந்து கொள்ள வேண்டிய சூழ்நிலை இருக்கிறது.

அதேபோன்று என்னுடைய தொகுதியான ஓசூரில், Central Excise மூலமாக ரூ. 471 கோடி per annum Central Excise-க்கு வந்து



கொண்டிருக்கிறது. அதைப்போல Commercial Tax பார்க்கப் போனால், North Office-ல் 4.5 கோடி, South Office-ல் 3.5 கோடி. ஆக total per month 8 கோடி ரூபாய் வருமானம் நமக்கு வந்துகொண்டிருக்கிறது. அதில் பார்த்தால் 80 percent Industries, 20 percent தான் traders Total amalgamate tax எவ்வளவு என்று பார்க்கப் போனால் per annum ஓசூரில் மட்டும் கிட்டத்தட்ட 432 கோடி ரூபாய் இன்றைக்கு அரசாங்கத்திற்கு வந்து கொண்டிருக்கிற சூழ்நிலை இருக்கிறது. ஆனால், அந்த ஓசூரிலேயே 3 வருட காலமாக, நிறைய industries sick-ல் இருக்கின்றன. அந்த Industries-க்கு உண்டான subsidy கொடுக்கவில்லை. ஓசூர் தாலுகாவிலிருந்து கிட்டத்தட்ட 360 கோடி ரூபாய் industries மூலமாக நமக்கு வந்து கொண்டிருக்கிற நிலையில்கூட, அங்கே கொடுக்க வேண்டிய சலுகை, நாம் announce பண்ணிய சலுகை, அநத subsidy நாம் கொடுக்காமல் இருக்கிற காரணத்தால் இன்றைக்கு நிறைய இண்டஸ்ட்ரீஸ் நம் ஸ்டேட்டை விட்டு பக்கத்து ஸ்டேட்டுக்கு போகிற ஒரு சூழ்நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. காரணம், இன்றைக்கு ஆட்டோமொபைல் லைனை எடுத்துக் கொண்டால், —very few; countable-தான். இந்த ஆட்டோமொபைல் லைனில் பெரிய பெரிய நிறுவனங்கள் பின்னால் கீழே இருக்கிற மிகச் சிறிய ஆக்சலரீஸ் கம்பெனிஸ் எல்லாம் கூட இன்றைக்கு நம் ஸ்டேட்டை விட்டு, பக்கத்து ஸ்டேட்டான கர்நாடகாவிற்கு போய்க் கொண்டிருக்கின்றன. இன்றைக்கு இந்தியாவிலேயே, சௌத்திலே நெம்பர் 1 ஆக போய்க் கொண்டிருக்கிற டி.வி.எஸ். விக்டர், டி.வி.எஸ். நிர்வாகம், விக்டர் என்பது நெம்பர் 1-லே போய்க் கொண்டிருக்கிறது. ஆனால் அதே டி.வி.எஸ்-ஐ சேர்ந்த ஒரு கம்பெனி பக்கத்து ஸ்டேட்டான மைசூருக்கு ஷிப்ட் பண்ணி விட்டார்கள், இங்கே subsidy இல்லை என்ற காரணத்தினால். தயவுசெய்து நம்முடைய கவர்ன்மென்ட் சிந்தித்து subsidy கொடுத்தால் மீண்டும் நம் இண்டஸ்டிரீஸை டெவலப் பண்ண நல்ல வாய்ப்புக் கிடைக்கும்.

அதேமாதிரி இன்றைக்கு especially ஓசூரில் கிட்டத்தட்ட 103 கம்பெனிகள் sick-ல் இருக்கின்றன. அதில் 80 சதவீதம் கம்பெனிகள் மூடப்பட்டன. இன்றைக்கு நிறைய workers— போன வருடம் 3,682 ரேசன் கார்டு transfers கேட்டிருக்கிறார்கள். ஓசூரிலிருந்து இந்த வருஷம் கிட்டத்தட்ட 5,000 ரேஷன் கார்டுகள் transfer கேட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தப் பிரச்சினையைப் பார்க்கப் போனால் ஓசூர் பூராவிலுமே it will become a zero. தயவுசெய்து immediate-ஆக ஒரு முறை நம் Transport Minister plus Industries Minister as well as Labour Minister

ஓசூர் வந்தால், அந்த இன்டஸ்ட்ரீஸ் மேனேஜ்மென்ட்டையும் லேபர் யூனியனையும் கூப்பிட்டுப் பேசினால் கொஞ்சம் நன்றாக இருக்கும் என்ற வேண்டுகோளை வைத்து, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். ஏதாவது தவறு இருந்தால் தயவுசெய்து மன்னிக்கவும், சார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் கோபிநாத் அவர்கள் கன்னிப் பேச்சுக்கு முக்கியத்துவம் கொடுத்து 18 நிமிடங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. இராமு.

**திரு. ந. இராமு:** "தாயில்லாமல் நானில்லை

தானே எவரும் பிறந்ததில்லை

எனக்கொரு தாய் இருக்கின்றார்

என்றும் என்னை காக்கின்றார்

அந்தத் தாயில்லாமல் நானில்லை"

சந்தனமே! தென் பொதிகை தவழ்ந்து வரும் இளம் காற்றே! மங்காத சுடர் விளக்கே! நறுமணத்துப் புதுமலரே! கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்னும் பண்பை கண்போல் காத்திட கற்பித்த பெருந்தகையே! சிங்கத் தமிழர்களின் சிந்தையெல்லாம் பறி கொண்டு வங்கக் கடலலைகள் தாலாட்ட சந்தனப் பேழையில் கண்ணுறங்கும் புரட்சித் தலைவனே, உங்களின் புனித வாரிசாய் என்னை வாழவைத்து, வழி நடத்திச் செல்லும் கழகத்தின் காவல் தெய்வம், கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், மனித புனிதவதி, மக்கள் தலைவி, தமிழகத்தின் நிரந்தர முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி, உங்களின் புனித பொற்பாதம் தொட்டு பணிந்து வணங்கி எனது கன்னிப் பேச்சைத் தொடங்குகிறேன், தாயே!

பிற்பகல் 4-50

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவரால் உருவாக்கப்பட்ட இந்த மாபெரும் இயக்கத்தை அழிக்க வேண்டும், ஒழிக்க வேண்டும் என நினைத்தவர்கள் மத்தியில், கழகத்தைக் காப்பாற்ற, அம்மா நீங்கள் பட்ட வேதனைகளையும், சோதனைகளையும் இந்த மாமன்றத்தில் பல உறுப்பினர்கள் எடுத்துரைத்தார்கள்.



இருந்தபோதிலும் புரட்சித் தலைவர் அவர்களால் அடையாளம் காட்டப்பட்ட ஓரே காரணத்திற்காக, இந்த இயக்கத்தையும், இந்த இயக்கத் தொண்டர்களையும் காப்பாற்ற, 28 நாட்கள் சிறையில் அடைக்கப்பட்டு வதைக்கப்பட்டீர்கள். ஆனால், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதல்வர் திரு. கருணாநிதியைக் கைது செய்தபோது, அவரைப் போலீசார் கைது செய்ய முடியாமல், அவரது சொந்தங்கள், மனைவிகள், பிள்ளைகள், பேரன்கள், சொந்த பந்தங்கள், மைத்துனர்கள் என்று சொல்லி ஏராளமான பேர் தடுத்து நிறுத்தினார்கள். போலீசாரையே அவமானமாகப் பேசி, காவல் துறை அதிகாரிகளையே முகத்தில் ஓங்கி அடித்ததையும் இந்த நாடே மறக்காது; மறக்கவும் முடியாது. ஆனால், புரட்சித் தலைவரால் உருவாக்கப்பட்டு, புரட்சித் தலைவி அம்மா அவர்களால் வழிநடத்திச் செல்லப்படுகின்ற, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் 1½ கோடி உறுப்பினர்கள் இருந்தும், அம்மா, உங்களுக்காக, என் போன்ற தொண்டர்கள் இலட்சோப இலட்சம் பேர்கள், சிறையில் அடைக்கப்பட்டாலும், உங்களுக்காக எந்தச் சொந்தம் தாயே, தடுக்க வந்தது? அந்தக் கொடுமையான நிகழ்வுகளை எண்ணிப் பார்க்கின்றபோது தாயே, எங்களுக்காக வாழும் உங்களுக்காக, எங்களது நாடி நரம்புகள் சூடேறி, தற்கொலைப் படைகளாக மாற வேண்டும் என்கின்ற எண்ணம்கூட வந்தது தாயே. ஆனால், அம்மா, மற்றவர்கள் போல் எங்களுக்குத் தாங்கள் பாடம் சொல்லித் தரவில்லையே; அன்பு, அறிவு, துணிவு என்ற ஒழுக்கமான பாடத்தைத்தானே சொல்லித் தந்தீர்கள். அதனால்தான் அமைதியாக உள்ளோம். ஆனால், அத்தோடு நிறுத்திக்கொள்ளாமல், 4 இடங்களில் வேட்பு மனுக்களைத் தள்ளுபடி செய்து, வேட்பு மனு தாக்கல் செய்யப்போகும்போது, வேட்பு மனு வாங்கும் அதிகாரிகள் உட்கார்ந்துகொண்டுதான் வாங்க வேண்டும் என்கின்ற ஓர் உத்தரவைப் போட்டு, அதிலே சுகம் கண்டவர்களை, சென்னைப் பாலத்தின் ஊழலிலே கைது செய்து நடவடிக்கை எடுத்தபோது, தாயுள்ளத்தோடு வயதை மனதில் கொண்டு, உடனே விடுதலை செய்து, தாய்ப்பாசம் என்ன என்பதை நயவஞ்சகம் படைத்தவர்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கினீர்கள், தாயே.

அதேநேரத்தில் மாண்புமிகு உறுப்பினர், அண்ணன் அன்வர் ராஜா அவர்கள் சொன்னதுபோல், புரட்சித் தலைவி என்பதற்கு எடுத்துக்காட்டாக, மத்திய அமைச்சர்கள் என்ற மமதையில்

அடாவடித்தனம் செய்தவர்களான இரண்டு மத்திய அமைச்சர்கள் மீதும் நடவடிக்கை எடுத்து, வீரத்தாய், புரட்சித் தலைவி என்று நிலை நாட்டியவர் அல்லவா நீங்கள்!

அம்மா, இத்தனை சூது சூழ்ச்சிகளையும், வஞ்சகங்களையும் தூள் தூளாக்கி, புரட்சித் தலைவர் அவர்கள் சொன்னதுபோல், 'மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு' என்ற அடிப்படையில்,

'ஏய்ப்பவருக்கே காலம் என்று எண்ணிவிடாதே,
பொய் எத்தனை நாள் கைகொடுக்கும் மறந்துவிடாதே.
ஒருநாள் இந்த நிலைமைக்கெல்லாம் மாறுதல் உண்டு.
அந்த மாறுதலைச் செய்வதற்குத் தேர்தல் உண்டு'

என்று சொல்லி, தமிழகம் முழுவதும், தாங்கள் தங்கள் உடல் நலத்தைக்கூடப் பொருட்படுத்தாமல், இன்று நம்மைவிட்டுப் பிரிந்து நிற்கும் கூட்டணித் தோழர்களுடன் சேர்ந்து சூறாவளிச் சுற்றுப் பயணம் செய்தீர்களே அம்மா. தமிழகத்திலே ஆண்ட அரசு தனது மகனுக்கு மகுடம் சூட்டுவதற்காக, சென்னையிலே கேள்விக்குறியான பாலங்களைக் கட்டியிருக்கிறாரே தவிர, இன்னமும் கிராமங்களிலே வாழ்ந்துவரும் ஒதுக்கப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், வஞ்சிக்கப்பட்ட மக்கள், ஓலைக் குடிசைகளைக் கட்டிக் கொண்டு, கதவுகளே இல்லாமல், கிழிந்த சாக்குகளையும், கிழிந்த வேஷ்டி, சேலைகளையும் கட்டித் தொங்கவிட்டுக் கொண்டு, அடிப்படை வசதிகளே இல்லாமல் அல்லல்பட்டு வருகின்றார்கள். எனவே, இருண்ட ஆட்சியை ஒழித்துக்கட்ட தமிழகத்தில் மீண்டும் புரட்சித் தலைவர் ஆட்சியைக் கொண்டுவர, இரட்டை இலைக்கு வாக்களியுங்கள் என்று சொல்லி, எந்த நேரத்திலும், எந்த நொடியிலும், எதிர்க்கட்சிகள் கேள்விகள் கேட்டாலும், உடனுக்குடன் பதில் சொல்லும் பேரறிஞர் அண்ணாவாக, தொப்பி அணியாத புரட்சித் தலைவராக சமூக நீதி காத்த வீராங்கனையாக,

'தவழும் நிலவாம் தங்க ரதம்,
தாரகைப் பதித்த மணி மகுடம்,
குயில்கள் பாடும் கலைக்கூடம்
கொண்டது எனது அரசாங்கம்'

என கர்ஜிக்கும் சிங்கமாக அமர்ந்திருக்கும் தாயே, உங்களைத் தமிழகம் மட்டுமல்ல, உலகமே பாராட்டுகிறது அம்மா.



அடித்தட்டு மக்களுக்கு அதிகாரம், கடைசி மனிதனுக்கு ஜனநாயகம் என்று சொல்லுகின்ற அன்புச் சகோதரர்கள் இவர்களைப் பார்த்து நான் கேட்கின்றேன், உங்களுடைய இந்தக் கேள்விக்கு நான் ஒருவனே பதிலாக இருக்கின்றேன் என்பதை இந்த நேரத்திலே பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்கேயோ கடலூர் மாவட்டம், பெண்ணாடம் கிராமத்திலே ஒரு ஏழை விவசாயக் கூலி குடும்பத்தில் பிறந்த என்னை நகர இளைஞரணிப் பொறுப்பாளராக்கி, மாவட்டக் கழகப் பிரதிநிதியாக்கி, மாவட்டப் பேரவைத் துணைச் செயலாளராக்கி, ஒன்றியக் கழகச் செயலாளராக்கி, சட்டமன்ற உறுப்பினராக்கி, இன்றைக்கு 1½ கோடி உறுப்பினர்கள் கொண்ட இயக்கத்திற்கு மாவட்ட கழகச் செயலாளராக்கி அழகு பார்த்துக் கொண்டிருக்கின்றாரே, எங்களுடைய அன்புத் தாயே, இந்த நிலை போதாதா என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

சின்ன சின்னக் கட்சிகள்கூட ஜாதிகள் பார்க்கும் இந்தக் காலத்தில், ஓர் ஆதிதிராவிடர் அமைச்சராகலாம், வாரியத் தலைவராகலாம், ஆனால், மாவட்டச் செயலாளராக ஆக முடியுமா என்றுள்ள சூழ்நிலையில் தாழ்த்தப்பட்ட சமுதாயமே நன்றிக் கடன்பட்டவர்களாக உள்ளோம் தாயே.

தமிழகத்தில் உள்ள பேருந்துக் கழகங்கள் எல்லாம் நஷ்டத்தில் ஓட்டப்பட்டு வந்துள்ளன. இந்த நஷ்டத்திற்குப் பல காரணங்கள் உள்ளன. ஒன்று, வண்டிகளுக்கு வாங்கப்படும் டயர் அதிகமாக வாங்கப்பட்டுள்ளது. இது தணிக்கையிலே கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஓட்டுநர், நடத்துநர், தொழில்நுட்ப உதவியாளர் ஆகியோர் தேவைக்கும் அதிகமாகப் பணியமர்த்தப்பட்டுள்ளனர். அரசு உயர் அதிகாரிகள் அதிகமாகப் பணியமர்த்தப்பட்டுள்ளனர். அரசு அதிகாரிகளுக்கு வழங்கப்பட வேண்டிய கார்கள் அதிகமாக வாங்கப்பட்டுள்ளன. சிக்கனம் இல்லாமல் அதிகப்படியாக டீசலைப் பயன்படுத்தியுள்ளார்கள்.

மினி பஸ் என்ற பெயரில் பெரிய அளவில் தி.மு.க.-வினருக்குப் பர்மிட் வழங்கப்பட்டு, 4,000 மினி பஸ்கள் விடப்பட்டு அரசுப் பேருந்துகளின் மூலம் அரசுக்கு வரவேண்டிய வருவாய் பாதிக்கப்பட்டுள்ளது. தி.மு.க. ஆட்சியில் அண்ணா தொழிற்சங்கத்தின் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் 1,000-த்திற்கும் மேற்பட்டோர் பெரிய அளவில் பழி வாங்கப்பட்டு, பணி நீக்கம், நிரந்தரப் பணி

நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். மாண்புமிகு அம்மா அவர்கள் தற்போது பாதிக்கப்பட்ட போக்குவரத்து ஊழியர்களுக்கு தாயுள்ளத்தோடு பணி வழங்கி வருகின்றார்கள்.

பிற்பகல் 4-55

விழுப்புரம், அரசு போக்குவரத்துக் கழகத்தில் உள்ள கேன்டீனில் 10 ஆண்டு காலம் பணியாற்றிய கேன்டீன் ஊழியர்கள் 22 நபர்களுக்கு அரசு பணி நிரந்தரம் செய்ய வேண்டுமென்று பரிந்துரை செய்திருந்தது. இதில் 18 நபர்களை நிரந்தரம் செய்து விட்டு, அண்ணா தொழிற்சங்கத்தின் உறுப்பினர்களை நிரந்தரம் செய்யவில்லை. இதில் ஆர். ஞானமூர்த்தி என்ற கேன்டீன் ஊழியரை உதாரணத்திற்கு எடுத்துச் சொல்லலாம். இப்படி பல வகையில் அரசிற்கு இழப்பை ஏற்படுத்தி, போக்குவரத்துக் கழகங்கள் இன்று பின்னுக்கு தள்ளப்பட்டு இருப்பதற்கு, முந்தைய தி.மு.க. அரசுதான் காரணம். பின்னுக்குத் தள்ளப்பட்ட இந்த நிர்வாகத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் ஆய்வு செய்து சிக்கன நடவடிக்கைகளைக் கடைப்பிடித்து தற்போது பேருந்துக் கழகங்களை சரியான நிலைக்குக் கொண்டு வந்து கொண்டிருக்கின்றார்கள். தி.மு.க. அரசு பழிவாங்கும் அரசாக செயல்பட்டது. மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பொது மக்களையும், தொழிலாளர்களையும் காக்கின்ற அரசாக செயல்பட்டு வருகின்றது.

மாண்புமிகு அம்மா அவர்கள் போக்குவரத்துக் கழகங்களை இலாபகரமான நிலைக்கு விரைவில் கொண்டு வருவார்கள் என்று கூறி, 2002-2003-ல் போக்குவரத்துக் கழகங்களுக்கு தமிழ் நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் அளிக்கும் கடன் தொகை மூலம் ரூ. 227.50 கோடி செலவில் 2,275 பஸ்கள் வாங்கத் திட்டமிட்டுள்ளதை பாராட்டி, தாழ்த்தப்பட்ட மாணவியர்களுக்கு இலவச சைக்கிள் வழங்கி அதை இந்த நடப்பாண்டிலும் தொடர அனுமதியளித்ததற்கும், ஆட்சிப் பொறுப்பேற்ற உடனே 44 தடையாணையை மீண்டும் கொண்டு வந்ததற்கும், பாதிக்கப்பட்ட சங்காலிங்கபுரம் மக்களுக்கு நேரடியாகச் சென்று ஆறுதல் கூறி, உதவித் தொகையினை வழங்கியும் வழக்குகளை வாபஸ் செய்த எங்களுடைய அன்பு தெய்வத்திற்கு நன்றி கூறி, தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட மக்களின் தெய்வத்தாயாக விளங்குகின்ற எங்களுடைய கருணைக் கடலே. 'கண்ணை மறைக்கின்ற காலம் வரும்போது தர்மம் வெளியேறலாம்; தர்மம் அரசாளும் தருணம் வரும்போது தவறு வெளியேறலாம்; நல்லவர் இலட்சியம், வெல்வது நிச்சயம்' எனக் கூறி,



புரட்சித் தலைவரால் உருவாக்கப்பட்டு, புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களால் வழிநடத்திச் செல்லப்படுகின்ற இந்த மாபெரும் இயக்கம் ஒரு மாபெரும் எஃகு இரும்புக் கோட்டையாகும். யாராவது இதில் மோத நினைத்தால் அவர்களது தலைகள்தான் தூள் தூளாகும் எனத் தெரிவித்து, வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், என் குல தெய்வம் அம்மா அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அம்மா அவர்களின் ஆணையை ஏற்று எனக்கு வாக்களித்த உளுந்தூர்பேட்டை வாக்காளப் பெருமக்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

கடைசியாகப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி, உளுந்தூர்பேட்டை தொகுதி தமிழகத்தினுடைய மத்தியில் இருக்கிறது. இங்கிருக்கின்ற அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் சென்னையிலிருந்து கன்னியாகுமரி வந்தாலும், கன்னியாகுமரியிலிருந்து சென்னைக்கு வந்தாலும், உளுந்தூர்பேட்டைதான் அதிகமாக விபத்து ஏற்படக்கூடிய பகுதியாகும். எனவே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அங்கே இயக்கப்படுகின்ற மருத்துவமனையை 24 மணி நேர மருத்துவமனையாகக் கொண்டுவர வேண்டுமாய் உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். அசகுளத்தூர் பாலமும், இரண்டாவது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் சிப்காட் தொழிற்சாலை அமைக்கப்பட்டது . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முடித்துவிட்டீர்கள் என்றுதான் கை தட்டினார்கள். (குறுக்கீடு) உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ந. இராமு:** தி.மு.க. ஆட்சியிலே அது விலக்கப்பட்டு இருக்கின்றது. அந்த சிப்காட் தொழிற்சாலையையும், நல்லூர் பாலத்தையும் கொண்டுவரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் உளுந்தூர்பேட்டை தொகுதி மேட்டுப்பகுதி என்பதால் அங்கே தண்ணீர் பற்றாக்குறையாக இருக்கின்றது. எனவே, மாண்புமிகு அம்மா அவர்கள் அந்தப் பகுதியிலே முழுமையாக தண்ணீர் கிடைப்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமாய்க் கூறி வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ நாளொன்றுக்கு 162.31 இலட்சம் பயணிகள் பயன்படுத்தி வந்த ஒரு சேவைத் துறையைத் தனியாருக்கு தாரை வார்க்கிறது என்று கொள்கை குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கின்றது. ஏற்கெனவே, அந்தக் கருத்து, ஆளுநர் உரையிலே உள்ள 36-வது பக்கத்தியிலேயும், அதேபோன்று நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே 25வது பத்தியிலேயும், தனியார்மயமாக்கப்படுவது என்பது சம்பந்தமான கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது கடைசியாக நம்முடைய கொள்கைக் குறிப்பிலே, பேருந்துகளின் இயக்கம் படிப்படியாக தனியார் மயமாக்கப்படும், இதற்கான வழி வகைகளை வகுக்க ஓர் உயர்மட்டக் குழு அமைக்கப்படவுள்ளது என்று சொல்லப்படுகிறது.

இந்த நேரத்திலே நான் ஒன்றை இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த காலத்திலே, 1993 ஏப்ரல் மாதம் 6 ஆம் தேதி போக்குவரத்துக் கழகத்தினுடைய கொள்கை மீது இங்கே ஒரு விவாதம் நடத்தப்பட்டிருக்கிறது. அந்தக் கொள்கைக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது.

*பிற்பகல் 5-00*

"*மாநிலத்தின் எல்லா மூலைமுடுக்குப் பகுதிகளுக்கும் பேருந்து வசதிகள் ஏற்படுத்தவும், பேருந்து வசதிகள் உள்ள பகுதிகளுக்கு இன்னும் அதிகப் பேருந்துகள் விடவும் அரசு உறுதி பூண்டுள்ளது. அதற்கேற்ப மக்களுக்குச் சேவை செய்தல் என்பதை மட்டுமே கருத்தில் கொண்டு, இலாப நட்டங்களைக் கருத்தில் கொள்ளாமல், பெருமளவு மக்கள் பயன் பெறும் வகையில் புதிய பல வழித் தடங்களைத் தாராளமாக இவ்வரசு ஏற்படுத்தி வருகின்றது.*"

1993-லே இப்படிச் சொன்னவர்கள் 2002 வருகிற நேரத்திலே, மீண்டும் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த நேரத்திலே என்ன மாறுதல் ஏற்பட்டது? நாங்கள் தெள்ளத் தெளிவாகச் சொல்கிறோம். உங்களுக்கும் மத்திய அரசுக்கும் என்ன வேறுபாடு? மத்திய அரசு disinvestment என்ற முறையிலே ஒரு கமிட்டியை அமைத்து, இலாபத்தில் நடந்து கொண்டிருந்த தொழில்களை எல்லாம் அவர்கள் தனியார்மயமாக்கி இருக்கிறார்கள்; அல்லது தனியாருக்கு தாரை வார்த்திருக்கிறார்கள். இந்த அவையிலேகூட நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஒருசில நாட்களுக்கு முன்னால் இதையெல்லாம் பேசினார்கள்.



நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷனைப் பொறுத்த அளவிலே, அதேபோன்று சேலம் உருக்காலையைப் பொறுத்த அளவிலே, ஹிந்துஸ்தான் ஹிந்துஸ்தான் டெலி பிரின்டர்ஸைப் பொறுத்த அளவிலே, மெட்ராஸ் போட்டோ பிலிம்ஸைப் பொறுத்த அளவிலே, மெட்ராஸ் பெர்டிலைசர்ஸ் போன்ற ஸ்தாபனங்களையெல்லாம் தனியார்மயமாக்குவதற்கு இன்றைக்கு மத்திய அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. அவர்கள் இதற்காக Disinvestment Committee என்ற ஒரு கமிட்டியைப் போட்டு, அந்தக் கமிட்டியிடமிருந்து ரிப்போர்ட்டை வாங்கி, இன்றைக்கு இலாபகரமாக நடக்கிற 'பால்கோ' போன்ற நிறுவனங்கள்கூட தனியாருக்கு விடப்படுகின்றன. உங்களுக்கும் அவர்களுக்கும் என்ன வேறுபாடு? நான் என்ன சுட்டிக்காட்ட விரும்புகிறேன் என்றால், மத்திய அரசைத் திருப்திபடுத்துவதற்காக அல்லது மத்திய அரசினுடைய உலகமயமாக்கல், தாராளமயமாக்கல் என்கிற கொள்கைகளுக்கு நீங்கள் கட்டுப்பட்டு, இப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏனென்றால் அவர்கள் ஏற்கெனவே இந்தக் கொள்கையைத்தான் அமல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நேரத்திலே நான் ஒன்றை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இந்தத் துறையை இலாபகரமாக நடத்த முடியும் என்பது எங்களுடைய கருத்து. தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே ஒரு கோஷம் வைக்கப்பட்டிருக்கிறது. Workers' participation in the management— ஆனால், இது கோஷமாக இருக்கிறதே தவிர, இது தொழிலாளர்களை ஏமாற்றுவதற்கு நடத்தப்படுகிற பிரச்சாரமே தவிர வேறல்ல. தொழிலாளர்களை நிர்வாகத்திலே பங்காளியாக வைத்துக்கொண்டு, அந்த ஸ்தாபனத்தை நல்ல முறையிலே நடத்துவது என்கிற முயற்சி இந்திய நாட்டிலே எடுக்கப்படவில்லை. ஆனால், சீனாவிலே அப்படி நடத்தப்படுகிறது. அங்கே ஒரு Management Committee, தொழிலாளர்களுடைய பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு கமிட்டியை உருவாக்கி, அவர்கள் அங்கே நிர்வாகத்தை நடத்திக் கொண்டிருப்பதனால் இலாபகரமாக தொழில்களை நடத்த முடிகிறது. அப்படிப்பட்ட ஒரு நிலையை நீங்கள் இங்கே ஏற்படுத்த வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து.

இந்த நேரத்திலே Central Institute of Road Transport தனியார்மயத்தைப் பற்றி என்ன சொல்லியிருக்கிறது என்பதை நான் இங்கே படித்துக் காட்ட விரும்புகிறேன்.

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [2002 மே 3

"The private operators, being profit-motivated, ignored the interest of the travelling public and the safety of citizens and in some cases disturbed the city life. People in these cities then collectively forced the Government to nationalise the bus operation in these cities. Jaipur, Orissa, Bhopal, Indore, Visakhapatnam, Vijayawada and Srikakulam city bus operations are classic examples of privatisation experiments in India." இது Central Institute of Road Transport ஆராய்ச்சி நடத்திய பிறகு கொடுத்திருக்கிற ரிப்போர்ட். இன்று பல இடங்களில் தனியார்மயமாக்கப்பட்டிருப்பதை தேசியமயமாக்கப்பட வேண்டுமென்று மக்கள் போராடுகிறார்கள். அந்த முறையிலே அரசை நிர்ப்பந்திக்கிறார்கள். அது சம்பந்தமாக அவர்கள் மேலும் சொல்கிறார்கள்.

பிற்பகல் 5-05

"The service level provided by the private operators was far from satisfactory and there were frequent complaints on charging excessive fare, rash driving, rude behaviour of crew, non-adherence to scheduled time tables, non-starting services till the vehicle was full loaded, very poor condition of the vehicle and the resultant breakdowns and over-loading almost twice the capacity of the vehicle, etc."

இதைப்பற்றி ஒரு ஆராய்ச்சி நடத்தியதற்குப் பிறகு Central Institute of Road Transport-ல் Report கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் என்ன சொல்கிறார்கள். அதாவது தனியார்மயம் என்பது கூடாது. அப்படி அவர்கள் தெளிவாக சொன்னதற்குப் பிறகு, மத்தியிலே ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிற அரசை திருப்திபடுத்துவதற்காக, இந்தக் கொள்கையைக் கடைப்பிடிப்பது என்பது தவறு.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே பேசிய நமது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர் திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்கள் சீனாவையும், மற்றதையும் ஒப்பிட்டுப் பேசி, இங்கே குறிப்பிட்டுக்காட்டினார்கள். நான் அவரைப் பார்த்துக் கேட்கிறேன். கேரள மாநிலத்தில் 5,000 ரூபாய் கட்டினால் காலையிலேயே பஸ்ஸுக்கு பர்மிட் கொடுக்கிறார்கள். மேற்கு வங்காளத்திலேகூட இது இருக்கிறது. அப்பொழுது அங்கே உங்கள் நிலை என்ன என்பதை நீங்கள் சொல்ல முடியுமா?



2002 மே 3]

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** கேரள மாநிலத்திலே இப்பொழுது ஆட்சியிலே இருந்துகொண்டிருப்பது திரு. ஏ.கே. அந்தோணி அவர்களுடைய அரசு. எங்கள் அரசு அல்ல. மேற்கு வங்காளத்திலே அவர்கள் வெற்றிகரமாக போக்குவரத்துத் துறையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அங்கே முழுமையாக தேசியமயமாக்கப் படவில்லை. தேசியமயமாக்கப்பட்ட ரூட்களிலே பேருந்துகள் வெற்றிகரமாக நடத்தப்படுகின்றன. அதிலே ஒரு பஸ்கூட இன்னும் தனியாருக்கு தாரை வார்க்கப்படவில்லை.

அதுசம்பந்தமாக நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் மேற்கு வங்காள அரசைப்பற்றி இங்கே சொன்னார். நான் அவருக்குச் சொன்னேன். அங்கே இருக்கிற அரசு தெள்ளத் தெளிவாக மத்திய அரசுக்குப் பணிவது இல்லை என்று அறிவித்து இருக்கின்றது. கள்ளப் பணத்தை வெள்ளைப் பணமாக்க நிதி ஆதாரத்தைக் கண்டுபிடிப்பது என்ற முறையிலே அவர்கள் தெள்ளத் தெளிவாக அறிவித்து, அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். நான் அந்த விஷயத்திற்கு வரவில்லை. நம்முடைய தலைவர் அவர்கள் நேரம் தருவார்களேயானால் நான் அதைப்பற்றி விவாதிக்கத் தயாராக இருக்கிறேன்.

நான் சுட்டிக்காட்ட விரும்புவது, இன்று தனியார் Management என்று சொல்லுகிற நேரத்திலே, நம்முடைய Job reservation என்பது இருக்குமா? அதேபோன்று Job Security என்பது இருக்குமா? அதேபோன்று, இன்று ஒரு இலட்சத்திற்கு அதிகமான மக்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற அந்த வேலைவாய்ப்பு இருக்குமா? இதை இந்த அரசு பரிசீலிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே பணிவன்போடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இங்கே சென்ற வருடத்திலே வெள்ளை அறிக்கை வைக்கப்பட்ட நேரத்திலேயே நான் ஒரு கருத்தைத் தெரிவித்தேன். அதாவது, இந்த வெள்ளை அறிக்கையிலே சுட்டிக்காட்டியிருப்பதையெல்லாம் பார்த்தால், நீங்கள் நாளை உழைப்பாளி மக்கள் தலையிலே கையை வைக்கப்போகிறீர்களோ என்ற சந்தேகம் எங்களுக்கு இருக்கிறது. ஆனால் அன்று நிதியமைச்சர் அவர்கள் நிச்சயமாக இல்லை, உழைப்பாளி மக்கள் தலையிலே கை வைக்கமாட்டோம் என்று சொன்னார். ஆனால் இன்று நடந்து வருகிற நிகழ்ச்சிகளைப் பார்க்கிற நேரத்திலே, அதுதான் நடந்துகொண்டிருக்கிறது என்ற ஐயப்பாடு எங்களுக்கு ஏற்படுகிறது.

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [2002 மே 3

இந்த நேரத்திலே நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த Policy Note-லே 10-வது பக்கத்திலே 31-3-1991 வரை 164.13 கோடி ரூபாய் நஷ்டம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு, 1995-96 வரை ஏற்பட்டு இருக்கிற நஷ்டம் 532.98 கோடி ரூபாய். அதாவது, ரூ. 164.13 கோடி சேர்கிறது. அதற்குப் பிறகு, ஏறத்தாழ 1,627 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. 2,160 கோடி ரூபாய் நஷ்டம் என்று கணக்கு சொல்லப்பட்டிருக்கிறது. நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அன்று 1999-லே நான் சட்டப்பேரவையிலே சொன்னேன்.

பிற்பகல்: 5-10

திராவிட முன்னேற்றக் கழக அரசு அன்றைக்கு எடுத்துக் கொண்டிருந்த நடவடிக்கை தவறு என்று நாங்கள் சுட்டிக்காட்டினோம். அதாவது, எனக்குத் தெரிந்த அளவிலே, இந்த மாநிலத்திலே அரசுப் போக்குவரத்துப் பேருந்துகளுக்குப் பின்னால், மேக்ஸி-கேப் வேன்கள் ஓட்டுவதற்கு அனுமதிக்கப்பட்டது. அதற்குப் பிறகு, மினி பஸ்கள் அனுமதிக்கப்பட்டன. இந்த இரண்டும், எனக்குத் தெரிந்த அளவிலே, நாகர்கோவிலிலிருந்து, களியக்காவிளை வரை 30 கிலோ மீட்டர் தூரம்தான் உண்டு. 30, 32 கிலோ மீட்டர் உள்ள அந்த வழித்தடத்திலே, 800 மேக்ஸி-கேப் வேன்கள் ஓட்டப்பட்டன. அங்கே, கன்னியாகுமரி மாவட்டம் என்பது, பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்திலே, பேருந்துகள் தேசியமயமாக்கப்பட்ட மாவட்டம். அங்கேயிருக்கிற வழித்தடங்களில் தனியார் இல்லை. அந்த மாவட்டத்திலே 800 மேக்ஸி-கேப் வேன்கள், 35 கிலோமீட்டர் தொலைவிலே, அரசுப் பேருந்துகளுக்கு முன்னாலேயும், பின்னாலேயும் ஓட விட்டதன் விளைவாக, அந்தக் கழகம் ஓட்டாண்டியாக மாறியது.

அதேபோன்று, இந்த மாநிலத்திலுள்ள பல்வேறு போக்குவரத்துக் கழகங்கள், அன்றைக்கு ஆட்சிப் பொறுப்பிலே இருந்தவர்கள் எடுத்துக்கொண்ட நடவடிக்கையின் காரணமாக ஓட்டாண்டியாக்கப்பட்டன என்பது எங்களுடைய கருத்து. ஆகவே, இன்றைக்கு இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. "நாங்கள் இந்த fare increase-ஐ ஏற்படுத்தியதற்குப் பிறகு இலாபகரமான நிலைக்கு மாறுவதற்கான வாய்ப்பு இருந்து கொண்டிருக்கிறது". நான் சொல்லவில்லை, கொள்கை விளக்கக் குறிப்பிலே அப்படி சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியென்றால்,



2002 மே 3] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

நீங்கள் கழகத்தைத் தனியார்மயமாக்குவது என்ற கொள்கையைக் கைவிட்டு, இந்த நாட்டிலே இருக்கிற மக்களுக்கு, 1993-லே நீங்கள் சொன்னதைப்போல, ஒரு service sector என்ற முறையிலே, அதை நடத்துவதற்கான நடவடிக்கைகள் எடுப்பது என்பதுதான், இன்றைக்கு இந்த நாட்டிற்கு நீங்கள் செய்கிற மிகப் பெரிய சேவை என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த நேரத்திலே நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புவது என்னவென்றால், ஊழல். அதாவது, அது ஒரு பக்கத்திலே இந்தக் கழகங்களைக் கெடுப்பதற்குக் காரணமாக இருந்தது. அதையும் நாம் மாற்றினால், அதேபோல, தாராளமாகச் செய்யப்படும் அந்த expenditure-ஐயும் நம்மால் குறைக்க முடிந்தது என்றால், நிச்சயமாக போக்குவரத்துக் கழகங்களை இலாபகரமாக நடத்திக் காட்ட முடியும். அதைத் தனியார்மயத்திற்கு விடவேண்டிய அவசியமில்லை. ஆகவே, அரசு அந்தக் கொள்கையைப் பரிசீலிக்க வேண்டுமென்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்குப் போக்குவரத்துக் கழகத்திலே வேலை செய்து கொண்டிருக்கின்ற ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள், மாநிலத்திலுள்ள பல்வேறு பகுதிகளிலே, இந்த உணர்வை, அரசுக்குப் பிரதிபலிப்பதற்கு அவர்கள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அதற்கு முன்னாலே, 80 இலட்சம் கையெழுத்துக்களை இந்த மாநிலத்திலே இருக்கிற மக்களிடமிருந்து பெற்று, மாண்புமிகு அமைச்சர் அவர்களைச் சந்தித்து, அவர்களிடம் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். இன்றைக்கு 80 இலட்சம் மக்களுடைய ஆதரவு இந்த இயக்கத்திற்கு இருக்கிறது என்றால், அதை அரசு பரிசீலிக்க வேண்டாமா? ஆகவே, இந்த நேரத்திலே நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்வது, இந்த தனியார்மயமாக்குவது என்ற அரசின் நிலையை, அரசு வாபஸ் பெறவேண்டும். அது இந்த நாட்டிற்குச் செய்கிற மிக முக்கியமான விஷயம்.

இன்னொன்று, நான் சுட்டிக்காட்ட விரும்புவது, தொழிலாளர்களைப் பொறுத்தளவிலே, இலாபகரமாக நடத்திக் கொள்ள முடியும் என்பதற்கு, கர்நாடகா மாநிலத்திலே ஏற்பட்டிருக்கிற ஒரு நிகழ்ச்சியை நான் இங்கே படித்துக் காட்ட விரும்புகிறேன். அதாவது, Central Institute of Road Transport-யினுடைய வெளியீடு; அவர்கள் சொல்கிறார்கள். அதாவது, K.S.R.T.C., அதாவது Karnataka State Road Transport

Corporation என்பது, 57,000 தொழிலாளர்களைக் கொண்டு, 8,994 பேருந்துகளை வைத்து, 55 இலட்சம் பயணிகளை ஏற்றி, இறக்கி, நடத்திக் கொண்டிருந்த அந்தக் கழகம், இன்றைக்கு இலாபகரமாக நடக்கிற நிலையை ஏற்படுத்த முடிந்திருக்கிறது.

பிற்பகல் 5-15

ஒருகாலத்திலே, அதாவது 13 ஆண்டு காலம் தொடர்ச்சியாக நட்டத்திலே நடந்த அந்தக் கழகம், இன்று இலாபகரமான ஏற்பாட்டிற்குச் சென்றிருக்கிறது. அதற்குக் காரணம், அங்கே இருக்கிற அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள்;

The Chairman of the Board of Bus Corporations R.B. Devaraj and the Vice-Chairman and Managing Director of K.S.R.T.C. told `The Hindu' here today that the turn around was largely due to the commitment of the 57,000 workers. We are also thankful to the Government.

ஆகவே, நான் என்ன சொல்கிறேன் என்றால், அரசினுடைய முன் முயற்சியோடு, தொழிலாளர்களுடைய ஒத்துழைப்போடு, அங்கே அவர்கள் இலாபகரமாக நடத்திக் கொண்டிருக்கிற நிலையைப் பார்க்கிற நேரத்திலே, தமிழகத்திலே அது முடியாதா? அதற்கான முயற்சி நீங்கள் என்ன எடுத்தீர்கள்? நீங்கள் அதற்கான முயற்சியை எடுக்கவில்லை என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. (மணியடிக்கப்பெற்றது)

இரண்டு நிமிடம். ஆகவே, இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புவது, இந்த தனியார்மயமாக்குவது என்ற நிலையை மாற்றிவிட்டு, தொழிலாளிகளுடைய ஒத்துழைப்பை வாங்க வேண்டும். போராடினார்கள், போனஸ் கேட்டார்கள் என்பதற்காக ஆயிரத்திற்கும் அதிகமான தொழிலாளர்களை ஐந்து மாத காலத்திற்கும் மேலாக பழி வாங்குவது என்பது, தொழிலாளர்களுடைய ஒத்துழைப்பைப் பெறுவதற்கு உதவிகரமாக இருக்குமா? அரசு அதைப் பரிசீலிக்க வேண்டாமா? என்ன குற்றம்? அவர்கள் என்ன குற்றம் செய்தார்கள்? கொலை செய்தவனும், கொள்ளை அடித்தவனும் இந்த நாட்டிலே பிரபுக்களாகத் திரிகிறார்கள். ஆனால், இன்று, தொழிலாளர்களைப் பொறுத்தவரையிலே, நான் ஒரு ஜட்ஜ்மென்டைக் காட்டுகிறேன். ஹைகோர்ட்டிலே கொடுக்கப்பட்டிருக்கிற ஒரு ஜட்ஜ்மென்ட். அதாவது, தொழிலாளர்கள் 19 மணி நேரம் ஒரு போக்குவரத்துக் கழகத்திலே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு தொழிலாளி ஒரு நாளைக்கு 19 மணி



நேரம் உழைத்ததற்குப் பிறகும், கழகம் நஷ்டம் என்று சொன்னால், யார் நம்புவார்கள்? இன்று ஹைகோர்ட்டிலே சொல்லப்பட்டிருக்கின்றது;

'Therefore the Writ Petition stands allowed. The Respondent-Corporation is directed to fix the working hours of the drivers strictly in accordance with the provisions of Motor Transport Workers Act as complained.'

(குறுக்கீடு) நீங்கள் படித்துப் பாருங்கள் இந்த ஜட்ஜ்மென்டை. ஆகவே, நான் என்ன சொல்கிறேன் என்றால் ... (குறுக்கீடு) அதைப் படித்துப் பாருங்கள், என்ன சொல்லி இருக்கிறது என்று.

துணைத் தலைவர் அவர்களே, நான் என்ன சொல்கிறேன் என்றால், தொழிலாளர்களைப் பொறுத்த அளவிலே, இன்னும் அவர்களுக்குப் பல்வேறு பிரச்சினைகள் தீர்வு காணப்படாமல் இருந்துகொண்டிருக்கின்றன. அதிகமான வேலைப்பளுவை அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டிருக்கிறீர்கள். வெறும் 20 ரூபாய் சம்பளம், ஒரு நாளைக்கு, ஒரு தொழிலாளிக்குக் கொடுக்கப்படுகிறது, போக்குவரத்துக் கழகத்திலே. இப்படியெல்லாம் தொழிலாளி உழைத்ததற்குப் பிறகும் அவன் போனஸ் கேட்டான் என்ற காரணத்திற்காக, அவனைப் பழி வாங்குவது என்பது சரிதானா? நீதிமன்றத்திலே போய், நீதிமன்றத்திலே உத்தரவு பெற்று, வேலை கொடுக்க வேண்டுமென்று சொன்னவர்களுக்குக்கூட வேலை கொடுக்கப்படவில்லை. ஆகவே, அரசு இந்தப் பழி வாங்கும் நோக்கத்தை மாற்றிக் கொள்ளவேண்டுமென்று நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நான் ஒன்றை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்களை யாரெல்லாமோ பழிவாங்க வேண்டுமென்று நினைத்தார்கள். ஆனால், அவர்கள் போராடினார்கள். ஜவஹர்லால் நேரு அவர்கள், அவருடைய autobiography-லே சொல்லியிருக்கிறார். 'Success is to those who dare first and then act'. போக்குவரத்துத் தொழிலாளி அவனுடைய நியாயமான ஒரு கோரிக்கைக்காகத்தான் போராடினான். என்ன கோரிக்கை? 19 மணி நேரம், 18 மணி நேரம், 17 மணி நேரம் உழைக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) எனக்கு ஒத்திவைக்கப்பட்ட ஊதியம் என்ற முறையில், எனக்கு போனஸ் கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டார்கள். சரி, நிதியில்லை. 3,500 ரூபாய் பிறகு கொடுக்கலாம்

என்று சொன்னார்கள். கொடுக்கவில்லை. அதைப்பற்றி அரசு பரிசீலிக்க வேண்டும். அதற்கு முன்னாலே, இந்தப் பழி வாங்கும் நடவடிக்கைக்கு முற்றுப்புள்ளி வைத்து, அவர்களுக்கு உடனடியாக வேலை கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவைப் பெற்று நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே வலியுறுத்திக்கொள்கிறேன்.

பிற்பகல் 5-20

இந்தத் தொழிலாளர்களைப் பொறுத்தமட்டிலே, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்குப் போட்டியாக ஆம்னி பஸ்களும், மினி பஸ்களும் அதிகமாக ஓட்டப்பட்டு, அவர்களுக்கு இன்றைக்கு வருவாய் ஏற்படுத்திக்கொள்ள முடியாத ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. அதைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோன்று, போக்குவரத்து கழகங்களுக்கிடையில் இன்றைக்கு போட்டி ஏற்பட்டு, பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. அதையும் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

அதேபோன்று, போன சட்டமன்றக் கூட்டத்திலேகூட .....
(மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இரண்டு நிமிடத்தில் பேசி முடித்துக்கொள்கிறேன். அன்றைய போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த அவர், 14-10-2000 அன்று சில அறிவிப்புகளைக் கொடுத்தார். அவை இன்னும் அமலுக்கு வரவில்லை. அவற்றை அமல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

அதேபோன்று, இன்று தொழிலாளர்களைப் பொறுத்தளவிலே, கான்டிராக்ட் முறையைப் புகுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அதைக் கைவிட வேண்டும்.

இறந்து போனவர்களுடைய வாரிசுகளுக்கு வேலை கொடுப்பது என்பது கொள்கை அளவிலே ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால், அது இன்னமும் நடைமுறைப்படுத்தவில்லை.

அதேபோன்று மருத்துவ தகுதியின்மையைப் பொறுத்தளவிலே, இன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிற சட்டத் திட்டங்களை மாற்ற வேண்டும்.



9-11-2001 முதல் 25-11-2001 வரை இந்த வேலைநிறுத்தப் போராட்டத்திலே ஈடுபட்டவர்களுடைய ஊதியத்தைப் பொறுத்தளவிலே அரசு பரிசீலிக்க வேண்டும். அவர்களுக்கு போனஸ் 3,500 ரூபாயும், பொங்கல் ஊக்கத் தொகை 625-ரூபாயும் கொடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அதேபோல, 1-9-2001 முதல் அமலுக்கு வரவேண்டிய ஒப்பந்தம் 8 மாத காலம் ஆனதற்குப்பிறகும் அமலுக்கு வராமல் இருக்கிறது. ஏற்கெனவே அரசு மூன்று ஆண்டு காலம் என்பது இல்லை, 5 ஆண்டு காலம் என்ற முறையிலே கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது என்பதாகக் கேள்விப்படுகிறோம். அது சரியல்ல. நான் என்ன சொல்கிறேன் என்றால், எதுவாக இருந்தாலும் அது சம்பந்தப்பட்ட தொழிற்சங்கங்களுடைய பிரதிநிதிகளை அழைத்து சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் பேசி, அவர்களுடன் ஒரு நல்லுறவை ஏற்படுத்துவதற்கான முயற்சி எடுக்கப்பட வேண்டும்.

அதேபோன்று, Retirement Benefit. தொழிலாளர்களைப் பொறுத்தளவிலே பென்ஷன் அறிவிக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் பென்ஷன் சம்பந்தமான Income tax exemption போன்ற ஆர்டர்கள் இன்னும் வாங்கவில்லை. பென்ஷனில் ஏற்பட்டிருக்கின்ற குளறுபடிகளை மாற்றி பென்ஷன் அனைவருக்கும் கிடைப்பதற்கான நிலை உருவாக்கப்பட வேண்டும்.

அதேபோன்று, பென்ஷனைப் பொறுத்தளவிலே Family Pension
(மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் பேச ஆரம்பித்து 24 நிமிடங்கள் ஆயிற்று.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடைசியாக 378 எண்ணுள்ள ஒரு G.O.1974-இலே போட்டு, அன்றைக்கு வேலையிலிருந்த தொழிலாளர்களை அரசிடமிருந்து தனியார் மயமாக்கப்பட்ட நேரத்திலே தனியார் கார்ப்பரேஷனுக்கு விட்ட தொழிலாளர்களுக்குக் கிடைக்கப்பட வேண்டிய terminal benefits இன்னும் கிடைக்கப்படவில்லை.

அதேபோன்று, நம்முடைய Transport Corporation-ல் ஒரே வேலை செய்யக்கூடியவர்களுக்கு பலமுறையிலே சம்பளம் வைக்கப்பட்டு

இருக்கிறது. உதாரணமாக, Tamil Nadu Transport Corporation-ல் Computer Programmers இருக்கிறார்கள். ஒரு கழகத்திலே, அதாவது சென்னையிலே இருக்கிற கழகத்திலே, ரூ.4,490 முதல் ரூ.8,330 வரை சம்பளம் கொடுக்கிறார்கள். மதுரையிலே ரூ.4,490 முதல் கொடுக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம். (குறுக்கீடு) 25 நிமிடம் ஆயிற்று.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதே நேரத்தில் நாகர்கோவிலில் 1,000 ரூபாய் குறைகிறது. அதைச் சரி செய்து கொடுப்பதற்கான நடவடிக்கைகள் இன்னும் வரவில்லை. அந்த நடவடிக்கைகளை எடுத்து தொழிலாளர்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற இப்படிப்பட்ட வேறுபாடுகள் சரிசெய்து கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கெனவே நஷ்டம் என்ற முறையிலே பல வழித்தடங்களிலே ஓடிக்கொண்டிருந்த பேருந்துகள் நிறுத்தப்பட்டு இருக்கின்றன. மீண்டும் அந்தப் பேருந்துகளை ஓட்டுவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டுமென்று.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம் அவர்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு, இந்த பழிவாங்கல் நடவடிக்கைகளைக் கைவிடவேண்டுமென்று மீண்டும் கேட்டுக்கொண்டு, தனியார்மயமாக்குதல் கொள்கையைக் கைவிடவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு வாய்ப்பிற்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதைத்தான் முதலிலேயே சொல்லிவிட்டீர்களே? சிவபுண்ணியம் அவர்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கையின்மீது பேச வாய்ப்புக் கொடுத்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். காலத்தின் அருமை கருதி நான் விரைவாகப் பேசி முடிக்க விரும்புகிறேன்.

போக்குவரத்துத் துறையை தனியார்மயமாக்குவது குறித்து இங்கே பல உறுப்பினர்கள் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். இந்திய கம்யூனிஸ்ட்



கட்சி சார்பிலும் தனியார்மயமாவதை நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம். இதை அரசு உரிய முறையிலே பரிசீலனை செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். போக்குவரத்துத் துறையிலே நட்டம் ஏற்பட்டிருப்பது என்பது உண்மைதான். ஆனால், இந்தப் போக்குவரத்துத் துறை என்பது சேவை மனப்பான்மையோடு நடக்கக்கூடிய துறை. இது, எப்படி கல்விக்காக, மருத்துவத்திற்காக மற்றும் பல துறைகளுக்காக அரசால் பல கோடி ரூபாய்களைச் செலவு செய்து மக்களைப் பாதுகாப்பதற்கான முயற்சி எடுக்கப்படுகிறதோ, அதைப்போலவே இந்தப் போக்குவரத்துத் துறையையும் ஒரு சேவைத் துறையாக மனதிலே வைத்து, அதற்குரிய முயற்சிகளை எடுத்து தனியார்மயமாவது தடுக்கப்பட வேண்டும்.

பிற்பகல் 5-25

அதிலே போக்குவரத்துத் துறையின் மூலமாக பயன்படுபவர்கள் மிகப்பெரிய பாதிப்புக்கு ஆளாவார்கள். குறிப்பாக பள்ளி மாணவர்கள், மாணவிகள் இலவச பஸ் பாஸ் திட்டத்தின் மூலமாக மிகப்பெரிய பலனை அடைந்துகொண்டிருக்கிறார்கள். அப்படியானால் நமது பல்லாயிரக்கணக்கான மாணவ மாணவியர்களுக்கு இந்தச் சலுகை இரத்து செய்யப்படுமானால் என்ன நிலைமை ஏற்படும் என்பதைக் கவலையோடு பரிசீலிக்கவேண்டுமென்று நான் பணிவாகக் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக இப்படி இந்த இலவச பஸ் பாஸ் திட்டத்தின் மூலமாகத்தான் பல மாணவ மாணவிகள், ஏழை எளிய குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய கிராமப் பகுதியிலிருந்து அருகிலே இருக்கின்ற நகரப் பகுதிகளுக்கு வந்து கல்வி கற்பதற்கான ஓர் அரிய வாய்ப்பினைப் பெற்றிருக்கிறார்கள். பல குடும்பங்கள் இதை நம்பி கல்விக்காக பிள்ளைகளை அனுப்பக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அப்படி இது தடுத்து நிறுத்தப்படுமானால் கல்வியே நிறுத்தப்பட்டதாக அர்த்தம் அது. ஆகவே, கல்வியே கிடைக்காத ஓர் இக்கட்டான சூழ்நிலைக்கு ஆளாக்கப்படுவார்கள் என்ற அபாயம் இருக்கிறது. ஆகவே, கல்விக் கண் திறக்கப்பட வேண்டும் என்பதற்காக நாம் போராடுகிறோம். அதற்காக முயற்சிகள் எடுக்கிறோம். பல நூறு கோடி ரூபாய் செலவு செய்துகொண்டிருக்கும்போது, கல்வி கிடைக்காத ஓர் இக்கட்டான நிலை ஏற்பட்டுவிடும் என்ற அந்த அபாயத்தை எப்படி சரி செய்வது? இதைப்பற்றியெல்லாம் அரசு சிந்திக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதைப்போல முதியோர்கள். இன்னும் பல்வேறு தரப்பைச் சேர்ந்தவர்களுக்கு மிகப்பெரிய பாதிப்பாக இது அமைந்துவிடும். ஆகவே, இதுகுறித்து ஆளுநர் உரையிலே குறிப்பிட்ட விஷயங்களை இங்கே அன்புக்குரிய, மாண்புக்குரிய உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். ஆளுநர் உரையிலே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருப்பது, சில வழித்தடங்கள் படிப்படியாக தனியார்மயமாக்கப்படும் என்றுதான் சொல்லப்பட்டது. இன்றைக்கு குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கின்ற அந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே அதையேதான் குறிப்பிட்டிருக்கிறீர்கள். 2002-2003 ஆம் ஆண்டிற்குரிய ஆளுநர் உரையில் 'சில குறிப்பிட்ட வழித்தடங்கள் படிப்படியாக தனியார்மயமாக்கப்படும் என்று சொல்லிவிட்டு, பேருந்துகளினுடைய வகைப்பாடு சொல்லப்பட்டு விட்டு, அதற்குக் கீழே பேருந்துகளின் இயக்கம் படிப்படியாக தனியார்மயமாக்கப்படும். இதற்கான வழிவகைகளைக் காண உயர் மட்டக் குழு ஒன்று அமைக்கப்படும், என்று இருக்கிறது. இப்பொழுது மேலே அந்த வார்த்தையைச் சொல்லி, கீழே பேருந்துகள் வகை சொல்லிவிட்டு, அதன் கீழே சொல்லப்படுகிறபோது இது முற்றிலுமே தனியார்மயமாக்கப் படுவதற்கான முயற்சியாகத்தான் இதிலே பொருள் கொள்ளப்படுகிறது. அப்படிப்பட்ட ஓர் அபாயம் இருந்தால் இதைப்பற்றி என்னவென்று அரசு பரிசீலிக்கவேண்டும்.

இதைச் சொல்லுகிறபோது கொள்கை விளக்கக் குறிப்பிலே கொடுத்துவிட்டு, நாம் எல்லாம் அதைப் படித்துவிட்டு, அதைப்பற்றி கருத்தைச் சொல்லாமல் போய்விட்டால், பின்னாலே நீங்கள் எல்லாம் ஏற்றுக்கொண்டதுதானே என்று ஒரு காலத்திலே வாதம் செய்வதற்கான வாய்ப்புகூட வந்துவிடலாம். ஆகவே, திரும்பவும் இரண்டு செய்திகளை, இரண்டு விதமாகச் சொல்லுகிறபோது இந்த அச்சம் வலுவாக இருக்கிறது. இந்த அரசினுடைய கொள்கை அப்படிப்பட்ட நிலையை நோக்கிச் சென்றுகொண்டு இருக்கிறது என்பதற்குரிய ஆதாரமாக இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே இருப்பதாக நான் கருதுகிறேன். ஆகவே, அரசு அப்படிப்பட்ட சிந்தனைக்குச் செல்லக்கூடாது என்பதை நான் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே ஒரு சுவையான வாதம் நடந்தது. இலாப நஷ்டக் கணக்குகளைப் பற்றிப் பேசினார்கள். நான் கருத்தைச் சொல்ல விரும்புவது நம்முடைய அரசுப் போக்குவத்துக் கழகம் ஆரம்பிக்கப்பட்டு கிட்டத்தட்ட 29 ஆண்டுகள் கடந்து விட்டன. அப்பொழுது



தொடங்கப்பட்டபோது 35 கோடி ரூபாய் செலவிலேதான் அந்தப் போக்குவரத்துக் கழகங்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன. இப்பொழுது அவை படிப்படியாக வளர்ந்து வந்திருக்கக்கூடிய நிலைமையிலே, போக்குவரத்துக் கழகத்தினுடைய சொத்து மதிப்பைப்பற்றிப் பார்க்கின்றபோது, பேருந்துகளுடைய எண்ணிக்கை, பேருந்துகளுக்காக இருக்கக்கூடிய பணிமனைகள்——கிட்டத்தட்ட 300-க்கும் மேற்பட்ட பணிமனைகளுடைய எண்ணிக்கை, அவற்றிற்காக வாங்கப்பட்டிருக்கின்ற தளவாடச் சாமான்கள், இயந்திரங்கள் இவற்றையெல்லாம் கணக்கீடு செய்து பார்த்தால், கிட்டத்தட்ட 5,000 கோடி ரூபாய்க்குரிய சொத்து இருக்கிறது. ஏறக்குறைய 5,000 கோடி ரூபாய் சொத்து மதிப்பீடு இப்பொழுது இருக்கிறது. 35 கோடி ரூபாயிலே தொடங்கப்பட்ட போக்குவரத்துக் கழகம் இப்பொழுது 5,000 கோடி ரூபாய் சொத்து மதிப்போடு இருக்கிறது.

அதைப்போல, இப்பொழுது தனியார்மயமாக்குவதற்கான முயற்சி இருக்கிறது என்று சொல்லப்படுகிறபோது, இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ. கணேசன் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். ஒரு பேருந்திற்குரிய பெர்மிட் வழங்கப்படுகின்றபோது, என்ன தொகைக்கு வழங்கப்படுகிறது என்று. 60 இலட்சத்திலிருந்து 1½ கோடி ரூபாய் வரையிலும் ஒரு பெர்மிட்டிற்குரிய மதிப்பு வருகிறது. 60 இலட்சத்திலிருந்து 1½ கோடி ரூபாய் வரையில் பல வழித்தடங்களுக்குரிய மதிப்பு இருக்கிறது என்று சொன்னால், இன்றைக்கு தமிழ்நாட்டினுடைய அரசு போக்குவரத்துக் கழகங்களிலே இயக்கப்படுகிற, இந்தப் பேருந்துக் கழகங்களுடைய மதிப்பை ஏறக்குறைய வெறும் 50 இலட்சம் ரூபாய், 60 இலட்சம் ரூபாய் என்று மட்டுமே கணக்கிட்டால், அவர் சொன்னபடி ஒரு கோடி, 1½ கோடி ரூபாய் என்று கணக்கிடவில்லை என்று சொன்னால்கூட, 60 இலட்சம் ரூபாய் அல்லது 50 இலட்சம் ரூபாய் என்று கணக்கிட்டால்கூட, நமது தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமாக இயங்கிக்கொண்டிருக்கிற பேருந்துகளுடைய அந்தப் பெர்மிட்டினுடைய மதிப்பு கிட்டத்தட்ட 15,000 கோடி ரூபாய் ஆகிறது. அப்படி என்றால் சொத்தினுடைய மதிப்பு 5,000 கோடி, பெர்மிட்டினுடைய மதிப்பு 15,000 கோடி. கிட்டத்தட்ட 20,000 கோடிக்கான ரூபாயினுடைய மதிப்போடுதான் நமது அரசு போக்குவரத்துக் கழகங்கள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. இலாப நஷ்டக் கணக்கைப் பற்றி இங்கே சொல்கிறார்கள். ஆகவே, நஷ்டக் கணக்கு சொத்தே இல்லாமல் நடைபெறுகிறதா? அப்படியென்று பார்த்தால் 20,000 கோடி ரூபாய்க்குரிய சொத்தோடு இருக்கிற அரசுப்

போக்குவரத்துக் கழகங்கள் இயங்குவதிலே பிரச்சினை இருக்கிறது. பல்வேறு காரியங்கள் இருக்கின்றன. நடைமுறையிலே சிக்கல் இருக்கிறது என்று வேண்டுமானால் சொல்லலாம். நட்டம், நட்டம் என்று ஒரு துறையையே இழுத்து மூடிவிடுவது என்பது எந்த வகையிலே நியாயம்? ஆகவே, 20 ஆயிரம் கோடி ரூபாய் சொத்து இருக்கிற இந்தப் போக்குவரத்துக் கழகத்தை, நட்டத்தில் இயங்குகிறது, இயங்குகிறது, என்று ஒரு வரவு-செலவுக் கணக்கு சொல்லப்பட்டுக் கொண்டேயிருப்பது என்பது அது சரியா, முறையா என்பதைப் பற்றி அரசு சிந்திக்கவேண்டும். இது ஒருவருக்கொருவர் குற்றங்குறைகளைச் சொல்வது என்பது வேறு விஷயம். நான் இரண்டுக்கும் அப்பாற்பட்டு இருந்து, சொத்து மதிப்பீட்டின் மீது இருக்கிற விஷயங்களைச் சொல்கிறேன். ஆகவே, ஒவ்வொன்றையும் இப்படிப் பார்த்தால்தான் அது சரியா, தவறா என்பதைப் புரிந்து கொள்வதற்கான வாய்ப்பாக இருக்கும் என்று கருதுகிறேன்.

பிற்பகல் 5-30

அதேபோல, இந்த 29 ஆண்டுகளில் இந்த 20 ஆயிரம் கோடி ரூபாய்க்குரிய சொத்தை உருவாக்கிக் கொடுத்தது யார்? மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் இங்கே சொன்னார்கள். அதில் அந்தப் போக்குவரத்துத் தொழிலாளர்களுடைய பங்கு இல்லையா? அவன் இரத்த வேர்வை சிந்தி, அவன் உழைப்பின் மூலமாக இதை உருவாக்கியிருக்கிறான். அதை மறந்துவிடவே கூடாது. தொழிலாளர்கள் என்று சொன்னால், ஏதோ ஏளனப்படுத்துவதைப்போல, கொச்சைப்படுத்துவதைப் போல, அவர்களை அலட்சியப்படுத்துகிற போக்கு இருக்கிறது என்று சொன்னால், மிகப் பெரிய வேதனை. அது அவன் இல்லாமல் இது எப்படி உருவானது? 35 கோடி ரூபாயாக இருந்த இந்த சொத்தை, 20,000 கோடி ரூபாயாக உயர்த்திய பெருமை இந்த இலட்சக்கணக்கான தொழிலாளர்களைத்தான் சாரும். இதை மறந்துவிடவே கூடாது, யாராக இருந்தாலும்.

ஒரு இலட்சத்து இருபத்தியேழாயிரம் தொழிலாளர்களுடைய உழைப்பின் மூலமாக உயர்ந்திருக்கிறது இந்த அரசாங்கப் போக்குவரத்துக் கழகங்கள். ஆகவே, போனஸ் கேட்டார்கள் என்பதற்காக, அவன் மீது பழி, அவன் மீது ஒரு குற்றச்சாட்டு. ஏதோ இந்த நாட்டினுடைய விரோதியைப் பார்ப்பதுபோல, அவன் மீது நடவடிக்கை. என்ன நியாயம் இது? அப்படியானால் போக்குவரத்துத் தொழிலாளர்கள் மீது இதுபோன்ற நடவடிக்கை எடுத்துக்கொண்டேயிருந்தால் அது சரியா?



அதைப்பற்றி யோசிக்கவேண்டாமா? 916 தொழிலாளர்கள் மீது வழக்கு. அதைக்கேட்டால் நம்முடைய அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்கிறார்கள். அவர்கள் எல்லாம் கிரிமினல் வழக்கில் இருக்கிறார்கள், போராட்டத்தில் பங்கெடுத்தவர்கள் மீது எல்லாம் நடவடிக்கை வாபஸ் பெறப்பெற்றது என்று பல சந்தர்ப்பங்களில் சொல்லியிருக்கிறார். அவர் இந்தத் துறையைச் சார்ந்த அமைச்சர். அப்படித்தான் பதில் சொல்லமுடியும். ஆனால் அதையும் தாண்டி மனிதாபிமான அடிப்படையில் நான் கேட்கிறேன்.

இந்தமாதிரியான குற்றங்கள், குறைபாடுகள், தவறுகள் பல துறைகளில் இருக்கின்றன. ஆனால், இந்தப் போக்குவரத்துத் துறையில் பணியாற்றுகிற தோழர்களை மட்டும் இந்த மாதிரி நிர்பந்தம் செய்வது எந்த வகையில் நியாயம்? ஆனால் இதிலே நான் சொல்வது என்னவென்றால், ஆட்சி அதிகாரத்திற்கு வந்துவிட்டால் இதிலே எந்தக் கட்சியாக இருந்தாலும் பிரச்சினையில்லாமல் இருக்கிறது. அப்படியானால் இந்தத் தொழிலாளி போராடுவதே தவறு என்று கருதுகிறார்கள். எதிர் நிலையில் இருக்கும்போது போராட்டத்திற்குத் தலைமை தாங்குவார்கள். ஆளுகிற பொறுப்புக்கு வருகிறபோது போராட்டத்தை நசுக்குவார்கள். இதுதான் நடைமுறையில் இருக்கிறது. இதுதான் உண்மை. இந்த உண்மையை யாரும் மறுக்கவே முடியாது.

இன்றைக்கு இந்தப் போக்குவரத்துத் துறைக்கு அமைச்சராக இருக்கிற மாண்புமிகு விசுவநாதன் அவர்களும் நானும் ஒரே பெஞ்சிலே உட்கார்ந்திருந்தோம் சென்ற தடவை. இதற்காகக் குரல் கொடுத்தவர் அவர். இதற்காகப் போராடியவர் அவர். இதற்காகப் பேசியவர் அவர். இன்றைக்கு அந்தத் துறைக்கு பொறுப்பாக இருக்கிறார் என்று சொல்கிறபோது எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. சந்தோஷமாக இருக்கிறது. அவர் சிறப்பாக அந்தப் பொறுப்பை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார். அதில் எனக்கு மாற்றுக் கருத்தும் இல்லை. ஆனால், இடம் மாறுகிற போது செய்திகளும் காரியங்களும் மாறுகிறதே, குணம் மாறுகிறதே என்பதுதான் பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** போக்குவரத்துத் துறைத் தொழிலாளர்களைப் பொறுத்துவரையில், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் காலத்திலேதான் அவர்களுடைய குழந்தைகளுக்காக ஒரு

பொறியியல் கல்லூரியையே உருவாக்கிய பெருமை இந்த ஆட்சிக்கு உண்டு. அதேபோல அவர்களுக்கு பென்ஷனை உருவாக்கியது புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிதான். ஆகவே பழி வாங்குவது என்பது இல்லை.

**திரு. வை. சிவபுண்ணியம்:** அரசாங்கம் சலுகைகளை வழங்குவதில் எங்களுக்கு மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் அடிப்படையாகவே போராடுகிற தொழிலாளர்களை நசுக்குவதற்கான முயற்சிகளை எடுப்பதில் ஒத்த கருத்துடையவர்களாக இருக்கிறீர்கள் என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. ஆகவே இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், இப்போது போராடினார்களே இந்தத் தொழிலாளர்கள், அவர்கள் என்ன கேட்டார்கள்? அவர்கள் போராடிப் பெற்ற அந்த போனசைக் கொடுங்கள் என்றுதான் கேட்டார்கள். போனஸ் கொடுக்கிற நிலைமைகளைப் பற்றி நல்லமுறையில் கலந்து பேசி அதைச் சரிசெய்வதற்கான முயற்சிகளை எடுப்பதில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. 17 நாட்கள் போராடிய தொழிலாளர்கள், அவர்களாகவே திரும்ப வேலைக்குப் போய்விட்டார்கள். அப்படி இந்தப் போராட்டம் என்று வருகிறபோது, போனஸ் என்று வருகிறபோது, போராடிப் பெற்ற சலுகைகளைப் பெறுவதற்கான முயற்சிகளை எடுக்கிறபோது, இவ்வளவு பெரிய தண்டனை அவர்களுக்கு வழங்கப்பட வேண்டுமா என்பதைத் தயவுசெய்து பரிசீலிக்கவேண்டும் என்பதற்காகக் கேட்கிறேன்.

இன்றைக்குக் கிட்டத்தட்ட 20 ஆயிரம், 25 ஆயிரம் பேருந்துக் கழகத் தொழிலாளர்கள் தமிழ்நாடு முழுவதும் குடும்பத்தோடு, பிள்ளைகளோடு உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களுடைய நிலைமையைப் பரிசீலித்து, பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அந்த 916 பேர் மீதும் போடப்பட்ட வழக்குகளை எல்லாம் வாபஸ் பெற்று அவர்களைப் பணியில் சேர்க்கவேண்டும் என்று அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக இந்தப் பழி வாங்குகிற நடவடிக்கை என்று சொல்கிறபோது இப்போது வருத்தமாக சிலபேருக்கு இருக்கிறது. ஒரு வாரத்திற்கு முன்பு அமைச்சரிடத்தில் ஒரு பிரச்சினையைப் பற்றிச் சொன்னேன். என்னுடைய தொகுதி மன்னார்குடியில், அரசு பேருந்துக் கழகப் பணிமனையில் பணியில் ஈடுபட்டிருக்கக்கூடிய AITUC-யைச் சேர்ந்த 3



தொழிலாளர்கள், இரண்டுபேர் அதிலே டிரைவர்கள், ஒருவர் கண்டக்டர்- பெயர்கள் கோதண்டபாணி, ராஜேந்திரன், பாஸ்கர் என்ற மூன்று பேர்கள், AITUC-யைச் சேர்ந்த சங்கத்தைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்தாலேயே, நிர்பந்தப்படுத்தி அவர்களைத் தேவையில்லாமல், சிதம்பரம், சீர்காழி, பொறையார் என்று இந்தமாதிரிப் பகுதிகளுக்கு மாறுதல் செய்யப்பட்டிருக்கிறார்கள். ஏதாவது காரணம் இருக்கிறதா என்பதை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆராய வேண்டும். அதிலே காரணம் இருந்து, அவர்கள் பணிமாற்றம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னால், நான் அதை ஏற்றுக்கொள்கிறேன். காரணம் இல்லை என்பதை நான் ஆணித்தரமாக இந்த இடத்தில் சொல்கிறேன்.

பிற்பகல் 5-35

ஒரே காரணம், அவர்கள் AITUC சங்கத்திலே இருக்கிறார்கள் என்கிற காரணத்தினாலே, ஆளுகிற சங்கத்தின் மூலமாக நிர்பந்தம் இது. ஆக, இது தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கிறது.

இது முன்புகூட திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே நடந்தது. ஆகவே, இப்படியே பாதிக்கப்படுவதா? கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர்கள், அல்லது பொதுவுடைமைக் கட்சியைச் சார்ந்தவர்கள். AITUC-ஐ சார்ந்தவர்கள், C.I.T.U.-வைச் சார்ந்தவர்கள், சங்கத்திலே வலுவாக இருக்கிறார்கள் என்பதற்காகவே வருகிறபோது, நிர்பந்தப்படுத்தி, சங்கத்திலிருந்து செயல்பட விடாமல் தடுக்கிற ஒரு முயற்சி என்றால் அவர்களுடைய உரிமைக்காக போராடுவதற்குரிய வாய்ப்பே இல்லையா? இதுபற்றிப் பரிசீலிக்க வேண்டும். இந்த மாறுதலை இரத்து செய்து, அவர்களைத் திரும்பவும் அங்கேயே கொண்டு வரவேண்டும் என்பதற்கான முயற்சியை எடுத்தோம். அமைச்சர் அவர்களும், அதற்காக முயன்று கொண்டிருக்கிறார்கள். அதை முடிவு செய்து, அவர்களுடைய மாறுதலை இரத்து செய்ய வேண்டும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சாலை விபத்துகளைப்பற்றியெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது. சாலை விபத்துகளைத் தடுப்பதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும். பத்திரிகையைத் திறந்தால், தினசரி எத்தனைப் பேர் சாகிறார்கள் என்கிற கணக்கைத்தான் கூட்டிப் பார்க்க வேண்டியிருக்கிறது. மனித உயிர்கள் பலியாவது என்பது

ரொம்ப கஷ்டமாக இருக்கிறது. அதுவும் அரசுப் பேருந்துகளின் இப்படிப்பட்ட சாலை விபத்துகள் தடுக்கப்பட வேண்டும். இதிலே கூட, சென்ற ஆண்டு அல்லது முந்தைய ஆண்டுகளைப் பார்க்கிறபோது, தனியார் பேருந்துகளுக்கும் நமக்கும் சில வித்தியாசங்கள் இருக்கின்றன. அரசுப் பேருந்துகளில் போடப்படுகிற பல்பு இருக்கிறதே Head-light (மணியடிக்கப்பெற்றது) அதற்காகப் போடப்படுகிற பல்புகள், சக்தி வாய்ந்ததாக இல்லை என்கிற ஒரு குறைபாடு இருக்கிறது. தனியார் பேருந்துகளில் இருப்பது 'Halogen Bulb'-களைப் போட்டு, ரொம்ப Power- ஆக அவர்கள் அந்தச் சாலையிலே வருகிறார்கள்; படு வேகமாக வந்து கொண்டிருக்கிறார்கள். அரசாங்கப் பேருந்துகள், மின்மினிப் பூச்சிகள் மாதிரியான ஒளி விளக்கிலே வருகிறபோது, மிகப் பெரிய ஆபத்தான விபத்துகள் எல்லாம் ஏற்படுவதாக இருக்கிறது. அதுபற்றியெல்லாம் நம்முடைய அரசு பரிசீலிக்க வேண்டும். அதுபோல, கவனக்குறைவாக இருக்கக்கூடியவர்களுக்கு உரிய பயிற்சி மற்ற காரியங்களைச் செய்வதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இரயில் திட்டத்தைப் பற்றி இங்கே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே, குறிப்பாக, தஞ்சை-நாகை-நாகூர் அகல இரயில் பாதை திட்டத்திற்குரிய அனுமதி கேட்கிறோம்; நிதியும் ஒதுக்கச் சொல்லி மத்திய அரசாங்கத்தை கேட்டு இருக்கிறோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது ஆண்டுதோறும் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே வைக்கப்படுகிற ஒரு நிகழ்ச்சியாக இருக்கிற காரணத்தினாலே, உறுதி செய்து, இதை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும்.

அதுபோல, கடலூர், மயிலாடுதுறை, கும்பகோணம், திருவாரூர், திருத்துறைப்பூண்டி, காரைக்குடி பாதைகளையும் அகல இரயில் பாதையாக மாற்றுவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும் என்பதை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மன்னார்குடிக்கு, சென்ற ஆண்டு, அரசின் சார்பிலே ஒரு யூனிட் அலுவலகம் அறிவிக்கப்பட்டது. அது, ஏதாவது உண்டா, இல்லையா? கொள்கை அறிவிப்பிலே சென்ற ஆண்டு, அறிவிக்கப்பட்டது. அதுபற்றி ஒரு முயற்சியே இல்லாமல் இருக்கிறதே, இந்த ஆண்டு அதை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சி எடுக்கப்படுமா என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.



குறிப்பாக, தனியார் முதலாளிகள் அவர்கள் விருப்பப்படி ஆலைகளை மூடி, இலட்சக்கணக்கான தொழிலாளர்களைப் பழி வாங்குகிறார்கள். அதுபோல பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. அதுபற்றி தொழிலாளர் நலத் துறை என்ன செய்கிறது என்பது புரியவில்லை. அரசாங்கமும் அதுபற்றி கவலைப்படவில்லை என்ற ஒரு வருத்தம் இருக்கிறபோது, அரசே இந்தப் பேருந்துகளைத் தனியார்மயமாக்குவதன் மூலமாக, இலட்சக்கணக்கான குடும்பங்களை வீதிக்குக் கொண்டு வந்து நிறுத்துகிற ஒரு கொடுமையான சூழ்நிலை ஏற்பட்டுவிடும். இதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே கேட்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர், திரு. ஜெக. வீரபாண்டியன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, போக்குவரத்து மானியக் கோரிக்கையிலே பாரதிய ஜனதா கட்சியின் சார்பாக, என்னைப் பேசப் பணித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் மற்றும் இங்கே கூடியிருக்கிற அமைச்சர்கள் உள்ளிட்ட அத்தனை சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய வணக்கத்தை தெரிவித்துக்கொண்டு, மிகச் சுருக்கமாக, நேரம் கருதி, சில விஷயங்களை நான் இந்த அவையிலே பதிய வைக்க விரும்புகிறேன்.

ஒரு நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சிக்கு, தகவல்-தொழில்நுட்பமும், போக்குவரத்துத் துறை மேம்பாடும் மிகச் சிறப்பான பங்கு வகிக்கின்றன. இந்தியத் திருநாட்டினுடைய தலைநகரம் உள்ளிட்ட பிற மாநிலங்களின் போக்குவரத்தோடு ஒப்பிடுகிறபோது, எவ்வளவுதான் நட்டத்திலே ஓடினாலும்கூட, நமது போக்குவரத்துத் துறையின் பேருந்துகளின் செயல்பாடு சிறப்பாகத்தான் இருக்கிறது என்பதைப் பெருமையோடு இந்த அவையிலே தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

தமிழக மக்களுக்கு, தடங்கலற்ற, பாதுகாப்பான, வசதியான பயணத்தை அளிக்கும்பொருட்டு, சாலை போக்குவரத்தை மேம்படுத்த, சட்டத்தின் மூலமாகவும், பிற முறைகளினாலும், ஆக்கபூர்வமான ஒழுங்கு நடவடிக்கைகளை எடுப்பதன் மூலமாக, கொஞ்சம் நிர்வாகச் சீர்திருத்தத்தோடு, தொழிலாளர்களிடையே கடமையுணர்ச்சியையும்

மேம்படுத்தினால், நிச்சயமாக இலாப நோக்கில் இந்த நிர்வாகத்தை நடத்த முடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கு உள்ளது.

நாளுக்கு நாள் வாகனங்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிற சூழலில், வாகனப் புகையால் சுற்றுச் சூழல் மாசுபடுவதையும் யாரும் மறுக்க முடியாது. சென்னை நகரில், ஏதாவது ஒரு signal-இல் சிறிது நேரம் நின்றால், மயக்கம் வருகிற அளவுக்கு வாகனப் புகையால் பாதிப்பு ஏற்படுகிறது. ஆகையால், சென்னை நகரத்திற்கு மட்டுமாவது, டெல்லியிலே நடைமுறைப்படுத்தப்பட்டது போல, C.N.G. மூலம், அதாவது Compressed Natural Gas - மூலம் வாகனங்களைச் செலுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் மூலம் தமிழக முதல்வரை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

சென்னை நகரில் தற்போது சிறப்பாக ஓடிக்கொண்டிருக்கிற 6 பேர் அமரக்கூடிய இரண்டு இருக்கைகள் கொண்ட பெரிய ஆட்டோக்கள், மாவட்டத் தலைநகரங்களில் ஓடுகின்றன. அதை எல்லா நகரங்களிலும் இயக்க அனுமதி அளித்தால், Mini-bus கூட செல்ல முடியாத இடங்களுக்கும், போக்குவரத்து வசதி செய்து தரமுடியும் என்பதோடு, பள்ளிக்கூட நேரங்களில் உள்ள நெரிசலைத் தவிர்க்க அது பயன்படும் என்பதையும் இங்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 5-40

செய்தித்தாள்களில் தினந்தோறும் ஏதாவது வாகன விபத்து பற்றி குறிப்பிடாமல் செய்திகள் வருவதே கிடையாது. வாகனங்கள் அளவுக்கு அதிகமான பாரங்களை ஏற்றி, வரம்பு இல்லாமல் வேகத்தோடு ஓட்டுகின்ற ஓட்டுநர்கள் மீதும், குடிபோதையோடு வாகனங்கள் இயக்குபவர்கள் மீதும் அரசு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசு துறையில் பணியாற்றுகிற வாகன ஓட்டுநர்களுக்கும் நடத்துநர்களுக்கும் வருடத்திற்கு 3 நாட்களாவது பண்புப் பயிற்சி அளிக்க வேண்டும். காரணம், அரசு ஊழியர்கள், நடத்துநர்களாக இருந்தாலும்சரி, ஓட்டுநர்களாக இருந்தாலும்சரி, இலவச பஸ் பாஸோடு பயணம் செய்கிற மாணவர்களை- புத்தக சுமையோடு வருகிற தொடக்கப்பள்ளி மாணவர்கள் முதல் கல்லூரி மாணவர்கள் வரை வேறுபடுத்திப் பார்த்து கேவலப்படுத்துவதை நான் கண்கூடாகப் பார்த்து



இருக்கிறேன். பேருந்துகளை வழக்கமாக நிறுத்துகிற இடத்தைவிட்டு சற்று தூரத்தில் நிறுத்தி, மாணவர்கள் ஓடி வருவதைப் பார்த்து இரசிக்கிற மனோபாவம் சில ஊழியர்களுக்கு இருக்கிற காரணத்தால்தான் பல்வேறு இடங்களிலே சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை ஏற்படுகிறது; சண்டை ஏற்படுகிற காரணமும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. ஆகையால், அவர்களை நெறிப்படுத்த வேண்டியது நமது கடமை என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

2001-2002-ல் 1,850 புதிய பேருந்துகள் வாங்கத் திட்டமிட்டு இருந்தும் இதுவரை 305 பேருந்துகள்தான் வாங்கப்பட்டு இருப்பதாக அறிகிறேன். மேலும் ஆயிரம் பேருந்துகள் வரும் மாதங்களில் வாங்கப்படும் என்று கூறினாலும்கூட, அரசு திட்டமிட்ட காலத்திற்குள் புதிய பேருந்துகள் வாங்கவில்லை என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே, 2002-2003-லே போக்குவரத்துக் கழகங்களுக்கு புதிதாக 2,275 பேருந்துகள் வாங்கப்படும் என்று கூறப்பட்டு இருப்பதை அரசு கண்டிப்பாகச் செயல்படுத்த வேண்டும். இதனால் பழைய பேருந்துகளுக்கு செய்யப்படும் கூடுதல் செலவினங்களை குறைத்து, நஷ்டத்தையும் குறைக்க முடியும் என்று சொல்லி நேரம் கருதி சுருக்கமாக எனது தொகுதி தொடர்புடைய சில விஷயங்களை நான் சொல்ல விரும்புகிறேன்.

மயிலாடுதுறையிலிருந்து சென்னைக்கும், கோவைக்கும், இரண்டு கூடுதல் சொகுசு பஸ்களை இயக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், மயிலாடுதுறை, கடலூர், நாகப்பட்டினம் மார்க்கமாக சென்னைக்கு வருகின்ற இரயில் போக்குவரத்தில் வண்டி தாம்பரத்தோடு நின்றுவிடுகிறது. தற்போது அகல இரயில் பாதையை விஸ்தரிக்கும் வகையிலே செங்கல்பட்டு நிலையத்தோடு இரயில்வண்டி நிற்கின்ற ஒரு சூழ்நிலை வருகின்றபோது, சென்னைக்கு வருகிற பயணிகளுக்கு, பேருந்து மட்டும்தான் தனி மார்க்கமாக இருக்க முடியும் என்ற நிலையிலே, மயிலாடுதுறையிலே தனியார் பஸ் போக்குவரத்தின் ஆதிக்கம் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. ஆகையினாலே, அரசு கொஞ்சம் கூடுதல் கவனம் செலுத்தி, மயிலாடுதுறையிலிருந்து சென்னைக்கு A.C. வசதியோடு கூடிய பஸ்கள் இரண்டாவது விட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொகுதி தொடர்பாக எங்களுடைய சொந்த கோரிக்கை. எங்களுடைய நீண்ட முயற்சிக்கு பிறகு, உயர் நீதிமன்றத்தில் வழக்கு இருந்தாலும்கூட மயிலாடுதுறையில் 52 நரிக்குறவர்களுக்கு நேற்றுதான் பட்டா அரசு மூலம் வழங்கப்பட்டு இருக்கிறது. நரிக்குறவர்களைப்

பொறுத்தவரையில், மயிலாடுதுறையில் பலர் எங்கள் கட்சியை சேர்ந்தவர்கள் என்றாலும்கூட, நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் மீதும், முன்னாள் முதல்வர் அமரர் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள் மீதும் மாறாத அன்பு கொண்டவர்கள் என்பதை நாடே அறியும். மொழியாலும், உச்சரிப்பாலும், உடையாலும், உணவு பழக்கத்தாலும், கலாச்சாரத்தாலும் நாடோடிகளைப் போல் இருக்கின்ற அவர்களை அரசு பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்து இருக்கிறது. நரிக்குறவர் சமுதாயத்தை அரசு தாழ்த்தப்பட்டோர் - எஸ்.டி. பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு இந்த 52 குடும்பத்தினருக்கும் அரசு தொகுப்பு வீடுகளை கட்டித் தர வேண்டும் என்று நாங்கள் தமிழக அரசை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறோம். அதோடு மட்டுமல்லாமல் அந்தப் பகுதியில் வசிக்கிற நரிக்குறவர் இன இளைஞர்கள் எல்லாம் சாதாரணமாக குழந்தைப் பருவத்திலேயே துப்பாக்கி சுடுகிற கலையிலே வல்லுநர்களாக இருக்கிறார்கள். பறந்து கொண்டிருக்கிற பறவையை ஓடிக்கொண்டே சுட்டு வீழ்த்துவதை எங்களால் பார்க்க முடிகிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அப்படிப்பட்ட தனித் திறமை வாய்ந்த சின்ன குழந்தைகளை எல்லாம் அரசு தத்து எடுத்துக்கொண்டு துப்பாக்கி சுடுவதிலே, ஜிம்னாஸ்டிக்கிலே பயிற்சி கொடுத்தால் நிச்சயமாக தனித் திறமையால் ஒலிம்பிக்கிலே தங்கப்பதக்கத்தை பெறக்கூடிய அளவுக்கு அவர்கள் முன்னேறுவார்கள் என்ற செய்தியைச் சொல்லிக்கொள்கிறேன். அரசு விரைவாக அவர்களுக்கு குடிநீர் வசதியோடு கூடிய தொகுப்பு வீடுகளை கட்டித் தர வேண்டும் என்ற வேண்டுகோளை வைக்கிறேன்.

அதேபோல, எங்கள் பகுதியில் காட்டுநாயக்கன் சாதியினர் இருக்கின்றார்கள். அவர்கள் S.T. சான்றிதழ் பெறுவதற்கு ஏராளமான தடைகள் இருக்கின்றன. சுலபமாகப் பெறுவதற்கு சாத்தியம் இல்லாமல் இருக்கிறது. ஆகையினால், சேர்க்கை நேரத்திலே, கல்லூரியிலோ பள்ளிக்கூடத்திலோ மாணவர்களை சேர்க்கின்றபோது மிகுந்த கஷ்டத்தை அவர்கள் அனுபவிக்கிறார்கள். இதை எளிமைப்படுத்த வேண்டுமென்று நாங்கள் வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறோம்.

பிற்பகல் 5-45

அதுபோல மயிலாடுதுறை நகராட்சி துப்புரவுத் தொழிலாளர்களில் பலர் இன்றுவரை பல ஆண்டுகாலமாக பணியாற்றியும்கூட இன்னும்



அவர்களுக்கு பணி நிரந்தரம் கிடைக்கவில்லை. தற்காலிக பணியாளர்களாக, தினக் கூலிகளாக, அற்றை கூலிகளாக அவர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு பணி நிரந்தரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மயிலாடுதுறையிலிருந்து 25 கி.மீ.-ல் பூம்புகார் பேரவை கல்லூரி என்று ஒன்று இருக்கிறது. தினந்தோறும் மயிலாடுதுறை பேருந்து நிலையத்திலே ஏதாவது மாணவருக்கும், போக்குவரத்து தொழிலாளிக்கும் ஒரு சட்டம் ஒழுங்குப் பிரச்சினை வந்து கொண்டிருக்கிறது. ஆகையால், மயிலாடுதுறையிலிருந்து பூம்புகார் பேரவை கல்லூரிக்கும், பொறையார் கல்லூரிக்கும் தனி பஸ்ஸை இயக்க வேண்டுமென்று பாரதிய ஜனதா கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் நடந்து முடிந்த போக்குவரத்துத் தொழிலாளர்களுடைய வேலைநிறுத்தம் அரசு பேச்சுவார்த்தை மூலமாகக்கூட ஒரு முடிவுக்கு வந்திருக்கிற நிலையிலே, தமிழக அரசு அவர்கள்மீது போட்டிருக்கிற வழக்குகளை வாபஸ் பெற வேண்டுமென்று பாரதிய ஜனதா கட்சியின் சார்பாகக் கேட்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொங்கிவரும் கங்கையாய், மடை திறந்து ஓடிவரும் காவிரியாய், சீறுகின்ற புயலாய், சிரித்து மகிழும் சிங்கமாய், பெண் இனத்தின் புதிய விடியலாய், சோதனையைத் தாங்கி, வீறுகொண்டு எழுந்த வேங்கையாய், சூழ்ச்சிகளை, சூது வாதைப் பொடிப் பொடியாக்கிடும் பெண் இனத்தின் பெருந் தலைவியாய், வாழும், வாழ்ந்து கொண்டிக்கும் எங்கள் வீர வரலாற்றின் அன்னையே, தமிழகத்தின் தவப் பயனாகிய இதய தெய்வமே, சரித்திரத்தின் எல்லா பக்கங்களையும் தனக்கே உரித்தாக்கிக் கொண்ட பூகோள சரித்திரத்தின் புதிய வரவாகிய எங்கள் நடமாடும் தெய்வமே, கடைக்கோடித் தொண்டனையும் கருணையோடு பார்க்கும் கருணைத் தாயே, தாய்த் திருநாட்டின் தலைவர்களின் வரிசையில் முதன்மை இடத்தைப் பிடித்த அரசியல் விஞ்ஞானி எங்கள் அம்மாவே, தங்களுக்கு என் பணிவான வணக்கங்கள்.

பருந்திடமிருந்து குஞ்சுகளை தன் இறக்கைக்குள் வைத்து பாதுகாத்து, பருந்தின் கொத்துகளையும், காயங்களையும் தான் தாங்கிக்கொள்ளும் ஒரு தாய்ப் பறவையைப்போல, குள்ள நரிக் குடும்பம் செய்த சூழ்ச்சிகளையும், சகுனிகள் செய்த வஞ்சகத்தையும், கோபாலபுர மனிதர்களின் குறுக்கு புத்தியையும், பொய் வழக்குகளையும், சோதனை என்றால் தாங்களே முழுவதும் தாங்கிக் கொண்டு, தனக்கு மட்டுமே உரித்தான வெற்றியில் பிறருக்கும் வாய்ப்பளித்து, தொண்டர்களையும், கழகத்தையும், தாய் தமிழகத்தையும் காத்திட்ட தாயின் இலக்கணமே, உத்தமத் தலைவியே, நாடு போற்றும் நான்காம் தமிழே, உங்களைப் பணிந்து வணங்குகிறேன்.

கழகத்தின் தொடக்கக் காலம் முதல் தொண்டனாய் இருந்த என்னை, நத்தம் ஊராட்சி ஒன்றியத் தலைவராக்கி, ஒருங்கிணைந்த திண்டுக்கல் மாவட்ட கழகத் துணைச் செயலாளராக்கி, சேவல் சின்னத்தில், நத்தம் தொகுதியில் போட்டியிட வாய்ப்பளித்து, மக்களிடத்தில் என்னை அறிமுகப்படுத்தி, அம்மா அவர்களின் திருப்பெயரால் உள்ள புரட்சித் தலைவி பேரவை மாவட்ட செயலாளராக்கி, திண்டுக்கல் மாவட்ட ஊராட்சி உறுப்பினராக்கி, கொடுங்கோல் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நத்தம் தொகுதி சட்டமன்ற இடைத் தேர்தலில் வெற்றி பெறச் செய்து, திண்டுக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளராக பொறுப்பு வழங்கி, பொதுத் தேர்தலில் இரண்டாம் முறையாகவும்....(குறுக்கீடு) என்னுடைய கருத்தைச் சொல்கிறேன், உங்களுடைய கருத்தைச் சொல்லுங்கள். இதிலே என்ன தவறு? எங்களுடைய கருத்து, தி.மு.க ஆட்சி கொடுங்கோல் ஆட்சி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செங்கோல் என்று சொல்லுங்கள். நீங்கள் செங்கோல் என்று சொல்லுங்கள், அவ்வளவுதான். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** அது உங்களுடைய விருப்பம். நீங்கள் பதிவு பண்ணிக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) அதை மக்கள் தீர்மானித்திருக்கிறார்கள், யாருடைய ஆட்சி கொடுங்கோல் ஆட்சி என்று. தி.மு.க. ஆட்சி போய்தான் நாங்கள் வந்திருக்கிறோம் ஆட்சிக்கு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவ்வளவுதான், துரைமுருகன், அவ்வளவுதானே?



**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன் :** நாங்கள் எங்களுடைய கருத்தைச் சொல்கிறோம். நீங்கள் உங்களுடைய கருத்தைச் சொல்லுங்கள். அதனாலே தப்பு இல்லை. என்னுடைய சுதந்திரத்திலே நீங்கள் தலையிட முடியாது. நீங்கள் மறுப்பு சொல்லலாம். அது வேறு விஷயம். நான் கருத்து சொல்வதைத் தடுக்க முடியாது. உங்கள் ஆட்சி கொடுங்கோல் ஆட்சி என்பதால்தானே மக்கள் உங்களை தூக்கி எறிந்துவிட்டு புரட்சித் தலைவி அம்மா அவர்களை முதலமைச்சராக ஆக்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள்.

பிற்பகல் 5-50

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** இரண்டாம் முறையாகவும், நத்தம் தொகுதியில் போட்டியிட வாய்ப்பு வழங்கி, வெற்றி பெறச் செய்து, சட்டமன்ற உறுப்பினராக்கி, அமைச்சராக்கி, பல்வேறு பொறுப்புகளை வழங்கி, என் வாழ்க்கையில் ஏற்றம் தந்திட்ட, என்னைப் போன்ற கடைக்கோடி தொண்டனுக்கும் கருணை காட்டிய எங்கள் அன்னைக்கு, தெய்வத் தாய்க்கு, காலமெல்லாம் என் நன்றியையும், எல்லையற்ற விசுவாசத்தையும் தங்களின் பொற்பாதங்களில் பணிந்து சமர்ப்பிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எளிய தொண்டனாய், தங்களை வியந்து பார்த்து, என்றும் தொண்டனாய் உங்களை வணங்கி மகிழ்ந்து, போக்குவரத்துத் துறைக்கான மானியக் கோரிக்கையின் பதிலுரையை பணிவுடன் வழங்குகிறேன்.

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் பொற்காலமாக விளங்கிய போக்குவரத்துத் துறையை, கடந்த தி.மு.க ஆட்சியில் போக்குவரத்துத் துறைக்கே போதாத காலமாக மாற்றிவிட்ட சூழ்நிலையில், சில புள்ளி விவரங்களை இந்த மாமன்றத்திற்குத் தெரிவிக்க விரும்புகிறேன். பல நேரங்களில் புரட்சித் தலைவி அம்மா அவர்களும் நிதி அமைச்சரும் நானும் விளக்கங்களை, பகுதி பகுதியாக சில விளக்கங்களைத் தந்து இருந்தாலும், அவற்றை எல்லாம் தொகுத்து சில புள்ளி விவரங்களை உங்களுக்கு வழங்கிட வேண்டுமென்று விரும்புகின்றேன். இந்தப் புள்ளி விவரங்களுககு

அருள்கூர்ந்து மாமன்றத்திலே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள். புள்ளிவிவரக் கணக்கு என்பதால் சற்று போர் அடிக்கும் என்று கருதி கவனிக்காமல் விட்டுவிடாதீர்கள். கூர்மையாக கவனிக்க வேண்டுமென்று உங்களை பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, முன்னாள் போக்குவரத்துத் துறை அமைச்சர், பொன்முடி அவர்கள் அதை கூர்மையாக கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

1991 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை போக்குவரத்துக் கழகங்கள் அடைந்த திரண்ட இழப்பு Cumulative loss ரூ.164.13 கோடி. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு, போக்குவரத்து கழகங்களுக்கு ஏற்பட்ட நஷ்டம் ரூ.164.13 கோடி. 1991 முதல் 1996 வரை புரட்சித் தலைவி அம்மா அவர்களின் 5 ஆண்டு ஆட்சிக் காலத்தில் அடைந்த மொத்த இழப்பு Book loss ரூ.368.85 கோடி. ஆனால், கடந்த 5 ஆண்டுகளில் அதாவது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 1996 முதல் 2001 வரை தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அடைந்த மொத்த நட்டம் ரூ.1,498.2 கோடி (மேசையைத் தட்டும் ஒலி).

அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட நட்டத்தைக் காட்டிலும், ஏறக்குறைய 4 மடங்கு தி.மு.க கூடுதல் நட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுதான் சென்ற தி.மு.க ஆட்சியின் சாதனை.

ஓட்டகத்திற்கு தொட்ட இடம் எல்லாம் கோணல் என்று சொல்வார்கள். அதுபோல சென்ற ஆட்சியில் போக்குவரத்து துறையில் அடி முதல் முடி வரை திரு. பொன்முடி அவர்கள் முற்றிலும் கோணலாக்கி விட்டார். அம்மா ஆட்சிக் காலம் போக்குவரத்துத் துறைக்கு ஒரு பொற்காலம். தி.மு.க. ஆட்சியில் பொற்காலம் போக்குவரத்துத் துறைக்கா அல்லது மாண்புமிகு பொன்முடிக்கா என்பதை நான் இந்த நேரத்திலே வினாவாக கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**டாக்டர் க. பொன்முடி:** ஒரு புள்ளிவிவரத்தைச் சொல்லி இருக்கிறார்கள். அதிலே உண்மை. அவருடைய ஆட்சிக் காலத்திலே 164 கோடி ரூபாய் நட்டம் இருந்தது. இதிலே நான் தெரிந்துகொள்ள விரும்புவது இந்த மொத்த இழப்பு என்றால் என்ன, ரொக்க இழப்பு என்றால் என்ன? மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர்தான் இதைச் சொல்ல



வேண்டும். ரொக்க இழப்பு எவ்வளவு ஏற்பட்டது என்பதையும் சொல்ல வேண்டும். 1991-லே எவ்வளவு? 1995-லே எவ்வளவு? 2001-லே எவ்வளவு?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** இருங்கள் வருகிறேன். அவசரப்பட வேண்டாம்.

**டாக்டர் க. பொன்முடி:** இருங்கள். நான் கேட்கிறேன். நீங்கள் ஏன் கோபப்படுகிறீர்கள்? கேட்கிறேன், இருங்கள், நான் கேட்டபிறகு சொல்லுங்கள். தேடி வைத்துக்கொண்டு சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) அப்போது ஏற்பட்ட 533 கோடி. ரூபாய்க்கு வட்டி போட்டாலே 5 வருடத்திற்கு 900 கோடி. ரூபாய் வரும். அவர்கள் ஆட்சியை என்னிடம் கொடுத்துவிட்டு போகும்போது ஒன்றும் Bed of Roses கிடையாது. கடன் இல்லாமல் கொடுத்துவிட்டுபோய், கடன் வைத்து விட்டேன் என்று சொன்னால் I agree. ஆனால் ரொக்க இழப்பே இல்லாமல், 1991-லே ஆட்சியை ** 5 வருடம் ஒப்படைத்தார்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, அந்த 5 வருட ஆட்சியிலே, அந்த 5 வருட ஆட்சியிலே .... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்பது அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) பொன்முடி, கொடுங்கோல் என்பது நல்ல தமிழ் சொல். ** என்பது கொச்சையான வார்த்தை—இல்லை, இல்லை, கொடுங்கோல் என்பது நல்ல தமிழ்ச்சொல். செங்கோல், கொடுங்கோல் என்பது நல்ல சொல். (குறுக்கீடு) **என்பது சூறையாடிவிட்டார்கள், ஊழல் செய்தார்கள் என்கிற பொருளிலே வரக்கூடியது. (குறுக்கீடுகள்) இல்லை. உட்காருங்கள். அமைச்சர் பதில் சொல்லட்டும். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள்.

பிற்பகல் 5-55

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** உண்மையைச் சொன்னால் உங்களுக்கு ஏன் இவ்வளவு கோபம் வருகிறது? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி பேசினார். அமைச்சர் பதில் சொல்லட்டும். (குறுக்கீடுகள்)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன் :** நான் சொல்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்மை நிலையை, புள்ளிவிவரத்தைச் சொல்லத் தொடங்கியவுடனேயே முதல் முடியவில்லையே இன்னும் நிறைய விஷயங்கள் தாங்க (குறுக்கீடுகள்) வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, அமைச்சர் புள்ளிவிவரத்தை முழுமையாகச் சொல்லி முடித்து விடட்டும்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** இன்னும் நிறைய விஷயங்கள் வருகின்றன. அதையெல்லாம் நீங்கள் எப்படித் தாங்கிக்கொள்ளப் போகிறீர்கள்? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் புள்ளிவிவரத்தை முழுமையாகச் சொல்லி முடிக்கட்டும். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** நீங்கள் கேளுங்கள். உங்களுடைய இலட்சணத்தை நீங்கள் கேளுங்கள். ஏறத்தாழ 1498.2 கோடி ரூபாய் நட்டத்தை ஏற்படுத்திவிட்டதுதான் இந்த தி.மு.க. ஆட்சியினுடைய சாதனை.

அடுத்தபடியாக, இன்னும் அவர் கேட்டதற்கு விளக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். அதற்குள் அவர் அவசரப்படுகிறார். அந்த விவரங்களை எல்லாம் சொல்வதற்குக் காத்திருக்கிறேன். 1992 முதல் 1995 வரை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலும், 1996-97 முதல் 2000-01 வரை தி.மு.க. ஆட்சிக் காலத்திலும் ஒவ்வோர் ஆண்டும் ஏற்பட்ட நட்டங்களை இப்போது நான் உங்களுக்கு ஒப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். அதிலே இரண்டு கட்டங்களாக இருக்கின்றன. முதல் கட்டமாக Book Loss. அதாவது, மொத்தத்தில் ரொக்க நட்டமும், அதோடு சேர்த்து தேய்மானச் செலவையும் சேர்த்த கணக்குத்தான் Book Loss, ரொக்க இழப்பு, பிளஸ் தேய்மானச் செலவு, இதைச் சேர்ந்த ஒரு கணக்கு, ஒருவகைக் கணக்கு. அதற்குப் பெயர் Book Loss. அந்த வகையிலே இரண்டு ஆட்சியையும் ஒப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

அதற்கடுத்த கட்டமாக, தேய்மானச் செலவை கணக்கில் எடுத்துக் கொள்ளாமல், ரொக்கக் கணக்கை மட்டும், cash வரவு-செலவை மட்டும் கணக்கில் வைத்து, இரண்டு ஆட்சியிலும் ஏற்பட்ட வரவு-செலவுகளையும் ஒப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன் முதல் கட்டமாக Book Loss, Cash Loss Plus..



**திரு. துரைமுருகன்:** இப்போது சொன்னீர்களே Book Loss என்று, அதை இன்னொரு தரம் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** ஏன் அதிலே என்ன இருக்கிறது? Book Loss என்று சொல்கிறேன். புத்தக மதிப்பீடு, புத்தக மதிப்பு.

**திரு. துரைமுருகன்:** இப்போது சொன்னீர்களே ஒரு கணக்கு, அது சரியாக புரியவில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** Book Loss. அதைத்தான் சொல்கிறேன். தெரியவில்லையா? (குறுக்கீடுகள்) கொஞ்சம் இருங்கள். அந்த அளவுக்குத் தெரியவில்லை என்று சொன்னால், அவருக்கு தெரியாமல் இருக்காது. (குறுக்கீடுகள்) அவருக்கு நான் விளக்கம் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். அமைச்சர் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார். அமைச்சர் துல்லியமாக பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார். இடையே பேச வேண்டாம்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** கொஞ்சம் கவனமாகக் கேளுங்கள். எல்லோருக்கும் தெரிந்திருக்கிறது. உங்களுக்கு மட்டும் தெரியவில்லை என்றால், அது எங்களுடைய குற்றம் இல்லை. உங்களுடைய குற்றம்தான் அது.

முதலிலே 1991-1992-ஆம் ஆண்டு முதல் 1995-96 வரை புரட்சித் தலைவி அம்மா ஆட்சிக் காலத்தில், நாங்கள் ஆட்சிக்கு வந்த முதலாவது ஆண்டு, 1991-92 ஆம் ஆண்டு அம்மா ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட நட்டம், இதற்குப் பெயர் Book Loss. ரொக்கக் கணக்கு இல்லை— ரூ.21.78 கோடி., திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த முதலாண்டு 1996-97-ல் ஏற்பட்ட நட்டம் ரூ.310.67 கோடி., ரூ.21.78 எங்கே இருக்கிறது; ரூ.310.67 கோடி எங்கே இருக்கிறது என்பதையும் நீங்கள் குறித்துக்கொள்ள வேண்டும்.

அதேபோல் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்தில், இரண்டாம் ஆண்டில் ஏற்பட்ட நட்டம் ரூ.50.46 கோடி, தி.மு.க. ஆட்சிக் காலத்தில அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் இரண்டாம் ஆண்டில் ஏற்பட்ட நட்டம் ரூ.229.37 கோடி.

[திரு. இரா. விசுவநாதன்] [2002 மே 3

அதேபோல், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் மூன்றாம் ஆண்டு ஏற்பட்ட நட்டம் ரூ.48.03 கோடி. அதேபோல் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட நட்டம், அவர்களுடைய மூன்றாம் ஆண்டில் ஏற்பட்ட நட்டம் ரூ.411.39 கோடி.

அதேபோல் நான்காம் ஆண்டு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட நட்டம ரூ.41.21 கோடி. நான்காம் ஆண்டு தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ரூ.317.91 கோடி நட்டம்.

அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில், ஐந்தாவது ஆண்டு மட்டும் ரூ.207.37 கோடி நட்டம். தி.மு.க ஆட்சிக் காலத்தில் ஐந்தாம் ஆண்டில் ரூ.228.86 கோடி--அதிலும் நீங்கள்தான் -ஆக ஐந்தாண்டு காலத்திலும், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட மொத்த நட்டம் ரூ.368.85 கோடி. தி.மு.க ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட நட்டம் ரூ.1,498.2 கோடி.

*பிற்பகல்* 6-00

இதில் யாருடைய ஆட்சி பொற்காலம்? புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி பொற்காலமா? இல்லை, பொன்முடி அவர்களின் ஆட்சி பொற்காலமா? (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) I am not yielding. நான் முழுவதும் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடுகள்) உங்களைச் சொல்லவேண்டாமென்று நான் சொல்லவில்லை. நான் சொல்லிமுடித்தவுடன் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி, அவர் சொல்லி முடித்துவிடட்டும், உங்களைக் கூப்பிடுகிறேன். நானே உங்களுக்கு வாய்ப்பு தருகிறேன். மாண்புமிகு அமைச்சர் புள்ளி விவரங்களை சொல்லி முடிக்கட்டும்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** நான் புள்ளிவிவரங்களை சொல்லி முடிக்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் சொல்லி முடித்தவுடன் வாய்ப்பு தருகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** (குறுக்கீடு) உங்களை சொல்லவேண்டாமென்று சொல்லவில்லை. நான் பதில் சொல்லி முடித்த பிறகு நீங்கள் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு)



2002 மே 3]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி உங்களைக் கூப்பிடுகிறேன். நிச்சயமாக வாய்ப்பு தருகிறேன்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த புள்ளிவிவரங்களுக்கு நான் பதில் சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** நான் பேசி முடித்தவுடன் நீங்கள் பதில் சொல்லுங்கள். உங்களைச் சொல்ல வேண்டாமென்று சொல்லவில்லை. அடுத்து இரண்டாவதாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அடுத்த கட்டமாக, நட்டக் கணக்கில் மட்டும் Cash loss-ல் ரொக்கக் கணக்கில் மட்டும் ஏற்பட்ட வரவு-செலவு . அதாவது தேய்மானச் செலவுகளையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொள்ளாமல் cash account இதிலே புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், 1991-92 ஆம் ஆண்டு, முதல் ஆண்டு ரூ.61.8 கோடி இலாபம். திமுக ஆட்சியில் ஆட்சிக்கு வந்த முதல் ஆண்டில் 1996-97-ல் ரூ.180.18 கோடி நட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) இலாபம் இங்கே, நட்டம் அங்கே.

அடுத்து 1992-93-வது ஆண்டு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில், இரண்டாவது ஆண்டில் ஏற்பட்ட இலாபம் ரூ.57.29 கோடி, தி.மு.க ஆட்சியில் 1997-98-ல் இரண்டாவது ஆண்டில் ஏற்பட்ட நட்டம் ரூ.59.3 கோடி. எங்கள் ஆட்சியில் பூராவும் இலாபம். உங்களுடைய ஆட்சி பூராவும் நட்டம்.

புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிகாலத்தில் மூன்றாவது ஆண்டில் ஏற்பட்ட இலாபம் ரூ.34.09 கோடி. தி.மு.க ஆட்சியில் 1998-99-ல் மூன்றாவது ஆண்டில் ஏற்பட்ட நட்டம் ரூ.211.05 கோடி.

நான்காவது ஆண்டில், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் ரூ.60.83 கோடி இலாபம். தி.மு.க .ஆட்சியில், நான்காவது ஆண்டில் 1999-2000-ல் ரூ.149.03 கோடி நட்டம்.

அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், ஐந்தாவது ஆண்டில் மட்டும் நட்டம். நமது ஐந்து ஆண்டு காலத்தில் நான்காண்டு காலம் இலாபம். ஐந்தாவது ஆண்டில் மட்டும் ரூ.71.67 கோடி நட்டம். தி.மு.க. ஆட்சியில் ஐந்தாவது ஆண்டில் அவர், திரு. பொன்முடி அவர்கள் சொல்வது போல 75.43 கோடி ரூபாய் நட்டம். ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சொன்னதைப் போல, வார்த்தை ஜாலங்களை

எப்படிச் சமாளிக்கிறார்கள் என்று சொன்னால், கடைசி ஆண்டில் ஏற்பட்ட 75.43 கோடி ரூபாயை மட்டும் நட்டம் என்று ஒத்துக்கொண்டு, அதற்கு முன்பு இருக்கிற 4 ஆண்டுகளில் ஏற்பட்ட நட்டத்தை எல்லாம் சாதுர்யமாக மறந்துவிட்டாரா அல்லது மறைக்கிறாரா என்பதை அவர் விளக்க வேண்டுமென்று தெரிவிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) அதற்கு அடுத்தபடியாக, நான் சொல்லி முடித்துவிடுகிறேன். அப்புறம் நீங்கள் சொல்லுங்கள் உங்களைச் சொல்ல வேண்டாமென்று சொல்லவில்லை. I am not yielding. நான் சொல்லி முடித்த பிறகு நீங்கள் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர், புள்ளிவிவரங்களைச் சொல்லி முடித்துவிட்டீர்களா? சொல்லி முடித்துவிட்டீர்களா? (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** நான் சொல்லி முடித்தவுடனே நீங்கள் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லி முடித்தவுடன் நான் கூப்பிடுகிறேன். (குறுக்கீடு) சொல்லி முடிக்கட்டும்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** இன்னும் இருக்கிறது. அடுத்த கணக்கு இருக்கிறது. (குறுக்கீடு) சொல்லி முடித்தவுடன், மொத்தமாகக் கேட்டு பதில் சொல்லுங்கள். வகை வகையாகச் சொல்கிறேன். நீங்கள் கேட்டுக்கொண்டு சொல்லுங்கள். ஆக, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில், ஐந்தாண்டுக் காலத்தில் மொத்த Cash கணக்கில் இலாபம் ரூ.142.34 கோடி. Cash generation இலாபம் 142.34 கோடி ரூபாய். ஐந்தாண்டு காலம் உங்களுடைய பொன்னான ஆட்சியில் மொத்த இழப்பு 674.99 கோடி ரூபாய். அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் cash கணக்கில் 142 கோடி ரூபாய் இலாபம். உங்களுடைய ஆட்சிக் காலத்தில் cash கணக்கில் 674.99 கோடி ரூபாய் நட்டம். இதுதான் உங்களுடைய ஆட்சியின் திறமை. உங்களின் நிருவாகத்தினுடைய இலட்சணம். (மேசையைத் தட்டும் ஒலி)

1996 முதல் 142 கோடி ரூபாய் இலாபத்தில் இருந்த நிருவாகத்தை அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் 674 கோடி ரூபாய் நட்டமாக மாற்றிய சாதனையை செய்தவர்தான் நமது முன்னாள் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள். பொன்னான போக்குவரத்துத் துறையை, புண்ணாக்கியது யார்? புளிய மரத்துப் பிசாசு, பிள்ளையாரைப் பிடித்தது



போல சீர்மிகுந்த போக்குவரத்துத் துறையை திரு. பொன்முடி சீரழித்துவிட்டார். (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் கேட்கிறேன். பொற்காலம் போக்குவரத்துத் துறைக்கா, இல்லை பொன்முடிக்கா? (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

பிற்பகல் 6-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கம் சொல்லட்டும். (குறுக்கீடு)

**டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, statistics-லே இரண்டு சொல்வார்கள். ஒன்று statistical jugglery, இன்னொன்று** இதில் எப்படி என்று சொன்னால், உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், ஒரு பையன் ஆறு பாடம் படித்திருப்பான். ஆறு பாடத்திலே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, பொன்முடி.

**டாக்டர் க. பொன்முடி:** இது statistics. நான் சொல்வதை கேளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது எல்லாம் பொதுவாகச் சொல்லக்கூடிய பொன்மொழிகள். எல்லாம் தெரியும். அவர் ஒரு புள்ளிவிவரத்தைச் சொல்கிறார்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து கேளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஏற்கெனவே ஒரு புள்ளிவிவரத்தைச் சொன்னீர்கள். அதற்கு ஒரு விளக்கம்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கொடுத்த புள்ளிவிவரம் தவறா, சரியா? இதைமட்டும் சொன்னால் போதும். (குறுக்கீடு)

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நான் சொல்லிவிடுகிறேன். பொன்முடி, அமைச்சர் அவர்கள் சில புள்ளிவிவரங்களைச் சொல்கிறார்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** இன்னும் புள்ளிவிவரம் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்தப் புள்ளிவிவரங்கள் சம்பந்தமாக உங்களுக்கு மாறுபாடுகள் இருந்தால் நீங்கள் சொல்லவேண்டுமே தவிர, புள்ளிவிவரம் மொத்தமுமே பொய் என்பதுபோல சொல்வது சரியல்ல.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்கிற புள்ளிவிவரத்தில் தவறு இருந்தால் சொல்லட்டும். புள்ளிவிவரம் தவறா, சரியா அதைமட்டும் சொன்னால் போதும். நீங்கள் கதை சொல்வது வேண்டாம். இவ்வளவு பெரிய நட்டத்தை ஏற்படுத்திய தி.மு.க. ஆட்சி... (குறுக்கீடு)

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** எது ** (குறுக்கீடு) ** என்று சொன்னீர்கள்? நீங்கள் சொல்கிறீர்கள். யார் ஆட்சி ** (கூச்சல், குழப்பம்) (குறுக்கீடுகள்) யார் ஆட்சி **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, நான் உங்களுக்கு வாய்ப்புக் கொடுக்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) கொஞ்சம் உட்காருங்கள். அமைச்சர் பதில் சொல்கிறார். உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** நான் பேசி முடித்தவுடனே மொத்தமுமே சொல்லச் சொல்லுங்கள். கடைசியில் சொல்லச் சொல்லுங்கள். (குறுக்கீடு) கடைசியிலே சொல்லச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. நீங்கள் உட்காருங்கள். நான் அவருக்கு ஒரு விளக்கம் சொல்லிவிடுகிறேன். அமைச்சர் பொன்முடி அவர்களே, ஒரு புள்ளிவிவரத்தை—நீங்கள் தெரிவித்த புள்ளிவிவரத்திற்கு பதிலாக ஒரு புள்ளிவிவரத்தை--அவர்கள் ஏற்கெனவே தெரிவிக்கிறார்கள். அந்தப் புள்ளிவிவரத்திலே மாறுபாடு இருந்தால் நீங்கள் சொல்லவேண்டுமே தவிர, புள்ளிவிவரம் என்பதற்கே இப்படி

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



எல்லாம் ஒரு தவறான கருத்து சொல்வார்கள் என்று ஆரம்பித்தால், அது சரியல்ல. அமைச்சர் அவர்கள் முழுமையாகப் பேசி முடித்து விடட்டும். உங்களுக்கு முழுமையாகப் பேசுவதற்கு நான் வாய்ப்புத் தருகிறேன். அமைச்சர் அவர்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** நீங்கள் பேசுங்கள். உங்களை யார் பேசவேண்டாம் என்கிறார்கள்? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். அமைச்சர் அவர்கள் பேசி முடிக்கட்டும்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதனால் போக்குவரத்துக் கழகங்களின் நிதிநிலைமை மோசமடைந்து புதிய பேருந்துகள் வாங்கமுடியாத நிலை ஏற்பட்டு வளர்ச்சிப் பணிகளுக்குக் குந்தகம் ஏற்பட்டது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரை சொல்கிறபோது, குறுக்கிடக்கூடாது.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்தவும், வாங்கிய கடனுக்கான வட்டித் தொகையைச் செலுத்தவும் எரிபொருள் பாக்கியைச் செலுத்தவும்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. வாய்ப்புக் கொடுத்தும், அவர் புள்ளிவிவரம் என்பதே தப்பு என்கிறார்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** எரிபொருள் பாக்கியைச் செலுத்தவும் போக்குவரத்துக் கழகங்களால் முடியவில்லை. (குறுக்கீடுகள்) மேலும் ஊழியர்களின்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் உட்காருங்கள். என்ன, புள்ளிவிவரம் சம்பந்தமாக நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, நான் முழுமையாகப் பேசி முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு) அவரைச் சொல்ல வேண்டாம் என்று சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசி முடித்துவிடட்டும் (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,..... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் பதிலுரையை முடித்ததற்குப் பிறகு, நான் போதுமான வாய்ப்பு உங்களுக்குத் தருகிறேன். (குறுக்கீடு) துரைமுருகன் அவர்களே... (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு அமைச்சர் ஒருவர் பேசுகிறபோது clarification கேட்பதற்காக எழுந்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசிமுடித்த பிறகு, உறுப்பினர்களுக்கு வாய்ப்புத் தருவார்கள். Clarification அது. ஆனால் நேரடியாகவே ஓர் உறுப்பினரைக் குற்றம் சாட்டுகிறபோது, அதில் அந்தக் குற்றச்சாட்டுக்குப் பதில் சொல்கிற உரிமை உறுப்பினர்களுக்கு உண்டு. நீங்கள் சொன்னதை ஒருவகையில் நான் ஒத்துக்கொள்கிறேன். அவர் சொன்ன கருத்துக்கு எதிர் புள்ளிவிவரத்தைச் சொல்வதற்கு மட்டும் தாங்கள் அருள்கூர்ந்து உறுப்பினர் அவர்களுக்கு அனுமதியளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொன்ன கருத்துக்கு எதிர் புள்ளிவிவரத்தைச் சொல்வதிலே எனக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை. அவர் நேரடியாக விளக்கத்திற்கு வராமல் வேறு எங்கேயோ போய் சுற்றி வருவதால்தான் பிரச்சினை. சொல்லுங்கள். (குறுக்கீடு)

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் புள்ளிவிவரத்துக்குத்தான் வருகிறேன். புள்ளிவிவரங்களைப் பொறுத்தவரையில் - புள்ளிவிவரங்கள் சொல்லியிருப்பதை ஒப்பிட்டுச் சொல்லியிருக்கிறார். எப்படிச் சொல்லியிருக்கிறார்? (முதல் ஆண்டில் அங்கே இருந்தது, எங்களுடையது முதல் ஆண்டு என்று சொல்கிறார். முதலாண்டு—நீங்கள் மாண்புமிகு பேரவைத் தலைவர்; ஒரு வியாபாரி ஒரு கணக்குப் பண்ணினால், போன வருஷம் என்ன நஷ்டம் என்று இந்த வருஷம் கணக்குப் பண்ணுவானா? ஐந்து வருஷத்திலே முதல் வருஷம்... (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள். முதல் வருஷத்திலே - ஐந்தாவது வருஷத்திலே (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் சொல்ல வருகிறேன். அவர் சொன்னதை நான் ஒன்றும் இல்லையென்று சொல்லவில்லை. அவர் சொல்வது 1995-96-லே 207 கோடி ரூபாய் 1997-98-லே பேருந்து கட்டணத்தை உயர்த்தாமல் டீசல் விலை ரூ. 7.73-லே இருந்து 10 ரூபாய் உயர்த்தப்பட்ட



பிறகுகூட, ஒரு பைசாகூட பேருந்துக் கட்டணத்தை உயர்த்தாமல், அந்த ஆண்டு ஏற்பட்டிருக்கிற இழப்பு 311 கோடி ரூபாய். 207 கோடியிலிருந்து 311 கோடியாக ஆகியிருக்கிறது என்று சொல்ல வேண்டுமா? முதல் வருஷம் 24 கோடி எங்கள் ஆட்சியிலே முதல் வருஷம் ஆயிற்று. உங்கள் ஆட்சியில் 311 கோடி என்று சொல்ல வேண்டுமா? Is it not a ** Is it not a statistical jugglery? (கூச்சல், குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** **என்று சொல்வது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) பொன்முடி, உட்காருங்கள்.** என்று சொல்வது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. ஏற்கெனவே ஒரு முறை நீங்கள் **என்று சொல்லியிருக்கிறீர்கள். அதுவும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அதாவது ஆத்திரப்படக்கூடாது. திரு. பொன்முடி ஒரு விவரம் சொல்லும்போது நீங்கள் அதற்கு எதிர் விளக்கம் சொல்லவேண்டுமே தவிர, நீங்கள் கோபப்படுகிறீர்கள் என்றால், உங்கள் நிலைமை சரியில்லை என்று பொருள்; முறையில்லை. இப்போது நீங்கள் சொன்ன விளக்கம் அவைக்குறிப்பில் இருக்கும். (குறுக்கீடு) விளக்கம் அவைக்குறிப்பிலே இருக்கும். ** என்று சொல்வது தான் நீக்கப்படுகிறது. அமைச்சர் அவர்கள் விளக்கம் சொன்னதற்குப் பிறகு இறுதியாக உங்களுக்கு வாய்ப்புத் தருகின்றேன். அமைச்சர் அவர்கள் சொல்லுங்கள்.

பிற்பகல் 6-10

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, அவர் இப்போதும் ஒரு தவறான தகவலைத் தான் கொடுத்திருக்கிறார். ஏதோ தி.மு.க. ஆட்சியில் பஸ் கட்டண உயர்வே செய்யாததைப் போலவும் (குறுக்கீடுகள்) இப்போது நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) இருக்கிறது. நீங்களும் பஸ் கட்டணத்தை இரண்டு முறை ஏற்றியிருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் பதில் சொல்லட்டும், உட்காருங்கள்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** இப்போது எங்களுடைய புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்திலே நாங்கள் ஏற்றியது கிலோ மீட்டருக்கு 6 பைசா. ஆனால் உங்களுடைய ஆட்சிக் காலத்தில் சாதுரியமாக ஒரே முறையில் 6 பைசா ஏற்றாமல் இரண்டு முறை தவணை முறையில் 8 பைசா உயர்த்தி இருக்கிறீர்கள். எங்களைவிட 2 பைசா கூடவே ஏற்றி இருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் இல்லையென்றாலும் சட்டமன்றக் குறிப்பிலே பார்த்தால் தெரியப் போகிறது. 01-12-1993-ல் 22 பைசாவாக இருந்த கட்டணத்தை கிலோ மீட்டருக்கு—1 கிலோ மீட்டருக்கு 22 பைசாவாக இருந்த கட்டணத்தை-09-09-1997-ல் நீங்கள்தான் அப்போது போக்குவரத்துத் துறை அமைச்சர், 20 பைசா உயர்த்தி இருக்கிறீர்கள். ஒட்டகத்திற்கு 2 டன் சுமையை ஏற்றிவிட்டு, பிறகு ஒரு கிலோவை எடுத்துப் போட்டால், சுமையைப் பூராவும் இறக்கிவிட்டது போன்ற ஒரு தோற்றத்தை ஏற்படுத்துமே. (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல 2 பைசாவைக் குறைத்து (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை சொல்கிறேன். வாருங்கள். நீங்கள் ஏற்றி இருக்கிறீர்கள் என்று சொல்ல வருகிறேன். 18 பைசாவாக ஆக்கி, மீண்டும் அதை உடனே ஏற்றி 22 பைசாவாக ஆக்கி, ஆக 14 பைசாவிலிருந்த கட்டணத்தை 22 பைசாவாக ஆக்கியிருக்கிறீர்கள். மொத்தக் கட்டண உயர்வு நீங்கள் இரண்டுமுறை செய்து 8 பைசா ஏற்றி இருக்கிறீர்கள். 8 பைசா ஏற்றியவர்கள், 6 பைசா ஏற்றியவர்களைக் குறை சொல்வது என்ன நியாயம் என்பதைத்தான் உங்கள் முன்னாலே கேட்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதற்கு அடுத்தப்படியாக மற்றொன்றையும் சொல்ல விரும்புகின்றேன். போக்குவரத்துக் கழகங்களுக்கு இவ்வளவு பெரிய நஷ்டத்தை உங்கள் ஆட்சிக் காலத்தில் ஏற்படுத்திவிட்டதன் காரணமாக நிதி நெருக்கடி அதிகமாகிவிட்டது. அதன் காரணமாக போக்குவரத்துக் கழகங்கள் நிதிநிலைமை மோசமடைந்து, புதிய பேருந்துகள் வாங்க இயலவில்லை. வளர்ச்சிப் பணிகளுக்குக் குந்தகம் ஏற்பட்டது.

அதேபோல வாங்கியக் கடனைத் திருப்பிச் செலுத்த முடியவில்லை. மூசல் பாக்கியைக்கூட செலுத்த முடியவில்லை. அதேபோல ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதி, காப்பீட்டுத் தொகை, விபத்தில் சிக்கி உயிர் இழந்த குடும்பத்திற்கு இழப்பீடு அளித்தல், ஆகியவற்றைக்கூட நீங்கள் சரிவர உங்கள் ஆட்சிக் காலத்திலே செலுத்தவில்லை. போக்குவரத்துக் கழகங்கள் கடன் சுமையில் சிக்கித் தவிக்க ஆரம்பித்தன. அவற்றிற்குக் கடன் தரக்கூட யாரும் முன்வரவில்லை. கடன்



கொடுக்கக்கூட முடியாத ஒரு சூழ்நிலையை, அப்படி ஒரு இக்கட்டான நிலையை ஏற்படுத்தி விட்டதுதான் உங்கள் ஆட்சியினுடைய சாதனை.

அடுத்தப்படியாக இத்தகைய சூழ்நிலையில், போக்குவரத்துக் கழகங்களின் வருவாயைப் பெருக்க வேறு எந்த வழியுமே இல்லாத சூழ்நிலையில், 2001 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பயணிகளின் பேருந்துக் கட்டணத்தை அரசு உயர்த்த வேண்டிய கட்டாய சூழ்நிலை ஏற்பட்டது. இந்தக் கட்டாயச் சூழ்நிலையை ஏற்படுத்தியதே நீங்கள்தான். நீங்கள் இரண்டு முறை கட்டண உயர்வை ஏற்படுத்தி, 8 பைசா ஏற்றியதற்குப் பின்பும், 2,000 கோடி ரூபாய்க்கு நஷ்டத்தில் கொண்டு வந்ததற்குப் பின்பும் இந்த நிதி நெருக்கடியைச் சமாளிப்பதற்காக, இந்த நிதிச் சுமையை எங்கள் ஆட்சிக் காலத்திலே, அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலே நீங்கள் சுமத்திவிட்டதன் காரணமாக, அதைச் சமாளிப்பதற்காக, தொடர்ந்து போக்குவரத்துக் கழகம் இயங்க வேண்டுமே என்ற இக்கட்டான நிலையில், தவிர்க்க முடியாத சூழ்நிலையில், இப்போது கட்டண உயர்வு ஏற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. 'உடைந்த சட்டி உலைக்கு உதவாது என்பார்கள்'. இருந்தாலும் 'சோற்றுப் பானையை உடைத்தால் மாற்றுப் பானையா இல்லாமல் போகும்?' (குறுக்கீடு) கொடி படர (குறுக்கீடு) உட்கார்ந்து கொண்டு ** பேசக்கூடாது. முடிந்தால் எழுந்து நின்று பேசுங்கள். (குறுக்கீடுகள்) ** உட்கார்ந்து கொண்டு பேசுகிறீர்கள். (குறுக்கீடுகள்) எங்களுக்கு உட்கார்ந்து கொண்டு பேசத் தெரியாதா? (குறுக்கீடுகள்) இது என்ன பேச்சு?

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** உட்கார்ந்து கொண்டு பேசுவது என்ன?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பன்னீர்செல்வம், உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ஆளும்கட்சி உறுப்பினர்கள் அமைதியாக அமருங்கள்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவை (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் விளக்கம் சொல்கிறார். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். அமைச்சர் பார்த்துக்கொள்வார். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) உட்கார்ந்து கொண்டு பேசாதீர்கள். (குறுக்கீடுகள்) எழுந்து நின்று பேசுங்கள். ஒன்றும் கேட்கவில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** நீங்கள் பேசுவது எங்களுக்குக் காதில் விழாமலா இருக்கும்?

பிற்பகல் 6-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** புகழேந்தி என்ன, என்ன? (குறுக்கீடுகள்) அமைச்சர் ஒரு விளக்கம் சொல்கிறபோது ஒற்றைக் குரலாக அதை உடனே விமர்சனம் செய்வது என்பது சரியல்ல. நான் அனுமதி கொடுக்காமல், அமைச்சர் பேசிக்கொண்டிருக்கும்போது, எதிரே உட்கார்ந்து கொண்டு, ஒரு விளக்கத்தைச் சொல்வது, கேலி பண்ணுவது முறையல்ல. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். அமைச்சர் பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்) அமைச்சர் பேசி முடியுங்கள் (குறுக்கீடுகள்) உட்காருங்கள். என்ன செய்ய வேண்டும்? (குறுக்கீடுகள்) முதலில் நீங்கள் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** தவறான வார்த்தையானால் நானே வாபஸ் வாங்கிக்கொள்கிறேன். அதில் ஒன்றுமில்லை. ஆனால், அதேபோல உட்கார்ந்து கொண்டு தவறான வார்த்தைகளைப் பேசாதீர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளும் கட்சி உறுப்பினர்கள் தயவுசெய்து அமருங்கள். (குறுக்கீடுகள்) ஆளும் கட்சி உறுப்பினர்கள் தயவுசெய்து அமருங்கள். தயவுசெய்து நீங்கள் விளக்கத்தைச் சொல்லுங்கள்.



**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** தயவுசெய்து என்னுடைய ஒரு வார்த்தையை சபைக் குறிப்பிலிருந்து எடுத்துவிடும்படி நானே கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை நானே சொல்கிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே ஒரு வார்த்தையை நான் பேசியதை சபைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி நானே கேட்டுக்கொள்கிறேன். காரணம் அவர்கள் உட்கார்ந்துகொண்டு அதைவிட தரமற்ற வார்த்தைகளைச் சொன்னார்கள். இருந்தாலும் இனிமேல் அவர்களும் அந்த வார்த்தையைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக.... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்கார்ந்து கொண்டு பேசுவது காதில் விழுவதால் ஆத்திரம் வருகிறது. இங்கே அதேதான் பிரச்சினை. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடு) பன்னீர்செல்வம் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் அமைச்சராக இருந்தவர். அதாவது உட்கார்ந்துகொண்டு நான் அனுமதிக்காமல், அமர்ந்துகொண்டு பேசுவது என்பது பேசுகிறபோது காதிலே வார்த்தைகள் விழுகிறபோது, ஆத்திரம் வருகிறது. அதனுடைய விளைவாகத்தான் பல விபரீதமான நிகழ்ச்சிகள் நடந்தேற வேண்டிய சூழ்நிலை வந்துவிடுகிறது. ஆகவே, தயவுசெய்து அமர்ந்துகொண்டு பேசுவது என்பதை தயவுசெய்து கைவிடுங்கள். (குறுக்கீடு) இல்லை, பரணிகுமார், நீங்கள் பேச வேண்டுமென்று விரும்பினால் (குறுக்கீடு) நீங்கள் பேச வேண்டுமென்று விரும்பினால், நீங்கள் எழுந்து எனக்கு அனுமதி கொடுங்கள் என்று கேளுங்கள், நான் அனுமதி தருகிறேன். என் அனுமதியைப் பெற்று ஒலிபெருக்கியிலே நீங்கள் என்ன கருத்தைச் சொல்ல வேண்டுமோ சொல்லுங்கள். அமர்ந்துகொண்டு பேசுவது என்பது அது சரியான முறையல்ல. அது நாகரீகமும் அல்ல. அதைத் தவிர்க்க வேண்டுமென்று நான் தயவுசெய்து கேட்டுக்கொள்கிறேன். அது எந்தத் தரப்பாக இருந்தாலும் நான் அந்த கருத்தைத்தான் சொல்கிறேன். எல்லாத் தரப்புக்கும் அந்தக் கருத்தைத்தான் சொல்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** Point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** அதுதான் சொல்லிவிட்டேன் அல்லவா?

**திரு. சி. ஞானசேகரன்:** I am on a point of order because he can't dictate terms to us.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த அரை மணி நேரமாக நாங்களும் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இநத அவை மாண்புமிக்க ஒரு அவை. மரபுகளை கட்டிக் காத்த ஒரு அவை. எப்பொழுதுமே அமைச்சர் பேசினாலும் சரி அல்லது உறுப்பினர்கள் பேசினாலும் சரி மாண்புமிகு பேரவைத் தலைவரை விளித்துதான் உரையாற்ற வேண்டும் என்பது விதி. ஆனால், நேருக்கு நேர் பேசுவதும் அல்லது இங்கே சில உறுப்பினர்கள் அமர்ந்துகொண்டு பேசுவதும் அல்லது அமைச்சரேகூட தன்னுடைய நிலையை இழந்து ** என்றும் சில வார்த்தைகளைப் பேசுவதெல்லாம் உண்மையிலேயே நல்லதல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. அவைக்குறிப்பிலேயிலிருந்து நீக்கப்பட்டுவிட்டது. அமைச்சரே கேட்டுக் கொண்டதால் நீக்கப்பட்டுவிட்டது.

**திரு. சி. ஞானசேகரன்:** அவையை நடத்துகிறபோது யாருமே, அவையை நீங்கள் தயவுசெய்து விதிகளின்படியும் மரபுகள்படியும் இந்த அவையை நடத்திச் சென்றால் நல்லது. எங்களுக்கு இது உண்மையிலேயே.... (குறுக்கீடுகள்) We have got every right. மாண்புமிகு பேரவைத் தலைவருடைய உதவிக்காகவும் நான் சொல்கிறேன். இப்படியே போய்க்கொண்டிருக்கிறது என்று சொன்னால், இந்த விவாதம் என்பது உண்மையிலேயே இது சட்டமன்றமாக இருக்காது. (குறுக்கீடுகள்) அது நன்றாக இருக்காது. இல்லை, ஒருவரை ஒருவர் அடித்துக்கொள்வதற்காகவா வந்திருக்கிறோம் இங்கே? மிகக் கேவலமாக இருக்கிறது இது. This is not the way to conduct the House.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





***திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்:** எந்த வார்த்தையை அவர் வாபஸ் வாங்கினார்? எந்த வார்த்தையை அவர் வாபஸ் வாங்கினார் என்று சொல்ல சொல்லுங்கள். சும்மா ஒரு வார்த்தையை என்றால் எந்த வார்த்தையை? அதுமட்டுமல்லாமல் அவர் நிதானம் இழந்து பேசுகிறார். நிதானம் இழந்து பேசுவதை நாங்கள் நிச்சயமாக ஒப்புக்கொள்ளமாட்டோம். உங்கள் இரண்டு பேருக்கும் இருக்கின்ற விவகாரத்தை பேசுங்கள். நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. (குறுக்கீடு) அவர் உட்காருகிறாரா, இல்லையா, இப்போது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். எஸ்.ஆர்.பி. சொல்லட்டும். அமைச்சர் அவர்கள் உட்காருங்கள்.

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்:** You cannot direct me. It amounts to that.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அமைச்சர் அவர்கள் உட்காருங்கள், எஸ்.ஆர்.பி. அவர்கள் சொல்லட்டும்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அதாவது, எதிர்க்கட்சிக்காரர்கள் தவறான சொற்களைப் பயன்படுத்தினால், அதைக் கட்டுப்படுத்துவதற்கு பேரவைத் தலைவர் இருக்கிறார்கள். நிச்சயமாக, உட்கார்ந்து கொண்டு பேசுவதை, நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அதேபோல, தவறான சொற்கள் பயன்படுத்தப்படுமேயானால், அவை அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. அதேபோல, ஆளும் கட்சி வரிசையிலே இருந்து பேசுகின்றபோது நிதானம் இழக்காமல், ஏனென்றால் அவர்கள்தான் இதற்கு பொறுப்பு, பொறுப்பாக இருக்கின்ற நேரத்தில் நிதானமாக பேச வேண்டும். கண்ணியமாகப் பேச வேண்டும். உங்களிடத்திலே புள்ளிவிவரங்கள் இருக்கின்றன. தாராளமாக புள்ளிவிவரங்களைச் சொல்லுங்கள். தனிப்பட்ட முறையிலே தொடர்ந்து தாக்கிப் பேசுவது அவ்வளவு நல்லதல்ல. இந்த ** இதுபோன்ற வார்த்தைகள், சொற்கள் அவைக்குறிப்பிலேயிருப்பது அவைக்குப் பெருமை சேர்க்குமா என்பதை நீங்கள்தான் முடிவு செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அந்தச் சொற்கள் எல்லாம் நீக்கப்பட்டுவிட்டன.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2002 மே 3

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி சொல்லட்டும். உட்காருங்கள். பழனிசாமி சொல்லுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** அமைச்சர்கள் சென்ற ஆட்சியிலே எவ்வளவு குற்றம் குறை இருந்ததோ அதைச் சொல்வதிலே தவறு கிடையாது. அது ஒவ்வோர் ஆட்சி வருகிறபோதும் அமைச்சர்கள் மாறுகிறபோதும், அந்தக் குற்றம் குறையைச் சொல்லத்தான் செய்வார்கள். தாங்கள் சொல்கிறபோது ஏதாவது....

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அமைச்சர் அவர்கள் உட்கார்ந்து கொண்டு பேசுகிறார். தனிப்பட்ட முறையில். (குறுக்கீடு) No, இந்த பிரட்டல், இந்தக் கிண்டல் எல்லாம் என்னிடம் வைத்துக் கொள்ளாதீர்கள். வேறு யாரிடமாவது வைத்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் என்னைப் பார்த்துத்தான்..(குறுக்கீடுகள்) என்ன இதற்கு அர்த்தம்? (குறுக்கீடுகள்)

பிற்பகல் 6-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஸ்.ஆர்.பி. அவர்கள், என்ன, நீங்கள் மூத்த உறுப்பினர். இவ்வளவு ஆத்திரப்படக்கூடாது. உட்காருங்கள். ஆளுங்கட்சி உறுப்பினர்கள் தயவுசெய்து அமருங்கள். உட்காருங்கள். உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர், உட்காரச் சொல்லுங்கள். ஆளுங்கட்சி உறுப்பினர்கள் தயவுசெய்து அமருங்கள். ஆளுங்கட்சி உறுப்பினர்கள் தயவுசெய்து அமருங்கள். தயவுசெய்து அமருங்கள். உட்காருங்கள். இல்லை, மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்கள் மூத்த உறுப்பினர். நீங்களே ஆத்திரப்படக்கூடாது. என்ன பிரச்சினை என்றாலும் நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். தயவுசெய்து உட்காருங்கள். இல்லை, யாராக இருந்தாலும், எந்த உறுப்பினராக இருந்தாலும் தயவுசெய்து பேரவைத் தலைவரை நோக்கி விளித்துப் பேசலாம். அதைப்பற்றி ஒன்றும் பிரச்சனையே இல்லை. நீங்கள் என்னைக் குறை சொல்வதாக இருந்தாலும் . . .

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** என்னை விமர்சிப்பது எந்த வகையில் சரியாக இருக்குமென்று சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். திரு. நாகேந்திரன், இல்லை, மாண்புமிகு அமைச்சர் சொல்லுங்கள்.



2002 மே 3]

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். இல்லை, தயவுசெய்து உட்காருங்கள், உட்காருங்கள். நாகேந்திரன், உட்காருங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** உட்கார்ந்து கொண்டே பேசுகிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் ஏற்கெனவே சொல்லி விட்டேன். உட்கார்ந்து கொண்டே பேசுவதால்தான் பல பிரச்சினைகள் வருகின்றன

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** பொதுவாகச் சொல்லுங்கள். உட்கார்ந்து கொண்டே பேச வேண்டாமென்று சொல்லுங்கள். அத்தனை அமைச்சர்களும் என்னைப் பார்த்து இங்கே பேசுவது என்ன முறை என்றுதான் கேட்கிறேன். இரண்டாவது வரிசையில் இருக்கிற அத்தனை அமைச்சர்களும் நான் முதல் வரிசையில் இருக்கிற அமைச்சர்களைச் சொல்லவில்லை. இரண்டாம் வரிசையில் இருக்கிற அத்தனை அமைச்சர்களும் பதிலளித்துக் கொண்டிருக்கிற போக்குவரத்துத் துறை அமைச்சர் நிதானம் இழந்து பேசினார் ஒன்று. இரண்டாவது, உட்கார்ந்து கொண்டே என்னைப் பார்த்து பேசியதை, நான் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மாட்டேன், மூன்றாவது, முன் வரிசையில் இருக்கிற அமைச்சர்கள் அத்தனைபேரும், என்னிடத்திலே பேச வேண்டாமென்று, என்னைப் பார்த்து உட்காருங்கள் என்று சொல்வது—அதெல்லாம் முறையல்ல. நான் ஒரு மூத்த உறுப்பினர். இந்த அவையிலே ஒரு மூத்த உறுப்பினர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த அமைச்சர்கள் அனைவருமே ரொம்ப அமைதியானவர்கள். உங்களைச் சமாதானப்படுத்துவதற்காக ஏதாவது சொல்லியிருப்பார்களே தவிர, வேறு ஒன்றுமில்லை. கண்ணியக்குறைவாக நிச்சயமாக பேசியிருக்க மாட்டார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசட்டும், சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்களை பெரிதும் மதிக்கிறேன். அவர்களைப் பார்த்து தரக்குறைவாக நிச்சயமாக ஒருபோதும் நான் பேசவும் மாட்டேன், பேசவும் இல்லை. ஏதோ தவறு . . . (குறுக்கீடு) நான் என்னுடைய அமைச்சரிடம்... (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** உட்கார்ந்து கொண்டே நீங்கள் பேசியது என் காதிலே விழுந்தது. அளவோடு இருக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஸ்.ஆர். பி. அவர்கள் அவர்மீது ஆத்திரப்படுவதற்குக் காரணமே இல்லை.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** அவர் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** எனக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கிற அளவுக்கு அவரை ஒன்றும் பெரிய மனுஷனாக நான் நினைக்கவில்லை. எனக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கிற அளவிற்கு அவருக்குத் தெரியாது. எனக்கு அவர் பாடம் சொல்லித் தருகிறாரா? பாடம் யாருக்கு யார் சொல்லித் தருவது? நான் வேண்டுமானால் சொல்லித் தருகிறேன் எப்படி பதில் சொல்வது என்று...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஸ்.ஆர்.பி. அவர்கள் ஆத்திரப்பட வேண்டாம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எஸ்.ஆர்.பி. அவர்களைப் பார்த்து ஆத்திரப்படுகிற அளவுக்கு எந்தவிதச் சூழ்நிலையும் இல்லை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஆனால், தயவுசெய்து இதுபோல் தான் அவை நடக்கும் என்றால், நாங்கள் நிச்சயமாக அவை நடவடிக்கையிலே கலந்துகொள்ளத் தயாராக இல்லை. நாங்கள் வெளிநடப்புச் செய்து விடுகிறோம். (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் நடந்த நிகழ்ச்சிகளை நீங்கள் பார்த்தீர்கள். எங்களை ** என்றோ எதைச சொன்னாலும் பரவாயில்லை. எதிர்க்கட்சி வரிசையில் இருக்கிற மூத்தவர்களையும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீக்கப்பட்ட வார்த்தையை மீண்டும், மீண்டும் அரங்கேற்ற வேண்டாம். (குறுக்கீடு) ஏற்கெனவே நீக்கப்பட்ட சொற்களை மறுபடியும், மறுபடியும் அரங்கேற்ற வேண்டாம்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மத்தியிலே அமைச்சராக இருந்தவரை, மூத்த உறுப்பினர்களை, எதிர்க்கட்சி வரிசையில் இருக்கிறவர்களை, அவமானப்படுத்துகிற காரணத்தினால்--எத்தனையோ அமைச்சர்கள் பேசியிருக்கிறார்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



நாங்களும் வாதம் புரிந்திருக்கிறோம். ஆனால், ஓரளவு அவர்கள் எல்லை வைத்து, அவர்களும் பேசியிருக்கிறார்கள். நாங்களும் பேசியிருக்கிறோம். எல்லை மீறி எதிர்க்கட்சிகளை அவமானப்படுத்துகிற காரணத்தால்--அவர் எங்களை என்ன வேண்டுமானாலும் சபிக்கட்டும்--நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(திராவிட முன்னேற்றக் கழகச் சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்புச் செய்தனர்.)

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் எஸ்.ஆர்.பி. அவர்களை ஒருபோதும் சொல்லவில்லை. எப்படி தவறாகப் புரிந்து கொண்டார் என்று தெரியவில்லை. மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே இந்த அவையிலே சட்டமன்ற உறுப்பினராக இருந்திருக்கிறேன். ஆகவே, சட்டமன்ற மரபுகள் தெரியாதவன் இல்லை. (குறுக்கீடு).

பிற்பகல் 6-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசி முடிக்கட்டும். அமைச்சர் விளக்கம் சொல்லிக் கொண்டிருக்கிறார். அவர் முடிக்கட்டும்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மரபுகளை மீறிப் பேசும்போது, சிலர் வேண்டுமென்றே—உணர்ச்சிவசப்படக்கூடிய அளவிற்கு சில வார்த்தைப் பிரயோகங்கள் அங்கிருந்து வந்ததால், அதைத் தவிர்க்க முடியாத—அதற்காக நான் வருந்துகிறேன். அதற்காக அந்த வார்த்தையை நான் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன் என்று சொல்லிவிட்டேன் அத்தோடு பிரச்சினை முடிந்துவிட்டது.

இரண்டாவது கட்டமாக, ஒருபோதும், நான் இப்போதும் சொல்கிறேன். எஸ்.ஆர்.பி. அவர்களை நான் பெரிதும் மதிக்கிறேன். (குறுக்கீடு) இல்லை, (குறுக்கீடு) இல்லை. பெரிதும் மதிக்கிறேன். நிச்சயமாக அவரைச் சொல்லவில்லை. அவர் எப்படிப் புரிந்துகொண்டார் என்று எனக்கே புரியவில்லை. நான் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களிடமும், பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களிடமும் (குறுக்கீடு) கொஞ்சம் நான் சொல்லிவிடுகிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அதைத் தொடர்ந்து போகாதீர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** முடித்து, சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** உண்மைக்கு மாறாகப் பேசாதீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** என்னைப் பார்த்து, மிரட்டுகின்ற தொனியில், உட்கார்ந்தபடி நீங்கள் பேசியதை, என்னை விரல் நீட்டி-உங்களுக்கு இந்தக் கையை ஆட்டிப் பேசுவது முதலில்லே அதிகார-- ஜாக்கிரதை, அந்த இடத்திலேயிருந்து அப்படி பேசாதீர்கள் அடிக்கடி. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. (குறுக்கீடுகள்) மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்கள், அமைச்சர் அவர்களே விளக்கம் சொல்லிவிட்டார்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இல்லை. விளக்கம் எல்லாம் வேண்டாம், ஒழுங்காக பதில் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்களைக் குறிப்பிட்டுப் பேசவில்லை என்று அமைச்சர் சொன்னதற்குப் பிறகும் சொல்வது முறையல்ல.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, எப்படி அவர் தவறாகப் புரிந்து கொண்டார் என்று தெரியவில்லை. ஆனால், உண்மையிலேயே நான் என்ன சொன்னேன். (குறுக்கீடு) நான் முடித்துவிடுகிறேன். மாண்புமிகு சட்டப் பேரவை தலைவர் அவர்களே, நான் தொடர்ந்து பேசியதற்கு (குறுக்கீடு) சூழ்நிலைகள்..

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, சொல்லிவிட்டும். சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே நாங்களும் தொடர்ந்து பார்த்துக் கொண்டிருக்கிறோம். நீங்கள் சொல்கிறீர்கள். எதிர்க்கட்சிகளைவிட ஆளுங் கட்சிக்கு மிக முக்கியமான பொறுப்பு இருக்கிறது. பொறுப்பிலே இருக்கக்கூடியவர்கள் சற்று அடக்கி வாசிக்க வேண்டுமே தவிர,



எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கக்கூடிய நாங்கள் எல்லாம் அடங்கியிருக்கிறோம்; அமைதியாக இருக்கிறோம். மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்கள் ஒன்றும் தவறாகச் சொல்லவில்லை. மீண்டும் உண்மையைச் சொல்வதற்காக எழுந்து நின்று பேசுகிறார். அவர் பேசுகின்ற நேரத்திலேயே ஆளுங்கட்சி வரிசையிலே உட்கார்ந்துகொண்டு, கையை நீட்டி உட்காருங்கள் என்றே பேசுகிறார்கள். அதையெல்லாம் நீங்கள் அடக்குவது இல்லை. எதிர்க்கட்சி வரிசையிலே யாராவது உட்கார்ந்து பேசினால் உடனே அடக்குகிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை.

**திரு. ஜி.கே. மணி:** இதில் என்ன நியாயம் இருக்கிறது? (குறுக்கீடு) இல்லை, இப்போது பேசினார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, என்ன காரணம் என்று நான் சொல்கிறேன். என்ன காரணம் என்பதை நான் மணி அவர்களுக்குச் சொல்கிறேன். ஆளும்கட்சி உறுப்பினர்கள் எண்ணிக்கையிலே அதிகமாக இருக்கிறார்கள். சில நேரத்திலே கூச்சல் கிளப்புகிறார்கள். சில நேரத்திலே உட்கார் என்று சொல்கிறார்கள். நான் அதை ஒப்புக்கொள்கிறேன். எதிர்க்கட்சி வரிசையிலேயிருந்து, பிரதான எதிர்க்கட்சி வரிசையிலேயிருந்து, தவறான சொற்களை, கெட்ட வார்த்தைகளை, அவர்கள் என் காதிலே விழக்கூடிய அளவிற்கு, உட்கார்ந்திருக்கிற முதலமைச்சர் அவர்களுடைய காதிலே விழக்கூடிய அளவிற்கு, கொச்சையான வார்த்தைகளை அவர்கள் பேசுகிறார்கள். என்ன பேசினார்கள் என்று விளக்க வேண்டுமானால் என் அறைக்கு வாருங்கள். நான் தனியாகச் சொல்கிறேன். அதையும்விட, மோசமாக, எழுந்து நின்று, கைகளால், மோசமாக, கேவலமாக சைகை காட்டுகிறார்கள். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடந்த காரணத்தினால்தான், நான் சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டியதாக ஆகிவிட்டதே தவிர, யாரும் தவறாக, ஆளும் கட்சி உறுப்பினர்கள் பேசினாலும் சரி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசினாலும் சரி, அமர்ந்துகொண்டே பேசுவது என்பது முறையற்றது. அதை நான் எந்த நேரத்திலும் ஏற்றுக்கொள்ளவில்லை. நான் கண்டிக்கத் தயாராக இருக்கிறேன். ஆனால், இப்போது அமைச்சர் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறபோது, எதிர்க்கட்சி வரிசையிலேயிருந்து ஒரு ஒற்றைக் குரல், அவரைக் கேலி செய்வது போல் ஒலிக்கிறபோது, அவர் அதற்குப் பதில் சொல்ல வேண்டிய நிலைமை வருகிறது. அதிலேதான் பிரச்சினை வருகிறது.

ஆகவே, இந்தப் பிரச்சினை என்ன என்பதை, ஆளும்கட்சி வரிசையிலேயிருந்து மொத்தமாக குரல் கிளப்புவது என்பது வேறு. ஒரு ஒற்றைத் தனிக் குரல், ஒரு கெட்ட வார்த்தையை, மோசமான வார்த்தையைப் பயன்படுத்துகிறபோது, காதிலே விழுகிற அளவிற்குப் பயன்படுத்துகிறபோது, பதில் சொல்ல வேண்டிய நிலைமை வருகிறது. பிரச்சினை அப்படித்தான் உருவாகிறது.

**திரு. ஜி.கே. மணி:** தலைவர் அவர்களே, யார் தவறான வார்த்தைகளை, கொச்சையான வார்த்தைகளைப் பயன்படுத்தினாலும், நானே பயன்படுத்தினாலும்கூட, அது தவறு, அப்படிப் பேசக்கூடாது. மன்றத்திலே, எதிர்க்கட்சி வரிசையிலே பேசினால் அதைக் கண்டிக்கிறீர்கள். அதை ஏற்றுக்கொள்கிறோம். அதிலே தவறு இல்லை, மாறுபாடு இல்லை. இருந்தாலும்கூட, இந்த அவையை அமளிகரமாக்கக்கூடிய வகையிலே, ஒருவரை ஒருவர் மாறி மாறி புண்படக்கூடிய வகையிலே பேசிக்கொள்வது, எந்த வகையிலேயும் அவை மரபுக்கு நல்லதல்ல. இனிமேலாவது, இந்த நிமிடத்திலேயிருந்து மரபுகளை, கண்ணியத்தை, கட்டிக் காக்கக்கூடிய வகையிலே அவையை நடத்துமாறு எங்கள் கட்சியின் சார்பில் அமைதியாக அமர்கிறேன். அமைதியோடு கேட்டு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. போன்றவர்கள், திரு. மணி போன்றவர்கள், திரு. பழனிசாமி போன்றவர்கள்தான் தீயணைப்புப் படை மாதிரி இங்கே பணி செய்ய வேண்டுமே தவிர, அவர்களும் சேர்ந்து சில பிரச்சினைகளை உண்டாக்க வேண்டாம். ஆகவே, நீங்கள் சொல்லியிருக்கிற ஆலோசனைகளை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**திரு. ஜி. பழனிசாமி:** திரு. எஸ்.ஆர்.பி. கொஞ்சம் இருங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** கொஞ்சம், ஒரு நிமிடம், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக நாங்களும் சேர்ந்துகொண்டு எதையும் செய்ய வேண்டும் என்பதாக சொல்லவில்லை. தவறான சொற்கள் அவைக்குறிப்பிலே ஏறவேண்டாம் என்பதற்காக, அந்தச் சொற்களை மட்டும் அவைக்குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். வேறு ஒன்றும் இல்லை. உட்கார்கிறேன்.



பிறகு, அமைச்சர்கள் நடந்துகொண்ட முறை—பதில் அளித்துக்கொண்டிருக்கிற போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்தாலும் சரி, அவருக்குப் பக்கத்திலே இருக்கிற அமைச்சர்களாக இருந்தாலும் சரி, நடந்துகொண்ட முறை—நிச்சயமாக யாராலும் ஏற்றுக்கொள்ள முடியாது. அத்தனை அமைச்சர்களும் உட்கார்ந்தபடி பெயரைச் சொல்லி அழைத்து, மிரட்டுவதைப் போல பேசுவதை நிச்சயமாக ஏற்றுக்கொள்ள முடியாது. நீங்கள் அவையை நடத்துகின்ற முறையில், முறையாக நீங்கள் நடத்துவீர்களேயானால் நாங்கள் உங்களுக்கு முழு ஒத்துழைப்பைத் தருவோம். ஆனால், அமைச்சர் அவர்கள் பேசுகின்ற முறை சரியல்ல. அதை ஏற்றுக்கொள்ள முடியாது. அமைச்சர் இப்போது சொல்லிவிட்டார். நான் அந்த மாதிரி எந்த வார்த்தையையும் பயன்படுத்தவில்லை என்று சொன்னதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், அவர் தொடர்ந்து நடந்துகொண்ட முறையை நான் நேரிலே பார்த்துக்கொண்டிருந்தேன். அவர் நடந்துகொண்ட முறை யாராலும் ஏற்றுக்கொள்ள முடியாது. அவர் மட்டுமல்ல, அவர் அப்படிப் பேசியவுடனே மற்ற மூன்று, நான்கு அமைச்சர்கள் எனக்கு எதிராகப் போட்ட கோஷங்கள். நீங்கள் பார்க்கவில்லை. அது என்ன முறை? என்ன முறை என்று நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடு) இல்லை, அந்த வரிசையிலே இருக்கிற அத்தனை அமைச்சர்களையும் நான் சொல்லுகிறேன். முறையல்ல. அவர்கள் நடந்துகொண்ட முறை யாராலும் ஏற்றுக்கொள்ள முடியாது. இன்னொரு முறை அந்த அமைச்சர் அப்படி நடந்துகொள்வாரேயானால், நிச்சயமாக நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்பதை இந்த நேரத்தில் பதிவு செய்து, அதைப்போல நீங்கள் அனுமதிக்கக்கூடாது என்பதையும் நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

பிற்பகல் 6.30

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய அறிவுரைகளுக்கு நாங்கள் கட்டுப்படுகிறோம். அதில் ஒன்றும் மாறுபட்ட கருத்து இல்லை. ஆனால் ஒரு வார்த்தை தாங்கள் திருவாய் மொழிந்து, அமைச்சர்கள் இப்படி நடந்துகொள்ளக்கூடாது என்று எங்கள் காது குளிர நீங்கள் கண்டிக்கக் கூடாதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்களே ஒத்துக்கொண்டு 'நான் பேசிய வார்த்தையை அவைக்குறிப்பிலிருந்து நீக்கிவிடுங்கள், நான் கோபத்திலே சொல்லிவிட்டேன், என்னுடைய உணர்ச்சியை

தூண்டக்கூடிய வகையிலே பேசிவிட்டார்கள். நான் சொல்லிவிட்டேன். அந்த வார்த்தையை நீக்கிவிடுங்கள்' என்று அமைச்சர் அவர்களே கேட்டுகொண்டார்கள். எனக்கு அந்த வரிசையிலே இருக்கிற அமைச்சர்கள் அத்தனை பேரையுமே தெரியும்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அந்தச் சொல்லை திரும்பப் பெற்றுக்கொள்கிறேன் என்றோ அல்லது குறிப்பிட்ட ஒரு சொல்லை நான் வாபஸ் வாங்கிக்கொள்கிறேன் என்றோ, நீக்கிவிடுங்கள் என்றோ அவர் சொல்லவில்லை. அந்த ஒரு சொல் எந்தச் சொல்? இரண்டு சொற்கள் மோசமான சொற்கள் என்று நாங்களே சொல்லுகிறோம். எந்தச் சொல்லை சொன்னார் அவர்? (குறுக்கீடுகள்) அதையெல்லாம் தெளிவாகச் சொல்ல வேண்டும். சொல்லும்போது அமைச்சர் தெளிவாகச் சொல்லியிருக்க வேண்டும். இல்லாவிட்டால் நீங்களாவது அந்த இரண்டு சொற்களை நீக்கவேண்டுமென்று சொல்லியிருக்க வேண்டும். மொத்தம் பொதுவாக அந்த ஒரு சொல்லை நீக்கிவிடுகிறேன் என்று சொன்னால் எந்த ஒரு சொல்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, மீண்டும் அந்தச் சொல்லை சொல்லி, ஒரு பிரச்சினையைக் கிளப்ப வேண்டாம் என்றுதான் அதைச் சொல்லவில்லை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இல்லை, சரியாகச் சொல்ல வேண்டும். இரண்டு சொற்களை, தவறான இரண்டு சொற்களையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுங்கள் என்று அவர் சொல்லியிருப்பாரானால் பிரச்சினை அதோடு முடிந்திருக்கும். சொல்லவில்லை. அதுதான் பிரச்சினை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின் துறை அமைச்சர் உட்காருங்கள். (குறுக்கீடு) எஸ்.ஆர்.பி. அவர்களுக்கு நான் ஒன்றைத் தெரிவிக்கிறேன். அந்த வரிசையிலே இருக்கிற அமைச்சர்கள் அத்தனை பேரையுமே எனக்கு நீண்ட காலமாகத் தெரியும். ரொம்ப அமைதியானவர்கள்.

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்:** எனக்கும் தெரியும். நடந்து கொண்ட முறை சரியல்ல, அப்படி ஒரு நடத்தையை நான் அவர்களிடத்தில் எதிர்பார்க்கவில்லை. இனிமேல் அப்படி நடந்துகொள்ளக்கூடாது என்று சொல்ல விரும்புகிறேன். அவர்கள் நடந்துகொண்ட முறை மகா மட்டம்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மின் துறை அமைச்சர் ஏதாவது சொல்ல வேண்டுமா? சொல்லுங்கள், மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே எனக்கு முன்னால் பேசிய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், மதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் எஸ்.ஆர்.பி. அவர்களைப் பற்றி எதுவுமே பேசவில்லை. அவர்கள் நிதியமைச்சரைப் பார்த்து, எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கிறவர்கள் மட்டும் ** என்று சொன்னார்கள். அதனால்தான் வேகமாக பேசிவிட்டேன் என்று சொன்னார்களே தவிர, மாண்புமிகு பெரியவர் அவர்களைப் பார்த்து எந்த ஒரு வார்த்தையும் தவறாகச் சொல்லவில்லை. அதுமட்டுமல்ல, நான் அருகிலே இருந்து கொண்டிருக்கிறேன். என்னுடைய நடவடிக்கையை எதிரிலே உள்ளவர்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். பெரியவர் எஸ்ஆர்.பி. அவர்கள், அருகில் இருந்த அமைச்சர்கள் என்று சொன்னார்களே, அப்படி ஒட்டுமொத்தமாக எல்லா அமைச்சர்களையும் சொல்வது அவ்வளவு சரியானது அல்ல. அவையில் மூத்தவர்கள், வயதிலும் அனுபவத்திலும் பெரியவர்கள். இருந்தாலும் அவர்கள் வேகப்பட்டுப் பேசியிருக்க வேண்டாம் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக நான் கேட்டு அமர்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு பழனிசாமி, ஏதாவது சொல்ல வேண்டுமா?

**திரு. ஜி. பழனிசாமி:** நான் எப்போதுமே அவையில் ஒரு issue-வை உருவாக்க மாட்டேன். அவையினுடைய கண்ணியத்தைப் பாதுகாப்பதில் ரொம்ப ஜாக்கிரதையாக இருப்பேன். அதனால் சமரசம் என்பதல்ல. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு நீண்ட வரலாறு இருக்கிற சபை. நான் முதலில் மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நீங்களும்—ஆளுங்கட்சித் தரப்பிலிருந்து எவ்வளவு குற்றங்கள் குறைகள் சொல்லியிருந்தாலும் அதற்கு நீங்கள் உட்கார்ந்து கொண்டோ அல்லது பேரவைத் தலைவர் சொல்கிற மாதிரியோ, எந்த ஒரு சைகையும் காட்டாத அளவுக்கு உங்களுடைய உறுப்பினர்களை நீங்கள் கட்டுப்படுத்த வேண்டும் என்று உங்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அதேநேரத்தில் ஆளுங்கட்சித் தரப்பில் இருந்து, சபையிலே உட்கார்ந்து கொண்டிருக்கக்கூடிய ஓர் அமைச்சர் சொல்கிறபோது, முன்னாள் அமைச்சரை நேரடியாக தொடர்புகொண்டு பேசுவது என்பது இந்த அவையின் மரபுக்கு சரியே அல்ல. உங்களிடத்திலே சொல்லட்டும். அவர்கள் கொள்கையை சொல்லட்டும், சென்ற அரசு பல கோடிகளை கொள்ளை அடித்தது என்று சொல்லட்டும். எதை விட்டார்கள் என்று சொல்லட்டும். நேரடியாக போய், ஏதோ கிராமத்தில் பேசுவது போன்று, இப்படி சொல்வது என்பது முறையல்ல. அதேபோல உறுப்பினர்கள்—எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இறங்கி வருவது என்றால், ஆளுங்கட்சித் தரப்பிலிருந்து ஓடிவருவது என்பது சபையினுடைய மரபுக்கு நல்லதல்ல. எங்களைப் போன்றவர்கள் மக்கள் பிரச்சினைகளில் கவனம் செலுத்துவதற்கு இந்த சபையிலே இருப்பதா, இல்லையா என்பதிலே உண்மையிலேயே கவலை அளிக்கக்கூடிய விஷயமாக இருக்கிறது. இது first ஆகவும் இருக்கட்டும், கடைசியாகவும் இருக்கட்டும், இந்தச் சபையிலே இதுபோன்ற சம்பவங்கள், மன வருத்தப்படக்கூடிய அளவுக்கு இல்லாத வகையில், ஓர் ஆரோக்கியமான சூழ்நிலையில், திட்டங்களைப் பற்றி ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்குவதற்கு தாங்கள் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ 30 ஆண்டு காலமாக என்னைப் பற்றி உங்களுக்கு நன்றாகத் தெரியும். எப்போதும் அமைதியானவன் என்று பெயர் எடுத்தவன்தான். என்னை அமைதியானவன் என்றுதான் சொல்லுவார்கள். அப்படி சாந்தமாக அமைதியாக இருக்கக்கூடியவனைகூட உணர்ச்சி வசப்படக்கூடிய அளவுக்கு இங்கே சில வார்த்தைப் பிரயோகம் வந்ததால், நாங்கள் தெய்வமாகக் கருதுகிற புரட்சித் தலைவி அவர்களை விமர்சிக்கும் போது, சில தரமில்லாத unparliamentary words இங்கே பயன்படுத்தியதன் காரணமாக . . .

பிற்பகல் 6-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பிரச்சினையை விட்டுவிடுங்கள். நேரடியாக விளக்கத்திற்குப் போகலாம்.



**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** தவிர்க்க முடியாமல் அந்த வார்த்தைப் பிரயோகம் வந்துவிட்டது. அதற்காக நான் வருந்துகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொண்டேன். அதற்குப் பின்பும், நான் அதற்காக, சபைக் குறிப்பிலேயிருந்து அந்தத் தவறான வார்த்தையை, எந்த வார்த்தை இருக்கிறதோ அதை நீக்குவதில் எனக்கு ஆட்சேபனை இல்லை என்று சொன்னதற்குப் பின்பும், நான் பெரிதும் மதிக்கின்ற திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், அண்ணன் அவர்கள் எப்படி கோபப்பட்டார்கள் என்பது எனக்குப் புரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள். பிரச்சினையை முடித்துவிடலாம். பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வையுங்கள்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** அவர் என்னை இப்படித் தவறாகப் புரிந்துகொண்டிருப்பதால் தன்னிலை விளக்கம் சொல்ல வேண்டிய கட்டாயம் அவசியம். அவர் எப்படி புரிந்துகொண்டார் என்பது தெரியவில்லை. ஆனால், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களிடமும், எங்களது நிதி அமைச்சர் அவர்களிடமும், அவையில் என்ன நடந்தது, எதற்காகக் கோபப்பட்டு அந்த வார்த்தையைப் பயன்படுத்தினேன் நான், என்ற விவரத்தை அவர்களிடம் சொல்லிக் கொண்டிருந்தேன். அவர் என்ன சொல்கிறார். அவர் தன்னைப் பார்த்துப் பேசியதாக அவராக ஒரு கற்பனை செய்துகொண்டு (குறுக்கீடு) அதனால், பரவாயில்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களே, அந்தப் பிரச்சினை முடிந்துவிட்டது. ஏற்கெனவே அவர்கள் சொன்னார்கள், விளக்கம் சொல்லியாயிற்று. அது முடிந்துபோய்விட்டது. நீங்கள் மறுபடியும் விளக்கத்திற்குப் போங்கள். போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கையிலே விளக்கத்திற்குப் போங்கள்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** அதனாலே, அவர் அதைத் தவறுதலாக எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. ஆகவே, யாருக்கும் உங்களைத் தரக் குறைவாக, மதிப்புக் குறைவாக இங்கே பேச வேண்டிய அவசியம் இல்லை; யாருக்கும் இல்லை என்பதை மட்டும் உங்களுக்கு மீண்டும் ஒருமுறை பணிவோடு, அன்போடு தெரிவித்து, இப்போது நான் என்னுடைய உரையைத் தொடருகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி அவர்கள் சொன்னதைப்போல, பெயர்களைக் குறிப்பிட வேண்டாம் என்று சொன்னால் அவர்களுடைய ஆட்சியை மட்டும், வேண்டுமானால், தி.மு.க. ஆட்சிக்காலத்தில் என்று வேண்டுமானால் நான் அந்த வார்த்தைகளைப் பயன்படுத்திக்கொள்கிறேன் என்பதை அவருக்கும் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, இப்படிப்பட்ட போக்குவரத்துக் கழகங்களுக்கு மிகப்பெரும் ஒரு நிதி நெருக்கடி ஏற்பட்டதற்குப் பின்பு, தவிர்க்க இயலாத சூழ்நிலையில், காலத்தின் கட்டாயமாக அந்தக் கட்டண உயர்வை ஏற்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதேபோல, நான் சொன்னதுபோல, கொடி படர கொம்பு வேண்டும்; நட்டத்தை ஈடுகட்ட வழி வேண்டும், அந்த வகையிலே சிந்தித்துப் பார்த்துத்தான் போக்குவரத்துக் கழகங்களைத் தொடர்ந்து நடத்துவதற்கு, இந்தக் கட்டண உயர்வு செய்யப்பட்டது. ஆனாலும்கூட, இந்தக் கட்டண உயர்வும்கூட, மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, தமிழகத்திலே குறைவாகத்தான் இருக்கிறது என்பதை நான் உங்களுக்குப் பணிவோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், நமது மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் ஐ. கணேசன் அவர்களும் சொன்னார்கள், கர்நாடகத்திலே குறைவு என்று சொன்னார்கள். ஒரேயொரு, அதாவது சாதாரணப் பேருந்து ஒன்றுக்கு மட்டும்தான் கர்நாடகத்திலே குறைவு. ஆனால் மற்ற இனங்களில் எல்லாம் கர்நாடகத்திலே தமிழ்நாட்டைவிடக் கூடுதலாகக் கட்டணம் செலுத்துகிறார்கள். நான் அதை ஒப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இப்போது தமிழ்நாட்டிலே கட்டண உயர்வு அமல்படுத்தப்பட்டது, 6-12-2001 முதல் சாதாரணப் பேருந்திற்கு கிலோ மீட்டருக்கு 28 பைசா, மேற்கு வங்காளத்திலே அதே 28 பைசாதான். ஆந்திராவிலே 32 பைசா. கேரளாவிலே 35 பைசா; கர்நாடகத்திலே மட்டும் 25.75 பைசா. இந்த ஒரு அயிட்டத்தில் மட்டும், சாதாரணப் பேருந்துக்கு வசூலிக்கின்ற கட்டணத்திலே மட்டும், கர்நாடகத்திலே இரண்டே கால் பைசா குறைவாக இருக்கிறது. ஆனால் மற்ற எல்லா மாநிலங்களிலேயும், கேரளாவிலே 35 பைசா; ஆந்திராவிலே 32 பைசா; மேற்கு வங்கத்திலே 28 பைசா; ஆகவே மற்ற மாநிலங்களிலே எல்லாம் கூடுதலாக இருக்கிறது. அதேபோல, சொகுசுப் பேருந்துக் கட்டணம் தமிழ்நாட்டில் 32 பைசா கிலோமீட்டருக்கு, மேற்கு வங்காளத்தில் 37 பைசா; ஆந்திராவிலே 44 பைசா; கேரளாவிலே 54 பைசா. அதேபோல், அதி சொகுசுப் பேருந்துகளுக்கு தமிழ்நாட்டிலே 38 பைசா; மேற்கு வங்காளத்திலே அதி சொகுசு பஸ் இல்லை.



ஆந்திராவிலே 52 பைசா; கேரளாவிலே 63 பைசா. கர்நாடகத்திலே 46 பைசா. கர்நாடகத்திலே மற்ற சொகுசுப் பேருந்துகளுக்கும் அதி சொகுசுப் பேருந்துகளுக்கெல்லாம் தமிழ்நாட்டைவிடக் கூடுதல் கட்டணம்தான் அங்கு இருக்கிறது. ஆக, இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் கட்டண உயர்வு குறைவு என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நமது மரியாதைக்குரிய (குறுக்கீடு) திரு. சிவராஜ் அவர்கள் இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். அந்தப் பொன்னான நிலையை எடுத்துச் சொன்னதற்காக அவருக்கு நான் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, இந்தக் கட்டண உயர்வுக்குப் பின்புள்ள வருவாய் நிலையைப் பற்றி இங்கே மாண்புமிகு முன்னாள் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் விளக்கம் கேட்டார்கள். அவருக்கு நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். டிசம்பர் 20, 2000 முதல் 2001 வரை 4 மாதங்களில் பெற்ற மொத்த வருவாய், ரூபாய் 842.78 கோடி ஆகும். இது கட்டண உயர்வுக்கு முன்பு, ஆனால், கட்டண உயர்வுக்குப் பின்பு, 4 மாதங்களில் வருவாய் ரூபாய் 960.98 கோடி. எனவே, கட்டண உயர்வுக்குப் பின் குறிப்பிட்ட அந்த 4 மாதங்களில் 118.20 கோடி ரூபாய் கூடுதலாக போக்குவரத்துக் கழகங்கள் ஈட்டி உள்ளன. அதன் மூலம் படிப்படியாக வந்த நட்டம் ஓரளவிற்கு அணை போட்டு தடுத்து நிறுத்தப்பட்டது. 2000-2001-ல் மட்டும் ரூபாய் 129 கோடி நட்டமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பிற்பகல் 6-40

1996-97 முதல் தி.மு.க ஆட்சிக் காலத்தில், 2000-2001 வரை ஆண்டு ஒன்றுக்கு சராசரியாக சுமார் 300 கோடி ரூபாய் நட்டம் என்ற நிலை மாறி, 2001-2002 ஆம் ஆண்டில் நட்டம் பாதியாக குறைக்கப்பட்டு, ஏறத்தாழ 129 கோடி நட்டம் என்ற நிலையை எய்தியுள்ளது. இந்தக் கட்டண உயர்வுக்குப் பின்பும் இந்தக் குறிப்பிட்ட ஆண்டில் இன்னும் 129 கோடி ரூபாய் நட்டம் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே, இந்த நிதி நெருக்கடியும், போக்குவரத்துத் துறையில் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் சிறந்த செயல்திறமையால், செம்மையாக இன்று சிறிது சிறிதாக புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் மேம்பாடு அடைந்து கொண்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, தற்போது கட்டண உயர்வினால் மாதம் ஒன்றுக்கு இப்பொழுது வந்திருக்கின்ற வருவாய் ரூபாய் 29.5 கோடி. அதேபோல இனிமேல் வருங்காலத்தில், படிப்படியாக இந்த வருவாய் கூடி சுமார் 50 கோடி முதல் 58.5 கோடி ரூபாய் வரை மாதம் ஒன்றுக்கு கூடுதல் வருவாய் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த அளவிலே கணக்கிட்டால், ஆண்டு ஒன்றுக்கு சுமார் 600 முதல் 700 கோடி ரூபாய் கூடுதல் வருவாய் கிடைக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால், இந்த 700 கோடி ரூபாயில்—இதற்கு முன்பு ஆண்டு ஒன்றுக்கு தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தொடங்கி ஆண்டுக்கு 300 முதல் 350 கோடி ரூபாய் வரை நட்டம் ஏற்பட்டுக்கொண்டு வந்தது. இந்த நட்டத்தை ஈடுகட்டி—இந்தக் கூடுதல் வருவாய் 700 கோடி ரூபாய், 350 கோடி ரூபாய் நட்டத்தை ஈடுசெய்வதற்கு சரியாகி விடுகிறது. அந்த நட்டத்தை ஈடுகட்ட மேற்கொண்டு கூடுதல் வருவாய் வரும் என்று சொன்னால், அதிலே ஆண்டுக்கு இந்தக் கட்டண உயர்வுக்குப் பின்பு 300-லிருந்து 350 கோடி ரூபாய் கூடுதல் வருவாய் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த வருவாயை வைத்து போக்குவரத்துக் கழகங்களுடைய இக்கட்டான நிதிநிலைமை அனைத்தையும் சரிசெய்து விட முடியாது.

இன்றைக்கு தொழிற்சங்கங்களும், பல எதிர்கட்சியினரும், இந்தக் கட்டண உயர்வுக்குப் பின்பு, இந்த 700 கோடி ரூபாய் உங்களுக்கு வருமானம் வருகிறது, நீங்கள் ஏன் போனஸ் கொடுக்கக் கூடாது, மற்ற தொழிலாளர் பிரச்சினைகளையெல்லாம் தீர்க்கக்கூடாது என்று ஒரு பிரச்சாரத்தை, தவறான பிரச்சாரத்தை செய்கிறார்கள். அந்த 700 கோடி ரூபாயும் கைக்கு வந்து விட்டது போன்ற ஒரு தோற்றத்தை ஏற்படுத்துகிறார்கள். இந்த 700 கோடி ரூபாயில் நான் ஏற்கெனவே குறிப்பிட்டது போல, 350 கோடி ரூபாய் நட்டத்தை ஈடு செய்வதற்கே போய் விடுகிறது. அதற்கு மிகுதியாக கூடுதல் வருவாய் வருவது 350 கோடி ரூபாய்தான். ஆனால் இப்போது நான் சொல்லியிருக்கின்ற சில புள்ளிவிவரங்களை வைத்துப் பார்க்கும்போது, இந்த 350 கோடி ரூபாயை வைத்து—ஆண்டு ஒன்றுக்கு வருவாய் வருகின்ற கூடுதல் 350 கோடி ரூபாயை வைத்து போக்குவரத்துக் கழகங்களுடைய நிதிநிலையை சீரமைத்துவிட முடியாது. யானைப் பசிக்கு சோளப்பொறி போட்ட கதையாகத்தான் இந்த வருவாயும் இருக்கிறது என்பதை உங்களுக்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



இதற்கு முன்பு ஏற்கெனவே நான் சொன்ன போக்குவரத்துக் கழகங்களினால் ஏற்பட்டிருக்கின்ற நட்டத்தோடு கூடுதலாக இதுவரை தி.மு.க. ஆட்சியில் டீசல் மற்றும் மண்ணெண்ணெய் வாங்கிய வகையில் நிலுவையில் இருக்கிற தொகை 67.31 கோடி ரூபாய். அதேபோல் டயர், உதிரி பாகங்கள், கூண்டு கட்டும் உதிரி பாகங்கள் வாங்கிய வகையில் 38.27 கோடி ரூபாய் கொடுக்க வேண்டும். மோட்டார் வாகன விபத்து இழப்புத் தொகை 52.8 கோடி ரூபாய் இன்னும் கொடுக்கப்படாமல் இருக்கிறது. பிராவிடெண்ட் பண்டு, கிராஜுவட்டி, தொழிலாளர் மற்றும் நாணயச் சங்கம் மற்றும் இதர பிடித்தங்கள் செய்த வகையில், தொழிலாளர்களிடத்திலே பிடித்திருக்கின்ற தொகை மட்டும் ரூ.207.45 கோடி. தொழிலாளர்களிடம் இதுவரை பிடித்திருக்கின்ற தொகையைக்கூட அவர்களுக்குத் திருப்பிக் கொடுக்கவில்லை தொழிலாளர்களுடைய பணத்தை 275.45 கோடி ரூபாயை பாக்கியாக வைத்துச் சென்று விட்டார்கள். ஆகவே, இதர வகையிலும், பிரிண்டிங் போன்ற பல்வேறு miscellaneous item-மிலும் 7.57 கோடி ரூபாய் பாக்கி வைத்துவிட்டு சென்றிருக்கிறார்கள். ஆக, இந்தச் சிறு சிறு வகையிலேகூட, கடன் தொகை ரூபாய் 373.41 கோடியாக நிலுவையில் இருக்கின்றது. ஆகவே, தொழிலாளர்களுக்காக இப்பொழுது குரல் கொடுக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்களை நான் கேட்டுக்கொள்வதெல்லாம், உங்களுடைய ஆட்சிக் காலத்திலே தொழிலாளர்களிடமிருந்து பிடித்து வைத்திருக்கின்ற தொகையைக்கூட திருப்பிக் கொடுக்க முடியவில்லை. அவர்களுக்கு. இந்த அளவிற்கு, கடன் தொகையை, நிதி நெருக்கடியை ஏற்படுத்திவிட்டு, ஒரு பக்கத்திலே நிதி நெருக்கடியை உருவாக்கிவிட்டு, மறு பக்கத்திலே தொழிலாளர்களுக்கு போனஸ் கொடு என்று சொல்கின்றபோது 'பிள்ளையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டுகின்ற' கதையாக இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இரட்டை நாக்கோடு, இரட்டை வேடம் போட்டுக் கொண்டிருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இன்று நான் உங்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 6-45

எல்லாவகையிலும் போக்குவரத்துத் துறையை கடனாளியாக்கி முடித்தாகிவிட்டது. இனிமேல் அதற்கு மேல் ஒன்றும் செய்வதற்கு இல்லை. அந்தநிலையிலே சைபர் நிலையிலே வைத்தால்கூட பரவாயில்லை. அல்லது சம நிலையில் வைத்திருந்தாலும் பரவாயில்லை. கடன், கடன்; அதல பாதாளத்திற்கு நிதிநிலையைத் தள்ளிவிட்டு, இப்போது தொழிலாளர்களுக்காகவும் குரல் கொடுப்பது வேடிக்கையாகவும் விந்தையாகவும் இருக்கிறது. அதற்கு அடுத்தபடியாக இந்தக் கடனையெல்லாம் திருப்பிச் செலுத்த வேண்டும். அதற்கு அடுத்தகட்டமாக மற்றொரு ....

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசி முடித்து விடட்டும்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** I am not yielding. பேச்சை முடித்துவிடுகிறேன். கணக்கை முடித்துவிடுகிறேன். பிறகு சொல்லலாம்.

அதற்கு அடுத்தகட்டமாக, மற்றொரு வகையிலும் சில விவரங்களை நான் உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம்—T.D.F.C.— அந்த நிறுவனத்திற்கும் தி.மு.க. ஆட்சியிலே பாக்கி வைத்திருக்கிறார்கள். அண்ணா தி.மு.க., எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா ஆட்சிக் காலத்திலும் பாக்கி இருந்தது. ஆனால் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அந்த பாக்கி, நிலுவைத் தொகை T.D.F.C.-க்கு, தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்திற்கு, போக்குவரத்துக் கழகங்கள் கொடுக்க வேண்டிய பாக்கி, எந்த அளவுக்கு உங்களுக்குக் கடனைச் சுமத்தியிருக்கிறார்கள் என்ற விவரத்தையும் உங்களுக்கு நான் தெரிவித்தாக வேண்டும். அந்த வகையிலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஆட்சிக்கு வருவதற்கு முன்பாக, 31-3-1991-இல் அம்மா அவர்கள் ஆட்சி ஏற்படுவதற்கு முன்பாக ரூ.167.89 கோடி நிலுவைத் தொகை இருந்தது. அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்பு, அந்த ஆட்சி முடிகின்ற நேரத்தில், 1996-இல், அந்தக் கடன் நிலுவைத் தொகை ரூ. 380.72 கோடியாக உயர்ந்தது. ஆக, 5 ஆண்டு காலத்தில் 212 கோடி ரூபாய் அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலே நிலுவையில் இருந்தது. ஆனால், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக் காலத்தில், 5 ஆண்டு காலத்தில் அந்த நிலுவைத் தொகை ரூ. 977.28 கோடியாக உயர்ந்து,



இன்றைக்கு தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்திற்கு போக்குவரத்துக் கழகங்களை மிகப் பெரும் கடனாளியாக மாற்றி விட்டார்கள். அந்த வகையிலும், எல்லா வகைகளிலும் போக்குவரத்துக் கழகங்களை கடன் சுமையிலே இன்றைக்கு சிக்க வைத்துவிட்டு சென்றுவிட்டார்கள். ஆகவே, இப்படிப்பட்ட இக்கட்டான நிலையில் உள்ள இந்தப் போக்குவரத்துக் கழகங்களை காப்பாற்றுவதற்கு, அம்மா அவர்கள் சில கொள்கை முடிவுகளை எடுக்க வேண்டிய கட்டாயமும் சூழ்நிலையும் ஏற்பட்டது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

தொடர்ந்து இவ்வளவு பெரிய நிதி நெருக்கடியில், இந்தப் போக்குவரத்துக் கழகங்களை நடத்திடல் வேண்டும். தொழிலாளர்களுக்கு சில நன்மைகள் எல்லாம் செய்திடல் வேண்டும். அதேபோல தொழிலாளர்களுக்கு ஏதோ இந்த அரசு எதிரான அரசு என்ற தோற்றத்தை ஏற்படுத்துவதற்கு சிலர் முயன்று கொண்டிருக்கிறார்கள். தொழிலாளர்களைப் பொறுத்த அளவிலே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தொழிலாளர்களுடைய உண்மையான தோழனாக, தொழிலாளர்களுக்கு அவர்களுடைய வாழ்க்கையிலே, அவர்களுடைய வசந்தத்திற்காக, அவர்களுடைய முன்னேற்றத்திற்காக இன்றைக்கு எல்லா வகைகளிலும் சிந்தித்துக் கொண்டிருக்கிற ஒரே தலைவி நமது புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான்.

அதேபோல, இதற்கு முன்பு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். காலத்திலும் போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு மறுமலர்ச்சியை, புதிய புதிய வசதிகளை எல்லாம் செய்து கொடுத்தார்கள். அன்றைக்கிருந்த நம்முடைய ஆட்சிக் காலத்தில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான், போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்காக, கல்லூரிகள், மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி, பல்வேறு ஐ.டி.ஐ., பாலிடெக்னிக்குகள் போன்ற வசதிகளையெல்லாம் செய்து கொடுத்தார்கள். அதேபோல, அதனுடைய அடிப்படையிலே இன்றைக்குப் படிப்படியாக தொழிலாளர்களுடைய நலனுக்காக அக்கறையோடு செயலாற்றிக் கொண்டிருக்கிற அரசுதான் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. ஆனால் சென்ற ஆட்சியில் ஏற்படுத்தப்பட்டுவிட்ட மிக மோசமான நெருக்கடி காரணமாக, தொழிலாளர்களுக்கு கொடுக்க வேண்டிய அந்தத் தொகையை, கருணைத் தொகையையும், போனஸையும் கொடுக்கக் கூடாது என்ற எண்ணம் அரசுக்கு இல்லை. அம்மா அவர்களுக்கும்

இல்லை. ஆனால் கொடுக்க முடியாத நிலையை உருவாக்கிவிட்டுச் சென்று விட்டார்கள் என்பதைத்தான் உங்களுக்கு நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆனால் அப்படியிருந்தாலும், இவ்வளவு மோசமான நிலையிலும் 8.33 சதவீதம் போனஸ் தொகை கொடுத்தாகி விட்டது. இன்னும் 20 சதவீதம் தர வேண்டுமென கேட்கிறார்கள். அதைக்கூட அம்மா அவர்கள் ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்கள். எங்களுடைய மாண்புமிகு முன்னாள் போக்குவரத்துத் துறை அமைச்சரும் சொல்லியிருக்கிறார்கள். நிதி நிலை சீரடைந்ததற்குப் பிறகு அதுகுறித்து பரிசீலிக்கப்படும்; கவனிப்போம் என்றும் சொல்லி இருக்கிறார்கள். நிதி நிலை இன்னும் சீரடையவில்லை என்பதைத்தான் நான் உங்களுக்கு பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில், நெருக்கடி நிலையில், இவ்வளவு பெரிய நட்டத்தை ஏற்படுத்திவிட்ட இந்தத் துறையில் சில சீர்திருத்தங்களைச் செய்து நட்டத்தைக் குறைப்பதற்கும் சில வழிமுறைகளை அம்மா அவர்கள் சிந்தித்தார்கள். அதைப்போல மக்களுடைய தேவைகளும் நாளுக்கு நாள் கூடிக்கொண்டே வருகிறது. மக்களுடைய தேவைகளை, அவர்களுடைய அபிலாஷைகளை, அவர்களுடைய வேண்டுகோள்களை நாம் பூர்த்தி செய்ய வேண்டுமென்று சொன்னால், அதற்கும் நிதி தேவைப்படுகிறது. மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் போதுமான நிதி வசதி போக்குவரத்துக் கழகங்களிடம் இல்லை. ஆகவே, இப்படியே தொடர்ந்து நடத்திக்கொண்டிருந்தால், மக்களுக்குச் செய்ய வேண்டிய பணிகளையும், சேவைகளையும், வசதிகளையும் தொடர்ந்து செய்ய முடியாத நிலை ஏற்படும். ஆகவே, மக்களுடைய நலனுக்காக மக்களுடைய வசதிக்காக, அம்மா அவர்கள் சில வழித்தடங்களை, போக்குவரத்துக் கழகங்களில் நடத்தப்படுகின்ற வழித்தடங்களில் சில வழித்தடங்களை, select routes அவற்றைத் தனியாருக்குக் கொடுப்பது என்று முடிவு எடுத்திருக்கிறார்கள்.

பிற்பகல் 6-50

போக்குவரத்துக் கழகங்களையே தனியார்மயமாக்குவது என்பதற்கும், போக்குவரத்துக் கழகங்களில் சில தேர்ந்தெடுக்கப்பட்ட வழித்தடங்களைத் தனியாருக்கு கொடுப்பது என்பதற்கும் உள்ள வித்தியாசத்தை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, தனியார்மயமாக்குவது என்றால்,



முழுவதும் தனியார்மயமாக்கிவிடுவார்கள் என்ற அச்சம் உங்கள் யாருக்கும் தேவையில்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல இன்றைக்கு தொழிலாளர்களுடைய சென்ற வேலை நிறுத்தத்தின்போது, தொழிலாளர்கள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் அம்மா அவர்கள் சில அறிவுரைகளை வழங்கியிருக்கிறார்கள். அந்த வகையிலே போக்குவரத்துக் கழக ஊழியர்கள் கடந்த 9-11-2001 முதல் 25-11-2001 வரை சட்ட விரோதமான வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு, போக்குவரத்துக் கழகங்களுக்கு ரூபாய் 46.7 கோடி இழப்பை ஏற்படுத்தினார்கள். இதன் காரணமாகவும் பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்ததன் காரணமாகவும், அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் விதி முறைகளின்படியும், மொத்தம் 1,804 ஊழியர்கள் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டிருந்தார்கள். இந்த ஊழியர்கள் புரிந்துள்ள குற்றத் தன்மையை ஆய்வு செய்து, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி, 1,271 ஊழியர்களின் தற்காலிக பணிநீக்கம் அவர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கைக்குக் குந்தகம் இல்லாமல் விலக்கிக்கொள்ளப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், இன்னும் பணிநீக்கத்திலிருந்து விடுவிக்கப்படாமல் உள்ள ஊழியர்களின் குற்றத்தன்மையை ஆய்வு செய்து, மிகக் கொடும் குற்றங்கள் செய்தவர்களைத் தவிர, மீதமுள்ள ஊழியர்களின் தற்காலிகப் பணிநீக்கத்தினையும், அவர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கைக்குக் குந்தகம் இல்லாமல் விலக்கிக்கொண்டு, அவர்களுக்கு மீண்டும் பணியளிக்க வேண்டுமென்று ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், போக்குவரத்துத் துறையின் மூலமாக செய்ய வேண்டிய பணிகளைப் பற்றி, அவர்களுடைய சில ஆலோசனைகளை வழங்கியிருக்கிறார்கள். சில அறிவிப்புகளை வெளியிடுவதற்கு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அவர்களுடைய ஆணையின்படி, மாண்புமிகு தமிழக முதல்வர், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிவுரையின்படியும், ஆலோசனையின்படியும், இலட்சியப் பாதையை நோக்கி போக்குவரத்துத் துறை சென்றுகொண்டிருக்கிறது. மாண்புமிகு தமிழக முதல்வர், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அயராத உழைப்பில், மீண்டும் போக்குவரத்துத் துறை புத்துணர்ச்சி பெறுகிறது. புதிய அறிவிப்புகளின்

வாயிலாக போக்குவரத்துத் துறை முன்னேற்றப் பாதையை நோக்கி அடியெடுத்து வைக்கிறது. மாண்புமிகு தமிழக முதல்வர், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி 2002-2003ஆம் ஆண்டிற்கான கீழ்க்கண்ட அறிவிப்புகளை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன் :—

(1) 2002-2003ஆம் ஆண்டில், நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு 227.50 கோடி ரூபாய் செலவில் ஏற்கெனவே வயது முதிர்ந்து ஓடிக்கொண்டிருக்கும் பேருந்துகளை மாற்ற, 2,275 புதிய பேருந்துகள் வாங்கப்படும். இதற்கான நிதியுதவியை தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் வழங்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

(2) 2002-2003ஆம் ஆண்டிற்கான ஆளுநர் உரையிலும், நிதிநிலை அறிக்கையிலும் குறிப்பிட்டவாறு, பேருந்து இயக்கத்தில் சில குறிப்பிட்ட தடங்கள் படிப்படியாகத் தனியார்மயமாக்கப்படும். இதற்காக ஓர் உயர்மட்டக் குழு நியமிக்கப்படும்.

(3) போக்குவரத்துக் கழகங்களின் சீரமைப்புப் பணியினை மேம்படுத்தும் விதமாக, தற்போதுள்ள 18 அரசு போக்குவரத்துக் கழகங்கள், 7 கழகங்களாக ஒருங்கிணைக்க, மத்திய அரசின் அனுமதியைப் பெறுவதற்கு துரித நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(4) சென்னை நகரில் வாகனப் புகையைத் தவிர்த்து, சுத்தமான காற்றை மேம்படுத்தும் வண்ணம், ஏற்கெனவே ஓடிக்கொண்டிருக்கும் பழைய பேருந்துகளை படிப்படியாக மாற்றி, அவற்றிற்குப் பதிலாக ஈரோ-2 தகுதி பெற்றுள்ள இன்ஜின்கள் பொருத்தப்பட்டுள்ள புதிய பேருந்துகள் அறிமுகப்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) நடப்பாண்டில் புதிதாக சென்னை மாநகரத்தில் 200 இவ்வகைப் பேருந்துகள் அறிமுகப்படுத்தப்படும்.

பிற்பகல் 6-55

போக்குவரத்துக் கழகங்களின் நிதிநிலை சீரமைப்பு, இயக்கத் தகுதி முன்னேற்றம், பராமரிப்பு, சாலைப் பாதுகாப்பு இவற்றைச் சீரமைக்க குறிப்பிட்டக் காலக்கெடுவுக்குள் முடித்திட தக்க ஏற்பாடுகள் செய்யப்படும்.

சென்னையில் உள்ளது போல் தமிழகத்தில் உள்ள இதர முக்கியப் பெருநகரங்களில், 500 ஒளிரும் மற்றும் சாதாரணப் பேருந்து நிழற்குடைகள் அமைக்கப்படும். சென்னை, தியாகராய நகர்,



சைதாப்பேட்டை, வடபழனி பேருந்து நிலையங்களில் உள்ளது போல் மின்னொளி விளம்பரப் பலகைகள் இதரப் பேருந்து நிலையங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

அதேபோல, பொதுமக்களின் வசதிக்காக சிறப்பு சுற்றுலாப் பேருந்து மற்றும் ஆலய தரிசன சிறப்புப் பேருந்துகள் விடப்படும்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஹேமச்சந்திரன், அமைச்சர் முடிக்கவில்லை.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** இதோ முடித்து விடுகிறேன். (குறுக்கீடு) இதோ முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஹேமச்சந்திரன், 'ஆக்கப் பொறுத்தது, ஆறப் பொறுங்கள்' அமைச்சர் முடித்துவிடட்டும்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இல்லை, இல்லை, 2002-2003ஆம் ஆண்டு ஆளுநர் உரையிலே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் பதில் சொல்லி முடித்தவுடன், நான் உங்களைக் கூப்பிடுகிறேன். (குறுக்கீடு)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** ஆளுநர் உரையிலே தனியார் மயமாக்கப்படும் என்று சொல்லப்பட்டுள்ள அந்த நிலையை ஆட்சேபித்து நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

[இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.]

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** இதோ முடித்துவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அறிவித்துவிட்டு போகப் போகிறார்கள்!

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** அடுத்த அறிவிப்பு இருக்கிறது. இன்னும் பாதி அறிவிப்பு இருக்கிறது. (குறுக்கீடு) நான் முழுமையாகப் படித்ததற்குப் பிறகுகூட நீங்கள் வெளிநடப்புச் செய்யுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருணாகரன், என்ன உங்கள் தலைவர் கிளம்பிவிட்டார்? (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறை, இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள், நிர்வாகம், செயல்பாடு குறித்து, சில கருத்துகளை மிகச் சுருக்கமாக தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆதிமனிதன் கால்நடையாய்ப் போனான், அதன் பின்னர் வந்தோர், கட்டை வண்டிகளில் போனார்கள். பின்னர் விஞ்ஞான வளர்ச்சியில், போக்குவரத்து, மனித வர்க்கத்தை அதிநவீன உலகத்திற்கு அழைத்துச் சென்றது. ஆனால், கடந்தகால அரசோ நவீனமயமான போக்குவரத்தை, கட்டை வண்டிப் பயணம் போல மாற்றிற்று. அமாவாசை இருட்டிலே பெருச்சாளி சென்றதெல்லாம் பாதை என்பது போல, கடந்த கால ஆட்சி செய்த அலங்கோலங்கள், போக்குவரத்துத் துறையில் கணக்கில் அடங்கா. இப்படிப்பட்ட இன்றைய நவீன உலகில் கணினி எவ்வளவு முக்கியமோ, அதுபோன்று போக்குவரத்துத் துறையும் அதிமுக்கிய பங்கு வகிக்கின்றது. போக்குவரத்து இல்லையேல் வாழ்க்கையே இல்லை என்ற சூழ்நிலை உருவாகி விடும். உலகம் இயங்குவது சக்கரத்திலே. 'The world moves on Wheels' என்ற கூற்றுக்கு ஏற்ப, சான்றாக இன்றைக்கு சமுதாயத்தின் முதுகெலும்பாக இத்துறை இயங்கி வருகிறது. இப்படிப்பட்ட பயனுள்ள இந்தப் போக்குவரத்துத் துறையைச் சீரமைப்பதற்காகவும், பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையிலே, இந்தத் துறை 2001-2002 ஆம் ஆண்டிற்கு, அரசுக்கு ஈட்டித் தந்த வருவாய் மட்டும் ரூபாய் 645.29 கோடி ரூபாயாகும். இந்த அளவிற்கு அரசுக்கு வருவாய் ஈட்டிக் கொடுத்து, மக்களுக்கும், நல்ல பல பணிகளை செய்து கொண்டிருக்கின்ற இந்தப் போக்குவரத்துத் துறையில் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்து புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சில ஆணைகளை வெளியிட்டிருக்கிறார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையின்படி...

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்புகளை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தந்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன அறிவிப்பு செய்கிறோம் என்பதை written ஆகக் கொடுத்திருக்கிறார்கள். ஆகையினாலே, அதிலே நாங்கள் எதிர்பார்த்த செய்திகள் இல்லை. போக்குவரத்துத் துறையில் அரசுடைமையாக்கப்பட்ட



வழித்தடங்களை தனியாருக்குத் தருவது என்று அரசு எடுத்திருக்கும் முடிவை எதிர்த்தும், அரசின் இத்தகைய போக்கு, முதலாளித்துவத்தை ஊக்குவிக்கும் செயல் என்பதாலும், போக்குவரத்து ஊழியர்களின் நியாயமான கோரிக்கையை இந்த அரசு புறக்கணித்து விட்டதாலும், இந்த அரசின் தொழிலாளர் விரோதப் போக்கைக் கண்டித்து, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச்செய்தனர்.)

**திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** அறிவிப்புகளைச் சொல்லி விடுகிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள். தங்களுடைய பதிலுரையிலே, இந்த நடப்பாண்டிலே போக்குவரத்துக் கழகங்களிலே இலாபம் 600 கோடி ரூபாயிலிருந்து 700 கோடி ரூபாய் வருவதாகச் சொன்னார்கள். ஆகவே, இலாபகரமாக இயங்கக்கூடிய இந்தப் போக்குவரத்துக் கழகங்களை, தனியாருக்குத் தாரை வார்த்துக் கொடுக்கக்கூடிய இந்தப் போக்கைக் கண்டித்தும், அதேபோல கடந்த காலங்களிலே போனஸ் கேட்டுப் போராடிய தொழிலாளர்கள்மீது போடப்பட்ட வழக்குகளை முழுமையாக வாபஸ் பெறாததாலும், அவர்கள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையிலே, அவர்களுடைய தற்காலிக பணி நீக்கத்தை இரத்து செய்யாத காரணத்தினாலும், தொழிலாளர்களுடைய ஒட்டுமொத்தக் கோரிக்கையை நிராகரித்த, தொழிலாளர் விரோதப் போக்கைக் கண்டித்தும், தனியாருக்குக் கொடுப்பதைக் கண்டித்தும் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வெளிநடப்புச் செய்கிறோம்.

(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

பிற்பகல் 7-00

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரை வழங்குகிறபோது, போக்குவரத்துத் துறையை தனியார்மயமாக்க மாட்டோம் என்று

சொல்லிவிட்டு, ஆனால், அறிவிப்பிலே தனியார்மயமாக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருப்பது என்பது ஒரு முரண்பாடான கருத்து. 1,700 தொழிலாளர்களுக்கு மேலே, போராட்டத்திலே கலந்துகொண்டிருக்கிற அந்தத் தொழிலாளர்களை தற்காலிக வேலை நீக்கம் செய்து, அவர்கள் உடனடியாக இன்றைக்கு தமிழகம் முழுவதும் குடும்பத்தோடு, உண்ணாவிரதம் இருந்துகொண்டிருக்கிறார்கள். இதிலே அவர்களுக்கு ஒரு மகிழ்ச்சிகரமான அறிவிப்பை, அனைத்துத் தொழிலாளர்களையும் வேலைக்கு எடுத்துக்கொள்வோம் என்ற அறிவிப்பை எல்லாக் கட்சிகளும் எதிர்பார்த்தன. அந்த வகையிலேதான் நாங்களும் எதிர்பார்த்தோம். அதிலேயும் ஒரு பரிசீலனை என்று இல்லாமல், பாரபட்சத்தோடு, அந்தத் தொழிலாளர்களைப் பழிவாங்குகிற ஒரு போக்கு அவருடைய பதிலுரையிலே இருக்கின்ற காரணத்தினால்'. ஒரு தெளிவான பதில் இல்லை, தெளிவான ஒரு பதிலுரை இல்லை என்பதால் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுடைய பதிலுரையில் சில தெளிவான அறிவிப்புகளை நாங்கள் அத்தனை பேரும் எதிர்பார்த்தோம். குறிப்பாக, போக்குவரத்துத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்த நேரத்திலும் சரி, வேலை நிறுத்தத்தை கைவிட்ட நேரத்திலும் சரி, அரசாங்கம் இதுகாறும் கொடுத்து வந்த போனசை இந்த ஆண்டும் கொடுக்கிறோம்; இப்போது 8.33 சதவீதம் வாங்கிக் கொள்ளுங்கள்; தமிழ் புத்தாண்டின்போது மற்றத் தொகையைக் கொடுத்து விடுகிறோம் என்று உறுதி அளித்தீர்கள். அந்த உறுதிமொழியை இப்போது நாங்கள் செயல்படுத்த முடியாத நிலையில் இருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னது, வருத்தத்தைக் கொடுக்கிறது. அதேபோல, தொழிலாளர்களைப் பழிவாங்கும் வகையில், தொழிலாளர்களை வேலைக்குச் சேர்த்துக் கொள்ள மாட்டோம் என்று சொல்வதும், கொடுத்த உறுதிமொழிக்கு ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. நாங்கள், எங்களைப் பொறுத்தவரை, சில வழித்தடங்களைத் தனியாருக்குக் கொடுப்பதை நான் தவறு என்று சொல்லவில்லை. ஆனால், நான் தெளிவாகவே கேட்டிருக்கிறேன். ஆளுநர் உரையின் போதும் கேட்டிருக்கிறேன். அதற்குப் பிறகும் கேட்டிருக்கிறேன். எந்தெந்த



வழித்தடங்களை எந்த அடிப்படையில் தனியாருக்குக் கொடுக்கப் போகிறீர்கள் என்று தெளிவுபடுத்த வேண்டுமென்று நான் கேட்டிருக்கிறேன். நிதியமைச்சர் அவர்கள் பல்வேறு பிரச்சினைகளைப் பேசும்போது பேச முடியாமல் போயிருக்கலாம். அது தவறில்லை. ஆனால், குறிப்பிட்ட அந்தத் துறை அமைச்சர் பேசுகின்ற நேரத்திலே தெளிவாக விளக்க வேண்டும். நாங்கள் போக்குவரத்துத் துறை முழுவதையும் தந்துவிடவில்லை; சில வழித்தடங்களை என்றால் எந்த வழித்தடங்களை, எந்த அடிப்படையில், என்ன Norms அதைத் தெளிவுபடுத்தியிருக்க வேண்டும். அதையும் தெளிவுபடுத்தவில்லை. எனவே, இதனைக் கண்டித்து, தொழிலாளர் விரோதப் போக்கைக் கண்டித்து, நாங்கள், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினர் வெளிநடப்புச் செய்கிறோம்.

(தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்த வழித்தடங்களைத் தனியாருக்குக் கொடுக்கலாம், அனுமதிக்கலாம் என்பது குறித்து முடிவு செய்வதற்கு, அதை எந்தவகையிலே செயல்படுத்தலாம் என்பது குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்குவதற்காகத்தான் 6 பேர் கொண்ட உயர்மட்டக் குழுவை அமைப்பதாகச் சொல்லியிருக்கிறோம். ஆகவே, எதிர்க் கட்சியினர் அதைப் புரிந்துகொள்ள வேண்டுமென்று அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை நினைவூட்ட விரும்புகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசி முடித்து விடட்டும். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்ற அறிவிப்பிலே, தொழிலாளர்கள் காக்கப்படுகின்ற நிலை காணப்படவில்லை. தனியார்மயம் என்று சொல்கின்றபோது, கடந்த கால அரசு புதிய வழித்தடங்கள் என்று சொல்லி, மினி பேருந்துகளை விட்டிருக்கிறார்கள். நீங்கள் விடுவதாகச் சொல்கின்ற வழித்தடங்கள், அரசுப் பேருந்துகள் போகின்ற தடங்களாக இருக்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதைக் கண்டித்து இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்களுமா, போளூர் வரதன்?

***திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நலனை விரும்புகிற அரசிலே, சில நிறுவனங்களிலே நஷ்டம் வருவது சகஜம்தான். போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரையில் அரசினுடைய ஆதிக்கம் இருக்கின்ற வகையிலேதான் தனியார் பேருந்துகள் ஆதிக்கத்தை நாம் கட்டுக்குள் கொண்டுவர முடியும் என்பதுதான் எங்களுடைய அசைக்க முடியாத கருத்து. அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் முற்றிலுமாக தனியார்மயம் ஆக்கப்படுகின்றன, என்ற மாதிரியான கருத்து சபையிலே நிலவுகிற காரணத்தால், முழுமையான விளக்கம் கோரி நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(பாரதிய ஜனதா கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

பிற்பகல் 7-05

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் எழுப்பிய வினாக்களுக்கு நான் சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன். இதுவரை ஏற்பட்ட மொத்த இழப்பு 2,160 கோடி. அந்தக் கடனை அடைக்க வேண்டுமென்று சொன்னால், 7, 8 ஆண்டுகள் ஆகும். இப்பொழுது கட்டண உயர்விற்குப் பின்பு வந்திருக்கின்ற கூடுதல் வருவாயை வைத்து அடைத்தால்கூட, 7, 8 ஆண்டுகளுக்கு மேலாகும். அப்படிப்பட்ட நிதி நெருக்கடி, ஆகையினால்தான் கொடுக்க இயலவில்லையென்பதை அவருக்கு பணிவோடு தெரிவித்து சுட்டிக்காட்டினோம். இருந்தாலும்கூட, எந்தெந்த வழித்தடங்களைத் தனியாருக்குக் கொடுப்போம் என்று கேட்டார்கள். அதற்கு பலமுறை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விளக்கம் சொல்லிவிட்டார்கள். ஆகவே, அதைக் கொடுப்பதைப்பற்றி, அரசுக்கு ஆலோசனை சொல்வதற்காக உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கப்படவுள்ளது என்ற அறிவிப்பினையும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். ஆகவே, அந்த உயர் மட்டக் குழுவின் அறிக்கையின்பேரில் அது முடிவு செய்யப்படும் என்பதை, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முடிவு செய்வார்கள்



என்பதை, இந்த நேரத்திலே அவர்களுக்கெல்லாம் பதிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்கு அடுத்தப்படியாக, போக்குவரத்துத் துறையில், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சில அறிவிப்புகளை, வருகின்ற ஆண்டில் செய்ய வேண்டிய பணிகள் குறித்து அறிவிப்புகளை வெளியிடுவதற்கு ஆணையிட்டிருக்கிறார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையின்படி போக்குவரத்துத் துறையில் செய்ய வேண்டிய பணிகள் குறித்து அறிவிப்புகளை வெளியிடுவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

1. *புதிய போக்குவரத்து அலுவலகங்கள்:* திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள கொடைக்கானலில் ஒரு புதிய மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் திறக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று இங்கு பேசிய மேலூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள்கூட வேண்டுகோளில் கேட்டுக்கொண்டார். மேலூரிலும் பொதுமக்கள் நலன் கருதி ஒரு புதிய மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் திறப்பதற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனுமதி வழங்கியிருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2. *புதிய தேர்ச்சி தளம்:* ஓட்டுநர் உரிமம் பெற விழைவோரின் திறனைச் சோதிக்க ஏதுவாக ஒரு புதிய தேர்ச்சி தளம் (Driving Test Track) சிவகங்கையில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. *சாலைப் பாதுகாப்பு:* சாலை விபத்தில் காயம்பட்டோருக்கு உடனடி மருத்துவ சிகிச்சை வழங்க கீழ்க்கண்ட நான்கு தேசிய நெடுஞ்சாலைகளில், 50 கி.மீ. இடைவெளியில், 13 இடங்களில் நடமாடும் மருத்துவமனைகள் (Emergency Accident Relief Centres) அமைக்கப்படும்: (மேசையைத் தட்டும் ஒலி)

(1) NH-4-சென்னை -சித்தூர்- பெங்களூர் தேசிய நெடுஞ்சாலை.

(2) NH-7-பெங்களூர்-சேலம்-மதுரை-கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலை

(3) NH-45- சென்னை-திருச்சி-திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலை.

(4) NH-46-கிருஷ்ணகிரி-இராணிப்பேட்டை தேசிய நெடுஞ்சாலை.

இம்மருத்துவமனைகளில் உயிரைக் காப்பாற்ற உடனடி முதலுதவி சிகிச்சை அளிக்கப்படும். இம்மையங்கள் தொலை தொடர்பு வசதிகளுடன் இயங்கும். முதலுதவிக்குப்பின் தீவிர சிகிச்சை

தேவைப்படின், அருகிலுள்ள மருத்துவமனைக்கு காயம்பட்டோர் எடுத்துச் செல்லப்படுவர். தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் இது ஒரு புதிய முயற்சியாகும்.

(4) **தகுதிச் சான்றிதழ் வழங்க நவீன இயந்திரங்களைப் பயன்படுத்துதல்:** வாகனங்களுக்கு தகுதிச் சான்றிதழ்கள் (Fitness Certificate) வழங்க, அவற்றின் நிலையை தக்க விதத்தில் பரிசோதிக்க, நவீன கருவிகள் தேவை என்பதை அரசு உணர்ந்துள்ளது. முதல் கட்டமாக, சென்னை, கோயம்புத்தூர், திண்டுக்கல் மற்றும் திருநெல்வேலி ஆகிய நகரங்களில் அமைந்துள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு டைனமிக் மோட்டார் (Dynamic Motor) என்ற கருவி இந்த ஆண்டு வழங்கப்படும்.

(5) **கணினி மூலம் வாகனங்கள் வெளியிடும் புகையை அளக்க புதிய ஏற்பாடுகள்:** வாகனங்கள் வெளியிடும் புகை குறிப்பிட்ட அளவிற்குள் இருக்கிறது என்ற சான்றிதழ் தற்பொழுது தனியார் நடத்தும் சோதனை மையங்களில் வழங்கப்படுகிறது. இம்மையங்களில் உள்ள வசதிகள் தற்பொழுது நவீனமயமாக்கப்படவுள்ளது. இதனடிப்படையில் கணினி மூலம் புகையின் அளவினை கணிக்கும் (Computerised Testing) முறையினை அரசு கொண்டுவர உள்ளது. இதற்கான ஆணைகள் விரைவில் வெளியிடப்படும்.

(6) **ஓட்டுநர் உரிமங்களை ஸ்மார்ட் கார்டு (Smart Card) முறையில் வழங்கல்:** தமிழ்நாட்டில் தற்பொழுது ஓட்டுநர் உரிமங்கள் லேமினேட் செய்யப்பட்ட அட்டைகளில் வழங்கப்படுகின்றன. குஜராத் மற்றும் மத்திய பிரதேச மாநிலங்களில் வழங்கப்படுவது போன்று ஸ்மார்ட் கார்டு (Smart Card) முறையில் உரிமங்களை வழங்கலாமா என அரசு ஆலோசனை செய்து வருகிறது. இதுபோன்ற முறையில், ஓட்டுநர் இழைக்கும் போக்குவரத்துக் குற்றங்களை உரிமங்களில் எளிதாகப் பதிவு செய்யலாம். ஓட்டுநர் பற்றிய தகவல்கள் அனைத்தையும் அதற்கென்று தயாரிக்கப்பட்ட ஒரு சிறிய கை இயந்திரத்தின் மூலம் இந்த அட்டைகளிலிருந்து தெரிந்துகொள்ளலாம். இதுபோன்ற உரிமங்கள் விபத்துகள் நேரிடும் சமயங்களில் பெரிதும் உதவுகின்றன. இதனை எவ்வாறு தமிழ்நாட்டில் அமல்படுத்தலாம் என்று அரசு தொழில் நுட்ப ஆய்வு ஒன்றை நடத்த உள்ளது.



(7) **வட்டாரப் போக்குவரத்து அலுவலர்களுக்கு கூடுதல் வசதி:** விபத்து நேரங்களிலும் மற்றும் அவசர நேரங்களிலும் வட்டாரப் போக்குவரத்து அலுவலர்களை (Regional Transport Officers) உடன் தொடர்பு கொள்ளும் வகையில், அவர்கள் இல்லங்களுக்கு தொலைபேசி வசதி செய்து கொடுக்க அரசு முன்வந்துள்ளது. முதல் கட்டமாக சென்னை மண்டலத்திலுள்ள 10 வட்டாரப் போக்குவரத்து அலுவலர்களின் இல்லங்களுக்குத் தொலைபேசி வசதி செய்து கொடுக்கப்படும்.

(8) **மோட்டார் வாகன ஆய்வாளர்களுக்குத் தொழில் நுட்பப் பயிற்சி:** துறை நன்கு செயல்பட, தொழில் நுட்ப அலுவலர்களின் திறன் மேம்படுத்தப்பட வேண்டும். இதற்காக அவர்களுக்கு பல்வேறு தொழில் நுட்பத் துறைகளில் தொடர்ந்து பயிற்சி அளிக்கப்பட வேண்டும். இந்த ஆண்டு மோட்டார் வாகன ஆய்வாளர்கள், சாலை பாதுகாப்பு குறித்தும், போக்குவரத்து பொறியியல் குறித்தும், பயிற்சி பெற இந்தியாவிலுள்ள சிறந்த பயிற்சி நிறுவனங்களுக்கு அனுப்பப்படுவர்.

நிறைவாக, போக்குவரத்துத் துறை, தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய தலைமையில் இலட்சியப் பயணத்தை நோக்கி புத்துணர்ச்சி பெற்று, புது வேகத்துடன் செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது என்பதை இந்த மாமன்றத்திற்கு தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். எனது பதிலுரையை ஏற்று, மாண்புமிகு உறுப்பினர்கள் அவரவர்கள் அளித்த வெட்டுத் தீர்மானங்களை வலியுறுத்தாமல் இருக்கிறார்களா—ஒருத்தரும் இல்லை; இருந்தாலும் நாளை வந்து வலியுறுத்துவார்களா? மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது பதிலுரையை ஏற்று, மாண்புமிகு உறுப்பினர்கள் அவரவர்கள் அளித்த வெட்டுத் தீர்மானங்களை வலியுறுத்தாமல், திரும்பப் பெற்றுக் கொண்டு, போக்குவரத்துத் துறை மற்றும் உள் துறை இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள், நிர்வாகம் ஆகிய மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண் 46, போக்குவரத்துத் துறை - வெட்டுத் தீர்மானங்கள் தந்தவர்கள் இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகின்றன.

"போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கை எண் 46-இன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 1,50,74,93,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ. 1,19,000/-க்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

**கோரிக்கை எண் 24 - உள்துறை - இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள் - நிருவாகம்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 24 - உள்துறை - இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள் - நிருவாகம், வெட்டுத் தீர்மானங்கள் தந்தவர்கள் இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகின்றன.

"உள்துறை- இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள் - நிர்வாகம் மானியக் கோரிக்கை எண் 24-இன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.45,43,93,000/-க்கு மேற்படாதத் தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.



**(இ) கோரிக்கை எண் 3 - நீதி நிருவாகம்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002-2003 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 3, நீதி நிருவாகம், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நீதி நிருவாகம் பற்றிய மானியக் கோரிக்கை எண். 3-ன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 1,38,90,30,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1228, திரு. ஆர். சக்ரபாணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 753, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'Fast Track Judges Court மாவட்ட நீதிபதி அளவில் உள்ளதால் கீழ்மட்டத்தில் உள்ள Magistrate Court, Munsiff Court, Sub-Court-களில் தேங்கிக் கிடக்கும் வழக்குகளை முடிக்க Fast Track Judge-களை பயன்படுத்த ஆணை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,38,90,30,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண். 500, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,38,90,30,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2226, திரு. ஜே. ஹேமச்சந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண். 986, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,38,90,30,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 178, திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,38,90,30,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 97, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சேலம் மாவட்டம் எடப்பாடி நகரில் உரிமையியல் நீதிமன்றம் துவக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,38,90,30,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1380, திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,38,90,30,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1593, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,38,90,30,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண். 1715, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,38,90,30,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1937, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,38,90,30,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2181, திரு. கு. ஜெயக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2524, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,38,90,30,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3383, திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,38,90,30,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3555, திரு. அ. இரா. மலையப்பசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 815, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1900, திரு. ரா. ஈஸ்வரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1069, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :



"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,38,90,30,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1775, டாக்டர் தே. குமாரதாஸ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3063, திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கோவையில் உள்ள ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் மின்சார ஜெனரேட்டர் நிறுவ வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,38,90,30,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1512, திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1549, திருமதி எஸ். மகேஸ்வரி.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'உயர்நீதி மன்றத்தின் கிளை ஒன்றினை கோவையில் அரசு தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,38,90,30,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2728, திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,38,90,30,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2375. திரு. எம். ராம்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2393, திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,38,90,30,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2125. திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலூர் மாவட்டம், திருப்பத்தூரில் அமர்வு நீதி மன்றம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,38,90,30,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3529. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மதுரையில் உயர்நீதிமன்றத்தின் கிளை ஆரம்பிக்க போதுமான நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,38,90,30,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4617. செல்வி க. பாலபாரதி.



**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திண்டுக்கல்லில் குடும்ப நீதிமன்றம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,38,90,30,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1930. திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அறந்தாங்கி நகரில் நீதிமன்ற கட்டடங்கள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,38,90,30,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 335. திரு. கா. சுந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3104, திரு. டி.கே. இராஜா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1119, திரு. எஸ். தாமோதரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2200, திரு. பி.எஸ். உலகரட்சகன்.

**திரு. பி.எஸ். உலகரட்சகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,38,90,30,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7105, திரு. எச். ராஜா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2063, திரு. இரா. திருமாவளவன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2418, திரு. துரை. கி. சரவணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4480, திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தாம்பரம் தொகுதி, தாம்பரத்தில் இயங்கி வரும் உரிமையியல், குற்றவியல் நீதிமன்றங்களுக்கு சொந்தக் கட்டிடம் கட்டுவதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,38,90,30,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3712, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3749, திரு. ஏ.எஸ். கண்ணன்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வரும் பொன்னேரி முதல் வகுப்பு நீதிமன்றத்திற்கு நடப்பு நிதியாண்டில் அரசே கட்டிடம் கட்டித் தரவேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,38,90,30,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."



## (ஈ) கோரிக்கை எண் 32 - சட்டத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 32, சட்டத் துறை, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டத் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 32-ன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 8,47,81,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள், வெட்டுத் தீர்மானம் எண் 1230, திரு. ஆர். சக்ரபாணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 741, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஏற்கெனவே அறிவித்தவாறு வேலூரில் அரசு சட்டக் கல்லூரி துவக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 8,47,81,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 510, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 8,47,81,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 954, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 8,47,81,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 179, திரு. கே. சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 8,47,81,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1360, திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 8,47,81,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1833, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 8,47,81,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1709, திரு. கே. ஆறுமுகம்.



**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 8,47,81,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2417, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 8,47,81,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2555, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 8,47,81,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3352, திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 8,47,81,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

[2002 மே 3

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1072. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 8,47,81,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3093. திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பெங்களூரில் சர்வதேச அளவில் புகழ்பெற்று விளங்கும் National School of Law போல கோவையில் உள்ள சட்டக் கல்லூரியை தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,47,81,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 942, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சட்டத்தின் விளக்கங்களை பொதுமக்கள் புரிந்துகொள்ள சட்ட விளக்க கருத்தரங்குகளை சட்டத் துறை மூலம் அரசு நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,47,81,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1315, திரு. கு. பிச்சாண்டி.



2002 மே 3]

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,47,81,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3507, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கன்னியாகுமரி மாவட்டத்தில் சட்டக் கல்லூரி ஒன்று துவக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,47,81,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3103, திரு. டி.கே. இராஜா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1129, திரு. ஜி. பழனிசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3729, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் மாண்புமிகு பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை எண் 3 - நீதி நிருவாகம் மற்றும் சட்டத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள், தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்த அவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பேரவைப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று

@ 363 முதல் 404 வரையிலான பக்கங்கள் இணைப்புகள் III மற்றும் IV ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

[திரு. டி. ஜெயக்குமார்] [2002 மே 3

கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள், தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 7-20

**(உ) கோரிக்கை எண் 31 - தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 31, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, மாண்புமிகு தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சர். (குறுக்கீடு)

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆரம்பிக்கட்டும், பிறகு நீங்கள் சொல்லலாம். மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 31-ன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 1,77,69,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ. 24,24,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள், வெட்டுத் தீர்மானம் எண் 6352, திரு. ஆர். சக்ரபாணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 761, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலூர் மாவட்டம், இராணிப்பேட்டை BHEL தொழிற்சாலைக்கு நிலம் கொடுத்தவர்கள் பலர் தற்காலிக தொழிலாளர்களாகவே உள்ளதால், அவர்களுக்கு ஆண்டில் ஒரு வாரம்' 10 நாள்கூட பணி கொடுக்கப்படாமல் உள்ளதை அரசு உணர்ந்து, அவர்களுக்கு நிரந்தர பணி கிடைக்க ஆவன செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,77,69,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 24,24,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்".



2002 மே 3]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், ஓடி வந்து இன்னொருவர் இடத்தை ஆக்கிரமிப்பு செய்தால் எப்படி? (சிரிப்பு) வெட்டுத் தீர்மானம் எண் 7381, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,77,69,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,24,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5136, திரு. டி.பி.எம். மைதீன்கான், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண். 4416, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,77,69,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,24,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7970, திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6582, திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,77,69,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,24,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: வெட்டுத் தீர்மானம் எண் 4063, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,77,69,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 24,24,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1361, திரு. தி. வேல் முருகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7750, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், திருத்தணி தொகுதியில் அமைந்துள்ள கேட்டர் பில்லர் தொழிற்சாலையில் பல தொழிலாளர்கள் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டு அவர்களின் குடும்பங்கள் வறுமையில் வாடுகின்றது. அவர்களுக்கு வேலை வழங்கவேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,77,69,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 24,24,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6628, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,77,69,27,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 24,24,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்".



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1965, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,77,69,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 24,24,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 406, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வால்பாறை தேயிலைத் தோட்ட தொழிலாளர்களின் சம்பளத்தை தேயிலைத் தோட்ட அதிபர்கள் குறைத்ததால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலையின் காரணமாக, அரசு தலையிட்டு மீண்டும் பழைய சம்பளத்தையே தேயிலைத் தோட்ட தொழிலாளர்களுக்குப் பெற்றுத்தர வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,77,69,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 24,24,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5057, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,77,69,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 24,24,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5808, திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,77,69,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 24,24,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6754, திரு. அ.இரா. மலையப்பசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5546, திரு. கே.என். சேகரன்.

**திரு. கே.என். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருச்சி பெல் தொழிலகத்தில் 12 ஆண்டுகளாகப் பணியாற்றிவரும் சுமார் 3,000 எல்.சி.எஸ். தொழிலாளர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,77,69,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 24,24,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1906, திரு. ரா. ஈஸ்வரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 911, திரு. எ.வ. வேலு.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'விவசாயத் தொழிலாளர் வாரியம் புதிய பொலிவுடன் செயல்பட நடவடிக்கை எடுக்கவேண்டியதன் அவசியம் பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :



"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,77,69,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 24,24,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8272, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,77,69,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 24,24,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7008, டாக்டர் தே. குமாரதாஸ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5912, திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தங்க நகை செய்யும் தொழிலாளர்கட்கு குறைந்தபட்சக் கூலி வழங்கப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,77,69,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 24,24,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2726, திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவண்ணாமலை வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,77,69,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 24,24,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6289, திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலூர் மாவட்டத்தில் மூடப்பட்ட தோல் தொழிற்சாலைகள், அரியூர் கூட்டுறவு நூற்பாலை ஆகியவற்றை உடனே திறந்து தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,77,69,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,24,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 426, செல்வி க. பாலபாரதி.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பட்டம் பெற்று வேலையில்லாத பட்டதாரி இளைஞர்களுக்கு உதவித் தொகை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,77,69,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,24,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6689, திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தென் மாவட்டங்களில் தீப்பெட்டி தொழிற்சாலையில் வேலை பார்க்கும்



தொழிலாளர்களது பணி பாதிப்பு குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,77,69,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,24,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6498, திரு. டி.கே. இராஜா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7787, திரு. ஜெக. வீரபாண்டியன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,77,69,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 24,24,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4474, திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தொழிற்சாலைகளை மூடியதால் வேலை இழந்த தொழிலாளர்களுக்கு அரசு உதவித் தொகை அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,77,69,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,24,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8185, திரு. ஏ.எஸ். கண்ணன்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பொன்னேரி தொகுதி, பொன்னேரியில் பல ஆண்டுகளாக சிறப்புடன் இயங்கிவந்து தற்போது மூடப்பட்ட தொழிற் பயிற்சிப் பள்ளியைத் திறந்து படித்த இளைஞர்களுக்கு தொழிற் பயிற்சி மற்றும் வேலை வாய்ப்பளிக்கும் திட்டத்தின் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,77,69,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 24,24,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. வது. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை எண் 31 - தொழிலாளர், தொழிற்சாலை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை(@) நான் இந்த அவையில் ஆற்றிய உரையாகக் கருதி, அவைக்குறிப்பில் பதிவு செய்துகொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள், தங்களின் மேலான கருத்துகளையும், ஆலோசனைகளையும் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இறுதியில், மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்துகளுக்கு பதிலும் மாண்புமிகு தமிழக முதல்வர், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு எடுத்துள்ள முடிவுகள் பற்றியும் எனது பதிலுரையில் விளக்கம் அளிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மானியக் கோரிக்கைகள் மீதும் சுருக்கமாக மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துகளைக் கூறக் கேட்டுக்கொள்கிறேன். முதலில் திரு. க. பொன்முடி.

---

@ 405 முதல் 498 வரையிலான பக்கங்களில், இணைப்பு V-ஆக அச்சிடப்பட்டுள்ளன.



பிற்பகல் 7-25

**திரு. கே.சி. கருணாகரன்:** தலைவர் அவர்களே.......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன?

**திரு. கே.சி. கருணாகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு மிக முக்கியமான மானியக் கோரிக்கைகள் இருக்கின்றன. நேரம் கருதி கட்சிகள் அனைத்திற்கும் இருக்கின்ற வாய்ப்புகளை வெட்டிக் குறைப்பதோ அல்லது முக்கியமான கட்சிகளுக்கு இதில் சந்தர்ப்பம் இல்லை என்று மறுப்பதோ,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. இது ஏற்கெனவே பேசப்பட்டது.

**திரு. கே.சி. கருணாகரன்:** அது பேசியது சரியில்லை என்பதற்காகத்தான் நான் சொல்ல வருகிறேன். ஏனென்று சொன்னால், தொழிலாளர் நல மானியக் கோரிக்கை மீது மிக முக்கியமான பிரச்சினையில் பேச வேண்டிய அவசியம் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லாமே முக்கியமான பிரச்சினைகள்தான். ஏற்கெனவே பேசி முடிவு செய்யப்பட்டுவிட்டது.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை, இல்லை. தயவுசெய்து மன்னிக்க வேண்டும். நீங்கள் எதை வேண்டுமானாலும் நிறைவேற்றுவதற்கு பெரும்பான்மை உள்ள ஓர் அரசுதான். இது.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அது பிரச்சினை இல்லை. அவையினுடைய நேரம், நிலைமைகள்—இவைதான் முக்கியமே தவிர, பெரும்பான்மை, சிறுபான்மை என்பது அல்ல. ஏற்கெனவே பேசி முடிக்கப்பட்டுவிட்டது; அந்த முடிவைத்தான் இப்போது நான் அமல்படுத்துகிறேன். திரு. பொன்முடி அவர்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கும் இந்த அவையிலே உரையாற்றுவதற்கு அருகதை இருக்கிறது என்று அனுமதி அளித்த தங்களுக்கு உளமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். முதலாவதாக, வரவு-செலவுத் திட்ட செயலாக்கம் - தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை புத்தகத்தில் இருக்கிற ஒரு தவறை மட்டும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதில் பக்கம் 34-ல் விழுப்புரம் மாவட்டத்தில் சிதம்பரம்

இருப்பதாக அச்சடிக்கப்பட்டு இருக்கிறது; அது என்னுடைய மாவட்டம் என்ற காரணத்தால் அது என் கண்ணிலே உடனடியாகப்பட்டது. அது அச்சுப் பிழை என்றுதான் கருதுகிறேன். அதைத் திருத்திக்கொள்ளுமாறு முதலில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அரசு பொறுப்பு ஏற்றதற்குப் பிறகு, பல்வேறு துறைகளைச் சார்ந்த தொழிலாளர்களும், பல்வேறு இன்னல்களுக்கு உள்ளாக்கப்பட்டு, அவர்களுக்கு எல்லாம் உரிமைகள் பறிக்கப்படுகிற இந்த காலக்கட்டத்தில், இந்த மானியத்திலே அவர்களுக்காக ஏதேனும் சலுகைகளோ அல்லது அவர்களுடைய வாழ்க்கைக்கு உத்தரவாதங்களோ இருக்குமா என்று பார்த்தால், ஓர் ஏமாற்றம் அளிக்கிற கோரிக்கையாகவே, மானியமாகவே இது இருக்கிறது. குறிப்பாக இன்றைய சூழ்நிலையில் பஞ்சாலைத் தொழிலாளர்களுடைய பிரச்சினையில், கோவையிலே 10(பி) G.O. போடப்பட்டது. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் பொறுப்பு ஏற்றதற்கு பிறகு, பஞ்சாலைத் தொழிலாளர்களை அழைத்துப் பேசி, 10(பி) G.O. போட்டு, அந்த G.O. நம்பர் 690, 13-9-2001-லே வெளியிடப்பட்டது. அதன் மூலமாக பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு 250 ரூபாய் வழங்கப்பட வேண்டுமென்று உத்தரவிடப்பட்டு, அதுவும் வழங்கப்பட்டு வந்தது. ஆனால், அந்த அரசாணை 6 மாதங்கள்தான் இருக்கும் என்ற சூழ்நிலையில், அது 13-3-2002-வுடன் expiry—முடித்துவிடுகிற சூழ்நிலை வந்து இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள், அந்த G.O.-வை மீண்டும் விரிவுபடுத்தி, பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு இந்த ஏப்ரல், மே மாதங்களுக்கு நிறுத்தப்பட்டு இருக்கிற அந்த 250 ரூபாயைத் தொடர்ந்து கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல தோட்டத் தொழிலாளர்களுடைய பிரச்சினையாக, இன்று பல்வேறு இடங்களிலே, வால்பாறை போன்ற இடங்களிலே எல்லாம், தோட்டத் தொழிலாளர்கள் போராட்டத்திலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். பொதுவாக தோட்டத் தொழிலாளர்களோடு பேச்சுவார்த்தை நடத்துகிறபோது State wide தொழிற்சங்கங்களை அழைத்து வைத்துப் பேசித்தான் இதுவரை தொழிற்சங்கங்களின் மூலமாகதான் முடிவுகள் எடுக்கப்பட்டன. ஆனால், இந்த அரசு பொறுப்பு ஏற்றதற்குப் பிறகு, மாநில அளவிலே இருக்கிற தொழிற்சங்கத் தலைவர்களை அழைத்துவைத்துப் பேசி, ஒட்டுமொத்த அந்தத் தொழில்களுக்கும் ஒப்பந்தம் செய்வதற்குப் பதிலாக, ஆங்காங்கே, இருக்கிற



தோட்டத் தொழில் முதலாளிகளே அந்தத் தொழிலாளர்களோடு ஒப்பந்தம் செய்துகொள்ளலாம் என்று முடிவு எடுக்கப்பட்டு, ஆங்காங்கே அந்த முடிவுகள் எடுக்கப்படுகின்றன. அதனால்தான் ஆங்காங்கே, வால்பாறை போன்று பல்வேறு பகுதிகளிலே, இதுபோன்ற பிரச்சினைகள் வந்து கொண்டு இருக்கின்றன. ஆகவே, பழையபடியே State wide-மாநில அளவில், இதுபோன்று இருக்கிற தோட்ட அதிபர்களை அழைத்துப்பேசி, தொழிலாளர்களோடு ஒரு சுமுகமான ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கு, இந்த அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இந்த அரசு கொண்டுவந்திருக்கிற, பொது இடங்களில் பீடி, சிகரெட் பிடிக்கக் கூடாது என்ற உத்தரவுகளின் காரணமாக, அது நல்ல உத்தரவு என்றாலும், பீடித் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிற ஒரு சூழ்நிலை உருவாகி இருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு மாற்றுத் தொழில் கொடுக்கிற ஒரு சூழ்நிலையை இந்த அரசு சிந்தித்து முடிவு எடுக்க வேண்டும் என்றும் நான் இந்த நேரத்திலே மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 7-30

அதேபோல போக்குவரத்துத் தொழிலாளர்களுடைய பிரச்சினை. இங்கு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பேசுகிறபோதுகூட, அவர் P.P.D. Act-ல் பொதுச் சொத்து சேதம் விளைவித்த தொழிலாளிகள் மீது மட்டும்தான் நடவடிக்கை எடுக்கப்படும்; மற்றவர்கள் எல்லாம் விடுவிக்கப்படுவார்கள் என்று முதலில் பதில் சொல்கிறபோது குறிப்பிட்டார்கள். உங்களுக்குத்தான், --அந்தப் போக்குவரத்துத் துறை அமைச்சருக்குத்தான். போக்குவரத்துத் துறை அமைச்சருக்குத்தான். P.P.D. Act-லே குறைவாகத்தான் தொழிலாளர்கள்கூட பல இடங்களிலே P.P.D. Act-லே குறைவாகத்தான் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். குறிப்பாக தருமபுரியிலே 5 நபர்கள்மீது மட்டும்தான் P.P.D. Act போடப்பட்டிருக்கிறது. மீதி 75 பேர் மீது சாதாரண நடவடிக்கைதான் எடுக்கப்பட்டிருக்கிறது. அதுபோல பல இடங்களிலே விழுப்புரத்திலே 45 பேர்; கன்னியாகுமரியிலே 4 பேர் மேல்தான் P.P.D. Act -லே நடவடிக்கை; மற்றவர்கள் மீது எந்தவிதமான P.P.D Act -ம் கிடையாது. ஆகவே, P.P.D. Act என்று சொல்லப்படுகிற Public Property Destruction Act-ல், அந்த அடிப்படையிலே கைது

செய்யப்பட்டவர்களைத் தவிர, அவர்களையும்கூட விசாரித்து, பொய் வழக்காக இருக்குமானால் அவர்களையும் விடுவித்து, ஒரு மனிதாபிமான உணர்வோடு— ஏனென்றால் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர், இங்கே நான் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்தபோது, எதிரிலே அமர்ந்துகொண்டு, போக்குவரத்துத் தொழிலாளர்களை எல்லாம் அரசு ஊழியர்களாக்க போராட வேண்டுமென்று சொன்னபோது, அவர்களை அரசு ஊழியர்களாக ஆக்குங்கள் என்று குரல் கொடுத்து வெளிநடப்பு செய்தவர்கள். ஆகவே, அந்தத் தொழிலாளர்களுக்காக குரல் கொடுக்க வேண்டுமென்ற உணர்வு அந்த அமைச்சருக்கு இருக்கும் என்ற உணர்வில், எந்தச் சங்கம், எந்தக் கட்சியினுடைய அபிமானிகள் என்று பார்க்காமல், அவர்களும் தொழிலாளர்கள் என்ற உணர்வோடு, அந்தத் தொழிலாளர்கள்மீது இருக்கிற அந்த சஸ்பெண்டு உத்தரவை, நீங்கள் நீக்க வேண்டுமென்று உங்களை அன்போடு நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். கடந்த காலங்களிலே இதுபோல நடவடிக்கை எடுக்கப்பட்டாலும், உடனடியாக அவையெல்லாம் மாற்றப்பட்டிருக்கின்றன.

இப்போது இந்தத் தொழிலாளர் நலத் துறையைப் பொறுத்தவரையில், மிக முக்கிய பிரச்சினையாக இருப்பது, இந்த அமைப்புசாரா தொழிலாளர்களுக்காக இருக்கிற பிரச்சினைதான். இந்த அமைப்புசாரா தொழிலாளர்களுக்காக இருக்கிற பிரச்சினையிலே, தயவுசெய்து தொழிலாளர் நலத் துறை அமைச்சர், அதேபோல வருவாய்த் துறை அமைச்சர் அன்று பதில் சொன்னதைப்போல, ஒரு பிரச்சினையை திறந்த மனதோடு அணுக வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதிலே நமக்கு இருக்கிற முக்கியம், இந்தியாவிலே இருக்கிற 38 கோடி தொழிலாளர்களில், கிட்டத்தட்ட 28 கோடி பேர் அமைப்புசாரா தொழிலாளர்கள்தான். தமிழகத்திலே 2 கோடி பேர் அமைப்புசாரா தொழிலாளர்களாகத்தான் இருக்கிறார்கள். அதிலே கிட்டத்தட்ட ஒரு கோடிக்கு மேல் விவசாயக் கூலித் தொழிலாளர்களாக இருக்கிறார்கள்.

அன்று மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் வேலு அவர்கள் கேட்டபோது, அதற்கு பதில் சொன்னார்கள். அதிலே, உருவாக்கப்பட்ட சட்டத்திலே சில ஓட்டைகள் இருக்கின்றன--அதுகூட அவர் சொன்ன வார்த்தைகள், அதை அப்படியே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்று அதனுடைய சட்ட திட்டத்தைப் படிக்கிறேன். 'நீங்கள் இயற்றிய 14-வது சட்டத்தில்தான் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் கொள்முதல் செய்யும்



நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 1 வீதம் அக்கழகம் மூலம் வசூல் செய்வது; தனியார் மற்றும் கூட்டுறவு ஆலையில் கரும்பு அரைவை செய்வதில் டன் ஒன்றுக்கு ரூ. 1 வீதம் அந்த ஆலைகளின் மூலம் வசூல் செய்வது; அடுத்தபடியாக தனியார் மற்றும் கூட்டுறவு ஆலைகளில்—இங்கேதான் இந்தச் சட்டத்தைப் பார்க்க வேண்டும்— சர்க்கரை விற்பனையில் டன் ஒன்றுக்கு ரூ. 1 வீதம் அந்த ஆலையிலிருந்து வசூல் செய்வது, அதேபோல இந்த 3-வது சட்டத்தில் பழமையான சட்டத்தை இங்கே கொண்டு வந்திருக்கிறீர்கள் என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தனியார் மற்றும் கூட்டுறவு ஆலையில் சர்க்கரை விற்பனையில் டன் ஒன்றுக்கு ரூ. 1 வீதம் அந்த ஆலைகள் வசூல் செய்வது, Employers-க்கும் Employee-க்கும் relationship எங்கே இருக்கிறது என்ற எனக்குத் தெரியவில்லை' என்று சொன்னார்கள். இந்த அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு கடந்த கால ஆட்சியிலே, இதுபோன்ற கருத்துகளை ஆய்வதற்காக, அரசுத் துறை அதிகாரிகள், ஏன், இப்போது வருவாய்த் துறை செயலாளராக இருக்கிற அதே செயலாளர்தான் அப்போதும் செயலாளராக இருந்தார்கள். அதுபோல சி.பி.ஐ., சி.பி.எம்., போன்றவர்கள் எல்லாம், அந்த இயக்கங்களைச் சேர்ந்தவர்களும்கூட, அன்று இருந்தார்கள். அன்று இருந்தபோது, அதிலே எடுக்கப்பட்ட முடிவு, எந்தவொரு அமைப்புசாரா தொழிலாளராக இருந்தாலும், அவர்கள் கொடுக்கிற contribution-ஐ மட்டுமே வைத்துக்கொண்டு, அவர்கள் நலத் திட்டங்களை செய்ய முடியாது. அதனாலே, Employer's contribution என்ற ஒன்று இருக்க வேண்டும். அப்படி Employer's Contribution என்று வாங்குகிறபோது, எந்தெந்த Employer's-இடம், எந்தெந்தப் பணி கொடுப்பவர்களிடம் அதை வாங்க முடியும் என்று ஆலோசித்தோம்.

அதுகூட கடந்த கால ஆட்சியிலே கட்டுமானத் தொழிலாளர்களுக்காக ஒரு வாரியம் உருவாக்கப்பட்டபோது, 0.1 சதவிகிதம் கட்டுபவர்களிடம் வாங்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது. அதற்குப் பிறகு, கலைஞர் அரசு வந்ததற்குப் பிறகு, கட்டுமானத் தொழிலாளர்களுக்கு 0.3 சதவிகிதம் வாங்கலாம் என்று சொல்லி, கிட்டத்தட்ட 5 ஆண்டுகளில், அதற்கு முன்பிருந்த அரசு விட்டுச் செல்கிறபோது, கட்டுமானத் தொழிலாளர்கள் கையில் இருந்த தொகை வெறும் 25 இலட்சம் ரூபாய் மட்டும்தான். 0.3 சதவிகிதம் என்று Employers-களிடம் வாங்கப்பட்டதற்குப் பிறகு, 28 கோடி ரூபாய் அந்தக் கட்டுமானத் தொழிலாளர்களுக்கு வந்தது.

அதுபோலத்தான் 10 அமைப்புசாரா தொழிலாளர்களுக்கான வாரியங்கள் உருவாக்கப்பட்டபோது, ஓட்டுநர்கள்—இதுபோன்ற ஆட்டோ ஓட்டுநர்கள், கார் போன்று விற்பனை செய்கிறபோது, அந்த விற்பனையாளர்களிடமிருந்தே, பெற்றுக்கொள்ளலாம் என்று சொல்லித்தான் இன்றைக்கு கிட்டததட்ட அதிலேயும் 4 கோடி ரூபாய் அந்த வாரியத்திற்கு கிடைத்திருக்கிறது.

அதுபோலத்தான் விவசாயக் கூலித் தொழிலாளர்கள். அவர்களுக்கு யார் employers? விவசாயத் தொழிலாளர்களுக்கு யார் employers என்று பார்க்கிறபோது, நெல் அறுவடை செய்து, அவர்களை employ செய்பவர்கள். நெல் எங்கே விற்கிறார் என்று போய் பார்த்து சரியாக வாங்க முடியாது. அதனால், அந்த நெல் விற்பதற்கு, Civil Supplies-லேதான் organised-ஆக விற்க முடியும். அதனாலே அப்படி விற்கப்படுகிறபோது, அவர்களிடமிருந்து 1 ரூபாய் வசூல் செய்வது. கரும்பு என்றால் கரும்பு ஆலைகளுக்குத்தான் வந்தாக வேண்டும். அப்படி வருகிறபோது, அவர்களிடமிருந்து 1 ரூபாய் பெற வேண்டும். அந்தக் கரும்பு, indirect employment-- அந்தக் கரும்பின் மூலமாக தொழில் செய்கிற. கரும்பு ஆலைகளிலிருந்து டன்னுக்கு 1 ரூபாய் பெற வேண்டும்.

அந்த அடிப்படையிலேதான், அந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டதே தவிர வருவாய்த் துறை அமைச்சர் சொன்னதைப்போல என்ன சிக்கல் என்பது எனக்குப் புரியவில்லை.

பிற்பகல் 7-35

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** நீங்கள் மீண்டும் நன்றாக சட்டத்தைப் படித்துக்கொள்ளுங்கள். தனியார் மற்றும் கூட்டுறவு ஆலையில், கரும்பு விற்பனை செய்வதில், டன் ஒன்றுக்கு ரூ. 1 வீதம் அந்த ஆலைகள் மூலம் வசூல் செய்வது. I agree. அதற்கு அடுத்தாற்போல, நீங்கள் வந்திருக்கிறீர்கள். தனியார் மற்றும் கூட்டுறவு ஆலைகளில் சர்க்கரை விற்பனையில் டன் ஒன்றுக்கு ரூ. 1 வீதம் அந்த ஆலைகளிலிருந்து வசூல் செய்வது.

They are not employers. In what way they are connected? Mill owners. I had a review meeting with all these people. நீங்கள் கொண்டுவரும் சமயம், அந்தச் சட்டத்தை கொண்டுவரும்போதே ஒரு ஓட்டையான சட்டத்தை கொண்டு வந்தீர்கள். நாங்கள் இதற்காக ஒரு review meeting வைத்து, I enquired all the officers. நீங்கள்கூட ஒரு



கருத்தைச் சொன்னீர்கள். முன்னாள் செயலாளரும் இருந்தார் என்று. அவர்கிட்டேயும் நான் enquiry பண்ணினேன். எப்படி இந்தச் சட்டத்தைப் போட்டீர்கள் என்று கேட்டேன். எப்படி நீங்கள் போய்—ஒரு employer வந்து ஒரு மில் நடத்துகிறார்கள். இந்த மில்லில் போய் வருகிற கரும்பிற்கு-அந்தத் தொழிலாளர்கிட்டே வாங்குகிறீர்கள். Then you are asking the Mill Owners. Mill Owner-ஐக் கூப்பிட்டுக் கேட்கும் சமயம், we are not eligible, நாங்கள் எப்படி சார் கொடுக்க முடியும்? எங்களுக்கும் அவர்களுக்கும் என்ன relationship இருக்கிறது என்கிறார்கள். நீங்கள் போட்ட சட்டமே - நீங்கள் தான் அந்தச் சட்டத்தைப் போட்டீர்கள். Employer and Employee relationship. How can we are going to receive money from the Mill Owners? That is not possible. Now we are going to bring an amendment.

**டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, அந்த Mill owner-களுக்கு, கரும்பை கொண்டு வந்து சேர்ப்பதே அந்தக் கூலி தொழிலாளிதான். லாரியிலே ஏற்றுவதிலிருந்து, கரும்பு ஆலையிலே போய் கரும்பை இறக்குகிறவனும் தொழிலாளிதான். இது ஒன்றும் பெரிய amount கிடையாது. (குறுக்கீடுகள்) தயவுசெய்து, நான் கொஞ்சம் பேசுகிறேன். இது ஒன்றும் பெரிய amount கிடையாது. நான் சொல்லுவது.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** இதிலே நீங்கள் சட்டம் போட்டதே தப்பு என்று சொல்லிக்கொண்டு இருக்கிறேன். நீங்கள் இப்போதுள்ள செயலாளர் இருந்தார் என்று சொன்னீர்கள், I agree. உங்கள் செயலாளரிடம்தான். அந்த அதிகாரியிடமே (குறுக்கீடுகள்) இல்லை. இல்லை நான் பேசுகிறேன். அப்புறம் நீங்கள் பேசுங்கள். I enquired the same Secretary. There is a lacunae in the Law. There is a lacunae in the notification. That is the reason why I am asking the Secretary. நீங்கள் சொன்னது மாதிரி, நீங்கள் போட்டுவிட்டு போய்விட்டீர்கள். நான்தான் collect பண்ணவேண்டும். இந்த அரசாங்கம் பண்ணவேண்டும். 1 ரூபாய்—அதற்கு 1 ரூபாய் நீங்கள் சொல்லிவிட்டீர்கள். கிட்டத்தட்ட 17 கோடி சொல்லியிருக்கிறீர்கள். எவ்வளவு தெரியுமா claim வந்திருக்கிறது? இப்போது, கிட்டத்தட்ட 13 கோடி ரூபாய் நாங்கள் கொடுக்க வேண்டும். நீங்கள் ஏதாவது Election நேரத்திலே, உங்களுடைய முதலமைச்சர் படத்தைப் போட்டுக் கொண்டு, நீங்கள் விவசாயிக்கு செய்கிறேன் என்று சொல்லி, சட்டத்தை தவறான சட்டங்கள்—Notification itself is wrong.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இப்போது வந்து, அரசியல் இல்லாமல் பேசிக் கொண்டு இருக்கிறேன். அவர் வந்து (குறுக்கீடுகள்) இருங்கள், தயவுசெய்து, என்னைப் பேசவிடுங்கள். (குறுக்கீடுகள்). Please என்னைப் பேச விடுங்கள், என்னைப் பேச விடுங்கள்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** I will give only one clarification. இந்தச் சட்டத்தை இயற்றும்போது, நான் அமைச்சராக, வருவாய்த் துறை அமைச்சராக பொறுப்பேற்ற உடனே—நீங்களே இந்த Notification-னிலே சொல்லியிருக்கிறீர்கள். எப்படி, எப்படி, Indentity Card போட வேண்டும் என்று சொல்லியிருக்கிறீர்கள். அந்த Indentity Card போடுகிற சமயம், C.M. Photo-வை போடக்கூடாது என்று கிடையாது. ஆனால் C.M. Photo-வுக்கு There is no provision in the Identity card itself. Then the same Secretary objected to your Minister. So, as per your Secretary's concern, you are not putting any C.M. Photo for the Identity Card. Then there was a specific instruction from the C.M.'s office. முதலமைச்சர் படத்தைக் கண்டிப்பாகப் போடவேண்டும் என்று கோப்புகளில் எழுதியிருக்கிறது. அந்தக் கோப்புகளைப் படித்து— அதிலேகூட, அந்தத் தேர்தல் நேரத்திற்காக, ஒரு முதலமைச்சர் படம்—நீங்கள் Employer's-க்கு உதவுங்கள், வரவேற்கிறோம். உங்கள் அரசு, அந்த முதலமைச்சர் படத்தை போட்டுத்தான் நீங்கள் கொண்டுவர வேண்டும் என்று ஒரு சட்டத்தை கொண்டு வந்தீர்கள். We agree. கேளுங்கள். அதற்குப் பிறகு, திரும்பவும் அதே கோப்புகள் வந்தன. அதே கோப்பு வருகிற சமயம் முந்தைய நடைமுறையில் எப்படி இருக்கிறதோ, அதே நடைமுறையைப் பின்பற்ற வேண்டும். ஆனால், we are going to bring an amendment. நீங்கள் கொண்டு வந்த Act-ஐயோ, நீங்கள் செய்யக்கூடிய தொழிலாளிகளுடைய நன்மைகளையோ, இந்த அரசாங்கம் எந்த நேரத்திலும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசாங்கம், கெடுதல் செய்யாது. விவசாயிகளுக்கு கெடுதல் செய்யாது என்று நான் ஆணித்தரமாக சொல்கிறேன். Defect is in the notification itself. நீங்கள் அந்தப் பணத்தை, 1 ரூபாய் வாங்குவது, அவ்வளவு easy கிடையாது. நீங்கள் சொல்லிவிட்டீர்கள். 1 ரூபாய் வாங்குங்கள். நீங்கள் சர்க்கரை ஆலையிடம் போய் எப்படி 1 ரூபாய் வாங்க முடியும்? It is not possible. அதே சர்க்கரை ஆலை ஓனர்ஸ் Employers கிட்டே போய் 1 ரூபாய் கேட்கிறார், விவசாயிகிட்டே; அதே owner எங்கே சார், நீங்கள் தான் சொல்லியிருக்கிறீர்கள். Employer-employees relationship நீங்கள் தான் நோட்டிபிகேஷன் பண்ணினீர்கள். So we are going to amend the notification.



**டாக்டர் க. பொன்முடி:** தலைவர் அவர்களே, நான் ஏனோதானோ என்று சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) 28 கோடி ரூபாயை collect பண்ணிவிட்டு, கஜானாவிலே வைத்துவிட்டுத்தான் போனோம். (குறுக்கீடுகள்) சொல்கிறேன் இருங்கள். (குறுக்கீடுகள்) நான் பேசிய பிறகு அப்புறம் பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** அதற்கு ரிப்ளை கொடுக்கிறேன். (குறுக்கீடு).

**டாக்டர் க. பொன்முடி:** என்னைப் பேசவிடுங்கள் சார். நான் சொல்லிவிடுகிறேன். அப்புறம் பேசுங்கள் (குறுக்கீடு).

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** ஒரே ஒரு நிமிஷம். அதற்கு நான் ரிப்ளை கொடுக்கிறேன். (குறுக்கீடு) இல்லை, இங்கே கேளுங்கள். ஒரு நிமிஷம் கொடுங்கள். (குறுக்கீடு) 28 கோடியிலே claimant எவ்வளவு தெரியுமா வந்து இருக்கிறது. (குறுக்கீடு) நீங்கள் போட்டதிலே உங்களுடைய subsidy only 10 lakhs. Claimant எவ்வளவு தெரியுமா இருக்கிறது? நீங்கள் உங்கள் பாட்டுக்கு, எதை எடுத்தாலும் திட்டத்தை தீட்டுகிறோம், தீட்டுகிறோம் என்கிறீர்கள். (மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. நீங்கள் இரண்டு பேரும் மாறி மாறி பேசாதீர்கள். இங்கே விளக்கத்தைச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** இல்லை, இல்லை. அவருக்கு விளக்கம் கொடுக்க வேண்டும். நான் விளக்கம் கொடுக்கிறேன். இல்லை, இல்லை. ஒரு தவறான Notification-ஐ பண்ணி விட்டார்கள். நான் அன்றைக்கே Special Mention-லே பேசும்போதுகூட நாங்கள் We are going to bring an amendment என்றுதான் சொன்னேன். நீங்கள் போட்ட திட்டங்களை நாங்கள் என்றும் நிறைவேற்ற மாட்டோம் என்று சொல்லவில்லை. தவறான Notification பண்ணிவிட்டீர்கள். (குறுக்கீடு).

பிற்பகல் 7-40

**டாக்டர் க. பொன்முடி:** The spirit of the G.O.-வை தயவுசெய்து புரிந்து கொள்ள வேண்டும். இப்போது முதலமைச்சர்கூட அன்னதானம் கொடுக்கிறார்கள். பல முதலாளிகளிடமிருந்து வாங்குகிறார்கள். It is different. அந்த மாதிரி வாங்குவதுபோல், (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள்.

என்னைப் பேச விடுங்கள். என்னைப் பேசவிடாமல் நீங்கள் குறுக்கே பேசிக் கொண்டேயிருந்தால் எப்படி?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** We have not issued any G.O.—அன்னதானத் திட்டத்திற்கு G.O. issue பண்ணவில்லை.

**டாக்டர் க. பொன்முடி:** கொஞ்சம் இருங்கள். நான் நல்லதைத்தான் சொல்கிறேன். ஏன், நீங்கள் நான் என்ன சொல்கிறேன் என்று புரிந்துகொள்ளாமல் பேசுகிறீர்கள்? என்னைப் பேசவிட்டு அப்புறம் நீங்கள் பேசுங்களேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, நீங்களும் என்னைப் பார்த்துப் பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** நீங்கள் போட்ட சட்டத்திலே தவறு இருக்கிறது என்று சொல்கிறேன். அதைக்கூட சொல்லக்கூடாது என்றால் எப்படி? நீங்கள், நாங்கள் போட்டது சரி என்று சொன்னால் எப்படி? தேர்தல் நேரத்தில், வாக்காளர்களிடம் ஓட்டு கேட்க வேண்டும் என்கிற எண்ணத்திலே, ஒரு Notification issue பண்ணினீர்கள். அதில் தவறு இருக்கிறது. தவறைத் திருத்தி நாங்கள் கொண்டு வருகிறோம் என்று சொல்லியிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி.

**டாக்டர் க. பொன்முடி:** The Spirit of the Laws, முதலாளிகளிடமிருந்து தொழிலாளி மட்டும் கொடுக்கின்ற contribution-ஐ வைத்து இதை நடத்த முடியாது. அதனாலே, அந்தத் தொழில் சார்புடைய முதலாளிகளிடமிருந்து, குறைந்தபட்சம் கட்டணத்தைப் பெற்று, ஒரு corpus fund create பண்ணிவிட்டு, அதிலேயிருந்து வருகின்ற வட்டிப் பணத்திலேதான் இதை நடத்த முடியும் என்பதுதான் திட்டம். அது எல்லா அதிகாரிகளும் ஒத்துக்கொண்ட திட்டம். அதை நீங்கள் continue பண்ணுவதில் பிரச்சினை கிடையாது. நான் ஏன் சொல்கிறேன் என்றால், நீங்கள் சொன்னீர்கள், கட்டுமானத் தொழிலாளர்களிடமிருந்து, Highways-லும், P.W.D.-லும் அரசாங்கத்திலே பணம் கொடுக்கும்போதே 0.3 சதவீதம் கொடுக்க வேண்டுமென்று சொல்லி, ஒதுக்கி வைக்க வேண்டுமென்று சொல்லி, 28 கோடி ரூபாய் கட்டுமானத் தொழிலாளர்களுக்காகப் பெறப்பட்டிருக்கிறது. Taxi, Auto ஓட்டுநர்கள் சங்கத்திற்காக, கார் தயார் பண்ணுகிறார்கள் பாருங்கள்.



அவர்களிடமிருந்து வாங்க வேண்டும். அவர்களும் முதலாளிதான். அந்த முதலாளியிடமிருந்து 3 கோடி ரூபாய் வசூல் செய்யப்பட்டிருக்கிறது. அதனால் இது ஒன்றும் அதிக amount கிடையாது. Sugarcane owners-களிடமிருந்து டன்னுக்கு 1 ரூபாய், ஒரு கரும்பு முதலாளி, ஒரு தொழிலாளிக்காகக் கொடுப்பார். அதுமட்டுமல்ல, (குறுக்கீடு) தயவுசெய்து இருங்கள் சார், இரண்டு நிமிடங்கள் சார், தயவுசெய்து என்னைப் பேசவிடுங்கள், சார், நான் பேசிய பிறகு அவர் சொல்லட்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர், அவர் பேசி முடித்து விடட்டும்.

**டாக்டர் க. பொன்முடி:** அதேபோல், இதில் இன்னொன்று, கரும்பு விவசாயிகளுக்குக்கூட இதிலே அனுகூலம் இருக்கிறது. ஒரு தொழிலாளி, கரும்புத் தோட்டத்தில் வேலை செய்யும்போது, பாம்பு கடித்து செத்துப்போய் விட்டால்கூட, இந்தத் திட்டத்தின் மூலமாக 1 இலட்சம் ரூபாய் அவனுக்கு நஷ்ட ஈடு கிடைக்கும். கரும்பு விவசாயி கொடுப்பது கஷ்டம். அதனால், அவன் டன்னுக்கு 1 ரூபாய், தொழிலாளிக்கு ஏதாவது விபத்து ஏற்பட்டால் கொடுக்க வேண்டும் என்று சொல்வதிலே—800 ரூபாய் ஒரு டன்னுக்கு வாங்குகிறான். 1 ரூபாய் கொடுப்பதிலே எந்தவிதமான கஷ்டமும் எந்த விவசாயிக்கும் வராது. நாம் அதை ஒழுங்காக சொல்ல வேண்டிய இடத்திலே சொல்லி, collection பண்ணினோம் என்றால், எல்லா collection-ம் நடக்கும்.

நான் தொழிலாளர் நலத் துறையில் இருந்தபோது, முழுக் கவனம் செலுத்தினேன். நான் ஏதோ ஏனோதானோ என்று பேசவில்லை. எல்லா அதிகாரிகளையும் கலந்துவைத்துப் பேசி, நெடுஞ்சாலைத் துறை, பொதுப்பணித் துறை அதைப்போல வருவாய்த் துறை, எல்லோரையும் கலந்துகொண்டு பேசியிருக்கிறேன். ஒவ்வொரு துறைக்கும்—தையல் தொழிலாளர் என்று வைத்திருக்கிறோம். தையல் தொழிலாளி வேலை செய்யும்போது, அதனுடன் சம்பந்தப்பட்டவர்கள், நூல் உற்பத்தியாளர்கள், தையல் மிஷின் செய்பவர்கள், அவர்கள்தான் employers. அதனால், direct employers என்று நாம் பார்க்க முடியாது. They are indirect employers. எல்லாவற்றிலுமே indirect employment இருக்கும்; employers இருப்பார்கள். அந்த அடிப்படையில், அந்த employers-களிடமிருந்து contribution-ஐ வாங்கி, அந்த contribution-ஐயும் employees கொடுக்கின்ற contribution-ஐயும் சேர்த்துவைத்து, ஒரு corpus fund—ஒரு நிரந்தர அமைப்பு, அந்த வாரியங்களுக்கு

உருவாக்கப்படும் என்று சொன்னால், அதிலேயிருந்து வரும் வட்டிப் பணத்திலேயிருந்து நாம் கொடுக்கின்ற சலுகைகளைக் கொடுக்க முடியும் என்பதுதான் உண்மை. அதனால், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து மீண்டும் ஒருமுறை இதைப் பரிசீலியுங்கள். இதிலே எந்தச் சட்டச் சிக்கலும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. நீங்கள் மனது வைத்தால் செய்யலாம். சட்டச் சிக்கலே இருந்தால்கூட மாற்றலாம். ஒரு amendment கூட கொண்டு வரலாம். Notification கொடுக்கலாம். அது ஒன்றும் பெரிய விஷயம் இல்லை. கரும்பு முதலாளிகளிடமிருந்து ஒரு ரூபாய் வாங்குவது பெரிய விஷயம் அல்ல. அந்த அடிப்படையிலேதான் நான் சொல்ல விரும்புவதெல்லாம். இந்த அமைப்புசாராத் தொழிலாளர்கள் இன்றைக்கு கன்னியாகுமரியிலிருந்து இங்கே ஊர்வலமாக நடந்து வருகிறார்கள். அவர்களுக்குப் பல சலுகைகள் அறிவிக்கப்பட்டன. ஆனால், எந்தச் சலுகைகளுமே, அந்தச் சலுகைகள் எதுவுமே செல்லாத சூழ்நிலை இருக்கிறது. இன்றுகூட இதிலே ஒன்று சொல்லி இருக்கிறார்கள். 10 வாரியங்கள் இருக்கின்றன. முதலிலே கட்டுமானத் தொழில் வாரியத்தில் உள்ளவர்களுக்கு என்னென்ன சலுகைகள் கொடுக்கப்படுகின்றன என்று தெளிவாக கொடுத்திருக்கிறார்கள். அது சரியாக இருக்கிறது. அது மாதிரி 10 வாரியங்கள் என்று சொல்கிறபோது, எந்த எந்த அளவில் இருந்து என்று தனியாகக் கொடுத்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

பொதுவாக ஒரு கதை சொல்வார்கள். ஒரு பையன் என்ன பண்ணினான்? படிக்கிற பையன். அவனுடைய ஆறு பாடங்களிலே, 5 பாடங்களில் 90 மார்க் வாங்கிவிட்டான். கணக்குப் பாடத்திலே 30 மார்க் வாங்கிவிட்டான். 30 மார்க் வாங்கியவுடன், பள்ளிக்கூடத்திலே கூப்பிட்டுக் கேட்டவுடனே, அப்பா போய் சொல்லுகிறார். School-ல் first, average 80% மொத்தம்... (குறுக்கீடு) நான் சொல்லிவிடுகிறேன் சார். அமைச்சர், நீங்கள் அப்புறம் பதில் சொல்லுங்கள். Please என்னைக் கொஞ்சம் பேசவிடுங்களேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: தொழிலாளர் நலத் துறை அமைச்சர், அவருக்குக் கொடுக்கப்பட்ட நேரம் முடிந்து விடுகிறது. இரண்டு நிமிடங்களில் பேசி முடித்து விடுவார். அவர் பேசி முடித்தவுடனே உங்களைக் கூப்பிடுகிறேன். (குறுக்கீடு)

**டாக்டர் க. பொன்முடி:** நான் சொல்லிவிடுகிறேன். நான் ஒன்றும் தப்பாகச் சொல்லவில்லை.



**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் தவறான தகவலைச் சொல்லிக் கொண்டிருக்கிறார். அதாவது, 9 வாரியங்களில் ஆட்டோ மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர்கள் வாரியம், முடிதிருத்துவோர் நல வாரியம், தையல் தொழிலாளர்கள் நல வாரியம், சலவைத் தொழிலாளர்கள் நல வாரியம், பனைமரத் தொழிலாளர்கள் நல வாரியம், ஓவியர்கள் நல வாரியம், கைவினைக் கலைஞர்கள் நல வாரியம், கைத்தறித் தொழிலாளர்கள் நல வாரியம், காலணி மற்றும் தோல் பொருட்கள் தயாரிக்கும் தொழிலாளர்கள் நல வாரியம் என 9 நல வாரியங்கள் 1998-ல் அமைக்கப்பட்டன. அவற்றை ஒருங்கிணைத்து, ஒருவாரியமாக அமைக்கப்பட வேண்டுமென்று, ஒரு குழு போடப்பட்டது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், அந்த 9 வாரியங்கள் என்று தேர்தல் நேரத்தில் வாக்குறுதிகள் கொடுத்திருக்கிறார்களே தவிர, 9 வாரியங்களும் செயல்படவில்லை. ஆகவே, உங்களுடைய வை. பெருமாள் என்பவரும் ஒரு வாரியமாக அமைக்கப்பட வேண்டுமென்று கையெழுத்திட்டிருக்கிறார்கள். அதையும் மீறி, தேர்தல் நேரத்திலே 9 வாரியங்கள் இருக்க வேண்டுமென்று உங்கள் தேர்தல் அறிக்கையிலே அறிவித்தீர்கள். இப்பொழுது மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஒரே வாரியமாக அமைத்து, எல்லோரும் பயன்பெறுகின்ற வகையில் அறிவிக்கிறார்கள்.

பிற்பகல் 7-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. பொன்முடி, இரண்டு நிமிடங்களில் பேசி முடியுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுதான் நான் சொல்ல வருகிறேன். ஆறு வாரியங்களாக இருந்தது. அந்த ஆறு வாரியங்களிலே சொல்லியிருக்கலாம். அதுதான் சொல்ல வருகிறேன். 90 மார்க் வாங்கினான், 30 மார்க் வாங்கினான். போய் சொல்லும்போது, என்ன சொன்னார்கள் என்றால், 'என் பையன்தான் ஸ்கூலில் பர்ஸ்ட்' அப்படி என்று சொல்கிறார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர், அவர் உரையை முடிக்கப் போகிறார். அவர் உரையை முடித்தவுடன் கூப்பிடுகிறேன்.

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன்**: இல்லை, சொல்லி விடுகிறேன். [2002 மே 3
என்ன சொல்கிறேன் என்றால், அவர்களுடைய அமைப்பாளரே பெருமாள் என்பவரே ஆட்சேபனை பண்ணினார். ஆட்சேபனை பண்ணி, தீர்மானம் கொண்டு வருகிறார். தீர்மானம் கொண்டு வந்த பிறகு, அது 9 வாரியமாக தேர்தல் நேரத்திலே அறிவிக்கிறார். அது நடைமுறைக்கு வரவில்லை. அவர் கையெழுத்துப் போட்டிருக்கிறார். அது கையெழுத்துப் போட்டது ஆதாரமாக இருக்கிறது.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி.

**மாண்புமிகு திரு. வ. து. நடராஜன்:** அம்மா அவர்களின் முயற்சியாலே 9 வாரியங்கள் ஒரே வாரியமாக இணைக்கப்பட்டு, பலன் பெறுகின்ற வகையில் அறிவிக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, உறுப்பினர் தவறான தகவலைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பக்கம் 35-லே கொள்கை விளக்கக் குறிப்பிலே இருப்பதைப் படிக்கிறேன்.

"தமிழ்நாடு உடலுழைப்புத தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம் மற்றும் இதர நல வாரியங்கள்:

5.17. அரசு, அமைப்பு சாரா தொழிலாளர் நலனுக்கென கீழ்க்கண்ட நல வாரியங்களையும் அமைத்து ஆணையிட்டுள்ளது' இதிலேதான் இருக்கிறது. 10 வாரியங்கள் இருப்பதாகத் தெரிகிறது. இதை ஒன்றாக ஆக்கிவிட்டால் என்று குறிப்பிலே இல்லையே? சொல்லுங்கள், இருந்தால் ஒத்துக்கொள்கிறேன். 10-ம் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி, அமைச்சர் சொல்லிவிட்டார்.

**டாக்டர் க. பொன்முடி:** எங்கே, இல்லையே? 10 இருக்கிறது. இருக்கிறதைத்தான் நான் சொல்கிறேன். நீங்கள் அந்த மாதிரி சொல்லியிருந்தால் நான் கேட்கமாட்டேன். 10 வாரியங்கள் என்று அந்த பக்கத்திலேயே இருக்கிறது. 10 வாரியங்களைத் தனித்தனியாக போட்டிருக்கிறார்கள். நான் தப்பாகக்கூட சொல்லவில்லை. நீங்கள் தயவுசெய்து தப்பாக நினைக்காதீர்கள். இதை ஒரு healthy argument ஆக தயவுசெய்து எடுத்துக் கொள்ளுங்கள். எல்லாவற்றையுமே அந்தக் கண்ணோட்டத்தோடு பார்க்காதீர்கள். உண்மையிலேயே இதை நல்ல



எண்ணத்தோடுதான் நான் சொல்கிறேன். அமைப்புசாரா தொழிலாளர்கள் நன்றாக இருக்க வேண்டுமென்று சொல்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) 10 வாரியங்கள் இருக்கின்றன. அந்தமாதிரி நான் எதற்காக கணக்கைச் சொல்ல வருகிறேன் என்றால், 5 பாடங்களில் 90 வாங்கிவிட்டு ஒன்றில் 30 மார்க் வாங்கினான் என்றால், போய் கேட்டால், சொல்கிறபோது. "ஸ்கூலில் பர்ஸ்ட்" 480 மார்க் வாங்கியிருக்கிறான் 6 சப்ஜெக்ட்டில் average 80%. எவ்வளவு அய்யா மார்க் என்றால் என் பையன் ஸ்கூல் பர்ஸ்ட், average 80% வாங்கியிருக்கிறான். ஆனால் maths-ல் 30 மார்க் வாங்கி fail ஆகிவிட்டான் என்று அந்த மாதிரி சொல்கிற காலமும் உண்டு. இதில் 30 என்று சொல்வதில் தப்பு இல்லை. It is statistical jugglery, Intrepretation of data சொல்வதும் உண்டு. 30-ஐ 90 என்று சொல்வது தப்பு. இதில் அந்த மாதிரி சொல்லவில்லை, கொடுத்திருக்கிறார்கள். அதைக்கூட தப்பு என்று சொல்ல வரவில்லை. அந்த 30-ஐ 90 என்று சொல்லும்போது, it is statistical jugglery. அதுதான் நான் முதலிலே சொல்ல வந்தது. ஆனால் இதைப் பொறுத்தவரையில், இவர் சொல்லியிருக்கிறார். தனித்தனியாக, எந்தெந்த வாரியங்கள் என்று சொல்லியிருந்தால் சிறப்பாக இருக்கும். ஆகவே, அமைப்புசாரா தொழிலாளர் வாரியங்களைப் பொறுத்தவரையில் இன்னும் கொஞ்சம் அதிகமாக நிதி திரட்டிச் செய்ய வேண்டுமென்று நான் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இதில் கொஞ்சம் கவனம் செலுத்த வேண்டும். ஏனென்றால், ஓராண்டு ஆகிவிட்டது. ஓராண்டு காலமாக எந்தப் பலனும் இல்லாத காரணத்தாலே, இந்தக் கட்டுமானத் தொழிலாளர்கள் பூராவும் சோர்வலமாக வருகிறார்கள். தையல் தொழிலாளர்கள் எல்லாத் தொழிலாளர்களுமே ரொம்ப எதிர்பார்ப்போடு அதிலே சேர்ந்தார்கள். ஏனென்றால், ரூ.100 கட்டி அதில் சேர்ந்து விட்டால், அவர்களுடைய பாதுகாப்புக்கு ஒரு இலட்சம் ரூபாய் கிடைக்கும். விபத்தில் செத்துவிட்டால் ஒரு இலட்சம் கிடைக்கும். பிள்ளைகள் படிப்புக்கு வாய்ப்பு கிடைக்கும். இது ஒரு நல்ல திட்டம். மத்திய அரசாங்கத்திலேயும் அதை ஏற்றுக்கொண்டாலும்கூட, தமிழ்நாட்டிலும் அது இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களும், இதிலே எந்தவிதமான யார் கொண்டு வந்தார்கள் என்ற வேறுபாடு இல்லாமல் இதில் கொஞ்சம் முழுமையாக concentrate பண்ணி, ஒரு Corpus fund-ஐ தயவுசெய்து create பண்ணுங்கள். அப்போது இருந்த செகரட்டரிகூட அதுதான் சொன்னார்கள். Corpus fund-ஐ create செய்தால்தான் அதைச் செய்ய

முடியும். பட்ஜெட்டிலிருந்து அதைச் செய்ய முடியாது என்று சொன்னார்கள். அதற்கான முயற்சிகள்தான் நாங்கள் மேற்கொண்டதே. Employers—யிடமிருந்து contribution-ஐ வாங்கி, 200 கோடி, 100 கோடியை நாம் போட்டுவிட்டால், அதிலிருந்து வருகிற interest-ல் நாம் செய்யலாம். இது ஒன்றும் பெரிய விஷயமல்ல. ஆகவே, தயவுசெய்து அந்த 2 கோடி தொழிலாளர்களுடைய கோரிக்கைகளை நீங்கள் நிறைவேற்றுகின்ற வகையில், அதைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஒன்றே ஒன்று. சட்டத் துறையில் மட்டும் இரண்டே இரண்டு. ஒன்றும் தப்பாக இல்லை. அப்படியே படித்துக் கொண்டு செல்வதுதான். சட்டத் துறையைப் பொறுத்தவரையில், மாநில சட்ட ஆணையம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் ஆறு பேர் பேசவேண்டும்.

**டாக்டர் க. பொன்முடி:** இரண்டே இரண்டு நிமிடங்கள். மாநில சட்ட ஆணையம் 1994-ல் உருவாக்கப்பட்டது. அது 28-1-2002-வுடன் முடிவடைந்து விட்டது. அதிலே இன்னும் தலைவர், உறுபபினர்களெல்லாம் நியமிக்கப்படவில்லை என்று கேள்விப்படுகிறேன். அந்தச் சட்ட வாரியத்தில் அவர்ளை கொஞ்சம் நியமித்தீர்கள் என்றால் நன்றாக இருக்கும்.

அதேமாதிரி, தமிழ்நாடு சட்டங்களையெல்லாம் புத்தக வடிவில் சட்டத் துறை வெளியிட்டு வருவதாக சொல்கிறீர்கள். அந்த மாதிரி எனக்கு எதுவும் சட்டத் துறை வெளியீடு வந்ததாகத் தெரியவில்லை. ஆனால் இதிலேயே, குறிப்பிலேயே சொல்லியிருக்கிறீர்கள். சட்டத் துறை மூலமாக வெளியிடுவதாகவும், நீதிமன்றங்களில் அவற்றை அதிகாரப் பூர்வமான வெளியீடாகப் பயன்படுத்தலாம் என்றும் சொல்லியிருக்கிறீர்கள். இதுவரையிலும் வந்ததாகத் தெரியவில்லை. வரவில்லையென்றால் அதை வெளியிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, ஒருங்கிணைந்த நீதிமன்றங்கள் பெரும்பாலான மாவட்டங்களில் இல்லை. குறிப்பாக, விழுப்புரம் மாவட்டத்திற்கு, நீங்கள் தயவுசெய்து-விழுப்புரம் மாவட்டத்தில் இடமெல்லாம் கலெக்ட்ரேட்டில் இருக்கிறது. அங்கே பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. எல்லாம் தனித்தனியாக வாடகைக் கட்டடத்தில்தான் இருக்கின்றன. அதேமாதிரி, கடலூரிலும் கேட்கச் சொல்கிறார்கள்.



கலெக்டரேட் எல்லாம் வந்தாலும், அந்த ஒருங்கிணைந்த நீதிமன்றங்களையும் அருள்கூர்ந்து சட்ட அமைச்சர் அவர்கள் எங்கள் மாவட்டமான, விழுப்புரம் மாவட்டத்திற்கு, விழுப்புரம் தொகுதிக்கு விழுப்புரத்தில், குறிப்பாக இடம் எல்லாம் இருக்கிற காரணத்தாலே இந்த நிதிநிலை அறிக்கையிலே நீங்கள் ஒதுக்கி கட்டித் தரவேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன், நன்றி. வணக்கம்.

பிற்பகல் 7-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டத் துறை மற்றும் நீதி நிர்வாகம் சம்பந்தமான மானியக் கோரிக்கையில் என்னுடைய கருத்துகளை எடுத்துரைக்க வாய்ப்பு தந்த, என்னை அரசியலில் அறிமுகப்படுத்தி, கருணையுள்ளத்தோடு, சேரன்மாதேவி தொகுதி மக்களின் சார்பாக, இந்த அவைக்கு வர வாய்ப்புத் தந்த, பொன்மனத் தலைவி, இந்தியாவின் இரும்புத் தலைவி, இந்தியாவின் சிறந்த முதலமைச்சர், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு முதற்கண் என்னுடைய (மேசையைத் தட்டும் ஒலி) நன்றியினைத் தெரிவித்துக் கொண்டு, இன்றையதினம் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள், நான் பேசுகிறபோது இந்த அவையில் இருப்பதை என்னுடைய பாக்கியமாகக் கருதி, என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

சட்டத் துறை மற்றும் நீதி நிர்வாகம் சம்பந்தமாகப் பேசும்போது, இந்தியாவில் எந்த ஒரு முதலமைச்சருக்கும் தோன்றாத, மகளிர் நலனுக்காக, மகளிர் நீதிமன்றங்களை உருவாக்கிய முதல் தலைவி, முதல் தலைவர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்தான் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நான் குறிப்பிட்டாக வேண்டும். இன்றையதினம் மகளிர் நீதிமன்றங்கள் சென்னையிலும், கோவையிலும் ஏற்படுத்த இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு புரட்சியை செய்திருக்கின்றார்கள் என்பதை நான் தெரிவித்தாக வேண்டும்.

அதுபோன்று, பல நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ள வழக்குகளில் உடனடியாகத் தீர்ப்பளிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு, இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள்! உச்ச நீதிமன்றத்தில் 2,21,551 வழக்குகள் நிலுவையிலுள்ளன. உயர்நீதி மன்றத்தில் 1993-ஆம் ஆண்டு

26.51 இலட்சம், டிசம்பர் 1995-ஆம் ஆண்டு 29.81 இலட்சம், 1997ஆம் ஆண்டு 31.81 இலட்சம், ஜூன் 2001-ஆம் ஆண்டு உயர் நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்குகள் 35 இலட்சம் வழக்குகள். அதேபோன்று, கீழ் நீதிமன்றங்களில்—Subordinate Courts-என்று சொல்வார்கள்; அங்கே 2000-ஆம் ஆண்டு நிலவரப்படி 2.3 கோடி இந்தியாவில் நிலுவையிலுள்ளன. இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு, இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் 49 விரைவு நீதிமன்றங்களுக்கு அனுமதியளித்து, இன்று ஏழையெளிய மக்கள் பயன்பெறும்வகையில் விரைவு நீதிமன்றங்களை அமைத்து, வழக்குகளை உடனடியாக முடிப்பதற்குத் உத்தரவிட்டிருப்பதை நான் வரவேற்கிறேன்.

அதேபோன்று, நம்முடைய புரட்சித்தலைவி அவர்கள், முல்லை-பெரியாறு அணையின் நீர்மட்டத்தை உயர்த்தவேண்டுமென்று உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர நம்முடைய நிதிநிலை அறிக்கையிலும், பட்ஜெட்டிலும் தெரிவிக்கப்பட்டது. ஆனால், அந்த உச்ச நீதிமன்றம், இங்கே தமிழ்நாட்டுக்கும், தென்னக மக்களுக்கும் பயனளிக்கும் வகையில் ஒரு கிளை அமைக்கவேண்டுமென்று கழகத்தின் சார்பிலே உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பாராளுமன்றத்தில் வற்புறுத்த அறிவுறுத்திய ஒரே தலைவி டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள்தான் என்பதைத் (மேசையைத் தட்டும் ஒலி) தெரிவித்துக்கொள்கிறேன்.

உச்ச நீதிமன்றத்தைப் பொறுத்தவரையில், அரசியல் சட்டத்தில் பிரிவு 130-ன்படி, அதன் கிளை எங்கு வேண்டுமானாலும் அமையலாம். அரசியல் சட்டம் 32-வது பிரிவின்படி "without prejudice to the powers conferred on the Supreme Court by Clauses 1 & 2 Parliament may by law empower any other Court to exercise within the local limits of its jurisdiction all or any of the powers exercisable by Supreme Court". ஆகவே நம்முடைய பாராளுமன்றம் ஒரு சட்டத்தை நிறைவேற்றி, மற்ற நீதிமன்றங்கள்கூட உச்ச நீதிமன்றத்தின் அதிகாரத்தைப் பெற வழிவகை உள்ளது. நான் இதை மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கு ஒரு கோரிக்கையாக வைத்து, உச்ச நீதிமன்றக் கிளையை சென்னையில் அமைப்பதற்கு, ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, மத்திய அரசை வலியுறுத்த தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.



பிற்பகல் 7-55

அதேபோன்று, இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்கள் மகளிர் நலன் கருதி, மகளிருக்கு இழைக்கப்படும் கொடுமைகளைக் கருதி, நான் ஏற்கெனவே கூறியது போல, மகளிர் நீதிமன்றங்களை ஏற்படுத்தி—மகளிருக்கு நீதி, மகளிருக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்று மகளிர் காவல் நிலையங்களையும் முதலில் ஏற்படுத்தியது இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள்-இன்று நமக்குத் தந்திருப்பவர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்தான் என்பதை மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றேன்.

அதேபோன்று, மதுரையில் உயர் நீதிமன்றம் அமைப்பதற்காக, இந்த ஆண்டு சுமார் 44.81 கோடி ரூபாய் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டு இருப்பதன் மூலம், நம்முடைய தென் மாவட்டங்களிலுள்ள மக்கள் அனைவரும் பயன்பெறும் வகையில், மதுரையில், வழக்குகளை நடத்துவதற்கு அது ஏதுவாக இருப்பதற்கு, வழக்கறிஞர் என்ற முறையில், தென் மாவட்ட சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலும், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு, மீண்டும் ஒரு முறை என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, வழக்குகள் நிலுவையில் இருப்பதற்குக் காரணம், நீதிபதிகள் நியமிக்கப்படவில்லை என்பதை உள் துறை கமிட்டி அறிக்கைத் தெரிவிக்கிறது. இந்தியாவில் மார்ச் 2002-ஆம் ஆண்டு வரை உயர் நீதிமன்றத்தில் நீதிபதிகளின் மொத்த எண்ணிக்கை 647. இதில் 489 நீதிபதிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். 158 நீதிபதிகள் இன்னும் நியமிக்கப்பட வேண்டிய சூழ்நிலையில் இருப்பதால், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அரசு, இந்த வழக்குகள் உயர் நீதிமன்றத்தில் விரைவாக முடிப்பதற்காக, நீதிபதிகளை நியமிக்கும் அறிவுரையை கொடுக்க வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன், சிறப்பு நீதிமன்றங்களில் ஆதிதிராவிட மக்கள், அவர்கள் துன்புறுத்தப்படக்கூடாது என்பதற்காக, ஆதிதிராவிடர்கள், பழங்குடியினருக்கு எதிராக இழைக்கப்படும் கொடுமைகளை விசாரிப்பதற்காக, இந்த ஆண்டு 54 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் ஒதுக்கி, அந்த மக்களின் பாதுகாவலராக விளங்கிக் கொண்டிருப்பவர்தான் நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித்

தலைவி அம்மா அவர்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கே உள்ளேயும், வெளியேயும் கடந்த கால ஆட்சியில், சிறப்பு நீதிமன்றங்களுக்காக 54 கோடி ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது என்று பத்திரிகைச் செய்தியில் வந்திருக்கிறது. அந்தச் சிறப்பு நீதிமன்றங்களில் கடந்த கால வருவாய் இழப்பு நிகழ்வுகளை-குறிப்பாக சுதர்த் துறையில் கடந்த காலத்தில் ரூபாய் 2 கோடியே 56 இலட்சத்து 130 ரூபாய் முறைகேடு நடைபெற்றதாக 1998-99 ஆம் ஆண்டு தணிக்கை அறிக்கை தெரிவிக்கிறது. ஆகவே, இதுசம்பந்தமாக வழக்குகளை, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சிறப்பு நீதிமன்றங்கள் மூலமாக விசாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கக் கோரி தாழ்மையாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்றுதான், நேற்றையதினம் கால்நடைத் துறையில், ரூபாய் 8 கோடி ஊழல் நடைபெற்றதாக நம்முடைய அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இங்கே சட்டமன்ற உறுப்பினர் திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களால் அந்த வழக்குத் தொடரப்பட்டுள்ளது. வருவாய் இழப்பு எங்கிருந்தாலும், அந்த வழக்குகள் தனி நீதிமன்றங்களில், கடந்த கால ஆட்சியர்கள் நிறுவிய அதே நீதிமன்றங்களில், நடைபெற்று அவர்கள் நிறுத்தப்பட வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன். விஞ்ஞான ரீதியான ஊழலுக்கு அடையாளம்--சேலத்திலே விஞ்ஞான ரீதியான ஓர் ஊழல் நடைபெற்றது. ஆழ்குழாய்க் கிணறுகள் தோண்டும் விவகாரத்தில் பல கோடி ரூபாய் முறைகேடு நடைபெற்று, அதன் மீது Crime No.14/AC/2001 என்ற வழக்குத் தொடரப்பட்டது. நம்முடைய நிதிநிலைமை மோசமாக இருக்கின்றது என்பதை எடுத்துரைக்கும்போது, இந்தக் கடந்த கால வருவாய் இழப்பு நிகழ்வுகள்தான் அதற்குக் காரணம் என்பதை நான் ஒரு சான்றாக இந்த வழக்குகளில் எடுத்து தெரிவித்தேன்.

பிற்பகல் 8-00

அதுபோன்றுதான், கொப்பரைத் தேங்காய் ஊழல். அதுசம்பந்தமாக நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தொடர்ந்த வழக்கில், உயர் நீதிமன்றம் விசாரணைக்காக உத்தரவிட்டிருந்தது. ஆகவே, கடந்த கால வருவாய் இழப்பு நிகழ்வுகள், கடந்த கால முறைகேடுகள், கடந்த கால ஊழல்கள்—கடந்த கால ஊழியர்கள், அரசு ஊழியர்கள் தங்களுடைய வருமானத்திற்கு மீறி சொத்து சேர்த்தவர்கள் மீதுகூட சிறப்பு



நீதிமன்றங்கள் மூலமாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று நான் தாழ்மையுடன் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவிடம் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே நம்முடைய சட்டக் கமிஷனைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்த சட்டக் கமிஷனின் மூலமாக ஒருவர், Commision of Enquiry மூலமாக தண்டிக்கப்பட்டாலும்கூட, அவர்கள் தங்களுடைய வாக்குரிமையை இழக்கின்றார்கள் என்றுகூட 1978 ஆம் ஆண்டில் வந்த இந்து பத்திரிகையில், மே 13, 1978-ல் பழம்பெரும் கம்யூனிஸ்ட் தலைவர் திரு. ஜோதிபாசு அவர்கள், disenfranchisement for misuse of power என்ற தலைப்பில், ஒருவர் Commission of Enquiry மூலமாகக்கூட தண்டிக்கப்பட்டால், அவருடைய வாக்குரிமையைப் பறிப்பதற்கு அவர் அன்றையதினம் ஒரு தீர்மானத்தைக் கொடுத்திருந்தார். ஆகவே, நம்முடைய சட்டக் கமிஷன் அதைக்கூட ஆராய்ந்து, வரும் காலங்களில் இங்கே எந்தவிதமான வருவாய் இழப்பும் நிகழாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோரி, சுருக்கமாக ஓரிரு கோரிக்கைகளை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கு, மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் வாயிலாக தெரிவிக்க விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியில், ஜுன் மாதம் ஒன்றாம் தேதியன்று பல கிராமங்கள் நம்பியிருக்கும் பாசன வசதியானது கன்னடியன் கால்வாய் மூலமாக கொடுக்கப்படுகின்றது. ஆகவே, ஜுன் மாதம் ஒன்றாம் தேதி அன்று, கடந்த காலங்களில் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. இந்த ஆண்டும் ஜுன் மாதம் ஒன்றாம் தேதி அன்று திறந்தால், சேரன்மாதேவி தொகுதி விவசாயிகள் அனைவருமே பயன்பெறுவார்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சேரன்மாதேவியிலே ஒரு நீதிமன்றம் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆனால், இதுவரை கட்டடம் இல்லை. அதற்கான பரிந்துரைகூட உயர்நீதிமன்றத்திடமிருந்து நம்முடைய அரசுக்கு வந்திருக்கிறது. அங்கே ஒரு நீதிமன்றக் கட்டடத்தைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சேரன்மாதேவி தொகுதிக்கு ஒரு காவல் நிலையமும் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆனால் ஒரு கட்டடம் இல்லை. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சி தலைவி அம்மா அவர்களுக்கு, மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக என்னுடைய சேரன்மாதேவி தொகுதிக்கு

ஒரு காவல் நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கோபாலசமுத்திரம் பேரூராட்சியில், ஒரு நீர்த்தேக்கத் தொட்டியைக் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வடக்கு பச்சையாறு திட்டத்தில் எங்கள் தொகுதி அருகிலுள்ள நாங்குனேரி தொகுதி முழுமையாக பயன்பட்டு, 11 குளங்கள் அங்கே அதிகாரிகளால் பரிந்துரைக்கப்பட்டு நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களிடம் வந்து பரிசீலனையில் உள்ளது. ஆகவே, அந்தக் குளங்கள்கூட வடக்கு பச்சையாறு திட்டத்தின் மூலமாக பயன்பெறுகின்ற வகையில் இந்த ஆண்டு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பழுதடைந்த சேரன்மாதேவி மற்றும் வடக்கூர் நீர்த்தேக்கத் தொட்டியைச் சீரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த ஐந்து ஆண்டுகளாக ஐந்தாம் கட்டளை கூட்டுக் குடிநீர்த் திட்டம் பல கிராமங்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டமாக இருந்தது. ஆனால், செயல்பாட்டுக்கு வரவில்லை. அந்தத் திட்டத்தையும் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, சேரன்மாதேவி தொகுதி மக்களுக்கு நீண்ட காலமான கோரிக்கையான, எலுமிச்சையாறு மற்றும் வண்டலோடை திட்டம்- அது பாசன வசதிக்காக பல கிராமங்களுக்கு அது வசதியாக இருக்கும் என்பதால், அந்தத் திட்டமும்—நம்முடைய அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளது. அங்கே தலைமைப் பொறியாளர் அவர்கள் தன்னுடைய பரிந்துரையை அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே, அந்தத் திட்டத்தையும் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு, எனக்கு வாழ்வு அளித்து, வாய்ப்பு அளித்து, இந்த மாமன்றத்தில் பேச வாய்ப்பு அளித்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு கோடானு கோடி நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 8-05

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Constitution of new courts and Construction of new courts— புதிய நீதிமன்றங்கள் அமைத்தலும் மற்றும் நீதிமன்றங்களுக்கு மாவட்ட நீதிமன்றங்கள், சார்பு நீதிமன்றங்கள் மற்றும் ஜுடீசியல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட் போன்ற பல்வேறு பழைய கால நீதிமன்றங்கள் எல்லாம் புதுப்பிக்கப்பட வேண்டும், அவற்றை ரிப்பேர் செய்ய வேண்டும்,



அதனைப் புதிதாக கட்டித்தர வேண்டும் என்கின்ற ஒரு மாஸ்டர் பிளான், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் தயாரிக்கப்பட்டு, மத்திய அரசுக்கு ரூ.140 கோடி செலவில் அனுப்பப்பட்டிருக்கிறது. அது கிடைக்கப்பெற்றவுடன், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள் பேசுகிறபோது சில விளக்கங்களை நம்முடைய தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் தந்தார்கள். முழுமையாக விளக்கம் அளிப்பதற்கு அவர்களுக்கு நான் வாய்ப்பு அளிக்கவில்லை. அந்த விளக்கத்தை இப்போது வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்னது 1998-ல் 9 வாரியங்கள் போடப்பட்டன மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காலத்தில். அதற்குப் பின்னால் தமிழ்நாட்டில் அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கான ஒரே அமைப்பாக அமைக்கப்பட வேண்டுமென்ற உணர்வோடு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 9 அமைப்புகளும் பயன்படுகின்ற வகையில், ஒரு திட்டத்தைத் தீட்டியிருக்கிறார்கள். ஆனால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், அன்று இருந்த தொழிற்சங்கங்கள் இயக்கத்தைச் சார்ந்த வை. பெருமாள் என்பவர்கூட, அந்த 9 வாரியங்களும் ஒன்றாக வர வேண்டுமென்று— வாரியங்கள் எல்லாம் கூடி தீர்மானம் போட்டிருக்கிறார்கள். அதையும் மீறி, தேர்தல் நேரங்களில் 9 வாரியங்களும் தனியாக இயங்குமென்று அறிவிப்பை அறிவித்தார்களே தவிர, எந்த வாரியமும் பயன்படவில்லை. இப்போது 9 வாரியங்களும் இணைக்கப்பட்டு, 9 வாரியங்களும் பயன்படுகின்ற வகையில், எங்களுடைய இதய தெய்வம் அம்மா அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள் என்ற நல்ல செய்தியை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**டாக்டர் க. பொன்முடி:** 1998-ல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 9 வாரியங்கள் உருவாக்கினார்கள். 1998-ல் கலைஞர் ஆட்சி இருந்தது. அப்போது உருவாக்கப்பட்டவைதான் அந்த 9 வாரியங்கள். தயவுசெய்து சொல்கிறேன். இதில் ஒன்றும் prestige issue கிடையாது. அவர் சொன்ன வார்த்தை, அவர் சொன்னது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தொழிற்சங்கத் தலைவராக இருந்த திரு. பெருமாள் அவர்கள் தீர்மானம் போட்டார்கள். அந்தத் தீர்மானத்திற்குச் செயல்வடிவம் கொடுக்கவில்லை என்று அமைச்சர் சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன்:** பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய இயக்கத்தைச் சேர்ந்த தொழிற்சங்கத்தினுடைய பொதுச் செயலாளர் அவர்கள் ஒரே சங்கமாக இருக்கவேண்டும் என்று ஒரு தீர்மானம் போட்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைத்தான் சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன்:** அந்தத் தீர்மானத்தை நீங்கள் அனுமதிக்காமல் தேர்தல் நேரத்தில் 9 வாரியங்களும் செயல்படும் என்று சொல்லி, செயல்படவில்லை. இப்போது 9 வாரியங்களும் ஒருங்கிணைக்கப்பட்டு, 9 வாரியங்களையும் சேர்ந்த தொழிலாளர்கள் பயன்படுகின்ற வகையில் எங்கள் அம்மா அவர்கள் இன்று செயல்பாட்டுக்கு கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதைத்தான் மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம். (குறுக்கீடு) பொன்முடி, உட்காருங்கள். நீங்கள் கேட்டதற்கு விளக்கம் சொல்லிவிட்டார். உட்காருங்கள். திரு. கோவை தங்கம். (குறுக்கீடு) பொன்முடி, நீங்கள் கேட்டதற்கு விளக்கம் சொல்லி விட்டார். அவ்வளவுதான். நீங்கள் பேசும்போது ஏற்கெனவே சொன்னீர்கள். அதற்கு ஒரு விளக்கம் சொல்ல அவர் விரும்பினார். அதைச் சொல்லிவிட்டார். உட்காருங்கள். திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. நீங்கள் கேட்டதற்கு அமைச்சர் விளக்கம் சொல்லியிருக்கிறார், அவ்வளவுதான். உட்காருங்கள். வேறொன்றும் இல்லை. இதிலே விவாதத்திற்கு இடமில்லை. திரு. கோவை தங்கம்.



**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலத் துறை மானியக் கோரிக்கையின் மீது பேசுகின்ற வாய்ப்பைக் கொடுத்த தங்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்களது அன்புத் தலைவர், எங்களை வழிநடத்திச் சென்ற மக்கள் தலைவர், ஐயா ஜி.கே. மூப்பனார் அவர்களை வணங்கி, இன்று எங்களை வழிநடத்திச் செல்லும் அன்புத் தலைவர் ஜி.கே. வாசன் அவர்களை வணங்கி, எனது உரையைத் தொடங்குகின்றேன்.

தொழிலாளர் நலத் துறையில் பேசுகின்றபோது, தொழிலாளர்கள் பிரச்சினையைத் தீர்க்க மூடிக் கிடக்கிற தேயிலை எஸ்டேட்டுகள், மில்கள், இன்ஜினியரிங் தொழிற்சாலைகள் போன்றவைகளைத் திறக்க மாவட்டந்தோறும் ஒரு முத்தரப்பு பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்துள்ள மரியாதைக்குரிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை நான் மனதாரப் பாராட்டுகிறேன், (மேசையைத் தட்டும் ஒலி) வரவேற்கிறேன். உலக தொழிலாளர் தினமான மே தினத்தை இரண்டு நாட்களுக்கு முன்பு உலகம் முழுவதும் கொண்டாடினார்கள். ஆனால், வால்பாறை தேயிலை தோட்டத் தொழிலாளர்களுடைய வாழ்க்கையில் மகிழ்ச்சியே கிடையாது. வால்பாறை தேயிலை தோட்டத் தொழிலாளர்கள் சுமார் 1 இலட்சம் பேர் இன்றைக்கு பட்டினியால் வாடிக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே இவர்கள் வாங்கிய சம்பளம், கூலி, நாள் ஒன்றுக்கு 76 ரூபாய் 85 பைசாவை வைத்து, எப்படி குடும்பம் நடத்த முடியும்? சொல்ல முடியாத கஷ்டத்தில் குழந்தைகளைப் படிக்க வைக்க முடியாமலும், வயதுக்கு வந்த பெண்களைத் திருமணம் செய்து வைக்க முடியாமலும், நோய்வாய்ப்பட்ட குழந்தைகளுக்கு மருந்துகள்கூட வாங்க வழியில்லாமல் தவிக்கின்றார்கள்...

பிற்பகல் 8-10

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. திரு. கோவை தங்கம் பேசி முடித்ததற்குப் பிறகு முழு விளக்கம் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன்:** வால்பாறை பிரச்சினை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது அவர் வால்பாறை பிரச்சினையைப் பற்றித்தான் பேசுகிறார்.

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன்:** வால்பாறை தொகுதி எம்.எல்.ஏ. அவர்கள் ஒரு தவறான தகவலைச் சொல்கிறார் மன்றத்திலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லட்டும்.

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் என்னிடமும் அணுகினார். நான் அவரிடம் பல விளக்கங்களை சொன்னேன். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் வால்பாறை பிரச்சினையில் தொழிலாளர்களைக் காப்பாற்றுகின்ற வகையிலே, கடுமையான நடவடிக்கை எடுக்கச் சொல்லி உத்தரவிட்டிருக்கிறார்கள் என்ற முறையில், எங்களுடைய தொழிலாளர் நலத் துறையினுடைய அதிகாரிகளையும் அணுகி, மாவட்ட ஆட்சித் தலைவரையும் அணுகி, 29-4-2002 அன்று முதல் வால்பாறை பகுதியிலுள்ள தோட்டத் தொழிலாளர்கள் சாலை மறியலில் ஈடுபட்டது உண்மை. 2-5-2002 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அலுவலர்கள் முன்பு நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் தீர்வும் ஏற்பட்டு, 1-2-2002 முதல் எட்டு மாதங்களுக்குக் கீழ்க்கண்டவாறு ஊதிய முன்பணம் வழங்க ஒப்புக்கொள்ளப்பட்டது.

"ஒரு மாதத்தில் 25 நாட்கள் வேலை செய்தால் நிரந்தரத் தொழிலாளர்களுக்கு ரூபாய் 1,250-ம் Supervisor skilled 'C' category-க்கு ரூபாய் 1,410-ம், skilled category 'A'-க்கு ரூபாய் 1,300-ம், தற்காலிகத் தொழிலாளர்களுக்கு ரூபாய் 1,300-ம் பிடித்தம் இல்லாமல் சம்பள முன்பணம் வழங்கப்படும்."

இதன் அடிப்படையில், தொழிலாளர்கள் இன்று முதல் வேலைக்குத் திரும்பிவிட்டார்கள். மறியலும் இல்லை என்ற செய்தியை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரச்சினை முடிந்துவிட்டது என்கிறார்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர், தாயுள்ளத்தோடு இந்தப் பிரச்சினையிலே முழுமையாக ஈடுபட்டு, தொழிலாளர் நலத் துறை அமைச்சரோடு, மற்றும் உள்ள அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு, இந்தப் பிரச்சினையைத் தீர்க்க எடுத்துக்கொண்ட முயற்சிகளுக்கு எனது மனமார்ந்த நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி) வால்பாறை தேயிலை



தோட்டத் தொழிலாளர்கள் சார்பாகவும் நன்றி. அதை நான் இங்கே பின்னால் குறிப்பிடுவதற்கு, அந்தக் கருத்தினைக் கொண்டு வந்துகொண்டிருக்கிறேன். அதற்குள் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் இதிலே கருத்து சொல்ல விரும்புகிறார். இருந்தாலும் பரவாயில்லை. அவருடைய கருத்தினை நான் வரவேற்கின்றேன். ஆனாலும், இன்று காலை வால்பாறையிலே தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் மறியலிலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்ற செய்தியையும் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களை நான் 5 முறை நேரிலே சந்தித்து, வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுடைய பிரச்சினையை தெளிவாக எடுத்துக் கூறியிருக்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர்கள் ஹேமச்சந்திரன், கருணாகரன் ஆகியோரையும் அழைத்துச் சென்று பேசியிருக்கின்றேன். மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள், வால்பாறை தேயிலை தோட்டத் தொழிலாளர்களுடைய பிரச்சினையை முடித்துத் தருவதற்கு ஆர்வத்துடன் முன்வந்தார்கள் என்பதில் கருத்து வேறுபாடு கிடையாது. அவர்கள் உடனடியாக கோவை மாவட்ட ஆட்சித் தலைவரோடு தொடர்பு கொண்டு, இந்தப் பிரச்சினையை முடித்துத் தாருங்கள் என்று சொன்னார்கள். எங்களுடைய வேண்டுகோளுக்கு இணங்க, தேயிலைத் தோட்ட அதிபர்கள், வருகின்ற 6ஆம் தேதி பேச்சுவார்த்தை வைத்ததை, நாங்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள், 29ஆம் தேதியே ஏற்பாடு செய்தார்கள் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, அதற்காகவும் அவர்களுக்கு எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எங்களுடைய கோவை மாவட்டத்தினுடைய அமைச்சர், மரியாதைக்குரிய மாண்புமிகு செ.ம. வேலுசாமி அவர்களும், கோவை மாவட்ட ஆட்சித் தலைவரோடு, என்னை வைத்துக்கொண்டே தொடர்பு கொண்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் இதில் மிகவும் அக்கறையோடு, இதில் உறுதியாக, தொழிலாளர்களுக்குப் பழைய சம்பளத்தையே பெற்றுத் தரவேண்டும் என்கின்ற எண்ணத்திலே இருக்கின்றார்கள். ஆகவே, இதை எப்படியாவது உடனடியாக முடித்துக்கொடுங்கள் என்று மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் செ.ம. வேலுசாமி அவர்களும், இதிலே அக்கறை கொண்டார்கள்.

அவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். ஆனால், இப்போது இருக்கின்ற பிரச்சினை என்ன என்று சொன்னால், தேயிலைத் தோட்ட அதிபர்கள், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்காமல், அவர்கள் ஏற்கெனவே கொடுத்து வந்த 76 ரூபாய் 85 காசு சம்பளத்தைக் கொடுக்க முன்வரவில்லை என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும், இன்றைய நிலையில் ஒவ்வொரு தேயிலைத் தோட்டத் தொழிலாளியும் ½ மணிநேரம், ஒரு மணிநேரம் அதிகமாக வேலை செய்தால், ஏதோ 100 ரூபாய் அதிகமாக வந்தால், நம்முடைய குடும்ப கஷ்டத்தைத் தீர்த்துவிடலாம் என்கிற எண்ணத்தில் வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்ற நேரத்தில், திடீரென தேயிலைத் தோட்ட அதிபர்கள், இது மாதிரியாக சம்பளத்தைக் குறைத்தது மிகுந்த வேதனையைத் தருகிறது. வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் பதட்டமும், கொந்தளிப்பும் இன்று ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 8-15

தேயிலைத் தோட்ட அதிபர்கள் பல்வேறு வருடங்களாக, கோடிக் கணக்கான ரூபாயைச் சம்பாதித்து இருக்கிறார்கள். எங்கு பார்த்தாலும் சொத்துக்களை வாங்கிப் போட்டிருக்கிறார்கள். ஆனால், தொழிலாளர்களுடைய கஷ்டத்தை, தேயிலைத் தோட்ட அதிபர்கள் தெரிந்துகொள்ளவில்லை என்பதை, நான் ஏற்கெனவே கோவையிலே நடந்த UPASI மகாநாட்டில், மாண்புமிகு முன்னாள் ஊரக தொழில் துறை அமைச்சர் பாண்டுரங்கன் அவர்களை வைத்துக்கொண்டு, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் கஷ்டத்தை விரிவாக விளக்கி எடுத்துக் கூறியிருக்கிறேன் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள், அவர்கள் அதிகமான சம்பளத்தைக் கேட்கவில்லை. உலகத்திலே எங்குமே கொடுத்த சம்பளத்தைக் குறைக்க மாட்டார்கள். ஆனால், வால்பாறை தேயிலைத் தோட்ட அதிபர்கள், கொடுத்த சம்பளத்தைக் குறைக்க முன்வநதிருக்கிறார்கள். 76 ரூபாய் 85 பைசாவிலிருந்து, 72 ரூபாய் 20 பைசா தர முன்வந்திருக்கிறார்கள். 4 ரூபாய் 65 பைசா வித்தியாசம்.



ஆனால், 4 ரூபாய் 65 பைசா என்பது, ஒரு தேயிலைத் தோட்டத் தொழிலாளி, ஒரு நேரம் குடும்பத்துடன் சாப்பிடுகிற பணம் என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

மேலும், அங்கே வால்பாறையின் உண்மை நிலைமை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்குத் தெரியும். அங்கே வேறு மில்கள், தொழிற்சாலைகள், கம்பெனிகள் எதுவுமே கிடையாது. வேறு வியாபாரம் செய்யவும் வழியில்லை அல்லது விவசாயம் செய்வதற்கும் வழியில்லை. இருப்பது ஒரே ஒரு தொழில், தேயிலைத் தோட்டத் தொழில். அதிகமாக கடைகளும் கிடையாது. அப்படி இருக்கின்றபோது, அந்தத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் இதையே நம்பி வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். ஆகவே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்வது எல்லாம், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், தாய் உள்ளத்தோடு, வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுடைய உண்மையான கஷ்டத்தை தெரிந்து, அவர்களுக்கு மீண்டும் பழைய சம்பளத்தையே பெற்றுத் தருவதற்கு உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேசமயத்தில், தொழிலாளர்களுக்கு இதுவரை யாரும் செய்யாத ஒரு முடிவை, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் எடுத்திருக்கிறார்கள். தொழிலாளர்கள் குடும்பங்களின் கஷ்டத்தை நீக்குவதற்கென்றே, இந்த முத்தரப்புக் குழுவை அமைத்திருக்கிறார்கள். அதை நாங்கள் மனதார வரவேற்கிறோம், பாராட்டுகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

மழை, பனி, வெயில், அட்டைப் பூச்சி, கொடிய வன விலங்குகள் மத்தியில் இரத்தம் சிந்தி கடுமையாக உழைக்கும் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு வருடத்திற்கு ஒரு முறை வழங்கும் போனஸை 20 சதவிகிதமாகக் கொடுப்பதற்கு அரசு சட்ட திருத்தத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் வால்பாறையில் ஒரே தொழில் செய்கிறார்கள். அனைவரும் கொட்டுகின்ற பனியில் காலை 7 மணிக்கு வேலைக்குச் செல்கின்றார்கள். ஆனால் சில தொழிலாளர்கள் 20 சதவிகித போனஸ் வாங்குகிறார்கள், சில தொழிலாளர்கள் 8.33 சதவிகித போனஸ் வாங்குகிறார்கள். இதனால்தான் அங்கே கருத்து வேறுபாடு ஏற்படுகிறது. ஆகையால், அனைவருக்கும், தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் அனைவருக்கும், கட்டாயமாக,

20 சதவிகித போனஸ் வழங்குவதற்கு, அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வால்பாறை சட்டமன்றத் தொகுதியின் கீழ்ப்பகுதியில் உள்ள விவசாயிகள் தேங்காய் விலை வீழ்ச்சிக்குப் பிறகு மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். விவசாயிகள் குடும்பம் மிகவும் கஷ்டப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு நிமிடங்களில் உரையை முடித்துவிடுங்கள். இன்னும் 6 பேர் பேச வேண்டியிருக்கிறது.

**திரு. கோவை தங்கம்:** 10 இலட்சம் தோட்டத் தொழிலாளர்கள் பற்றியது. இரண்டு நிமிடங்களில் முடித்துவிடுகிறேன். விவசாயிகள் குடும்பம் மிகவும் கஷ்டப்பட்டு வருகிறது. குழந்தைகளைப் படிக்க வைக்க முடியாமல், வயது வந்த பெண்களைக்கூட திருமணம் செய்து வைக்க வசதி இல்லாமல் கஷ்டப்பட்டு வருகிறார்கள். இவர்களுடைய கஷ்டத்தைப் போக்க, கேரள மாநிலத்தில், தேங்காயை நேரடியாகக் கொள்முதல் செய்வதைப்போல், தமிழ்நாட்டில் விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்கும் வகையில், கூட்டுறவுச் சங்கங்கள் மூலம், நேரடியாகக் கொள்முதல் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே பணிபுரிகின்ற விவசாய கூலித் தொழிலாளர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கி, நீண்டகால கடன் தவணையில் வீடு கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 8-20

வால்பாறை தொகுதியில் விவசாயத்தை நம்பி வாழ்ந்துகொண்டுள்ள, சோமந்துரைசித்தூர், பிலிசின்னம்பாளையம், பெத்தநாயக்கனூர், கம்பலாபட்டி, காளியாபுரம், ரமணிமுதலியார்புதூர், கரியஞ்செட்டிப்பாளையம், மஞ்சநாயக்கனூர், அர்த்தநாரிபாளையம், அங்கலக்குறிச்சி, தென்சங்கம்பாளையம், செங்குநாயக்கன்பாளையம் ஆகிய ஊராட்சிகளில் குடிநீர் வசதி, தெருவிளக்கு வசதி, ரோடு வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேற்படி விவசாயம் நிறைந்த ஊராட்சிகளிலும் மற்றும் வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சியிலும் கோட்டூர் பேரூராட்சியிலும் உள்ள விவசாயப் பெருங்குடிமக்கள் நலனைக் கருதி 3 மணி நேரம் விவசாயத்திற்கு



தொடர்ந்து தண்ணீர் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தொடர்ந்து 3 மணிநேரம் மின்சாரமும் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகளின் ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் கவனியுங்கள். மற்ற கோரிக்கைகளையெல்லாம் எழுதிக் கொடுத்துவிடுங்கள்.

**திரு. கோவை தங்கம்:** தலைவர் அவர்களே, முக்கியமான விவசாயிகளின் பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் 6 பேர் பேச வேண்டும். அமைச்சர்கள் இரண்டு பேர் பதில் சொல்ல வேண்டும்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முக்கியமான பிரச்சினை, மிகவும் வேகமாக முடிக்கிறேன். 5 நிமிடங்கள் கொடுங்கள். (குறுக்கீடு) தொடர்ந்து 3 மணிநேரம் மின்சாரம் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத்திற்கு நீண்டகாலக் கடன்களை, நிபந்தனையற்ற முறையில், சொத்து ஜாமீன் இல்லாமல் வழங்க அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மூடிக்கிடக்கின்ற தேயிலை எஸ்டேட், ஆலைகள், தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள், சம்பளம் இல்லாமல் கஷ்டப்பட்டு, சாப்பிட வழியில்லாமல் இருக்கும்போது, அவர்கள் குடியிருக்கின்ற வீட்டிற்குக் கூடுதலாக மின்சாரம் முன்வைப்புத் தொகை கேட்டால், அவர்கள் என்ன செய்வார்கள் என்பதை நாம் சிந்திக்க வேண்டும். ஆகவே, அவர்களுக்கு தவணை முறையில் மின் கட்டணம் முன் வைப்புத் தொகை செலுத்த அனுமதி அளிக்க அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்துத் தொழிலாளர்கள் கேட்டு வருகின்ற ஏற்கெனவே நிலுவையில் உள்ள போனஸ் தொகையை அரசு வழங்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விசைத்தறித் தொழிலாளர்களுக்கு, மின் கட்டணத்தைக் குறைத்துக் கொடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

வால்பாறை அரசு மருத்துவமனை, கோட்டூர் அரசு மருத்துவமனை ஆகியவற்றில் பெண் மருத்துவர்கள் நீண்டகாலமாக இல்லை. அங்கு பெண் மருத்துவர்களை நியமனம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

டாப் ஸ்லிப்பில் ஒரு டாக்டரை நிரந்தரமாக நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தங்கம், சீக்கிரம் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. கோவை தங்கம்:** உரையை முடித்துவிடுகிறேன், தலைவர் அவர்களே, வால்பாறையில் எஸ்டேட்களுக்கு கடைசிவரை அனைத்துப் பகுதிகளுக்கும் பேருந்திலே சென்றுவர ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலாளர்கள், தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு உயர் கல்வியைக் கற்றுத்தருகிற கான்வென்ட் போன்ற தனியார் உயர் வசதி படைத்த பள்ளியில் படிக்க தொழிலாளர்கள் வசதி இல்லாதவர்கள். ஆகையால் தொழிலாளர்களின் குழந்தைகள் படித்துவரும் ஊராட்சி, நகராட்சி, பேரூராட்சிப் பள்ளிகளுக்கு வேண்டிய அடிப்படை வசதிகளைச் செய்து தர வேண்டும். சில பள்ளிகளில் போதுமான வகுப்பறைகள் இல்லை. உட்கார்ந்து படிக்க பெஞ்சு இல்லை. சில பள்ளிகளில் பெண்களுக்குக் கழிப்பிட வசதி இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, பள்ளி மாணவ, மாணவியர்மீது தனி அக்கறை கொண்டுள்ள இந்த அரசு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், தயவுசெய்து உதவி புரிய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வால்பாறையில் நீண்டகாலமாக அந்த மக்களிடையே உள்ள கோரிக்கையான, இருவழிப் பாதையாக ஆக்கித் தர வேண்டுமென்ற கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தங்கம், அதை அப்படியே கொடுத்துவிடுங்கள்.

**திரு. கோவை தங்கம்:** வால்பாறையில் ஒரு கல்லூரி, ஒரு தொழிற் பயிற்சிப் பள்ளி என்று எதுவுமே கிடையாது. அதையும் அரசு ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான விஷயத்தை நான் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இவ்வளவு நேரமும் சொல்லாமலா விட்டீர்கள். (சிரிப்பு) சரி, சொல்லுங்கள்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் கடந்த மழையின்போது வால்பாறையில்தான் அதிகம் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்ற கருத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் செய்தித்தாள்களில் புள்ளிவிவரத்துடன் அறிவித்தார்கள். சுமார் 80 இலட்சம் ரூபாய் அவசரமாக ரோடு வசதிக்கு வேண்டுமென்று மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்டிருக்கிறார்கள். அந்த 80 இலட்சம் ரூபாயை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, 1998 ஆம் ஆண்டு, எனது வால்பாறைத் தொகுதியில் உலக தின வங்கித் திட்டத்தின்கீழ் 14.10 கோடி ரூபாயில் காண்டூர் வாய்க்கால் சமமட்டச் சீரமைப்புப் பணி தொடங்கி 2000 ஆம் வருடத்தில் முடித்துள்ளார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தங்கம், உரையை முடித்துவிட்டு தண்ணீரைக் குடியுங்கள். (சிரிப்பு)

**திரு. கோவை தங்கம்:** ரூபாய் 13,63,16,695-ஐ அந்த ஒப்பந்ததாரரும் பணம் வாங்கிவிட்டார். இதிலே நிறைய முறைகேடுகள் நடந்திருக்கின்றன. நிறைய தவறுகள் நடந்திருக்கின்றன. அரசே ஒப்பந்ததாரர்களுக்குக் கொடுக்கவேண்டிய பணத்தை, சுமார் 1 கோடியே 36 இலட்சத்து 11 ஆயிரத்து 205 ரூபாயை குறைபாடுகளுக்காகவும், பேங்க் கியாரண்டி ரூ. 65 இலட்சத்தையும், முன்தொகை 70 இலட்சம் ரூபாயையும் நிறுத்தி வைத்துள்ளது. நான் சட்டமன்ற உறுப்பினராக வந்தவுடன், விவசாயப் பெருங்குடி மக்கள் கொடுத்த புகாரின் அடிப்படையில், ஒப்பந்ததாரருக்குக் கொடுக்க வேண்டிய பணத்தைக் கொடுக்கக்கூடாது என்று நிறுத்தி வைக்க அதிகாரிகளிடம் கடிதம் கொடுத்திருக்கின்றேன்.

பிற்பகல் 8-25

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே குறைபாடுகளும், முறைகேடுகளும் இருப்பதை அதிகாரிகள் நினைத்து, ஏற்கெனவே கொடுத்திருக்க வேண்டிய பணத்தை நிறுத்தி வைத்திருந்த, நேரத்தில் 'பிரைஸ் அட்ஜஸ்ட்மெண்ட்' விலைவாசி உயர்வு என்ற

காரணத்தைக் காட்டி, அந்த ஒப்பந்ததாரர் 83 இலட்சத்து, 30 ஆயிரத்து 226 ரூபாயை பெற்றுக் கொண்டார். இப்போது, அந்தக் காண்டூர் கால்வாயில் லேசாகக் கசிவு ஏற்பட்டு வருகிறது. நான் விசாரித்ததில் 3, 4 கோடி ரூபாய்தான் செலவு செய்திருக்கின்றார்கள். ஏனென்றால், அந்தக் கால்வாய் யானைகள், சிறுத்தைப் புலிகள் மிகவும் நிறைந்த இடம். அதனால், 3, 4 கோடி ரூபாயை செலவு செய்து விட்டு, பாக்கி 10 கோடி ரூபாயை ஒப்பந்ததாரர்கள் எடுத்துக் கொண்டுவிட்டார்கள் என்று பெருவாரியான விவசாயிகளும், பொதுமக்களும் அங்கே கருதுகிறார்கள். அதற்குரிய ஆதாரத்தை ஏற்கெனவே நான் மாண்புமிகு பேரவைத் தலைவரிடத்திலே அவையிலே காட்டி இருக்கிறேன். ஆகவே, அந்த 10 கோடி ரூபாயை அந்த ஒப்பந்ததாரரிடமிருந்து திரும்பிப் பெறுவதற்கு தாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடைசியாக, ஒரேயொரு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) திரு. மே.ப. காமராஜ் (குறுக்கீடு) மிச்சத்தை அப்புறம் வைத்துக்கொள்ளலாம், உட்காருங்கள். (குறுக்கீடு) கடைசி வாக்கியத்தைச் சொல்லி முடியுங்கள்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசி தொகுதி, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ராஜகோபால் அவர்களின் சார்பில், சென்ற முறை, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், முதல்வராக ஆட்சி செய்தபோது, 1992-1993 ஆம் ஆண்டில், ஸ்ரீவில்லிபுத்தூரில் மாவட்ட நீதிமன்றமும், மாவட்ட குற்றவியல் நீதிமன்றமும் அமைக்கப்பட்டது. அந்த சமயத்தில் 1996-ல் ஒருங்கிணைந்த நீதிமன்றம் கட்டுவதற்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம், நான் ராஜகோபாலிடம் கேட்டு வாங்கிக்கொள்கிறேன். (சிரிப்பு) அவர் எனக்கு ரொம்ப வேண்டியவர். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கம் சொல்கிறார். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவிற்கிணங்க... (குறுக்கீடு)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோவை தங்கம், அமைச்சர் பதில் சொல்கிறார். (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள், அமைச்சர் பதில் சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன்:** வால்பாறையில் தொழிலாளர்கள் 76 ரூபாய் 85 பைசா என்று இருப்பதை ஒட்டுமொத்தமாக 60 ஆகக் குறைக்கவும் அறிவிப்பு செய்தனர். பல்வேறு பேச்சுவார்த்தைகள் நடத்தியபின் 72 ரூபாய்க்கு அதிபர்கள் ஒப்புக்கொண்டனர். இதுசம்பந்தமாக கோவை மாவட்ட ஆட்சித் தலைவர், தொழிலாளர் நல ஆணையர், பல கட்டங்களில் பேச்சுவார்த்தை நடத்தி வந்தனர். மேலும், நாளை என் தலைமையில் தொழிலாளர் பிரதிநிதிகள் பேசுவதற்கு இருக்கின்றனர். நாளைய தினம் 3-00 மணியளவில் பேசி, அதைத் தீர்ப்போம் என்ற இந்த நல்ல செய்தியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, உட்காருங்கள். காமராஜ் பேசுங்கள். (குறுக்கீடு) போதும், போதும், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள் தங்கம் (குறுக்கீடு) அதைக் கொடுங்கள். அமைச்சரிடம் கொடுத்துவிடுகிறேன். திரு. காமராஜ் பேசுங்கள்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நீதி நிர்வாகம், சட்டத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது பேச வாய்ப்பு தந்த தங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன். எனக்கு முகவரி தந்து, என்னை சட்டமன்ற உறுப்பினர் ஆக்கிய மக்கள் காவலர் டாக்டர் ஐயா அவர்களுக்கும், சின்ன ஐயா அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையின் மீதான பாட்டாளி மக்கள் கட்சியினுடைய கருத்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நிர்வாகம் என்ற அடிப்படையில் அரசு நிர்வாகத்தில் மாவட்ட, மாநில தலைமையிடத்தில் கணினிமயமாக்கப்படுவதை வரவேற்கின்றேன். இதை மேலும், வட்ட ஒன்றிய அளவில் விரிவாக்கம் செய்ய வேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன். நிர்வாக வசதியை மக்களின் வாழ்விடங்களுக்கே கொண்டு செல்லும் திட்டத்தை வரவேற்கின்றேன். இதிலே, தற்போது பொதுமக்கள், ஜாதி சான்றிதழ், வருமானச் சான்று, இருப்பிடச் சான்று, பிறப்பு, இறப்பு சான்று போன்றவற்றைப் பெற,

தாசில்தார் அலுவலகம் சென்று வாங்குவதில், காலதாமதம் ஏற்படுகிறது. இந்தச் சான்றிதழ் பெறுவதற்காக, ஒரு புதிய அணுகுமுறையாக, அந்தப் பகுதியின் கிராம நிர்வாக அலுவலர், அந்தப் பகுதியின் ஊராட்சி மன்றத் தலைவர் சான்றளித்தாலே போதும் என்கின்ற நிலையை ஏற்படுத்துகின்ற வகையில், அரசு ஒரு புதிய சட்டத் திருத்தம் கொண்டுவர பரிசீலனை செய்ய வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். இதிலே தவறாக சான்று அளிப்பவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன்.

கிராமங்களில் நில அளவை செய்வது, தனிப் பட்டா வேண்டுமென்று விண்ணபபித்தால், 6 மாத காலத்திற்கு மேலாகிறது. எனவே, விண்ணப்பித்த ஒரு வார காலத்திற்குள் தனிப் பட்டா வழங்க நிர்வாக சீர்த்திருத்தம் கொண்டுவர வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 8-30

சட்டத் துறையைப் பொறுத்தவரை, 1953 ஆம் ஆண்டு கொண்டு வந்த மாநிலச் சட்டக் கல்வித் துறையின் தரத்தை உயர்த்த அரசு முனைப்புடன் செயல்பட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது அரசு சட்டக் கல்லூரிகள் ஐந்தும், தனியார் சட்டக் கல்லூரி ஒன்றும் உள்ளன. இது மிகக் குறைவு. இன்றைக்கு தாழ்ததப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட ஏழை மாணவர்கள் சட்டப் படிப்பு படிக்க விரும்புகின்றார்கள். ஆனால், தமிழகத்தில் கல்லூரிகளும் குறைவு, இடமும் குறைவு. ஆகவே, வரும் நிதியாண்டில் மேலும் பல சட்டக் கல்லூரிகள் தொடங்க வேண்டும். அதில் தருமபுரியில் ஒன்றை நிறுவ அரசு பரிசீலனை செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை உயர் நீதிமன்றத்தில் High Court Judge உயர்நீதிமன்ற நீதிபதி பதவிகளுக்குக் காலியாக உள்ள 11 இடங்கள் கட்டாயம் இட ஒதுக்கீடு மூலமாக நிரப்ப வேண்டுமென தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

சமுதாயத்தில் நலிந்த பிரிவினங்களுக்குத் தேவைப்படும் சட்ட உதவிகளை இலவசமாக அளிக்க 1987 ஆம் ஆண்டு சட்டப் பணிகள் ஆணைக் குழுச் சட்டம் இயற்றப்பட்டது. இதில், மாநில, மாவட்ட, வட்ட, சட்டப் பணிக் குழுக்கள் எனச் செயல்பட்டு வருகின்றன. இதில் மக்கள் நீதிமன்றங்களை நடத்துவதால், மக்களுக்கு நன்மை



கிடைக்கிறது. விரைவாக வழக்குகளும் முடிவடைகின்றன. இதில் மோட்டார் வாகன விபத்துகள் குறித்த லோக் அதாலத், மக்கள் நீதிமன்றம் நடைபெறுகிறபோது, அதில் பாதிக்கப்பட்டவர்கள் விரைவில் பைசல் செய்து கொண்டு, நஷ்ட ஈட்டுத் தொகை பெற விரும்புகிறார்கள். ஆனால், வழக்குகள் விரைவில் முடிகிறதே தவிர, பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈட்டுத் தொகை பெற பல மாதங்கள் ஆகின்றன. எனவே, அரசு காலதாமதமில்லாமல் உடன் நஷ்ட ஈட்டுத் தொகை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதி குறித்த ஒரு சில கோரிக்கைகளை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனது தாரமங்கலம் தொகுதியில், வறட்சியின் காரணமாக பல இடங்களிலே மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி முடிக்கப்பட்டு, தண்ணீர் ஏற்றப்படாமல் உள்ளது. மேலும் பல இடங்களில், ஏற்கெனவே போடப்பட்ட ஆழ்துளைக் கிணறுகளும் தண்ணீர் இல்லாமல் உள்ளன. எனவே, மாற்று போர்-வெல் அமைக்க அரசு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து அளிக்க அனுமதி வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த சிறப்பான திட்டங்களில் ஒன்றான, ஆதிதிராவிட மாணவிகளுக்கு வழங்குகிற இலவச மிதி வண்டி திட்டத்தை, மேலும் விரிவுபடுத்தி, மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஏழை விவசாயக் குடும்பத்தில் உள்ள மாணவிகளும் பயன்பெறும் வகையில், எம்.பி.சி. பிரிவினருக்கு வழங்கப் பரிசீலனை செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில், மிக முக்கியமான, நீண்ட நாளைய பிரச்சினையாக மேச்சேரி ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளது. இங்கு தினசரி சிகிச்சை பெறுகிற புறநோயாளிகள் கணக்கில் சேலம் மாவட்டத்திலேயே முதல் இடத்தில் இருக்கிறது. குழந்தைகள் பிறப்பு கணக்கிலே ஆண்டுக்கு பார்க்கிறபோது, தமிழகத்திலே மூன்றாவது இடத்திலே இருக்கிறது. இங்கு படுக்கை வசதி மூன்று இருந்தும், ஒன்று மட்டும்தான் நடைமுறையில் உள்ளது. எனவே, இந்த ஆண்டே 30 படுக்கை வசதி கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாகச் செயல்பட

[திரு. மே.ப. காமராஜ்] [2002 மே 3

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும், அறிவிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் உள்ள சிஸ்கால் தேனிரும்பு தொழிற்சாலை ஒரு வருட காலமாக மூடி இருந்து தற்போது மீண்டும் திறக்கப்பட்டு உள்ளது. இதில் நேரடியாக 600 பேரும், மறைமுகமாக 2,000 பேரும் பயன் அடைகிறார்கள். எனவே, இந்தத் தொழிற்சாலை மேலும் சிறப்பாகச் செயல்பட, அரசு அனைத்து உதவிகளும் செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மேச்சேரி காவல் நிலையத்தைப் பொறுத்தவரையில் காவலர்கள் மொத்தம் 13 பேர் மட்டுமே உள்ளனர். 174 குக்கிராமங்களும் ஒரு பேரூராட்சியும் கொண்ட, இந்தக் காவல் நிலையத்தில் அடிக்கடி திருட்டு வழக்குகளும் பதிவாகின்றன. விபத்துகளும் அடிக்கடி ஏற்படுகின்றன. உடனுக்குடன் காவலர்கள் சென்று பார்க்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அங்கு வேலைப் பளுவும் அதிகமாக உள்ளது. எனவே, மேலும் குறைந்தது 10 காவலர்களையாவது நியமிக்க வேண்டுமென மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அறிவித்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தை வரவேற்கிறேன். அதேபோல், ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஒரு தொழிற்சாலை அமைக்க இருக்கும் திட்டத்தையும் வரவேற்கிறேன்.

என்னுடைய தொகுதியில் உள்ள மேச்சேரி ஒன்றியத்தில் தக்காளி அதிகப்படியாக பயிர் செய்யப்படுகிறது. இங்கு பெரும்பாலும் மானாவாரி தக்காளி என்பதால் ஒரு வாரம்கூட குளிர்ச் சாதனப் பெட்டியில் வைக்காமல் வெளியே வைத்து இருந்தால்கூட கெட்டுப் போகாத நிலை இருக்கிறது. அந்த அளவுக்கு தரமான தக்காளி விளைச்சல் அதிகமாக உள்ளது. எனவே, இங்கு ஒரு தக்காளி பழ ஜூஸ் தொழிற்சாலை அமைத்தால் இங்குள்ள விவசாயிகளுக்கும் நிரந்தரமாக வேலை கிடைக்கும், அரசுக்கும் நல்ல வருமானம் கிடைக்கும். விவசாயிகளும் மகிழ்ச்சி அடைவார்கள். மேலும் இங்கு ஒரு குளிர்பதனக் கிடங்கு அமைத்தால், அதிகப்படியான தக்காளியையும் சேமித்து வைக்கக்கூடிய நிலையிருக்கிறது. எனவே, அரசு பரிசீலனை செய்து தக்காளி ஜூஸ் பேக்டரி அமைக்க அனுமதி வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.



2002 மே 3] [திரு. மே.ப. காமராஜ்]

தொழிலாளர் நலனைப் பற்றி ஒரு சிலக் கருத்துகளைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். குறைந்தபட்சக் கூலி நிர்ணயம் செய்கிறபோது, இரண்டு அம்சங்களை கருத்தில்கொள்ள வேண்டும், அவர்களுடைய தேவையைப் பூர்த்தி செய்கின்ற வகையிலே குறிப்பிட்ட அளவிலான அன்றாடச் செலவுகளைச் சமாளிக்கக் கூடியதாக இருக்க வேண்டும். வறுமைக் கோட்டிற்கு மேற்படக்கூடிய அளவில் நிர்ணயம் செய்யப்பட வேண்டும். அன்றாட தேவையின் அடிபபடையில் குறிக்கப்படும் குறைந்தபட்ச கூலி அவர்களுடைய வீட்டுச் செலவு நிலையைக் கருத்தில் கொள்வதாக இருக்க வேண்டும்.

பிற்பகல் 8-35

இதேபோல வேளாண் துறையில் ஆண்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு சராசரியாக 150 நாட்களுக்கு வேலையும், பெண்களுக்கு 100 நாட்களுக்கு மட்டுமே வேலை கிடைப்பதாக கோலப்பன் குழு பரிந்துரையில் சொல்லப்பட்டுள்ளது. பொதுவாக தொழிற்சாலைகளில் தொழில் தகராறுகள் குறித்த வரவு-செலவுத் திட்ட செயலாக்கத்தில் கொடுக்கப்படும் புள்ளிவிவரங்கள் பொருத்தமாக இல்லை. குறைந்தபட்சக் கூலி சட்டத்தினை அரசியல் சட்டத்தின் 9-வது அட்டவணையில் சேர்க்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசுக்கு நேரடியாக தமிழக அரசு செய்துள்ள பரிந்துரையைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறதா? இது குறித்து தமிழக அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன என்பதையும் தெரியப்படுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் உள்ளிட்ட விவசாயத் தொழிலாளர் நலனுக்காக அரசு உருவாக்குகிற திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து பயனடைந்த விவரங்கள் பற்றிய அறிக்கையை 6 மாதங்களுக்கு ஒருமுறை வெளியிட வேண்டும். அதைப் பொதுமக்களும் தெரிந்துகொள்கின்ற நிலையை ஏற்படுத்தவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் மொத்தமுள்ள அரசுப் பணியாளர்களில் 26.66 சதவிகிதம் பெண்கள் உள்ளனர். தொழிற்சாலைகளில் உற்பத்தியில் ஈடுபடும் பெண்களின் சதவிகிதம் 33.44 ஆகும். அதேபோல, தொழிற்சாலைகளில் 18 வயதுக்கு மேல் வேலை செய்யும் பெண்களின் எண்ணிக்கை 25.92 சதவிகிதம் என்றும், 16 வயதுக்கு மேல் 18 வயது வரை உள்ள பெண் குழந்தைத் தொழிலாளர்கள் 86.21 சதவிகிதம் எனவும், 59.15 சதவிகிதம்

பெண்கள் விவசாயக் கூலி வேலை செய்வதாகவும், அரசின் புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண் தொழிலாளர்களுக்கு வேலை உத்தரவாதம் இல்லை. பெரும்பாலும் பகுதி நேரமாகவும், நிரந்தரமாகவும் இல்லாததாலும், தற்காலிகமாக மட்டுமே நியமிக்கப்படுகிறார்கள். ஏற்றுமதி வளாகங்களில் வேலை செய்பவர்களுக்கு குறைந்தபட்சக் கூலி, E.S.I., P.F. மகப்பேறு விடுப்பு, ஓய்வூதியம் உள்ளிட்ட எந்தச் சட்ட சலுகைகளும் அமலில் இல்லை. சில துறைகளில் வேலை செய்யும் பெண்களில் சிலர் பாலியல் துன்புறுத்தலுக்கும் உள்ளாகின்றார்கள். விவசாயத் துறையில் உள்ள பெண் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்சக் கூலி 45 ரூபாய் என தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. இது நடைமுறையில் இல்லை என்பதற்கு இந்தியத் தொழிலாளர் ஆணையம் தமிழகம் குறித்து அறிவித்துள்ள புள்ளிவிவரங்களே சான்றாகும்.

கட்டுமானத் தொழிலில் வேலை செய்பவர்கள் பல்லாயிரம் பேர் வாரியத்தில் பதிவு செய்துள்ளார்கள். தற்போது வாரியத்தில் 4 கோடி ரூபாய் வருவாய் உள்ளது. வாரியத்தின் சார்பில் விண்ணப்பித்து கிடைக்கவேண்டிய எந்த ஒரு ஊக்கத் தொகையோ, உதவித் தொகையோ குறிப்பிட்ட நேரத்திற்குள் கிடைப்பதில்லை. குறிப்பாக, திருமண உதவி கேட்டு விண்ணப்பிக்கும்போது, ஆண் பெண் இருவரும் உறுப்பினராக இருந்தால், இதில் ஆண்களுக்கு மட்டுமே உதவித் தொகை அளிக்கப்படுவதை மாற்றி, பெண்களுக்கு வழங்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

மூடிய ஆலைத் தொழிலாளர்களுக்கு, கடந்த ஆட்சி காலத்திலே வழங்கப்பட்டு வந்த 250 ரூபாய், நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகச் சொல்கிறார்கள். இதை மேலும் 500 ரூபாயாக உயர்த்தி வழங்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

இதேபோல மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் மில் மூடப்பட்டுள்ளது. இதைத் திறக்கவேண்டி போராடிய பல்வேறு தலைவர்கள், தொழிற்சங்கத்தினர் மேல் எல்லாம் வழக்குகள் உள்ளன. அதில் எங்கள் கட்சியினுடைய தலைவர் திரு. ஜி.கே. மணி அவர்கள் மீதும் வழக்கு உள்ளது. எனவே, தொழிலாளர்கள் மீதுள்ள வழக்குகளை வாபஸ் பெற வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரமாகிவிட்டது. முடித்துவிடுங்கள். திருமதி மகேஸ்வரி.



**திரு. மே.ப. காமராஜ்:** ஒரே ஒரு நிமிடம். ஒரே ஒரு நிமிடம். இன்று அரசுப் போக்குவத்துக் கழகத் தொழிலாளர்கள் தங்கள் குடும்பங்களுடன் தமிழகம் முழுவதும் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். இவர்களது கோரிக்கையை அரசு கனிவோடு பரிசீலிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன். போனஸ் கேட்டு பல போக்குவரத்துத் தொழிலாளர்கள்மீது போடப்பட்ட அனைத்து வழக்குகளையும் வாபஸ் வாங்க வேண்டும். தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்களை உடனடியாக மீண்டும் பணிக்குச் செல்ல வாய்ப்பளிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன். 1-9-2000-க்குள் நடைபெறவிருந்த...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள். திருமதி மகேஸ்வரி.

**திரு. மே.ப. காமராஜ்:** மேட்டூர்-காரியாம்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டம் வேகமாக நடைபெற வேண்டும். அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டு, இந்த அளவிற்கு பேச வாய்ப்பினைத் தந்த தங்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி மகேஸ்வரி.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு அடிப்படையாய், அச்சாணியாய், ஆதாரமாய் அமைந்திருக்கும் தொழில் வளத்தின் முதுகுத் தண்டாய், மூச்சுக் காற்றாய் செயல்பட்டு வருகின்ற தொழிலாளர் தொடர்பான மானியக் கோரிக்கையிலே என்னைப் பேச அனுமதித்தமைக்காக முதற்கண் எனது மனமார்ந்த நன்றியை உரித்தாக்கிக் கொள்கின்றேன்.

"பட்டினில் ஆடையும், பஞ்சினில் உடையும்
பண்ணி மலைகளென வீதி குவிப்போம்"

என்றான் பாரதி. இன்றைக்கு நாம் வீதியிலே குவித்துக் கொண்டிருக்கிறோம், விற்பனைக்காக அல்ல. விலைகொடுத்து வாங்க ஆளின்றி வீணாய் போவதை மலையாய் குவித்துக் கொண்டிருக்கிறோம்.

ஜவுளித் துறையின் தேக்கநிலை காரணமாக பஞ்சாலைகள் எல்லாம் படிப்படியாய் பஞ்ச ஆலைகளாய் மாறிப்போக, பஞ்சாலை தொழிலாளர்களின் எதிர்காலமே இருண்டுபோனது. பஞ்சாலை நகரம் என்று சிறப்பாகப் பேசப்படுகின்ற கோவையிலே மட்டும் இன்றைக்கு பத்துக்கும் மேற்பட்ட பெரிய ஆலைகள் மூடப்பட்டுள்ளன. சிறு நூற்பாலைகளும், படிப்படியாக மூடப்பட்டு வருகின்றன. இதனைக்காட்டிலும் கொடுமையான விஷயம் என்னவென்றால், `Suspension of Operation' என்ற பெயரிலே, அறிவிக்கப்படாத ஆலை மூடல்களும், அறிவிக்கப்படாத கதவடைப்புகளும் ஏராளமாக நிகழ்ந்து வருகின்றன. மூடிய ஆலைகளைத் திறப்பதற்கான திட்டங்கள் ஆளுநர் உரையிலோ, நிதிநிலை அறிக்கையிலோ சொல்லப்படாதபோதும், இதைப்பற்றி இன்றைய கொள்கை விளக்கக் குறிப்பிலே கொடுக்கப்பட்டுள்ளது ஆறுதலாக இருக்கிறது. ஆனாலும்கூட 'மூடிய ஆலைகளைத் திறத்தல்' என்னும் தலைப்பை மட்டும் தந்துவிட்டு, உள்ளே, 'பெரும்பாலான ஆலைகள் நிதி நெருக்கடி, தொழிலில் ஏற்பட்டுள்ள மந்த நிலை, போட்டி, பங்குதாரர்களிடையே ஏற்பட்ட உட்பூசல் காரணமாக இயங்காமல் உள்ளதால், இவற்றைத் திறப்பது குறித்து நடவடிக்கை இத்துறையிலே இல்லை' என்று சொல்லப்பட்டிருக்கிறது. 'அதிகப்படியாக சமரச முறிவறிக்கை மட்டுமே அனுப்ப இயலும்' என்றும் சொல்லப்பட்டிருப்பது மிகவும் முரண்பாடாக உள்ளது. எனினும், மூடப்பட்ட ஆலைகளைத் திறப்பது தொடர்பான சாத்தியக்கூறுகளை ஆராய, மாவட்டந்தோறும் முத்தரப்புக் குழுக்கள் அமைத்திட அரசாணை பிறப்பித்துள்ளது, பாலைவனத்தினிடையே ஒரு சோலைவனம் போன்றதாகும். அதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த ஆட்சிக் காலத்திலே, ஆற்றுவாரின்றி, தேற்றுவாரின்றி அனாதைகள் போல் நின்றிருந்த பஞ்சாலைத் தொழிலாளர்கள், இன்றைக்கு அழுது தீர்ப்பதற்கு ஓர் அன்னையின் தோள் கிடைத்திருப்பதுபோன்று ஆறுதலாகவும், தேறுதலாகவும் உணர்கின்றார்கள். ஆனாலும், இந்த அரும்பெரும் முயற்சியைக்கூட அரசியல் ஆதாயம் காணும் முயற்சி என கையாலாகாத சிலர் களங்கம் கற்பிக்க முயற்சிக்கிறார்கள். அதிகாரமற்ற குழு என்ற விமர்சனங்கள்கூட உள்ளன. என்னைப் பொறுத்தமட்டிலும், இக்குழுவிற்கு அதிகாரம் அளிக்கப்படாவிட்டாலும்கூட, இக்குழு ஆய்வு



மேற்கொண்டு, பரிந்துரைப்பதை இவ்வரசு அமல் நடத்த முன்வந்தால், அதுவே போதுமானதாகும் என நான் கருதுகின்றேன்.

அத்தோடு இன்றைக்கு பஞ்சாலைகள் போலவே, மூடப்பட்டு வரும் இன்ஜினியரிங் தொழிற்சாலைகளின் பட்டியலும் நீண்டுகொண்டே வருகிறது. ஆகவே, இந்த முத்தரப்புக் குழுவானது முதலிலே மீண்டும் இயக்க இயலாத பஞ்சாலைகளையும், இன்ஜினியரிங் தொழிற்சாலைகளையும் இனம் காண வேண்டும். மீண்டும் இயக்க இயலாத நிலையிலே இருக்கிற தொழிற்சாலைகளையெல்லாம் கம்பெனி சட்டத்தின்கீழே ஒரு கலைப்பு அதிகாரியை நியமித்து, இந்தத் தொழிற்சாலைகளையெல்லாம் கலைப்பு செய்து, தொழிலாளர்களுக்குச் சேரவேண்டிய பணிப் பயன்களையும், வேலை இழப்பிற்கான ஈட்டுத் தொகையையும் உடனடியாக பட்டுவாடா செய்ய இவ்வரசு அனைத்து நடவடிக்கைகளையும் துரிதமாக மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று நலிவுற்ற தொழிற்சாலைகளைப் புனரமைத்துக் காப்பாற்ற பல்வேறு நிவாரணங்களையும், சலுகைகளையும் அளிக்க இவ்வரசு முன்வரவேண்டும். நலிவுற்ற தொழிற்சாலைகளை எடுத்து நடத்த அயல்நாட்டு முதலீட்டாளர்களையும், உள்நாட்டு முதலீட்டாளர்களையும் இவ்வரசு ஊக்குவிக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறேன்.

மூடப்பட்ட தொழில் நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு மாதாந்திர நிவாரணத் தொகையாக 250 ரூபாய் அளிக்கப்படும் என்று சென்ற ஆட்சியாளர்கள் ஆர்ப்பாட்டமாக அறிவித்தார்கள். ஆனால், அறிவித்ததோடு சரி. அறிவிக்கப்பட்ட தொகையை அவர்களுக்கு அளிக்க எந்தவிதமான நடவடிக்கையையும், அக்கறையையும் அவர்கள் காட்டவில்லை. ஆனால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற உடனேயே இந்நிவாரணத் தொகையை பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கி, தான் 'பாட்டாளிகளின் கூட்டாளி' என்பதை மெய்ப்பித்துக் காட்டியுள்ளார்கள். ஆகவே, அதற்காக நான் அவர்களுக்கு நன்றி சொல்லிக்கொண்டு, இந்தத் தொகை இருந்தாலும் போதுமானதாக இல்லை. ஆகவே, 250 ரூபாய் என்னும் தொகையை, 750 ரூபாயாக உயர்த்தித் தரவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மேலும், இந்நிவாரணத் தொகையைப் பெறுவதிலே பல்வேறு நிபந்தனைகள் சொல்லப்படுகின்றன. இந்த நிபந்தனைகளெல்லாம் சற்று கடுமையாக இருக்கின்ற காரணத்தினால்,

இந்த நிபந்தனைகளை எளிதாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, நிவாரணம் பெறும் முறையையும் நீங்கள் சற்று இலகுவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவை, சிறுமுகையிலுள்ள சௌத் இண்டியா விஸ்கோஸ் தொழிற்சாலை, பெருந்தலைவர் காமராஜர் அவர்களால் 1960-ல் தொடங்கப்பட்ட மிகப்பெரும் தொழிற்சாலை. இதிலே நேரடியாக 4,000 தொழிலாளர்களும், மறைமுகமாக 10,000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்களும் பணியாற்றி வருகின்றனர். இந்தத் தொழிலாளர்களுக்கு 2002, ஜனவரி மாதம் முதல் ஊதியம் பட்டுவாடா செய்யப்படவில்லை. இவையன்றி திருத்தப்பட்ட ஊதியத்திற்கான வித்தியாசத் தொகை, போனஸ் போன்ற நிலுவைத் தொகைகளும் உள்ளன. ஆலை நிர்வாகம் தொழிலாளர்களைப் பழிவாங்கும் நடவடிக்கையாக லே-ஆஃப் பெர்மிஷன் கேட்டு விண்ணப்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. மேலும், எந்தவித உற்பத்திப் பணிகளையும் மேற்கொள்ளாமல், உற்பத்திப் பணிகளையெல்லாம் வேண்டுமென்றே முடக்கி வைத்திருப்பதாகவும் சொல்லப்படுகிறது. ஆகவே, இந்தத் தொழிலாளர்களுக்குச் சேரவேண்டிய, சட்டரீதியான நிலுவைத் தொகைகளை, நிர்வாகம் பட்டுவாடா செய்யவும் மற்றும் தொழிற்சாலையை மீண்டும் இயக்கவும் இவ்வரசு உடனடியாக ஆவன செய்யவேண்டுமென பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மதுராந்தகம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையானது 1993-94-லே தொடங்கப்பட்டது. இதிலே 500 தொழிலாளர்கள் பணியாற்றுவதோடு, இவ்வாலையை நம்பி 5,000 விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் உள்ளனர். 11-5-2001 முதல் இவ்வாலைத் தொழிலாளர்களுக்கு வேலை அளிக்காமலும், லே-ஆஃப் அளிக்கப்பட்டு வருகிறது. ஆலையின் அரவை நிறுத்தப்பட்டு விட்டதால், அப்பகுதி விவசாயிகளும் பெரும் பாதிப்புக்குள்ளாகி உள்ளனர். தொழிலாளர் நலனிலே அக்கறை கொண்ட இவ்வரசு, இவ்வாலையை மீண்டும் இயக்கி, இதனை நம்பி வாழும் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் வாழ்விலே ஒளியேற்றவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

இத்தொழிலாளர்களுக்கு பிப்ரவரி 2002 ஆம் மாதம் முதல் ஊதியம் பட்டுவாடா செய்யப்படவில்லை. வருங்கால வைப்பு நிதிக்குச் செலுத்தப்படவேண்டிய தொகையும் செலுத்தப்படவில்லை. இவை தவிர, ஈட்டிய விடுப்புத் தொகை, பணிக்கொடை தொகை, நாணயச் சங்கம்



மற்றும் வீட்டு வசதிக் கடன் தொகை ஆகிய பிடித்தம் செய்யப்பட்ட தொகைகளும் செலுத்தப்படாமல் நிலுவையில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே, இந்நிலுவைத் தொகைகளையெல்லாம் உடனடியாக பாதிக்கப்பட்டத் தொழிலாளர்களுக்கு செலுத்த இவ்வரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும்.

பிற்பகல் 8-45

அதேபோன்று சென்னைக்கு அருகில் உள்ள ஸ்டாண்டர்டு மோட்டார் கார் தொழிற்சாலை 1-4-1994 முதல் செயல்முறையை நிறுத்தி வைத்தல் என்ற பெயரிலேயே, முன்னனுமதி பெறாத, அறிவிக்கப்படாத கதவடைப்பு செய்துள்ளது. அதிகாரப்பூர்வ கலைப்பு அதிகாரியிடம் இத்தொழிற்சாலையின் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டு, 8 ஆண்டுகள் ஆகியும்கூட, இதுவரை தொழிலாளர்களுக்கு எவ்வித நிவாரணத் தொகையும் கிட்டவில்லை. இதனால் இங்கு பணியாற்றி வந்த 2,224 நிரந்தரத் தொழிலாளர்கள் பணியுமின்றி, பணிப் பயன்களும் இன்றி பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும், விருப்ப ஓய்வுத் திட்டத்தின்கீழ் பணியிலிருந்து விலகியுள்ள 385 தொழிலாளர்களுக்கும் ஒப்பந்தப்படியான தொகையில் இன்னமும் மூன்றில் ஒரு பங்குத் தொகை வழங்கப்படவில்லை. ஆகவே, மீண்டும் இத்தொழிற்சாலையை இயக்க இவ்வரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இயலாத பட்சத்திலே இத்தொழிற்சாலையை கலைப்பு அதிகாரியிடம் ஒப்படைத்து, கலைப்பு செய்து, தொழிலாளர்களுக்கு உரிய நிவாரணத் தொகையை வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, அரக்கோணம் இரும்பு உருக்காலையில் பணியாற்றி வந்த 742 தொழிலாளர்கள், கடந்த ஆட்சியாளர்களால் விருப்ப ஓய்வு, V.R.S. என்ற பெயராலே C.R.S. கட்டாய ஓய்வு செய்யப்பட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர். அரசாணை எண் 222-ன்படி ஈட்டுத் தொகை வழங்கப்படாததோடு 11 மாதங்களுக்கான நிலுவை ஊதியமும், ஒரு வருட போனசும், திருத்தப்பட்ட சம்பளத்திற்கான வித்தியாசத் தொகையும் வழங்கப்பட வேண்டும். அத்தோடு வருங்கால வைப்பு நிதிக்கு செலுத்தப்பட வேண்டிய தொகையும் முழுமையாகச் செலுத்தப்படாமல் உள்ளது. இதனால், தொழிலாளர்களுக்கு குறைந்த ஓய்வூதியம்தான் கிடைக்கிறது. மேலும், மாற்று வேலை அளிப்பதாகக் கூறி, அரசாணை எண் 524, 623-ஐ வழங்கிய அரசு, 725 நபர்களில் மொத்தம் 120 பேருக்கு மட்டுமே, அதுவும்கூட தகுதியற்ற வேலைகளைத்

தந்துள்ளது. ஆகவே, இக்குறைகளையும் இவ்வரசு நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவை, சிந்தாமணி கூட்டுறவு பண்டகசாலையில் பணியாற்றி வந்த சுமார் 40 பணியாளர்கள் கடந்த ஆட்சியாளர்களால் V.R.S. என்ற பெயரிலே கட்டாயமாக மிரட்டி வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். ஒரு தொழிலாளர் கட்டாயப் பணி ஓய்வு செய்யப்படும்போது. அவர்களுக்கு பணி செய்த வருடம் ஒன்றிற்கு 15 நாட்களுக்கான ஊதியம் அளிக்கப்பட வேண்டுமென்பது தொழில் தகராறுகள் சட்டத்தின் விதிமுறை. ஆனால், இந்த விதியை மீறி 8 நாட்களுக்கான ஊதியம் மட்டுமே ஈட்டுத் தொகையாக வழங்கப்படும் என்று சொல்லி, அந்தத் தொகையும் இதுவரை வழங்கப்படவில்லை. பணிக்கொடையும் வழங்கப்படவில்லை. அவர்களுக்கான நிலுவைத் தொகையும் வழங்கப்படாமல் இன்னும் நிலுவையாகத்தான் உள்ளது. (மணியடிக்கப்பெற்றது) ஆகவே, அவற்றையும் வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டத்திலுள்ள 'இன்கோ சர்வ்' தொழிற் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலையில் பணியர்ற்றி வந்த தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்கள் பலர் V.R.S. திட்டத்தின்கீழே கடந்த ஆட்சிக் காலத்திலே வெளியேற்றப்பட்டனர். திட்டத்தை அறிவித்துவிட்டு, நிவாரணத் தொகை வழங்குகின்ற நேரத்திலே, திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை வேறு செலவினத்திற்காக ஒதுக்கப்பட்டுவிட்டதாக அலட்சியமான பதிலை அவர்கள் தந்துள்ளார்கள். பணியுமின்றி, பணமுமின்றி, பாதையில் நிற்கும் பரிதாபத்திற்குரிய தொழிலாளர்களை இவ்வரசு கருணையோடு காக்க முன்வரவேண்டும். மேலும், இவர்களுக்கு இந்த உரிய நிவாரணத் தொகையை உடனடியாக வழங்க வேண்டும் என்பதோடு Plantation Labour Act-ன்படி, 300-ம் அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் இருக்கின்ற தோட்டங்களிலே Welfare Officer நியமிக்கப்பட வேண்டும் என்ற முறையானது அங்கே பின்பற்றப்படவில்லை என்ற குறையினை மாண்புமிகு ஊட்டி சட்டமன்ற உறுப்பினர் எச்.எம். ராஜு அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதையும் இந்த அரசு கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவை மாநகராட்சியிலே பணியாற்றிவரும் துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் கிளீனர்கள், பல ஆண்டுகளாக நிரந்தரம் செய்யப்படாமல் ஒப்பந்த அடிப்படையிலே தொகுப்பூதியம் அளிக்கப்பட்டு வருகின்றனர்.



ஆகவே, இவர்களையும் நிரந்தரம் செய்து, ஒரு நியாயமான ஊதியத்தை இவர்களுக்கு நிர்ணயம் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு தெலுங்கு தேவாங்கர் சமூகத்தைச் சேர்ந்த ஏழைக் கைத்தறி நெசவாளர்களுக்கு கோவை கவுண்டன்பாளையத்தில் இரண்டு ஏக்கர் நிலத்தில் 40 சைட்டுகளாகப் பிரித்து அளிக்கப்பட்டுள்ளது. இந்நிலத்தில் மேற்படி ஏழை நெசவாளர்களுக்கு தறி போட்டு நெசவு செய்யக்கூடிய அளவுள்ள வீடுகளை நீண்ட கால தவணை முறையில் கட்டிக் கொடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் விசைத்தறித் தொழிலாளர்களெல்லாம் மின் கட்டண உயர்வு காரணமாக விசைத்தறிகளையெல்லாம் நிறுத்த வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இதனையும் இவ்வரசு பரிவோடு பரிசீலனை செய்ய வேண்டும். சுமார் 3 இலட்சம் தொழிலாளர்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆகவே, இவர்களுக்கும் ஒரு நல்ல மாற்று ஏற்பாட்டினை இந்த அரசு செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள்.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** மாநில தொழிலாளர் ஆலோசனை வாரியத்திற்கு, சட்டமன்ற உறுப்பினர்களும் உறுப்பினர்களாக அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பணிக்கொடை கட்டுப்பாட்டு அதிகாரிக்கு அவர் அளித்த தீர்ப்பினை execute செய்யும் அதிகாரம் இல்லை. ஆனால், Provident Fund சட்டத்திலே Assistant Commissioner-க்கே Recovery Officer பொறுப்பும், அதிகாரமும் உள்ளது. ஆகவே, அதேபோன்ற ஒரு அதிகாரத்தை, வசூல் அதிகாரத்தை, பணிக்கொடை கட்டுப்பாட்டு அதிகாரிக்கும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று பெண் வேலைவாய்ப்பிற்கு இந்தத் தொழிற்சாலைகள் சட்டமே ஒரு மிகப்பெரும் முட்டுக்கட்டையாக உள்ளது. இரவு 7 மணிக்கு மேல் பெண்கள் பணிக்குச் செல்வதற்கான சட்டவிதிகள் இல்லை. ஒரு வேளை Chief Inspector of Factories அலுவலகத்தில் நாம் அனுமதி பெற்றால்கூட 10 மணிக்கு மேல் அவர்கள் வேலை செய்ய இயலாது. இன்றைக்கு தொலைபேசித் துறையிலும், மருத்துவத் துறையிலும் பெண்கள் பணியாற்றி வருகின்றார்கள். இராணுவத்தில்கூட பெண்கள் இருக்கின்றார்கள். அதனைக் காட்டிலும் ஆண்களையும் விஞ்சும் அளவு, அல்லும் பகலும் அயராது பாடுபடும் மாண்புமிகு

முதல்வர் அவர்கள்கூட பெண்ணாகத்தான் இருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, உயர்நீதிமன்றம் பரிந்துரை செய்தவாறு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள தொழிற்சாலைகளில் இரவு நேரங்களில் பெண்களைப் பணிக்கு அமர்த்தும் வகையிலே சட்டத் திருத்தம் கொண்டுவர இவ்வரசு முயல வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். நல வாரியங்களைப் பொறுத்தமட்டிலும், அதன் செயல்பாடுகள் அவ்வளவு திருப்திகரமாக இல்லை. நலவாரியங்களின் பயன்கள் அந்தத் தொழிலாளர்களைச் சென்று சேர வேண்டுமானால், மாவட்டந்தோறும் நல வாரியங்களில் மையங்களை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தங்க நகைத் தொழிலாளர்களுக்கென தனி நல வாரியம் அமைப்பதை இந்த அரசு கனிவோடு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 8-50

தங்க நகைத் தொழிலாளர்களுக்கென கூட்டுறவு அமைப்பு ஏற்படுத்தப்படுமென அறிவித்து, தடம் புரியாமல் தவித்து நிற்கும் தங்க நகைத் தொழிலாளர்களுக்கு தன்னம்பிக்கையூட்டியுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் ஆயிரமாயிரம் நன்றி மலர்களை இந்த நேரத்திலே காணிக்கையாக்கிக்கொள்கிறேன்.

கோவை கெம்பட்டி காலனியிலே இராஜேந்திரன் என்னும் தங்க நகைத் தொழிலாளி குடும்பத்தோடு தற்கொலை செய்து கொண்டதில் அவரது இரண்டு குழந்தைகள் மட்டும் உயிர் பிழைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு நிவாரணத் தொகை கோரி, நான் பலமுறை மனு செய்திருக்கிறேன். ஆனால், இதுவரை அரசின் தரப்பிலே எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆகவே, நிராதரவாக இருக்கும் அந்தக் குழந்தைகளுக்கு குறைந்தபட்சம் தலா ஒரு இலட்சம் ரூபாயாவது வழங்க தாயுள்ளம் கொண்ட முதலமைச்சர் அவர்கள் முன்வரவேண்டுமென்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

நீதித் துறையைப் பொறுத்தமட்டிலும் வழக்கறிஞர் சேம நிதிக்கு..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் துறை மானியக் கோரிக்கையின்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில முக்கியமான விஷயங்களை நான் முன்வைத்தாக வேண்டும். ஆனால் நேரமும் அதற்காக



எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கக்கூடிய அவகாசங்களும் வருத்தம் அளிக்கக்கூடியதாக இருக்கிறது. ஒரே நாளில் நான்கு மானியக் கோரிக்கைகளை எடுத்து, மூன்று அமைச்சர்கள் பதில் சொல்லி, கட்சிகள் பேசி, இன்று அவசரக் கோலத்தில் நிறைவேற்றுவது, அலுவல் ஆய்வுக் குழுவிலே முடிவு எடுக்கப்பட்டிருந்தாலும், என்னைப் பொறுத்தவரையில் அது சரியான நடவடிக்கையல்ல என்பதை நான் முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, 5 நிமிடங்கள், 6 நிமிடங்கள், 8 நிமிடங்கள் என்பதிலே எல்லா விஷயங்களையும் சொல்ல முடியாது. மேலும், மணிக்கணக்கிலே சொல்ல முடியாது என்பதும் உண்மை. ஆனால் சொல்ல வேண்டியதைச் சொல்ல முடியாமல் இருக்கிற கஷ்டம் இருப்பதை என்னால் இங்கே சொல்லாமல் இருக்க முடியவில்லை. தொழிலாளர் துறை சம்பந்தமாக சில விமர்சனங்கள் இருக்கின்றன. இந்தத் துறைதான் தொடர்ந்து பல ஆண்டுகளாக இருந்து வருகிறது. இனிமேலும் இருக்கப்போகிறது. இந்தத் துறையின் செயல்பாடுகள் விமர்சனத்திற்குரியதாகவும், வேகப்படுத்த வேண்டியதாகவும் இருக்கிறது என்பதை நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

தொழில் நலிவு, ஆலை மூடல், பொதுத் துறை பாதுகாப்பு, வேலை நிரந்தரம், காண்ட்டிராக்ட் முறை ஒழிப்பு, முறைசாராத் தொழிலாளர் பாதுகாப்பு, பெண் தொழிலாளர் பிரச்சினைகளுக்குத் தீர்வு, தொழிற்சங்க ஜனநாயக உரிமைகள் பாதுகாப்பு, கூட்டுறவுத் தொழில்கள் பாதுகாப்பது, மூடிய ஆலைத் தொழிலாளர்களுக்கு நிதி உதவி பெற்றுத் தருவது, சம வேலைக்கு சம ஊதியம், சிறுதொழில் பாதுகாப்பு, தொழிலாளர் சட்டங்களை முறையாக அமல்நடத்த துணை புரிதல், பஞ்சாலை, கைத்தறிபடியியல், பவர்லூம், காபி, தேயிலை, இரப்பர் உள்ளிட்ட தொழிற்சாலைகளிலே ஏற்பட்டுள்ள நிலைமைகளை ஆய்வு செய்து தீர்வு காணுதல் போன்ற இந்த அடிப்படைப் பிரச்சினைகளில் தமிழக தொழிலாளர் நலத் துறையின் செயல்பாடுகள் என்ன? அதிலே, அந்தத் துறை கண்டிருக்கின்ற முன்னேற்றம் என்ன? தொழிலாளர் துறை செயலற்று நிற்கிறது. அமலாக்கப் பிரிவும் சமரசத்திற்கான தலையீடுகளும் பாதிக்கப்பட்டிருப்பதாகவே நாங்கள் கருதுகிறோம். தமிழக தொழிலாளர் மக்களின் எண்ணற்ற பிரச்சினைகள் தேங்கிக் கிடக்கின்றன. பல இலட்சம் தொழிலாளர்கள், பல்வேறு துறைகளில், தொழில்களில் பாதிக்கப்பட்டுள்ளனர். தொழிலாளர் நலத் துறையின் உரிய தலையீடு இல்லாததாலும், துரித நடவடிக்கைகள் இல்லாததாலும் பல்வேறு பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

பஞ்சாலை சம்பந்தமாக எனக்கு முன்னால் பேசிய பலரும் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். தொடர்ந்து நானும் வலியுறுத்தி வருகிறேன். ஓர் ஆபத்தான நிலையை நோக்கி அந்தத் தொழில்களும், தொழிலாள மக்களும் சென்று கொண்டிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள், கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் 13 ஆம் தேதி 10(பி)இன்கீழ் ஓர் அரசாணையைப் பிறப்பித்தார்கள். மிகுந்த மகிழ்ச்சியோடு நாங்கள் எல்லாம் வரவேற்றோம். இப்போதும் அதை நாங்கள் வரவேற்கிறோம். அதை அமல் நடத்துவதற்கு உரிய நடவடிக்கையைத் தொடர்ந்து எடுக்கவேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். அது என்னவாகியிருக்கிறது என்று சொன்னால், ஒரு சில ஆலைகளைத் தவிர, பெரும்பகுதியான ஆலை நிர்வாகங்கள், உயர் நீதிமன்றத்தில் தடையாணையைப் பெற்று நிறுத்தியிருக்கிறார்கள். இன்னும் பெரும்பாலான ஆலைகள் அந்த முடிவை, ஆணையை அமல் நடத்தவில்லை. 13-1-2001 அன்று பிறப்பித்த 10(பி) அரசாணை ஆறு மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும் அதனுடைய நியாய பூர்வமான தீர்ப்பு தொழிலாள மக்களுக்கு கிடைக்காத நிலையைக் கருத்திலேகொண்டு, மேலும் 6 மாதக் காலத்திற்கு, அந்த அரசாணையின் கட்டுப்பாட்டை நீட்டித்துத் தர வேண்டுமென்று நான் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல 1,800 பஞ்சாலைத் தொழிற்சாலைகளில் இருக்கிற பிரச்சினைகளை, இப்போது இருக்கிற நீதிமன்றத்தால் விவாதித்து பிரச்சினைகளைத் தீர்க்க முடியவில்லை. அது நீடித்துக் கொண்டிருக்கிறது. பல ஆண்டுகாலமாக பல கோரிக்கைகள் இருக்கின்றன. ஆலை நிர்வாகங்கள் சட்ட விரோதமாகச் செயல்படுகின்றன. பல ஆலைகளில் உரிய காலத்தில் சம்பளம் வழங்குவதில்லை. செயல்படுகிற ஆலைகளில், தொழிற்சாலைத் துறைச் சட்டங்கள் எதுவும் அமல்நடத்தப்படுவதில்லை. சட்டவிரோதமாக, ஒப்பந்தங்களைக்கூட அமல்நடத்துவதில் மறுப்புத் தெரிவித்து வருகிறார்கள்.

பிற்பகல் 8-55

சட்டவிரோதமாக கான்ட்டிராக்ட் முறை மட்டுமல்ல, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொத்தடிமை முறையிலே 16 வயதிலிருந்து, 23 வயதுடைய இளம் பெண்களை வேலைக்குச் சேர்த்து, காம்பவுண்ட் வால் கட்டி முதல் வருடம் 30 ரூபாய், இரண்டாவது வருடம் 40 ரூபாய், மூன்றாவது வருடம் 50 ரூபாய் நான்காவது



வருடம் 60 ரூபாய் ஐந்தாவது வருடம் 70 ரூபாய் என்ற நிலையில் கொடுத்து, ஐந்து வருடம் முடிந்ததற்குப் பிறகு ரூ. 25,000-மோ, ரூ. 30,000-மோ மொத்த தொகையை கொடுத்து அவர்களை வெளியேற்றுகிறார்கள்.

மாதம் ஒருமுறை, அவர்கள் பெற்றோர்கள் சிறைச்சாலைக் கைதிகளை வந்து பார்ப்பதைப்போல் அந்தப் பெண் தொழிலாளர்களைப் பார்க்கும் முறைகள் இருந்து கொண்டிருக்கின்றன. ஒரு புதிய நவீன காலனி ஆதிக்க சுரண்டல் அடக்குமுறை, பண்ணை அடிமைமுறை போன்று வளர்கிறது. கோவை மாவட்டத்தில் உடுமலை தாலுகா உள்ளிட்ட பல பகுதிகளில் இருக்கிறது. தயவுசெய்து அருள்கூர்ந்து இதை நீங்கள் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். இவற்றைப்பற்றியெல்லாம், நம்முடைய தொழிலாளர் துறை, நம்முடைய அரசுக்கு உரிய விளக்கங்களைத் தருகிறதா? ஆய்வு நடத்துகிறதா? தீர்வு காண ஆலோசனைகள் சொல்லுகிறதா? அந்த ஆலைகளுக்கு ஏதாவது குறைந்தபட்ச கட்டுப்பாடுகளை விதித்து இருக்கிறதா என்பது தெரியவேண்டும். ஆகையினால், தொழிலாளர்களிடம் பிடித்தம் செய்கின்ற தொகைகளை, இ.பி.எஃப். கட்டமாட்டேன் என்கிறார்கள். பி.எஃப் கட்டமாட்டேன் என்கிறார்கள். எல்.ஐ.சி. பணம் கட்டமாட்டேன் என்கிறார்கள். பிடித்தம் செய்த பணத்தை திருப்பி கட்டமாட்டேன் என்கிறார்கள். பல ஆலைகள் இதுமாதிரி இருக்கின்றன.

அதேபோல இந்த மாதிரியான, இருக்கும்படியான இந்த பிரச்சினைகள் முழுவதையும் ஏற்கெனவே நிலுவையில் இருக்கக்கூடிய பிரச்சினைகளை விவாதிப்பதற்கு, உடனடியாக பஞ்சாலைத் தொழில் சம்பந்தமான இந்த நிலைமைகளை, பிரச்சினைகளை விவாதிப்பதற்காக மட்டும், தீர்ப்பதற்காக மட்டும், தனித் தொழில் நீதிமன்றம் ஒன்றை நிறுவி அதன் மூலம் இவற்றை கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும், தீர்வு காண வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல தொழில் துறையினுடைய நடவடிக்கையின் பலவீனத்தால் டெக்ஸ்டூல் என்கின்ற இன்ஜினியரிங் ஆலை இப்போது பூட்டப்பட்டிருக்கிறது. பூட்டுவதற்குத் தயாராக இருக்கிறது. அநேகமாக அது உற்பத்தியை நிறுத்தியாகிவிட்டது. அதாவது, அவர்கள் ஆலையை லே-ஆஃப் விட்டு மூடுவதற்கு 25(ஓ)-இன்படி விண்ணப்பிக்கிறார்கள். அந்தச் சட்ட ஷரத்து என்ன சொல்கிறது என்று சொன்னால், ஒரு நிறுவனத்தை மூடவேண்டுமென்று அந்த தொழிலதிபர் முடிவு செய்தால், அப்படி மூடுவதற்கு தான் குறிப்பிட்டுள்ள நாளுக்கு 90 நாட்களுக்கு

முன்னர், அதற்குரிய அனுமதியைக் கோரும் விண்ணப்பத்தை அரசாங்கத்திற்கு அனுப்ப வேண்டும். அரசாங்கம் அதை ஏற்றுக்கொள்ளவும் செய்யலாம், நிராகரிக்கவும் செய்யலாம். மூடலாம் என்றும் சொல்லலாம், மூடக்கூடாது என்றும் சொல்லலாம். ஆனால், அந்தக் கம்பெனியால் அவ்வாறு அனுப்பப்பட்ட கடிதத்திற்கு உரிய நேரத்தில் இந்தப் பதிலை நம்முடைய தொழிலாளர் துறையும் அரசும், தராததனுடைய விளைவாக, அந்த ஷரத்து மூன்றாவது பிரிவு சொல்கிற சலுகையை அல்லது அந்த உரிமையை அந்த நிர்வாகம் பயன்படுத்திக் கொண்டது. அது என்ன சொல்கிறது என்று சொன்னால், "கிளைப் பிரிவின்கீழ்—3(1)வது கிளைப் பிரிவின்கீழ் மனு செய்யப்பட்டிருக்கும்போது, அத்தகைய மனு செய்யப்பட்ட நாளிலிருந்து 60 நாட்களுக்குள் அனுமதி வழங்கும் அல்லது வழங்க மறுக்கும் உத்தரவை அந்தத் தொழில் அதிபருக்கு தெரியப்படுத்தவில்லையென்றால், அந்த 60 நாட்கள் முடிந்தவுடன் அத்தகைய அனுமதி வழங்கப்பட்டுவிட்டதாகக் கருதப்பட வேண்டும்" என்று சொல்கிற இந்த ஷரத்தைப் பயன்படுத்தி, எந்தவிதமான பதிலும் அரசுத் துறையிலிருந்து கிடைக்காததனுடைய விளைவாக, அதனை சாதாரணமாக அமல்படுத்திவிட்டார்கள்.

கிட்டத்தட்ட இதே மாதிரியான நிலையைத்தான், விஸ்கோஸ் ஆலையில் அந்த நிர்வாகம் எடுக்கப்போகிறது. ஏராளமான விவரங்கள் இருக்கிறது. நேரம் கருதி நான் அதற்குள் செல்லவில்லை. ஆகவே, இவற்றைப் பற்றியும் முழு ஆய்வு நீங்கள் செய்ய வேண்டும்.

அடுத்து, வேலையில்லா காலத்திற்கான நிவாரணங்கள் சம்பந்தப்பட்டது குறித்து கொள்கைக் குறிப்பில் சொல்லப்பட்டுள்ளது. "நீண்ட காலமாக மூடியிருக்கும் தொழில் நிறுவனங்களில் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு ரூ.250 வீதம் மாதாந்திர உதவித் தொகை தருவது குறித்தான திட்டத்தின்கீழ் இதுவரை, 72 தொழில் நிறுவனங்களில் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு இந்தத் திட்டத்தின் மூலம் பயன்பெற உறுதி செய்யப்பட்டுள்ளது. இதுவரை 8,973 தொழிலாளர்களுக்கு இந்த நிவாரண உதவித் தொகை ரூ.2,44,39,750 கொடுக்கப்பட்டது" என்று சொல்லப்படுகிறது. இதே கணக்கை நம்முடைய மாண்புமிகு அமைச்சர்கூட நேற்றையதினத்தில் தலையிட்டு இதைச் செய்ததாகச் சொன்னார்கள். கேள்வி என்னவென்று சொன்னால், தமிழ்நாடு முழுவதிலும் வேலையிழந்து நிவாரணம் பெற தகுதியுடைய மொத்தத் தொழிலாளர்கள் எவ்வளவு பேர்? அந்த மொத்தத் தொழிலாளர்களில்



8,973 பேருக்கு ரூ.250 வீதம் 72 தொழில் நிறுவனங்களில் கொடுக்கப்பட்டிருக்கிற தொகை என்பது, 2 கோடியே 44 இலட்சம் என்று சொன்னால்—ஒரு சிறிய கணக்கின் அடிப்படையிலே 250 ரூபாய் வீதம் 9,000 பேர் என்று கணக்குப் போட்டாலே சற்றேறக்குறைய 22 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வரும். அப்படியானால் இது ஒரு பத்து மாதத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கலாம். எந்தக் காலத்தில் தொடங்கி, எந்தக் காலம் வரைக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது? எப்போது நிறுத்தப்பட்டிருக்கிறது? இப்போது எவ்வளவு காலமாக கொடுக்கப்படவில்லை? இதை எந்தத் துறை தருவது? மேற்கொண்டு அதைத் தருவதற்கு என்ன ஏற்பாடு? நான் மிகுந்த வேதனையோடு சொல்கிறேன். பல்லாயிரக்கணக்கான தொழிலாளர் மக்கள் பட்டினியோடு போராடிக் கொண்டு இருக்கிறார்கள். இந்த அரசாங்கத்தின் மீது மிகப் பெரிய நம்பிக்கையை வைத்து, இந்த அணி வெற்றி பெறவேண்டும் என்பதற்காக ஏதாவது நிவாரணம் கிடைக்கும், வேலை கிடைக்கும் என்று மிகுந்த நம்பிக்கையில் நம்மையெல்லாம் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அந்த நிவாரணத் தொகை தரவேண்டும் என்பது மட்டுமல்ல, அதை உயர்த்தித் தருவதற்கு நம்முடைய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இது மிக முக்கியமான கோரிக்கையாக இருக்கிறது.

பிற்பகல் 9-00 மணி

அடுத்து, குடிநீர் வடிகால் வாரியத்தில், குடிநீர்த் திட்ட பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள தமிழக அரசு ஆணை எண் 261, நகராட்சி நிர்வாகம், 14-10-1996-ல் 2,037 பணியிடங்களுக்கு அனுமதியளித்தது. ஆனால், வாரிய நிர்வாகம், ஆயிரத்திற்கும் குறைவான ஊழியர்களை நியமனம் செய்து, அவர்களை மதிப்பூதியம், தொகுப்பூதியம் என்ற பெயரில் ஐந்தாண்டுகளுக்கும் மேலாக குறைந்த சம்பளத்தில் வைத்திருக்கிறார்கள். நிரந்தரப் பணியிடங்களில் நிரந்தரப் பணியாளர்களைத்தான் நியமிக்கவேண்டும் என்கிற உயர் நீதிமன்றத் தீர்ப்புகள் மற்றும் உச்ச நீதிமன்றத் தீர்ப்புகள் இருந்தும், ஐந்து ஆண்டுகளுக்குமேல் பணிபுரியும் இவர்களை பணி நிரந்தம் செய்ய வாரியம் முன்வரவில்லை. மிகப் பெரிய அதிருப்தி இருக்கிறது. அதைச் செய்யவேண்டும். வாரிய நிர்வாகம் கான்ட்ராக்ட் முறையில் தினக்கூலிகளாக நியமனம் செய்து பணியளித்து வருகிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான சட்டப் பாதுகாப்பும் இல்லை. (மணியடிக்கப்பெற்றது) ஐந்தாண்டுகளாகப் பணியாற்றி வருகிறார்கள்

அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை. அதாவது தனியார் துறை நிர்வாகமும் சரி, கூட்டுறவுத் துறையிலும் சரி, பொதுத் துறையிலும் சரி, அரசுத் துறையிலும் சரி, நிரந்தரம் என்பது கொஞ்சம் கொஞ்சமாக அழிந்து வருவது என்பது மட்டுமல்ல, இனி எதிர்காலத்தில் அப்படிப்பட்ட வாய்ப்பே இல்லையென்கிற திசையை நோக்கி போகமுடியாது. கான்டிராக்ட் முறை என்பது ஒழிக்கப்பட வேண்டிய ஒன்று. ஆனால், அது சட்டபூர்வமானதாகவே அமலாக்கி வருவதற்கான அடையாளம்தான் இது. இதை அனுமதிப்பது என்பது எதிர்காலத் தொழிலாளர் வர்க்கத்தினுடைய நலன்களுக்கு சட்டபூர்வமான பாதிப்பை ஏற்படுத்தும். யதார்த்த ரீதியிலும், விமர்சன ரீதியிலும், இது பாதிப்பை உருவாக்கும் என்பதை நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

அதேபோல, உள்ளாட்சித் துறையால் பராமரிக்கப்பட்டு வந்த 353 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை வாரியம் பராமரிக்க வேண்டும் என தமிழக அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 1995 ஆம் ஆண்டில் உத்தரவு வழங்கினார்கள். ஆனால், அந்தக் குடிநீர்த் திட்டங்களையும், ஊழியர்களையும் வாரியம் எடுத்துக்கொண்டது. ஆனால், அந்தத் தொழிலாளர்கள் அதிகபட்சமாக 314 ரூபாய்தான் சம்பளம் பெற்று வந்தார்கள். இந்த வாரியத்தில் 8 மணி நேரத்திற்கு மேல் பணியாற்றி வந்தால், கடந்த கால ஆட்சியில் அன்றைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் 10-5-2000-ல் சட்டமன்றத்தில், மதிப்பூதியம் பெறும் தொழிலாளர்களை தொகுப்பூதியம் பெறும் தொழிலாளர்களாக்கி 1,000 ரூபாய் வழங்க உள்ளதாக அறிவித்தார்கள். ஆனால் இந்த உத்தரவு இரண்டாண்டுகள் ஆகியும் அமலாகவில்லை. அந்த 1,000 ரூபாய் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. 1995-ல் இந்த வேலைகளை வாரியமே செய்யும் என்று சொல்லப்பட்டது. இப்போது மீண்டும் அது கான்ட்ராக்டுக்கு விடப்பட்டிருக்கிறது. வாரியத்தால் எடுத்துக்கொள்ளப்பட்ட தொழிலாளர்களுக்கு 314 ரூபாய்தான் சம்பளம் கொடுக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அதில் உண்மை என்ன என்பதைக் கண்டறிந்து, அதற்குத் தீர்வு காணவேண்டும். (மணியடிக்கப்பெற்றது)

கடைசியாக திண்டுக்கல்லில், குவாரியில் வேலை பார்க்கும் கல் உடைக்கும் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் கோரிக்கைகள் கொடுத்திருக்கிறார்கள். நிறைய இருக்கின்றன. அதில் முக்கியமாக கவனிக்கவேண்டியது என்னவென்றால், மொத்தமாக என்ன சொல்வது என்று தெரியவில்லை, பிணையமாகப் பிடித்துக் கொண்டு போய் வைத்துக்கொள்வது. பல மாதங்களுக்கு, பல வருடங்களுக்கு.....



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொத்தடிமை முறை.

**திரு. கே.சி. கருணாகரன்:** ஆமாம், கொத்தடிமை முறையிலே கொத்தடிமைகளாக பல மாதங்களாக, பல ஆண்டுகளாக வைத்திருக்கிறார்கள். அவர்கள் எப்போது சொல்கிறார்களோ, அவர்கள் எப்போது விடுகிறார்களோ, என்ன வேண்டுமானாலும் நடக்கும். மனிதப் பூச்சிகளாக அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். தயவுசெய்து அந்தக் குவாரி தொழிலாளர்களையும் ஒரு வாரியத்தின்கீழ் கொண்டுவரவேண்டும்.

நல வாரியம் சம்பந்தப்பட்டவரைக்கும், அதன் செயல்பாடுகளை கட்டாயம் நாம் செயல்படுத்த வேண்டும். இன்று இவ்வளவு நேரம் அதிகமானதற்கும், இங்கே விவாதங்கள் வேறு திசையிலே மாறியதற்கும், அது எல்லாம்கூட காரணம். நல வாரியம் இப்போது இருப்பதை எவ்வாறு முறைப்படுத்துவது, அதைப் பயனுள்ள வகையில் எவ்வாறு பயன்படுத்துவது என்று ஆராய்ந்து பல இலட்சக்கணக்கான முறைசாரா தொழிலாளர்களின் எதிர்காலத்திற்கு இந்த அரசு நம்பிக்கையூட்டும் நடவடிக்கைகளை எடுத்து, அவர்களுக்கு நியாயம் வழங்க வேண்டுமென்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி நிறைவு செய்கிறேன், வணக்கம்.

பிற்பகல் 9-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.எஸ். கண்ணன்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலம், வேலைவாய்ப்பு, சட்டத் துறை மானியங்களின்மீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேசுவதற்கு முன்னால், பொன்னேரி தொகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான ஆரணி ஆற்றின் குறுக்கே லட்சுமிபுரி அணை கட்டுவதற்கு ரூ.5 கோடியே 30 இலட்சம் ஒதுக்கியதற்கும், கொசஸ்தலை ஆற்றின் குறுக்கே நாப்பாளையம் அருகில் 13 கோடி ரூபாயில் தடுப்பணை கட்டுவதற்கும், பழவேற்காடு ஏரி பாலம் அமைப்பதற்கு ரூபாய் 5 கோடியே 85 இலட்சம் ஒதுக்கீடு செய்ததற்கும், பழவேற்காடு முகத்துவாரத்தை ரூ.30 இலட்சத்தில் தூர் வாருவதற்கும், ஆக, ஒட்டுமொத்தமாக நிதி நெருக்கடி இருந்தபோதும் ரூ.24 கோடியே 48 இலட்சம் ஒதுக்கிய தமிழக முதல்வர் அவர்களுக்கும், சம்பந்தப்பட்ட

பொதுப் பணித் துறை, மீன்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய தொகுதி மக்கள் சார்பாகவும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகவும், மனமார்ந்த, நெஞ்சார்ந்த நன்றியைக் கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு வேலைவாய்ப்பு என்பது அரசுக்கு மிகப் பெரிய தலைவலியான ஒரு பிரச்சினை என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். வேலைவாய்ப்பு அலுவலகங்களிலே, இன்றைக்கு 49 இலட்சம் பேர் பதிவு செய்திருக்கிறார்கள். அது அல்லாமல் வருடத்திற்கு பல இலட்சம் பட்டதாரிகள் படித்துவிட்டு வெளியே வருகிறார்கள். மற்றும் பொறியாளர்களை எடுத்துக்கொண்டால், குறைந்தபட்சம் 45 ஆயிரம் பேர், இன்றைக்கு படிப்பை முடித்துவிட்டு வெளியே வருகிறார்கள். தொழில் நுட்பத்தைத் தெரிந்தவர்கள் 22 ஆயிரம் பேர் வெளியே வருகிறார்கள் என்ற கணக்கு இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. ஒருபுறத்திலே வேலையில்லாத பிரச்சினை ஒழிய வேண்டுமென்றால், முதல்வர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற அந்த வளர்ச்சித் திட்டமான 15 அம்சத் திட்டத்தைக் கறாராக அமல்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மறுபுறத்திலே பார்க்கின்றபோது, தினக்கூலித் தொழிலாளர்கள் அதிகமாக உயர்ந்து வருகிற காட்சியை, நகர்ப்புறங்களிலும், கிராமப்புறங்களிலும் பார்க்கிறோம். உதாரணமாக சொல்ல வேண்டுமென்றால், 1978-79-ல், 30.9 சதவிகிதமாக இருந்த தினக் கூலியாளர்கள், 2000-2001-க்கு 59.5 சதவிகிதமாக உயர்ந்திருக்கிறார்கள். இதற்குக் காரணம் என்னவென்று பார்க்கிறபோது ஒருபுறத்திலே நாட்டினுடைய வளர்ச்சி மிகப் பெரிய அளவிலே உயர்ந்துவிடும் என்று கொண்டுவந்த புதிய பொருளாதாரத் திட்டம் அமலுக்கு வந்தபிறகு, இலட்சக்கணக்கான சிறுகுறு தொழில்கள், பெரிய ஆலைகள், நடுத்தர ஆலைகள் மூடப்பட்டிருக்கின்ற ஒரு கொடுமையான காட்சியை நாம் பார்க்கிறோம். அதிலே பணிபுரிந்த தொழிலாளர்கள் இன்றைக்கு அன்றாட கூலிகளாக, ஒரு வேளை சோற்றுக்கு வழி இல்லாமல் கூலி வேலைக்குச் செல்கின்ற உண்மை நிலைமை இந்த நாட்டில் இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் அரசுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.



மூடிய ஆலைகளில் பணிபுரிந்த அந்தத் தொழிலாளர்கள், குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், இன்றைக்கு பல தொழிற்சாலைகள் மூடப்பட்டிருந்தாலும், சில தொழிற்சாலைகளை இலாபகரத்தோடு நடத்த முடியும். ஆனால், அந்த முதலாளிகளின் அடம்பிடிக்கின்ற தன்மையால், இன்றைக்கு வருடக் கணக்கிலே கம்பெனிகள் மூடப்பட்டிருக்கின்றன. உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால், திருவள்ளூர் மாவட்டத்திலே இருக்கிற டன்லப் தொழிற்சாலை; இதை இலாபகரமாக நடத்த முடியும். ஆனாலும், அந்த முதலாளிகளுடைய அடம்பிடிக்கின்ற தன்மையால், இரண்டாயிரம் தொழிலாளர்கள் இன்று நடு வீதியிலே நிற்கிறார்கள். கடந்த ஆட்சியால் மூடப்பட்டு, ஏதோ அந்த ஆட்சியில் மீண்டும் திறப்பதுபோல் ஒரு பாவனை காட்டி, மீண்டும் இன்றைக்கு நிரந்தரமாக மூடியிருக்கிறார்கள். அதில் பணிபுரிகின்ற 2,000 தொழிலாளிகள் பாதிக்கப்படுவதுடன், அன்னியச் செலாவணி தமிழகத்திற்கும், மத்திய அரசுக்கும் கிடைப்பது, முடக்கப்பட்டிருக்கிறது. நான் இந்த நேரத்தில் முதல்வர் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்வேன்; அவர்கள் நேரடியாக அதில் தலையிட்டு, இந்தப் பிரச்சினைக்கு முடிவு காண வேண்டும். அப்படி அந்த நிர்வாகம் அடம்பிடித்தால், தனிச் சட்டத்தைக் கொண்டு வந்து, அந்தத் தனியார் துறை தொழிற்சாலையை அரசாங்கமே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே முதல்வர் அவர்களை பணிவன்போடு கேட்டுக்கொள்வேன்.

அதேபோல், வடாற்காடு மாவட்டத்தில், அரக்கோணத்திலே அரசுத் தரப்பிலே ஓர் எஃகு தொழிற்சாலை இருந்தது. காங்கிரஸ் ஆட்சியில் அடிக்கல் நாட்டப்பட்டது. முந்தைய முதல்வர் அவர்களால், 1972-ல் திறக்கப்பட்டது. ஆனால், இடைப்பட்ட காலத்தில், மரியாதைக்குரிய முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றபோது, அந்த ஆலை நட்டத்தில் இயங்கி வந்த நிலைமையை உணர்ந்து, உடனடியாக அதற்கு விரிவாக்கத்தைக் கொண்டு வந்து, அங்கே ஒரு ரோலிங் மில்லை ஏற்படுத்தினார். ஏற்படுத்தி, 750-க்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கிக் கொண்டிருந்தார். மீண்டும் அதற்கு ஒரு தனிச் சட்டத்தையும் கொண்டு வந்தார். அங்கே உற்பத்தியாகின்ற பொருள்களை, மாநில அரசு முழுமையாக தன்னுடைய தேவைக்கு வாங்க வேண்டுமென்று ஒரு தனிச் சட்டத்தையும் கொண்டு வந்து சிறப்பாக அது நடந்து கொண்டிருந்தது. ஆனால், துரதிருஷ்டவசமாக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி பொறுப்பேற்றவுடன், ஏனோ தெரியவில்லை 1976-ல்

அந்தக் கம்பெனி நடத்த முடியாது என்ற அடாவடித்தனமான ஒரு நிலையை அங்கே கொண்டுவந்து, ஒரு வருட காலத்திற்குள், அந்தத் தொழிலாளிகள் போராடியபோதும், அவர்களுடைய கோரிக்கையை அரசிடம் வலியுறுத்தியபோதும், காது கொடுத்துக் கேட்காமல் 1977-ல் வலுக்கட்டயமாக அந்தக் கம்பெனியை மூடிய ஒரு கொடுமையான காட்சி வட ஆற்காடு மாவட்டத்திலே நடந்தது.

பிற்பகல் 9-10

இங்கே இருக்கின்ற மரியாதைக்குரிய பாலகிருஷ்ணன் போன்றவர்கள்கூட அன்றைக்கு முதல்வரைப் பார்த்து, அந்தக் கம்பெனியை மூடுவதற்கான காரணம் கேட்டபோது, அந்தத் தொழிலாளியே சந்தோஷப்பட்டு வெளியே செல்கிறான்; வாலண்டரி ரிடையர்மென்ட் வாங்கிக்கொண்டு செல்கிறான் என்று முந்தைய முதல்வர் சொன்னார்; ஏனோ காரணம் தெரியவில்லை. அதிகாரிகளுக்குத் தெரியும். அந்த ஆலை வலுக்கட்டாயமாக மூடப்பட்டதன் காரணம், பாண்டிச்சேரியில் இருந்த முன்னாள் சபாநாயகருக்கும் இன்றைக்கு அடிக்கடி ஊழலை நிரூபிக்க முடியுமா என்று சவால் விட்டுக் கொண்டிருக்கின்ற ஒரு மத்திய அமைச்சருக்கும் தொடர்புள்ள ஒரு கம்பெனிக்காக இந்த ஆலை மூடப்பட்டது என்று அந்தத் தொழிலாளர்கள் பேசிக்கொள்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) உண்மையும் அதுதான். அதற்கு பயன்படுத்தப்பட்ட 110 கிலோ H.T.-யையும் யாருக்கு மாற்றித் தந்தார்கள் என்ற நிலைமை கடந்த ஆட்சியில் நடந்து இருக்கிறது என்ற விவரத்தைச் சொல்லி, முதல்வர் அவர்களை பணிவன்போடு நான் கேட்டுக்கொள்வேன்; அந்தத் தொழிலாளர்களுக்கு அவர்கள் தருகின்ற 50 ஆயிரம் ரூபாயும் ஒரு வருட சம்பளமும் மற்ற மற்ற P.F. போன்றவற்றையும் இன்றுவரைக்கும் தராமல் அவர்கள் பசியாலும் பட்டினியாலும் வாடிக் கொண்டிருக்கிறார்கள். அந்த எஃகு ஆலைத் தொழிலாளர்களுடைய பிரச்சினையை கவனத்தில்கொண்டு தீர்த்து வைக்க வேண்டுமென்று உங்களை நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கு அடுத்தாற்போல் முத்தரப்புக் கமிட்டி. இந்தக் கமிட்டி வரவேற்கப்பட வேண்டிய ஒரு கமிட்டி; ஆனால், என்னுடைய மாவட்டத்தில் இரண்டு கூட்டங்கள் கூட்டப்பட்டன. இங்கே சட்டமன்றம் நடந்தபோதுகூட நான் அந்தக் கூட்டத்திற்குச் சென்றேன்.



அங்கே முத்தரப்புக் கமிட்டி என்று சொல்கிறபோது, அந்த ஆலையை மூடிய முதலாளிகள் கூட்டத்திற்கு வருவதில்லை. அதற்கு மாறாக அந்தத் தொழிற்சங்கத்தினுடைய பிரதிநிதியை அனுப்பி வைக்கிறார்கள். இந்த முத்தரப்புக் கமிட்டி நடத்துவதற்கு ஒரு கறாரான நிலையை எடுக்க வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்வேன்.

விவசாயக் கடனை 310 கோடி தள்ளுபடி செய்த அரசு இது. இன்றைக்கு நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். மூடிய ஆலைகள் கூட்டுறவுச் சங்கங்களில் வாங்கி இருக்கின்ற கடன், வட்டி, கூட்டு வட்டியை தள்ளுபடி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அன்போடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கு அடுத்து நிவாரணம். இந்த நிவாரணம், கடந்த ஆட்சியாளர்களை வளம்பெறச் செய்தது. ஆயிரம் பேருக்கு இந்த நிவாரணம் வழங்குவோம் என்று சொன்னார்கள். ஆனால், எனக்கு முன் பேசிய தோழர் கூறியபடி, 8,973 பேருக்குத்தான் அது வழங்கப்பட்டு இருக்கிறது. அதற்குக் காரணம் கடுமையான நிபந்தனைகள் உள்ளன. முதல்வர் அவர்கள் கவனத்தில் எடுத்து அந்த நிபந்தனைகளைத் தளர்த்த வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். 3 இலட்சம் பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு, நீங்களே தலையிட்டு இடைக்கால நிவாரணம் 225 ரூபாய்தான் தர வேண்டுமென்று ஓர் உத்தரவைப் பிறப்பித்தீர்கள். ஆனால், இந்த அரசாங்கத்தை மதியாத அந்த முதலாளிகள் தடை உத்தரவு வாங்கி இருக்கிறார்கள். அந்தத் தடையை உடைத்து எறியவேண்டுமென்று அன்போடு நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து உள்ளாட்சி நிறுவனங்கள். (மணியடிக்கப்பெற்றது) உள்ளாட்சி நிறுவனங்களில்—குறைந்தபட்ச சம்பளம் என்று ஒரு சட்டம் இருக்கிறது. இது 1972-ல்தான் அமல்படுத்தப்பட்டது—22 வருட காலமாக அது அமல்படுத்தப்படவில்லை என்பதை கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அடுத்து, உடலுழைப்புத் தொழிலாளர்கள். கொள்கை விளக்கக் குறிப்பில்கூட 10 வாரியங்களைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். அதை வரவேற்கிறோம். அதேநேரத்தில், இதில் வேலை அளிப்போருடைய பங்களிப்பு என்பது இருந்தால்தான் இந்த வாரியத்தை சிறப்பாக நடத்த முடியும். பல்வேறு காரியங்களை சாதித்துக் கொண்டிருக்கிற முதல்வர் அவர்கள், இந்த வாரியத்திலும், இதை நடைமுறைப்படுத்தி,

இரண்டு கோடி தொழிலாளர்களுடைய வாழ்க்கைக்கு உத்தரவாதம் அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே அன்போடு உங்களை வேண்டி கேட்டுக்கொள்வேன்.

புகை பிடிக்க தடை என்று ஒரு சட்டம் கொண்டு வந்து இருக்கின்றோம். அதை மறுபரிசீலனை செய்ய வேண்டும். ஏனென்றால், அமெரிக்காவிலிருந்து புகையிலை இலை, சிகரெட் இறக்குமதி செய்யப்படுகிறது. ஆனால் அமெரிக்காவில் இன்றைக்கு பீடிக்கு அதிக கிராக்கி இருக்கிறது என்று சொல்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையிலும் 10 இலட்சம் பேர் பீடி தயாரிப்பதன் மூலம் அவர்களுடைய வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆதலால் இந்தச் சட்டத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புகை பிடிக்க தடை கொண்டு வரப்படவில்லை. பொது இடங்களில் புகை பிடிக்கக் கூடாது என்றுதான் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 9-15

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** பேரவைத் தலைவர் அவர்களே, எதிராக இந்தக் கருத்தைச் சொல்கிறேன் என்று நினைக்க வேண்டாம். அப்படி பொது இடங்களில் புகை பிடிக்க வேண்டாம் என்று சொல்கின்றபோதுகூட, ஒரு பக்கம் நமக்கு நன்மை இருந்தாலும் மறுபுறத்திலே பாதிப்பு அதிகம் என்பதைத்தான் உங்கள் கவனத்திற்கு நாங்கள் கொண்டு வருகிறோம்.

அதற்கடுத்து, கருங்கல் உடைக்கும் தொழிலாளிகள், 20 இலட்சம் பேர் இருக்கிறார்கள். அவர்களுக்கும் தனிவாரியம் அல்லது சட்டம் கொண்டு வரவேண்டும்.

அதற்கடுத்து, கள் இறக்கும் தொழில். இன்றைக்கு பதனீர் என்ற போர்வையில் தவறாகப் பயன்படுத்துகிறார்கள் என்று அவர்கள்மீது வழக்குப் போடப்படுகிறது. அந்த வழக்கிற்கு காவல் துறைக்கு ஆகின்ற செலவு 12 கோடி ரூபாய். (மணியடிக்கப்பெற்றது) ஆனால், வருமானம் 12 கோடி செலவு காவல் துறைக்கு 25 கோடி. இந்த கள் இறக்கும் தொழிலை, கள் இறக்குவதற்கான அனுமதியை நாம் தந்தோமேயானால் அரசுக்குக் குறைந்தபட்சம் 250 கோடி ரூபாய் வருவாய் வரும் என்ற ஒரு நிலை இருக்கிறது. அதேநேரத்தில் கள்ளச்சாராயம் போன்ற



விஷயங்களில் மோசமான நிலையிலிருந்தும் மக்களைப் பாதுகாக்க முடியும் என்று இந்த நேரத்திலே நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கட்டுமானத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் என்று நீங்கள் அறிவித்தீர்கள். ஒரு வருடம் ஆகிறது. இன்னும் அதற்கான அரசாணை வெளியிடப்படவில்லை.

அதற்கடுத்து, மாநிலத் தொழிலாளர் நல வாரிய ஆலோசனைக்
குழு—ஒரு வருடத்திற்கு மேலாகிறது. அது கூட்டப்படவேயில்லை
என்பதை உங்களுடைய ஞாபகத்திற்குக் கொண்டு வருகிறேன்.

கனையாக, சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு என்று—ஏற்கெனவே தமிழகத்தை ஆண்ட முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். தொழிற் சங்கத் தலைவர்கள் தங்குவதெற்கென்று ஓர் இல்லத்தை அமைத்தார்கள். அந்த இல்லத்திற்கு தொழிற் சங்கத் தலைவராக இருந்த மரியாதைக்குரிய தோழர் ஜீவா அவர்களுடைய பெயரை இங்கே சூட்டினார்கள். இங்கே சட்டத் துறை கொள்கை விளக்கத்தை நான் பார்க்கின்றபோது சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு சிறப்பு நிதி வழங்குவதற்கு 25 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு இருக்கின்றது. அது ஜீவா என்ற பெயரில் இருக்கிறது. நாங்கள் நம்புகிறோம். தோழர் ஜீவா அவர்களுடைய பெயராகத்தான் அது இருக்குமென்று நினைக்கிறேன். ஆதலால், புரட்சித் தலைவர் வழியிலே வந்த நீங்கள் தோழர் ஜீவா அவர்கள் பெயரிலே சிறப்பு நிதியை ஏற்படுத்தியமைக்காக மீண்டும் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நன்றியையும், நெஞ்சார்ந்த வணக்கத்தையும் கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அலுவல் ஆய்வுக் குழுவில் ஏற்கெனவே எடுக்கப்பட்ட முடிவின்படி 6-5-2002 திங்கட்கிழமை அன்று வினாக்கள்—விடைகள் நேரம் இல்லை. மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதங்களுக்குப் பதிலுரையை மாண்புமிகு அமைச்சர்கள் 6-5-2002 திங்கட்கிழமை அன்று அளிப்பார்கள்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் திங்கட்கிழமை (6-5-2002) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 9-17 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

[2002 மே 3

# 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

149. தமிழ்நாடு இந்து சமய அறநிலைய சார்நிலைப் பணிக்கான (1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு பணிகள் நடைமுறை நூல் தொகுதி-III பிரிவு 15-ஏ) சிறப்பு விதிகளில் திருத்தம் செய்தது குறித்து தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத் துறையின் 9-4-2002 ஆம் நாளிட்ட 66 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலையச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

150. சமய நிறுவனங்களின் சொத்துகளை நிருவகித்தல் மற்றும் பாதுகாத்தல் விதிகளில் சில திருத்தங்கள் செய்தது குறித்து தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத் துறையின் 22-10-2001 ஆம் நாளிட்ட 249 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலையச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

151. சமய நிறுவனங்களின் சொத்துகளை நிருவகித்தல் மற்றும் பாதுகாத்தல் விதிகளில் திருத்தம் செய்தது குறித்து தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத் துறையின் 5-11-2001 ஆம் நாளிட்ட 252 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலையச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

152. நிதித் துறையின் 1-10-2000 ஆம் நாளிட்ட II(2)/Fin/1051(d2)/2000 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தம் செய்தது குறித்து நிதித் துறையின் 15-6-2001 ஆம் நாளிட்ட 233 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப் புள்ளிகள் ஒளிவின்மைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

153. 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப் புள்ளிகள் ஒளிவின்மைச் (திருத்த) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 14/2001) 1-12-2001 ஆம் நாள் முதல் அமலுக்கு வருகிறது என்பது குறித்து நிதித் துறையின்



2002 மே 3]

16-11-2001 ஆம் நாளிட்ட 451 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப் புள்ளிகள் ஒளிவின்மைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

154. 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப் புள்ளிகள் ஒளிவின்மை விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து நிதித் துறையின் 16-11-2001 ஆம் நாளிட்ட 452 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப் புள்ளிகள் ஒளிவின்மைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

155. 1997-98 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநிலச் சட்டப் பணிகள் ஆணைக் குழுவின் தணிக்கை அறிக்கை மற்றும் கணக்குகள். [1987ஆம் ஆண்டு சட்டப் பணிகள் ஆணைக் குழுச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 39/1987) 18(6) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்.)

156. 1998-99 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநிலச் சட்டப் பணிகள் ஆணைக் குழுவின் தணிக்கை அறிக்கை மற்றும் கணக்குகள். [1987ஆம் ஆண்டு சட்டப் பணிகள் ஆணைக் குழுச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 39/1987) 18(6) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்.)

157. 1999-2000 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநிலச் சட்டப் பணிகள் ஆணைக் குழுவின் தணிக்கை அறிக்கை மற்றும் கணக்குகள். [1987ஆம் ஆண்டு சட்டப் பணிகள் ஆணைக் குழுச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 39/1987) 18(6) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்.)

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

272. பொதுக் கணக்குக் குழுவின் எண்பதாவது அறிக்கை. (2001-2002)

273. பொதுக் கணக்குக் குழுவின் எண்பத்து ஒன்றாவது அறிக்கை. (2001-2002)

274. பொதுக் கணக்குக் குழுவின் எண்பத்து இரண்டாவது அறிக்கை. (2001-2002)

[2002 மே 3

275. பொதுக் கணக்குக் குழுவின் எண்பத்து மூன்றாவது அறிக்கை. (2001-2002)

276. பொதுக் கணக்குக் குழுவின் எண்பத்து நான்காவது அறிக்கை. (2001-2002)

277. பொதுக் கணக்குக் குழுவின் எண்பத்து ஐந்தாவது அறிக்கை. (2001-2002)

278. பொதுக் கணக்குக் குழுவின் எண்பத்து ஆறாவது அறிக்கை. (2001-2002)

279. பொதுக் கணக்குக் குழுவின் எண்பத்து ஏழாவது அறிக்கை. (2001-2002)

280. பொதுக் கணக்குக் குழுவின் எண்பத்து எட்டாவது அறிக்கை. (2001-2002)

281. பொதுக் கணக்குக் குழுவின் எண்பத்து ஒன்பதாவது அறிக்கை. (2001-2002)

282. பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்து ஏழாவது அறிக்கை. (2001-2002)

283. பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்து எட்டாவது அறிக்கை. (2001-2002)

284. பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்து ஒன்பதாவது அறிக்கை. (2001-2002)

285. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் ஏழாவது அறிக்கை. (2001-2002)

286. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் எட்டாவது அறிக்கை. (2001-2002)

287. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் ஒன்பதாவது அறிக்கை. (2001-2002)

288. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் பத்தாவது அறிக்கை. (2001-2002)



2002 மே 3]

289. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் பதினொன்றாவது அறிக்கை. (2001-2002)

290. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் பன்னிரண்டாவது அறிக்கை. (2001-2002)

291. மானியக் கோரிக்கை எண் 46 - போக்குவரத்துத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2002-2003. (தமிழ், ஆங்கிலம்).

292. போக்குவரத்துக் கழகங்களின் செயல்திறன் ஆய்வு, 2002-2003. (தமிழ், ஆங்கிலம்)

293. மானியக் கோரிக்கை எண் 46 - 2002-2003 ஆம் ஆண்டிற்கான போக்குவரத்துத் துறை பற்றிய விரிவான மானியக் கோரிக்கை.

294. மானியக் கோரிக்கை எண் 24 - உள்துறை - இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள் - நிருவாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2002-2003. (தமிழ், ஆங்கிலம்)

295. மானியக் கோரிக்கை எண் 24 - 2002-2003 ஆம் ஆண்டிற்கான உள்துறை - இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள் - நிருவாகம் பற்றிய விரிவான மானியக் கோரிக்கை.

296. மானியக் கோரிக்கை எண் 31 - தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2002-2003. (தமிழ், ஆங்கிலம்)

297. மானியக் கோரிக்கை எண் 31 - தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய வரவு-செலவுத் திட்டச் செயலாக்கம் 2002-2003 (தமிழ், ஆங்கிலம்)

298. மானியக் கோரிக்கை எண் 31 - 2002-2003 ஆம் ஆண்டிற்கான தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் விரிவான மானியக் கோரிக்கை.

299. மானியக் கோரிக்கை எண் 3 - நீதி நிருவாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2002-2003. (தமிழ், ஆங்கிலம்)

300. மானியக் கோரிக்கை எண் 32 - சட்டத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2002-2003. (தமிழ், ஆங்கிலம்)

[2002 மே 3

301. மானியக் கோரிக்கை எண் 32 - 2002-2003 ஆம் ஆண்டிற்கான சட்டத் துறைக்கான விரிவான மானியக் கோரிக்கை.

302. வேளாண்மைத் துறை குறித்த மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகள் (2002-2003) (தமிழ்)

303. சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை குறித்த மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள். (2002-2003) (தமிழ்)

304. எழுதுபொருள் மற்றும் அச்சு குறித்த மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்பு (2002-2003) (தமிழ்)

305. சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை குறித்த மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகள். (2002-2003) (தமிழ்)

306. மின் வளத் துறையின் "மக்கள் சாசனம்". (2002) (தமிழ்)

307. தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் பற்றிய "மக்கள் சாசனம்". (2002) (தமிழ்)

308. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் "மக்கள் சாசனக் கையேடு". (2002) (ஆங்கிலம்)

309. கால்நடை பராமரிப்புத் துறையின் "மக்கள் சாசனம்". (தமிழ், ஆங்கிலம்).



## இணைப்பு I

[85 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

## கோரிக்கை எண் 46-போக்குவரத்துத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு 2002-2003

### 1.0 முன்னுரை

பொது மக்களுக்கு பாதுகாப்பான, சிக்கனமான, சிறப்பான போக்குவரத்து இயக்கத்தை, தமிழ்நாடு அரசு தன்னுடைய அதிகாரத்திற்குட்பட்ட போக்குவரத்துக் கழகங்கள் மூலம் பொதுமக்களுக்கு அளித்து வருகின்றது. நகர மற்றும் புறநகர்ப் பேருந்துகள், மலைப்பகுதிப் பேருந்து, விரைவுப பேருந்து, மாநிலங்களுக்கிடையேயான பேருந்து என பலதரப்பட்ட பேருந்துகளைக் கொண்டு அரசு போக்குவரத்துக் கழகங்கள் மக்களுக்கு வசதிகளை அளித்து வருகின்றன.

பின்வரும் போக்குவரத்துக் கழகங்கள் மற்றும் துறைத் தலைமையகம் ஆகியவை போக்குவரத்துத் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளன:

**அரசு போக்குவரத்துக் கழகங்கள்**

1. மாநகர் போக்குவரத்துக் கழகம், சென்னை
2. அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு, சென்னை
3. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்-கோட்டம் 1), விழுப்புரம்.
4. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்-கோட்டம் 2), வேலூர்.
5. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்-கோட்டம் 3), காஞ்சிபுரம்.
6. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்-கோட்டம் 1), சேலம்.
7. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்-கோட்டம் 2), தர்மபுரி.

[2002 மே 3

8. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோயம்புத்தூர்-கோட்டம் 1), கோயம்புத்தூர்.

9. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோயம்புத்தூர்-கோட்டம் 2), ஈரோடு.

10. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்-கோட்டம் 1), கும்பகோணம்.

11. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்-கோட்டம் 2), திருச்சிராப்பள்ளி.

12. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்-கோட்டம் 3), காரைக்குடி.

13. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்-கோட்டம் 4), புதுக்கோட்டை.

14. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை-கோட்டம் 1), மதுரை.

15. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை-கோட்டம் 2), திருநெல்வேலி.

16. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை-கோட்டம் 3), நாகர்கோவில்.

17. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை-கோட்டம் 4), திண்டுக்கல்.

18. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை-கோட்டம் 5), விருதுநகர்.

19. தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம், சென்னை.

20. பல்லவன் போக்குவரத்து ஆலோசனைப் பணிக்குழு, சென்னை.

21. சாலைப் போக்குவரத்து நிறுவனம், சென்னை.

22. மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை, சென்னை.

மத்திய அரசுத் துறைகளான இரயில்வே, தபால் மற்றும் தொலைத் தொடர்பு, விமானப் போக்குவரத்து ஆகிய துறைகள், தமிழ்நாட்டில் செயல்படுத்தும் திட்டங்கள் தொடர்பாக மாநில அரசின் ஒருங்கிணைக்கும் முகமையாக, போக்குவரத்துத் துறை செயல்படுகிறது.



2002 மே 3]

## 2. அரசு போக்குவரத்துக் கழகங்கள்

2.1. 1971 ஆம் ஆண்டு வரை அரசு போக்குவரத்துத் துறையின்கீழ் இயங்கி வந்த பேருந்து இயக்கம், இந்திய நிறுவனங்கள் சட்டத்தின்கீழ் தோற்றுவிக்கப்பட்ட போக்குவரத்துக் கழகங்கள்வசம் 1971 ஆம் ஆண்டு ஒப்படைக்கப்பட்டது.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் அமைப்பு மற்றும் செயலாக்கத்தை ஆய்வு செய்து, அதனைச் சீரமைக்க, தக்க பரிந்துரைகளைத் தர, 1976-ல் பட்டாபிராமன் குழுவும், 1990-ல் தில்லைநாயகம் குழுவும் அமைக்கப்பட்டது. அக்குழுக்களின் முக்கியமான பரிந்துரைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு தேவைக்கேற்ப செயல்படுத்தப்பட்டு போக்குவரத்துக் கழகங்கள் மேம்படுத்தப்பட்டன. 1998 ஆம் ஆண்டில், தமிழகத்தில் பொதுத் துறை நிறுவனங்களைச் சீரமைப்பது குறித்து நியமிக்கப்பட்ட எஸ்.வி.எஸ். ராகவன் குழு, பொதுத் துறை நிறுவனங்களைச் சீரமைப்பது குறித்து பல ஆலோசனைகளை வழங்கி இருந்தது. அவற்றுள் பல ஆலோசனைகள் நிறைவேற்றப்பட்டன. பொதுத் துறை நிறுவனங்களை பகுதி தனியார்மயமாக்கல் போன்ற சில கருத்துகள் தற்போது பரிசீலனையில் உள்ளன.

2.2. 31-03-2002 அன்றைய நிலவரப்படி அரசு போக்குவரத்துக் கழகங்களின் பணிகள் மற்றும் செயல்திறன்கள் ஆகியவை கீழே தரப்பட்டுள்ளன:

| | |
|---|---|
| சென்னை மாநகர் பேருந்துகள் | 2,582 |
| நகரப் பேருந்துகள் (மாவட்டங்களில்) | 5,598 |
| புறநகர் பேருந்துகள் | 5,775 |
| விரைவுப் பேருந்துகள் | 813 |
| மலைப் பகுதி பேருந்துகள் | 503 |
| மொத்தம் | **15,271** |
| உபரி மற்றும் பழுதடைந்த பேருந்துகள் | 1,526 |
| மொத்தப் பேருந்துகளின் எண்ணிக்கை | **16,797** |

[2002 மே 3

| | | |
|---|---|---|
| 2. | ஒரு நாளைக்கு இயக்கப்படும் மொத்த தூரம் (இலட்சம் கி.மீ.) | 61.25 |
| 3. | நாளொன்றுக்கு ஏற்றிச் செல்லப்படும் பயணிகளின் எண்ணிக்கை (இலட்சம்) | 162.31 |
| 4. | பேருந்துகளின் உபயோகம் (சதவீதத்தில்) | 90.20 |
| 5. | கிலோ மீட்டர் செயல்பாட்டுத் திறன் (சதவீதத்தில்) (சிறப்புப் பேருந்துகள் நீங்கலாக) | 95.15 |
| 6. | கிலோ மீட்டர் செயல்பாட்டுத் திறன் (சதவீதத்தில்) (சிறப்புப் பேருந்துகளையும் சேர்த்து) | 98.26 |
| 7. | பயணிகள் அடர்வு சதவீதத்தில் | |
| | அ) மாநகரம் மற்றும் நகரம் | 71.14 |
| | ஆ) புறநகர் | 87.39 |
| | இ) விரைவுப் பேருந்து | 80.37 |
| | ஈ) மலைப் பகுதி | 91.49 |
| | மொத்தத்தில் | 79.69 |
| 8. | பழுதுபடுதல் (10,000 கிலோ மீட்டருக்கு) | 0.31 |
| 9. | விபத்துகள் (1,00,000 கிலோ மீட்டருக்கு) | 0.37 |
| | மொத்த விபத்துகள் | 8,281 |
| | உயிரிழப்பு விபத்துகள் | 1,332 |
| | இறந்தவர்கள் எண்ணிக்கை | 1,661 |
| 10. | எரிபொருள் செயல் திறன் (கிலோ மீட்டர்/லிட்டருக்கு) | |
| | அ) மாநகரம் மற்றும் நகரம் | 4.13 |
| | ஆ) புறநகர் | 4.50 |
| | இ) விரைவு | 4.36 |
| | ஈ) மலைப் பகுதி | 3.37 |
| | மொத்தத்தில் | 4.30 |



2002 மே 3]

| | | |
|---|---|---|
| 11. | 10,000 கிலோ மீட்டருக்கு எஞ்சின் ஆயில் | 12.13 லிட்டர் |
| 12. | கழிவு செய்யப்பட்ட உருளையின் ஓட்டம் (இலட்சம் கிலோ மீட்டர்) | 1.54 |
| 13. | புதுப்பிக்கப்பட்ட உருளைப் பட்டை காரணக்கூறு | 3.98 |
| 14. | ஒரு பேருந்துக்கு பணியாளர்கள் | 6.98 |

**2.3 போக்குவரத்துக் கழகங்களை ஒருங்கிணைத்தல்**

நிர்வாகச் செலவுகளைக் குறைக்கவும், தேவையற்ற போட்டியைத் தவிர்க்கவும் போக்குவரத்துக் கழகங்களை ஒருங்கிணைக்கலாம் என்று முடிவெடுக்கப்பட்டது. அதனையொட்டி, மாநகர் போக்குவரத்துக் கழகம், கோட்டம்-1 உடன், மாநகர் போக்குவரத்துக் கழகம் கோட்டம்-2-ஐயும், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கோயம்புத்தூர்-கோட்டம்-1 உடன், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் கோயம்புத்தூர்-கோட்டம்-3-ஐயும், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம், தமிழ்நாடு கோட்டம்-1 உடன், அரசு விரைவு போக்குவரத்துக் கழகம் (தமிழ்நாடு-கோட்டம்-2)-ஐயும் ஒருங்கிணைக்கும் பணி முறையே 10-01-2001, 7-11-2000 மற்றும் 12-01-2002-ல் முடிவடைந்துவிட்டது. ஏனைய போக்குவரத்துக் கழகங்களை ஒருங்கிணைக்கும் வரைவுக் கருத்துரு, மைய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. மைய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. போக்குவரத்துக் கழகங்களை ஒருங்கிணைக்கும் பணிகளின் தற்போதைய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| வ. எண் | போக்குவரத்துக் கழகத்தின் பெயர் | ஒருங்கிணைப்பிற்கு பின் கழகத்தின் பெயர் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | மாநகர் போக்குவரத்துக் கழகம் (சென்னை-கோட்டம்1), சென்னை | மாநகர் போக்குவரத்துக் கழகம், சென்னை. | 10-01-2001 முதல் ஒருங்கிணைக்கப் பட்டது. |
| 2 | மாநகர் போக்குவரத்துக் கழகம் (சென்னை-கோட்டம்-2), சென்னை | | |

[2002 மே 3

| வ. எண் | போக்குவரத்துக் கழகத்தின் பெயர் | ஒருங்கிணைப்பிற்கு பின் கழகத்தின் பெயர் | குறிப்பு |
|---|---|---|---|
| 3 | அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் (தமிழ்நாடு கோட்டம்-1) சென்னை | அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் (தமிழ்நாடு). சென்னை. | 12-01-2002 முதல் ஒருங்கிணைக்கப் பட்டது. |
| 4 | அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் (தமிழ்நாடு கோட்டம்-2). சென்னை. | | |
| 5. | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம் கோட்டம்-1). விழுப்புரம். | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்). விழுப்புரம் | ஒருங்கிணைக்கும் வரைவுக் கருத்துரு மைய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. |
| 6 | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம் கோட்டம்-2) வேலூர். | | |
| 7. | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம் கோட்டம்-3) காஞ்சிபுரம். | | |
| 8. | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம் கோட்டம்-1). சேலம். | தமிழ்நாடு போக்குவரத்துக் கழகம் (சேலம்). சேலம். | ஒருங்கிணைக்கும் வரைவுக் கருத்துரு மைய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. |
| 9. | தமிழ்நாடு அரசின் போக்குவரத்துக் கழகம் (சேலம் கோட்டம்-2). தருமபுரி. | | |



2002 மே 3]

| வ. எண் | போக்குவரத்துக் கழகத்தின் பெயர் | ஒருங்கிணைப்பிற்கு பின் கழகத்தின் பெயர் | குறிப்பு |
|---|---|---|---|
| 10 | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோயம்புத்தூர் கோட்டம்-1). கோயம்புத்தூர். | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோயம்புத்தூர்). கோயம்புத்தூர். | கோட்டம்-2ஐ கோட்டம் 1-உடன் ஒருங்கிணைக்கும் வரைவுக் கருத்துரு மைய அரசின் ஒப்பதலுக்காக அனுப்பப் பட்டுள்ளது. |
| 11 | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோயம்புத்தூர் கோட்டம்-2). ஈரோடு. | | 07-11-2000 முதல் கோயம்புத்தூர் கோட்டம்-3, கோயம்புத்தூர் கோட்டம்-1 உடன் ஒருங்கிணைக்கப் பட்டது. |
| 12 | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோயம்புத்தூர்-கோட்டம்-3). உதகமண்டலம். | | |
| 13 | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம் கோட்டம்-1) கும்பகோணம். | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்). கும்பகோணம். | ஒருங்கிணைக்கும் வரைவுக் கருத்துரு மைய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது |
| 14 | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம் கோட்டம்-2) திருச்சிராப்பள்ளி. | | |
| 15 | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம் கோட்டம்-3) காரைக்குடி. | | |
| 16 | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம் கோட்டம்-4) புதுக்கோட்டை | | |

[2002 மே 3

| வ. எண் | போக்குவரத்துக் கழகத்தின் பெயர் | ஒருங்கிணைப்பிற்கு பின் கழகத்தின் பெயர் | குறிப்பு |
|---|---|---|---|
| 17 | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை கோட்டம்-1) மதுரை. | | |
| 18 | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை கோட்டம்-2), திருநெல்வேலி. | | |
| 19 | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை கோட்டம்-3), நாகர்கோவில் | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை), மதுரை. | ஒருங்கிணைக்கும் விரைவுக் கருத்துரு மைய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. |
| 20 | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை கோட்டம்-4), திண்டுக்கல் | | |
| 21 | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை கோட்டம்-5), விருதுநகர். | | |

ஒருங்கிணைப்பிற்குப் பின்னர் 21 போக்குவரத்துக் கழகங்கள் 7 போக்குவரத்துக் கழகங்களாக இணையும். இதன்மூலம் நிர்வாகச் செலவுகள் பெருமளவு குறையும்.

### 3.0 அரசு போக்குவரத்துக் கழகங்களின் நிதிநிலை

3.1 அரசு போக்குவரத்துக் கழகங்களில் பேருந்துப் பயணக் கட்டணம் தொடர்ந்து குறைவாக இருந்ததாலும், இயக்கச் செலவுகள் தொடர்ச்சியாக அதிகரித்ததன் காரணமாகவும். இக்கழகங்களுக்கு தொடர்ந்து இழப்பு ஏற்பட்டு வந்தது. போக்குவரத்துக் கழகங்கள் செயல்படத் தொடங்கியது முதல், மார்ச் 2002 வரை சேர்ந்து வந்த மொத்த இழப்பு 2,160.52 கோடி. அதன் விவரம் கீழ்வருமாறு :



2002 மே 3]

(ரூபாய் கோடியில்)

| வருடம் | இழப்பு |
|---|---|
| 31.03.1991 வரை | (-) 164.13* |
| 1991-92 | (-) 21.78 |
| 1992-93 | (-)50.46* |
| 1993-94 | (-)48.03 |
| 1994-95 | (-)41.21 |
| 1995-96 | (-)207.37 |
| 1996-97 | (-)310.67 |
| 1997-98 | (-)229.37 |
| 1998-99 | (-)411.39 |
| 1999-2000 | (-)317.91 |
| 2000-2001 | (-)228.86 |
| 2001-2002 மார்ச் முடிய | (-)129.34* |
| மொத்தம் | (-)2,160.52 |

(*) தணிக்கைக்குட்பட்டது.

அவ்வப்போது அரசு அறிவிக்கும் பேருந்துக் கட்டண உயர்வு,
பேருந்துகளின் இயக்கச் செலவிற்கு, முக்கியமாக டீசல் மற்றும் நிர்வாகச்
செலவினங்களுக்கு ஒப்ப இல்லை. எனினும் 2001 ஆம் ஆண்டு டிசம்பர்
திங்களில் பேருந்துக் கட்டணம் மாற்றியமைக்கப்பட்டதன் காரணமாக
நிதி நிலை சிறிது சீரடைய வாய்ப்புள்ளது.

### 3.2 டீசல் விலை அதிகரிப்பு

1991-92-ல், ரூ.229.23 கோடியாக இருந்த போக்குவரத்துக் கழகப்
பேருந்துகளின் டீசல் செலவுத் தொகை, 1995-96-ல், ரூ.406.15
கோடியாகவும், 2000-2001-ல் ரூ.916.10 கோடியாகவும், 2001-2002-ல்
ரூ.958.82 கோடியாகவும் உயர்ந்துள்ளது. ஆயினும், பேருந்துகள் ஒரு
லிட்டர் டீசலில் ஓடும் தூரம், ஏறத்தாழ ஒரே சீராக 4.30 கிலோ
மீட்டர்/லிட்டர் என்ற அளவிலேயே உள்ளது.

### 3.3 நிர்வாகச் செலவு அதிகரிப்பு

போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு நேரடிப் பேச்சு வார்த்தை மூலம், ஊதிய உயர்வு அளிக்கப்படுகிறது. 1-9-1998 முதல் செய்யப்பட்ட ஊதிய உயர்வின் மூலம், சராசரியாக ஒரு பணியாளருக்கு

[2002 மே 3

ஒரு மாதத்திற்கு ரூ.835/- அதிகமாக அளிக்கப்பட்டது. இதனால் ஏற்பட்ட மொத்தச் செலவினம், ஓராண்டிற்கு ரூ.231 கோடியாகும். பேருந்து இயக்க வருவாயில், நிர்வாகச் செலவினம் 38 முதல் 53 சதவீதமாகும்.

பணியாளர் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க உயர்வு இல்லையாயினும் நிர்வாகச் செலவினம் ஒவ்வொரு வருடமும் கணிசமாக உயர்ந்துள்ளது. 1991-92-ல் ரூ.388 கோடியாக இருந்த செலவினம், 1995-96-ல் 755.19 கோடியாகவும், 2000-2001-ல், ரூ.1,312.49 கோடியாகவும், 2001-2002-ல், ரூ.1,269.30 கோடியாகவும் உள்ளது.

## 4.0 பழைய பேருந்துகளைக் கழித்தல்

4.1 அரசு போக்குவரத்துக் கழகங்களின் மோசமான நிதி நிலைமை காரணமாக, கடந்த 4 ஆண்டுகளாகப் பழைய பேருந்துகளை உரிய நேரத்தில் மாற்றி, போக்குவரத்துத் தேவைக்கேற்ப போதுமான புதிய பேருந்துகளை வாங்கி இயக்க முடியவில்லை. 31-03-2002-ல் மாற்றப்பட வேண்டிய பழைய பேருந்துகளின் எண்ணிக்கை 6,123 ஆகும் (இது போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின் மொத்த எண்ணிக்கையில் 36.45 சதவீதமாகும்) 2001-2002-ல் போக்குவரத்துக் கழகங்களுக்கு 1,550 புதிய பேருந்துகளை வாங்கத் திட்டமிடப்பட்டது. மார்ச் 2002 முடிய 305 புதிய பேருந்துகள் வாங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பேருந்துகள் வரும் மாதங்களில் வாங்கப்பட்டுவிடும். ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் பெற்றுள்ள ரூ.100 கோடி கடன் தொகையை, போக்குவரத்துக் கழகங்களுக்குக் கடனாக அளிப்பதன் மூலம், போக்குவரத்துக் கழகங்கள் சுமார் 1,000 புதிய பேருந்துகளை, பழைய பேருந்துகளுக்குப் பதிலாக வாங்கும்.

2002-2003-ல், போக்குவரத்துக் கழகங்களுக்கு, தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் அளிக்கும் கடன் தொகை மூலம், ரூ.227.50 கோடி செலவில் 2,275 புதிய பேருந்துகளை வாங்க திட்டமிடப்பட்டுள்ளது.



2002 மே 3]

### 4.2 கடன் விவரம்

31-3-1996 அன்று ரூ.595 கோடியாக இருந்த போக்குவரத்துக் கழகங்களின் கடன் தொகை, 31-3-2002-ல் ரூ.1,082 கோடி என்ற அளவுக்கு உயர்ந்துள்ளது. இதன் காரணமாக அதிக வட்டி செலுத்த வேண்டிய சூழ்நிலை, போக்குவரத்துக் கழகங்களுக்கு ஏற்பட்டு, அதனால் எரிபொருள் மற்றும் உதிரி பாகங்கள் வழங்கிய நிறுவனங்களுக்கும், சட்டரீதியாகச் செலுத்தப்பட வேண்டிய தொகைகளையும் உரிய நேரத்தில் செலுத்திட இயலாத நிலை ஏற்பட்டுள்ளது.

## 5.0 பேருந்துப் பயணக் கட்டணம்

குறைவான பேருந்துக் கட்டணத்தினாலும், இயக்கச் செலவுகள் தொடர்ச்சியாக அதிகரித்ததன் காரணமாகவும், போக்குவரத்துக் கழகங்களில் நிதி இழப்பு அதிக அளவில் இருந்தது. இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டு பேருந்துப் பயணக் கட்டணங்கள் 1-12-2001 முதல் மாற்றியமைக்கப்பட்டு, அதை 6-12-2001 முதல் அரசு ஓரளவு சீரமைத்தது. இக்கட்டணச் சீரமைப்பின் மூலம் நடப்பாண்டில் போக்குவரத்துக் கழகங்களில் கடன்கள் குறைய வாய்ப்புள்ளது.

தற்போதைய பேருந்துக் கட்டண விகிதம் மற்றைய தென் மாநிலங்களின் பேருந்துக் கட்டண விகிதத்துடன் ஒப்பிடப்பட்டு, அதன் விவரம் கீழே தரப்பட்டுள்ளது:

(ஒரு கி.மீ. கட்டணம் பைசாவில்)

| மாநிலம் | கட்டண விகிதம் அமலுக்கு வந்த தேதி | புறநகர் (சாதாரணம்) | புறநகர் (குறிப்பிட்ட நிறுத்தத்தில் நிற்கும் பேருந்து) | புறநகர் (விரைவு) | சொகுசு | அதிசொகுசு |
|---|---|---|---|---|---|---|
| தமிழ்நாடு | 6-12-2001 | 28 | - | - | 32 | 38 |
| ஆந்திரா | 4-10-2000 | 32 | - | 37 | 44 | 52 |
| கேரளா | 1-10-2001 | 35 | 43 | 46 | 54 | 63 |
| கர்நாடகா | 4-10-2000 | 25.75 | - | 32 | 38.75 | 46 |

இதன்மூலம், தமிழகத்தில் பேருந்துக் கட்டணங்கள் இதர மாநிலங்களோடு ஒப்பிடும்போது மிகவும் குறைவே என்பது தெரியும்.

### 6.0 சாலைப் பாதுகாப்பு மற்றும் விபத்துகளைத் தவிர்த்தல்

சாலைப் பாதுகாப்பு, சாலை விபத்துகளைக் குறைப்பது மற்றும் தடுப்பது போன்றவற்றிக்கு தமிழக அரசு முன்னுரிமை அளிக்கின்றது. ஓட்டுநர்களுக்கு முழுமையான பயிற்சி அளித்தல், புத்துணர்வுப் பயிற்சி, பொழுதுபோக்கு மற்றும் மன ஒருமைப்பாட்டுப் பயிற்சிகளை ஊக்குவித்தல் மூலம் மன அழுத்தத்தைக் குறைத்தல், விபத்துகள் இல்லாமல் பேருந்துகளை ஓட்டும் ஓட்டுநர்களுக்கு சிறப்பு ஊக்கத் தொகை அளித்தல், போன்றவற்றின் மூலம் போக்குவரத்துக் கழகங்கள் பாதுகாப்பான, சிறப்பான பயணத்தை உறுதிப்படுத்துகின்றன. சாலைப் போக்குவரத்து மிகவும் அதிகரித்ததன் காரணமாக விபத்துகள் அதிகரித்து, இழப்பீட்டுத் தொகை 1991-92-ல் ரூ.16.03 கோடியாக இருந்தது. 2000-2001-ல் ரூ.73.30 கோடியாக அதிகரித்துள்ளது. விபத்தினைத் தவிர்த்து, பாதுகாப்பான பயணத்தினை உறுதி செய்யும்பொருட்டு, கீழ்க்கண்ட நடவடிக்கைகளை அரசு போக்குவரத்துக் கழகங்கள் எடுத்துள்ளன:

6.1 ஓட்டுநர்களின் கவனக் குறைவினாலேயே பல விபத்துகள் ஏற்படுகின்றன. யோகாசனப் பயிற்சி, ஓட்டுநர்களுக்கு ஒருமித்த கவனத்தை அளிக்க உதவி புரிவதால், அனைத்து அரசு போக்குவரத்துக் கழக ஓட்டுநர்களுக்கும் யோகாசனப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

6.2 ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளில், ஓட்டுநர்களுக்கு எவ்வாறு விபத்துகள் ஏற்படாமல் இருக்கலாம் என்பது குறித்து பாதுகாப்புப் பயிற்சிகள் கொடுக்கப்பட்டு வருகின்றன.

6.3 சாலை விதிமுறைகளை மீறும் ஓட்டுநர்களை இனம் கண்டு கொள்ளும் பொருட்டு, தொடர்ந்து சாலைப் பாதுகாப்புச் சுற்றுக் காவல் முறை ஏற்படுத்தப்பட்டு, தவறு செய்பவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

6.4 விபத்தினைத் தவிர்த்து, பாதுகாப்பான பயணத்தினை உறுதி செய்யும் பொருட்டு, அரசு போக்குவரத்துக் கழகங்கள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. ஓட்டுநர்கள், விபத்தின்றி பணிபுரிவது தொடர்பாக, பாதுகாப்பு விழிப்புணர்வை அவர்களுக்குப்





பயிற்றுவிக்கும் பொருட்டு, பேருந்துகளைப் பாதுகாப்பாக ஓட்டுவதற்கான பரிசுத் திட்டம் ஒன்றை, போக்குவரத்துக் கழகங்கள் கடைப்பிடித்து வருகின்றன. இத்திட்டம், ஓட்டுநர்கள் நன்முறையில் பேருந்துகளை இயக்கி, விபத்தின்றி ஓட்டியதற்கான பதிவேட்டை உடையவர்களாக இருக்க ஊக்குவிக்கிறது. திறமைவாய்ந்த ஓட்டுநர்களை உருவாக்கும் வகையில், ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளை போக்குவரத்துக் கழகங்கள் நடத்தி வருகின்றன.

6.5 தொடர்ந்து 10 ஆண்டுகள் விபத்தில்லாமல் பணிபுரியும் ஓட்டுநர்களுக்கு ஒரு சிறப்பு ஊதிய உயர்வு வழங்கப்படுகிறது.

6.6 விபத்தினைத் தவிர்க்க வேண்டுமென்ற உணர்வினை ஓட்டுநர்கள் மத்தியில் உருவாக்கும் வகையில், புத்தாக்கப் பயிற்சி நடத்தப்பட்டு வருகிறது. கும்மிடிப்பூண்டியில் உள்ள கனரக ஓட்டுநர் பயிற்சி மையம் ரூ.80.00 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளது.

6.7 பேருந்துகளைச் சிறப்பாக இயக்கும் திறமைவாய்ந்த ஓட்டுநர்களை உருவாக்கும் நோக்கத்துடன், சாலைப் போக்குவரத்து நிறுவனம், ஓட்டுநர் பயிற்சிக்கென ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்கீழ், நல்ல உடற்கட்டுள்ள, பள்ளி இறுதித் தேர்வில் தேர்ச்சி பெற்ற இளைஞர்களைத் தேர்வு செய்து, அவர்களுக்கு 12 வாரங்களுக்கு, கனரக மோட்டார் வாகனங்களை இயக்குதல், பேருந்தில் ஏற்படும் பழுதுகளைச் சரிபார்த்தல், பொதுமக்களுடன் நல்லுறவுடன் பழகுதல் மற்றும் முதலுதவி அளித்தல் ஆகியவற்றில் தீவிர பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. சாலைப் போக்குவரத்து நிறுவனத்தில் பயிற்சி பெற்ற ஓட்டுநர்களுக்கு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்படுகின்றன.

6.8 மோட்டார் வாகனத் தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாகவும், விபத்துகள் நேரா வண்ணம், சாலைப் போக்குவரத்து விதிகளை நன்கு அறிந்துகொள்வதற்கு ஏதுவாகவும், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களில் கனரக வாகன ஓட்டுநர்களாக நியமனம் பெறுவதற்குரிய

[2002 மே 3

கல்வித் தகுதியை, 8 ஆம் வகுப்பிலிருந்து எஸ்.எஸ்.எல்.சி/பத்தாம் வகுப்புத் தேர்ச்சி என உயர்த்தி அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

6.9. விபத்துகளைக் குறைக்கும் நோக்கத்துடன், ஓட்டுநர்களின் சிரமத்தைக் குறைக்க, அவர்கள் இரவில் நான்கு மணி நேரத்திற்கு மேலாகத் தொடர்ச்சியாக பேருந்துகளை இயக்கக் கூடாது என்று அரசு அறிவுறுத்தியுள்ளது.

**7.0 பயணிகளுக்கான வசதிகள்**

7.1 பல பேருந்து நிறுத்தங்களில் விளம்பரதாரர்கள் மூலமாக (சாதாரண வகை மற்றும் மின்னொளி வகை) நிழற்குடைகள் நிறுவப்பட்டுள்ளன. பேருந்து நிறுத்தத்தின் பெயரும், மேலும் அவ்வழியே செல்லும் பேருந்து வழித்தடங்களின் விவரங்களும், பயணிகள் வசதிக்காக அந்நிழற்குடைகளில் குறிக்கப்படுகின்றன.

7.2 தியாகராய நகர், சைதாப்பேட்டை மற்றும் வடபழனி பேருந்து நிலையங்களில் உள்ள வெட்டவெளி நடைமேடைகளை அழகுறச் செய்யவும், இரவு நேரப் பயணிகளின் பாதுகாப்பு கருதியும், மின்னொளி விளம்பரப் பலகைகள் பொருத்தப்பட்டுள்ளன. மேலும், இவ்வசதி சென்னையிலுள்ள இதர முக்கிய பேருந்து நிலையங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

7.3 இரண்டு சக்கர வாகனங்களைப் பேருந்து நிலையங்களில் நிறுத்த ஏதுவாக, உட்பக்கமாக போதுமான இடங்களை மாநகர் போக்குவரத்துக் கழகம் ஒதுக்கியுள்ளது.

7.4 அரசு போக்குவரத்துக் கழகங்களினால் பாடாலூர் (தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், திருச்சி) மாமண்டூர் (தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், விழுப்புரம்), திண்டிவனம், மதுரை, கொட்டாம்பட்டி மற்றும் தொழுதூர் (அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம்) ஆகிய இடங்களில் பயணிகளின் வசதிக்காக உந்துணவகங்கள் கட்டப்பட்டு நல்லமுறையில் செயல்பட்டு வருகின்றன.



2002 மே 3]

**8.0 பயணச் சலுகைகள் :**

தமிழக அரசு, கீழ்க்கண்ட வகையைச் சேர்ந்தவர்களுக்கு, அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணம் செய்ய சலுகைகளை அளித்துள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:

| வகைப்பாடு | பயணச் சலுகை (சதவீதத்தில்) |
|---|---|
| மாணவர் பயணச் சலுகை (+2 வரை) | 100 |
| மாணவர் பயணச் சலுகை (+2க்கு மேல்) | 50 |
| மத்திய/மாநில ஓய்வூதியம் அல்லது இரு ஓய்வூதியங்களும் பெறும் சுதந்திர/எல்லைப் போராட்ட வீரர்கள் மற்றும் மொழிக் காவலர்கள், மத்திய அரசு ஓய்வூதியம் அல்லது மாநில அரசு ஓய்வூதியம் அல்லது இரண்டு ஓய்வூதியங்களும் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்களின் விதவை மனைவியர் மற்றும் வாரிசுதாரர்கள் மற்றும் அரசிடமிருந்து மொழிக் காவலர் நிதியுதவி பெறுபவர்களின் மனைவி அல்லது கணவர் மற்றும் பயனடையாத வாரிசுதாரர்கள். | 100 |
| அரசால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் சிகிச்சை பெறும் புற்று நோயாளிகள் | 75 |
| கை, கால் ஊனமுற்றோர், காது கேளாதோர் மற்றும் கண் பார்வையற்றோர், மனநிலை பாதிக்கப்பட்டவர்கள் மன வளர்ச்சி குன்றியவர்கள் மற்றும் வலிப்பு நோயாளிகள் | 100 |
| நாடகக் கலைஞர்கள் | 50 |
| அரசினால் தெரிவு செய்யப்பட்ட பத்திரிகை நிருபர்கள் | 100 |
| சட்டப் பேரவை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் சட்டப் பேரவை மற்றும் மேலவை உறுப்பினர்கள் | 100 |

மாணவர் பயணச் சலுகையினால் பயன்பெறும் மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் போக்குவரத்துக் கழகங்கள் ஏற்கும் சமுதாயச் செலவு பற்றிய விவரங்கள் பின்வருமாறு:

(2000-2001-ஆம் ஆண்டு கணக்குப்படி) (ரூபாய் இலட்சத்தில்) [2002 மே 3

| சலுகை அளவு | மாணவர்கள் எண்ணிக்கை | பயணச் சீட்டின் முகமதிப்பு | மாணவர்களிடம் வசூலிக்கப் பட்ட தொகை | அரசு இழப்பீடாக வழங்கிய தொகை | போ.வ. கழகங்கள் சமுதாயச் செலவாக ஏற்றது |
|---|---|---|---|---|---|
| 100 சதவீத இலவச அட்டை | 21,23,888 | 23,645.86 | — | 14,619.28 | 7,377.46 |
| 50 சதவீத சலுகை | 1,97,804 | 3,055.35 | 702.65 | 1,810.55 | 374.69 |
| மொத்தம் | 23,21,692 | 26,701.21 | 702.65 | 16,429.83 | 7,752.15 |

8.1 அரசு வழங்கியுள்ள பல்வேறு பிரிவினருக்கான சலுகைகள், கடந்த ஐந்து ஆண்டுகளில் பயனாளிகளின் எண்ணிக்கை மற்றும் அரசு வழங்கிய இழப்பீட்டுத் தொகை ஆகியவற்றின் விவரங்கள் வருமாறு :

| சலுகையின் விவரம் | அரசாணை எண் மற்றும் நாள் | பயனாளிகள் எண்ணிக்கை | அரசு இழப்பீடாக வழங்கிய தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| விடுதலைப் போராட்ட வீரர்கள், எல்லை, மொழிப் போர் காவலர்கள் மற்றும் அவர்களின் வாரிசுகள். | அரசாணை எண் 1825, போக்குவரத்து, நாள் 6-4-1980. | 30,642 | 58.92 |
| புற்று நோயாளிகள் | அரசாணை எண் 137, போக்குவரத்து, நாள் 31-3-1977. | 5,505 | 3.42 |



2002 மே 3]

| சலுகையின் விவரம் | அரசாணை எண் மற்றும் நாள் | பயனாளிகள் எண்ணிக்கை | அரசு இழப்பீடாக வழங்கிய தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| உடல் ஊனமுற்றோர் பார்வையற்றோர், மனவளர்ச்சி குன்றியோர், ஊமை மற்றும் காது கேளாதோர் | அரசாணை எண் 2403, போக்குவரத்து, நாள் 20-8-1991. அரசாணை எண் 7 சமூக நலம், நாள் 10-1-1994. | 69,691 | 352.60 |
| தேர்ந்தெடுக்கப்பட்ட நாடகக் கலைஞர்கள் | அரசாணை எண் 4133, போக்குவரத்து, நாள் 9-10-1992. | 414 | 2.41 |
| பத்திரிகையாளர்கள் | அரசாணை எண் 51, போக்குவரத்து, நாள் 18-1-1979, அரசாணை எண் 65, போக்குவரத்து 7-3-1997. | 1,666 | — |
| சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர்கள். | அரசு கடிதம் (நிலை) எண் 6986, போக்குவரத்து, நாள் 14-12-1990 அரசாணை எண்59, போக்குவரத்து, நாள் 7-3-1995, அரசு கடிதம் (நிலை) எண் 4185-ஏ, சட்டமன்றப் பேரவைச் செயலகம், நாள் 6-3-1997. | 5,654 | 101.20 |

இதைத் தவிர, உழவர் சந்தைகளுக்கு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை இயக்குவதால் ஆண்டொன்றுக்கு சுமார் ரூ.1,047 இலட்சம் இழப்பீடு ஏற்படுகிறது. இவ்விழப்பீடு ஈடு செய்யப்படுவதில்லை.

**9.0 பயணிகளுக்குச் சலுகைகள்**

தொடர்ந்து பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகளின் நலனை கருதி, மாதாந்திரப் பயண அட்டைகள் வழங்கப்படுகின்றன. இதற்கு பெருநகர் மற்றும் நகரப் பேருந்துகளில், மாதத்தின் எல்லா நாட்களிலும், இருப்பிடத்திலிருந்து செல்லுமிடத்திற்குச் சென்று வர, குறிப்பிட்ட நிறுத்தத்தில் நிறுத்தும் பேருந்துகளில், 40 நடைகளுக்குரிய கட்டணம் விகிதமே மாதாந்திரக் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது.

**9.1 விருப்பம் போல பயணம் செய்யும் கட்டணச் சீட்டுகள் (மாநகர் போக்குவரத்துக் கழகம் மட்டும்)**

கீழ்க்கண்ட கட்டண விகிதத்தில் பயணிகள் தங்கள் விருப்பம் போல் பயணம் செய்யலாம்:

| | | |
|---|---|---|
| (1) விடுமுறை நாள் பயணச்சீட்டு - | ரூ.30/- | (நகரத்தில் எங்கு |
| (2) வாராந்திரப் பயணச் சீட்டு | ரூ.160/- | வேண்டுமானாலும் |
| (3) மாதாந்திரப் பயணச் சீட்டு | ரூ.600/- | பயணம் செய்யலாம்) |

பயணச் சீட்டில் அச்சிடப்பட்டுள்ள நிபந்தனைகளின் அடிப்படையில் பயணச் சீட்டுகள் வழங்கப்படுகின்றன.

**10.0 தொழிலாளர் நலத் திட்டங்கள்**

10.1 போக்குவரத்துக் கழகங்கள் அதன் தொழிலாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினரின் நலம் பேண தொடர்ந்து அக்கறை செலுத்தி வருகின்றன. ஊழியர்கள் சங்கங்களுடன் காலமுறையில் ஊதிய ஒப்பந்தங்கள் செய்துகொள்ளப்படுகின்றன. தொழிலாளர்களுக்குப் பல்வேறு சலுகைகள் வழங்கப்படுகின்றன. அவை முறையே, பணி அடிப்படையிலான சிறப்புச் சம்பள உயர்வு, தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு இலவச பயண அனுமதிச் சீட்டு வழங்குதல், சிற்றுண்டி வசதிகள், கல்விப் படிகள், ஊதியம் சார்ந்த படிகள், வழக்குக் கட்டணம்



ஈடு செய்தல், சீருடைகள், குடும்பநல நிதி, இறுதிச் சடங்கு செலவுகள், விருப்ப ஓய்வூதியத் திட்டம், திருமணக் கடன், திருப்பான் படி, கல்வி முன்பணம், விடுப்புப் பயன்கள், விடுமுறை விடுதி, சிறப்பு நலத் திட்டம், ஊழியர்களின் பிள்ளைகளின் நலனுக்காகத் தொழிற் கல்லூரிகள் மற்றும் நிறுவனங்கள், தொழிலாளர் ஓய்வுகால சேமநல நிதித் திட்டம் ஆகியவை சில குறிப்பிட்ட தொழிலாளர் நலத் திட்டங்கள் ஆகும்.

**11.0 அரசு போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கான புதிய ஓய்வூதியத் திட்டம்**

தொழிலாளர்கள் ஓய்வூதியத் திட்டம் 1995-ஐக் காட்டிலும், அதிக பலன்கள் அடங்கிய புதிய ஓய்வூதியத் திட்டம் ஒன்று 1-9-1998 முதல் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி பல்வகை வழிவகைச் சட்டம் 1952-ன் உள்ளீட்டெல்லையிலிருந்து விலக்களிக்கப்பட்டு, அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கென உருவாக்கப்பட்டுள்ளது. மண்டல வருங்கால வைப்பு நிதி திட்டத்தின்கீழ் ரூ.750/- ஆக இருந்ததற்கு எதிராக, சராசரி மொத்த மாதாந்திர ஓய்வூதியம் ரூ.3,075/- ஆகவும், தொகுத்து பெறும் ஓய்வூதியம் நபருக்கு சுமார் ரூ.91,000/-ஆகவும் தற்சமயம் கணக்கிடப்பட்டுள்ளது. இப்புதிய ஓய்வூதியத் திட்டத்தை நடைமுறைப்படுத்த, பொறுப்பாட்சி (டிரஸ்ட்) ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. அரசு போக்குவரத்துக் கழகங்கள் இதுவரையில் 6,416 தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கியுள்ளன. ஆயுள் காப்பீட்டுக் கழக ஈட்டுறுதியிலிருந்தும், வருமான வரியிலிருந்தும் விலக்கு பெறுவதற்கும், வருமான வரி ஆணையாளரை, பொறுப்பாட்சி அணுகி உள்ளது. மேலும், குடும்ப ஓய்வூதியத் திட்டம் 1971 மற்றும் தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம் 1995 ன்கீழ், செலுத்தப்பட்ட ஏறத்தாழ ரூ.340 கோடியை ஓய்வூதிய நிதிக்கு மாற்றும்பொருட்டு திரும்ப அளிக்குமாறு அரசு போக்குவரத்துக் கழகங்கள், மண்டல வருங்கால வைப்பு நிதி ஆணையாளரைக் கேட்டுக்கொண்டுள்ளன.

**12.0 பேருந்து இயக்கத்தினைப் படிப்படியாகத் தனியார்மயமாக்கல் :**

2002-2003 ஆளுநர் உரையிலும், பின்னர் வரவு-செலவுத் திட்ட உரையிலும், சில குறிப்பிட்ட தடப் பேருந்துகள் படிப்படியாகத் தனியார்மயமாக்கப்படும் என்று அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது. தமிழ்நாட்டிலுள்ள போக்குவரத்துக் கழகங்கள் கீழ்க்கண்ட விகிதாசாரத்தில் பேருந்துகளை இயக்கி வருகின்றன:

[2002 மே 3

| பேருந்து வகை | எண்ணிக்கை |
|---|---|
| மாநகர பேருந்து | 2,582 |
| மாவட்டங்களில் நகரப் பேருந்து | 5,598 |
| புறநகர் பேருந்து | 5,775 |
| விரைவு பேருந்து | 813 |
| மலைப் பகுதி பேருந்து | 503 |
| மொத்தம் | **15,271** |

பேருந்துகளின் இயக்கம் படிப்படியாகத் தனியார்மயமாக்கப்படும். இதற்கான வழிவகைகளை வகுக்க ஓர் உயர் மட்டக் குழு அமைக்கப்பட உள்ளது. இத்திட்டத்தினால் போக்குவரத்துக் கழகங்களின் கட்டமைப்பைச் சீர்செய்து அவற்றின் திறமையை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**13.0 அரசு உறுதிமொழியின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றிய விவரங்கள் :**

2001-2002 ஆம் ஆண்டைய போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கையின்போது, அரசு அளித்த உறுதிமொழிகளை நிறைவேற்றுவது குறித்து, பல்வேறு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது.

1,550 புதிய பேருந்துகள் வாங்கப்படும் என்ற அரசின் உறுதிமொழி தொடர்பாக, 3 போக்குவரத்துக் கழகங்கள், இதுவரை மொத்தம் 305 புதிய பேருந்துகளை தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்திடமிருந்து, கடன் பெற்று வாங்கி அறிமுகப்படுத்தியுள்ளன. ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து 100 கோடி ரூபாய் கடனாகப் பெற்று, தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் மூலம் 1,000 புதிய பேருந்துகள் வாங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

50 கிலோ மீட்டர் இடைவெளி விட்டு, ஓர் ஆம்புலன்ஸ் நிறுத்தப்பட்டு முதலுதவி அளிக்கும் திட்டம் செயல்படுத்தப்படும் பொருட்டு, 7 ஆம்புலன்ஸ்கள் கீழ்க்கண்ட அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு மத்திய அரசின் தேசிய நெடுஞ்சாலை விபத்து நிவாரணத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுள்ளன:



2002 மே 3]

| | | |
|---|---|---|
| 1. | மாநகர் போக்குவரத்துக் கழகம் | 2 |
| 2. | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், மதுரை | 1 |
| 3. | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், சேலம் | 1 |
| 4. | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கோயம்புத்தூர் | 1 |
| 5. | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், விழுப்புரம் | 1 |
| 6. | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், திருச்சி | 1 |

அனைத்து அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளிலும், பிரதிபலிப்பான்கள் பொருத்தப்பட்டுள்ளன. அவற்றைச் சுத்தமாக வைப்பதன் மூலமும், அடிக்கடி மாற்றி அமைப்பதன் மூலமும் விபத்துகளை குறைக்க அனைத்து நிர்வாக இயக்குநர்களும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

சென்னையில் குறிப்பிட்ட சில தடங்களில் மகளிர் ஓட்டுநர் மற்றும் நடத்துநர்களைக் கொண்டு பேருந்துகள் இயக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. தற்போது சென்னை மாநகர் போக்குவரத்துக் கழகத்தில் 17 பெண் நடத்துநர்கள் உள்ளனர். சாலைப் போக்குவரத்து நிறுவனம் 2 பெண் ஓட்டுநர்களைத் தேர்வு செய்து உள்ளது. தக்க பயிற்சிகள் அளித்தபின், அந்த பெண் ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்களைக் கொண்டு குறிப்பிட்ட வழித் தடங்களில் சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படும்.

முதியோர், சிறார், பெண்கள் மற்றும் ஊனமுற்றோர் ஆகியோர் பேருந்துகளில் ஏற/இறங்க உதவிகரமாக இருக்கும் பொருட்டு, முக்கியமான வழித் தடங்களில் இயக்கப்படும் சில பேருந்துகளில் கூடுதல் தாழ்வான படிகட்டு அமைக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில், புதிய பேருந்து அடிச்சட்டங்கள் வாங்கும்போது, தாழ்வான தளமுள்ள அடிச்சட்டங்கள் வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் 50 பேருந்துகள் தாழ்வான படிகட்டுகளுடன் இயக்கப்பட உள்ளன.

சென்னையில் இணையதளம் மூலம் முன்பதிவு செய்யும் வசதிக்கான தேவையான மென்பொருள்கள் உருவாக்கப்பட்டு, சென்னையிலுள்ள அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக முன்பதிவு மையத்தில்,

தேவையான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. கடன் அட்டைகள் மூலம் முன்பதிவு செய்யும் திட்டம் விரைவில் அறிமுகப்படுத்தப்படும்.

சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ளது போல், சென்னை எழும்பூர் மற்றும் தாம்பரம் இரயில் நிலையங்களில், மாநகர் பேருந்து நிலையங்கள் அமைத்திட இரயில்வே துறை நிர்வாகிகளுடன் தொடர்ச்சியாகத் தொடர்புகொள்ளப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தாம்பரம் இரயில் நிலையத்தைப் பொறுத்தமட்டில் தேவையான கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டு, விரைவில் பேருந்து நிலையம் செயல்பட உள்ளது. சென்னை எழும்பூர் இரயில் நிலையத்தைப் பொறுத்தமட்டில் அதன் வடபகுதியில் சில கட்டடங்கள் இடிக்கப்பட வேண்டியுள்ளதால், இரயில்வே துறையினரோடு இதுகுறித்து தொடர்புகொண்டு தேவையான கட்டுமானப் பணிகளை விரைவில் முடிக்க அத்துறை கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

சென்னை மாநகரில் 500 ஒளிரும் நிழற்குடைகள் அமைக்கப்படும் என அறிவித்ததற்கிணங்க, இதுவரை 450 ஒளிரும் நிழற்குடைகள் அமைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 50 நிழற்குடைகளை ஒளிரும் நிழற்குடைகளாக மாற்றும் பணி தொடர்ந்து நடந்து வருகிறது. நடப்பாண்டில் சென்னை மற்றும் தமிழகத்தில் உள்ள இதர நகரங்களிலும் மேலும் 500 ஒளிரும் நிழற்குடைகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தென் மாவட்ட மக்கள் பயனடையும் வகையில் திருநெல்வேலியில் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில், இலகுரக மற்றும் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி மையம் அமைக்கப்படும் என அறிவித்ததற்கிணங்க, திருநெல்வேலிக்கு அருகில் சுத்தமல்லி என்ற கிராமத்தில் தகுதியான நிலம் தேர்வு செய்யப்பட்டு, அந்நிலத்தைப் போக்குவரத்துத் துறைக்கு மாற்றம் செய்வதற்குத் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

போக்குவரத்துக் கழகங்களைச் சீரமைக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக, போக்குவரத்துக் கழகங்களில், நிதிநிலை சீரமைப்பு, இயக்கத்



தகுதி முன்னேற்றம், பராமரிப்பு, சாலைப் பாதுகாப்பு இவற்றை மேம்படுத்தி குறிப்பிட்ட காலத்திற்குள் பயன் தரத்தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்

## 14.0 தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம்

14.1 மாநில போக்குவரத்துக் கழகங்களில் உள்ள பேருந்துகளுக்கு அடிச்சட்டங்கள் வாங்கவும், பேருந்து மேற்கூடு கட்டுமானப் பணிகளுக்கும், பணிமனைகள் நிறுவுவதற்கும், நடைமுறை மூலதனத்திற்கும், குறைந்த வட்டியில் நிதி உதவி வழங்கும்பொருட்டு பொது வைப்பீடுகள் திரட்டி கடன் வழங்க ஏதுவாக, தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம், 1975 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் நிறுவப்பட்டது. இக்கழகத்தின் மொத்த அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.70 கோடியாகும். செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.61.74 கோடியில், அரசின் பங்களிப்பு ரூ.43.03 கோடியாகவும், அரசு போக்குவரத்துக் கழகங்களின் பங்களிப்பு ரூ.18.71 கோடியாகவும் உள்ளன.

14.2 தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் தொடங்கப்பட்ட நாள் முதல் இலாபத்தை ஈட்டி வருகிறது. கடந்த ஐந்தாண்டுகளில் இந்நிறுவனம் ஈட்டிய இலாபம் பின்வருமாறு:—

(ரூபாய் இலட்சத்தில்)

| வருடம் | வரி ஒதுக்கீட்டிற்கு முன் ஆதாயம் | வருமான வரி | ஆதாய பங்குத் தொகை | பங்குத் தொகை வரி | அளிக்கப் பட்ட ஆதாய பங்குத் தொகையின் சதவீதம் | ஈட்டப் பட்ட ஆதாயம் |
|---|---|---|---|---|---|---|
| 1997-1998 | 2744.68 | 781.83 | 381.98 | 38.19 | 10 | 1542.68 |
| 1998-1999 | 1541.62 | 541.00 | — | — | — | 1000.62 |
| 1999-2000 | 2134.60 | 900.00 | — | — | — | 1234.60 |
| 2000-2001 | 1821.38 | 800.00 | — | — | — | 1021.38 |
| 2001-2002 (திருத்திய மதிப்பீடு) | 1948.00 | 760.00 | — | — | — | 1188.00 |

14.3 31-03-2002 இல், இந்நிறுவனத்தின் வைப்புத் தொகை ரூ.872.33 கோடிகளாகும். தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து 31-03-2002 வரை, ரூ.4802.48 கோடி நிதி உதவி அளித்திருக்கிறது. தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தின் நிதி உதவியுடன், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களால், இதுநாள் வரை 31,766 புதிய பேருந்துகள் வாங்கப்பட்டுள்ளன. மேலும் தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் இதர போக்குவரத்துக் கழகங்களுக்கு, நடைமுறைச் செலவுகளுக்கான குறுகிய காலக் கடன் தொகையை அளித்து வருகின்றது.

## 15. பல்லவன் போக்குவரத்து ஆலோசனைப் பணிக் குழு

15.1 பல்லவன் போக்குவரத்து ஆலோசனைப் பணிக் குழு, 1984 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில், ரூபாய் ஐந்து இலட்சம் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனத்துடனும், ரூபாய் இரண்டு இலட்சம் செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்துடனும், தமிழக அரசின் வரையறுக்கப்பட்ட நிறுவனமாகத் தொடங்கப்பட்டது. பின்னர் மே மாதம் 2000 ஆம் ஆண்டு, செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.10/- இலட்சமாகவும், அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.50/- இலட்சமாகவும் உயர்த்தப்பட்டது. இந்நிறுவனத்தின் செயல்பாடுகளை, அரசால் நியமிக்கப்பட்ட இயக்குநர்கள் குழுமம் மேற்பார்வையிடுகிறது.

15.2 பல்லவன் போக்குவரத்து ஆலோசனைப் பணிக் குழு நிர்வாகச் சேவை, கணினி தொழில் நுட்பமுறை, மற்றும் சாலைப் போக்குவரத்துப் பணி ஆகிய துறைகளில் தகுதியும், அனுபவமும் கொண்ட சிறந்த ஆலோசகர் குழுவின் மூலமாக, ஆலோசனைப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. அவ்வப்போது மேற்கொள்ளப்படும் ஆலோசனைப் பணியின் தேவைக்கேற்ப பல்லவன் போக்குவரத்து ஆலோசனைப் பணிக் குழுவின் ஆலோசகர் குழுவில், அந்தந்தத் துறைகளில் தகுதியும் அனுபவமும் பெற்ற தொழில் வல்லுநர்களும், ஓய்வு பெற்ற அரசு அதிகாரிகளும் இடம் பெறுகின்றனர். அந்தந்தத் துறைகளில் சிறப்பாகச் செயல்பட்டு





வரும் புகழ்மிக்க நிறுவனங்களுடன் பல்லவன் போக்குவரத்து ஆலோசனைப் பணிக் குழு இணைந்து, ஒப்பந்தப்புள்ளிகளில் பங்கேற்று செயல்பட்டு வருகிறது.

15.3 இந்தத் தொழில் துறையில் மிகுந்த போட்டி இருந்தபோதிலும், தனது தொடக்க காலமான 1984 ஆம் ஆண்டு முதல் பல்லவன் போக்குவரத்து ஆலோசனைப் பணிக் குழு சீராக முன்னேறிக் கொண்டு வருகின்றது. சாலைப் போக்குவரத்து கூட்டமைப்பு மற்றும் நிர்வாகச் சேவை ஆகிய துறைகளில் நிறைய தொழில் வாய்ப்புகள் உள்ளன. இந்தத் துறைகளில் வியாபாரத்தைப் பெருக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 31-3-2001 அன்று இருப்பும் மற்றும் உபரி நிதியும் ரூ.5.50 இலட்சமாகும்.

## 16. சாலைப் போக்குவரத்து நிறுவனம்

16.1 சாலைப் போக்குவரத்து நிறுவனமானது, இந்திய சங்கங்களின் பதிவுச் சட்டம் 1860-ன்கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகும். இந்நிறுவனம் 2001-2002 ஆம் ஆண்டில், தனது 26 ஆம் ஆண்டு பணியில் அடியெடுத்து வைத்து, தொடர்ந்து பணி செய்து வருகின்றது. மேலும் சாலைப் போக்குவரத்து தொடர்புள்ள சிக்கல்களைப்பற்றி ஆய்வு மற்றும் ஆராய்ச்சி அறிக்கைகளையும், அரசு போக்குவரத்துக் கழகங்களில் கொள்முதல் செய்யப்படும் பொருட்களின் தரக் கட்டுப்பாட்டிற்காக பரிசோதித்து மதிப்பீட்டறிக்கை தருவது மற்றும் இலகு/கனரக வாகனங்களில், ஓட்டுநர் பயிற்சி அளிப்பது போன்ற பணிகளையும் மேற்கொண்டு வருகிறது. தானியங்கி ஊர்திகளின் ஆய்வு நோக்கிலான, சாலைப் போக்குவரத்து தொழில் நுட்ப நிறுவனம் என்ற பெயரில், வளர்ச்சிப் பணிகளுக்காக, பொறியியல் கல்லூரி 1984 ஆம் ஆண்டில், ஈரோட்டில் தொடங்கப்பட்டது. அரசு போக்குவரத்துக் கழக ஊழியர்களின் நலனுக்காகவும், மருத்துவ ஆராய்ச்சிப் பணியினை மேற்கொள்ளவும், பெருந்துறையில், மருத்துவக் கல்லூரி 1986-87 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகின்றது. இது தவிர, சாலைப்

[2002 மே 3

போக்குவரத்து நிறுவனத்தின்கீழ் மூன்று பல்தொழில் நுட்பப் பயிலகங்கள், சென்னை (குரோம்பேட்டை), பர்கூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் 1992-93 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகின்றன.

16.2 பொறியியல் கல்லூரி மற்றும் தொழில் நுட்பப் பயிலகங்களில் 50% இடங்கள், அனைத்து போக்குவரத்துக் கழக ஊழியர்களின் பிள்ளைகளுக்காக ஒதுக்கப்பட்டு, மதிப்பெண் அடிப்படையில், சாலைப் போக்குவரத்து நிறுவனத்தினால் சேர்க்கப்படுகின்றனர். பெருந்துறை மருத்துவக் கல்லூரியைப் பொறுத்தவரையில், மொத்தமுள்ள 60 இடங்களில் 40 இடங்கள் தமிழக அரசால் நிரப்பப்படுகின்றன. மீதமுள்ள 20 இடங்கள், அரசு போக்குவரத்துக் கழக ஊழியர்களின் பிள்ளைகளுக்கு ஒதுக்கப்படுகின்றன. அனைத்துக் கல்வி நிறுவனங்களும், அனைத்துப் போக்குவரத்துக் கழக ஊழியர்கள் அளித்துள்ள வட்டியில்லாக் கடன் தொகையின்மூலம் கிடைக்கும் வட்டியின் மூலம் பராமரிக்கப்படுகின்றன.

16.3 கும்மிடிப்பூண்டியில் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி மையத்தையும் சாலைப் போக்குவரத்து நிறுவனம் நடத்தி வருகிறது. மற்றும் தமிழகத்தில் 13 வட்டார பயிற்சி மையங்களில் 2000-2001 வரை, 30,393 ஓட்டுநர்களுக்கு, கனரக வாகன ஓட்டுநர் பயிற்சியை சாலைப் போக்குவரத்து நிறுவனம் அளித்துள்ளது. 2001-2002 ஆம் ஆண்டில் 3500 மாணவர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். தற்போது இரு சக்கர வாகன ஓட்டுநர் மற்றும் இலகுரக வாகன ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி ஒன்று, 1997-லிருந்து சென்னை-குரோம்பேட்டையிலும், இலகுரக மற்றும் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி திருச்சிராப்பள்ளியிலும் தொடங்கி நடத்தப்பட்டு வருகின்றன.

16.4 2001-2002 சட்டப் பேரவை போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கையின்போது, திருநெல்வேலி மாவட்டத்தில் ஓர் ஓட்டுநர் பயிற்சி மையம் தொடங்கப்படும் என்று அறிவிப்பு செய்யப்பட்டிருந்தது. இதற்குத் தகுதியான நிலம், திருநெல்வேலி மாவட்டம் சுத்தமல்லி



2002 மே 3]

கிராமத்தில், மாவட்ட ஆட்சியரால் தேர்வு செய்யப்பட்டுள்ளது. நில மாற்றம் செய்யப்பட்ட பின்பு, அங்கு ஓட்டுநர் பயிற்சி மையம் அமைக்க ஏற்பாடு செய்யப்படும்.

**17.0 தமிழ்நாடு மோட்டார் வாகன பராமரிப்புத் துறை, சென்னை**

17.1 தமிழ்நாடு மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை பணித் துறையாகச் செயலாற்றி வருகிறது. மாநிலத்திலுள்ள சுமார் 10,000 அரசுத் துறைகளைச் சார்ந்த வாகனங்களைச் சிறந்த முறையில் பராமரிப்பது இத்துறையின் பொறுப்பாகும். இப்பணிக்காக, இத்துறையின் கீழ், மாவட்டத் தலைநகரங்களில் 20 தானியங்கிப் பணிமனைகளும் மற்றும் சென்னை தலைமைச் செயலக வளாகத்தில் முக்கியப் பிரமுகர்களின் வாகனங்களைப் பராமரிக்க, ஒரு பராமரிப்பு நிலையமும் உள்ளன. அரசுத் துறை வாகனங்களுக்கு எரிபொருள் வழங்கும் பொருட்டு, சென்னையில் இரண்டு எரிபொருள் வழங்கு நிலையங்கள் நந்தனம் (சென்னை), தலைமைச் செயலக வளாகம் (சென்னை) மற்றும் தஞ்சாவூர், மதுரை, சேலம், கோயம்புத்தூர், திருச்சி, தருமபுரி, கடலூர், நாகர்கோவில் ஆகிய இடங்களில் ஒவ்வொரு எரிபொருள் வழங்கு நிலையமும் என, மொத்தம் பத்து எரிபொருள் நிலையங்கள் இயங்கி வருகின்றன.

17.2 அரசுத் துறை வாகனங்களைப் பராமரிப்பதற்கு "பிரிவு வாரியாக மாற்றும் திட்டம்" மற்றும் "தொகுதிவாரி உற்பத்தித் திட்டம்" போன்ற பல்வேறு அறிவியல் முறைகளை, மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்துறை, பயனற்றதென கழிவு செய்யப்பட வேண்டிய வாகனங்கள் மற்றும் வாகன அகற்றம் போன்ற பணிகளையும் மேற்கொண்டு வருகிறது. 2001-2002 ஆம் ஆண்டில் 541 வாகனங்கள் பயனற்றதென கழிவு செய்யப்பட்டுள்ளன. இந்நிறுவனம் ஒட்டுமொத்தப் பராமரிப்பில், பெரும்பழுது 85.44 விழுக்காடு, நடுத்தரப் பழுது 64.48 விழுக்காடு, சிறுபழுது 170.75 விழுக்காடு என்ற இலக்கை எட்டியுள்ளது.

[2002 மே 3

17.3 2001-2002 ஆம் ஆண்டில் திட்டப் பணிகள் 2 ஆம் பாகத்தின் கீழ் ரூ.42.24 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் தொகையைக் கொண்டு 2 நகலெடுக்கும் சாதனங்களும், அரசு தானியங்கிப் பணிமனைகளுக்குத் தளவாடங்கள் வாங்கவும், மாற்றவும், எரிவாயு பகுப்பாய்வுக் கருவி மற்றும் புகைமானி அமைக்கவும், காற்று பதப்படுத்தி குளிரூட்டி வாங்கி வழங்கும் உபகரணம் மற்றும் அது தொடர்பான உபகரணங்கள், தொலைபேசி இணைப்புகள், மின் இயந்திர தானியங்கி நிலை உயர்த்திகள், அத்தியாவசியக் கருவிகள், இயந்திரங்கள், உபகரணங்கள் வாங்கவும் மிதவை அலகு திரட்டுகள் அமைக்கவும் செலவிடப்பட்டுள்ளன.

17.4 அரசுத் துறை வாகனங்களைப் பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்புப் பணிகளை மேம்படுத்தவும், நல்ல நிலையில் வைத்துக் கொள்ளவும் கீழ்க்காணும் கொள்கை அளவிலான திட்டங்கள் இத்துறையில் எடுத்துக் கொள்ளப்பட்டு, அவை சென்னை மாநகரத்தில் 1-8-2001 முதல் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன:—

* வாகன உரிமை அலுவலர்களின் அலுவலக வளாகங்களில் உள்ள வாகனங்களுக்குக் காலமுறைப் பராமரிப்பு மற்றும் சிறு பழுதுகளை களைய நடமாடும் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

* சென்னை அரசு மத்திய தானியங்கிப் பணிமனையில் விடுமுறை நாட்களில் வாகனப் பழுதுகளைக் களைய இரண்டு அணிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

* அரசு வாகனங்கள் பழுதடைந்துள்ள நேரத்தை வெகுவாகக் குறைக்க பல்வேறு வகையான மிதவை அலகுகளைப் பராமரித்து தயார் நிலையில் வைத்துச் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**18.0 இரயில்வே தொலைத் தொடர்பு மற்றும் விமானப் போக்குவரத்து**

18.1 மத்திய அரசுத் துறைகளான இரயில்வே, தொலைத் தொடர்பு மற்றும் விமானப் போக்குவரத்து ஆகிய துறைகள் தமிழ்நாட்டில் செயல்படுத்தும் திட்டங்களை மாநில அரசின் ஒருங்கிணைக்கும் முகமையாக போக்குவரத்துத் துறை செயல்படுகிறது. இந்நிறுவனங்களுக்குத் தேவைப்படும் நிலங்கள் மாவட்ட ஆட்சித்



2002 மே 3]

தலைவர், நிலநிர்வாக ஆணையர் ஆகியோரது ஒத்துழைப்புடன் கையகப்படுத்தப்படுகின்றன.

18.2 தமிழ்நாட்டில் ஏற்கெனவே இரயில்வே துறையால் மேற்கொள்ளப்படும் திட்டங்களைத் தவிர்த்து, கீழ்க்குறிப்பிட்ட திட்டங்களின் செலவுகளில் 50:50 என்ற விகிதத்தில் அரசு ஏற்க இசைவளித்துள்ளது :—

| *இரயில் பாதை மாற்றம்* | திட்டத்திற்கான தொகை |
| --- | --- |
| கடலூர்-விருத்தாச்சலம் | ரூ.198.68 கோடி (தொழில் துறையால் நிறைவேற்றப்படும் திட்டம்) |
| சென்னை கடற்கரை-தாம்பரம் (12 சந்திக் கடவுகள், மேம்பாலங்கள், கீழ்ப்பாலங்கள் ஆகியவை உட்பட) | ரூ.520 கோடி (போக்குவரத்துத் துறையால் மேற்கொள்ளப்படும்) |
| *புதிய வழித்தடம்:* | |
| அதிவேக போக்குவரத்து வசதி (சென்னை கடற்கரை-வேளச்சேரி) | இத்திட்டத்திற்கு மாநில அரசின் பங்காக 3-ல் 2 பங்கும், இரயில்வே துறையின் பங்காக மீதமுள்ள 3-ல் 1 பங்கு என்ற விகிதத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, திட்டம் நிறைவேற்றப்படும் (வீட்டு வசதித் துறையின் மூலம் மேற் கொள்ளப்படும்). |

மேலும் சென்னை எழும்பூர்—சென்னை சென்ட்ரல் இரயில் நிலையங்களை உயர்மட்ட இருவழி அகல இரயில்பாதை மூலம் இணைப்பதற்கான செலவையும் 50:50 விகிதத்தில் ஏற்க இவ்வரசு இசைவளித்துள்ளது.

18.3 நாகப்பட்டினம்-வேளாங்கண்ணி அகல இரயில் பாதை அமைக்கும் திட்டம் புனித வேளாங்கண்ணி ஆலய நிர்வாகம் வழங்கியுள்ள ரூ.1 கோடி தொகையின் மூலமாக நிறைவேற்றப்படும்.

18.4 இம்மாநிலத்தில் புதிய இரயில் பாதைகள் அமைப்பது, மீட்டர் கேஜ் பாதைகளை அகல இரயில் பாதையாக மாற்றுவது ஆகிய திட்டங்களை விரைவில் நிறைவேற்றும்படி மத்திய அரசை, மாநில அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. இரயில்வே நிர்வாகத்தை,

ஏற்கெனவே நடைபெற்று வரும் திட்டங்களுக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யக் கோரி தமிழ்நாடு அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. மேலும் கீழ்க்கண்ட திட்டங்களுக்கு அனுமதி அளித்து நிதி ஒதுக்கீடு செய்து தரும்படியும் மைய அரசைக் கேட்டுள்ளது :—

1) பட்டாபிராம்—அரக்கோணம் இடையே நான்கு வழி இருப்புப்பாதை அமைத்தல்.

2) ஆவடி—ஸ்ரீபெரும்புதூர் புதிய இரயில் பாதை.

3) நாகூர்—காரைக்கால், தஞ்சாவூர்—விழுப்புரம் அகல இரயில் பாதையாக மாற்றும் திட்டம்.

4) சத்தியமங்கலம் மற்றும் பழனிக்கு புதிய இரயில் பாதை- (திருப்பூர், காங்கேயம், தாராபுரம் வழியாக)

## 18.5 விமான தளம்

மாநில அரசின் தொடர் முயற்சியின் காரணமாகவும், போக்குவரத்து வளர்ச்சியின் காரணமாகவும், இந்திய விமான நிலைய ஆணையம், திருச்சி, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய விமான நிலையங்களை விரிவுபடுத்தவும், அதன் ஓடுதளத்தை விரிவுபடுத்தவும், ஓடுபாதையில் மின் விளக்கு வசதியை ஏற்படுத்தவும், தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதன்மூலம் பெரிய விமானங்களை இவ்விமான நிலையங்களில் இயக்க முடியும்.

18.6 திருச்சியில் 19.12.50 ஹெக்டேர், மதுரையில் 24.61.0 ஹெக்டேர் மற்றும் கோயம்புத்தூரில் 45.960 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தி விமான நிலையத்தை விரிவாக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. நிலம் கையகப்படுத்தும் பணி விரைவாக நடந்து வருகின்றது. சேலம், தூத்துக்குடி விமான நிலையங்களுக்கு, விமானப் போக்குவரத்து இயக்கம் சரியாக இல்லாததற்குக் காரணம், பயணிகளின் ஆதரவு இல்லாததே ஆகும்.

## 19.0 சென்னை விமானப் பறக்கும் குழாம்

19.1 சென்னை விமானப் பறக்கும் குழாமிற்கு அரசு ஊக்குதவித் தொகை வழங்கி ஏழை மாணவர்களுக்கு விமானம் ஓட்டும் பயிற்சியளித்து, அவர்கள் விமான ஓட்டுநர் உரிமம் பெற அரசு உதவி செய்து வருகிறது. இக்குழாமிற்கு, நிலையான உதவித் தொகையாக, ஓர் ஆண்டிற்கு ரூ.3.80 இலட்சம் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வருகிறது.



இது தவிர, விமான எரிபொருள் உதவித் தொகையாக, ஓராண்டிற்கு ரூ.3.72 இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது. இது தவிர, ஆண்டிற்கு பத்து மாணவர்களுக்கு உதவித் தொகை அளித்து, அவர்கள் தனிப்பட்ட விமானம் ஓட்டுநர் உரிமம் பயிற்சி பெறுவதற்கும் (Private Pilot Licence Training) வணிக விமான ஓட்டுநர் உரிமம் பயிற்சி பெறுவதற்கும் அரசு உதவி புரிந்து வருகிறது.

**மானியக் கோரிக்கை எண் 46**

**போக்குவரத்துத் துறை**

**வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 2002-2003**

(ரூபாய் ஆயிரத்தில்)

| வ. எண் | துறைத் தலைமையகம் | வருவாய் | மூலதனம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | தலைமைச் செயலகம் | 1,29,24,21 | 21 | 1,29,24,42 |
| 2. | மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை | 21,50,73 | 98 | 21,51,71 |
| | மொத்தம் | **1,50,74,94** | **1,19** | **1,50,76,13** |

**மானியக் கோரிக்கை எண் 46**

**போக்குவரத்துத் துறை**

**வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 2002-2003**

(ரூபாய் ஆயிரத்தில்)

| வ. எண் | துறைத் தலைமையகம் | வருவாய் | மூலதனம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | தலைமைச் செயலகம் | | | |
| | திட்டத்தில் சேராதது | 1,29,24,21 | -- | 1,29,24,21 |
| | மாநிலத் திட்டம் | — | 21 | 21 |
| 2. | மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை | | | |
| | திட்டத்தில் சேராதது | 19,33,25 | 98 | 19,34,23 |
| | மாநிலத் திட்டம் | 2,17,48 | — | 2,17,48 |
| | மொத்தம் | **1,50,74,94** | **119** | **1,50,76,13** |

[2002 மே 3

## இணைப்பு II

[85 ஆம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க]

### கோரிக்கை எண்-24-உள்துறை-
### இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள் - நிருவாகம்
### கொள்கை விளக்கக் குறிப்பு 2002-2003

**1. சாலைப் போக்குவரத்தின் முக்கியத்துவம்**

நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கும், மக்களின் நல்வாழ்விற்கும் சிறந்த மற்றும் பாதுகாப்பு நிறைந்த போக்குவரத்து வசதி முற்றிலும் இன்றியமையாததாக இருக்கிறது. நல்ல போக்குவரத்து அமைப்பு இல்லையேல், சீரான பொருளாதார முன்னேற்றத்தை எட்ட முடியாது. போக்குவரத்து, மக்கள் வாழ்வின் மையமாக இருக்கிறது. பல வழிகளில், ஒவ்வொரு நாளும், ஒவ்வொருவரும், சாலைப் போக்குவரத்தைப் பயன்படுத்துகின்றனர். வேலைக்குச் செல்வதற்கும், பள்ளிக்குச் செல்வதற்கும், கடைகளுக்குச் செல்வதற்கும், விடுமுறை நாட்களைக் கழிப்பதற்கு வெளியிடங்களுக்குச் செல்வதற்கும், முக்கியமாக அத்தியாவசியப் பொருட்களை எடுத்துச் செல்வதற்கும் சாலைப் போக்குவரத்து பயன்படுகிறது.

இச்சூழ்நிலையில், சாலைகளில் போதுமான எண்ணிக்கையில் வாகனங்களை இயக்குவது மட்டுமல்லாது, அவை ஒருங்கிணைக்கப்பட்டு தடையில்லாத, எளிதான, பாதுகாப்பான பயணம் மக்களுக்குக் கிடைக்க ஆவன செய்யப்பட வேண்டும். போக்குவரத்து ஆணையர், மற்றும் அவரது இணை மற்றும் துணை ஆணையர்களது கட்டுப்பாட்டில், தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் செயல்படும் வட்டார மற்றும் பகுதி அலுவலகங்கள், தகுதியுள்ள ஓட்டுநர்களுக்கு உரிமம் வழங்கியும், வாகனங்களின் தகுதியை சோதனை செய்தும், வர்த்தக வாகனங்களுக்கு அனுமதி அளித்தும், பயணிப் பேருந்துகளுக்கு கட்டணம் நிர்ணயித்தும், சாலையில் வாகனங்களின் ஓட்டத்தை முறைப்படுத்தியும், வாகனங்கள் வெளியேற்றும் புகை குறித்த அளவிற்கு மிகாமல் கட்டுப்படுத்த முயற்சிகள் எடுத்தும் பல்வேறு பணிகளை நிறைவேற்றி வருகின்றன.

பொது மக்களுக்கு சேவை செய்யும் துறை என்ற வகையிலும் போக்குவரத்து தொடர்பான செயல்பாடுகளை முறைபடுத்தும் துறை என்ற வகையிலும், இத்துறை சிறந்த முறையில் மக்களுக்குப் பணி



2002 மே 3]

செய்யவும், வருவாயை ஈட்டித் தரவும், சாலைப் போக்குவரத்தை ஒருங்கிணைப்பதற்கான விதிமுறைகளை அமல்படுத்தவும் போக்குவரத்துத் துறை தன்னை அர்ப்பணித்துள்ளது. இந்த சீரிய பணிகள் சட்டத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட விதிகள் மற்றும் ஏனைய நெறிமுறைகள் மூலமாகவும், துறையை கணினிமயமாக்கல் மற்றும் நவீனமயமாக்கல் மூலமாகவும் செயல்படுத்தப்படுகின்றன.

**2. நிருவாக அமைப்பு**

உள்துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டில், போக்குவரத்து ஆணையரின் தலைமையில் போக்குவரத்துத் துறை செயல்படுகிறது. போக்குவரத்து ஆணையரே தமிழ்நாட்டின் மாநில போக்குவரத்து அதிகாரியாகவும் செயல்படுகிறார். சென்னை நகரில் இணைப் போக்குவரத்து ஆணையர் (நகரம்), வட்டாரப் போக்குவரத்து அதிகாரியாகவும், மாவட்டங்களில், மாவட்ட ஆட்சியர்கள், வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகளாகவும் செயல்படுகின்றனர். வட்டாரப் போக்குவரத்து அதிகாரி மற்றும் மாநில போக்குவரத்து அதிகாரி ஆகியவர்கள் வெளியிட்ட ஆணைகட்கு எதிரான மேல் முறையீடுகளும், மறு ஆய்வு மனுக்களும், சென்னை மாநில போக்குவரத்து மேல் முறையீட்டுத் தீர்ப்பாயத்தினால் பரிசீலிக்கப்படுகின்றன.

போக்குவரத்துத் துறையின் நிருவாக அமைப்பு, இணைப்பு-1 மற்றும் 2-ல், விவரிக்கப்பட்டுள்ளது.

**3. போக்குவரத்துத் துறையின் பணிகள்**

1988 ஆம் ஆண்டு மோட்டார் வாகனச் சட்டம், 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகன வரி விதிப்புச் சட்டம், 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகன விதிகள், 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகன வரிவிதிப்பு விதிகள் மற்றும் 1989 ஆம் ஆண்டு மைய மோட்டார் வாகன விதிகள் ஆகியவற்றை இத்துறை நிருவகிக்கிறது.

இத்துறையின் முக்கியப் பணிகள் பின்வருமாறு:—

* இயக்கூர்திகளைப் பதிவு செய்தல்
* போக்குவரத்து வாகனங்களுக்கு அனுமதி வழங்குதல்

[2002 மே 3

* ஓட்டுநர் மற்றும் நடத்துனர் உரிமம் வழங்குதல்
* விபத்துக்குள்ளான வாகனங்களை ஆய்வு செய்தல்
* கட்டணங்களையும் வரிகளையும் வசூல் செய்தல்
* இயக்கூர்திகளின் புகையினால் மாசு ஏற்படுவதைக் கட்டுப்படுத்துதல்
* இச்செயல்பாடுகளுடன், சிற்றுந்து திட்டத்தையும், சாலைப் பாதுகாப்பு ஒருங்கிணைப்பையும் இத்துறை செயல்படுத்துகிறது.

**4. தமிழ்நாட்டில் வாகனங்களின் எண்ணிக்கை**

மாநிலத்தில் வாகனங்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் பெருகி வருகிறது. கீழ்க்கண்ட அட்டவணை இதனைத் தெளிவுபடுத்துகிறது:—

| வருடம் | போக்குவரத்து வண்டிகள் | போக்குவரத்து அல்லாத வண்டிகள். | மொத்தம் |
|---|---|---|---|
| 1996 | 2,83,404 | 24,88,442 | 27,71,846 |
| 1997 | 3,09,817 | 28,72,002 | 31,81,819 |
| 1998 | 3,44,244 | 32,70,004 | 36,14,248 |
| 1999 | 3,84,880 | 40,71,839 | 44,56,719 |
| 2000 | 3,99,300 | 42,07,928 | 46,07,228 |
| 2001 | 4,32,959 | 51,26,772 | 55,59,731 |

1-1-2002 நிலவரப்படி தமிழ்நாட்டில் உள்ள வாகனங்களின் விவரங்கள்:

| | |
|---|---|
| மாநில அரசு போக்குவரத்துக் கழகங்கள் (பயணிப் பேருந்து) | 16,837 |
| தனியார் (பயணிப் பேருந்து) | 5,705 |
| சரக்கு வாகனங்கள் (மொத்தம்) | 1,93,462 |



2002 மே 3]

| | |
|---|---|
| சரக்கு வாகனங்கள் (தேசிய அனுமதி) | 29,387 |
| ஆம்னி பேருந்துகள் (மாநில அனுமதி) | 299 |
| ஆம்னி பேருந்துகள் (தேசிய அனுமதி) | 151 |
| மோட்டார் கேப் (மாநில அனுமதி) | 32,560 |
| மோட்டார் கேப் (தேசிய அனுமதி) | 4,487 |
| மேக்சி கேப் (மாநில அனுமதி) | 24,352 |
| மேக்சி கேப் (தேசிய அனுமதி) | 898 |
| மோட்டார் கேப் (மாநகரம் மற்றும் நகர எல்லைக்குள் இயங்குபவை) | 1,114 |
| ஆட்டோ ரிக்ஷாக்கள் (மாநில முழுவதும் பதிவு செய்தவை) | 1,11,752 |
| ஆட்டோ ரிக்ஷாக்கள் (சென்னையில் மட்டும் பதிவு செய்தவை) | 38,181 |
| சிற்றுந்துகள் | 4,023 |
| பிற வாகனங்கள் (இருசக்கர வாகனங்கள் மற்றும் பிற) | 51,26,772 |

**5. வருவாய்**

ஒவ்வோர் ஆண்டும் இத்துறையின் வருவாய் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. 2001-2002 ஆம் ஆண்டில் வருவாய் ரூ.625.00 கோடியாகும்.

**6. வரி விதிப்பு முறை**

வரி விதிப்பு முறை அவ்வப்போது சீரமைக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு வாகனத்திற்கும் அதன் பயன்பாடு மற்றும் பொதுப் பணியில் அதன் பங்கேற்பு ஆகியவற்றிற்கு ஏற்ப வரி விதிப்பு முறை மாறுபடுகிறது.

1974 ஆம் ஆண்டைய தமிழ்நாடு மோட்டார் வாகன வரி விதிப்புச் சட்டப்படி வரி விதிக்கப்படுகிறது. கீழ்க்கண்ட அடிப்படையில் வாகனங்களின் வரி நிர்ணயிக்கப்படுகின்றது.

| வாகனங்களின் வகைப்பாடுகள் | வரி நிர்ணய முறை |
|---|---|
| பயணிப் பேருந்துகள் | இருக்கைகளின் எண்ணிக்கை |
| ஆம்னி பேருந்துகள் | இருக்கைகளின் எண்ணிக்கை |
| சரக்கு வாகனங்கள் | சுமையின் எடை |
| மோட்டார் கார்கள் | வாகனங்களின் எடை |
| போக்குவரத்து அல்லாத வாகனங்கள் | வாகனங்களின் எடை |
| இரு சக்கர வாகனங்கள் | இயந்திரங்களின் செயல்திறன் |
| மேக்சி கேப் | இருக்கைகளின் எண்ணிக்கை |
| தனியார் சேவை வாகனங்கள் | இருக்கைகளின் எண்ணிக்கை |
| ஆட்டோ ரிக்ஷா | 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை (அனுமதி காலம் முடியும் வரை) |
| சுற்றுலா வாடகைக் கார் | 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை (அனுமதி காலம் முடியும் வரை) |
| வாடகைக் கார் | 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை (அனுமதி காலம் முடியும் வரை) |

**7. முதலமைச்சரின் விபத்து நிவாரண நிதியிலிருந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளித்தல்**

சாலை விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கோ அல்லது அவர்களின் உறவினர்களுக்கோ “முதலமைச்சரின் விபத்து நிவாரண நிதி”யிலிருந்து உடனடியாக நிவாரணத் தொகை வழங்கப்படுகிறது.

நிவாரணத் தொகையின் அளவு:—

| | | |
|---|---|---|
| 1. | இறப்பு | ரூ.10,000/- |
| 2. | நிரந்தர செயலிழப்பு | ரூ.6,000/- |
| 3. | ஒரு கண் அல்லது ஒரு கை அல்லது ஒரு கால் இழப்பு | ரூ.4,000/- |
| 4. | சிறு காயங்கள் | ரூ.500/- |



அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணம் செய்து விபத்தில் உயிரிழப்பு ஏற்பட்டால், இறந்தவரின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து கருணைத் தொகையாக ரூ.50,000 வழங்கப்படுகிறது.

**8. சாலைப் பாதுகாப்பு**

சாலைப் பாதுகாப்பில் உறுதியான முன்னேற்றத்தை எட்டுவதற்கும், ஒருங்கிணைந்த வகையில் செயலாற்றுவதற்கும் மாநில அளவில் குறுகிய கால மற்றும் நீண்ட கால சாலைப் பாதுகாப்பு செயல்திட்டம் மிகவும் அவசியம். இத்திட்டம் தெளிவான இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டதாகவும், இதில் ஈடுபடும் நிறுவனங்களுக்கு அதிகாரம் அளிப்பதாகவும், இத்திட்டத்திற்கு நிதி ஆதாரங்களைத் தருவதாகவும் அமையவேண்டும். சரியான முறையில் புள்ளி விவரங்களைச் சேகரித்தல், சாலைப் பாதுகாப்பு குறித்த கல்வி, பயிற்சி, கடைப்பிடிக்க வேண்டிய விதிகள், போக்குவரத்து சட்டங்களின் அமலாக்கம் ஆகியவற்றில் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துதல், சாலைப் பாதுகாப்புத் திட்டங்களைத் தீவிரமாக ஒருங்கிணைத்தல் போன்றவை சாலைப் பாதுகாப்பு செயல்திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும். மேலும் இத்திட்டங்கள் வெற்றி பெற தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் ஈடுபாடும், ஒத்துழைப்பும் அவசியம். மேற்கூறிய கூறுகளின் அடிப்படையில் அரசு கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளது. தமிழகத்தில் சாலைப் பாதுகாப்பு குறித்த தெளிவான இலக்கை அடைய ஒரு செயல்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இத்திட்டம் கீழ்க்கண்டவற்றை உள்ளடக்கியதாக இருக்கிறது.

(I) வாகனப் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தி விபத்துகளின் எண்ணிக்கையைக் குறைக்க தமிழகத்தில் உள்ள அனைத்து காவல் ஆணையர்களுக்கும் மற்றும் மாவட்ட காவல் துறை அலுவலர்களுக்கும் ரூ. 3.75 கோடி செலவில் சாலைப் பாதுகாப்பு கருவிகள் வழங்கப்படும். எதிரொளிப்பட்டைகள் (Reflective Batons), எதிரொளி மேலுறைகள், (Reflective Jackets), போக்குவரத்து கூம்புகள் (Traffic Cones), இடர் அறிவிப்பான்கள் (Rubber Decelarators), எதிரொளி பாதுகாப்புக் குறியீடுகள் (Reflective Marking Barricades), பி.வி.சி. செயினுடன் தூண்கள் (PVC column with PVC Chain), முறைப்படுத்தும் போக்குவரத்து விளக்குகள் (Regulatory Traffic Lights), தொலைவு அறிவிப்பு துப்பாக்கி (Radar Guns), மூச்சை அளக்கும் கருவி (Breath Analyser) போன்ற கருவிகள் வாங்கப்பட உள்ளன.

[2002 மே 3

(II) தேசிய நெடுஞ்சாலைகள் 4, 7, 45 மற்றும் 46 ஆகியவைகளில் 50 கி.மீ. இடைவெளியில், 13 நடமாடும் அவசர விபத்து நிவாரண மையங்கள் அமைக்கப்படும். இவற்றில் தொலைத் தொடர்பு வசதி மற்றும் மருத்துவ வசதிகள் இருக்கும். இதற்கான ஆம்புலன்ஸ் வண்டிகள் மைய அரசின் சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் நடைமுறைப்படுத்தி வரும் விபத்து நிவாரணத் திட்டத்தின்கீழ் இருந்தோ, தனியார் மருத்துவமனைகளிடமிருந்தோ, தொண்டு நிறுவனங்களிடமிருந்தோ பெறப்படும். இத்திட்டத்தைச் செயலாக்க சாலைப் பாதுகாப்பு நிதியிலிருந்து ஒவ்வொரு மையத்திற்கும் மாதம் ஒன்றுக்கு ரூ.50,000/- வீதம் செலவிடப்படும். ஆண்டு ஒன்றுக்கு மொத்தமாக தொடர் செலவினமாக ரூ.78 இலட்சம் செலவிடப்படும்.

(III) கீழ்க்கண்ட நகரங்களில் ரூ.3.38 கோடி செலவில் அரசு மருத்துவமனைகளில் உள்ள விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவில் வசதிகள் மேம்படுத்தப்படும்.

| | | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | கிருட்டிணகிரி | 68.00 |
| 2. | ஓசூர் | 68.00 |
| 3. | ஆம்பூர் | 66.00 |
| 4. | ஸ்ரீபெரும்புதூர் | 68.00 |
| 5. | திண்டிவனம் | 68.00 |
| | மொத்தம் | **338.00** |

(அ) விபத்துகளின் எண்ணிக்கையைச் சேகரித்து, காரணங்களை ஆராய்ந்து விபத்துகளைத் தடுப்பதற்கும், அதன் பொறுப்புகளை எந்தெந்தத் துறையிடம் ஒப்படைக்கலாம் அதற்கான முடிவு செய்யவும், முன்னுரிமை அடிப்படையில் எந்தப் பணிகளை நிறைவேற்றலாம் என்பதை நிர்ணயிக்கவும், முறையான தகவல் மையம் (Data base) இன்றியமையாததொன்று என்ற அடிப்படையில் போக்குவரத்து ஆணையரது அலுவலகத்திலும், காவல் துறை தலைமை இயக்குநர் அலுவலகத்திலும் அப்படிப்பட்ட தகவல் சேகரிப்பு அமைப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.



2002 மே 3]

(ஆ) முன்னுரிமை அடிப்படையில் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள தமிழகம் முழுவதும் விபத்துப் பகுதிகள் (Accident prone spots) அடையாளம் காணப்பட்டு வருகின்றன.

(இ) ஓட்டுநர் உரிமம் பெறுவதற்குக் கடுமையான சோதனைகள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன. எனவே, தகுதியுடைய நபர்கள் மட்டுமே ஓட்டுநர் உரிமம் பெற முடியும். முழுமையான சோதனைக்குப் பின்னரே போக்குவரத்து வாகனங்களுக்கு தகுதிச் சான்றிதழ் (Fitness Certificate) வழங்கப்படுகிறது.

(ஈ) இரு சக்கர வாகன ஓட்டுநர்கள் தலைக் கவசம் அணிதல், இலகு ரக வாகன ஓட்டுநர்கள் இருக்கை வார்ப்பட்டை அணிதல் மற்றும் போக்குவரத்து விதிகளுக்குக் கீழ்ப்படிதல் ஆகியவை குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு முகாம் நடத்தப்படுகிறது. போக்குவரத்து விதிகளை மீறுபவர்கள்மீது தண்டனை விதிகளை நடைமுறைப்படுத்துவதைவிட, பொது மக்களிடம் அணுகி அவர்கள் இதுகுறித்து அறிவு பெறுவதிலேயே அரசு நம்பிக்கை வைத்துள்ளது.

(உ) வாகன ஓட்டுநர்கள் மற்றும் போக்குவரத்து காவலர்கள் ஆகியோருக்கு சாலைப் பாதுகாப்பின் முக்கியத்துவத்தினைக் கற்பிக்கும் பொருட்டு பயிற்சி மையங்களை நிறுவ அரசு உத்தேசித்துள்ளது. இதற்கான வரைவுத் திட்டம் தற்பொழுது தயாரிக்கப்பட்டுள்ளது.

(ஊ) போக்குவரத்து விதிகளை (Traffic Rules) அமல்படுத்துதல் என்பது சாலைப் பாதுகாப்புடன் இணைந்த செயல் ஆகும். எனவே வேகமாக வாகனம் ஓட்டுதல், அதிகமாக சுமை ஏற்றுதல், குடிபோதையில் வாகனங்களை ஓட்டுதல் போன்ற குற்றங்கள் இழைப்போர்மீது அவ்வப்போது தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(எ) சாலைப் பாதுகாப்பில் பலன்தரும் கருத்துகளை (Positive information) தொலைக்காட்சி மற்றும் செய்தித் தாள் மூலம் மக்களுக்குத் தெரிவிக்க வழி செய்யபட்டு வருகிறது.

(ஏ) சாலைப் பாதுகாப்பின் அனைத்து நடவடிக்கைகளையும் ஒருங்கிணைத்து (co-ordination) இத்திட்டங்களில் பின்னடைவு ஏதும் நிகழாமலிருக்க அரசு இதனைத் தொடர்ந்து தீவிரமாகக் கண்காணித்து வருகிறது. போக்குவரத்து ஆணையரும் சாலைப் பாதுகாப்பு ஆணையராக

[2002 மே 3

சாலைப் பாதுகாப்பு குறித்த கூட்டங்களை நடத்தி, சாலைப் பாதுகாப்புக்குத் தேவையான ஒருங்கிணைப்புப் பணிகளை நிறைவேற்றி வருகிறார்.

**9. கணினிமயமாக்குதல்**

முதல் கட்டமாக, 17 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் ஓட்டுநர் உரிமம், பதிவுச் சான்றுகள், வாகன அனுமதி வழங்குதல் மற்றும் வரி விதித்தல் ஆகிய பணிகள் முற்றிலும் கணினிகள் மூலமே நடைபெறுகின்றன. இதன்மூலம் ஒளிவு மறைவற்ற முறையிலும், விரைவாகவும், திறமையாகவும் பணியாற்ற முடிகிறது. இதைத்தவிர, அலுவலகக் கணக்குகள், பணியமைப்பு, இருப்பு விவரங்கள், சம்பளப் பட்டியல் ஆகிய பணிகளும் கணினிகள் மூலமே நடைபெற சோதனைகள் நடைபெற்றுவருகின்றன.

இரண்டாம் கட்டமாக, 35 பகுதி அலுவலகங்கள், 3 சோதனைச் சாவடிகள், 31 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் 7 மண்டல அலுவலகங்கள் ஆகியவற்றில், கணினிமயமாக்கும் பணி மேற்கொள்ளப்படும்.

போக்குவரத்துத் துறை, கணினிமயமாக்குதலின் மூலம், விரைவான மற்றும் திறமையான சேவையைப் பொது மக்களுக்கு அளிக்கிறது. இதனால் பொது மக்களின் காத்திருக்கும் நேரம் கணிசமாகக் குறைகிறது. மேலும், மாநிலத்தின் பல பகுதிகளிலும் அமைந்துள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களிலிருந்து வழங்கப்படும் ஓட்டுநர் உரிமங்களின் அடிப்படை விவரங்கள் மற்றும் பதிவுச் சான்றுகள், வாகன அனுமதி, வரி விதித்தல், போன்ற தகவல்களை மாநில போக்குவரத்து ஆணையகத்துக்கு உடனுக்குடன் அனுப்ப முடிகிறது. இதன்மூலம் இத்தகவல்களை உடனுக்குடன் சரி பார்த்து, போலியான ஆவணங்கள் வழங்கப்படாமல் தடை செய்ய முடிகிறது. அரசுக்குத் தேவைப்படும் வாகன வரி மீதான பல்வேறு அறிக்கைகளையும் உடனடியாக உருவாக்க முடிகிறது.

**10. ஓட்டுநர் தேர்ச்சித் தளம்**

ஓட்டுநர் உரிமம் கோரும் மனுதாரரின் திறமை, உரிமம் வழங்கும் முன் சரியாக பரிசோதிக்கப்பட வேண்டும். இதற்காக ஓட்டுநர் தேர்ச்சித் தளம் அவசியமாகிறது. கடந்த சில வருடங்களுக்கு முன்பு வரை இவ்வகையான தேர்ச்சித் தளங்கள் தமிழ்நாட்டில் இல்லை. எனவே, ஓட்டுநர் திறன் சாலைகளில் வாகனங்களை ஓட்டச் செய்து



2002 மே 3]

பரிசோதிக்கப்பட்டது. முறையான பயிற்சியையும், ஓட்டுநர்களின் திறனை பரிசோதனை செய்ய வேண்டியதன் முக்கியத்துவத்தையும் உணர்ந்து ஓட்டுநர் தேர்ச்சித் தளம் அமைப்பதென அரசு முடிவு செய்துள்ளது. ஓட்டுநர் தேர்ச்சித் தளமாவது ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு ஓட்டுநர் தேர்ச்சித் தளமாவது அமைப்பது அரசின் குறிக்கோளாகும். இக்குறிக்கோளின் அடிப்படையில் தருமபுரி, தஞ்சாவூர், திருநெல்வேலி, இராமநாதபுரம், காஞ்சிபுரம் மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களில் ஓட்டுநர் தேர்ச்சித் தளங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் திண்டுக்கல், நாமக்கல், திருவள்ளூர் மற்றும் பெரம்பலூர் ஆகிய இடங்களில் ஓட்டுநர் தேர்ச்சித் தளம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. பெரியகுளம், திருவண்ணாமலை மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் ஓட்டுநர் தேர்ச்சித் தளம் அமைக்கும் பணி விரைவில் தொடங்கப்படும்

**11. இயக்கூர்திகளால் ஏற்படும் புகை மற்றும் அதிக ஒலி ஆகியவற்றைக் கட்டுப்படுத்துதல்**

இயக்கூர்திகள் வெளியிடும் புகை மற்றும் வாகனங்களில் ஒலிப்பான்கள் மூலம் ஏற்படும் அதிக அளவு சத்தம் ஆகியவற்றைக் கட்டுப்படுத்த கடந்த ஆண்டுகளில் போதுமான கவனம் செலுத்தப்படவில்லை. இவை உடல் நலத்திற்கு ஊறு விளைவிக்கின்றன. 2001 ஆம் ஆண்டு ஜூன் மாதம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இத்துறையின் செயல்பாடுகளை ஆய்வு செய்தபோது இவற்றைக் கட்டுப்படுத்த ஆவன செய்ய வேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டது. எனவே, இத்துறை கீழ்க் குறிப்பிட்டுள்ள நடவடிக்கைகளை எடுத்துள்ளது:—

(i) தற்போது 5 மாவட்டங்களில் மட்டுமே நடைமுறையிலிருக்கும் வாகனப் புகை பரிசோதனை முறை 1-6-2002 முதல் தமிழகம் முழுவதும் அமல்படுத்தப்படும்.

(ii) வாகனங்களைப் பரிசோதனை செய்ய தொழில் நுட்ப வளர்ச்சி மிகுந்த இயந்திரங்கள் பயன்படுத்தப்படும். இதற்காக கடுமையான வழிமுறைகள் வகுக்கப்படும்.

(iii) வாகனங்களின் காற்றழுத்த ஒலிப்பான்களால் (Air horns) ஏற்பட்டு வரும் இன்னல் நீக்கப்படும். முதல் கட்ட நடவடிக்கையாக சென்னை மாநகர் போக்குவரத்துக் கழகம் மற்றும் அரசு விரைவுப் போக்குவரத்து கழகப் பேருந்துகளிலிருந்து காற்றழுத்த ஒலிப்பான்கள் அகற்றப்பட்டிருக்கின்றன.

[2002 மே 3

(iv) தேவைப்படும் சாலைகளை அமைதிப் பகுதிகளாக (Silence Zones) அறிவிக்க காவல் துறைக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

(v) இந்த நோக்கம் அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் நிறைவேற்றப்படும்.

## 12. 2001-2002 ஆம் ஆண்டுகளில் தொடங்கப்பட்ட புதிய முயற்சிகள்

விரிவான சாலைப் பாதுகாப்புத் திட்டத்தைத் தயாரித்தல் மற்றும் வாகனங்கள் வெளியேற்றும் புகையினைக் கட்டுப்படுத்த எடுத்த சிறப்பு நடவடிக்கைகளுடன், ஓசூர், சுந்தே கவுண்டன் சாவடி மற்றும் பெத்திக்குப்பம் ஆகிய இடங்களில் உள்ள போக்குவரத்து சோதனைச் சாவடிகளை நவீனப்படுத்துவதற்கு சிறப்பு கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது. இதற்காக குஜராத் மாநிலத்தில் பின்பற்றப்படும் முறையை ஆய்வு செய்து அறிக்கை தயார் செய்யப்பட்டிருக்கிறது. இது வணிக வரித் துறையுடன் கலந்தாலோசிக்கப்பட்டு வருகிறது. 2001-2002 ஆம் ஆண்டைய நிதி நிலை அறிக்கையின்போது அறிவித்துள்ளபடி:

* தூத்துக்குடி வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு வரும் பொதுமக்கள் மற்றும் வாகன உரிமையாளர்களின் நலனுக்காக, காத்திருக்கும் அறையும், கழிப்பறையும் கட்டுவதற்கு அரசு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இந்தப் பணிகள் விரைவில் முடிவடையும். இதுபோல் தூத்துக்குடியில் ஓட்டுநர் தேர்ச்சித் தளம் கட்டுவதற்கும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இந்த வேலை விரைவில் தொடங்கப்படும்.

* மாநிலங்களுக்கிடையே பேருந்துகள் மற்றும் போக்குவரத்து சேவைகளை விரிவுபடுத்துவதற்காக பாண்டிச்சேரி மாநிலத்துடன் நடைபெறும் பேச்சுவார்த்தையில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. ஆந்திரப் பிரதேசம் மற்றும் கர்நாடக மாநிலங்களுடன், அலுவலர்கள் மட்டத்தில் பேச்சு வார்த்தைகள் நடைபெற்று வருகின்றன.

**முடிவுரை**


சிறந்த போக்குவரத்து அமைப்பே பொருளாதாரத்தின் முதுகெலும்பு என்பதை அரசு முழுவதுமாக உணர்ந்துள்ளது. மக்களுக்குச் சிறந்த முறையில் பணி செய்யவேண்டும் என்ற நோக்கில், மோட்டார் வாகன விதிகளைச் சிறப்பாக நடைமுறைப்படுத்தவும், மக்களுக்குப் போக்குவரத்து வசதியினை அளித்திடவும் அரசு போக்குவரத்துத் துறையை ஊக்கப்படுத்தி வருகிறது.




2002 மே 3]

இணைப்பு—1

போக்குவரத்துத் துறையின் நிர்வாக அமைப்பு
தலைமையிட அமைப்பு



இ.போ.ஆ : இணை போக்குவரத்து ஆணையர்
து.போ.ஆ : துணை போக்குவரத்து ஆணையர்
உ.செ : உதவிச் செயலர்
த.க.அ : தலைமை கணக்கு அலுவலர்
உ.போ : உதவிப் பொறியாளர்
பு.உ.இ : புள்ளியியல் உதவி இயக்குநர்
நி.அ : நிர்வாக அதிகாரி
உ.இ(கு) : உதவி இயக்குநர்(குணிக்கை)
செ/மா.போ.மே.மு.ம : செயலர்/மாநில போக்குவரத்து மேல் முறையீட்டு மன்றம்
து.பி : துறை பிரதிநிதி
ப : பகுப்பாய்வர்(கணினி)
ச.அ : சட்ட அலுவலர்





# இணைப்பு III

[243 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

## கோரிக்கை எண் 3—நீதி நிருவாகம்
## கொள்கை விளக்கக் குறிப்பு—2002-2003

### 1. முன்னுரை

ஓர் அரசாங்கத்தின் தலையாய பணிகளில் நீதி நிருவாகமும் ஒன்றாகும். இந்திய அரசியலமைப்புச் சட்டம் வகுத்துள்ள விதிமுறைகளின்படி, அனைத்து குடிமக்களுக்கும் நீதி கிடைப்பதை உறுதி செய்வது ஓர் அரசாங்கத்தின் கொள்கையாகும். நீதித் துறை இயல்பான சூழ்நிலையில் இயங்குவதற்கு இந்த அரசு முனைப்பாக செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் நீதி நிருவாகத்திற்கு எப்பொழுதுமே முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது. தற்போது நிலவி வரும் அரசின் கடுமையான நிதி நெருக்கடியிலும் புதிய நீதிமன்றங்கள் அமைத்தல், தேவையான இடங்களில் கூடுதல் உள்ளமைப்பு வசதி ஏற்படுத்துதல் மற்றும் நீதிமன்றங்களின் மற்ற தேவைகளை நிறைவு செய்தல் ஆகியவற்றை செயல்படுத்தி, குடிமக்களுக்கு விரைவான சமூகப் பொருளாதார நீதியை வழங்குவதில் தமிழக அரசு முன்னோடியாக விளங்கி வருகிறது.

### 2. நீதித் துறையின் படிநிலை அமைப்பு

புதுடில்லியிலுள்ள இந்திய உச்ச நீதிமன்றம், நம் நாட்டின் முதன்மை நீதிமன்றமாகும். மாநிலங்களில் செயல்படும் அனைத்து உயர் நீதிமன்றங்களும் உச்ச நீதிமன்றத்தின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்குகின்றன.

[2002 மே 3

மாநில அளவில் நீதித்துறையின் படிநிலை அமைப்பு பின்வருமாறு:-

**உயர் நீதிமன்றம், சென்னை**

| உரிமையியல் | | குற்றவியல் | |
|---|---|---|---|
| சென்னை மாநகர் | வெளியூர் | சென்னை மாநகர் | வெளியூர் |
| மாநகர உரிமையியல் நீதிமன்றங்கள் | மாவட்ட நீதிமன்றங்கள் | மாநகர உரிமையியல் நீதிமன்றங்கள் | அமர்வு நீதிமன்றங்கள் |
| சிறு வழக்குகள் நீதிமன்றங்கள் | சார்நிலை நீதிமன்றங்கள் | பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் | மாவட்டக் கூடுதல நீதிபதி மற்றும் தலைமைக குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள |
| | மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் | கூடுதல் தலைமை பெருநகர குற்றவியல் நீதிமன்றம் | கூடுதல் அமர்வு நீதிமன்றங்கள |
| | மாவட்ட உரிமையியல் மற்றும் குற்ற வியல் நடுவர் நீதிமன்றங்கள் | பெருநகர குற்றவியல் நீதிமன்றங்கள் | மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல நடுவர் நீதிமன்றங்கள |
| | | | குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள |

இத்துடன், பல்வேறு சட்டங்களின்கீழ் பின்வரும் நீதிமன்றங்கள்/அலுவலகங்கள் செயல்படுகின்றன:—

1) நொடித்தவர் சொத்தாட்சியர், உயர்நீதிமன்றம், சென்னை.

2) அரசு சொத்து தலைமைப் பொறுப்பாட்சியர், சென்னை.

3) சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி, கடலூர், சேலம், திருச்சிராப்பள்ளி, வேலூர் ஆகிய இடங்களில் உள்ள தொழிலாளர் நல நீதிமன்றங்கள்.

4) தொழில் நடுவர் நீதிமன்றம், சென்னை.

5) சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம் ஆகிய இடங்களில் உள்ள குடும்ப நீதிமன்றங்கள்.



2002 மே 3]

6) சென்னை, மதுரை ஆகிய இடங்களில் உள்ள பொருளாதாரக் குற்றங்களை விசாரிப்பதற்கான தனி நீதிமன்றங்கள்.

7) சிவில் உரிமைகள் பாதுகாப்பிற்கான தனி நீதிமன்றங்கள்.

8) "தடா" சட்டத்தின்கீழ் தனி நீதிமன்றங்கள்.

9) இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் கீழ்வரும் வழக்குகளையும், போதை மருந்துகள் மற்றும் மன மயக்கப் பொருட்கள் (NDPS) சட்டத்தின்கீழ் வரும் வழக்குகளையும் விசாரிப்பதற்கான தனி நீதிமன்றங்கள்.

10) சென்னை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய இடங்களிலுள்ள மத்திய குற்றப் புலனாய்வுத் துறை வழக்குகளை விசாரிப்பதற்கென்று அமைக்கப்பட்ட தனி நீதிமன்றங்கள்.

11) சென்னை மற்றும் கோயம்புத்தூரிலுள்ள, குண்டுவெடிப்பு வழக்குகளை விசாரிப்பதற்கென்று அமைக்கப்பட்ட தனி நீதிமன்றங்கள்.

12) மதுரையிலுள்ள சாதிக் கலவரங்கள் குறித்த வழக்குகளை விசாரிப்பதற்கான தனி நீதிமன்றம்.

### 3. நீதிமன்றங்களின் எண்ணிக்கை

நீதிமன்றங்களின் தற்போதைய எண்ணிக்கை இணைப்பு-1 மற்றும் 2-இல் கொடுக்கப்பட்டுள்ளன.

### 4. நிதி ஒதுக்கீடு

நீதித் துறை நிருவாகத்திற்கு அரசு வழங்கி வரும் முன்னுரிமையைக் கருத்திற்கொண்டு, அடிப்படைக் கட்டமைப்பு வசதி மற்றும் செயல்பாட்டின் அடிப்படையில், நீதித் துறை கணிசமான அளவிற்கு வளர்ச்சியையும், மேம்பாட்டையும் அடைந்துள்ளது. தற்போது நிலவி வரும் நிதிப் பற்றாக்குறையிலும், நீதித் துறை தங்குதடையின்றி, சுமுகமாகச் செயல்படுவதற்காக, கட்டடங்கள், பணியாளர்கள் மற்றும் தேவையான ஏனைய அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளைப் பொறுத்தவரையில், அரசு போதிய வசதிகளைச் செய்து கொடுத்துள்ளது.

சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் நொடித்தவர் சொத்தாட்சியர் [2002 மே 3 குறித்த செலவு "சாட்டிய செலவினம்" என்ற தலைப்பிலும், நீதி நிருவாகம் தொடர்பான பிற செலவினங்கள் " அனுமதிக்கப்பட்டவை" என்ற தலைப்பிலும் காட்டப்படுகின்றன.

நீதித் துறை குறித்த செலவு மற்றும் வருவாய் குறித்த விவரங்கள் இணைப்பு-3-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**5. உயர் நீதிமன்றம், சென்னை**

மாநிலத்தின் உயரிய நீதி அமைப்பு, சென்னை உயர்நீதிமன்றமாகும். மாண்புமிகு தலைமை நீதிபதி உட்பட, சென்னை உயர்நீதிமன்றத்திற்கு அனுமதிக்கப்பட்ட நீதிபதிகளின் எண்ணிக்கை 42 ஆகும். உயர்நீதிமன்றம் தற்போது 31 நீதிபதிகளைக் கொண்டு செயல்படுகின்றது.

சென்னை உயர்நீதிமன்றம், உரிமையியல் வழக்குகளில் ரிட் மனுக்களையும் அசல் மனுக்களையும் விசாரிக்கும் சட்ட அதிகாரம் கொண்டுள்ளது. உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளில் மேல்முறையீட்டு மனுக்களை விசாரிக்கும் அதிகாரத்தை உயர்நீதிமன்றம் பெற்றுள்ளது. அசல் மனுவைப் பொறுத்தவரையில், சென்னை மாநகருக்குள் எழக்கூடிய ரூ. 10,00,000/-க்கும் அதிகமான மதிப்புடைய வழக்குகளை உயர்நீதிமன்றம் விசாரிக்கிறது. மாண்புமிகு நீதிபதிகளுக்கிடையே பணிகளைப் பகிர்ந்தளிக்கும் பணியை மாண்புமிகு தலைமை நீதிபதி கவனிக்கிறார்.

மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியான பாண்டிச்சேரி மீதும் உயர்நீதிமன்றம் சட்ட அதிகாரம் செலுத்துகிறது. உயர்நீதிமன்றத்தில் பாண்டிச்சேரி குறித்த விவகாரங்களைக் கவனிக்கும் அதிகாரிகள், பணியாளர்கள் ஆகியோர் குறித்த செலவை முதற்கண் தமிழ்நாடு அரசு செய்கிறது. பின்னர், பாண்டிச்சேரி அரசு அத்தொகையைத் திருப்பிக் கொடுக்கிறது.

தலைமைப் பதிவாளர், உயர்நீதிமன்றத்தின் தலைமை நிருவாகி ஆவார். அவருக்குப் பல அதிகாரிகள், அதாவது, பதிவாளர் (A.S.), பதிவாளர் (Administration), மற்றும் பதிவாளர் (O.S.) ஆகிய மூன்று பதிவாளர்கள், வழக்குகளை தொகுதிப்படுத்துவதற்கான தனி அலுவலர், உதவிப் பதிவாளர்கள், தலைமைக் கணக்கு அலுவலர், சார் உதவிப் பதிவாளர்கள் ஆகியோர் நிருவாகத்தில் உதவி செய்கின்றனர்.



2002 மே 3]

உயர்நீதிமன்றம் நீதி வழங்குவது மட்டுமின்றி, மாநிலத்திலுள்ள சார்நிலை நீதிமன்றங்கள் அனைத்திலும் முழு அளவில் நிருவாகக் கட்டுப்பாட்டைச் செலுத்துகிறது.

**6. உரிமையியல் நீதிமன்றங்களின் நிருவாக அமைப்பு**

(I) *சென்னைப் பெருநகரம்:*

*(அ) மாநகர உரிமையியல் நீதிமன்றம், சென்னை*

18 சார்நிலை நீதிபதிகள் (உதவி நீதிபதிகள்), 13 மாவட்ட நீதிபதிகள் மற்றும் ஓர் உரிமையியல் நீதிபதி (பதிவாளராக) என மொத்தம் 32 நீதிபதிகள் சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றத்தில் பணியாற்றுகின்றனர். உரிமையியல் நீதிபதி (இளநிலைப்பிரிவு/நீதித்துறை முதலாவது குற்றவியல் நடுவர்) பதவித் தரத்திலுள்ள பதிவாளர், மாநகர உரிமையியல் நிருவாகத்திற்குப் பொறுப்பு வகிக்கிறார். மாநகர உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகார வரம்பு, சென்னை மாநகரம் முழுவதும் பரவியுள்ளது.

மாநகர உரிமையியல் நீதிமன்றம் ரூ. 10,00,000/- வரை மதிப்புள்ள வழக்குகளையும் ரூ. 3,00,000/- வரை மதிப்புள்ள மேல்முறையீட்டு வழக்குகளையும் விசாரிக்கும் அதிகாரம் பெற்றுள்ளது. மேலும், இந்த மாநகர உரிமையியல் நீதிமன்றம் சென்னை அமர்வு நீதிமன்றமாகவும் செயல்படுகின்றது. 1988 ஆம் ஆண்டு ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் ஊழல் குறித்த வழக்குகளை விசாரிப்பதற்கென்றே, மூன்று கூடுதல் மாநகர உரிமையியல் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாடு, 1997 ஆம் ஆண்டு வைப்பீட்டாளர்கள் (நிதி நிறுவனங்கள்) நலன் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வரும் வழக்குகளை விசாரிப்பதற்கென்று தனி நீதிமன்றம் ஒன்றும் இயங்கி வருகின்றது.

மாநகர உரிமையியல் நீதிமன்றத்தைப் பொறுத்தமட்டில் மொத்த செலவு 2002-2003 ஆம் ஆண்டிற்கு ரூ. 5,06,29,000/- என மதிப்பிடப்பட்டுள்ளது. மத்திய அரசு நிதி உதவியுடன், மாநகர உரிமையியல் நீதிமன்றங்கள் மற்றும் மாவட்ட நீதிமன்றங்கள் ஆகியவற்றை கணினி மயமாக்கக் கருதப்பட்டுள்ளது. அதற்கான திட்டம் ரூ. 2.09 கோடி அளவில் தயாரிக்கப்பட்டு, மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டம் இரண்டு கட்டங்களில் நிறைவேற்றப்படும். 2001-2002 ஆம் ஆண்டுக்காக ரூ. 82 இலட்சத்தை மத்திய அரசாங்கம் அனுமதித்துள்ளது.

[2002 மே 3

### (ஆ) சென்னை சிறு வழக்குகள் நீதிமன்றம்

இந்நீதிமன்றம், மாவட்ட நீதிபதி பதவி தரத்தில் உள்ள தலைமை நீதிபதியின் கீழ் செயல்பட்டு வருகின்றது. அங்கு சார்பு நீதிபதி பதவித்தரத்தில் 8 (உரிமையியல் நீதிபதி முதுநிலைப்பிரிவு) நீதிபதிகளும் மாவட்ட உரிமையியல் நீதிபதி பதவித் தரத்தில் 7 நீதிபதிகளும் (உரிமையியல் நீதிபதி இளநிலைப்பிரிவு) உள்ளனர். உரிமையியல் நீதிபதி பதவித்தரத்தில் (இளநிலைப்பிரிவு) நிருவாகப் பொறுப்பில் பதிவாளர் ஒருவரும் உள்ளார். அவர் நிருவாகப் பணிகளுடன் சில நீதித்துறை நடவடிக்கைகளையும் கவனித்து வருகிறார். இதன் தலைமை நீதிபதியும் மற்றும் ஏனைய நீதிபதிகளும் 1882 ஆம் ஆண்டு மாகாண சிறு வழக்குகள் நீதிமன்றங்கள் சட்டத்தின் கீழ் சிறு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் செலுத்தி வருகின்றனர்.

V மற்றும் VI-ஆம் நீதிபதிகள், மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் உள்ள வழக்குகளை விசாரிப்பதற்கான நடுவர் மன்றங்களாகச் செயல்படுகின்றனர். தலைமை நீதிபதி மற்றும் II, III, IV ஆகிய நீதிபதிகள் மோட்டார் வாகனச் சட்டத்தின்கீழ் வரும் வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தையும் பெற்றுள்ளனர். X முதல் XVI வரையிலுள்ள நீதிபதிகள் சென்னை மாநகரத்திற்கான வாடகைக் கட்டுப்பாட்டு அதிகாரிகளாகச் செயல்படுகின்றனர். தலைமை நீதிபதியும் II முதல் IV, VII, VIII ஆகிய நீதிபதிகளும் வாடகைக் கட்டுப்பாடு குறித்த மேல்முறையீடுகளை விசாரிக்க அதிகாரம் பெற்றுள்ளனர். 2002-2003 ஆம் ஆண்டிற்கு சிறு வழக்குகள் நீதிமன்றம் தொடர்பான செலவு ரூ.2,26,51,000/- என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

### (ii) வெளியூர்

### (a) மாவட்ட நீதிமன்றங்கள்

இம்மாநிலத்தில் 25 மாவட்ட நீதிமன்றங்கள் உள்ளன. நாமக்கல் மாவட்டத்திற்கு மாவட்ட நீதிமன்றம் ஒன்று அமைக்கப்பட்டு 29-3-2002 முதல் செயல்படத் துவங்கியுள்ளது. மாவட்ட நீதிபதிகள் அந்தந்தப் பகுதிகளுக்கான அமர்வு நீதிபதிகளாகவும் பணியாற்றுகின்றனர். மேலும் அவர்கள் சில சிறப்புச் சட்டங்களின்கீழ் சிறப்பு நடுவர்களாகவும் செயல்படுகின்றனர். தொழிலாளர் காப்புறுதிச் சட்டம், நில உரிமை ஒழிப்புச் சட்டம் மற்றும் மோட்டார் வாகனங்கள் சட்டம் போன்ற சில சிறப்புச் சட்டங்களின்கீழ் சிறப்பு நடுவர்களாகச் செயல்படுகின்றனர்.



2002 மே 3]

இந்த மாவட்ட நீதிபதிகள் தங்கள் அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதிகளிலுள்ள சார்நிலை உரிமையியல் நீதிமன்றங்களையும் மேற்பார்வையிடுகின்றனர். இவர்கள் ரூ. 3,00,000/- வரை மதிப்புள்ள மேல்முறையீட்டு உரிமையியல் வழக்குகளை விசாரித்து வருகின்றனர்.

### (b) சார்நிலை நீதிமன்றங்கள்

### (உரிமையியல் நீதிபதி-முதுநிலைப்பிரிவு)

சார்நிலை நீதிபதிகள் தற்போது உரிமையியல் நீதிபதிகளாக (முதுநிலைப்பிரிவு) பெயர் மாற்றம் செய்யப்பட்டு வரையறை இல்லாத தொகை குறித்த அசல் வழக்குகளை விசாரித்து வருகின்றனர். இவர்களுடைய அதிகார வரம்பு உரிமையியல் நீதிமன்றங்கள் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது. சார்நிலை நீதிபதிகள் அவரவர் அதிகார வரம்பில் பணிபுரியும் மாவட்ட உரிமையியல் நீதிபதிகள் முடிவிலிருந்தும், அந்த முடிவு தொடர்பாகவும் எழும் மேல்முறையீடுகளைப் பொறுத்தவரை, ரூ.30,000/- வரை மதிப்புள்ள வழக்குகளை அவர்கள் விசாரிக்கின்றனர். இந்த சார்நிலை நீதிபதிகள் அமர்வு நீதிமன்ற உதவி நீதிபதிகளாகவும் செயல்படுகின்றனர். மேலும் சார்நிலை நீதிமன்றங்கள் மோட்டார் வாகன விபத்து இழப்பீடு கோரும் நடுவர் மன்றங்களாகவும் செயல்படுகின்றன. இம்மாநிலத்தில் 107 சார்நிலை நீதிமன்றங்கள் செயல்படுகின்றன.

### (c) மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் (உரிமையியல் நீதிபதி- இளநிலைப் பிரிவு)

மாவட்ட முன்சீப் பதவிகள் தற்போது உரிமையியல் நீதிபதி பதவிகளாகப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு (இளநிலைப் பிரிவு) ரூ. 30,000/- வரையிலான மதிப்புடைய சொத்து வழக்குகளை விசாரித்து வருகின்றனர். மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் ஒவ்வொன்றும் அவற்றிற்கென்று அதிகாரவரம்பைப் பெற்றுள்ளன. அவை ரூ.20,000/- வரையிலான சிறு வழக்குகளை விசாரித்து வருகின்றன. மாவட்ட உரிமையியல் நடுவர்கள், தங்கள் வரம்புக்கு உட்பட்ட பகுதிகளுக்கு வாடகைக் கட்டுப்பாட்டு அதிகாரிகளாகவும் செயலாற்றுகின்றனர். இம்மாநிலத்தில் 158 மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன.

[2002 மே 3

(d) மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள்

இம்மாநிலத்தின் ஒரு சில பகுதிகளில் உள்ள வழக்காடும் பொதுமக்கள் தங்கள் உரிமையியல் தொடர்பான குறைகளைத் தீர்த்துக் கொள்வதில் மிகுந்த இடர்பாடுகளைச் சந்தித்து வருகின்றனர். அவர்கள் வசிக்கும் பகுதியில் உரிமையியல் நீதிமன்றங்கள் இல்லாத காரணத்தால் அதற்காக அவர்கள் வெளியூரில் உள்ள நீதிமன்றங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளது. எனவே, அவர்களுடைய இடர்பாடுகளைக் களையும் பொருட்டு உரிமையியல் நீதிமன்றங்கள் செயல்படாத இடங்களில் 43 குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள், மாவட்ட உரிமையியல்—குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களாக மாற்றப்பட்டுள்ளன. இத்தகைய நீதிமன்றங்கள் உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளை தீர்த்து வைக்கின்றன. மாவட்ட உரிமையியல்—குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் மொத்தம் 63 உள்ளன.

அனைத்து உரிமையியல் நீதிமன்றங்களும் மூன்று வகையான பணியாளரமைப்புகளை, அதாவது, வழக்கமான பணியாளரமைப்பு, நகல் எடுக்கும் பணியாளரமைப்பு மற்றும் செயல்முறை பணியாளரமைப்பு ஆகிய மூன்று பணியாளர் அமைப்புகளை தன்னகத்தே கொண்டுள்ளது.

வெளியூரிலுள்ள மாவட்ட நீதிமன்றங்கள், சார்நிலை நீதிமன்றங்கள், மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் தொடர்பாக 2002-2003 ஆம் ஆண்டிற்கு செலவு ரூபாய் 77,62,90,000/- என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

(e) தொழிலாளர் நல நீதிமன்றங்கள்

இம்மாநிலத்தில் சென்னையில் மூன்று மற்றும் மதுரை, கோயம்புத்தூர், வேலூர், சேலம், திருச்சிராப்பள்ளி, கடலூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் தலா ஒவ்வொன்றுமாக, மொத்தம் 10 தொழிலாளர் நல நீதிமன்றங்கள் செயல்படுகின்றன.

சென்னையில் தொழில் நடுவர்மன்றம் ஒன்றும் உள்ளது. இது மாநிலம் முழுவதும் அதிகார வரம்பு கொண்டது.

தொழிலாளர் நல நீதிமன்றங்கள், தொழில் நடுவர்மன்றங்கள் ஆகியவற்றிற்கு தலைமை தாங்குபவர்கள் மாவட்ட நீதிபதிகள்



2002 மே 3]

பதவித்தரத்தில் செயல்படுவர். தொழிலாளர் நல நீதிமன்றங்கள், இந்நீதிமன்றத்திற்கு அரசு அனுப்பும் தொழிலாளர் குறித்த தகராறுகளைத் தீர்த்து வைக்கும். பாதிக்கப்பட்ட தரப்பினரின் கோரிக்கை மனுக்களைத் தீர்த்து வைக்கவும், கோரிக்கை மனுக்கள் குறித்து விசாரிக்கவும், நீதிமன்ற முகாம்கள் நடத்தப்படுகின்றன.

சென்னை தொழிலாளர் நல நீதிமன்றங்கள், தொழில் நடுவர்மன்றம் ஆகியவற்றைப் பொறுத்தமட்டில் 2002-2003 ஆம் ஆண்டிற்கான செலவு ரூபாய் 1,59,92,000/- என மதிப்பிடப்பட்டுள்ளது.

7. குற்றவியல் நீதிமன்றங்களின் அமைப்பு முறை

(i) சென்னை மாநகரம்

தலைமைப் பெருநகரக் குற்றவியல் நீதிமன்றம், கூடுதல் தலைமை பெருநகர குற்றவியல் நீதிமன்றம் உட்பட சென்னை மாநகரில் 26 பெருநகரக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

XXI மற்றும் XXII ஆகியவற்றின் பெருநகரக் குற்றவியல் நடுவர்கள், இரு நடமாடும் நீதிமன்றங்களுக்கு நீதிபதிகளாக இருக்கின்றனர். தலைமைப் பெருநகரக் குற்றவியல் நீதிபதி மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில் உள்ளார். கூடுதல் தலைமைப் பெருநகரக் குற்றவியல் நடுவர் உரிமையியல் நீதிபதி (இளநிலைப் பிரிவு) பதவித் தரத்தில் உள்ளார். இரண்டாவது, மூன்றாவது, நான்காவது, பத்தாவது, பதினொன்றாவது பெருநகரக் குற்றவியல் நடுவர்கள், சார்நிலை நீதிபதி பதவித் தரத்தில் உள்ளனர்.

ஏனைய அனைத்து பெருநகரக் குற்றவியல் நடுவர்களும் மாவட்ட உரிமையியல் நீதிபதி பதவித்தரத்தில் உள்ளனர். பெருநகரக் குற்றவியல் நடுவர்கள் சென்னை மாநகரிலுள்ள காவல் நிலையங்கள் மீது அதிகார வரம்பைச் செலுத்துகின்றனர்.

மாநகரிலுள்ள பெருநகரக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களைப் பொறுத்தமட்டில், 2002-2003 ஆம் ஆண்டிற்கான செலவு ரூ.3,38,23,000/- என மதிப்பிடப்பட்டுள்ளது.

[2002 மே 3

(ii) வெளியூர்

(அ) மாவட்ட கூடுதல் நீதிபதி மற்றும் தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள்

கூடுதல் மாவட்ட நீதிபதி—தலைமைக் குற்றவியல் நடுவர்கள் 25 பேர்கள் உள்ளனர். இவர்கள் தங்களது மாவட்டங்களிலுள்ள குற்றவியல் சார்நிலை நீதிமன்றங்களை ஆய்வு செய்கின்றனர். அவர்களுடைய நிருவாகப்பணியுடன், 1973ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் விதித்துறைகளின் கீழ், மேல்முறையீடுகள் மாவட்ட அமர்வு நீதிபதிகளுக்குத் தாக்கல் செய்யப்படுகின்றன. இவர்கள், மாவட்டக் கூடுதல் நீதிபதி (ம) தலைமைக் குற்றவியல் நடுவருக்கு அனுப்புகின்ற சில மேல்முறையீடுகளை மேற்படி சட்டக் கோவையின் கீழ் விசாரிப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. அவர்கள் கூடுதல் அமர்வு நீதிபதிகளாகவும் செயல்படுகின்றனர்.

(ஆ) நீதித் துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள்

ஏறக்குறைய அனைத்து வட்டங்களிலும் நீதித்துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் செயல்படுகின்றன. இம்மாநிலத்தில் 179 நீதித்துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் உள்ளன. வெளியூர்களிலுள்ள குற்றவியல் நீதிமன்றங்களுக்கு 2002-2003 ஆம் ஆண்டிற்கான செலவினம் ரூ.33,36,33,000/- என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

**8. தமிழ்நாட்டில் தனி நீதிமன்றங்களின் செயல்பாடு**

**(a) ஆதிதிராவிடர்/பழங்குடியினருக்கு எதிராக இழைக்கப்படும் வன்கொடுமைகள் தொடர்பான வழக்குகளை விசாரணை செய்வதற்கான தனி நீதிமன்றங்கள்**

1989 ஆம் ஆண்டு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு இழைக்கப்படும் (வன்கொடுமைகள் தடுப்புச்) சட்டம் மற்றும் குடிமையியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளை விசாரணை செய்ய பின்வரும் மாவட்டங்களை அதிகார வரம்பாகக் கொண்ட நான்கு கூடுதல் அமர்வு நீதிமன்றங்கள் உள்ளன.



2002 மே 3]

| தொடர் எண் | நீதிமன்றத்தின் பெயர் | நீதிமன்றத்தின் அதிகாரவரம்பு |
|---|---|---|
| 1 | நான்காவது கூடுதல் அமர்வு நீதிமன்றம், மதுரை | (i) மதுரை<br>(ii) திண்டுக்கல்<br>(iii) தேனி<br>(iv) இராமநாதபுரம்<br>(v) சிவகங்கை<br>(vi) விருதுநகர் |
| 2 | இரண்டாவது கூடுதல் அமர்வு நீதிமன்றம், தஞ்சாவூர் | (i) தஞ்சாவூர்<br>(ii) நாகப்பட்டினம்<br>(iii) திருவாரூர் |
| 3 | மூன்றாவது கூடுதல் அமர்வு நீதிமன்றம், திருநெல்வேலி | (i) திருநெல்வேலி<br>(ii) தூத்துக்குடி<br>(iii) கன்னியாகுமரி |
| 4 | நான்காவது கூடுதல் அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி | (i) திருச்சிராப்பள்ளி<br>(ii) கரூர்<br>(iii) பெரம்பலூர்<br>(iv) புதுக்கோட்டை |

எஞ்சிய மாவட்டங்களைப் பொறுத்தமட்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ் வரும் வழக்குகளை சம்பந்தப்பட்ட முதன்மை அமர்வு நீதிமன்றம் விசாரணை செய்யும். மேற்கூறப்பட்ட தனி நீதிமன்றங்களுக்கு 2002-2003 ஆம் ஆண்டிற்கான செலவு ரூ. 54,77,000/- என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

**(b) பொருளாதாரக் குற்றங்களை விசாரணை செய்வதற்கான தனி நீதிமன்றங்கள்**

பொருளாதாரக் குற்றங்களை விசாரணை செய்ய சென்னையில் இரண்டு தனி நீதிமன்றங்களும் அதாவது கூடுதல் தலைமைப் பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் (பொ.கு. I மற்றும் பொ.கு. II) மற்றும் மதுரையில் ஒரு நீதிமன்றமும் ஆக மூன்று தனி நீதிமன்றங்கள் உள்ளன. கூடுதல் தலைமை பெருநகர குற்றவியல் நடுவர் பொ.கு. I, பொ.கு. II மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில் உள்ளனர். மதுரையிலுள்ளத்தலைமைக் குற்றவியல் நடுவர், சார்பு நீதிபதி (முதுநிலைத்தரம்) பதவித்தரத்தில் உள்ளார். 2002-2003 ஆம் ஆண்டிற்கு இந்நீதிமன்றங்களுக்கு ஆகும் செலவு ரூபாய் 41,14,000/- என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

**(c) சந்தனக்கட்டை கடத்தல் தொடர்பான குற்றங்களுக்கான தனி நீதிமன்றங்கள்**

சந்தனக்கட்டை கடத்தல் தொடர்பான குற்றங்களை விசாரிக்க குற்றவியல் நடுவர் பதவித்தரத்தில் வேலூர் மாவட்டத்தில் திருப்பத்தூரில் ஒன்றும், சேலம் மாவட்டத்தில் சேலத்தில் மற்றொன்றுமாக இரண்டு தனி நீதிமன்றங்கள் உள்ளன.

**(d) இரயில்வே நீதிமன்றங்கள்**

இந்திய இரயில்வே சட்டத்தின்கீழ், பயணச்சீட்டு இல்லாமல் பயணம் செய்தல் முதலிய குற்றங்களை விசாரணை செய்வதற்காக எழும்பூர் இரயில் நிலையம் மற்றும் மத்திய இரயில் நிலையம் ஆகியவற்றில் உள்ள குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் அல்லாமல், வேலூர், கடலூர், கோயம்புத்தூர், சேலம், மதுரை, தஞ்சாவூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் இரயில்வே குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் உள்ளன. இரயில்வே குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களுக்கு ஆகும் செலவை நீதித் துறை ஏற்கிறது. இந்நீதிமன்றங்கள் வசூலிக்கும் அபராதத் தொகை மாநில அரசின் வரவுக்கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.

**(e) நடமாடும் நீதிமன்றங்கள்**

போக்குவரத்து தொடர்பான குற்றங்களை விசாரிக்க நான்கு நடமாடும் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. சென்னையில் இரண்டும், கோயம்புத்தூரில் ஒன்றும் மதுரையில் ஒன்றுமாக மொத்தம் நான்கு நடமாடும் நீதிமன்றங்கள் செயல்படுகின்றன. 3-8-1998 நாளிட்ட 1038 எண்ணுள்ள உள்துறை அரசு நிலை ஆணையில் சென்னையில் கூடுதலாக 4 (நான்கு) புதிய நடமாடும் நீதிமன்றங்களை அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது.

**(f) குடும்ப நீதிமன்றங்கள்**

சென்னையில் மூன்றும், மதுரை, கோயம்புத்தூர் மற்றும் சேலம் ஆகிய இடங்களில் தலா ஒன்றுமாக ஆறு குடும்ப நீதிமன்றங்கள் உள்ளன. சென்னையில் கூடுதலாக ஒரு குடும்ப நீதிமன்றமும், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலியில் தலா ஒரு குடும்ப நீதிமன்றமும் முதற்கட்டமாக அமைக்கவும், எஞ்சிய மாவட்ட தலைநகரங்களில் தலா ஒரு குடும்ப நீதிமன்றமும் படிப்படியாக அமைக்கக் கருதப்பட்டுள்ளது. மத்திய அரசு 50 சதவிகித மானியம்



வழங்கினால் இந்நீதிமன்றங்கள் அமைக்கப்படும். குடும்ப நீதிமன்றங்களில், ஆலோசகர்களுக்கு ஓர் அமர்வுக்கு ரூ. 100/- வழங்கப்படுகிறது. குடும்ப நீதிமன்றங்கள் குறித்த செலவு 2002-2003 ஆம் ஆண்டிற்கு ரூ. 1,24,81,000/- என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

**(g) 1987 ஆம் ஆண்டு "தடா" சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட தனி (Designated) நீதிமன்றங்கள்**

நம் நாட்டிலுள்ள பயங்கரவாதிகளின் அச்சுறுத்தலை கட்டுப்படுத்துவதற்காக, 1987 ஆம் ஆண்டு "தடா" சட்டம் இயற்றப்பட்டது. அரசு, உயர் நீதிமன்றத்தின் இசைவுடன், சென்னையில் இரண்டு தனி நீதிமன்றங்களையும் திருநெல்வேலி, கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் தலா ஒரு தனி நீதிமன்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

**(h) மத்திய குற்றப் புலனாய்வுத் துறை வழக்குகளை விசாரிப்பதற்கான தனி நீதிமன்றங்கள்**

இம்மாநிலத்தில், மத்தியக் குற்றப் புலனாய்வுத் துறையின் வழக்குகளை விசாரிப்பதற்காகவென்றே சென்னையில் இரண்டும், மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் ஒன்றுமாக 4 தனி நீதிமன்றங்கள் செயல்படுகின்றன. மத்தியக் குற்றப் புலனாய்வுத் துறையின் வழக்குகளை விசாரணை செய்வதற்கான தனி நீதிமன்றங்களுக்காகும் செலவு 2002-2003 ஆம் ஆண்டிற்கு ரூ. 81,11,000/- என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

**(i) இன்றியமையாப் பொருட்கள் சட்டம் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரணை செய்வதற்கான தனி நீதிமன்றங்கள்**

இன்றியாமையாப் பொருட்கள் சட்டத்தின் கீழ் வருகின்ற வழக்குகளை விசாரணை செய்வதற்காக மாவட்ட அமர்வு நீதிபதி பதவித் தரத்தில் உள்ள நீதிபதி, சென்னை, மதுரை, கோயம்புத்தூர் புதுக்கோட்டை, சேலம், தஞ்சாவூர் ஆகிய ஒவ்வொரு இடத்திலும் ஒரு தனி நீதிமன்றம் வீதம் மொத்தம் ஆறு தனி நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**(j) போதை மருந்துகள் மற்றும் மயக்கப் பொருட்கள் சட்டம் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரணை செய்வதற்கான தனி நீதிமன்றங்கள்**

போதை மருந்துகள் மற்றும் மயக்கப் பொருட்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளை விசாரணை செய்வதற்கென்று சென்னையில் கூடுதல் தனி நீதிமன்றம் ஒன்று இயங்கி வருகிறது. இந்நீதிமன்றத்திற்கு 2002-2003 ஆம் ஆண்டுக்கான செலவு ரூபாய் 15,56,000/- என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

**(k) குண்டு வெடிப்பு வழக்குகளை விசாரணை செய்வதற்கான கூடுதல் அமர்வு நீதிமன்றங்கள்**

குண்டு வெடிப்பு வழக்குகளை விசாரணை செய்வதற்காக, சென்னை மற்றும் கோயம்புத்தூரில் ஒரு கூடுதல் அமர்வு நீதிமன்றம் வீதம் இரண்டு கூடுதல் அமர்வு நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன.

**(l) இனக் கலவரம் தொடர்பான வழக்குகளை விசாரணை செய்வதற்காக மதுரையில் உள்ள அமர்வு நீதிமன்றம்**

இனக் கலவரம் தொடர்பான வழக்குகளை விசாரணை செய்வதற்காக, மதுரையில் அமர்வு நீதிமன்றம் ஒன்று இயங்கி வருகிறது.

**(m) 1908 ஆம் ஆண்டு குற்றவியல் திருத்தச் சட்டத்தின் கீழ் நடுவர் மன்றம்**

1908 ஆம் ஆண்டு இந்தியக் குற்றவியல் திருத்தச் சட்டத்தின்கீழ் (மத்திய சட்டம் 14/1908) சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியின் தலைமையில், நடுவர் மன்றம் ஒன்று, 1999 ஜனவரி திங்களிலிருந்து இயங்கி வருகிறது. இந்த நடுவர் மன்றத்தைப் பொறுத்த வரையில், 2002-2003 ஆம் ஆண்டுக்கான செலவு, ரூபாய் 17,04,000/- என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

**(n) மனித உரிமைகள் நீதிமன்றம்**

மனித உரிமைகள் மீறப்படுவதால் எழும் வழக்குகளை விரைவில் விசாரணை செய்வதற்காக, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு அமர்வு நீதிமன்றத்தை மனித உரிமைகள் நீதிமன்றமாக மாநில அரசு குறிப்பிடவும், மனித உரிமைகள் நீதிமன்றங்களுக்கு தனி அரசு வழக்கு நடத்துநர்களை (குற்றவியல்) நியமிக்கவும், 1993 ஆம் ஆண்டு மனித



உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் (மத்திய சட்டம் 10/1994) வகை செய்கிறது.

மேற்சொன்ன விதிகளுக்கிணங்க, சென்னை உயர் நீதிமன்றத்தின் இசைவுடன், இம்மாநிலத்திலுள்ள அனைத்து கூடுதல் மாவட்ட நீதிமன்றங்கள் மற்றும் தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள், சென்னையிலுள்ள இரண்டாவது கூடுதல் அமர்வு நீதிமன்றம் மற்றும் உதகமண்டலம் அமர்வு நீதிமன்றம் ஆகிய நீதிமன்றங்களை மனித உரிமைகள் நீதிமன்றங்களாக அரசு குறிப்பிட்டுள்ளது. அவை, 29-1-1996ஆம் நாளிலிருந்து இயங்கி வருகின்றன. மாவட்ட நீதிமன்றங்களின் அரசு வழக்கு நடத்துநர்கள் (குற்றவியல்), மனித உரிமைகள் நீதிமன்றத்தில் அரசு வழக்கு நடத்துநர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இருப்பினும், சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய அறிவுரையின் அடிப்படையில், மனித உரிமைகள் மீறப்படுவது குறித்த வழக்குகளை நடத்துவதற்கென்றே மனித உரிமைகள் நீதிமன்றத்தில் தனி அரசு வழக்கு நடத்துநர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

**(o) தமிழ்நாடு வைப்பீட்டாளர்கள் நலன் பாதுகாப்புச் சட்டம் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரணை செய்வதற்கான தனி நீதிமன்றம்**

தமிழ்நாடு 1997 ஆம் ஆண்டு வைப்பீட்டாளர்களின் (நிதி நிறுவனங்களில்) நலன் பாதுகாப்புச் சட்டம் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரணை செய்வதற்கென்றே தனி நீதிமன்றம் ஒன்று சென்னையில் இயங்கி வருகிறது.

**9. சென்னை, அரசு பேராட்சியர் (Administrator-General) மற்றும் பொறுப்புச் சொத்தாட்சியர் (Official Trustee)**

சென்னை, பேராட்சியர் மற்றும் பொறுப்புச் சொத்தாட்சியர், மாவட்ட நீதிபதி பதவித் தரத்தைச் சேர்ந்த ஓர் அதிகாரி ஆவார். உரிமையியல் நீதிபதி (இளநிலைப்பிரிவு) பதவித் தரத்தைச் சேர்ந்த துணை பேராட்சியர் மற்றும் பொறுப்புச் சொத்தாட்சியர் ஆகியோர் அவருக்கு உதவுகின்றனர். உரிய வயதடையாத வாரிசுகளின் சொத்துக்கள், மரணமடைந்த நபர்களின் எஸ்டேட்டுகள் ஆகியவற்றிற்கு பொறுப்பு வகிக்க இவ்விரு அதிகாரிகளும் பொறுப்பு வாய்ந்தவர்கள் ஆவர். அவர்கள் பேராட்சியர் சட்டம், பொறுப்புச் சொத்தாட்சியர் சட்டம் ஆகியவற்றில் கண்டுள்ள விதிமுறைகளுக்கிணங்க, அவர்களுக்கு

ஒதுக்கப்பட்டுள்ள கடமைகளை ஆற்றுகின்றனர். பேராட்சியர், பொறுப்பு சொத்தாட்சியர் ஆகியோர் வகையில் 2002-2003 ஆம் ஆண்டுக்கான செலவு ரூபாய் 39,43,000/- என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

**10. தமிழ் சட்ட இதழ்**

மாதாந்திர தமிழ் சட்ட இதழான தீர்ப்பு திரட்டினை, உயர் நீதிமன்றம் வெளியிட்டு வருகிறது. 2002-2003 ஆம் ஆண்டுக்கான உத்தேசச் செலவு ரூபாய் 18,24,000/- என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. மாதமிருமுறை வெளியாகின்ற இச்சட்ட இதழ், ரூபாய் 32/- என்ற விலையில் (ஒரு இதழின் விலை) வழக்குரைஞர்களுக்கும், பொதுமக்களுக்கும் கிடைக்கும்படி செய்யப்பட்டுள்ளது.

**11. சார்நிலை நீதிமன்றங்களைப் பரவலாக்குதல்**

ஒரே இடத்தில் அதிக எண்ணிக்கையிலான நீதிமன்றங்கள் இருப்பதைத் தவிர்ப்பதற்காகவும் புள்ளி விவரங்களின் அடிப்படையில் தேவையானால், நீதிமன்றங்கள் தற்போது அமைந்துள்ள மையங்களுக்கு சென்று வர இயலாமல் சிரமப்படும் வழக்காடும் பொதுமக்களின் இடர்பாடுகளைக் களையவும், வெளியூர்களிலுள்ள சார்நிலை நீதிமன்றங்கள் பரவலாக்கப்பட்டுள்ளன.

வெளியூர்களிலுள்ள உரிமையியல் நீதிமன்றங்களின் அதிகார வரம்பு, தற்போது, தமிழ்நாடு உரிமையியல் நீதிமன்றச் சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளது. அதைப்போன்றே மாநகர உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகாரவரம்பினை, சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றச் சட்டமும், சிறு வழக்குகள் நீதிமன்றத்தின் அதிகார வரம்பினை, மாகாண சிறு வழக்குகள் நீதிமன்றச் சட்டமும் வரையறுத்துள்ளன.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்களின் அதிகார வரம்பு, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வட்டங்களிலும், துணை நீதிமன்றங்களின் அதிகார வரம்பு, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உரிமையியல் நீதிமன்றங்களிலும் விரிந்துள்ளது. மாவட்ட அமர்வு நீதிமன்றத்தின் நேர்வில், அதன் அதிகார வரம்பு, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வருவாய் மாவட்டங்களில் பரந்திருக்கும். குற்றவியல் நீதிமன்றங்களைப் பொறுத்தவரையில், அதன் அதிகார வரம்பு, குற்றவியல் நடைமுறைச் சடடக் கோவையின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளது. குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களின் அதிகாரவரம்பு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட காவல் நிலையங்கள் வரை விரிந்துள்ளது.



வழக்காடும் பொது மக்களிடமிருந்தோ அல்லது வழக்கறிஞர்கள் சங்கத்திடமிருந்தோ புதிய நீதிமன்றங்கள் அமைப்பது குறித்த விண்ணப்பங்கள் அரசுக்கு வரும்போது, அவை குறித்து சென்னை உயர்நீதிமன்றத்தின் கருத்தினைப் பெற்று, உரிய ஆய்வுக்குப் பின் அந்நீதிமன்றங்கள் அமைக்கப்படுகின்றன.

**12. புதிய தோற்றுவிப்புகளும், புதிய திட்டங்களை நிறைவேற்றுதலும்**

**(அ) நீதிமன்ற நடைமுறைகளை கணினிமயமாக்குதல்**

உயர் நீதிமன்றத்தின் சில முக்கியமான பிரிவுகளிலும் மாண்புமிகு நீதிபதிகளின் இல்லங்களிலும் தனிப்பயன் கணினிகளையும், புறச்சாதனங்களையும் (Peripherals) நிறுவுவதற்காக ரூ.45,72,400/- செலவுக்கு அரசு ஒப்பளித்தது. மேலும், மாண்புமிகு நீதிபதிகளின் இல்லங்களில் VSNL நிறுவனத்தின் மூலமாக இணைய வசதியும் (Internet facilities from VSNL) அதனுடன் நேரடி தொலைபேசி தொடர்பு வசதியும் செய்து கொடுக்க ரூ.5,21,220/- அனுமதித்துள்ளது. அதன் பிறகு, சென்னை உயர்நீதிமன்றப் பதிவாளரின் கருத்துருவின் அடிப்படையில் 50 கணினிகள் மற்றும் அச்சுப் பொறிகள் வாங்க அரசு ரூ.58,06,380/-க்கு ஒப்பளித்துள்ளது. ஆகவே, சென்னை உயர்நீதிமன்ற கணினிமயப் பணிகளுக்காக மொத்தம் ரூ.1.09 கோடி அரசு அனுமதித்துள்ளது. சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றங்கள் மற்றும் மாவட்ட நீதிமன்றங்களின் நடைமுறைகளைக் கணினிமயமாக்குவதோடு அனைத்து நீதிமன்றங்களுக்கும், சிறைகளுக்கும் டிஷ்னெட் (Dishnet) இணைப்பு வசதி செய்து கொடுக்கும் ஒரு கருத்துருவும் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**(ஆ) கட்டடங்கள்**

நிதி நெருக்கடி இருந்த போதிலும், சென்னை உயர்நீதிமன்றத்தின் பல்வேறு பணிகளுக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. சென்னை உயர்நீதிமன்ற கட்டடங்களின் 13 கூடங்களுக்கு ரூ.1.71 கோடி மதிப்பீட்டில் குளிர் சாதன வசதி மற்றும் மின் சக்தி முதலி (Power mains) ஆகிய வசதிகளை ஏற்படுத்த அரசு ஒப்பளித்தது. இப்பணிகளை நிறைவேற்ற 2001-2002 ஆம் ஆண்டுக்கு அரசு ரூ.20,00,000/- அனுமதித்துள்ளது. இதைப்போல, தற்போதுள்ள நீதியன்ற கட்டடங்களுக்கு பழுது நீக்கம் செய்தல், சில அடிப்படை வசதிகளைச் செய்தல் போன்ற பணிகளுக்கான செயற்குறிப்புகளுக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

(இ) நீதித் துறை பயிற்சிக் கழகம்

நீதித் துறை அலுவலர்களுக்கும் மற்றும் புதியதாக நியமனம் செய்யப்பட்ட நீதித் துறை அலுவலர்களுக்கும் பயிற்சி அளிப்பதற்காக தமிழ்நாடு நீதித் துறை பயிற்சிக் கழகம் ஒன்று அமைக்கப்பட்டு அது மல்லிகை அரசு விருந்தினர் மாளிகையில் செயல்பட்டு வருகிறது. இப்பயிற்சிக் கழகத்திற்கு, புதிய கட்டடம் கட்ட அரசு ரூ. 4.50 கோடியை அனுமதித்துள்ளது.

(ஈ) முன்னோடித் திட்டம்

மாவட்டங்களில் நிலுவையாக உள்ள நீதிமன்ற வழக்குகளைக் குறைக்கும் நடவடிக்கையாக முன்னோடித் திட்டம் ஒன்று மாவட்டங்களில் படிப்படியாக அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் அரசு 66 நீதிமன்றங்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது. அனுமதி வழங்கப்பட்ட நீதிமன்றங்களில், 50 நீதிமன்றங்கள் ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றன.

(உ) மகளிர் நீதிமன்றம்

பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை விசாரிப்பதற்கென்றே, சென்னை மற்றும் கோவை மாநகரங்களில் 2002-2003 ஆம் ஆண்டில் இரண்டு மகளிர் நீதிமன்றங்கள் அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. இதற்கு தொடரும் இனச் செலவில் ரூ.15,46,220/- மற்றும் தொடரா இனச் செலவில் ரூ. 10,16,700/- ஆகிய செலவினம் இதில் அடங்கும்.

(ஊ) மதுரையில் உயர்நீதிமன்ற ஆயம் அமைத்தல்

தென் மாவட்டங்களில் மக்களின் நலனுக்காக, மதுரை உலகனேரி கிராமத்தில் சென்னை உயர்நீதிமன்ற ஆயம் ஒன்றை ஏற்படுத்த அரசு ஆணை வழங்கியுள்ளது. முதற்கட்டமாக, இந்நீதிமன்றத்திற்கு கட்டடம் கட்ட அரசு ரூ.44.81 கோடிக்கு நிருவாக ஒப்புதல் வழங்கியுள்ளது.

(எ) நூலகம்

சென்னை உயர்நீதிமன்ற நூலகத்தின் மேம்பாட்டிற்காக ரூ.20,00,000/-ஐ 2001-2002 ஆம் ஆண்டில் அரசு ஒப்பளித்துள்ளது. இந்நூலகத்திற்கு, புதிய நூல்கள் வாங்க அரசு ரூ.15,00,000/- வழங்கியுள்ளது. இவை தவிர, மாவட்ட நீதிமன்றங்களுக்கு நூல்கள் வாங்க ரூ.30,00,000/-ஐ அரசு அனுமதித்துள்ளது.



(ஏ) விரைவு நீதிமன்றங்கள்

பதினோராவது நிதிக்குழு பரிந்துரையின் கீழ் 2000-2005 ஆம் காலகட்டத்தில் தமிழ்நாட்டில் விரைவு நீதிமன்றங்களை அமைக்க மத்திய அரசு ரூ.14.12 கோடியை ஒதுக்கியுள்ளது. இதனைத் தொடர்ந்து, முதற்கட்டமாக 30 விரைவு நீதிமன்றங்களை அமைக்க தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இந்நீதிமன்றங்கள் 2001 நவம்பர் திங்களிலிருந்து செயல்படத் தொடங்கியுள்ளன. மேலும், கூடுதலாக 19 விரைவு நீதிமன்றங்களை அமைக்க அரசு ஆணையிட்டு, அவையும் செயல்படத் துவங்கியுள்ளன. இவ்விரைவு நீதிமன்றங்களில் புதிய பணியாளர்கள் நியமிப்பது உட்பட அனைத்து உள் அமைப்பு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இதனால், மாவட்ட நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ள வழக்குகள் கணிசமாகக் குறையுமென்று நம்பப்படுகிறது.

சென்னை, உயர்நீதிமன்றம் மற்றும் தமிழகத்திலுள்ள அனைத்து சார்நிலை நீதிமன்றங்களில் 1-1-2001 முதல் 31-12-2001 வரையில் தொடுக்கப்பட்ட, முடிக்கப்பட்ட, மற்றும் நிலுவையிலுள்ள வழக்குகளின் எண்ணிக்கை இணைப்பு-4-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

13. தமிழ்நாடு மாநிலச் சட்டப் பணிகள் ஆணைக்குழு

சமுதாயத்தில் நலிந்த பிரிவினர்களுக்குத் தேவைப்படும் சட்ட உதவிகளை இலவசமாக அளிக்க, 1987 ஆம் ஆண்டு, சட்டப் பணிகள் ஆணைக்குழு சட்டம் இயற்றப்பட்டது. மேற்சொன்ன அலுவல்களை ஆற்றுவதற்காக இச்சட்டம், மாநில சட்டப் பணிகள் ஆணைக் குழு, மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழு, வட்ட சட்டப் பணிகள் குழுக்கள் மற்றும் உயர்நீதிமன்ற சட்டப் பணிகள் குழு ஆகியவற்றை செயற்படுத்த வகை செய்கிறது.

மாநிலச் சட்டப்பணிகள் ஆணைக் குழுவின் அலுவல்கள்:

மாநிலச் சட்டப்பணிகள் ஆணைக் குழுவின் அலுவல்கள் பின்வருமாறு:—

(i) மத்திய ஆணைக் குழுவின் கொள்கைகள் மற்றும் உத்தரவுக்குச் செயல்வடிவம் கொடுத்தல்.

(ii) இச்சட்டத்தின்கீழ் வகுக்கப்பட்டுள்ள அளவுகோல்களை நிறைவு செய்பவர்களுக்குச் சட்டப் பணிகள் அளித்தல்.

[2002 மே 3

(iii) மக்கள் நீதிமன்றங்களை (Lok Adalat) நடத்துதல். (உயர் நீதிமன்ற வழக்குகளுக்கான மக்கள் நீதிமன்றங்கள் உள்பட).

(iv) தடுப்பு வகையான மற்றும் உத்திகளுடன் கூடிய சட்ட உதவித் திட்டங்களை மேற்கொள்ளுதல்.

(v) மாநில ஆணைக்குழு, மத்திய அதிகார ஆணைக் குழுவுடன் கலந்தாலோசித்து, விதிமுறைகள் மூலம் நிர்ணயிக்கக்கூடிய பிற அலுவல்களை ஆற்றுதல்.

*மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக் குழுக்கள் மற்றும் வட்ட சட்டப் பணிகள் குழுக்கள் ஆகியவற்றின் அலுவல்கள்:*

ஒவ்வொரு மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக் குழுவின் அலுவல்கள் வருமாறு:—

(i) மாநிலச் சட்டப் பணிகள் ஆணைக் குழு அவ்வப்போது ஒதுக்கக்கூடிய மாவட்டத்தில் உள்ள மாநில ஆணைக் குழுவின் அத்தகைய அலுவல்களை ஆற்றுதல்.

(ii) வட்டச் சட்டப் பணிகள் குழுக்கள் மற்றும் மாவட்டச் சட்டப் பணிகள் ஆணைக் குழுக்களின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்.

(iii) மாவட்டங்களுக்குள் மக்கள் நீதிமன்றங்களை அமைக்க ஏற்பாடு செய்தல்

(iv) விதிமுறைகள் மூலம் மாநில சட்டப் பணிகள் ஆணைக் குழு நிர்ணயிக்கக்கூடிய பிற அலுவல்களை ஆற்றுதல்.

**உயர் நீதிமன்ற சட்டப் பணிக் குழுவின் அலுவல்கள்**

(i) உயர் நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கைகளில் உள்ளவர்களுக்கு சட்டப் பணிகளை அளித்தல்.

(ii) விதிமுறைகள் மூலம் மாநில சட்டப் பணிகள் ஆணைக் குழு நிர்ணயிக்கக்கூடிய பிற அலுவல்களை ஆற்றுதல்.

மாநில மற்றும் மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக் குழுக்கள் மற்றும் உயர் நீதிமன்றம் வட்ட சட்டப் பணிகள் குழுக்கள் ஆகியவை மக்கள் நீதிமன்றங்களை ஏற்படுத்த அதிகாரம் பெற்றுள்ளன.



2002 மே 3]

(அ) யாதொரு நீதிமன்றத்திலும் நிலுவையாக உள்ள யாதொரு வழக்கு, அல்லது

(ஆ) எந்த பகுதிக்காக மக்கள் நீதிமன்றம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறதோ அந்தப் பகுதியின், யாதொரு நீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்குள் வந்து ஆணைக்கென நீதிமன்றத்தின் முன் கொண்டு செல்லப்படாத யாதொரு பிற பிரச்சினைகள்.

இந்த மக்கள் நீதிமன்றத்தின் தீர்ப்பு இறுதியானது. இத்தீர்ப்பினை எதிர்த்து எந்த நீதிமன்றத்திலும் மேல்முறையீடு செய்ய முடியாது.

31-12-2001 ஆம் நாள் வரை நடத்தப்பட்ட மக்கள் நீதிமன்றங்களின் மொத்த எண்ணிக்கை 6,024 ஆகும்.

31-12-2001 ஆம் நாள் வரை தீர்வு காணப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை 1,12,706 ஆகும்.

இவற்றில் 99,635 வழக்குகள் விபத்துகள் சம்பந்தப்பட்டவை ஆகும்.

மக்கள் நீதிமன்றம் முதலிய நீதிமன்றங்களை நடத்தி, இலவச சட்ட உதவியினை மக்களுக்கு மாநிலச் சட்டப் பணிக்குழு அளித்து வருகிறது. இந்த மாநிலச் சட்டப் பணிக்குழு சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் ஒரு பழையக் கட்டடத்தில் தற்பொழுது இயங்கி வருகிறது. இந்த மாநிலச் சட்டப் பணிகள் குழுவிற்கான புதிய கட்டடத்தினை சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் கட்டுவதற்கு அரசு ரூ.1.85 கோடி அனுமதித்துள்ளது.

ஊரகப் பகுதிகளில் காலமுறைப்படி சட்ட உதவி-சட்ட அறிவு விளக்க முகாம்கள் நடந்தப்படுகின்றன.

**பெண்களுக்கான சட்ட உதவி மையம்**

சமுதாயத்தில் பெண்கள் நலிந்த பிரிவினராக இருப்பதால், இம்மாநிலத்திலுள்ள பெண்களுக்கு ஏற்படும் திருமணப் பிரச்சினைகள் மற்றும் ஏனைய பிரச்சினைகளில் பெண்களுக்காக இயங்கும் இலவச சட்ட உதவி மையம் மூலம் தீர்வு காண்பதற்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. தற்சமயம், இம்மாநிலம் முழுவதும் 42 இத்தகைய மையங்கள் இயங்கி வருகின்றன.

**14. குற்ற வழக்குத் தொடர்வு இயக்ககம்**

குற்ற வழக்குத் தொடர்வு இயக்ககம் குற்றவியல் வழக்குகளை திறம்பட நடத்தி நிர்வகிப்பதுடன், மாநிலம் முழுவதிலுமுள்ள பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள், குற்றவியல் நீதிமன்றங்கள் மற்றும் தலைமை நீதித் துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் ஆகியவற்றில் பணியாற்றும் சட்ட அலுவலர்கள் மற்றும் குற்றவியல் வழக்குரைஞர்கள் ஆகியோரின் பணிகளைக் கண்காணிக்கிறது. குற்ற வழக்கு தொடர்பு இயக்குநர் இவ்வியக்ககத்தின் தலைவர் ஆவார். இவ்வியக்ககத்தின் கீழ் இயங்கும் பிரிவுத் தலைவர்கள் இவருக்கு நிருவாகத்தில் உதவி புரிகின்றனர். கூடுதல் காவல் துறை இயக்குநர் பதவித் தரத்திலுள்ள இந்தியக் காவல் பணி அலுவலர் ஒருவர், குற்ற வழக்கு தொடர்வு இயக்குநர் பதவிக்கு நியமிக்கப்படுகிறார்.

இவ்வியக்ககத்தின் அடிப்படைத் தேவைகளை அரசு நிறைவேற்றுகிறது. 2001-2002 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தில் இவ்வியக்ககத்தின் பிரிவுகளுக்கு மரத் தளவாடங்கள் வாங்க அரசு ரூ.4 இலட்சம் அனுமதித்துள்ளது. இத்துறையின் குற்ற வழக்குத் தொடர்பு துணை இயக்குநர்களுக்கு 11 ஈப்புகள் (Jeeps) வாங்க 2001-ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் ரூ.42.27 இலட்சத்தை அரசு ஒப்பளித்துள்ளது.

**15. தமிழ்நாட்டில் சட்ட அலுவலர்களின் அமைப்பு முறை**

அரசு சம்பந்தப்பட்ட குடிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளை நீதிமன்றத்தில் திறம்பட வாதிடும் நோக்கத்துடன், குறிப்பிட்ட கால அடிப்படையிலும், கால ஏற்ற முறைச் சம்பள வீத அடிப்படையிலும் சட்ட அலுவலர்கள் அரசால் நியமிக்கப்படுகின்றனர். அரசு வழக்குகளில் தீர்ப்புகளைப் பெற இச்சட்ட அலுவலர்களின் பணி தேவைப்படுகிறது. இது போன்ற சட்ட அலுவலர்களின் பதவித்தர விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:-



**சட்ட அலுவலர்கள்**

**மாநில அரசு தலைமை வழக்குரைஞர்**

**கூடுதல் அரசு தலைமை வழக்குரைஞர்**

| சென்னை உரிமையியல் | வெளியூர் உரிமையியல் |
|---|---|
| 1. அரசு உரிமையியல் வழக்குரைஞர் | அரசு உரிமையியல் வழக்குரைஞர் |
| 2. அரசு உரிமையியல் கூடுதல் வழக்குரைஞர்கள் | அரசு உரிமையியல் கூடுதல் வழக்குரைஞர்கள் |
| 3. அரசு உரிமையியல் தனி வழக்குரைஞர்கள் | அரசுப் பணிகளை ஆற்றும் அரசு உரிமையியல் வழக்குரைஞர்கள் |
| 4. அரசு வழக்குரைஞர்கள் | |
| குற்றவியல் | குற்றவியல் |
| 1. அரசு குற்றவியல் வழக்குரைஞர் | அரசு குற்றவியல் வழக்குரைஞர் |
| 2. அரசு குற்றவியல் கூடுதல் வழக்குரைஞர்கள் | அரசு குற்றவியல் கூடுதல் வழக்குரைஞர்கள் |
| 3. அரசு வழக்குரைஞர்கள் | சிறப்பு அரசு வழக்குரைஞர்கள் |
| 4. மாநகரக் குற்றவியல் வழக்குரைஞர்கள் | அரசு குற்றவியல் உதவி வழக்குரைஞர்கள், நிலை-I/நிலை-II |
| 5. கூடுதல் குற்றவியல் வழக்குரைஞர்கள் | |
| 6. அரசு குற்றவியல் சிறப்பு வழக்குரைஞர்கள் | |
| 7. அரசு குற்றவியல் உதவி வழக்குரைஞர்கள் நிலை-I/நிலை-II | |

[2002 மே 3

சட்ட அலுவலர்களில், மாவட்டங்களிலுள்ள தலைமை நீதித் துறை குற்றவியல் நீதிமன்றங்கள், குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் மற்றும் சென்னைப் பெருநகர் தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், சென்னைப் பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள், கூடுதல் தலைமை பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் ஆகியவற்றிலுள்ள அரசு கூடுதல் வழக்குரைஞர்கள் மற்றும் அரசு உதவி வழக்குரைஞர்கள் மட்டுமே நிரந்தர அடிப்படையிலான அரசுப் பணியாளர்கள் ஆவர். எஞ்சியுள்ள சட்ட அலுவலர்கள் ஒரு குறிப்பிட்ட பணிக்கால அடிப்படையில் (Tenure) நியமிக்கப்படுகின்றனர்.

புதுடில்லி, உச்ச நீதிமன்றத்தின் முன்னர் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளைப் பொறுத்தமட்டில், அரசு தரப்பில் வாதிட 2 வழக்குரைஞர்கள் இருக்கின்றனர்.

**16. மத்திய அரசு நிதி உதவியுடன் செயல்படும் திட்டங்கள் மற்றும் நீதிமன்றங்களில் தகவல் தொழில்நுட்பத்தை மேம்படுத்துதல்**

நீதிமன்றக் கட்டடங்கள் கட்டுவதற்கும், உயர் நீதிமன்றங்கள், அதன்கீழ் வரும் சார்நிலை நீதிமன்றங்கள் ஆகியவற்றின் நீதிபதிகள்/நீதித் துறை அதிகாரிகள் ஆகியோருக்கு குடியிருப்புகள் கட்டுவதற்குமான மத்திய அரசு நிதியுதவியுடன் செயல்படும் திட்டம், 1993 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றது. திட்ட ஆணையத்தால் ஏற்பளிக்கப்பட்ட இத்திட்டம், இது தொடர்பாக இந்த ஆணையம் ஏற்பளித்த அளவுகோலின் அடிப்படையில், மாநிலங்களுக்கு மத்திய அரசு தன்னுடைய பங்குத் தொகையை ஒதுக்கீடு செய்கிறது. மத்திய அரசு வழங்கும் பங்குத் தொகைக்குச் சமமாக, மாநில அரசுகளும் தங்களுடைய பங்குத் தொகைகளை வழங்குமாறு கோரப்படுகின்றன. 31-12-2001 ஆம் நாள் நிலவரப்படி இத்திட்டத்தின்கீழ், ரூ.116.44 கோடி செலவிலான திட்டங்களுக்கு நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்தொகையில், மாநில அரசு ரூ.76.20 கோடி செலவு செய்துள்ளது. மத்திய அரசு நிதி உதவியாக ரூ.31.79 கோடி வழங்கியுள்ளது.



2002 மே 3]

நீதிமன்றங்களில், தகவல் தொழில் நுட்ப வசதியை மேம்படுத்தும் நோக்குடன் உயர்நீதிமன்றத்தின் சட்ட உதவி மையங்கள்/விசாரணை மையங்கள் அமைப்பது உட்பட, கணினிமயமாக்குவதற்கென ரூ.5 கோடி ஒதுக்கீடு செய்ய மத்திய அரசை இவ்வரசு கேட்டுக் கொண்டுள்ளது.

**17. மாவட்ட நீதிபதிகள் தேர்வுக்கான விதிகளுக்குத் திருத்தம்**

22-3-2002 நாளிட்ட 260 எண்ணுள்ள உள் (நீ.ம.1அ) துறை அரசாணையில் மாவட்ட நீதிபதிகள் தேர்வு செய்வதற்கான விதிகளுக்குத் திருத்தம் வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி மாவட்ட நீதிபதிகள் தேர்வில் சென்னை உயர் நீதிமன்றத்தால் நடத்தப்படும் எழுத்துத் தேர்வில் 75 சதவீத மதிப்பெண்களும், நேர்முகத் தேர்வில் 25 சதவீத மதிப்பெண்களும் விண்ணப்பதாரர்கள் பெற வேண்டும். நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுபவரும், பதவி உயர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்படுபவரும் 1:2 என்ற விகிதத்தில் இப்பதவிக்குத் தேர்வு செய்யப்பட வேண்டும். இப்பதவிக்கான மொத்த காலியிடங்களில் மூன்றில் ஒரு பங்கு மகளிர்க்கு ஒதுக்கப்பட வேண்டும்.

**18. முடிவுரை**

நீதித் துறைக்கு சென்ற நிதியாண்டில் (2001-2002 ஆம் ஆண்டு) ரூ.15,145.33 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இம்மாநிலத்தின் குறைந்தபட்ச வருவாயில் நீதித் துறையின் அனைத்துத் தேவைகளை நிறைவு செய்யவும், நீதிமன்ற உள்ளமைப்புகளில் தேவையான வசதிகளைச் செய்து கொடுப்பதற்கும், நீதித் துறை சுதந்திரமாகச் செயல்பட உகந்த சூழ்நிலையை ஏற்படுத்தவும் அரசு சீரிய முறையில் பணியாற்றி வருகின்றது.

[2002 மே 3

# இணைப்பு-1

**சென்னை மாநகரில் செயல்பட்டு வரும் நீதிமன்றங்கள், நடுவர் மன்றங்களின் எண்ணிக்கை பற்றிய விவரங்கள்**

| தொடர் எண் | நீதிமன்றங்கள்/ நடுவர் மன்றங்களின் பெயர் | மாவட்ட நீதிபதி பதவித் தரம் | விரைவு நீதி மன்றங் கள் | சார்நிலை நீதிபதி பதவித் தரம் | மாவட்ட உரிமை யியல் மற்றும் குற்ற வியல் நடுவர் பதவித் தரம் |
|---|---|---|---|---|---|
| 1. | மாநகர் உரிமையியல் நீதிமன்றம் | 13 | 5 | 18 | - |
| 2. | சிறு வழக்குகள் நீதிமன்றம் | 1 | - | 8 | 7 |
| 3. | பெருநகர் தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் | 3 | - | 6 | 17 |
| 4 | தொழிலாளர் நீதிமன்றங்கள் | 3 | - | - | - |
| 5 | தொழில் நடுவர் மன்றம் | 1 | - | - | - |
| 6 | இன்றியமையாப் பொருள்கள் சட்டத்தின் கீழ் தனி நீதிமன்றம் | 1 | - | - | - |
| 7 | தனியார் கல்லூரி மேல்முறையீட்டு நடுவர் மன்றம் | 1 | - | - | - |
| 8 | விற்பனை வரி மேல்முறையீட்டு நடுவர் மன்றம் | 1 | - | 1 | - |



2002 மே 3]

| தொடர் எண் | நீதிமன்றங்கள்/ நடுவர் மன்றங்களின் பெயர் | மாவட்ட நீதிபதி பதவித் தரம் | விரைவு நீதி மன்றங் கள் | சார்நிலை நீதிபதி பதவித் தரம் | மாவட்ட உரிமை யியல் மற்றும் குற்ற வியல் நடுவர் பதவித் தரம் |
|---|---|---|---|---|---|
| 9 | அரசு போக்குவரத்து மேல்முறையீட்டு நடுவர் மன்றம் | 1 | - | - | - |
| 10 | பேராட்சியர்- பொறுப்பு சொத்தாட்சியர் | 1 | - | - | 1 |
| 11 | NDPS சட்டத்தின் கீழ் கூடுதல் தனி நீதிமன்றம் | 1 | - | - | - |
| 12. | தமிழ்நாடு 1997 ஆம் ஆண்டு வைப்பீட்டுதாரர்களின் நலன் பாதுகாப்பு (நிதி நிறுவனங்கள்) சட்டத்தின் கீழ் தனி நீதிமன்றம் | 1 | - | - | - |
| 13. | குண்டுவெடிப்பு வழக்குகளை விசாரிப்பதற்கான அமர்வு நீதிமன்றம் | 1 | - | - | - |
| 14 | குடும்பநல நீதிமன்றங்கள் | 3 | - | - | - |
| | மொத்தம் | 32 | 5 | 33 | 25 |

[2002 மே 3

# இணைப்பு-2

தமிழ்நாட்டின் மாவட்டங்களில் இயங்கி வரும் நீதிமன்றங்கள் மற்றும் நடுவர் மன்றங்களின் எண்ணிக்கை பற்றிய விவரங்கள்

| மாவட்டங்கள் | மாவட்ட நீதிமன்றங்கள் | குடியுரிமை பாதுகாப்புச் சட்ட தனி நீதிமன்றங்கள் | கூடுதல் மாவட்ட நீதிபதி மற்றும் தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் | விரைவு நீதிமன்றங்கள் | தொழிலாளர் நீதிமன்றங்கள் | இன்றியமையாப் பொருட்கள் சட்ட வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றங்கள் | மத்திய புலனாய்வுத்துறை வழக்குகள் விசாரிக்கும் நீதிமன்றங்கள் | குடும்ப நீதிமன்றங்கள் | சார்பு நீதிமன்றங்கள் | மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் | மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் | குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| செங்கல்பட்டு | 1 | - | 1 | 5 | - | - | - | - | 7 | 10 | 5 | 13 |
| கோயம்புத்தூர் | 2 | 1**** | 1 | 5 | 1 | 1 | 1 | 1 | 9** | 7 | 4 | 14 |
| கடலூர் | 1 | - | 1 | 3 | 1 | - | - | - | 6 | 6 | 4 | 8 |
| தருமபுரி | 2 | - | 2 | 1 | - | - | - | - | 4 | 3 | 6 | 5 |
| திண்டுக்கல் | 1 | - | 1 | 1 | - | - | - | - | 3 | 5 | 2 | 5 |
| ஈரோடு | 2 | - | 1 | 4 | - | - | - | - | 8 | 10 | 2 | 9 |
| கன்னியாகுமரி | 1 | - | 1 | - | - | - | - | - | 5 | 9 | 1 | 7 |
| கரூர் | 1 | - | 1 | - | - | - | - | - | 2 | 3 | - | 4 |
| மதுரை | 2 | 2*** | 1 | 4 | 1 | 1 | 1 | 1 | 9** | 7 | 3 | 12 |
| நாகப்பட்டினம் | 1 | - | 1 | - | - | - | - | - | 5** | 8 | - | 9 |
| நாமக்கல் | 1 | - | 1 | - | - | - | - | - | - | - | - | - |
| நீலகிரி | 1 | - | - | - | - | - | - | - | 1 | 1 | 3 | 1 |
| பெரம்பலூர் | 1 | - | 1 | 1 | - | - | - | - | 1 | 4 | - | 3 |
| புதுக்கோட்டை | 1 | - | 1 | 1 | - | 1 | - | - | 1 | 3 | 2 | 3 |
| இராமநாதபுரம் | 1 | - | 1 | 1 | - | - | - | - | 2 | 3 | 4 | 3 |
| சேலம் | 3 | - | 1 | 3 | 1 | 1 | - | 1 | 7* | 10 | 2 | 16 |
| சிவகங்கை | 1 | - | 1 | - | - | - | - | - | 2 | 4 | 4 | 3 |



2002 மே 3]

| மாவட்டங்கள் | மாவட்ட நீதிமன்றங்கள் | குடியுரிமை பாதுகாப்புச் சட்ட தனி நீதிமன்றங்கள் | கூடுதல் மாவட்ட நீதிபதி மற்றும் தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் | விரைவு நீதிமன்றங்கள் | தொழிலாளர் நீதிமன்றங்கள் | இன்றியமையாப் பொருட்கள் சட்ட வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றங்கள் | மத்திய புலனாய்வுத்துறை வழக்குகள் விசாரிக்கும் நீதிமன்றங்கள் | குடும்ப நீதிமன்றங்கள் | சார்பு நீதிமன்றங்கள் | மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் | மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் | குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| தஞ்சாவூர் | 1 | 1 | 1 | 2 | - | 1 | - | - | 6 | 8 | 2 | 6 |
| தூத்துக்குடி | 1 | - | 1 | 2 | - | - | - | - | 2 | 6 | 2 | 6 |
| திருச்சிராப்பள்ளி | 1 | 1 | 1 | 2 | 1 | - | - | - | 5* | 7 | 1 | 9 |
| திருநெல்வேலி | 2 | 1 | 1 | 2 | 1 | - | - | - | 8* | 11 | 4 | 9 |
| திருவண்ணாமலை | 1 | - | 1 | - | - | - | - | - | 4 | 7 | 3 | 5 |
| வேலூர் | 1 | - | 1 | 3 | 1 | - | - | - | 4 | 8 | 4 | 14 |
| விழுப்புரம் | 1 | - | 1 | 3 | - | - | - | - | 6 | 15 | 2 | 9 |
| விருதுநகர் | 1 | - | 1 | 1 | - | - | - | - | 4 | 3 | 3 | 6 |
| மொத்தம் | 32 | 6 | 25 | 44 | 7 | 5 | 2 | 3 | 111 | 158 | 63 | 179 |

*மாநகராட்சி வரிவிதிப்பு மேல் முறையீட்டு நடுவர் மன்றத் தலைவர் பதவி ஒன்று உட்பட

** மாநகராட்சி வரிவிதிப்பு மேல்முறையீட்டு நடுவர் மன்றத் தலைவர் பதவி ஒன்று விற்பனை வரி மேல்முறையீட்டு நடுவர் நீதித்துறை உறுப்பினர் பதவி ஒன்று ஆகியவை உட்பட.

*** இனக்கலவரங்கள் தொடர்பான வழக்குகளை விசாரணை செய்வதற்குரிய அமர்வு நீதிமன்றம் ஒன்று உட்பட.

**** குண்டு வெடிப்பு வழக்குகளை விசாரணை செய்வதற்குரிய அமர்வு நீதிமன்றம்.

## இணைப்பு - 3

"மானியக் கோரிக்கை எண் 3 - 2014. நீதி நிருவாகம்" என்பதன் கீழ், 2000-2001 ஆம் ஆண்டில் ஏற்பட்ட செலவு மற்றும் கிடைத்த வருவாய், 2001-2002 ஆம் ஆண்டிற்குரிய திருத்த மதிப்பீடுகள், 2002-2003 ஆம் ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:-

### செலவு

| ஆண்டு | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 2000-2001 | 1,46,35,89 |
| 2001-2002 | 1,51,45,33 |
| 2002-2003 (வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள்) | 1,71,39,68 |

### வரவுகள்

### 0070 ஏனைய நிருவாகப் பணி-01

### நீதி நிருவாகம்

| ஆண்டு | தொகை (ரூபாய் இலட்சத்தில்) | 0030 முத்திரைத்தாள் நீதித்துறை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 2000-2001 | 2396.41 | 42,24.22 |
| 2001-2002 | 2863.75 | 59,35.03 |
| 2002-2003 (வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள்) | 2866.32 | 2,12,32.02 |





## இணைப்பு-4 (உரிமையியல்)

சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் தமிழகத்திலுள்ள அனைத்து சார்நிலை நீதிமன்றங்களில் 1-1-2001 முதல் 31-12-2001 வரையில் தொடுக்கப்பட்ட, முடிக்கப்பட்ட மற்றும் நிலுவையிலுள்ள உரிமையியல் வழக்குகளின் எண்ணிக்கையினைக் காட்டும் அட்டவணை

| வரிசை எண் | நீதிமன்றத்தின் பெயர் | வருடத் தொடக்கத்தில் நிலுவையில் இருந்த வழக்குகள் | தொடுக்கப்பட்ட மற்றும் பெறப்பட்ட வழக்குகள் | முடிக்கப் பட இருந்த வழக்குகள் | முடிக்கப் பட்ட வழக்குகள் | வருட இறுதியில் நிலுவையில் இருந்த வழக்குகள் |
|---|---|---|---|---|---|---|
| 1. | உயர் நீதிமன்றம் சென்னை | 313427 | 116673 | 430100 | 115538 | 314562 |
| 2. | சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றம் | 67181 | 47045 | 114226 | 22279 | 91947 |
| 3. | சென்னை சிறு வழக்குகள் நீதிமன்றம் | 44323 | 46743 | 91066 | 43966 | 47100 |
| 4. | மாவட்ட நீதிமன்றங்கள் | 21798 | 53090 | 74888 | 58022 | 16866 |
| 5. | முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி மற்றும் தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் | 10423 | 15696 | 26119 | 14055 | 12064 |
| 6. | சார்பு நீதிமன்றங்கள் | 191262 | 151228 | 342490 | 159720 | 182770 |
| 7 | மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் | 333054 | 145954 | 479008 | 299755 | 179253 |
| | மொத்தம் | **981468** | **576429** | **1557897** | **713335** | **844562** |

## (குற்றவியல்)

## இணைப்பு-4

சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் தமிழகத்திலுள்ள அனைத்து சார்நிலை நீதிமன்றங்களில் **1-1-2001** முதல் **31-12-2001** வரையில் தொடுக்கப்பட்ட, முடிக்கப்பட்ட மற்றும் நிலுவையிலுள்ள குற்றவியல் வழக்குகளின் எண்ணிக்கையினைக் காட்டும் அட்டவணை

| வரிசை எண் | நீதிமன்றத்தின் பெயர் | வருடத் தொடக்கத்தில் நிலுவையில் இருந்த வழக்குகள் | தொடுக்கப் பட்ட மற்றும் பெறப்பட்ட வழக்குகள் | முடிக்கப் பட இருந்த வழக்குகள் | முடிக்கப் பட்ட வழக்குகள் | வருட இறுதியில் நிலுவையில் இருந்த வழக்குகள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | சென்னை உயர்நீதிமன்றம் | 36679 | 42225 | 78904 | 45648 | 33256 |
| 2 | அமர்வு நீதிமன்றங்கள் | 8378 | 13524 | 21902 | 7785 | 14117 |
| 3 | கூடுதல் மாவட்ட நீதிபதி மற்றும் தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் | 133484 | 490613 | 624097 | 420758 | 203339 |
| 4 | சென்னை பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் | 161807 | 212989 | 374796 | 295367 | 79429 |
| | மொத்தம் | **340348** | **759351** | **1099699** | **769558** | **330141** |





## இணைப்பு IV

[243 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

## கோரிக்கை எண் 32—சட்டத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு 2002-2003

**முன்னுரை**

சட்டம் மனிதனுக்காகவே. மக்களாட்சியில், மக்களின் பிரதிநிதிகளால் செய்யப்பட்ட சட்டம், தங்களுடைய சட்டம் என்று மக்கள் உணருதல் வேண்டும். அது மக்கள் சமுதாயத்தின் நன்மைக்காகவே சரியான முறையிலும், பயனுள்ளதாகவும் சமத்துவ நிலையிலும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பதனையும் மக்கள் உணருதல் வேண்டும். அரசின் வாயிலாக நீதி மக்களுக்கு வழங்கப்படுகிறது. இவற்றைக் கவனத்திற்கொண்டு, சட்டத் துறையானது, பல்வேறு சட்டங்களை இயற்றுவதன் மூலம் சமுதாயத்தின் மேம்பாட்டிற்கு கணிசமாக பாடுபடுகிறது. இந்தத் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பானது, இதுகாறும் உள்துறையின் செயற்பாட்டில் உள்ள "நீதி நிருவாகம்" என்ற கொள்கை விளக்கக் குறிப்போடு சேர்த்து அளிக்கப்பட்டு வந்தது. இந்த ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பானது இத்துறையினரால் தயாரிக்கப்பட்டு, சட்டப் பேரவையின் முன் வைக்கப்படுகிறது.

சட்டத் துறையின் முக்கிய பணி ஆலோசனை வழங்கும் தன்மையானது. சட்டத் துறையானது தலைமைச் செயலகத்தின் அனைத்துத் துறைகளில் இருந்தும் கேட்கப்படுகிற சட்டப் பிரச்சினை தொடர்பாக ஆலோசனை வழங்கி வருகிறது. சிக்கலான சட்ட நுணுக்கங்கள் தொடர்பாக, அவற்றைத் தெளிவு செய்வதும் அவற்றிற்குத் தொடர்பான சட்டக் கருத்துகளையும் தீர்மானிக்கப்பட்ட தீர்ப்பு வழிச்சட்டங்களையும் (Case Laws) எடுத்துரைத்தலும் அதன் பணியாகும். சட்டத் துறையின் மற்றொரு முக்கியப் பணியானது அரசின் கொள்கைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான சட்டங்களை இயற்றுதல். அந்நோக்கில் அதனைச் சட்ட வரைவாக்கிச் சட்ட வடிவம் கொடுத்தல் இதன் பணியாகும். தொடர்புடைய துறையுடனும் சட்டப் பேரவைச் செயலகத்துடனும் சட்டத் துறை ஒருங்கிணைந்து இப்பணியினை ஆற்றுகிறது.

சட்டப் பேரவையில் சட்ட வரைவை அறிமுகம் செய்து, அதற்கு பேரவை ஒப்புதல் அளித்த பின்னர் ஆளுநரின் அல்லது குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்று சட்டமாகும் வரையில் சட்டத் துறையின் பணி தொடர்கிறது. சட்டப் பேரவை ஒத்திவைக்கப்பட்டு, அமர்வில் இல்லாத காலங்களிலும் அரசமைப்பின் 213-ஆவது உறுப்பின்படி அவசரச் சட்டம் வாயிலாக சட்டங்களை அவசரத் தேவைக்கேற்ப உருவாக்குகிறது. அவசரச் சட்டத்தை வெளியிடுவதற்கான அதன் தகுதிப்பாடுகளை சட்ட நுணுக்கங்கள் பற்றிய அதன் குறிப்புகளை அளிப்பதோடு அல்லாது, அவசரச் சட்டத்திற்கான முன்வரைவுகளையும் அதன் நோக்கத்திற்கேற்ப தயாரித்து அதை பிரகடனப்படுத்தும் வரையில் அதன் பணி தொடர்கிறது.

சட்ட விதிகள், அறிவிக்கைகள், ஆணைகள் மற்றும் மாநில அரசு ஒரு தரப்பினராக இருக்கிற ஆவணங்கள் ஆகியவற்றையும் அவற்றின் சட்ட வகைமுறைகள் தொடர்பாகவும் சட்டத்துறை கூர்ந்தாய்வு செய்து அறுதி செய்கிறது.

நீதிமன்றங்களின் முன்பும், தீர்ப்பாயங்களின் முன்பும் உள்ள அரசு தரப்பினராக உள்ள அனைத்து வழக்குகளிலும், உறுதிமொழி ஆவணங்களின் வரைவும், எதிர் உறுதிமொழி ஆவணங்களின் வரைவும், அவற்றிற்கான வரைவு மறுமொழிகளும் சட்டத் துறையால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு அறுதி செய்யப்படுகின்றன.

மேற்சொல்லப்பட்ட கடமைகளுடன் பின்வருவன தொடர்பான நிர்வாகப் பணிகளையும் சட்டத் துறை செய்து வருகிறது.

1) சான்றுறுதி அலுவலர்களின் அமர்த்துகையும், நீக்கமும்.

2) மாநில ஆட்சி மொழிப்பிரிவு

3) மாநிலச் சட்ட ஆணையம்

4) சட்டக் கல்வி

5) தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்

6) சட்டங்களையும், அவசரச் சட்டங்களையும் மறுபடியும் வெளியிடுதல் மற்றும் சட்டங்களை மீண்டும் அச்சிடுதலும் தொகுத்தலும்.

**சான்றுறுதி அலுவலர்களின் அமர்த்துகையும், நீக்கமும்**

1952 ஆம் ஆண்டு சான்றுறுதி அலுவலர்கள் சட்டத்தின்படி முறையாவணங்களைச் சான்றொப்பமிடும் நோக்கத்திற்காகவும் மற்றும்





அலுவலரின் ஏற்பளிக்கப்பட்ட செயல்களுக்காகவும் சான்றுறுதி அலுவலர் அமர்த்தப்படுவர். சான்றுறுதி அலுவலர்கள் சான்றுறுதி அலுவலர் அமர்த்தப்படுவர். சான்றுறுதி அலுவலர்கள் நியமிக்கப்பட வேண்டிய தேவை ஏற்படும்போதெல்லாம் வழக்கறிஞர் தொழிலில் போதிய பயிற்சி அனுபவம் பெற்றவர்களைச் சான்றுறுதி அலுவலர்களாக அமர்த்துமாறு மாவட்ட நீதிபதிகள் வழக்குரைஞரின் பெயர்களை அரசின் சட்டத் துறைக்கு பரிந்துரை செய்வர். சட்டத் துறை மாவட்ட நீதிபதியின் பரிந்துரைகளைக் கவனத்தில் கொண்டு சட்டத் துறை செயலாளரின் கையொப்பத்துடனான இலச்சினையுடன் வழக்குரைஞர்களை சான்றுறுதி அலுவலராக அவர்கள் தொழிலாற்றுவதற்கான சாற்றுதியினை அளிப்பார். இவர்களின் தவறான நடத்தை அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படும்போது, சட்டத் துறை உடனடியாக நடவடிக்கை எடுத்து, அவர்களது பெயர்களைப் பட்டியலிலிருந்து நீக்கும். 31-3-2002 வரையுள்ள கணக்குப்படி இம்மாநிலத்தில் ஏறக்குறைய 1500 சான்றுறுதி அலுவலர்கள் உள்ளனர்.

**மாநில ஆட்சிமொழி (சட்டப்) பிரிவு**

1965 ஆம் ஆண்டு முதன்முதலாக அமைக்கப்பட்டு மாநில சட்ட ஆட்சிமொழி ஆணையம் சட்டச் சொற்களை அறுதிச் செய்து சட்டச்சொல் அகராதி வெளியிடுவதற்காகவும், மையச் சட்டங்களையும் மாநிலச் சட்டங்களையும், அவசரச் சட்டங்களையும் அவற்றின்படி செய்யப்படும் விதிகள் மற்றும் அறிவிக்கைகள் ஆகிய அனைத்தையும் தமிழில் மொழிபெயர்ப்பதற்காகவும் அரசால் அவ்வப்போது ஒப்படைக்கப்படலாகும் பிற பணி எதனையும் மேற்கொள்வதற்காகவும் அமைக்கப்பட்டது. இந்த ஆணையம் 1989 ஆம் ஆண்டில் மீண்டும் அமைத்துருவாக்கப்பட்டது.

2. மாநில சட்ட ஆட்சி மொழி ஆணையம், சட்டத் துறைச் செயலாளரின் ஒட்டுமொத்த மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டின் கீழும், சட்டத் துறை கூடுதல் செயலரின் தலைமையிலும் சட்டத் துறையின் ஒரு பிரிவாக 1992 ஆம் ஆண்டு சட்டத் துறையுடன் சேர்க்கப்பட்டது. இது மையச்சட்டங்களையும், மாநிலச் சட்டங்களையும் மொழிபெயர்த்து வருகிறது.

3. மைய மற்றும் மாநிலச் சட்டங்களின் மொழிபெயர்ப்பினைத் துரிதப்படுத்துவதில் அரசு அக்கறை கொண்டிருப்பதன் காரணமாக சட்டக் கல்லூரி ஆசிரியர்களின் பணியுடன் கூடுதல் பணியாக அவர்களிடம் மொழிபெயர்ப்புப் பணியினையும் அளிக்க அரசு முன்

வந்துள்ளது. சட்டக் கல்லூரி ஆசிரியர்களின் மொழி பெயர்ப்புப் பணிக்கு கூடுதல் ஊதியம் வழங்கப்பட உள்ளது. சட்டக் கல்லூரி ஆசிரியர்களால் செய்யப்பட்ட மொழி பெயர்ப்பு சட்டத் துறையின் அரசுக் கூடுதல் செயலாளர் மற்றும் சட்ட ஆட்சிமொழிப் பிரிவில் அனுபவம் மிக்க அலுவலர்களால் கூர்ந்தாய்வு செய்யப்படும். மையச் சட்டங்களை மொழி பெயர்த்து அச்சிடும் செலவுகளை மைய அரசு ஏற்கிறது. மாநிலச் சட்டங்களை மொழிபெயர்த்து அச்சிடும் செலவினை மாநில அரசு மேற்கொள்கிறது.

**மாநில சட்ட ஆணையம்**

மாநில சட்ட ஆணையம் பின்வருபவர்களைக் கொண்டிருக்கும்:—

1) தலைவர்

2) இரண்டு முழுநேர உறுப்பினர்கள்

3) இரண்டு பகுதிநேர உறுப்பினர்கள்

4) ஒரு முழுநேர உறுப்பினர் - செயலாளர்

ஆங்கிலேயர் காலத்தில் இயற்றப்பட்ட சட்டங்களையும் அதற்குப் பின்னர் இயற்றப்பட்ட சட்டங்களையும் நன்கு ஆய்வு செய்து. அவை தற்போதைய சூழலுக்கு ஒத்து வருமா என்பதையும் கண்டறிந்து. அவற்றில் செய்யக்கூடிய மாற்றங்களையும் திருத்தங்களையும் அரசுக்குப் பரிந்துரைப்பது இதன் பணிகளாகும். மாநிலச் சட்டங்கள், உச்ச நீதிமன்றம் மற்றும் உயர்நீதி மன்றங்களின் வழக்குகளில் முடிவு செய்யப்பட்ட தீர்ப்புகளுக்கு இணங்கிய வகையில் அவை இருக்கின்றனவா என்பதனை மேலும் ஆய்வு செய்து அச்சட்டங்களில் செய்ய வேண்டிய மாற்றங்களையும் பரிந்துரை செய்யும்.

மேலும் மாநில சட்ட ஆணையம்.-

1) தற்போதுள்ள சட்டங்களுக்குத் தகுந்த மாற்றமைவுகள் மற்றும் திருததங்கள் குறித்து ஆலோசனை கூறுதல்;

2) தகுந்த சமூக மற்றும் பொருளாதார சட்டமியற்று நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை கூறுதல்;



3) மாநிலங்களுக்கிடையேயான மற்றும் மைய மாநிலங்களுக் கிடையேயான நல்லுறவுகளுக்கான வழிவகைகள் குறித்து ஆலோசனை கூறுதல்;

4) நீதி மற்றும் நிருவாகச் சீர்திருத்தங்கள் தொடர்பாக உகந்ததும் விரைவானதுமான நடைமுறைகளுக்காக ஆலோசனைகளையும் பரிந்துரைகளையும் கூறுதல்;

5) மாநிலச் சட்டங்களுக்கு மட்டுமல்லாது. இந்த மாநிலத்திற்கும் பொருந்துகிற மையச் சட்டங்களுக்கும் மாற்றமைவுகள் குறித்து ஆலோசனை கூறுதல்;

ஆகிய பணிகளை மேற்கொள்ளும்.

1994 ஆம் ஆண்டு நீதியரசர் திரு. வி. இராமசாமி அவர்கள் தலைமையின் கீழ் அமைத்துருவாக்கப்பட்ட மாநிலச் சட்ட ஆணையம், பரிசீலனை செய்து, 22 சட்டங்களுக்கு நீக்கறவு / மறு சட்டமியற்றுதல் ஆகியவற்றை பரிந்துரை செய்து, தனது முதல் அறிக்கையை சமர்ப்பித்துள்ளது.

அரசு ஆணை நிலை எண் 33, சட்ட (சட்ட ஆணையத்) துறை. நாள் 28-1-1997 வாயிலாக, மாநில சட்ட ஆணையம். சென்னை உயர்நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதியரசர் திரு. மு.மு. இஸ்மாயில் அவர்கள் தலைமையில் மாற்றியமைக்கப்பட்டது.

தலைவர், முழு நேர உறுப்பினர்கள் பகுதி நேர உறுப்பினர்கள் ஆகியோரின் பதவிக் காலம் 28-1-2002 அன்றோடு முடிவடைந்து அதற்கிணங்க 28-1-2002 நாளிட்ட சட்டத் துறை அரசு ஆணை நிலை எண் 38 வாயிலாக அவர்கள் தத்தம் பதவியிலிருந்து விடுவிக்கப்பட்டனர்.

மாநில சட்ட ஆணையம் இதுவரையில் பின்வரும் பொருள் குறித்த ஏழு அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளது. அவையாவன:

| வரிசை எண் | பொருள் |
|---|---|
| 1) | ஆங்கிலேயர் ஆட்சி காலத்தின் போது இயற்றப்பட்டு "நீக்கறவு செய்யப்படாத தமிழ்நாடு ஒழுங்குமுறை விதிகள்". |
| 2) | தமிழ்நாடு மாநிலத்திற்கும் பொருந்துகிற மையச் சட்டங்கள் |
| 3) | 1884 ஆம் ஆண்டு தமிழ்நாடு கிராம நீதிமன்றங்கள் சட்டத்தின் பொருள் வழி "கிராமத்தினர்களுக்கு நீதி வழங்குதல்". |

| வரிசை எண் | பொருள் |
|---|---|
| 4) | 1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீடு சட்டம் |
| 5) | 1867 மற்றும் 1891 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது வகைமுறைகள் விளக்கச் சட்டம் |
| 6) | 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு மகளிர் கேலி தடைச் சட்டம் |
| 7) | 1960 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டடங்கள் (குத்தகை மற்றும் வாடகை கட்டுப்பாடு) சட்டம் |

இந்த அறிக்கைகள் தொடர்புடையவை தலைமைச் செயலகத் துறைகளின் பரிசீலனையில் உள்ளது.

**சட்டக் கல்வி**

சட்டக் கல்வியின் தரத்தினை மேம்படுத்தும் நோக்கத்துடன் 1953 ஆம் ஆண்டு மாநிலத்தில் சட்டக் கல்வித் துறை உருவாக்கப்பட்டது.

தற்போது, சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் அரசுச் சட்டக் கல்லூரிகள் உள்ளன. இவை முறையே சென்னை, மதுரை-காமராஜ், பாரதிதாசன், பாரதியார் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகங்களுடன் இணைக்கப்பட்டிருந்தன. அக்கல்லூரிகள் தற்போது தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

அனைத்து ஐந்து அரசுச் சட்டக் கல்லூரிகளிலும் 3 ஆண்டு, 5 ஆண்டுகளுக்கான சட்ட இளங்கலைப் பட்டத்திற்கான பாடம் பயிற்றுவிக்கப்படுகிறது. அதுபோல, திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரி நீங்கலாக அனைத்து அரசு சட்டக் கல்லூரிகளிலும் முதுநிலைச் சட்டப்படிப்பிற்கான வகுப்புகளும் நடைபெறுகின்றன. இவையன்றி ஒரு தனியார் சட்டக் கல்லூரி மைய சட்டக் கல்லூரி என்னும் பெயரால் சேலத்தில் செயல்பட்டு வருகிறது.

ஐந்து அரசு சட்டக் கல்லூரிகளிலும் சட்ட இளங்கலை படிப்பு (3 மற்றும் 5 ஆண்டுகள்)களுக்கு உள்ள 1438 இடங்களுக்கு 2001-2002 ஆம் கல்வியாண்டு, 20,853 மாணவர்கள் விண்ணப்பித்தனர்.



ஐந்து அரசு சட்டக் கல்லூரிகளிலும் (3 ஆண்டுகள், 5 ஆண்டுகள் மற்றும் முதுநிலைப் பட்டம்) படிக்கும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை:

| | | |
|---|---|---|
| சென்னை | - | 2643 |
| மதுரை | - | 1562 |
| திருச்சி | - | 858 |
| கோயம்புத்தூர் | - | 858 |
| திருநெல்வேலி | - | 480 |
| மொத்தம் | - | **6401** |

பல்வேறு அரசு சட்டக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் நீதிமன்ற வழக்கு வாதப் பயிற்சி (Moot Court) போட்டிகளில் பங்கேற்கும் வண்ணம் நிதி உதவி அளிக்கப்படுகிறது.

தமிழ்மொழியும் சட்டப் படிப்பில் பயிற்று மொழியாக உள்ளது. சட்டத்தில் ஆங்கில வழிக் கல்வியையோ அல்லது தமிழ் வழிக் கல்வியையோ பயிலுவதற்குத் தெரிவு செய்துகொள்ளும் உரிமை மாணவர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. தமிழ் வழிக் கல்வி பயிலும் மாணவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.400/- உதவித் தொகையாகக் கொடுக்கப்படுகிறது. மாணவர்களின் நலனுக்காக, சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் உள்ள சட்டக் கல்லூரிகளில் புத்தக வங்கித் திட்டம் நடைமுறையில் உள்ளது.

அனைத்து அரசு சட்டக் கல்லூரிகளிலும், கணினிக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு சுற்றுச் சூழல் பேணுதலைப் பற்றி கற்பிக்கும் பொருட்டு, சட்ட இளங்கலைப் பாடத் திட்டத்தில் "சுற்றுச் சூழல் சட்டம்" என்ற புதிய பாடப் பிரிவு புகுத்தப்பட்டுள்ளது. மேலும், தேசிய சேவைத் திட்டத்தின் கீழ், சட்டக் கல்லூரி மாணவர்கள், தங்கள் கல்லூரிக்கு அருகே அமைந்துள்ள இடங்களில் உள்ள வளாகங்களில் சுற்றுச் சூழல் பாதுகாப்பு குறித்து பொது மக்களிடம் விழிப்புணர்ச்சி ஏற்படுத்துவதற்காக, விழிப்புணர்ச்சித் திட்ட முகாம்களுக்கு ஏற்பாடு செய்துள்ளது.

அரசு தனது கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் 5 அரசு சட்டக் கல்லூரிகளில் அளிக்கப்படும் சட்டக் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்குத் தொடர்ந்து முயற்சி மேற்கொண்டு வருகிறது. மாறிவரும் சூழ்நிலைகளைக் கவனத்திற்கொண்டு பாடத் திட்டத்தில் பின்வரும் பாடப் பிரிவுகள் சேர்க்கப்பட்டுள்ளன:-

1) சட்டப் பொருள் விளக்கம்

2) உச்ச வரம்பு உட்பட, நிலச்சட்டங்கள் மற்றும் பிற சட்டம் பற்றிய சட்டங்கள் எவையும்

3) சுற்றுச் சூழல் சட்டம்

4) மனித உரிமைகளும் பன்னாட்டுச் சட்டமும்

5) பொதுவர் தீர்ப்பு முறை, இணக்கமுறை மற்றும் பிற மாற்றுத் தீர்வு முறை அமைப்புகள்

6) அறிவார்ந்த சொத்துச் சட்டம்

7) பெண்களும் சட்டமும், குழந்தைகள் தொடர்பான சட்டமும்

8) செய்முறைகள்

சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியின் தரத்தினை, பெங்களூரில் உள்ள இந்திய சட்டப் பள்ளியின் அளவிற்கு உயர்த்த அரசு உத்தேசித்துள்ளது.

**தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்**

இம்மாநிலத்தில் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகம் நிறுவப்பட்டு, அப்பல்கலைக்கழகத்துடன் சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் இயங்கி வரும் ஐந்து அரசு சட்டக் கல்லூரிகளும், சேலத்தில் இயங்கி வரும் தனியார் கல்லூரி ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளன.

சட்டக் கல்வியின் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு பின்வருவன அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன:

1) மாற்றியமைக்கப்பட்ட பாடத் திட்டம்

2) பருவ முறை (செமஸ்டர்)





3) போட்டிகள்

(அ) பேச்சுப் போட்டிகள்

(ஆ) நீதிமன்ற வழக்கு விவாதப் பயிற்சிப் போட்டி

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், கிராமப்புற மக்களுக்காக சட்ட அறிவொளித் திட்டம் ஒன்றைத் தொடங்க ஆலோசனை கூறியுள்ளது. மேற்சொன்ன பல்கலைக்கழகம் என்.எஸ்.எஸ். தன்னார்வப் பணியாளர்களை ஒருங்கிணைத்து கிராமப்புறப் பகுதிகளில் தேசிய சேவைத் திட்டம் ஒன்றை ஏற்பாடு செய்ய உள்ளது. ஒவ்வொரு சட்டக் கல்லூரிக்கும் மாணவர் குழு ஒன்று அமைக்கப்படும். அத்தகைய குழு கிராமங்களுக்குச் சென்று, சட்ட உரிமைகள் குறித்தும், அரசால் கொண்டுவரப்படும் நலத் திட்டங்கள் குறித்தும் கிராமப்புற மக்களுக்கு எடுத்துரைக்கும். டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் இந்தத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதை ஒருங்கிணைக்கும்.

பல்வேறு சட்டக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, தமிழக அரசு சட்டத் தேர்வில் உயர்ந்த மதிப்பெண்கள் பெற்று தேறி வரும் மாணவர்களுக்குப் படிப்பு உதவித் தொகை வழங்குவதற்காக "ஜீவா" என்ற பெயரில் 25 இலட்சம் ரூபாய் அடங்கிய ஒரு தொகைக்கு அறக்கட்டளையை நிறுவியுள்ளது. அந்தத் தொகையில் சேர்ந்தடையும் வட்டியிலிருந்து படிப்புதவித் தொகை வழங்கப்படும்.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், 2002-2003 ஆம் கல்வியாண்டிலிருந்து அறிவார்ந்த சொத்து மற்றும் உலகளாவிய சட்டங்கள், கணினி சட்டங்கள் உள்ளடங்கலான வணிக சட்டத்தில் ஒரு சிறப்பு முதுகலைப் பட்டம் தொடங்க உள்ளது.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், சட்டத்தில் 'புத்தாக்கப் பயிற்சி' ஒன்றை நடத்தி வருகிறது. இது புலத்தின் உறுப்பினர்களுக்கு அவர்களின் பணி முன்னேற்றத்திற்கு உதவியாக இருக்கும். அந்தந்தத் துறையின் பாடப்பிரிவுகளில் தங்களுக்கு உள்ள அறிவை அன்றைய தேவைக்கேற்றதாக மேம்படுத்திக்கொள்ள இது அவர்களுக்கு உதவுகிறது. புத்தாக்கப் பயிற்சித் திட்டம், 2002-2003 மற்றும் 2003-2004 ஆகிய கல்வியாண்டுகளிலும் ஏற்பாடு செய்யப்படும்.

மேற்படி பல்கலைக்கழகத்தின் சட்டக் கல்லூரி ஆசிரியர்களுக்கு முனைவர் பட்டம் அளிப்பதற்கு வழி காட்டும் முனைவர் பட்டஞ்சார்ந்த திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தற்போதுள்ள சட்டக் கல்வி அமைப்பு முறையை மறு ஆய்வு செய்து, சட்டக் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்கு உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அது அதன் பரிந்துரைகளை விரைவில் சமர்ப்பிக்கும்.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்திற்கு கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில் சிறப்பு சட்டக் கல்லூரி ஒன்று தொடங்கப்பட உள்ளது. இது மற்ற சட்டக் கல்லூரிகளை விட மாறுபட்டதாக இருக்கும். மேலும், இந்தச் சிறப்பு சட்டக் கல்லூரி நாட்டிலேயே முதல் தரம் வாய்ந்ததாக அமைக்கப்படும். இது சட்டக் கல்விக்காக இனி வருங்காலத்தில் உருவாக்கப்படும் கல்லூரிகளுக்கு ஒரு முன்னோடியாகத் திகழும்.

**சட்டங்களையும், அவசரச் சட்டங்களையும் மறுபடியும் வெளியிடுதல் மற்றும் சட்டங்களை மீண்டும் அச்சிடுதலும் தொகுத்தலும்.**

பொதுமக்களுக்காக அனைத்து மையச் சட்ட முன்வடிவுகளும், மையச் சட்டங்களும், அவசரச் சட்டங்களும், தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுகின்றன. அன்றைய தேதிவரையிலான திருத்தங்களுடன் தமிழ்நாடு சட்டங்கள், நிர்வாகத் துறையின் தேவைக்காகவும் பொதுமக்களுக்காகவும் சட்டத் துறை அவற்றை புத்தக வடிவில் வெளியிடுகிறது. அவை பொது மக்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. மேலும், அனைத்து தமிழ்நாடு சட்டங்களும் இத்துறையினால் தொகுக்கப்பட்டு தமிழ்நாடு சட்டத் தொகுப்பாக வெளியிடப்பட்டு நீதிமன்றங்களில் அதிகாரப்பூர்வமான வெளியீடாக பயன்படுத்தப்படுகிறது.



# இணைப்பு V

*[252 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]*

## கோரிக்கை எண் 31—தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

## கொள்கை விளக்கக்குறிப்பு 2002-2003

### முன்னுரை

1. அரசின் தொழிலாளர் கொள்கை தொழில் வளர்ச்சியையும், தொழிலின் வெற்றிக்கு உறுதுணையாக உள்ள தொழிலாளியின் வளர்ச்சியினையும் உறுதி செய்கின்றது. தொழிலாளர் கொள்கையானது, தொழில் வளர்ச்சியை ஊக்குவித்தல், மனித வள மேம்பாடு, தொழிலாளர்களின் வாழ்க்கை நிலை மற்றும் பணி நிலைகளை அபிவிருத்தி செய்தல், நல்ல தொழில் உறவு வளர தகுந்த சூழ்நிலைகளை உருவாக்குதல், மாநிலத்தில் தொழில் அமைதியை நிலைநாட்டல், தொழிலாளர் நலச் சட்டங்களை சீரிய முறையில் அமல்படுத்தல், அனைத்து தொழிலாளர்களுக்கும் சமூக பாதுகாப்பு அளித்தல் ஆகியவைகளை உள்ளடக்கியது ஆகும். தொழிலாளர்கள் மாநிலத்தின் முக்கியமான மற்றும் வலிமையான சக்தி என்பதை இந்த அரசு உணர்ந்துள்ளதால், தொழிலாளர்களது திறமையை இந்த அரசு வீணாக்காது, வீணாக்கவும் அனுமதிக்காது. தொழிலாளர் வர்க்கத்தில் பெரும்பான்மையாக உள்ளவர்கள் அமைப்புசாரா தொழிலாளர்கள் என்பதையும், இவ்வமைப்புசாரா தொழிலாளர்கள் இந்திய நாட்டின் பொருளாதார மேம்பாட்டில் பெரும் பங்காற்றி வருகின்றனர் என்பதையும் அரசு அறிந்துள்ளது. அவ்வமைப்புசாரா தொழிலாளர்கள் தனித்தன்மை வாய்ந்த, சிக்கலான பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டுள்ளனர். அமைப்புசாரா தொழிலாளர்களின் இத்தகைய பிரச்சினைகளைக் களைந்திட, அவர்களது நலனைப் பேணி காக்கும் வகையில் நிர்வாக அமைப்பு செம்மையாக்கப்பட்டு, இத்தொழிலாளர்களுக்கு சமூக பாதுகாப்பு சலுகைகள் கிடைத்திட பரிசீலிக்கப்படும்.

[2002 மே 3

# அத்தியாயம்-1

## தொழில் உறவுகள்

1.1. ஆரோக்கியமான கட்டுப்பாடும், மேம்படுத்தப்பட்ட உழைப்பும் உடைய தொழிலாளர்களும், தொலை நோக்கும், முற்போக்கு சிந்தனையுடைய நிர்வாகங்களும் ஒன்றாக இணைந்து செயல்படுவதே சிறந்த தொழில் உறவிற்கு அடையாளமாகவும், மூலதனமாகவும் அமையும். தொழிலாளர் மற்றும் நிர்வாகத்திற்கிடையேயான நல்லுறவை பலப்படுத்துவதன் மூலம் தொழில் வளம் பெருகவும், தொழிலாளர் நலன் வளரவும், இத்துறை செயல்பட்டு வருகிறது. இந்தச் சமன்பாட்டு நிலை நிலவுவதை சீர்குலைக்கும் தொழிற் தகராறுகளை தீர்வு செய்வதில், தொழில் நுட்ப அறிவுடைய திறமையான பேச்சுவார்த்தைகள் மூலமாகவும், அடிப்படை யுக்திகளைக் கையாண்டு, உரிய தருணத்தில் தலையிடுவதன் மூலமாகவும், தொழிலாளர் துறை அலுவலர்கள் வெற்றிகரமாக செயல்பட்டு வருகின்றனர். தொழிலாளர் துறை அலுவலர்களின் திறமையான செயல்பாடுகளின் விளைவாக, வேலை நிறுத்தம் மற்றும் கதவடைப்புகளால் ஏற்பட்ட இழப்பு 2001-ஆம் ஆண்டில் குறைக்கப்பட்டுள்ளது. 2001 ஆம் ஆண்டில் நேரிட்ட வேலை நிறுத்தம் மற்றும் கதவடைப்புகளின் மூலம் ஏற்பட்ட மனித நாட்கள் இழப்பு விவரம் பின்வருமாறு:

| வருடம் | வேலை நிறுத்தம் | கதவடைப்பு | மொத்தம் |
|---|---|---|---|
| 2001 | 1349726 | 795131 | 2144857 |

1.2. இத்துறையின் சமரச அலுவலர்கள் வேலைநிறுத்தம் மற்றும் கதவடைப்பு தொடர்பான தொழிற் தகராறுகள் மட்டுமின்றி, வேலை நேரங்களை மீறுதல், ஒழுங்கீனம் போன்ற இதர தொழிற் தகராறுகளையும் திறம்பட கையாண்டு தீர்வுகள் கண்டுள்ளனர். 2001 ஆம் ஆண்டில் நிலுவையில் இருந்த 12,681 தொழிற் தகராறுகளில் (முந்தைய ஆண்டு உட்பட) 10,290 தொழிற் தகராறுகள் சமரச அலுவலர்களால் தீர்வு காணப்பட்டன.

1.3. ஒவ்வொரு ஆண்டும், தீபாவளிப் பண்டிகை காலங்களில் போனஸ் பட்டுவாடா செய்வது குறித்து எழுப்பப்படும் தொழிற் தகராறுகள் மாநிலம் தழுவிய அளவில் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். இத்தொழிற் தகராறுகள் மீது, உரிய காலத்தில் தீர்வுகள் காணப்படவில்லையெனில், மாநில அளவில், அதிக தொழிலாளர்கள்



2002 மே 3]

வேலைநிறுத்தத்தில் ஈடுபடக்கூடிய ஒரு பிரச்சினையாக மாறக் கூடும். உரிய காலத்தில் தொழிற்தாவா தீர்க்கப்படாவிட்டால் சட்டம் ஒழுங்கு பாதிக்கப்படக்கூடிய வாய்ப்புகள் உண்டு. எனவே, 2001 ஆம் ஆண்டில் தொழிலாளர் துறையைச் சேர்ந்த சமரச அலுவலர்கள் மிகுந்த கவனத்துடனும், திறமையுடனும், தொழில் நுட்ப அறிவுடனும், உரிய நேரத்தில் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு கண்டதில் தொழில் அமைதி பாதுகாக்கப்பட்டது.

1.4. முக்கிய பிரச்சினைகளின் காரணமாக ஏற்பட்ட கீழ்க்கண்ட வேலை நிறுத்தம் மற்றும் கதவடைப்புகளில், இத்துறை சமரச அலுவலர்கள் தலையிட்டதன் அடிப்படையில் பிரச்சினைகள் சுமூகமாகத் தீர்வு செய்யப்பட்டன.

### தீர்வு செய்யப்பட்ட முக்கிய வேலை நிறுத்தங்கள்

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | தொழிலாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | தேவி ஸ்பின்னிங் மில்ஸ், தர்மபுரி | 300 |
| 2 | ஜி.இ. பவர் கண்ட்ரோல்ஸ், கிருஷ்ணகிரி | 255 |
| 3 | சங்கர் ஸ்பின்னிங் மில்ஸ், சங்கர் நகர், திருநெல்வேலி | 185 |
| 4 | ஜெயலட்சுமி அசோசியேட்ஸ், கோயம்புத்தூர் | 128 |
| 5 | பாரகன் பாலிமர்ஸ் புராடக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட், சேலம் | 107 |
| 6 | கிரேக் மோர் எஸ்டேட், குன்னூர் | 1500 |
| 7 | இந்துஸ்தான் லீவர் லிமிடெட், தெர்மாமீட்டர் பாக்டரி, கொடைக்கானல் | 130 |
| 8 | ஸ்ரீ நாகம்மை காட்டன் மில்ஸ், விக்கிரவாண்டி | 231 |
| 9 | மதுரா கோட்ஸ் லிமிடெட், தூத்துக்குடி | 1775 |

[2002 மே 3

**தீர்வு செய்யப்பட்ட முக்கிய கதவடைப்புகள்**

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | தொழிலாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | ஜே.கே. பார்மா கெம் லிமிடெட், கடலூர் | 235 |
| 2 | கோயமுத்தூர் பாப்புலர் ஸ்பின்னிங் மில்ஸ், யூனிட்-2, பல்லடம் | 160 |
| 3 | டெக்ஸ் இந்தியா எக்ஸ்போர்ட்ஸ், சென்னை | 200 |
| 4 | டி.டி.கே. ஹெல்த் கேர், பிரிண்டிங் டிவிஷன், சென்னை | 150 |
| 5 | பர்ஸ்ட் கார்மெண்ட்ஸ் மேனுபாக்சுரர்ஸ் இந்தியா லிமிடெட், மதுரை | 100 |
| 6 | ஈசன் இன்ஜினியரிங் கம்பெனி லிமிடெட், திருநின்றவூர் | 110 |
| 7 | பெரிய கருமலை டீ புரொட்யூசர்ஸ், வால்பாறை | 2,400 |

**மூடிய ஆலைகளைத் திறத்தல்**

1.5. பெரும்பாலான ஆலைகள் நிதி நெருக்கடி, தொழிலில் ஏற்பட்டுள்ள மந்தநிலை, போட்டி, பங்குதாரர்களிடையே ஏற்பட்ட உட்பூசல் காரணமாக இயங்காமல் உள்ளதால், இவற்றைத் திறப்பது குறித்து நடவடிக்கை இத்துறையில் இல்லை. அதிகப்படியாக, சமரச முறிவறிக்கை மட்டுமே அனுப்ப இயலும். இருப்பினும் மூடப்பட்ட/ இயங்காமல் உள்ள ஆலைகளைத் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என தொழிற் சங்கங்கள் வேண்டுகோள் விடுத்ததால், அவற்றை திறந்து இயக்க வாய்ப்புகள் உள்ளதா என்பதை ஆராயும் பொருட்டு, அரசால் 06-06-2001 அன்று முத்தரப்புக் கூட்டம் நடத்தப்பட்டது. மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் 16-07-2001 அன்று துறையின் ஆய்வுக் கூட்டத்திலும், இப்பிரச்சினை குறித்து விவாதிக்கப்பட்டு, திறந்து இயக்கக்கூடிய ஆலைகளைக் கண்டறிந்து அவற்றைத் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் தொழிற்தகராறு காரணமாக மட்டுமே மூடப்பட்டோ/நீண்ட காலமாக இயங்காமலோ உள்ள நிறுவனங்கள் ஏதும் இல்லை.



2002 மே 3]

1.6. மூடப்பட்ட ஆலைகளைத் திறப்பது தொடர்பான
சாத்தியக்கூறுகளை ஆராய அரசு ஆணை எண் (டி) 133, தொழிலாளர்
மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 12-02-2002-ன்படி மாவட்டம்
தோறும் முத்தரப்புக் குழுக்களை அமைத்திட அரசு ஆணையிட்டுள்ளது.
இக்குழுவின் தலைவராக சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்
இருப்பார். இதன் உறுப்பினர்-செயலாளர் அம்மாவட்டத்தின்
தொழிலாளர் அலுவலர் ஆவார். சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் சட்டப்
பேரவை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும்
தொழிலாளர், வேலையளிப்பவர் சார்பில், மூன்று பிரதிநிதிகளைக்
கொண்டு இக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு மூடப்பட்ட
ஆலைகளை மீண்டும் திறந்திடுவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயும்.

**நீண்ட காலமாக மூடியிருக்கும் தொழில் நிறுவனங்களில் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கான நிவாரணம்**

1.7. நீண்ட காலமாக மூடியிருக்கும் தொழில் நிறுவனங்களில்
பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு ரூ.250/- மாதாந்திர உதவித் தொகை
தருவது குறித்தான திட்டத்தின் கீழ் இதுவரை, 72 தொழில்
நிறுவனங்களில் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு இத்திட்டத்தின் மூலம்
பயன் பெற உறுதி செய்யப்பட்டுள்ளது. இதுவரை 8,973
தொழிலாளர்களுக்கு இந்த நிவாரண உதவித் தொகை
வழங்கப்பட்டுள்ளது. ரூ.2,44,39,750/- இதுவரை பட்டுவாடா
செய்யப்பட்டுள்ளது.

**தொழில் நல்லுறவுப் பரிசுத் திட்டம்**

1.8. நலமார்ந்த தொழில் உறவை மேம்படுத்தும் முகத்தான், தொழில்
நல்லுறவை பேணிப் பாதுகாக்கும் பணியில் சிறந்து விளங்கும்
நிர்வாகத்தினர் மற்றும் தொழிற் சங்கங்களுக்கு பரிசுகள் வழங்கும்
வகையில், தொழில் நல்லுறவுப் பரிசு வழங்கும் திட்டத்தை அரசு
உருவாக்கி செயலாற்றி வருகிறது. பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுக்க
ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி தலைமையில் நிர்வாகத்தினர்
மற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் முறையே நான்கு பேர் கொண்ட
ஒரு முத்தரப்பு உயர் மட்டக் குழுவை அரசு அமைத்துள்ளது.
இத்திட்டம், 1978 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**தொழிலாளர் நீதிமன்றங்கள்**

1.9. இம்மாநிலத்தில், 10 தொழிலாளர் நீதிமன்றங்களும் ஒரு தொழில்
தீர்ப்பாயத்தின் தீர்ப்பாயமும் இயங்கிவருகின்றன. தொழில்

தலைமையிடம் சென்னை ஆகும். தொழிலாளர்கள் சட்டப்பூர்வமான பலன்களை விரைவில் அடைய இவை உதவுகின்றன. இவற்றின் ஆட்சி எல்லை கீழ்க்கண்டவாறு உள்ளது:

| வ. எண் | தொழிலாளர் நீதிமன்றம் | ஆட்சி எல்லை (மாவட்டங்கள்) |
|---|---|---|
| 1 | முதன்மை தொழிலாளர் நீதிமன்றம், சென்னை | சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர். |
| 2 | முதல் கூடுதல் தொழிலாளர் நீதிமன்றம் சென்னை | |
| 3 | இரண்டாம் கூடுதல் தொழிலாளர் நீதிமன்றம், சென்னை | |
| 4 | தொழிலாளர் நீதிமன்றம், வேலூர் | வேலூர் மற்றும் திருவண்ணாமலை. |
| 5 | தொழிலாளர் நீதிமன்றம், சேலம் | சேலம், ஈரோடு, தர்மபுரி மற்றும் நாமக்கல். |
| 6 | தொழிலாளர் நீதிமன்றம், கோவை | கோயம்புத்தூர், குன்னூர் மற்றும் நீலகிரி. |
| 7 | தொழிலாளர் நீதிமன்றம், கடலூர் | கடலூர், விழுப்புரம், நாகப்பட்டினம், தஞ்சாவூர் மற்றும் திருவாரூர். |
| 8 | தொழிலாளர் நீதிமன்றம், திருச்சி | திருச்சி, அரியலூர், கரூர், பெரம்பலூர், திண்டுக்கல் மற்றும் புதுக்கோட்டை. |
| 9 | தொழிலாளர் நீதிமன்றம், மதுரை | மதுரை, விருதுநகர், சிவகங்கை, இராமநாதபுரம் மற்றும் தேனி. |
| 10 | தொழிலாளர் நீதிமன்றம், திருநெல்வேலி | திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி. |



## அத்தியாயம்-2

### அமலாக்கம்

2.1. திறம்பட்ட சட்ட அமலாக்கம் மூலம், வேலையளிப்போர் தாங்களாகவே முன் வந்து பல்வேறு தொழிலாளர் சட்டங்கள் மற்றும் விதிகளைப் பின்பற்றுவார்கள் என்று இவ்வரசு நம்புகிறது. தொழிற்சாலை நிர்வாகங்களில் சுய ஒழுங்கு இருக்க வேண்டுமென்பதே அரசின் விருப்பமாகும். ஆயினும், தொழிலாளர் சட்ட மீறல்கள் குறித்து வரும் புகார்கள் மீது உடனடி நடவடிக்கையினை இத்துறை எடுக்கின்றது. அமலாக்கம் திறம்பட இருக்கவேண்டுமென்பதே அரசின் குறிக்கோளாகும்.

2.2. கீழ்க்காணும் முக்கிய தொழிலாளர் நலச் சட்டங்கள் தொழிலாளர் துறையினால் அமலாக்கம் செய்யப்படுகின்றன :

### தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம், 1947

2.3. இச்சட்டம் கடைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களின் பணியினை முறைப்படுத்த உருவாக்கப்பட்ட சட்டமாகும். இச்சட்டம், கடைகள் மற்றும் நிறுவனங்களில் வேலை தொடங்கும் நேரம் மற்றும் முடியும் நேரங்களைக் கண்காணிக்க வழிவகை செய்கின்றது. இச்சட்டத்தின் மூலம், அனைத்து கடைகள் மற்றும் நிறுவனங்கள் வாரத்தில் ஒரு நாள் மூடப்பட வேண்டும். அதாவது, பணியாளர்களுக்கு வாரத்தில் ஒரு நாள் சம்பளத்துடன் கூடிய விடுப்பு வழங்க வகை செய்கிறது. இச்சட்டத்தினை வேலையளிப்பவர்கள் மீறினால் இச்சட்டத்தின் கீழ் ஆய்வாளர்களாக நியமிக்கப்பட்டுள்ள இத்துறை அலுவலர்கள், சம்பந்தப்பட்ட வேலை அளிப்பவர்கள் மீது வழக்கு தொடர உரிய அதிகாரிகளாவர்.

2.4. மேலும், இச்சட்டத்தின் கீழ் விரைவில் நிவாரணம் கிடைக்கவும், வேலையளிப்போர் இச்சட்ட செயலாக்கம் குறித்து அவாதம் கடமைகளை உணரவும், இச்சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள ஆய்வாளர்களுக்கு, அவர்களது ஆய்வின்போது காணப்படும் சட்ட மீறல்களுக்கு இணக்க முறையில் தீர்வு காண உரிய அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், இச்சட்ட அமலாக்கத்திற்காக இத்துறையில் 218 தொழிலாளர் உதவி ஆய்வாளர்களும், அதனை மேலாய்வு செய்திட 68 தொழிலாளர் துணை ஆய்வாளர்களும், மற்றும் 28 தொழிலாளர் ஆய்வாளர்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

[2002 மே 3

## தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்டம், 1958

2.5. இச்சட்டம் உணவு நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் பணியமைப்பினை முறைப்படுத்த ஏற்படுத்தப்பட்ட சட்டமாகும். இச்சட்டம் மூலம், உணவு நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் விடுமுறை தினங்கள், பணி நேரங்கள், விடுப்பு மற்றும் சம்பளம், மிகை நேர ஊதியம் போன்ற பயன்கள் முறைப்படுத்தப்பட்டுள்ளன. இச்சட்டம் மற்றும் விதிகளை அமல்படுத்த தொழிலாளர் உதவி ஆய்வர்கள், தொழிலாளர் துணை ஆய்வர்கள் மற்றும் தொழிலாளர் ஆய்வர்கள் இச்சட்டத்தின்கீழ் ஆய்வர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

2.6. இச்சட்டத்தின் கீழ் விரைவில் நிவாரணம் கிடைக்கவும், வேலையளிப்போர் இச்சட்ட செயலாக்கம் குறித்து அவர்தம் கடமைகளை உணரவும், இச்சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள ஆய்வாளர்களுக்கு, அவர்களது ஆய்வின்போது காணப்படும் சட்ட மீறல்களுக்கு இணக்க முறையில் தீர்வு காணவும் உரிய அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

## தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறை நாட்கள்) சட்டம், 1958

2.7. தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு தேசிய மற்றும் பண்டிகை விடுமுறைகள் அளிக்க இச்சட்டத்தில் வழி வகை செய்யப்பட்டுள்ளது. தொழில் நிறுவனத் தொழிலாளர்களுக்கு, சம்பளத்துடன் குறைந்தபட்சம் 5 பண்டிகைகள் மற்றும் 4 தேசிய விடுமுறைகள் (குடியரசு தினம், மே தினம், சுதந்திர தினம், காந்தியடிகள் பிறந்த நாள்) அளிக்க இச்சட்டத்தில் வழி வகுக்கப்பட்டுள்ளது.

2.8. தொழிலாளர் உதவி ஆய்வர்கள், தொழிலாளர் துணை ஆய்வர்கள் மற்றும் மலைத் தோட்ட ஆய்வர்கள் இச்சட்டத்தின் கீழ் ஆய்வர்களாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர்.

2.9. இச்சட்டத்தின் கீழ் விரைவில் நிவாரணம் கிடைக்கவும், வேலையளிப்போர் இச்சட்ட செயலாக்கம் குறித்து அவர்தம் கடமைகளை உணரவும், இச்சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள ஆய்வாளர்களுக்கு, அவர்களது ஆய்வின்போது காணப்படும் சட்ட மீறல்களுக்கு இணக்க முறையில் தீர்வு காணவும் உரிய அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.



2002 மே 3]

## தொழிற் சங்கங்கள் சட்டம், 1926

2.10. தொழிற் சங்கங்கள் பதிவு செய்தல் குறித்தும், தொழிற் சங்கம் பதிவு செய்வது குறித்தான சட்டத்தை விளக்கவும், தொழிற் சங்கங்கள் சட்டத்தில் வழி வகை செய்யப்பட்டுள்ளது. தொழிற் சங்கப் பதிவாளர்களாக 9 வட்டார துணை ஆணையர்கள் செயல்படுகின்றனர். இச்சட்டத்தில், பதிவு செய்யப்பட்ட தொழிற் சங்கத்தின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் குறித்து, விரிவாகக் கூறப்பட்டுள்ளது. இச்சட்டத்தில், பொது நிதி மற்றும் அரசியல் நிதிகளை உருவாக்கவும் அதனைப் பயன்படுத்துவதற்கும் வழிவகை உள்ளது.

## சம்பளப் பட்டுவாடாச் சட்டம், 1936

2.11. பணியாளர்களுக்கு ஊதியத்தை உரிய காலத்தில் வழங்கவும், பணியாளர்களின் சம்பளத்தில் அங்கீகரிக்கப்படாத பிடித்தங்கள் செய்வதைத் தடுத்திடவும், இச்சட்டம் தொடர்பான கேட்பு மனுக்களை விரைவில் தீர்த்திடவும், சம்பளப் பட்டுவாடாச் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

2.12. இச்சட்டப் பிரிவுகள் மூலம், வேலையளிப்போர், 1000 தொழிலாளர்களுக்குக்கீழ் பணிபுரியும் நிறுவனங்களில், பிரதி மாதம் 7 ஆம் தேதியோ, அதற்கு முன்போ, 1000 தொழிலாளர்களுக்கு மேல் பணிபுரியும் நிறுவனங்களில் பிரதி மாதம் 10 ஆம் தேதியோ, அதற்கு முன்போ சம்பளம் பட்டுவாடா செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. தொழிலாளர் ஆய்வர், தோட்ட நிறுவன ஆய்வர், தொழிலாளர் துணை ஆய்வர்கள் மற்றும் தொழிலாளர் உதவி ஆய்வர்கள், இச்சட்டத்தின் கீழ் ஆய்வராக நியமிக்கப்பட்டுள்ளனர். இச்சட்டத்தின் கீழ் கேட்பு மனுக்களை விசாரித்து முடிவெடுக்க, இத்துறையின் 9 வட்டாரத் துணை ஆணையர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## தொழிலக வேலை வாய்ப்பு (நிலையாணைகள்) சட்டம், 1946

2.13. இச்சட்டம், தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் பணித் தன்மைகள் குறித்து வேலையளிப்போர் அவர்களது கீழ் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு தெரிவிப்பதற்காக உருவாக்கப்பட்டதாகும். இச்சட்டத்தின் கீழ் சான்றளிக்கும் அலுவலர்களாக இத்துறையின் மூன்று மண்டல இணை ஆணையர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

2.14. இச்சட்டம், 20 மற்றும் அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் [2002 மே 3 பணிபுரியும் தொழில் நிறுவனங்களுக்கு மட்டுமே பொருந்துவதாக அமைந்துள்ளது. இச்சட்டத்தின் கீழ், வேலையளிப்போர் அவர்களது நிறுவனத்தின் நிலையாணைகளைக் குறித்து சான்று பெற வேண்டும். நிலையாணைகள் சான்றிதழ் பெறப்படாத தொழில் நிறுவனங்களுக்கு, மேற்குறிப்பிட்டுள்ள சட்டத்தில் உள்ள மாதிரி நிலையாணைகள், சான்றிதழ் வழங்கும் அலுவலர்களிடமிருந்து அத்தொழில் நிறுவனங்கள் சான்றிதழ் பெறும் வரை பொருந்தும்.

**தோட்டத் தொழிலாளர் சட்டம், 1951**

2.15. தோட்டத் தொழிலாளர் சட்டம், தோட்ட நிறுவனங்களில் தோட்டத் தொழிலாளர்களின் நலனைப் பாதுகாக்கவும் மற்றும் வேலை நிலைமைகளை முறைப்படுத்தவும் ஏற்படுத்தப்பட்டதாகும். இச்சட்டம் 5, ஹெக்டேர் அல்லது அதற்கு மேல் பரப்பளவுள்ள காப்பி, இரப்பர், தேயிலை மற்றும் ஏலக்காய் பயிரிடப்படும் அல்லது பயிரிட உபயோகப்படுத்தப்படவுள்ள நிலத்தில், 15 தொழிலாளர்கள் அல்லது அதற்கு மேல் பணிபுரிந்தால் பொருந்தும். மேற்குறிப்பிட்ட பயிர்கள் பயிரிடப்படும் அல்லது பயிரிட உபயோகப்படுத்தப்படவுள்ள நிலம் 5 ஹெக்டேர் பரப்பளவுக்கு குறைவாக இருந்தாலோ அல்லது அங்கு 15 தொழிலாளர்களுக்கு குறைவாகப் பணிபுரிந்தாலோ, அரசு அறிவிக்கை மூலம் இச்சட்டம் பொருந்த வழிவகை செய்யலாம்.

2.16. 1951-ம் வருட தோட்டத் தொழிலாளர் சட்டம் தமிழ்நாட்டில் 10 தோட்ட நிறுவன ஆய்வர்கள் மற்றும் 2 உதவி மருத்துவர்களால் (தோட்டங்கள்) அமலாக்கம் செய்யப்படுகிறது. தொழிலாளர் இணை ஆணையர் (நிர்வாகம்) அவர்கள் மலைத் தோட்டங்களின் தலைமை ஆய்வர் ஆவார்.

2.17. தமிழ்நாட்டில் உள்ள மொத்தத் தோட்ட நிறுவனங்களின் பரப்பளவு 58,552 ஹெக்டேர் மற்றும் மொத்தத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 95,260 ஆகும். (39,861 ஆண்கள் மற்றும் 55,399 பெண்கள்).

2.18. தோட்டத் தொழிலாளர் சட்டத்தில், தோட்டத் தொழிலாளர்களின் பயனுக்காகவும் அவர்களின் உபயோகத்திற்காகவும் தோட்டத் தொழிலாளர்களுக்கு வேலையளிப்பவர்கள் வீடு கட்டித் தர வழிவகை உள்ளது. கட்டப்படும் வீட்டின் பரப்பளவு 26.66 சதுர மீட்டராக இருக்க வேண்டும். தமிழ்நாட்டில் மொத்தம் 43,651 வீடுகள் தோட்டத் தொழிலாளர்களுக்காக கட்டப்பட்டுள்ளன.



2002 மே 3]

2.19. ஒவ்வொரு தோட்ட நிறுவன வேலையளிப்பவரும் தொழிலாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்கு மருத்துவ வசதிகள் செய்து தர வேண்டும். மருத்துவமனை வசதிகள் இல்லாத தோட்ட நிறுவனங்களில் நோயினால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் அருகில் உள்ள அரசு மருத்துவமனைகள் அல்லது உள்ளாட்சி அமைப்புகளினால் நடத்தப்படும் மருத்துவமனைகளுக்கு அனுப்பப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகிறது. சிகிச்சைக்காக தொழிலாளர்கள் செய்யும் செலவினை வேலையளிப்பவர்கள் ஈடுசெய்கிறார்கள். தோட்டத் தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதிகள் அளிப்பது குறித்த விதிகளின் சீரிய செயல்பாட்டிற்கு உதவி மருத்துவர்கள் (தோட்டங்கள்) பொறுப்பாவார்கள்.

2.20. 50 மற்றும் அதற்கு மேற்பட்ட பெண் தொழிலாளர்கள் பணிபுரியும் தோட்ட நிறுவனங்களில் ஆறு வயதிற்கு உட்பட்ட குழந்தைகள் நலனுக்காகவும், பயன்பாட்டிற்காகவும் குழந்தைகள் காப்பகம் அமைக்கப்பட வேண்டும்.

2.21. தோட்ட நிறுவனங்களில் 6 முதல் 12 வயது வரையிலான தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகள் 25-க்கு மேல் இருந்தால், அவர்களுக்கு தொடக்கப் பள்ளி ஏற்படுத்துவது வேலையளிப்பவர்களின் கடமையாகும். ஆயினும், தொழிலாளர் குடியிருப்பில் இருந்து 1.6 கி.மீ. தொலைவிற்குள் அரசு அல்லது உள்ளாட்சி அமைப்பினால் நடத்தப்படும் கல்வி நிறுவனங்கள் இருந்தால், வேலையளிப்பவர் தனியாக தொடக்கப் பள்ளி ஏற்படுத்த அவசியம் இல்லை.

2.22. குளிரிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக தொழிலாளர்களுக்கு வருடத்திற்கு ஒரு காட்டுக் கம்பளியும், இரண்டு வருடங்களுக்கு ஒரு போர்வைக் கம்பளியும், வேலையளிப்பவர்கள் வழங்க வேண்டும்.

2.23. தோட்ட நிறுவனத்தில் 150 மற்றும் அதற்கு மேல் தொழிலாளர்கள் பணிபுரிந்தால் அவர்களுக்கு காப்பி, தேநீர் மற்றும் சிற்றுண்டி வசதியுடன் கூடிய உணவகம் ஒன்றினை சம்பந்தப்பட்ட வேலையளிப்பவர்கள் இலாபமில்லா வகையில் அமைக்க வேண்டும்.

2.24. அருந்துவதற்கு ஏற்ற குடிநீர் தொழிலாளர்களுக்கு வழங்குவது வேலையளிப்பவரின் பொறுப்பாகும். அருந்துவதற்கு ஏற்ற குடிநீர் சான்றிதழ், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்புத் துறையின் உடல் நல அலுவலரால் அளிக்கப்பட வேண்டும். அவர் இல்லாதபோது, சான்றிதழ் அளிக்கும் அறுவை மருத்துவரால் அளிக்கப்பட வேண்டும்.

2.25. "தோட்டத் தொழிலாளர் வீட்டு வசதி ஆலோசனை வாரியம்", தோட்டத் தொழிலாளர்களுக்கு உரிய வீட்டு வசதி அளிப்பதை உறுதி செய்கிறது. இந்த வாரியம் அரசுத் தரப்புப் பிரதிநிதிகள், நிர்வாகத் தரப்பு பிரதிநிதிகள் மற்றும் தொழிலாளர் தரப்பு பிரதிநிதிகள் அடங்கிய முத்தரப்பு குழுவாகும். "தோட்டத் தொழிலாளர் ஆலோசனைக் குழு" தோட்டத் தொழிலாளர் சட்ட அமலாக்கம் குறித்து பரிசீலனை செய்ய அமைக்கப்பட்ட ஒரு முத்தரப்பு குழுவாகும்.

**உழைக்கும் பத்திரிகையாளர்கள் மற்றும் இதர பத்திரிகைத் தொழிலாளர்கள் (பணி நிபந்தனை மற்றும் இதர பிரிவுகள்) சட்டம், 1955**

2.26. இச்சட்டம் உழைக்கும் பத்திரிகையாளர்கள் மற்றும் பத்திரிகை நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் பணியமைப்பை முறைப்படுத்த ஏற்பட்டதாகும். இச்சட்டப் பிரிவை தொழிலாளர் ஆய்வர்களும், சென்னை, தொழிலாளர் ஆணையர் அலுவலகத்தில் உள்ள மக்கள் தொடர்பு அலுவலரும் அமலாக்கம் செய்கின்றனர்.

**மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டம், 1961**

2.27. ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரியும் மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள் அனைத்தும், இச்சட்டத்தின் கீழ் பதிவு சான்று பெறவேண்டும். இப்பதிவு ஒவ்வோர் ஆண்டும் புதுப்பிக்கப்பட வேண்டும். இச்சட்டம், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் வேலைத் தன்மையை முறைப்படுத்துகிறது. 5 தொழிலாளர்களுக்குக் கீழ் பணிபுரியும் நிறுவனங்களுக்கும் இச்சட்டம் பொருந்தும் வகையிலும், ஆய்வின் போது காணப்படும் சட்ட மீறல்களுக்கு இணக்கமுறையில் தீர்வு காணவும் உரிய சட்டத் திருத்தம் கொண்டுவர மைய அரசுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது. தொழிலாளர் ஆணையர் அலுவலகத்தின் தொழிலாளர் துணை ஆணையர் (குறைந்தபட்ச ஊதியம்), இச்சட்டத்தின் கீழ், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்களின் தலைமை ஆய்வராக நியமிக்கப்பட்டுள்ளார். இச்சட்டம், தொழிலாளர் ஆய்வர் மற்றும் தொழிலாளர் துணை ஆய்வர்களால் அமலாக்கம் செய்யப்பட்டு வருகிறது.



2.28. 2001-ஆம் ஆண்டின் இறுதியில் உள்ள மோட்டார் போக்குவரத்து நிறுவனங்களின் எண்ணிக்கை 1,773 ஆகும். அந்நிறுவனங்களில் 1,25,078 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். பதிவுக் கட்டணமாக ரூ.4,51,420/- வசூலிக்கப்பட்டுள்ளது.

**பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகள்) சட்டம், 1966 மற்றும் அதன் விதிகள், 1968.**

2.29. பீடித் தொழிலாளர்களின் நலனில் அக்கறை கொண்டு சட்டப்படியான சலுகைகள் அவர்களைச் சென்றடைய வேண்டுமென்ற சீரிய நோக்குடன் இந்தச் சட்டம் மற்றும் அதன் விதிகள் ஆகியவற்றையும் மற்றும் தொடர்புடைய ஏனைய தொழிலாளர் நலச் சட்டங்களையும் தீவிரமாக அமல்படுத்தும்படி, அமலாக்க ஆய்வர்களுக்கு இத்துறை அவ்வப்போது அறிவுரைகள் வழங்கிவருகிறது.

2.30. மத்திய அரசால் அமல்படுத்தப்படும் 1978 ஆம் வருடத்திய பீடித் தொழிலாளர் நல விதிகளின்படி, பீடித் தொழிலாளர்களுக்கு, குடும்பத்தினரின் விவரங்களுடன் கூடிய புகைப்பட அடையாள அட்டை வழங்கப்பட வேண்டும். இந்த அடையாள அட்டை, பீடித் தொழிலாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர் மருந்தகங்களில் மருத்துவ வசதி பெற்றுக்கொள்ள பெரிதும் உதவியாக இருக்கிறது. பீடித் தொழிலாளர்களுக்கு அடையாள அட்டை வழங்குவது மத்திய அரசின் பணியென்றாலும், பீடித் தொழிலாளர்களின் நலனில் இந்த அரசு அக்கறை கொண்டு, அவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்குவதில் தீவிர கவனம் செலுத்தி, தேவையான பிரதிகளை மத்திய அரசின் நல அமைப்பு அலுவலகங்களிடமிருந்து பெற்று, அனைவருக்கும் வழங்கி முடிக்கப்பட்டுள்ளது.

**பீடித் தொழிலாளர்கள் வீட்டுவசதித் திட்டம்**

2.31. பீடித் தொழிலாளர்களுக்கான மத்திய அரசின் ஒருங்கிணைந்த பீடி தொழிலாளர்கள் வீட்டுவசதித் திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி, மத்திய அரசு பீடித் தொழிலாளர்கள் நல நிதியிலிருந்து வீடு ஒன்றுக்கு அதிகபட்சமாக ரூ.20,000/- அல்லது வீடு ஒன்றின் கட்டுமானச் செலவில் 50 சதவீதத் தொகை, இதில் எது குறைவோ அத்தொகையை மானியமாக வழங்குகிறது.

2.32. தமிழ்நாட்டில் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு வந்த மேற்குறிப்பிட்ட திட்டத்தில் முன்னேற்றம் இல்லாததால், அரசு இத்திட்டத்தினை திருத்தியமைத்து, பீடித் தொழிலாளர்கள் தாங்களாகவே வீடு கட்டிக்கொள்ளும் திட்டமாக அரசு ஆணை எண். 23, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 13-12-2001-ன் மூலம் அறிவித்துள்ளது.

2.33. இத்திட்டத்தின்கீழ், கட்டப்படும் வீடுகளின் திட்ட மதிப்பீடு ரூ.40,000/- ஆகும். இதில், மத்திய அரசிடமிருந்து பெறப்படும் மானியத் தொகை ரூ.20,000/- இது தவிர, மாநில அரசு முதன்முறையாக வீடு ஒன்றுக்கு ரூ.5,000/- வீதம் மானியமாக வழங்குகிறது. மீதம் ரூ.15,000/-ஐ பயனீட்டாளர்கள் தாங்களாகவே ஏற்க வேண்டும்.

2.34. இத்திட்டத்தில் பயனீட்டாளர்கள் நேரிடையாகப் பங்குகொள்வதால், திட்டம் அதிக அளவில் வெற்றி அடைய வாய்ப்புள்ளது.

2.35. தமிழக அரசு இவ்வகையில் பீடித் தொழிலாளர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு 2,000 வீடுகள் வீதம் ஐந்தாண்டுகளில் மொத்தம் 10,000 வீடுகள் என்ற இலக்கினை நிர்ணயித்துள்ளது. ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் ஒரு கோடி வீதம் ஐந்தாண்டுகளில் மொத்தம் ரூபாய் ஐந்து கோடி என்ற அளவில் கட்ட திட்டமிட்டுள்ளது. மேலும், இத்திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் உடனடியாக 1,285 வீடுகள் கட்டும் வகையில் ரூ.2,57,00,000 மானியமாக வழங்கக் கோரி, உரிய முன்மொழிவு மத்திய அரசுகக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

**ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், 1970**

2.36. சில தொழில்களில் ஒப்பந்தத் தொழிலாளர் முறையினை வரைமுறைப்படுத்தவும், சில தொழில்களில் அவற்றின் தன்மையைப் பொறுத்து நீக்கவும் இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது. ஒரு நிறுவனத்தில் ஒப்பந்த அடிப்படையில் கடந்த ஓராண்டில் எந்த ஒரு நாளிலாவது 20 அல்லது அதற்கு அதிகமான தொழிலாளர்கள் பணியிலமர்த்தப்பட்டு இருந்தால், அந்த நிறுவனத்திற்கு இச்சட்டம் பொருந்தும். இதேப்போல், கடந்த ஓராண்டில் எந்த ஒரு நாளிலாவது 20 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களை பணியிலமர்த்தியிருந்த





ஒப்பந்தக்காரர்களுக்கு இச்சட்டம் பொருந்தும். ஒவ்வொரு ஒப்பந்தக்காரரும் இச்சட்டத்தின்கீழ் உரிமம் பெற வேண்டியவர்கள் ஆகிறார்கள். தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அரசுச் செயலரைத் தலைவராகக் கொண்ட மாநில ஒப்பந்தத் தொழிலாளர் ஆலோசனை வாரியம் இச்சட்டத்தில் எழும் பிரச்சினைகளில் அரசுக்கு அறிவுரை கூறும் கடமையை ஆற்றி வருகிறது. வட்டாரத் தொழிலாளர் துணை ஆணையர்கள் அலுவலகத்தில் உள்ள தொழிலாளர் உதவி ஆணையர்கள் இச்சட்டத்தின் கீழ், முதன்மை வேலை அளிப்போருக்கு பதிவுச் சான்று வழங்கும் அலுவலர்களாகவும், தொழிலாளர் ஆய்வர்கள் ஒப்பந்தக்காரர்களுக்கு உரிமம் வழங்கும் அலுவலர்களாகவும் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

2.37. முதன்மை வேலையளிப்பவர்கள் ஒப்பந்தக்காரர்கள் மூலம் ஒப்பந்தத் தொழிலாளர்களை பணிக்கு வைத்துக்கொள்வதால், ஒப்பந்தக்காரர்களும் அவர்களாகவே முன்வந்து, உரிமம் பெற்றுக் கொள்கின்றனர். இவ்விதம் முதன்மை வேலையளிப்பவர்கள் சட்டப்படி பதிவு செய்துகொள்வதால், ஒப்பந்தக்காரர்கள் அவர்களின் கீழ் பணிபுரியும் ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு உரிய சம்பளம் மற்றும் சட்ட ரீதியான சலுகைகளை வழங்கத் தவறினால், முதன்மை வேலையளிப்பவர்கள் இவற்றிற்கு சட்டப்படியான தார்மீகப் பொறுப்பாளிகளாகிறார்கள். சிற்றுண்டிச் சாலை, ஓய்வு அறை, குடிநீர் வசதி, போதுமான கழிவறை வசதிகள், சலவை வசதிகள் மற்றும் முதலுதவி வசதிகள் ஆகிய நலன்கள் பெற இச்சட்டம் வழிவகை செய்கிறது.

**தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (பணியாளர்களுக்கு நிரந்தர அந்தஸ்து வழங்கல்) சட்டம், 1981**

2.38. தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு நிரந்தர அந்தஸ்து வழங்குவதே இச்சட்டத்தின் முக்கிய நோக்கமாகும். 20 மற்றும் அதற்கு மேற்பட்ட பணியாளர்கள் பணிபுரியும் தொழில் நிறுவனங்களுக்கு மட்டுமே இச்சட்டம் பொருந்தும். இச்சட்டத்தின் கீழ், 24 தொடர் காலண்டர் மாதங்களில் 480 நாட்கள் பணிபுரியும்

தொழிலாளர்களை நிரந்தரமாக்க வகை செய்யப்பட்டுள்ளது. தொழிலாளர் ஆய்வர்கள் மற்றும் தோட்ட நிறுவன ஆய்வர்கள் இச்சட்டத்தின் கீழ் ஆய்வர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

**எடைகள் மற்றும் அளவைகள் தரம் (அமலாக்கம்) சட்டம், 1985**

2.39. சென்னையில் உள்ள தொழிலாளர் துணை ஆணையர் (ஆய்வுகள்) மாநிலம் முழுமைக்கும் எடையளவு சட்டமுறை கட்டுப்பாடு அலுவலராக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளார். அவர் தொழிலாளர் ஆணையரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் பணிபுரிந்து வருகிறார். இவருக்கு உதவியாக துணை எடையளவு சட்டமுறை கட்டுப்பாடு அலுவலர், நிர்வாக அலுவலர் (எடைகள் மற்றும் அளவைகள்) மற்றும் உதவி எடையளவு கட்டுப்பாடு அலுவலர், தொழிலாளர் துணை ஆய்வர் (தலைமையிடம்) ஆகியோர் உள்ளனர். ஒன்பது வட்டாரத் தொழிலாளர் துணை ஆணையர்கள் கூடுதல் எடையளவு சட்டமுறை கட்டுப்பாடு அலுவலர்களாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர். அதே போல் மாவட்ட அளவில் 28 தொழிலாளர் ஆய்வர்கள் துணை எடையளவு சட்டமுறை கட்டுப்பாட்டு அலுவலர்களாகவும், கோட்ட அளவில் பணிபுரியும் 67 தொழிலாளர் துணை ஆய்வர்கள் உதவி எடையளவு சட்டமுறை கட்டுப்பாட்டு அலுவலர்களாகவும் வட்ட அளவில் 218 தொழிலாளர் உதவி ஆய்வர்கள் எடையளவு சட்டமுறை ஆய்வர்களாகவும் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர்.

2.40. எடையளவு சட்டமுறை கட்டுப்பாடு அலுவலர் மற்றும் அவரது களப் பணியாளர்களிடம், தரப்படுத்தப்பட்ட எடைகள் மற்றும் அளவைகள் (அமலாக்கம்) சட்டம், 1985 மற்றும் தரப்படுத்தப்பட்ட எடைகள் மற்றும் அளவைகள் (பொட்டலப் பொருட்கள்) விதிகள், 1977 ஆகியவற்றை அமல்படுத்தும் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. தரப்படுத்தப்படாத எடைகள் மற்றும் அளவைகளையும், முத்திரையிடப்படாத எடைகள் மற்றும் அளவைகளையும் வியாபாரம் மற்றும் தொழிற்சாலைகளின் உற்பத்திப் பிரிவில் பயன்படுத்துதல் தடை செய்யப்பட்டுள்ளது.



2.41. வியாபாரிகள் பயன்படுத்தும் எடைகள் மற்றும் அளவைகளை பரிசீலனை செய்து முத்திரையிட, மாநிலம் முழுமையிலும் 101 முத்திரை ஆய்வாளர்கள் உள்ளனர். நுகர்வோர் நலனைக் காப்பதை அடிப்படையாகக் கொண்டுள்ள இச்சட்டம், திடீராய்வுகள் மற்றும் காலமுறைப்படி மேற்கொள்ளப்படும் கூட்டாய்வுகள் மூலம் அமல்படுத்தப்படுகிறது. இச்சட்டப் பிரிவுகளை மீறும் வகையில் செயல்படும் வியாபாரிகள் மீது குற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தரப்படுத்தப்பட்ட எடைகள் மற்றும் அளவைகள் (அமலாக்கம்) சட்டம், 1985 உடன் தரப்படுத்தப்பட்ட எடைகள் மற்றும் அளவைகள் (பொட்டலப் பொருட்கள்) விதிகள், 1977-ம் அமலாக்கப்பட்டு வருகின்றன. பொட்டலப் பொருட்களின் நிகர எடையை உற்பத்தியாளர்களின் இடங்களில் சோதனை செய்யும் பொருட்டு துறையில் உள்ள மின்னணு எடைக் கருவிகள் போன்றவற்றை ஆய்வாளர்கள் பயன்படுத்தி வருகின்றனர். பல்வேறு வகையான பொருட்கள் விற்பனை செய்யப்படும் இன்றைய வியாபாரச் சந்தையில் பல்வேறு வணிகச் சின்னங்களைக் கொண்ட பொருட்கள் விற்பனைக்கு வரும் நிலையில், நுகர்வோர் நலன் காக்க இந்த எடை மற்றும் அளவைகள் சட்டம் பெரிதும் உதவுகிறது.

**மாநிலத் தொழிலாளர் ஆலோசனை வாரியம்**

2.42. மாநிலத் தொழிலாளர் ஆலோசனை வாரியம், வேலையளிப்போர் பிரதிநிதிகள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள், அரசு தரப்பு பிரதிநிதிகள் ஆகியோரை உள்ளடக்கிய ஒரு முத்தரப்பு முதல்நிலை வாரியம் ஆகும். இவ்வாரியத்தின் தலைவர் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சராவர். இவ்வாரியம் அடிக்கடி கூடி, தொழிலாளர்களின் பொதுப் பிரச்சினைகள் மற்றும் சட்ட/விதித் திருத்தம் போன்ற முக்கியப் பிரச்சினைகளை விவாதித்து, அரசுக்கு பயனுள்ள ஆலோசனைகளை வழங்குகிறது.

## அத்தியாயம்-3

### குறைந்தபட்ச ஊதியச் சட்டம் என்ற பாதுகாப்பு வளையம்

3.1. குறைந்தபட்ச ஊதியச் சட்டம் என்பது வரலாற்றில் திருப்பு முனையாக அமைந்த ஒரு முக்கிய சட்டமாகும். குறைந்தபட்ச ஊதியத்தை வழங்க உறுதி செய்வது என்பது நற்பாங்கான மனித வாழ்வை உறுதி செய்வது என்பதாகும். குறைந்தபட்ச ஊதியம் என்பது பொதுவாக பிழைப்பூதியம் போன்றதேயாகும். அதை வழங்க மறுப்பது என்பது வாழ்க்கையில் மனிதத் தன்மையை அகற்றுவதற்கு ஒப்பாகும். குறைந்தபட்ச ஊதியச் சட்ட அட்டவணையில், அமைப்பு ரீதியற்ற 88 தொழில் இனங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின்கீழ், குழு முறை அல்லது அறிவிக்கை முறையை பின்பற்றி குறைந்தபட்ச ஊதிய விகிதங்களை அரசு நிர்ணயம்/ மறு நிர்ணயம் செய்கிறது. அட்டவணைப்படுத்தப்பட்ட தொழில் இனத்திற்கு குறைந்தபட்ச ஊதிய விகிதங்கள் முதன்முதலாக குழு முறையில் நிர்ணயம் செய்யப்படுகின்றது. ஏனெனில், அந்த நடைமுறையில், தொழிலின் தன்மை குறித்தும் தொழிலகங்களின் தாங்கும் சக்தி குறித்தும் ஆழமாக ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டியுள்ளது. இதற்குப் பிறகு குறைந்தபட்ச ஊதியங்கள் குறைந்தது 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை மறுநிர்ணயம் செய்யப்படுகின்றன. இவ்வாறு மறுநிர்ணயம் செய்யும் தருணங்களில் அறிவிக்கை முறை பின்பற்றப்படுகிறது. விலைவாசி ஏற்றத்தை ஈடுகட்டும் பொருட்டு, குறைந்தபட்ச ஊதிய நிர்ணயம் மற்றும் மறுநிர்ணயம் செய்யும்பொழுது அடிப்படை ஊதியத்துடன், விலைவாசிக் குறியீட்டுடன் இணைக்கப்பட்ட மாறுகின்ற அகவிலைப் படி என்கிற அகவிலைப் படியையும் அரசு நிர்ணயம் செய்கிறது.

3.2. குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம்/மறுநிர்ணயம் செய்யப்பட்டு அறிவிக்கை வெளியிடப்படும் சமயங்களில் இந்த அறிவிக்கைகளுக்கு எதிராக வேலையளிப்பவர்கள் நீதிமன்றங்களில் மனு தாக்கல் செய்து தடை உத்தரவு பெறுகின்றனர். இதன் விளைவாக, அரசால் அறிவிக்கை செய்யப்பட்ட குறைந்தபட்ச ஊதியம் தொழிலாளர்களுக்கு கிடைப்பது தடுக்கப்படுகிறது. இந்தத் தடையிலிருந்து விடுபட, இந்திய தொழிலாளர்கள் மாநாடு, தொழிலாளர் அமைச்சர்கள் மாநாடு போன்ற அமைப்புகளின் மூலம் குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தினை இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 9ஆவது அட்டவணையில் சேர்க்க,



தமிழ்நாடு அரசு பரிந்துரை செய்துள்ளது. இதனால், நீதிமன்றத்தில் தடையுத்தரவு பெற இயலாது. மேலும், ஒரு வழக்கில் எந்த ஒரு நிறுவனம் குறைந்தபட்ச ஊதியம் வழங்க இயலாத நிலையில் உள்ளதோ அந்நிறுவனம் இயங்குவதற்கு உரிமையுடையதல்ல என்று உச்ச நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளதை இங்கு சுட்டிக்காட்டலாம். குறைந்தபட்ச தினக்கூலி ரூ.45/-க்கு குறையாமல் இருக்கவேண்டும் என்பதே மத்திய அரசின் தற்போதைய கொள்கையாகும்.

3.3. 2001-ஆம் ஆண்டில் சிற்பத் தொழில் (கல் மற்றும் பிற பொருட்களாலான) குறைந்தபட்ச ஊதிய அட்டவணையில் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளது. மேலும் வைரம் பட்டை தீட்டும் தொழிலை குறைந்தபட்ச ஊதிய அட்டவணையில் சேர்த்திட அரசு முதனிலை அறிவிக்கை வெளியிட்டுள்ளது.

3.4. 2001-ஆம் ஆண்டில் அரசு கீழ்க்கண்ட 4 தொழில்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் மறுநிர்ணயம் செய்து இறுதி அறிக்கையை வெளியிட்டுள்ளது :—

1. உப்பளங்கள் தொழில்
2. மின்னணு தொழில்
3. கைத்தறிப் பட்டு நெசவுத் தொழில்
4. தீப்பெட்டி தயாரிக்கும் தொழில்

3.5. பொதுப் பொறியியல் மற்றும் கட்டமைப்புத் தொழிலுக்கு குறைந்தபட்ச ஊதியங்களை மறுநிர்ணயம் செய்வதற்கான முதனிலை அறிவிக்கையினை வெளியிட்டுள்ளது.

3.6. புகையிலை (பீடி தயாரிப்பு உள்பட - பீடி சுருட்டுதல் நீங்கலாக) தொழிலுக்கு குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்யும்பொருட்டு அரசு ஆலோசனைக் குழு அமைத்துள்ளது.

3.7. 1948ஆம் ஆண்டு குறைந்தபட்ச ஊதியச் சட்டப்பிரிவு 20(1)-ன் படி, கேட்பு மனுக்களை விசாரணை செய்ய 9 வட்டாரத் தொழிலாளர் துணை ஆணையர்கள் உரிய அதிகாரம் பெற்றவர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

[2002 மே 3

## அத்தியாயம்-4

## சமூக பாதுகாப்புச் சட்டங்கள்

### வேலையாள் இழப்பீட்டுச் சட்டம், 1923

4.1. தொழிலாளர்கள் பணியில் இருக்கும்போது விபத்து ஏற்பட்டால் தொழிலாளர்களுக்கு இழப்பீட்டுத் தன்மையைப் பொறுத்து இழப்பீடு வழங்கவும், இறக்க நேரிட்டால் அவர்தம்மைச் சார்ந்தோருக்கு இழப்பீடு அளிக்கவும் இச்சட்டம் வகை செய்கிறது. மேலும், இச்சட்டத் திருத்தத்தின் பயனாக தினக்கூலி (Casual) பணியாளர்களும் இச்சட்ட சலுகையை பெறத் தகுதியுடையவர்களாகின்றனர். 9 வட்டாரத் தொழிலாளர் துணை ஆணையர்கள் இச்சட்டத்தின்கீழ் வேலையாள் இழப்பீட்டு ஆணையர்களாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர்.

4.2. ஆணையர்களால் வேலையாள் இழப்பீட்டுச் சட்டத்தின்கீழ் தீர்ப்பளிக்கப்பட்ட தொகை சம்பந்தப்பட்ட வேலையளிப்பவரால் வைப்பீடு செய்யப்பட்டு, மனுதாரர்களுக்கு அளிக்கப்படுகிறது. தீர்ப்பளிக்கப்பட்ட தொகை வேலையளிப்பவரால் வைப்பீடு செய்யப்படாத நேர்வுகளில், துணை ஆணையர்களால், மாவட்டாட்சியர்கள் மூலம் வருவாய் வசூல் சட்டத்தின்கீழ் வசூல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

### மகப்பேறு நலச் சட்டம், 1961

4.3. மகப்பேறு காலங்களில் பெண் தொழிலாளர் பணிகளை முறைப்படுத்துதலுக்கும், மகப்பேறு கால சலுகைகள் வழங்குவதற்கும் ஏதுவாக இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இச்சட்டத்தின்படி, குழந்தைப்பேற்றிற்காக 12 வாரங்கள் விடுப்பு, மருத்துவச் சான்றிதழின் பேரில் ஒரு மாத மருத்துவ விடுப்பு, கருச்சிதைவிற்காக 6 வார விடுப்பு முதலிய சலுகைகள் உள்ளன. மேலும், பேறுகாலத்திற்கு முந்தைய மற்றும் பேறுகாலத்திற்குப் பிந்தைய கவனிப்பை நிர்வாகம் இலவசமாக அளிக்கவில்லையெனில், ரூ.250/-மருத்துவப் போனசாக வழங்க சட்டம் வழிவகை செய்கிறது. இச்சட்டத்தின்கீழ், மகளிர் தொழிலாளர் ஆய்வாளர்கள், தொழிலாளர் ஆய்வர்கள், தோட்ட நிறுவன ஆய்வர்கள், தொழிலாளர் துணை ஆய்வர்கள், தொழிலாளர் உதவி ஆய்வர்கள் ஆகியோர் ஆய்வர்களாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர்.



2002 மே 3]

### போனஸ் வழங்குதல் சட்டம், 1965

4.4. இச்சட்டம், 10 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரியும். நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்குப் பொருந்தும். போனஸ் சட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்ட நிறுவனங்களில், தொழிலாளர்கள் எண்ணிக்கை 10-க்கு குறையும் நேர்வுகளிலும், இந்நிறுவனங்கள் தொடர்ந்து போனஸ் வழங்க வேண்டும். நஷ்டத்தில் இயங்கினாலும் நிறுவனங்கள் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச போனஸ் (8.33%) வழங்கவேண்டும். மேலும், அதிகபட்சமாக, சம்பளத்தில் 20% போனஸாகப் பெற இச்சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

4.5. தமிழ்நாட்டில் இச்சட்டத்தை அமல்படுத்த தொழிலாளர் இணை ஆணையர்கள், தொழிலாளர் துணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள், தொழிலாளர் அலுவலர்கள் அவரவர் ஆட்சி எல்லைக்கேற்ப ஆய்வராக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

### பணிக்கொடை பட்டுவாடாச் சட்டம், 1972

4.6. தொழிலாளர்களுக்கு பணிக்கொடை வழங்குவதற்கான திட்டம் இச்சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. 5 வருடம் தொடர்ச்சியாக பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு அவர்கள் வயது முதிர்வு அல்லது பணிமுடிவு அல்லது பதவி விலகல் காரணமாக பணியிலிருந்து விடுவிக்கப்படும்போது பணிக்கொடை வழங்கப்படவேண்டும். மேலும் இறப்பு (அல்லது) விபத்து (அல்லது) நோய் காரணமாக இயலாமையின் போதும் பணிக்கொடை வழங்கப்படவேண்டும்.

4.7. இச்சட்டத்தின்கீழ், வட்டாரத் தொழிலாளர் துணை ஆணையர்கள் அலுவலகங்களிலுள்ள 8 தொழிலாளர் உதவி ஆணையர்கள் கட்டுப்பாட்டு அதிகாரிகளாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர். இச்சட்டத்தின்கீழ், மூன்று மண்டல தொழிலாளர் இணை ஆணையர்களும் மேல்முறையீட்டு அதிகாரிகளாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர்.

### சம ஊதியச் சட்டம், 1976

4.8. சம ஊதியச் சட்டம், 1976, ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு சம வேலைக்கு சம ஊதியம் வழங்கவும் மற்றும் வேலை வாய்ப்புத் தொடர்புடைய இனங்களில் பாலியலின் அடிப்படையிலான வேற்றுமை தடுப்பதற்காகவும், பெண்

[2002 மே 3

தொழிலாளர்களுக்கு அதிக வேலை வாய்ப்பு பெற்றுத்தரும் வகையிலும் ஏற்படுத்தப்பட்டது. தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை செயலாளரைத் தலைவராகவும், தொழிலாளர் இணை ஆணையாளர் (சமரசம்) அவர்களை செயலாளராகவும் கொண்டு இச்சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள ஆலோசனைக் குழு, அரசால் அறிவிக்கை செய்யப்பட்டுள்ள வேலை இனங்கள் மற்றும் நிறுவனங்களில் பெண்கள் பணி தொடர்பாக அரசுக்கு ஆலோசனை வழங்கி வருகிறது.

4.9. சம வேலைக்கு சம ஊதியம் தொடர்பாக தாக்கல் செய்யப்படும் கேட்பு மனுக்களை தீர்வு செய்யும் அதிகாரமுடையவர்களாக தொழிலாளர் அலுவலர்கள் மற்றும் தொழிலாளர் உதவி ஆணையர்களை அரசு அறிவிக்கை செய்துள்ளது. ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு சம வேலைக்கு சம ஊதியம் வழங்கப்படாத நேர்வுகளில் தாக்கல் செய்யப்படும் கேட்பு மனுக்களை இவ்வலுவலர்கள் தீர்வு செய்கிறார்கள்.

### தமிழ்நாடு பிழைப்பூதியம் வழங்கல் சட்டம், 1981

4.10. தொழிலாளர்கள் பணியிலிருந்து தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டு, விசாரணை நிலுவையில் இருக்கும் காலத்தில், வேலையளிப்பவர் இச்சட்டப்படி பிழைப்பூதியம் வழங்க வேண்டி இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இச்சட்டத்தின்படி, தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர், முதல் 90 நாட்களுக்கு இறுதியில் பெறப்பட்ட ஊதியத்தில் 50 சதவிகிதமும், 90 நாட்களுக்கு மேல் 180 நாட்கள் வரை 75 சதவிகிதமும் 180 நாட்களுக்கு மேல் முழு ஊதியமும் பெறத் தகுதியுடையவராகிறார்.

4.11. இச்சட்டத்தின் கீழ், 8 வட்டாரத் தொழிலாளர் துணை ஆணையர்கள் அலுவலகத்திலுள்ள தொழிலாளர் உதவி ஆணையர்கள் அதிகாரமுடையவர்களாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர். 9 வட்டாரத் தொழிலாளர் துணை ஆணையர்கள் இச்சட்டத்தின் கீழ் மேல்முறையீட்டு அதிகாரிகளாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர்.



2002 மே 3]

## அத்தியாயம் - 5

## நல வாரியங்களின் செயல்பாடுகள்

### தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்

5.1. தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம், 1972-ன் கீழ் வேலையளிப்போர், தொழிலாளர் மற்றும் அரசு ஆகியோர் அளிக்கும் நல நிதிப் பங்குத் தொகையினைக் கொண்டு பல்வேறு தொழிலாளர்களும் அவர்தம் குடும்பங்களும் பயன்பெறும் வகையில் நலத் திட்டங்களை இவ்வாரியம் செயல்படுத்தி வருகிறது.

5.2. தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின்படி, தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் மாண்புமிகு மாநில தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களைத் தலைவராகக் கொண்டும், நிர்வாகம் மற்றும் தொழிலாளர்களின் பிரதிநிதிகளை உறுப்பினர்களாகக் கொண்டும் செயல்பட்டு வருகிறது.

5.3. இவ்வாரியம் தமிழகம் முழுவதிலும் 71 இடங்களில் தொழிலாளர் நல மையங்களை நடத்தி வருகிறது. இவற்றில் தையற் பயிற்சி பிரிவு, குழந்தைகள் காப்பகப் பிரிவு மற்றும் படிப்பக பிரிவு ஆகியவை இணைந்து செயல்படுகின்றன. ஒவ்வொரு தொழிலாளர் நல மையமும் பயிற்சி பெற்ற அமைப்பாளர், பாலசேவிகா, மற்றும் நடத்துனரைக் கொண்டு நடத்தப்பட்டு வருகின்றது. தையற்பயிற்சி பிரிவுகளில் தொழிலாளர்களின் மனைவி மற்றும் அவர்களைச் சார்ந்த திருமணமாகாத மகள் மற்றும் சகோதரிகளுக்கு தையற் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி காலங்களில் உதவித் தொகையாக மாதம் ரூ.80/- வழங்கப்படுகிறது. இப்பயிற்சி காலம் ஓராண்டாகும். பயிற்சியின் முடிவில், கல்வித் தகுதியுள்ள பயிற்சியாளர்கள் அரசு நடத்தும் தேர்வுக்கு அனுப்பப்படுகிறார்கள். ஒவ்வொரு மையத்திலும் கீழ்நிலை/மேல்நிலை தேர்வில் முதல் மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெறுபவர்களுக்கு தலா ஒரு தையல் இயந்திரம் பரிசாக வழங்கப்படுகிறது. இவ்வாண்டில் 111 பயிற்சியாளர்களுக்கு தையல் இயந்திரம் பரிசாக வழங்கப்பட்டுள்ளது. இதனால் ஆன செலவு ரூ.2,78,605/-; தையற் பயிற்சி பிரிவில் பயனடைந்த பயிற்சியாளர்கள் 4,867; செலவிடப்பட்ட தொகை ரூ.13,14,877/-. குழந்தைகள் பிரிவில் பயிலும் குழந்தைகளுக்கு இலவச சத்துணவு, பால், பழம், முட்டை ஆகியவை வழங்கப்படுகின்றன. அனைத்து குழந்தைகளுக்கும் தகுதி பெற்ற மருத்துவர்களால் மருத்துவ பரிசோதனை

செய்யப்படுகிறது. ஒவ்வொரு வருடமும் இரண்டு ஜோடி டெரிகாட்டன் சீருடைகள் குழந்தைகளுக்கு வழங்கப்படுகின்றன. இதனால் பயனடைந்த குழந்தைகளின் எண்ணிக்கை 3,527; செலவிடப்பட்ட தொகை ரூ.9,45,098/- மேலும், ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும் 10-வது, 12-வது வகுப்புத் தேர்வுகளில் முதல் மற்றும் இரண்டாவது மதிப்பெண் பெறும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு முறையே ரூ.1,000/- மற்றும் ரூ.500/- பரிசுத் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது.

5.4. மாமல்லபுரம், குற்றாலம் மற்றும் வால்பாறை ஆகிய இடங்களில் தொழிலாளர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தினர் தங்குவதற்காக ஓய்வு இல்லங்கள் கட்டப்பட்டுள்ளன. இங்கு மிகமிகக் குறைந்த வாடகையே வசூலிக்கப்படுகிறது. மேற்கண்ட இடங்களில் தங்கி பயன்பெற்றவர்களின் எண்ணிக்கை 6,551.

5.5. தொழிலாளர் சம்பந்தபபட்ட பேச்சுவார்த்தைகளுக்காக சென்னைக்கு வரும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தங்குவதற்காக "ஜீவா இல்லம்" என்ற ஓய்வு இல்லம், டி.எம்.எஸ். வளாகம், சென்னை-6-ல் கட்டப்பட்டுள்ளது. மேலும், அதிக அளவில் தொழிற் சங்கப் பிரதிநிதிகள் தங்க வசதியாக ஜீவா இல்லத்திற்கு அருகில் இணைப்புக் கட்டடமும் தற்போது கட்டப்பட்டுள்ளது. மேற்கண்ட ஓய்வு இல்லத்தில் தங்கி, பயன்பெற்றோர் எண்ணிக்கை 7,129.

5.6. காச நோயால் அவதியுறும் தொழிலாளர்கள் மருத்துவமனைகளில் தங்கி, சிகிச்சை பெறுவதற்காக தாம்பரம் (26 படுக்கைகள்), திருப்பூர் (26 படுக்கைகள்), ஆசாரிப்பள்ளம் (30 படுக்கைகள்), ஆஸ்டின்பட்டி (20 படுக்கைகள்) மற்றும் கீழ்பெண்ணாத்தூர் (24 படுக்கைகள்) ஆகிய இடங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளில் இவ்வாரியம் தனிப் பிரிவைக் கட்டியுள்ளது.

5.7. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் "உழைப்பவர் உலகம்" என்ற மாதாந்திர இதழை வெளியிட்டு வருகிறது. இதனை தற்போது 4,467 சந்தாதாரர்கள் வாங்கிப் பயன்பெற்று வருகின்றனர்.

5.8. இவ்வாரியம் நடைமுறைப்படுத்தும் பல்வேறு நலத் திட்டங்கள் மற்றும் அவைகளின் மூலம் பயன்பெற்றவர்களின் விவரம் கீழே தரப்பட்டுள்ளது.



3. தொழிலாளர்களின் குழந்தைகள் படிப்பிற்காக உதவித் தொகை வழங்கிய விவரம்

(1-01-2001 முதல் 31-12-2001 முடிய)

| | | பயன் பெற்றவர்கள் | வழங்கப் பட்ட தொகை. ரூ. |
|---|---|---|---|
| 1 | பொறியியல் பட்டப் படிப்பு | 92 | 1,10,400 |
| 2 | பொறியியல் பட்டயப் படிப்பு | 120 | 86,400 |
| 3 | மருத்துவப் படிப்பு | 14 | 14,400 |
| 4 | மருத்துவப் பட்டயப் படிப்பு | 7 | 5,040 |
| 5 | சட்டப் படிப்பு | 5 | 6,000 |
| 6 | வேளாண்மைப் பட்டப் படிப்பு | 2 | 2,400 |
| 7 | தொழிற் பயிற்சிக் கல்வி | 61 | 30,500 |
| 8 | மேல் நிலைக் கல்வி | 95 | 57,000 |
| 9 | கல்வி ஊக்கத் தொகை | 102 | 85,000 |

1-1-2001 முதல் 31-12-2001 முடிய

| | | |
|---|---|---|
| 1. | தொழிலாளர் நல மையங்கள் (குழந்தைகள் காப்பகம், தையற் பயிற்சி பிரிவு மற்றும் படிப்பகம் இணைந்தது) | 71 |
| 2 | பயன்பெற்ற தையற்பயிற்சியாளர்கள் | 4,867 |
| | பயன்பெற்ற தொழிலாளர் குழந்தைகள் | 3,527 |

**4. ஏனைய நலத்திட்டங்கள் மூலம் பயன் பெற்றவர்கள்**

| | | |
|---|---|---|
| (அ) தொழிலாளர்களுக்கு மூக்குக் கண்ணாடி செலவுத் தொகையை திரும்ப அளித்தல் | 825 | 1,63,490 |
| (ஆ) தொழிலாளர் பிள்ளைகளுக்கு தட்டச்சு, சுருக்கெழுத்து கல்வி, மற்றும் தேர்வுக் கட்டணத் தொகை ஈடுசெய்தல் | 51 | 8,100 |
| (இ) பாட நூல் உதவித் தொகை | 383 | 19,785 |
| (ஈ) ஈமச் சடங்கு உதவித் தொகை | 205 | 1,02,500 |
| (உ) காது கேட்கும் கருவிகள் வழங்குதல் | 1 | 1,000 |
| (ஊ) ஊனமுற்றவர்களுக்கு மூன்று சக்கர வண்டி வழங்குதல் | 2 | 6,100 |
| (எ) குழந்தைகள் காப்பகம் | 3,527 | 9,45,098 |
| (ஏ) தையற் பயிற்சி வகுப்பு | 4,867 | 13,14,877 |
| (ஐ) தையல் இயந்திரம் பரிசு | 111 | 2,78,605 |
| மொத்தம் | **10,470** | **32,36,695** |

**2001 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட புதிய திட்டங்கள்**

5.9. மாவட்டம் தோறும் அமைந்துள்ள நல மையங்களில் ஏற்கெனவே செயல்பட்டு வரும் 52 குழந்தைகள் காப்பகங்கள் தவிர 2001 ஆம் ஆண்டில் புதியதாக 19 மையங்களில் குழந்தைகள் காப்பகங்கள் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மேலும், ஏற்கெனவே செயல்பட்டு வரும் 7 படிப்பகங்கள் தவிர, அனைத்து மாவட்டங்களிலும் பரவலாக 64 புதிய படிப்பகங்கள் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. தொழிலாளர் நல வாரியத்திற்கான நல நிதி செலுத்தாதோர் எண்ணிக்கையை குறைக்கும் வகையில், தொழிலாளர் ஆணையர் மற்றும் தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளரால் முனைப்பான தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.





**தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம்**

5.10. கட்டுமானப் பணியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் நலனுக்காக 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் (கட்டுமானத் தொழிலாளர்கள்) நலத் திட்டத்தினை அரசு உருவாக்கியுள்ளது. கட்டுமானத் தொழிலாளர்களின் நலனுக்காக இத்திட்டத்தினை செயல்படுத்தும் வகையில் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தினை அரசு அமைத்துள்ளது. 1-11-1994 முதல் இத்திட்டம் அமல்படுத்தப்பட்டு வருகின்றது.

5.11. இத்திட்டத்தின்படி கட்டுமானத் தொழிலாளர்களுக்கான நலத் திட்டங்களை அமல்படுத்துவதற்காக "உடல் உழைப்புத் தொழிலாளர்கள் பொது நல நிதி" ஏற்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் எல்லைக்குள் கட்டுமானப் பணியினை மேற்கொள்ளும் எந்த ஒரு நபரும் அக்கட்டுமானப் பணியின் மொத்த மதிப்பீட்டில் 0.3 சதவிகிதத்தினை இந்நிதிக்கு செலுத்த வேண்டும். அரசுத் துறை மற்றும் அரசுத் துறை நிறுவனங்கள் நீங்கலாக இதர தனி நபர்கள் கட்டடம் கட்டும்போது, அவர்களிடமிருந்து கட்டுமானப் பணியின் மொத்த மதிப்பீட்டில் 0.3 சதவிகிதத்தினை உள்ளாட்சி அமைப்புகள் வசூலித்து, அத்தொகையினை தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்திற்கு செலுத்தி வருகின்றன. அரசுத் துறை மற்றும் அரசுத் துறை நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் ஆகியவற்றிடமிருந்து அவை மேற்கொள்ளும் கட்டுமானப் பணிக்கான பங்களிப்புத் தொகை வாரியத்தினால் நேரடியாகப் பெறப்பட்டு வருகின்றது. இந்த வாரியத்திற்கு 31-12-2001 வரை ரூ.39,32,49,151/- பங்களிப்பு தொகையாக பெறப்பட்டுள்ளது. இதில் ரூ.8,55,59,144/- தனியார் கட்டடங்களைத் தவிர ஏனைய கட்டுமானப் பணி மேற்கொள்ளும் அரசு துறைகளிடமிருந்தும், அரசு துறை நிறுவனங்களிடமிருந்தும், தன்னாட்சி அமைப்புகளிடமிருந்தும் பெறப்பட்டதாகும்.

5.12. இவ்வாரியத்தில் 31-12-2001 வரை பதிவு செய்து கொண்ட கட்டுமானத் தொழிலாளர்களின் எண்ணிக்கை விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

[2002 மே 3

| வ. எண் | மாவட்டம் | 1-11-94 முதல் 31-3-97 வரை | 1-04-97 முதல் 31-03-98 வரை | 1-4-98 முதல் 31-3-99 வரை | 1-4-99 முதல் 31-3-00 வரை | 1-4-00 முதல் 31-3-01 வரை | 1-4-01 முதல் 31-12-01 வரை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | சென்னை | 10915 | 13450 | 21860 | 19977 | 19450 | 6681 | 92333 |
| 2 | கோவை | 8391 | 2025 | 3500 | 6079 | 8668 | 4463 | 32996 |
| 3 | மதுரை | 6297 | 3272 | 13995 | 12700 | 11283 | 7328 | 55005 |
| 4 | திருச்சி | - | 4362 | 9551 | 8235 | 9504 | 5162 | 36834 |
| 5 | சேலம் | - | 8734 | 10707 | 13630 | 162570 | 7699 | 57027 |
| 6 | திருநெல்வேலி | - | 10025 | 4387 | 15386 | 14917 | 2687 | 47402 |
| 7 | கடலூர் | - | - | - | - | 5998 | 2442 | 8420 |
| 8 | வேலூர் | - | - | - | - | 4686 | 6798 | 11484 |
| 9 | திண்டுக்கல் | - | - | - | - | 9344 | 6787 | 16131 |
| 10 | காஞ்சிபுரம் | - | - | - | - | 3962 | 3552 | 7514 |
| 11 | திருவாரூர் | - | - | - | - | 674 | 2961 | 3635 |
| 12 | தஞ்சாவூர் | - | - | - | - | 1019 | 2611 | 3660 |
| 13 | விழுப்புரம் | - | - | - | - | - | 4941 | 4941 |
| 14 | கன்னியாகுமரி | - | - | - | - | - | 7000 | 7000 |
| 15 | நீலகிரி | - | - | - | - | - | 60 | 60 |
| | மொத்தம் | 25603 | 41868 | 64000 | 76007 | 105762 | 71202 | 384442 |

5.13. மேற்குறிப்பிட்ட தொழிலாளர்களிடமிருந்து பதிவுக் கட்டணமாக தலா ரூ.25/- வீதம் மொத்தம் ரூ.96,11,050/- பெறப்பட்டுள்ளது. பதிவினை இரண்டாண்டுக்கு ஒருமுறை ரூ.10/- புதுப்பித்தல் கட்டணம் செலுத்தி புதுப்பித்துக் கொள்ளவேண்டும். வாரியத்தில் பதிவு செய்து கொண்ட அனைத்துக் கட்டுமானத் தொழிலாளர்களுக்கும் அடையாள அட்டைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.



2002 மே 3]

**வாரியத்தால் செயல்படுத்தப்படும் நலத் திட்டங்கள்**

5.14 பதிவு செய்து கொண்டுள்ள அனைத்துக் கட்டுமானத் தொழிலாளர்களும் குழு விபத்துத் திட்டத்தின்கீழ் காப்பீடு செய்யப்பட்டுள்ளனர். காப்பீடு செய்வதற்கான பிரிமியத் தொகையை வாரியச் செலவில் வாரியமே செலுத்தி வருகிறது.

1. பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர் விபத்தில் இறந்தால் ரூ.1 இலட்சம் காப்பீடு தொகையாகவும், விபத்தில் ஊனமுற்றால் ஊனத்தின் தன்மைக்கேற்ப ரூபாய் ஒரு இலட்சம் வரை காப்பீடு தொகை வழங்கப்படுகிறது.

2. பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளியின் மகன்/மகள் 10ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றால் ரூ.1,000/-ம் 12ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றால் ரூ.1,500/-ம் கல்வி உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. மேலும், கீழ்க்கண்ட உயர்கல்விக்கும் உதவித் தொகை வழங்கப்படுகிறது.

| வ. எண் | படிப்பு பற்றிய விவரம் | கல்வி உதவித்தொகை | |
|---|---|---|---|
| | | வெளியிலிருந்து படிப்பவர்கள் ரூ. | விடுதியில் தங்கி படிப்பவர்கள் ரூ. |
| 1 | இளங்கலை (கலை, விஞ்ஞானம் மற்றும் சட்டம்) | 1,500 | 1,750 |
| 2 | பொறியியல், மருத்துவம், சட்டம், கால்நடை பராமரிப்பு விஞ்ஞானம் மற்றும் அவை தொடர்புடைய படிப்புகள் | 2,000 | 4,000 |
| 3 | ஐ.டி.ஐ. மற்றும் தொழில்நுட்ப படிப்புகள் | 1,000 | 1,200 |
| 4 | பட்ட மேற்படிப்புகள் | 2,000 | 3,000 |
| 5 | தொழிற்கல்வி மேற்படிப்பு | 4,000 | 6,000 |

3. பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளியின் திருமணத்திற்கும் அவரது மகன்/மகள் திருமணத்திற்கும் ரூ.2,000/- திருமண உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

[2002 மே 3

4. பதிவு பெற்ற பெண் கட்டுமானத் தொழிலாளிக்கு மகப்பேறு/கருச்சிதைவு/கருக்கலைப்புக்கு ரூ.2,000/- உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

5. பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளி இயற்கையாக மரணமுற்றால் அன்னாரது நியமனதாரருக்கு ரூ.10,000/- இயற்கை மரண உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

6. பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளியின் ஈமச் சடங்கிற்கு (விபத்தில் மரணமுற்றாலோ அல்லது இயற்கை மரணமுற்றாலோ) அன்னாரது நியமனதாரருக்கு ரூ.2,000/- உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

5.15. 01-01-2001 முதல் 31-12-2001 முடிய கட்டுமானத் தொழிலாளர்களுக்கு வாரியத்தால் அளிக்கப்பட்ட நலத்திட்டங்களின் விவரம் பின்வருமாறு:—

| வ. எண் | நலத் திட்டம் | | பயனாளிகளின் எண்ணிக்கை | வழங்கப் பட்ட தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | மரண விபத்து | | 67 | 66,50,000 |
| 2 | காய விபத்து | | 53 | 6,83,800 |
| 3 | ஈமச்சடங்கு உதவித் தொகை | | 737 | 14,66,500 |
| 4 | கல்வி உதவித் தொகை | 10ஆம் வகுப்பு | 842 | 7,58,250 |
| | | 12ஆம் வகுப்பு | 558 | 7,51,000 |
| | | உயர் கல்வி உதவித் தொகை | 5 | 7,500 |
| 5 | திருமண உதவித் தொகை | | 742 | 9,55,000 |
| 6 | மகப்பேறு உதவித் தொகை | | 28 | 56,000 |
| 7 | இயற்கை மரணம் | | 672 | 47,50,000 |
| | மொத்தம் | | **3704** | **1,60,78,050** |



2002 மே 3]

**புதிய திட்டங்கள்**

5.16 வாரியத்தில் பதிவு பெற்ற தகுதியுடைய கட்டுமானத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் விரைவில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதேபோன்று, தொழிலாளர்கள் கண் கண்ணாடி வாங்கும் செலவை ஈடுசெய்யும் தொகையாக ரூ.250/-ஐ ஆண்டொன்றுக்கு 1,000 நபர்களுக்கு வழங்குவது குறித்து நலத்திட்டத்தில் திருத்தம் கொண்டுவர உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம் மற்றும் இதர நல வாரியங்கள்**

5.17. அரசு, அமைப்பு சாரா தொழிலாளர் நலனுக்கென கீழ்க்கண்ட நல வாரியங்களையும் அமைத்து ஆணையிட்டுள்ளது.

1. தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம்
2. தமிழ்நாடு ஆட்டோ மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம்
3. தமிழ்நாடு சலவைத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம்
4. தமிழ்நாடு முடிதிருத்துவோர் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம்
5. தமிழ்நாடு தையல் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம்
6. தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம்
7. தமிழ்நாடு கைவினைத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம்
8. தமிழ்நாடு காலணி மற்றும் தோல் பொருட்கள் தயாரிப்பு மற்றும் தோல் பதனிடும் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம்
9. தமிழ்நாடு ஓவியர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம்

10. தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெசவுத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம்

5.18 இவ்வாரியங்களில் பதிவு செய்து கொண்டுள்ள உடலுழைப்புத் தொழிலாளர்களுக்கு கீழ்க்கண்ட நலத் திட்ட உதவிகள் கிடைத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

1. தொகுதி தனி நபர் விபத்து காப்புறுதி
2. ஈமச் சடங்கு நிதி உதவி
3. இயற்கை மரணத்திற்கான நிதி உதவி
4. உடலுழைப்புத் தொழிலாளர்களின் மகள் அல்லது மகன் கல்வி நிதி உதவி
5. திருமண நிதி உதவி
6. பெண் உடலுழைப்புத் தொழிலாளர்களுக்கு மகப்பேறு மற்றும் கருச்சிதைவு நிதி உதவி

5.19. 31-12-2001 வரை இவ்வாரியத்தில் பதிவு செய்து கொண்ட தொழிலாளர்களிடமிருந்து பதிவுக் கட்டணமாகவும், ஆட்டோ மற்றும் வாடகை ஊர்தி ஓட்டும் தொழிலில் வேலையளிப்பவர் பங்காகவும் ரூ.13,33,22,963/- வசூல் செய்யப்பட்டுள்ளது.

5.20. இவ்வாரியங்களில் பதிவு செய்துள்ளவர்களுக்கு 01-04-2001 முதல் 31-12-2001 வரை கீழ்க்கண்ட நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

| வ. எண் | உதவித் தொகை திட்டங்கள் | பயனாளிகளின் எண்ணிக்கை | மொத்தம் ரூ. |
|---|---|---|---|
| 1 | கல்வி உதவி திட்டம் | 476 | 5,85,000 |
| 2 | மகப்பேறு நலத்திட்டம் | 17 | 34,000 |
| 3 | திருமண உதவி திட்டம் | 199 | 3,98,000 |
| 4 | இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவி திட்டம் | 31 | 3,72,000 |
| 5 | ஈமச்சடங்கு உதவி திட்டம் | 3 | 6,000 |
| 6 | குழு தனிநபர் விபத்து காப்பீடு திட்டம் | 3 | 3,00,000 |
| | மொத்தம் | 729 | 16,95,000 |





## அத்தியாயம்-6

### தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம்

6.1. தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம் 1973-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. பின்னர் 1978-ஆம் ஆண்டில் இக்கல்வி நிலையம் முதன்மை நிலைக்கு உயர்த்தப்பட்டது. 7-10-1987 வரை அரசுத் துறையாக செயல்பட்டு வந்த இந்நிறுவனம், பின்னர் தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச்சட்டம் 1975-ன்கீழ் பதிவு செய்யப்பட்டு, 8-10-1987 முதல் தன்னாட்சி நிறுவனமாக செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களை தலைவராகக் கொண்ட ஆட்சிமன்றக் குழு இந்நிறுவனத்தின் நிர்வாகத்தினை மேற்பார்வையிட்டும், வழிகாட்டியும் வருகிறது. தொழிலாளர் இணை ஆணையர் தரத்தில் நியமிக்கப்பட்ட இக்கல்வி நிலையத்தின் இயக்குநர், ஆட்சிக்குழு உறுப்பினர்-செயலராக பணிபுரிந்து வருகிறார். இக்கல்வி நிலையத்தின் முக்கிய நோக்கங்கள்:—

1. ஆரோக்கியமான தொழிற்சங்கத்தை உருவாக்குதல்.
2. நிர்வாகத்திற்கும், தொழிலாளர்களுக்கும் இடையே இணக்கமான உறவினை ஏற்படுத்துதல்.
3. தொழிலாளர் மற்றும் தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையில் பணியாற்றும் அலுவலர்களின் திறமைகளை வளர்த்தல்.
4. தொழிலாளர் தொடர்புடைய நேர்வுகள் குறித்து ஆராய்ச்சிகள் மேற்கொள்ளுதல்.
5. தொழிலாளர் மேலாண்மையில் பட்டயப் படிப்புகள் நடத்துவதன் வாயிலாக எதிர்கால தொழில் நிர்வாகத்திற்குத் தகுதியான மனிதவள மேலாளர்களை உருவாக்குதல்-முதலியன ஆகும்.

6.2. இக்கல்வி நிலையம், தொழிலாளர் சம்பந்தப்பட்ட பயிற்சிகள், கருத்தரங்குகள் மற்றும் பயிலரங்குகளை தொழிலாளர் துறை அலுவலர்களுக்கும், பொதுத்துறை மற்றும் தனியார் துறை தொழிலகங்களில் நிர்வாகப் பணியாற்றுபவர்களுக்கும் தொடர்ந்து நடத்தி வருகிறது. மேலும், இக்கல்வி நிலையம் ஓராண்டு பகுதிநேர தொழிலாளர்

[2002 மே 3

நிர்வாக முதுநிலை பட்டயப் படிப்பு (பி.ஜி.டி.எல்.ஏ) ஒன்றினையும், தொழிலாளர் மேலாண்மை இளங்கலை பட்டப் படிப்பு (பி.எல்.எம்), தொழிலாளர் மேலாண்மை முதுகலை பட்டப் படிப்பு (எம்.எல்.எம்), ஆகிய முழுநேர பட்டப் படிப்புகளையும் நடத்தி வருகிறது. இக்கல்வி நிலையம் நடத்தும் தொழிலாளர் மேலாண்மை இளங்கலை பட்டப் படிப்பு, தொழிலாளர் மேலாண்மை முதுகலை பட்டப் படிப்பு ஆகிய இரண்டும் சென்னை பல்கலைகழகத்துடன் இணைக்கப் பெற்றவையாகும். மேலும் 2001-ஆம் ஆண்டு முதல் இக்கல்வி நிலையம் பகுதிநேர மற்றும் முழுநேர பி.எச்டி. ஆராய்ச்சி வகுப்புகள் நடத்தவும் சென்னை பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இக்கல்வி நிலையத்தால் ஒவ்வொரு வருடமும் நடத்தப்படும் நுழைவுத் தேர்வின் வாயிலாக தொழிலாளர் மேலாண்மை இளங்கலை பட்டப் படிப்பில் 50 மாணவர்களும், தொழிலாளர் மேலாண்மை முதுகலை பட்டப் படிப்பில் 30 மாணவர்களும், தொழிலாளர் நிர்வாக முதுகலை பட்டயப் படிப்பில் 65 மாணவர்களும் சேர்க்கப்படுகின்றனர்.

6.3. இக்கல்வி நிலையம் 2001-ஆம் ஆண்டில் 38 கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிகள் நடத்தியுள்ளது. இதன்மூலம் மொத்தம் 2,116 நபர்கள் அப்பயிற்சிகளில் பங்கேற்று பயனடைந்துள்ளனர்.

6.4. 2001-ஆம் ஆண்டில் இக்கல்வி நிலையத்திலிருந்து பட்டப் படிப்பு/பட்டயப் படிப்பு முடித்து வெளிவந்துள்ளவர்களின் விவரம் பின்வருமாறு:—

| வ. எண் | பயிற்சி | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | தொழிலாளர் மேலாண்மை இளங்கலை பட்டப் படிப்பு | 46 |
| 2. | தொழிலாளர் மேலாண்மை முதுகலை பட்டப் படிப்பு | 33 |
| 3. | தொழிலாளர் நிர்வாகம் முதுகலை பட்டயப் படிப்பு | 88 |
| | மொத்தம் | 167 |



2002 மே 3]

## அத்தியாயம்-7

## முதலமைச்சரின் 15 அம்சத் திட்டம்

### தமிழகத்தில் குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழித்தல்

7.1 மாண்புமிகு முதல்வர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலின் அடிப்படையில் தமிழ்நாட்டைச் சிறந்த மாநிலமாக்குவதற்கான திட்டத்தில் 'குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழித்தல்' ஒரு முக்கிய அம்சமாக இடம் பெற்றுள்ளது.

7.2. நமது குழந்தைகளைப் பொறுத்தவரையில், நாம் சில தார்மீகக் கடமைகளைக் கொண்டிருக்கிறோம். ஐக்கிய நாடுகள் சபையின் குழந்தைகள் உரிமைகளுக்கான சாசன விதி 32 பின்வருமாறு குறிப்பிடுகிறது. 'பொருளாதாரச் சுரண்டலிலிருந்தும், அபாயகரமான வேலைகளிலிருந்தும் அல்லது குழந்தைகளின் கல்விக்கு இடையூறு விளைவிக்கக்கூடிய சூழல்களிலிருந்தும், குழந்தைகளின் உடல், மன ஆரோக்கியத்திற்கும், அவர்களின் ஆன்மீக, ஒழுக்கவியல், சமூக வளர்ச்சிக்கும் தீங்கிழைக்கக்கூடிய எந்தத் தொழிலையும் செய்வதிலிருந்து விடுவித்து அவர்களது உரிமைகளை பாதுகாப்பது அரசுகளின் கடமையாகிறது. இந்தக் கடமையை நிறைவேற்றுவதற்காக சட்டபூர்வமாகவும், நிர்வாக அடிப்படையிலும், சமூக ரீதியிலும் கல்வி சார்ந்தும் நாம் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

### சட்ட ரீதியிலான நடவடிக்கைகள்

7.3. தமிழக அரசு, குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிப்பதற்காக சட்டபூர்வமாக கடும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. குழந்தைத் தொழிலாளர் முறை (ஒழித்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1986, தொழிற்சாலைகள் சட்டம், 1948 மற்றும் குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பிற்கான இதர சட்ட விதிமுறைகளும் மிகத் தீவிரமான முறையில் அமலாக்கப்பட்டு வருகின்றன. 2001-ஆம் வருடத்தில் தொழிலாளர் துறை 105 வழக்குகள் பதிவு செய்து: ரூ.18,570/- அபராதத் தொகையாக வசூலிக்கப்பட்டுள்ளது. இந்த முயற்சிகளின் விளைவாக அமைப்பு சார்ந்த தொழில்களில் குழந்தைத் தொழிலாளர் முறை பெருமளவு குறைக்கப்பட்டுள்ளது.

## உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புரையும் அதன் மீதான செயல்பாடுகளும்

7.4 இந்திய உச்ச நீதிமன்றத்தின் குழந்தைத் தொழிலாளர் பிரச்சினை குறித்த ரிட் மனு எண் 465/86-ல், (மேத்தா எதிர் தமிழ்நாடு) 10-12-1996 அன்று தீர்ப்பு வழங்கப்பட்டது. அதன் மீதான நடவடிக்கைகள் பின்வருமாறு:—

* மாநிலம் முழுவதும் குழந்தைத் தொழிலாளர் குறித்த கணக்கெடுப்புப்பணி மேற்கொள்ளப்பட்டது. அபாயகரமான தொழிலில் 10,118 குழந்தைகளும், அபாயகரமற்ற தொழில்களில் 9,052 குழந்தைகளும் கண்டறியப்பட்டுள்ளனர்.

* மாநில மற்றும் மாவட்ட அளவில் குழந்தைத் தொழிலாளர் நல மற்றும் நிவாரண நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

* அபாயகரமான தொழிலில் குழந்தைகளை வேலைக்கு அமர்த்தியிருந்த எட்டு நிறுவன உரிமையாளர்கள், ஒவ்வொரு குழந்தைக்கும் ரூ.20,000/- வீதம் எட்டு குழந்தைகளுக்கு ரூ.1,60,000/- நல நிதிக்கு செலுத்தியுள்ளனர்.

* மாநில அரசு ரூ.4,74,65,000/- தொகையினை குழந்தைத் தொழிலாளர் நல மற்றும் நிவாரண நிதிக்கு ஒதுக்கீடு செய்துள்ளது.

* 157 குழந்தைத் தொழிலாளர்கள் அபாயகரமான தொழில்களிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் கல்வி கற்பதற்கு அரசின் பங்காக ரூ.7,85,000 சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்ட ஆட்சியர்களுக்கு வழங்கபபட்டுள்ளது.

* 8,799 குற்ற வழக்குகள் குழந்தைத் தொழிலாளர் (ஒழித்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1986-ன்கீழ் பல்வேறு நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

* தொழிலாளர் நலத் துறையில் ஒரு 'கண்காணிப்புக் குழு' உருவாக்கப்பட்டுள்ளது. இக்குழு உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு அமலாக்கப்படுவதை கண்காணிக்கின்றது.

7.5. குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பிற்கான உச்ச நீதிமன்றத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பு, குழந்தைத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவோர் மீது கடும் நிர்பந்தங்களை



ஏற்படுத்தியுள்ளது. இந்தத் தீர்ப்பின் விளைவாக தொழிலாளர் நலத் துறையில் உருவாக்கப்பட்டுள்ள 'கண்காணிப்புக் குழு' உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு அமலாக்கப்படுவதைக் கண்காணிக்கிறது. மேலும், குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பிற்கான விழிப்புணர்வு பிரச்சாரத்தை மேற்கொண்டு வருகிறது. குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பிற்கான திட்டங்களை மதிப்பிடவும், கண்காணிக்கவும் ஏற்படுத்தப்பட்ட ஓர் அமைப்பாகக் கண்காணிப்புக் குழு செயல்பட்டு வருகிறது.

## தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம்

7.6. தேசிய குழந்தைத் தொழிலாளர் கொள்கைக்கிணங்க, குழந்தைத் தொழிலாளர் முறையினை ஒழிப்பதற்கான பணியில் நாம் முழுமையாக ஈடுபட்டுள்ளோம். மத்திய அரசின் நிதியுதவியுடன். குழநதைத் தொழிலாளர் அதிகம் காணப்படுகின்ற திருநெல்வேலி, தூத்துக்குடி, திருச்சி, புதுக்கோட்டை, கோயம்புத்தூர், சேலம், தர்மபுரி, விருதுநகர் மற்றும் வேலூர் ஆகிய ஒன்பது மாவட்டங்களில் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் நடைபெற்று வருகிறது. 504 சிறப்புப் பள்ளிகளில் 19,910 குழந்தைகள் கல்வி பயின்று வருகின்றனர். அவர்களுக்கு ஊக்கத் தொகையாக மாதந்தோறும் ரூ.100/- வழங்கப்பட்டு வருகிறது. மதிய உணவு மற்றும் சீருடையும் வழங்கப்பட்டு வருகிறது.

7.7. 10 ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தின்போது, ரூ.4.47 கோடி செலவில் மத்திய அரசின் நிதியுதவியுடன் மதுரை, திருவள்ளூர், நாமக்கல் மற்றும் கரூர் ஆகிய மாவட்டங்களில் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டத்தினை விரிவுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு திட்டமும் 40 சிறப்புப் பள்ளிகள் நடத்தும். ஒவ்வொரு சிறப்புப் பள்ளியிலும் 50 குழந்தைகள் வீதம் மொத்தம் 10,000 குழந்தைகள் சேர்க்கப்படுவர்.

## அகில உலக தொழிலாளர் அமைப்பின் ஒருங்கிணைந்த குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு

7.8. விருதுநகர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டங்களின்கீழ், ஐ.எல்.ஓ. நிதி உதவியுடன், குழந்தைத் தொழிலாளர்களை ஆபத்தான மற்றும் சுரண்டப்படும் நிலைகளிலிருந்து மீட்டெடுக்கும் ஒருங்கிணைந்த அணுகுமுறைத் திட்டம் சிவகாசி மற்றும் திருப்பூர் ஆகிய இரண்டு இடங்களில் செயல்படுத்தப்படுகின்றது. இதற்காக ஐ.எல்.ஓ. நான்கு கோடி ரூபாய் நிதி ஒதுக்கியுள்ளது.

[2002 மே 3

குழந்தைத் தொழிலாளர்கள் தொழில்களிலிருந்து மீட்கப்பட்டு, இடை மாறுபாடு கல்வி மையங்களில் கல்வி பயில்கின்றனர். விருதுநகரில் இதுபோன்ற 80 கல்வி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு மையத்திலும் 25 குழந்தைகள் கல்வி பயில்கின்றனர். கோயம்புத்தூரில் 80 கல்வி மையங்களில் 1,720 குழந்தைகள் கல்வி பயில்கின்றனர். 890 குழநதைகள் முறை சார்ந்த பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

7.9. பதின்மூன்று முதல் பதினாறு வயது வரையிலான குழந்தைகளுக்கு தொழிற்பயிற்சி அளிக்கப்படுகின்றது. கோயம்புத்தூரில் 225 குழந்தைகளுக்கு தொழிற்பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. விருதுநகரில் 200 குழந்தைகள் தொழிற்பயிற்சி அளிக்கத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். குழந்தைத் தொழிலாளர்களின் தாய்மார்களுக்காக சேமிப்புக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கோயம்புத்தூரில் 250 சுய உதவிக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அக்குழுக்கள் மூலம் 'ஷேர் ஆட்டோ', தையல், மசாலாப் பொடி தயாரித்தல் ஆகிய தொழில்கள் ஆரம்பித்துள்ளன.

**சென்னையில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் இடைநிலைக் கல்வி நிலையங்கள்**

7.10 குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பிற்காக தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு 1995-ல் ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. சென்னை நகரில் உள்ள குடிசைவாழ் குழந்தைத் தொழிலாளர்களுக்கு தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் இடைநிலைக் கல்வி நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன.

**குழந்தைத் தொழிலாளர்கள் முறை ஒழிப்பில் இந்திய-அமெரிக்க கூட்டு முயற்சி**

7.11. இந்திய அரசின் தொழிலாளர் துறையும், அமெரிக்க ஐக்கிய நாட்டின் தொழிலாளர் துறையும் குழந்தைத் தொழிலாளர்கள் முறை ஒழிப்பில் இந்திய-அமெரிக்க கூட்டு முயற்சியில், 2000 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் கையெழுத்திட்டனர். இதன் அடிப்படையில், ஒவ்வொரு திட்டத்திற்கும் நான்கு கோடி ரூபாய் வீதம் காஞ்சிபுரம், விருதுநகர், திருவண்ணாமலை, கரூர், நாமக்கல் மற்றும் ஈரோடு ஆகிய ஆறு மாவட்டங்களுக்கு திட்டத் தொகையாக ரூபாய் 24 கோடி கணக்கிடப்பட்டுள்ளது.



2002 மே 3]

**விழிப்புணர்வு**

7.12 'யுனிசெப்' நிதியுதவியுடன், குழந்தைத் தொழிலாளர் குறித்த விழிப்புணர்வு பொது மக்களிடையே ஏற்படுத்தப்பட்டுள்ளது. மாநாடுகள், ஊர்வலங்கள், மனிதச் சங்கிலிகள் மற்றும் கலைநிகழ்ச்சிகள் மாவட்ட அளவில் நடத்தப்பட்டன. தமிழகம் மற்றும் பாண்டிச்சேரியில் உள்ள வானொலி நிலையங்களில், குழந்தைத் தொழிலாளர் பிரச்சினை குறித்த விளம்பரங்கள் காலை தமிழ்ச் செய்திகளுக்குப் பின்னர் ஒலிபரப்பப்பட்டன. தபால் துறையின் மூலம் 20,00,000 தபால் அட்டைகளில் குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு வாசக விளம்பரம் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

7.13. 2001 ஆம் வருடத்தில், யுனிசெப் நிதியுதவியுடன் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டங்கள் செயல்படும் ஆறு மாவட்டங்களில் குழந்தைத் தொழிலாளர் முறையினை ஒழிப்பதற்கான செயல் திட்டம் உருவாக்கிடுவதற்குக் கருத்தரங்குகள் நடைபெற்றன.

7.14. மாநில அரசு ஊழியர்கள் குழந்தைகளை தங்கள் வீடுகளில் வேலைக்கு அமர்த்தக்கூடாது என அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. மீறுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**2002-2003 ஆம் ஆண்டில் குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பிற்கான அரசின் செயல் திட்டம்**

**7.15 வழிமுறைகள்**

* தொழில்களில் பணிபுரியும் குழந்தைகளைக் கண்டறிதல்

நமது அரசு குழந்தைத் தொழிலாளர் முறையினை ஒழிக்கும் இலட்சியத்தினை அடைய உறுதிபூண்டுள்ளது. இந்த இலட்சியத்தினை அடைவதற்கு பணியில் ஈடுபட்டுள்ள குழந்தைகள் மற்றும் அவர்தம் பெற்றோர்களைப் பற்றிய அடிப்படைத் தகவல்களைச் சேகரிக்கும் பணி நடைபெறும்.

*5 முதல் 7 வயது வரையிலான குழந்தைகளைப் பள்ளியில் சேர்த்தல்

எல்லாக் குழந்தைகளுக்கும் 'கட்டாய ஆரம்பக் கல்வி' என்ற வலுவான ஆயுதம் ஒன்றே குழந்தைத் தொழிலாளர் முறையினை முற்றிலுமாக ஒழிக்க உதவும்.

[2002 மே 3

* முறைசார்ந்த பள்ளிக் கல்வியினை வலுப்படுத்துதல்

* குழந்தைத் தொழிலாளர்களுக்கு நிவாரணம்

குழந்தைத் தொழிலாளர்களை அடையாளங்கண்ட பின்னர், அவர்களுக்கான நிவாரண உதவிகள் மேற்கொள்ளப்படும். தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் இல்லாத மாவட்டங்களில் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும். திட்டம் நடைமுறையில் உள்ள மாவட்டங்களில் வலுப்படுத்தப்படும்.

* குழந்தைத் தொழிலாளர் குடும்பங்களின் பொருளாதார மேம்பாடு

* குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பிற்கான சட்டங்களை அமல்படுத்துதல்

குழந்தைத் தொழிலாளர் முறையினை ஒரு முடிவுக்குக் கொண்டுவருவதற்கு சட்ட அமலாக்கம் முக்கிய அம்சமாகும். அதற்கான சட்டங்கள் மிகத் தீவிரமான முறையில் செயல்படுத்தப்படும்.

*அனைத்துத் துறைகளையும், அரசு சாரா நிறுவனங்களின் முயற்சிகளையும் ஒருங்கிணைத்தல்

வறுமை ஒழிப்பு மற்றும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள், கல்வி, சுகாதாரம், குழந்தைகள் மற்றும் பெண்கள் மேம்பாடு திட்டங்களை ஒன்றிணைக்கவும், ஒருமுகப்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இதன் மூலம் சமூக பொருளாதார முயற்சிகள் முன்னேற்றம் ஏற்படுத்தி, குழந்தைகள் வேலைக்குச் செல்லும் நிலைகளில் மாறி, பள்ளிக்குச் செல்லும் நிலை ஏற்படும்.

*விழிப்புணர்வு மற்றும் சமூகத்தினரின் பங்கேற்பு

குழந்தைத் தொழிலாளர் முறை ஒரு சமூக அவமானம். சமூக விழிப்புணர்வின் மூலம் இந்த அவமானத்தைத் துடைத்தெறிய முடியும். சமூகத்தின் எல்லா மாவட்டங்களிலும் குழந்தைத் தொழிலாளர் முறை குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்த தீவிரப் பிரச்சாரம் மேற்கொள்ளப்படும். இப்பிரச்சினையைக் களைந்தெறிவதற்கு சமூகத்தின் அனைத்துத் தரப்பினரின் பங்கேற்பினைப் பெறுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.



2002 மே 3]

*நிதி

அனைத்துக்கும் மேலாக, இப்பிரச்சினையின் தீவிரத்தன்மையை முன்னிட்டு, அதிக நிதியாதாரங்களைத் திரட்ட வேண்டியுள்ளது. மத்திய அரசின் தொழிலாளர் துறைக்கு திட்ட வரைவுகள் அனுப்புவதுடன் ஐ.எல்.ஓ., யுனிசெப் மற்றும் இதர நிதி நிறுவனங்களிடமும் நிதி திரட்ட வேண்டியுள்ளது.

**கண்காணிப்பதற்கான அமைப்பு**

7.16 குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பிற்கான செயல் திட்டத்தினைக் கண்காணிக்கவும், மதிப்பிடவும் மாநில அளவிலான கண்காணிப்புக் குழு ஒன்று உள்ளது. இதேபோன்று மாவட்ட அளவிலும் கண்காணிப்புக் குழுக்கள் ஏற்படுத்தப்படும்.

7.17. **2003 முதல் 2006 வரையிலான செயல்முறைத் திட்டம்**

குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பில் 2002-2003 ஆம் ஆண்டிற்கு வகுக்கப்பட்டுள்ள அதே அணுகுமுறைகள் பின்பற்றப்படும். தேசிய குழந்தைத் தொழிலாளர்கள் திட்டங்கள் ஒவ்வோர் ஆண்டும் புதிதாக ஐந்து மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்படும். ஏற்கெனவே உள்ள திட்டங்கள் வலுப்படுத்தப்படும். ஒவ்வோர் ஆண்டும் குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பிற்கான செயல்திட்டமும் கொள்கைகளும் ஒரு வெளி அமைப்பின் மூலம் மதிப்பீடு செய்யப்படும்.

7.18 "குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு" என்ற இலட்சியம் சிக்கலானது. இதில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் அது ஒரு சவால். நாம் அனைவரும் அதற்கான ஒருங்கிணைந்த முயற்சிகளில் ஈடுபடவேண்டும். அரசு, தொண்டு நிறுவனங்கள், தனியார் தொழில் நிறுவனங்கள், தொழிற்சங்கங்கள், உரிமையாளர்களின் அமைப்புகள் மற்றும் சர்வதேச அமைப்புகளான உலகத் தொழிலாளர் அமைப்பு (I.L.O) மற்றும் யுனிசெப் ஆகியவை இணைந்து செயல்பட்டால், குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பது சாத்தியமாகும்.

[2002 மே 3

## அத்தியாயம்-8

## தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை

### நிர்வாகம்

8.1. தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை தமிழ்நாட்டில் உள்ள பதிவு பெற்ற தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் பாதுகாப்பினை உறுதி செய்தல், தொழிலாளர்களின் உடல் நலன் பாதுகாத்தல், தொழிலாளர்களுக்கு முறையான நல வசதிகளைச் செய்து கொடுத்தல் போன்ற செயல்பாடுகளில் முக்கிய பங்கினை வகிக்கிறது. இத்துறை, தொழிற்சாலைகள் சட்டம், 1948 மற்றும் இதர 13 தொழிலாளர் நலச் சட்டங்களைச் செயல்படுத்துகிறது. தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் இதர தொழிலாளர் நலச் சட்டங்களைச் செயல்படுத்தி, நிர்வகிக்கும் இத்துறைக்கு தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் தலைவர் ஆவார்.

8.2. அரசின் கோட்பாடுகளைச் செயல்படுத்தி வரும் இத்துறையின் முக்கிய செயல்பாடுகள் கீழ்க்கண்ட இரண்டு ஆகும்:

1 முறைப்படுத்தும் செயல்பாடுகள் (சட்ட அமலாக்கம்)

2. உடல் நலம், பாதுகாப்பு, பயிற்சி மற்றும் மேம்பாட்டுச் செயல்பாடுகள்.

### முறைப்படுத்தும் செயல்பாடுகள்

*ஆய்வுகள்*

8.3. தொழில் நுட்பம் நிறைந்த தொழிற்சாலைகள் சட்டம், 1948. தொழிலகங்களில் தொழிலாளர்களின் பாதுகாப்பு, உடல் நலம், நல வசதிகள் போன்றவற்றை உறுதி செய்கிறது. தொழிலாளர் நலச் சட்டங்களின் பயன்கள் தொழிற்சாலைகளில் பணிபுரியும் அனைத்துப் பிரிவுகளைச் சார்ந்த தொழிலாளர்களையும் அனைத்துச் சென்றடையும் வண்ணம், அனைத்து முயற்சிகளும் முழுமையாகச் அலுவலர்களால் மேற்கொள்ளப்படுகின்றன. சிறு துறை நிறுவனங்களின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்குடன், தொழில் செயல்முறைகள் இல்லாத, சிறு தொழில் நிறுவன சான்று அபாய தொழிற்சாலைகள், தொழிலாளர் மற்றும் தொழிற்சங்கங்களிடமிருந்து பெற்ற புகார்கள் ஏதும் பெறப்படாத நிலையில், ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு



2002 மே 3]

முறை ஆய்வு செய்யப்படுகின்றன. எனினும், உடல்நலம் மற்றும் பாதுகாப்பினை உறுதி செய்ய வேண்டி அபாய செயல்முறைகள் அடங்கிய தொழிற்சாலைகள், சிறு தொழில் நிறுவன சான்று பெற்றிருந்தாலும், ஆறு மாதங்களுக்கு ஒரு முறை ஆய்வு செய்யப்படுகின்றன. தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் உள்ள அபாயத்தைக் கருத்தில் கொண்டும், குழந்தைத் தொழிலாளர்களை பணியமர்த்துவதைக் கண்டறியவும், இத்தொழிற்சாலைகள் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை ஆய்வு செய்யப்படுகின்றன. மேலும், பாதுகாப்பு, உடல் நலம் மற்றும் நல வசதிகள் குறித்து, சீரான கண்காணிப்பு மேற்கொள்ள சிறப்பு ஆய்வுகள், விடுமுறை நாள் ஆய்வுகள் மற்றும் சோதனை ஆய்வுகள் கூடுதலாக மேற்கொள்ளப்படுகின்றன.

8.4. சிறு தொழில் நிறுவனங்களில் தொழிலாளர் நலச் சட்டங்களின் செயலாக்கம் குறித்து கண்காணிப்பு மேற்கொள்ள மாநில அளவில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவிற்கு தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறைச் செயலாளர் தலைவராகவும், தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் உறுப்பினர் செயலராகவும், தொழில் முனைவோர் மற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் உறுப்பினர்களாகவும் உள்ளனர். சிறு தொழில் நிறுவனங்களில் தொழிலாளர் நலச் சட்டங்களின் செயலாக்கம் குறித்தும், சிறு தொழில் வளர்ச்சிக்கு அளித்துள்ள ஊக்கம் குறித்தும் இக்குழு மனநிறைவினைத் தெரிவித்துள்ளது.

### குழு ஆய்வுகள்

8.5. பட்டாசுத் தொழிற்சாலைகளில், தீபாவளிப் பண்டிகைக் காலத்தில் அதிக உற்பத்திச் செயல்பாடுகளின் காரணமாக வெடி விபத்துகள் நிகழ்வுக்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன. எனவே, இதுபோன்ற காலங்களில் பட்டாசுத் தொழிற்சாலைகளில் பாதுகாபபான பணி நிலையையும், வேலை முறையையும் கண்காணித்து சீர்படுத்துவதற்காக சிறப்புக் குழுவால் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேற்படி சிறப்பு ஆய்வுகள் காரணமாக, சிவகாசியில் 2001 ஆம் ஆண்டில், தீபாவளிப் பண்டிகை காலத்தில் பெரும் தீ மற்றும் வெடி விபத்துகள் ஏற்படவில்லை.

8.6. மேலும், குழந்தைத் தொழிலாளர்கள் அதிகமாகக் காணப்படும் பகுதிகளில் "சிறப்புக் குழுக்கள்" அமைக்கப்பட்டு, ஊறுவிளைவிக்கும் செயல்முறைகள் கொண்ட தொழிற்சாலைகளில் குழந்தைத் தொழிலாளர்கள் பணிக்கு அமர்த்தப்படுவதை முழுமையாகத் தடுக்கும்

பொருட்டு. சிறப்புக் குழு ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்துறையின் கடும் நடவடிக்கையினாலும், செயலாக்கத்தினாலும் 'C' பிரிவு தீப்பெட்டித் தொழிற்சாலைகளிலும், பட்டாசுத் தொழிற்சாலைகளிலும் குழந்தைத் தொழிலாளர்கள் முற்றிலுமாக நீக்கப்பட்டுள்ளனர்.

**புகார் விசாரணை**

8.7. தொழிலாளர்கள் மற்றும் தொழிற்சங்கங்களிடமிருந்து பெறப்படும் புகார்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு, குறைபாடுகளுக்கும் தீர்வு காண உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2001 ஆம் ஆண்டில் பெறப்பட்ட 561 புகார்களில், 517 புகார்கள் விசாரிக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும், தொழிற்சாலைகள் இணைத் தலைமை ஆய்வாளரால் சென்னையிலும், மாவட்டங்களில் தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர் அலுவலகங்களிலும் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளுடன் மாதாந்திரக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, அக்கூட்டங்களில் எழுப்பப்படும் குறைபாடுகள் குறித்து தொழிற்சாலைகள் ஆய்வாளர்களால் உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

**ஊறுவிளைவிக்கும் செயல்முறைத் தொழில்கள்**

8.8. 1988 ஆம் ஆண்டு, தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் அலுவலகத்தில் "பெரும் விபத்து மற்றும் பேரபாய தடுப்புக் குழு" ஒன்று, கூடுதல் தலைமைத் தொழிற்சாலைகள் ஆய்வாளரின் தலைமையில் உருவாக்கப்பட்டது.

8.9. அபாயம் விளைவிக்கக்கூடிய செயல்முறைகளில் ஈடுபட்டுள்ள தொழிற்சாலைகளில் பேரபாயத்தைத் தடுக்கக் கூடிய செயல்முறைகளை உருவாக்குவதற்கு இந்தக் குழு வழிகாட்டுவதுடன், அவை நிறைவேற்றப்படுவதற்கான தொடர் நடவடிக்கைகளும் இக்குழுவால் மேற்கொள்ளப்படுகின்றன.

8.10. 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் அட்டவணை 1-ன்படி, 29 செயல்முறைத் தொழில்கள் ஊறுவிளைவிக்கும் செயல்முறைத் தொழில்களாக அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன. இத்தொழில்களில் தனிக் கவனம் செலுத்தப்படாவிடில், இத்தொழில்களில் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களால் தொழிலாளர் மற்றும் பொது மக்களின் உடல்





நலத்திற்கும், சுற்றுச் சூழல் தூய்மைக்கும் பெரும் அளவில் பாதிப்பு ஏற்படும் அபாயநிலை உள்ளது. இத்தகைய தொழிற்சாலைகளில் தொழிலியல் பாதுகாப்பினை உறுதி செய்யும் பொருட்டு அவை அதிகப்படியான கவனத்துடன் ஆய்வு செய்யப்படுகின்றன. சில இரசாயனத் தொழிற்சாலைகளில், கட்டுப்படுத்த இயலாத அளவில் செயல்முறைகள் மேற்கொள்ளப்படுவதால், அவற்றில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும், அருகில் வசிக்கும் பொது மக்களுக்கும் அபாயத்தை விளைவிப்பதுடன், சுற்றுச் சூழலையும் பாதிக்கிறது. இத்தகைய தொழிற்சாலைகள் 'பெரும் விபத்து மற்றும் பேரபாயத் தொழிற்சாலைகள்' என பகுக்கப்பட்டு, இவற்றின் செயல்முறைப் பாதுகாப்பு குறித்து ஆய்வகத் துறை தனிக் கவனம் செலுத்துகிறது. நமது மாநிலத்தில் இதுபோன்ற 100 தொழிற்சாலைகள் இனம் காணப்பட்டுள்ளன.

8.11. 2001 ஆம் ஆண்டு வரை, பெரும் விபத்து மற்றும் பேரபாயத் தொழிற்சாலைகளிலிருந்து 100 உள்ளிருப்பு அவசரகால ஆயத்த நிலைத் திட்டங்கள் பெறப்பட்டு, அவற்றில் 80 திட்டங்கள் சில நிபந்தனைகளுக்குட்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளன. மாவட்ட அளவிலான அவசர கால ஆயத்த நிலைத் திட்டங்கள் செயல்பாட்டிற்கு மாவட்ட ஆட்சியாளர்கள் பொறுப்பாளர்களாகவும், தொழிற்சாலைகள் உள்ளிருப்பு அவசர கால ஆயத்த நிலைத் திட்டங்கள் செயல்பாட்டிற்கு தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் பொறுப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். 23-04-1998 தேதியிட்ட அரசாணை (நிலை) எண் 109-ல் மாநில, மாவட்ட மற்றும் உள்ளூர் நெருக்கடி நிலைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. பெரும் விபத்து மற்றும் பேரபாயத் தொழிற்சாலைகளில் ஏற்படக்கூடிய பெரும் விபத்துகள் மற்றும் அபாயநிலை அழிவுகளைத் தடுத்து, கட்டுப்படுத்துவதற்கான வழிவகைத் திட்டங்களை உருவாக்க அரசுக்கு இக்குழுக்கள் உதவுகின்றன. தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையின் அலுவலர்கள் மாவட்ட அளவிலான நெருக்கடி நிலைக் குழுக்களில் உறுப்பினர் செயலாளர்களாகவும், மாநில அளவிலான நெருக்கடி நிலைக் குழுவிற்கு தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் உறுப்பினர் செயலாளராகவும் செயல்படுகின்றனர்.

8.12. அபாயநிலை அவசரக் காலகட்டத்தில் தேவைப்படும் ஏற்பாடுகள் குறித்து ஆவன செய்வதற்கு தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை அலுவலர்களின் மேற்பார்வையில் தொழிற்சாலைகளில் மாதிரி ஒத்திகைகள் அவ்வப்போது நடத்தப்பட்டு, ஆயத்த நிலைத் திட்டங்கள்

சீர்படுத்தப்படுகின்றன. 2001 ஆம் ஆண்டில், இதுபோன்ற 73 மாதிரி ஒத்திகைகள் நடத்தப்பட்டுள்ளன. மேலும், பாதுகாப்புச் செயல்முறைகள் குறித்த, மேம்பட்ட கண்காணிப்பு கருதி, ஊறுவிளைவிக்கும் செயல்முறைத் தொழிற்சாலைகளிலிருந்து பாதுகாப்பு அறிக்கைகள் கோரப்பட்டு, தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையால் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

8.13. தொழிற்சாலைகள் சட்டத்தின் பிரிவு 41-அ-வில் குறிப்பிட்டுள்ளபடி அமைக்கப்பட்டுள்ள மனை மதிப்பீட்டுக் குழு "பெரும் விபத்து மற்றும் பேரபாயம்" விளைவிக்கக்கூடிய செயல்முறைகளில் ஈடுபடும் தொழிற்சாலைகளின் விண்ணப்பங்களை ஆராய்ந்து, இத்தொழிற்சாலைகளை அமைப்பதற்கான மனைப் பொருத்தம் மற்றும் சுற்றுப்புற சூழ்நிலைகள் குறித்து ஆராய்ந்து ஒப்புதல் வழங்க அரசுக்கு ஆலோசனை வழங்குகிறது. 2001 ஆம் ஆண்டில் இது தொடர்பான ஒரு விண்ணப்பம் மனை மதிப்பீட்டுக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது. இந்தவகை ஒப்புதலில் அரசு விதிக்கும் நிபந்தனைகள் கடைப்பிடிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையால் மேற்கொள்ளப்பட்டு, தொடங்க நிலையிலிருந்தே ஆலைப் பாதுகாப்பு உறுதி செய்யப்படுகின்றது.

### குறைந்தபட்ச ஊதியச் சட்டச் செயலாக்கம்

8.14. தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் ஊதிய நிலையினைப் பாதுகாக்கும் பொருட்டு, வழக்கமாக மேற்கொள்ளப்படும் ஆய்வுகளைத் தவிர நடப்பு ஆண்டில் குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின் கீழ் சிறப்பு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் கொடுக்கப்படாததற்காக அதிகப்படியான கேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டதுடன், சட்ட விதிகளைப் பின்பற்றத்தவறிய நிர்வாகங்கள் மீது அதிகப்படியான வழக்குகளும் தொடரப்பட்டன. 2001 ஆம் ஆண்டில், குறைந்தபட்சக் கூலிச் சட்டத்தின் கீழ் 503 நீதிமன்ற வழக்குகளும், 265 கோரிக்கை மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டன.

### குழந்தைத் தொழிலாளர் முறை நீக்குதல்

8.15. 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் பல்வேறு சட்ட விதிமுறைகளுள் ஒன்றான பிரிவு 67-ன்படி, தொழிற்சாலைகளில் குழந்தைத் தொழிலாளர் பணிமுறையை நீக்குதல் தொடர்பாக இத்துறை



மிகவும் சீரிய முறையில் நடவடிக்கை எடுத்து வருகிறது. இதன்படி சட்ட விதிகளைக் கடைப்பிடிக்க தவறிய தொழிற்சாலை நிர்வாகங்கள் மீது, தொழிற்சாலை சட்டப் பிரிவு 92-ல் விதிக்கப்பட்ட தண்டனையை விட கடுமையானதாகக் கருதப்படும் குழந்தைத் தொழிலாளர் சட்டம் பிரிவு 14 மற்றும் 15-ன் கீழ் தண்டனை விதிக்கும் வகையில் நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறாக, 2001 ஆம் ஆண்டு 68 வழக்குகள் தொழிற்சாலைகள் சட்டம் பிரிவு 67-ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளன. ரூ.1,06,000/- அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக சட்ட விதிகளை சீரிய முறையில் செயல்படுத்துவதால், பதிவு பெற்ற பட்டாசுத் தொழிற்சாலைகளிலும் மற்றும் 'சி' வகுப்பு எனப்படும் தீப்பெட்டித் தொழிற்சாலைகளிலும் குழந்தை தொழிலாளர்கள் வேலைக்கு அமர்த்தப்படுவதில்லை. மேலும் பட்டாசு மற்றும் 'சி' வகுப்பு தீப்பெட்டித் தொழிற்சாலைகளில், குழந்தைத் தொழிலாளர்களே பணியில் இல்லை என்பதை ஆய்ந்தறிந்து சான்று வழங்கும் பொருட்டு, இரு துணைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக்களுக்கு விருதுநகர் மாவட்ட வருவாய் அலுவலர் தலைவராகவும், உற்பத்தியாளர்களின் பிரதிநிதிகள், பணியாளர்களின் பிரதிநிதிகள், மத்திய சுங்க இலாகா அதிகாரிகள் மற்றும் அரசு சார்பற்ற நிறுவனங்கள் உறுப்பினர்களாகவும் உள்ளனர். சிவகாசி, தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர் இக்குழுக்களின் உறுப்பினர் செயலாளர்/கூட்டுநர் ஆவார். சிவகாசியிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் உள்ள தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளையும் இக்குழுக்கள் ஆய்வு செய்து சான்றிதழ் வழங்கும்.

8.16. இந்திய உச்ச நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி, தமிழ்நாட்டில் 4 மாவட்டங்களில், தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தொழிற்சாலைகளின் தொழிலாளர்களுக்கு மட்டும் நல நிதிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. 3 மாவட்டங்களில் அந்தந்த மாவட்ட ஆட்சியாளர் தலைவராகவும், விருதுநகர் மாவட்டத்திற்கு அந்த மாவட்ட நீதிபதி தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்கள். அக்குழுவின் உறுப்பினர் செயலர்களாக சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த நல நிதிக் குழுவின் முக்கிய செயல்திட்டம், பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு பொழுதுபோக்கு, மருத்துவ மற்றும் நல வசதிகள் அமைத்துத் தருவதே ஆகும். இத்திட்டம் அத்தொழிலாளர்களின் குழந்தைகளுக்கும் குடும்பத்தினருக்கும் பயன்படும் வகையில் விரிவாக்கப்பட்டுள்ளது. இந்த நல நிதிக் குழுவின் நோக்கம்

[2002 மே 3

நிறைவேற்றப்படுகிறதா, அதன் பயன்கள் பதிவு பெற்ற பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினரைச் சென்றடைகிறதா என்பனவற்றைக் கவனத்துடன் இத்துறை கண்காணித்து வருகிறது. தூத்துக்குடி மாவட்ட நல நிதிக் குழு தொழிலாளர்களுக்காக தையல் வகுப்புகள் நடத்தி சான்றிதழ்கள் அளிப்பதுடன், பயிற்சியின் முடிவில் தையல் இயந்திரங்களும் வழங்குகின்றது.

8.17. மேலும், பொது மக்கள், தொழில் முனைவோர் மற்றும் பெற்றோர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம், குழந்தைத் தொழிலாளர்கள் அதிகமாகக் காணப்படும் சிவகாசி, திருப்பூர் மற்றும் தூத்துக்குடி போன்ற இடங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

**இதர சட்டங்கள்**

8.18. மேற்குறிப்பிட்ட சட்டங்களைத் தவிர சம்பளப் பட்டுவாடாச் சட்டம், தேசிய மற்றும் பண்டிகை விடுமுறைச் சட்டம், தமிழ்நாடு தொழிலாளர் நலநிதிச் சட்டம், பிழைப்பூதியச் சட்டம், ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (நிரந்தரத் தகுதி வழங்குதல்) சட்டம் மற்றும் இதர தொழிலாளர் நலச் சட்டங்களும் தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையால் செயல்படுத்தப்படுகின்றன.

## அத்தியாயம்-9

## உடல்நலம், பாதுகாப்பு, பயிற்சி மற்றும் மேம்பாடு

**உடல்நல மேம்பாடு செயல்பாடுகள்**

9.1. இரசாயனத் தொழிற்சாலைகளில் கையாளப்படும் இரசாயனப் பொருட்களின் நச்சுத் தன்மையால் தொழிலாளர்களின் உடல் நலத்திற்கு ஏற்படும் பாதிப்பைக் கட்டுப்படுத்தவும், உடல் நலம் மற்றும் சுகாதார மேம்பாடு குறித்து கண்காணிக்கவும், சீர்படுத்தவும் தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையில் மருத்துவப் பிரிவு ஒன்று இயங்கி வருகிறது. மருத்துவ அலுவலர்கள், தொழிற்சாலைகளில் சுகாதார அளவீடுகள் மேற்கொண்டு, அதன்வழி தொழிலாளர்களின் உடல்நல மேம்பாடு குறித்து தக்க தடுப்பு நடவடிக்கைகளையும் அவர்தம் நல மேம்பாட்டு வழிவகைகளையும் தெரிவித்து வருகிறார்கள்.



2002 மே 3]

9.2. இத்துறையில் இயங்கிவரும் தொழில் நலவியல் ஆய்வகம், சுற்றுச் சூழல் மற்றும் சுகாதாரச் சீர்கேடு விளைவிக்கும் தன்மையுள்ள அமோனியா, குளோரின், சல்பர்-டை-ஆக்ஸைட், ஹைட்ரஜன் சல்பைடு போன்ற இரசாயனப் பொருட்களால் தொழிலாளர்களின் உடல் நலம் பாதிக்கப்படுவதைக் கண்காணிக்கிறது. இரசாயனப் பொருட்களினால் ஏற்படக்கூடிய உடல் நலம் மற்றும் சுகாதாரக் கேடுகளை, காற்றுச் சோதனை மற்றும் அளவீட்டின் வழி கண்டறிந்து, தேவையான தீர்வு ஆலோசனைகள் இந்த ஆய்வகத்தால் வழங்கப்படுகின்றன. ஒலி, தூசி மற்றும் காற்றோட்டம் போன்ற பௌதீகக் காரணிகளால் உண்டாகக் கூடிய விளைவுகள் குறித்தும் இந்தத் தொழில் நலவியல் ஆய்வகம் ஆய்வு மேற்கொள்கிறது.

9.3. தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் தற்போது அளித்து வரும் மருத்துவ வசதிகளுடன், தென்னிந்திய வேலையளிப்போர் இணையத்துடன் ஒருங்கிணைந்து, தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகள் 62-ஓ-வில் குறிப்பிட்டுள்ளபடி "தொழிலியல் மருத்துவ மையம்" அமைப்பது குறித்து இத்துறை ஆலோசித்து வருகிறது. தமிழ்நாடு தொழிற்சாலைகள் சட்ட விதி 62-ஓ-வில் வரையறுக்கப்பட்டபடி, தொழிற்சாலைகளில் உள்ள மருத்துவ அலுவலர்கள் தொழில் நலவியலில் தகுதி பெற்று பயனடைவதற்காக ஸ்ரீஇராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் ஒத்துழைப்போடு மூன்று மாத காலப் பயிற்சி வகுப்பு நடத்த இத்துறை திட்டமிட்டுள்ளது.

9.4. தொழிற்சாலைகளில் ஏற்படும் அதிகப்படியான இரைச்சல் காரணமாக அதில் பணிபுரியும் தொழிலாளர்களது காதுகள் செவிடாகும் வாய்ப்பு ஏற்படுவதுடன், அவர்களின் மனநிலை பாதிக்கப்படுவதும் பெரும் பிரச்சினையாக உள்ளது. இந்தப் பிரச்சினையை எதிர்கொள்ள இத்துறை சீரிய முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. தொழிற்சாலைகளின் பல்வேறு பகுதிகளில் ஏற்படும் சப்தத்தினை அளவீடு செய்ய, தொழிற்சாலைகள் ஆய்வாளர்களுக்கு ஒலி அளப்பான் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. அதிக இரைச்சலால் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகின்ற தொழிற்சாலைகளில் இத்துறை ஆய்வாளர்கள் அந்த சப்தத்தினை இந்த அளவீட்டுக் கருவி மூலம் கண்காணித்து, தொழிலாளர்களை அந்த இரைச்சலிலிருந்து பாதுகாக்க வழிமுறைகளைத் தெரிவித்து வருகின்றனர்.

[2002 மே 3

**சோதனை மற்றும் பாதுகாப்புப் பணிகள்**

9.5. தொழிலாளர் பாதுகாப்பு, தொழிலாளர் உடல் நலம், சுற்றுச் சூழல் பாதுகாப்பு போன்ற பிரிவுகளிலும் பணிகளை விரிவுபடுத்த வேண்டி, தொழிற்சாலைகள் சட்டத்தைச் செயல்படுத்துவதுடன் தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையில் 10 சோதனை மற்றும் பாதுகாப்புக் கோட்டங்களும் இயங்கி வருகின்றன. தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் அதிக அழுத்தத்தில் இயங்கும் அழுத்தக் கலன்களின் இயக்கப் பாதுகாப்பை உறுதி செய்வதே சோதனை மற்றும் பாதுகாப்புக் கோட்டங்களின் முதன்நிலைப் பணியாக வகுக்கப்பட்டுள்ளது. தொழிற்சாலையில் தொழிலாளர் மற்றும் நிர்வாகப் பிரதிநிதிகளுக்கு, பாதுகாப்பு விழிப்புணர்வு குறித்து பயிற்சி வகுப்புகள் நடத்தும் பொறுப்பும் இக்கோட்டங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. விபத்துகள் அதிகம் ஏற்படும் தொழிற்சாலைகளில் பாதுகாப்பு மற்றும் செயல் நிறைவேற்றங்கள் குறித்த பாதுகாப்பு அளவீடுகள் இக்கோட்டங்களால் மேற்கொள்ளப்படுகின்றன. இக்கோட்டங்களின் 8 உதவி மருத்துவ அலுவலர்கள் அபாய செயல்முறை உள்ள தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களுடைய உடல் நலப் பாதுகாப்பு குறித்து கண்காணிப்பு மேற்கொள்கின்றனர்.

9.6. நச்சுத்தன்மை வாய்ந்த பொருட்களைக் கையாளும் தொழிற்சாலைகளில், முறையான காற்றுச் சோதனை மேற்கொண்டு, சுற்றுச் சூழல் பாதுகாப்பினையும், தொழிலாளர் உடல்நலத்தினையும் மேம்படுத்துவதற்குத் தேவையான ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் தொழில் நலவியல் ஆய்வகம் வழங்குகிறது.

**மாநில பாதுகாப்பு விருதுகள்**

9.7. தொழிற்சாலைகளில் சிறந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிர்வாகத்தினரை ஊக்குவிக்கும் பொருட்டு, அரசு ஆண்டுதோறும் பாதுகாப்பு விருதுகள் வழங்கி வருகிறது. தொழிற்சாலைகள் செயல்பட்ட மனிதநேரங்கள் அடிப்படையில், அவை 3 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, (i) முந்தைய ஆண்டினை ஒப்பிடுகையில் விருது வழங்கும் ஆண்டில் மேற்கொண்ட சீரிய முயற்சிகள் விளைவாக ஏற்பட்ட, பணிபுரிந்த மனித நேரங்கள் அடிப்படையில் கணக்கிடப்பட்ட விபத்து நிகழ்வு எண்ணிக்கை விகிதம் குறைத்தல், (ii) நடப்பு ஆண்டில் ஏற்பட்ட குறைவான விபத்து நிகழ்வு எண்ணிக்கை, (iii) மிக அதிகமாக விபத்து நிகழா மனித நேரங்கள் போன்ற காரணிகளின் அளவீடுகளைச்



2002 மே 3]

சீர்தூக்கி, இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன. ஒவ்வோர் ஆண்டும், முதல் பரிசாக ரூ.2,500 மதிப்பில் வெள்ளிக் கேடயங்கள் 90 நிறுவனங்களுக்கும், இரண்டாம் பரிசாக ரூ.1,500/- மதிப்பில் வெள்ளிக் கேடயங்கள் 90 நிறுவனங்களுக்கும் வழங்கப்படுகின்றன.

9.8. இதேபோன்று, விபத்து தடுப்பு நடவடிக்கையில் முக்கிய பங்கேற்கும் தொழிலாளர்களை ஊக்குவிக்கும் வண்ணம், ஒவ்வோர் ஆண்டும் தமிழக அரசின் "உயர்ந்த உழைப்பாளர்" விருது வழங்கப்படுகிறது. தொழிற்சாலையில் உற்பத்தித் திறனை அதிகரித்தல், பணிச் சூழ்நிலைகளை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாப்புத் தரத்தை உயர்த்துதல் ஆகியவற்றைப் பற்றி பயன்மிக்க கருத்துகள் தரும் தொழிலாளர்களுக்கு, இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன.

**தொகுதி தனிநபர் விபத்து காப்பீட்டுத் திட்டம்**

9.9. தமிழ்நாட்டில் தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலனுக்காக தொகுதி தனிநபர் விபத்து காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

9.10. இத்திட்டம், காப்பீடு செய்யப்பட்டவர்களுக்கு விபத்து காரணமாக பார்வை, கை, கால் இழப்பு அல்லது இறப்பு நேரிட்டால் நிவாரணம் அளிக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. ஈட்டுறுதிப் பயன், தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டிருக்கும்போது ஏற்படும் விபத்துகளுக்கு மட்டுமின்றி, 24 மணிநேர அடிப்படையில் மற்ற விபத்து நேர்வுகளுக்கும் அளிக்கப்படும். 2001 ஆம் ஆண்டில் தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிலில் ஈடுபட்டுள்ள 86,907 தொழிலாளர்கள் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர். இத்திட்டத்தின்கீழ், இறப்பு நேரிட்டால் காப்பீட்டுத் தொகையாக ரூ.50,000/- வழங்கப்படும். 2001 ஆம் ஆண்டில் ரூ.11,50,000/- ஈட்டுத் தொகையாக வழங்கப்பட்டது.

**மாநில அளவிலான உயர்மட்ட முத்தரப்பு பாதுகாப்புக் குழு மற்றும் மாநில அளவிலான உழைப்புப்படை / வல்லுனர் குழு**

9.11. 1988 ஆம் ஆண்டு முதல், மாநில அளவிலான உயர்மட்ட முத்தரப்பு பாதுகாப்புக் குழு மற்றும் மாநில அளவிலான உழைப்புப்படை/ வல்லுனர் குழு ஆகிய இரண்டு குழுக்கள் தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் தரத்தில் உறுப்பினர் செயலாளரைக் கொண்டு செயல்பட்டு வருகின்றன.

9.12. மாநில அளவிலான உயர்மட்ட முத்தரப்பு பாதுகாப்புக் குழு மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களைத் தலைவராகவும், அரசுத் துறைகளின் பிரதிநிதிகள், அபாயகரமான தொழிற்சாலை நிர்வாகப் பிரதிநிதிகள் மற்றும் கூட்டமைப்புகளின் பிரதிநிதிகள், தொழிற்சாலைகளின் பிரதிநிதிகள், இரசாயனத் தொழிற்சாலைப் பாதுகாப்பு வல்லுனர்கள் ஆகியோரை உறுப்பினர்களாகவும், உறுப்பினர் செயலாளர்/ தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் அவர்களை உறுப்பினர் செயலாளராகவும் கொண்டு அரசாணை எண் 83, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 29-06-2001-ல், 01-07-2001 முதல் 30-06-2002 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

9.13. இதேபோன்று, மாநில அளவிலான உழைப்புப்படை/வல்லுனர் குழு, அரசுச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அவர்களைத் தலைவராகவும், அரசின் பல்வேறு துறைகளைச் சார்ந்த பிரதிநிதிகள், தொழில் நிறுவனங்களின் கூட்டமைப்புகளின் பிரதிநிதிகள், தொழிற்சாலைப் பாதுகாப்பு வல்லுனர்கள் ஆகியோரை உறுப்பினர்களாகவும், தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர்/ உறுப்பினர் செயலாளர் அவர்களை உறுப்பினர் செயலாளராகவும் கொண்டு அரசாணை எண் 84, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 29-06-2001-ல் 01-07-2001 முதல் 30-06-2002 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

9.14. மாநில அளவிலான உயர்மட்ட முத்தரப்பு பாதுகாப்புக் குழுக் கூட்டத்தின் நடவடிக்கைகளின் அடிப்படையில், தோல் பதனிடும் தொழிற்சாலை, காகிதத் தொழிற்சாலை, சர்க்கரை, எரிசாராயம் மற்றும் மதுபானத் தொழிற்சாலை மற்றும் பெரும் விபத்து இடர்தரும் தொழிற்சாலைகளில் துரித அளவீடு நடத்துவதற்கான துணைக் குழுக்கள் அமைக்கப்பட்டு, பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் சுற்றுச் சூழல் தொடர்பாக ஆய்வு நடத்தி அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு, அரசின் ஒப்புதல் பெறப்பட்டு, பின் சம்பந்தப்பட்ட நிர்வாகத்தினருக்கு அனுப்பப்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**மாநில அளவிலான உயர்மட்ட முத்தரப்பு பாதுகாப்புக் குழு மற்றும் மாநில அளவிலான உழைப்புப்படை/ வல்லுனர் குழுவின் செயலாக்க விவரங்களும் வருங்காலத் திட்டங்களும்**

9.15. மாநில அளவிலான உழைப்புப்படை/வல்லுனர் குழுவின் எட்டாவது கூட்டம் மற்றும் மாநில அளவிலான உயர்மட்ட முத்தரப்பு



பாதுகாப்புக் குழுவின் மூன்றாவது கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி, மாநில அளவிலான பாதுகாப்புத் தணிக்கைக் குழு ஒன்று அரசாணை எண் 9, நாள் 12-1-2001-ல் அமைக்கப்பட்டது. மேற்படி பாதுகாப்பு தணிக்கைக் குழு, உறுப்பினர் செயலாளர் / தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர், மாநில அளவிலான உயர்மட்ட முத்தரப்பு பாதுகாப்புக் குழு அவர்களைத் தலைவராகவும், மண்டல தொழிலாளர் மையம், இந்திய இழப்பு தடுப்புக் கழகம், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம் ஆகிய நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையின் தலைமை மருத்துவ அலுவலர், தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர் (சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு) ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. பெரும் விபத்து இடர்தரு தொழிற்சாலைகளிலிருந்து பெறப்பட்ட பாதுகாப்பு தணிக்கை அறிக்கைகளைக் கூர்ந்தாய்வு செய்யும் பொருட்டு, மேற்படி பாதுகாப்பு தணிக்கைக் குழு இதுவரை ஒன்பது கூட்டங்களை நடத்தியுள்ளது. பாதுகாப்பு தணிக்கைக் குழுவின் பரிந்துரைகள் தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் மூலமாக சம்பந்தப்பட்ட 14 பெரும் விபத்து இடர்தரு தொழிற்சாலைகளின் நிர்வாகத்தினருக்கு அனுப்பப்பட்டு, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

9.16. அனல் மின் நிலையங்கள் மற்றும் நூற்பாலைகளில் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் சம்பந்தமாக ஆய்வு செய்யும் பொருட்டு, அரசு இரு துணைக் குழுக்களை அமைந்துள்ளது. (1) அனல்மின் நிலையத்துக்கான துணைக்குழு (அரசாணை எண் 130, நாள் 27-09-2001), (2) நூற்பாலைகளுக்கான துணைக்குழு (அரசாணை எண் 131, நாள் 27-09-2001). மேற்கண்ட துணைக் குழுக்கள் அனல் மின் நிலையம் மற்றும் நூற்பாலைகளில் பாதுகாப்பு, சுகாதாரம், மற்றும் சுற்றுச்சூழல் சம்பந்தமாக ஆய்வுப் பணியை விரைவில் தொடங்க உள்ளன.

**பயிற்சி மற்றும் கருத்தரங்கு**

*(அ) பாதுகாப்புப் பயிற்சிப் பணிகள்*

9.17. தொழிலகங்களில் விபத்துகளின் நிகழ்வுகளைத் தடுத்திட, சட்டச் செயலாக்க பணிகளுடன் பயிற்சிப் பணிகளை மேற்கொள்வதும் இன்றியமையாததாகிறது. விபத்துகளைத் தடுத்திட, தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்திற்கும் பாதுகாப்புப் பற்றிய சரியானதொரு விழிப்புணர்வு

ஏற்படுத்தப்பட வேண்டும். இத்தகைய பயிற்சிகளை இத்துறையின் சோதனை மற்றும் பாதுகாப்புக் கோட்டங்கள் ஏற்று செயல்படுத்தி வருகின்றன.

9.18. தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும், நிர்வாகத்தினருக்கும் பாதுகாப்புப் பயிற்சி அளிக்கவும், பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தவும் தொழிற்சாலை வளாகத்திலேயே, கட்டணம் ஏதுமின்றி பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. தமிழில் நடத்தப்படும் இப்பயிற்சி வகுப்புகள் தொழிலாளர்களாலும், நிர்வாகத்தினராலும் பெரிதும் வரவேற்கப்பட்டு, தொழிலாளர் மற்றும் நிர்வாகத்தினரிடையே பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வினை மேம்படுத்தி அதன் மூலம் விபத்துகளைக் குறைப்பதற்குத் துணைபுரிந்துள்ளன. 2001 ஆம் ஆண்டில் 267 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு 7,216 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

**(ஆ) சிவகாசி பயிற்சி மையம்**

9.19. தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் அபாயகரமான வேதிப் பொருட்களைக் கையாளுகின்றனர். இவற்றைப் பாதுகாப்பாகக் கையாளும் வழிமுறைகள் இவர்களுக்குத் தெரிவதில்லை. இதன் காரணமாக தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் பல விபத்துகள் ஏற்பட்டுள்ளன. எனவே, பட்டாசுத் தொழிற்சாலைகளில் வேதியல் பொருள்களைப் பாதுகாப்பான முறையில் கையாளுவதற்கும், செயல்படுத்துவதற்கும், எடுத்துச் செல்வதற்கும் மற்றும் இருப்பு வைத்துக் கொள்வதற்கும் பல்வேறு வகையான பாதுகாப்பு வழி முறைகளை தொழிலாளர்களுக்கு கற்றுத் தருவதற்காக, சிவகாசியில் தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளரின் தலைமையில் ஒரு பயிற்சி மையம் உருவாக்கப்பட்டது. இப்பயிற்சி மையத்தின் சீரிய பணியினைத் தொடர்ந்து, தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் விபத்துகள் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளன. 2001 ஆம் ஆண்டில் இப்பயிற்சி மையத்தினால் நடத்தப்பட்ட 33 பயிற்சி வகுப்புகளில் தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலையைச் சார்ந்த 900 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

**(இ) கருத்தரங்குகள்**

9.20. தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையால் நடத்தப்படும் பயிற்சி வகுப்புகளன்றி, தொழிலகப் பாதுகாப்பு மேம்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தேசிய பாதுகாப்புக் குழுமம் போன்ற அரசு சாரா





தன்னார்வ நிறுவனங்களுடன் இணைந்து, தொழிற்சாலை நிர்வாகத்தினரும், தொழிலாளர்களும், ஒப்பந்தத் தொழிலாளர்களும் பாதுகாப்பு விழிப்புணர்வைப் பெறும் வண்ணம் கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன. எதிர்காலத்தில், தேசிய பாதுகாப்புக் குழுமம், இந்திய இழப்புத் தடுப்பு நிறுவனம் போன்ற இதர நிறுவனங்களுடன் இணைந்து பாதுகாப்பு மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள இத்துறை கருத்துரு கொண்டுள்ளது.

**(ஈ) மாநில அளவிலான உற்பத்தித் திறன் குழு**

9.21. மாநில அளவிலான உற்பத்தித் திறன் குழுவின் மூன்று முக்கிய செயல்பாடுகளாவன:—

(1) வேலை அளிப்பவர்கள் மற்றும் தொழிலாளர்களுக்குத் தக்க பயிற்சியும், ஆலோசனையும் தந்து இவர்களுக்கிடையே சுமுகமான, இயல்பான சூழ்நிலையை உருவாக்கி அதன் அடிப்படையில் உற்பத்தித் திறன் பற்றிய இவர்களுடைய மாறுபட்ட சிந்தனைகளுக்கு இடையே ஏற்படும் பெரிய இடைவெளியைக் குறைத்தல்.

(2) வேறுபட்ட சிந்தனைத் தாக்கங்களைக் கொண்ட உற்பத்தியின் இரண்டு முக்கிய கோட்பாடுகளான பாதுகாப்பு மற்றும் உற்பத்தித் திறன் ஆகியவை ஒன்றுக்கொன்று முரணானவை அல்ல என்பதையும், மாறாக அவை ஒன்றை ஒன்று சார்ந்திருப்பவை என்பதையும் வலியுறுத்தி ஒருங்கிணைப்பது.

(3) அரசு, நிர்வாகங்கள், தொழிலாளர்கள் மற்றும் உற்பத்தித் திறன் குறித்து இயங்கும் இயக்கங்கள் ஆகியவற்றின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து இந்த நடவடிக்கையை ஒவ்வொரு வருடமும் விரிவாக்கும் முயற்சிகளை மேற்கொள்ளுதல்.

9.22. மேற்குறிப்பிட்டுள்ள பணிகளைச் சிறப்பான முறையில் ஆற்றுவதற்கு, மாநில அளவிலான உற்பத்தித் திறன் குழு, அரசாணை எண் 1866, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 4-9-1985-ல் உருவாக்கப்பட்டுள்ளது. இக்குழு, தமிழ்நாட்டில் அமைந்துள்ள அனைத்துத் தொழிற்சாலைகளிலும் உற்பத்தித திறன் குறித்த பயிற்சி வகுப்பு நடத்த போதுமான வசதிகள் இல்லாதிருந்த போதிலும், வருடத்திற்கு வருடம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

**மேம்பாட்டுப் பணிகள்** [2002 மே 3

*நவீனமயமாக்குதல்*

9.23. அந்நிய முதலீடு மற்றும் நவீன தொழில்நுட்பங்களுடன் பல்வேறு தொழிற்சாலைகள் நமது மாநிலத்தில் தொடங்கப்படுகின்றன. இச்சூழ்நிலையில் ஆலைப் பாதுகாப்பும், தொழிலாளர் பாதுகாப்பும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டியுள்ளது. இத்துறையில் பணியாற்றும் பொறியியல் கல்வித் தகுதி பெற்றுள்ள அலுவலர்கள் தற்கால தொழில்நுட்ப மேம்பாட்டுக்கேற்ப தங்களுடைய தொழில்நுட்பத் திறமையை மேம்படுத்திக்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. இக்குறிக்கோள்களுடன் இத்துறையின் செயல்பாடுகள் கணினி, தகவல் தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் பயிற்சி முறைகள் மூலம் நவீனப்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், பின்வரும் முன்னுரிமைப் பகுதிகளில், தொலைநோக்குப் பார்வையுடன் நவீன செயல்பாடுகள் குறித்த எதிர்காலத் திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன :—

(அ) நிர்வாகம்

(ஆ) தொழில் நுட்பத் திறமை

(இ) பயிற்சி மற்றும் மேம்பாடு

**நிர்வாகத்தை நவீனப்படுத்துதல்**

9.24. தற்போதுள்ள மனித வளத்தைக் கொண்டு, துறையின் செயல்பாடுகளைச் செம்மைப்படுத்தத் தேவையான வழிமுறைகளையும், நடைமுறைகளையும் வகுக்க வேண்டியுள்ளது. பயனற்ற பணிகள் குறைக்கப்பட வேண்டும். முன்னிலைப்படுத்தப்பட வேண்டிய இனங்கள் அடையாளம் காணப்பட்டு, அனைத்துப் பணிகளும் பலன் தரத்தக்க வகையில் முடுக்கி விடப்பட வேண்டும். இவற்றை மனதில் கொண்டு, கீழ்க்கண்ட முன்னுரிமைப் பணிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன :—

(1) குழந்தைத் தொழிலாளர் பணி முறையை ஒழித்தல்.

(2) இரசாயனத் தொழிற்சாலைகளில் தொழில் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில் ஆய்வுகளை மேற்கொள்ளுதல்.

(3) தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய குறைந்தபட்சக் கூலி போன்ற நல வசதிகளை உறுதி செய்திடல்.



2002 மே 3]

9.25. இம்முன்னுரிமைப் பணிகளை திறம்பட செயல்படுத்தும் நோக்குடன் குறைந்தபட்ச ஊதியச் சட்ட செயலாக்கப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டு, தீப்பெட்டி, பட்டாசு மற்றும் இரசாயனத் தொழிற்சாலைகளில் மேற்கொள்ளப்படும் ஆய்வு முறைகளில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. மேலும் நிர்வாகச் செயல்முறைகளை எளிதாக்கும் வகையில் ஆய்வுகள், வரைபட ஒப்புதல், உரிமம் வழங்குதல் மற்றும் நிதிநிலை அதிகாரங்கள் ஆகியவை பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. சீரான தகவல் பரிமாற்றத்திற்கு உகந்ததாகக் கணினி மற்றும் தொலை அச்சுக் கருவி போன்ற வசதிகள் இத்துறையில் அமைக்கப்பட்டுள்ளன. அபாய செயல்முறையுள்ள இரசாயனத் தொழிற்சாலைகளைக் கையாளுவதற்கு தேவையான நவீன தொழில்நுட்பத் தகவல்களைப் பெறும் நோக்குடன் இத்துறையில் கணினி இணையம் ஏற்படுத்தவும் கருத்துரு உள்ளது.

**தொழில்நுட்பத் திறமையை நவீனமயமாக்குதல்**

9.26. சிக்கல் மிகுந்த இரசாயனத் தொழிற்சாலைகள் நமது மாநிலத்தில் வளர்ந்து வருவதன் காரணமாக ஆய்வகத் துறை அலுவலர்களின் தொழில்நுட்பத் திறமையை மேம்படுத்தி நவீனப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. பொதுவாக சமூகத்தின் பாதுகாப்பினையும், குறிப்பாக தொழிலாளர்களின் பாதுகாப்பினையும் உறுதி செய்ய வேண்டிய பொறுப்பு இத்துறைக்கு உள்ளது. இதற்காக இரசாயனப் பொருட்கள் குறித்த விவரக்கூறுகள் சேகரித்து, தகவல் பரிமாற்றம் ஏற்படுத்த வேண்டியது அவசியமாகிறது. எனவே, இந்த நோக்குடன் பெரும்பாலான அலுவலகங்களில் கணினிகள் நிறுவப்பட்டு, தகவல் விவரக்கூறுகள் மற்றும் தொழில்நுட்பத் தகவல்கள் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன.

9.27. மேலும், வளர்ந்துவரும் தொழில்நுட்பத்திற்கேற்ப ஆய்வகத் துறையின் அலுவலர்களின் தொழில்நுட்பத் திறமையையும் மேம்படுத்த வேண்டியுள்ளது. இதற்காக, இத்துறை அலுவலர்களுக்கு உள்நாட்டிலும் வெளி நாட்டிலும் உள்ள பெயர் பெற்ற அமைப்புகளில் தீவிர பயிற்சி அளிக்கப்பட வேண்டியது அவசியமாகிறது. எனவே, இப்பயிற்சி குறித்து முறைப்படுத்தப்பட்ட திட்டங்கள் வகுக்கப்பட வேண்டியது அவசியமாகிறது.

**பயிற்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகளை நவீனமாக்குதல்**

9.28. தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள், மேற்பார்வையாளர்கள், நிர்வாகத்தினர் ஆகிய அனைவருக்கும்

[2002 மே 3

பாதுகாப்புத் தொடர்பான தரமான, பயனுள்ள பயிற்சியினை வழங்க துணைக் கருவிகள் தேவைப்படுகின்றன. நிழற்படக் கருவிகள், பாதுகாப்பு தொடர்பான தகவல்கள் உள்ளடக்கிய ஒலி மற்றும் ஒளிநாடாக்கள், தொலைக்காட்சி கருவிகள் ஆகியவை பெரிதும் அவசியமாகின்றன. பயிற்சிக் கருவிகள் கூடுதலாகப் பெற்று பயிற்சிப் பிரிவினை மேம்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. தற்போது இத்துறையில் உள்ள நூலகத்தில் புத்தகங்கள் மற்றும் வெளியீடுகளை அதிகப்படுத்தி மேம்படுத்தவும், நவீனப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**குறிப்பிடத்தக்க சாதனைகள்**

9.29. ஆய்வகத் துறையின் அனைத்துப் பணிகளிலும் பாராட்டத்தக்க வகையில் வளர்ச்சியை இத்துறையின் செயலாக்க அறிக்கையில் காண முடிகிறது. 2000 ஆம் ஆண்டில், 11,86,448 தொழிலாளர்களுடன், 29,080 ஆக இருந்த பதிவு பெற்ற தொழிற்சாலைகளின் எண்ணிக்கை, 2001 ஆம் ஆண்டில் 12,23,060 தொழிலாளர்களுடன், 31,343 ஆக அதிகரித்துள்ளது. அதிக அளவில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2001 ஆம் ஆண்டில் 25,593 முறையான ஆய்வுகளும், 1,014 சோதனை ஆய்வுகளும், 262 திடீர் ஆய்வுகளும், 5,133 சிறப்பு, விடுமுறை மற்றும் இரவு ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், வழக்கமாக மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் தவிர, குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின் கீழ் திடீர் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதுபோன்ற சிறப்பு முயற்சிகளால், குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின்கீழ் 503 வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. 265 கேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

## அத்தியாயம்-10

## வேலைவாய்ப்புப் பணிகள்

**வேலைவாய்ப்பகங்களின் பணிகள்**

10.1 வேலைநாடுனரை பதிவு செய்தல், தக்க காலியிடங்களுக்கு அவர்களை பரிந்துரைத்தல், வேலை வாய்ப்பற்றோருக்கும், மாணவர்களுக்கும் தொழில்முறை வழிகாட்டி பணிகள் ஆற்றுதல், வேலைவாய்ப்புகள் மற்றும் வேலைவாய்ப்பற்றோர் பற்றிய விவரங்களை அவ்வப்போது சேகரித்து அறிக்கைகள் தயார் செய்தல் போன்றவை இத்துறையின் வேலைவாய்ப்பு பிரிவின் முக்கிய பணிகளாகும்.



2002 மே 3]

**வேலைவாய்ப்பு பிரிவின் நிர்வாக அமைப்பு**

10.2 வேலைவாய்ப்பு பிரிவில் இயக்குநருக்கு உதவியாக இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு), இணை இயக்குநர் (வேலைவாய்ப்புத் திட்டங்கள்), இணை இயக்குநர் (தொழில் ஆராய்வு) ஆகிய மூன்று இணை இயக்குநர்கள் உள்ளனர். மாவட்ட அளவில் 29 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் உள்ளன. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களைத் தவிர கீழ்க்காணும் சிறப்பு அலுவலகங்களும் வேலைவாய்ப்பு பிரிவின் சிறப்பு அங்கமாக செயல்பட்டு வருகின்றன:—

| | | |
|---|---|---|
| (அ) | மண்டலத் துணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) அலுவலகங்கள் சென்னை, திருச்சி, மதுரை, கோயம்புத்தூர். | 4 |
| (ஆ) | தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகம், சென்னை-4. | 1 |
| (இ) | தொழில் திறனற்றோருக்கான மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், சென்னை-20. | 1 |
| (ஈ) | தொழில்நுட்பப் பணியாளர்களுக்கான மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், சென்னை-18 மற்றும் கோயம்புத்தூர். | 2 |
| (உ) | உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம், சென்னை-40. | 1 |
| (ஊ) | துணை வேலைவாய்ப்பு அலுவலகம், ஒசூர் (தர்மபுரி மாவட்டம். | 1 |
| (எ) | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் நிலையங்கள் கடலூர், கோயம்புத்தூர், திருச்சி, திருநெல்வேலி மற்றும் வேலூர். | 5 |
| (ஏ) | பழங்குடியினருக்கான தொழில்நெறி வழிகாட்டும் சிறப்பு நிலையங்கள் சேலம், சங்கராபுரம் (விழுப்புரம்), திருவண்ணாமலை மற்றும் உதகமண்டலம். | 4 |
| | மொத்தம் | 19 |

**2001 ஆம் ஆண்டில் வேலைவாய்ப்பு பணிகளின் செயல்பாடுகள்**

**பதிவு மற்றும் பரிந்துரை பணிகள்**

10.3 2001 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும் 5,94,580 மனுதாரர்கள் வேலைவாய்ப்புக்காகப் பதிவு

[2002 மே 3

செய்தனர். அவர்களுள் 20,138 மனுதாரர்கள் பணியமர்த்தம் செய்யப்பட்டுள்ளனர்.

2001 ஆம் ஆண்டின் இறுதியில், அதாவது 31-12-2001 நிலவரப்படி, வேலைவாய்ப்பு அலுவலகங்களின் உயிர் பதிவேட்டில் வேலைக்காக பதிவு செய்துள்ள மனுதாரர்களின் எண்ணிக்கை 49.23 இலட்சம் ஆகும். அவர்களுள் 17.7 இலட்சம் பெண்கள். 11.2 இலட்சம் ஆதிதிராவிடர்கள். 13,094 பழங்குடியினர் ஆவர்.

**வேலைவாய்ப்பு அலுவலகங்கள் (கட்டாய காலியிட அறிவிப்புச் சட்டம்) 1959-ஐ அமல்படுத்துதல்**

10.4 வேலைவாய்ப்பு அலுவலகங்கள் (கட்டாய காலியிட அறிவிப்புச் சட்டம்) 1959-ன் கீழ், வேலையளிப்போரிடமிருந்து வேலைநிலவரத் தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன. 31-3-2000 மற்றும் 31-3-2001-ல் இயங்கி வந்த பொது மற்றும் தனியார்த் துறை நிறுவனங்கள் மற்றும் அந்நிறுவனங்களில் பணியாற்றிய மொத்த பணியாளர்களின் விவரம் பின்வருமாறு:—

| வரிசை எண் | இனம் | 31-3-2000 உடன் முடிவுற்ற ஆண்டு | | 31-3-2001 உடன் முடிவுற்ற ஆண்டு | |
|---|---|---|---|---|---|
| | | பொதுத் துறை | தனியார் துறை | பொதுத் துறை | தனியார் துறை |
| 1. | புள்ளிவிவரங்கள் பெற தொடர்பு கொள்ளப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை | 12,344 | 12,943 | 12,116 | 13,009 |
| 2. | புள்ளிவிவரங்கள் பெறப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை | 12,295 | 12,093 | 12,101 | 12,075 |
| 3 | மொத்த வேலைவாய்ப்பு | 15,97,240 | 9,27,233 | 15,86,290 | 9,19,484 |

**மாணவர் மற்றும் வேலைநாடி பதிவு செய்தவர்களுக்கான தொழில் முறை வழிகாட்டுதல் பணி**

10.5 தமிழ்நாட்டில் மொத்தம் 18 தொழில்நெறி வழிகாட்டும் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. இப்பிரிவுகள் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்த விண்ணப்பதாரர்களுக்கு தொழில் தகவல், பயிற்சி விவரங்கள் போன்றவற்றை சேகரித்து வழங்கி வருகின்றன. பதிவின் போது வழிகாட்டுதல், தனிநபர் ஆலோசனை அளித்தல், பழைய



2002 மே 3]

பதிவுதாரர்களின் பரிசீலனை, குழு விவாதம், தொழில் பற்றிய விவரங்கள் அளித்தல், பயிற்சி பணியாளர்கள் மற்றும் கல்வி நிறுவனங்களின் தொழில் முறை வழிகாட்டி சொற்பொழிவாற்றுதல், வேலையளிப்போருடன் தொடர்பு கொள்ளுதல், வேலைவாய்ப்பு பற்றி கருத்தரங்கு மற்றும் கண்காட்சி நடத்துதல், தொழிற் கல்லூரி நுழைவுக்கான பயிற்சி அளித்தல், கிராமப்புறப் பள்ளிகளை தத்தெடுத்து அதன் மூலம் சிறப்பு வழிகாட்டுதல் ஆகியவை இப்பிரிவுகள் ஆற்றும் பணிகள் ஆகும்.

2001 ஆம் ஆண்டில் 1,845 மனுதாரர்கள் பயிற்சி பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். 1,519 தொழில் முறை வழிகாட்டி சிறப்பு சொற்பொழிவுகள் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்களால் ஆற்றப்பட்டுள்ளன. 62 கண்காட்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு தமிழ்நாடு தொழிற் கல்லூரி நுழைவிற்கான பயிற்சித் திட்டம்**

10.6 2001ஆம் ஆண்டில், ரூ.6.19 இலட்சம் செலவில் 1150 இந்து ஆதிதிராவிடர் மனுதாரர்களுக்கு தமிழ்நாடு தொழிற் கல்லூரி நுழைவுத் தேர்வுக்கான முன் பயிற்சி அளிக்கப்பட்டது. அவர்களுள் 236 மனுதாரர்கள் பல்வேறு தொழிற் கல்லூரிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

**சுய வேலைவாய்ப்பு**

10.7 1-1-2001 முதல் 30-9-2001 வரை வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம் சுய வேலைவாய்ப்புக்காக 728 மனுதாரர்களுக்கு பல்வேறு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து ரூ.397 இலட்சம் கடன் உதவியாக பெற்றுத்தர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

**உடல் ஊனமுற்றோருக்கான மறுவாழ்வு மற்றும் பணியமர்த்தல் திட்டங்கள்**

10.8 சென்னை-40, அண்ணாநகரில் அமைந்துள்ள உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம் மற்றும் திருச்சி, மதுரை, தஞ்சாவூர் நாகர்கோவில், கோயம்புத்தூர், சேலம், காஞ்சிபுரம், வேலூர், ஈரோடு, உதகமண்டலம், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கடலூர் ஆகிய 13 இடங்களில் உள்ள உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு மையங்கள் மூலமாகவும் உடல் ஊனமுற்றோருக்கு பணியமர்த்தம் மற்றும் புனர் வாழ்வுக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

[2002 மே 3

2001 ஆம் ஆண்டில் 5,595 உடல் ஊனமுற்றோர் (331 விழியிழந்தோர், 308 செவிப்புலன் இழந்தோர் மற்றும் 4,956 உறுப்பு நலன் குன்றியோர்), வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்தனர். அவர்களுள் 1,181 மனுதாரர்கள் பணியமர்த்தம் செய்யப்பட்டுள்ளனர். (19 விழிப்புலன் இழந்தோர், 29 செவிப்புலன் இழந்தோர் மற்றும் 1,133 உறுப்பு நலன் குன்றியோர்). 31-12-2001 நிலவரப்படி 7,250 விழியிழந்தோர், 5,640 செவிப்புலன் இழந்தோர் 57,924 உடல் உறுப்பு குன்றியோர் ஆக மொத்தம் 70,814 உடல் ஊனமுற்றோர் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து கொண்டுள்ளனர்.

**கிராமப்புறப் பள்ளிகளைத் தத்தெடுத்து தொழில்நெறி வழிகாட்டிப் பணியினை அப்பள்ளிகளில் தீவிரமாகச் செயல்படுத்தும் முன்னோடித் திட்டம்**

10.9 2001-2002 ஆம் ஆண்டில், 22 பள்ளிகள் தத்தெடுக்கப்பட்டு, தீவிர தொழில்முறை வழிகாட்டிப் பணிகள் அப்பள்ளி மாணவர்களை சென்று அடையும் வண்ணம் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

**விழி இழந்தோருக்கான வேலைவாய்ப்பற்றோர் நிவாரணம் வழங்குதல்**

10.10 2000-2001 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.29.20 இலட்சத்தில் ரூ.26.77 இலட்சம் செலவிடப்பட்டு அதன் மூலம் 1051 மனுதாரர்கள் பயன் அடைந்துள்ளனர். 2001-2002 ஆம் ஆண்டில் இதற்கான ஒதுக்கீடு ரூ.29.20 ஆகும்.

**பழங்குடியினருக்கான துணைத் திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்படும் திட்டங்கள் (சிறப்பு தொழில்முறை வழிகாட்டும் மையங்கள்)**

10.11. உதகமண்டலம், சங்கராபுரம், திருவண்ணாமலை மற்றும் சேலம் ஆகிய 4 இடங்களிலும் பழங்குடியினருக்கான சிறப்பு வழிகாட்டி மையங்கள் இயங்கி வருகின்றன. இம்மையங்களின் முக்கிய செயல்பாடுகள் வருமாறு :

(1) தொழில் மற்றும் பயிற்சி பற்றிய விவரங்களைச் சேகரித்தல், தொகுத்தல் மற்றும் விவரங்களை பழங்குடியினருக்கு வழங்குதல்.

(2) காலாண்டு இடைவெளியில் பழங்குடியினருக்கான வழிகாட்டும் மடல்கள் தயாரித்து வழங்குதல்.

(3) பெருவாரியான அளவில் பழங்குடி மாணவர்கள் படிக்கும் பள்ளிகள் மற்றும் தங்கியிருக்கும் விடுதிகளுக்குச் சென்று தொழில்



2002 மே 3]

முறை வழிகாட்டுதல், சொற்பொழிவுகள் மூலம் அவர்களுக்கு மேற்படிப்பு, தொழிற்கல்வி படிப்பு பயிற்சி வசதிகள், வெளி நாடுகளில் கல்வி வசதிகள், உதவித் தொகை விவரங்கள் மற்றும் பணியாளர் அதிகம் இல்லாத பணி விவரங்கள் ஆகியவை வழங்குதல்.

(4) பழங்குடியினருக்கான ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியிடங்களில் நியமனம் செய்ய தகுதி வாய்ந்த பழங்குடியினத்தவர் அல்லாத காலியிடங்கள் தெரிவு செய்யப்பட்டு அப்பணியிடங்களை நிரப்பும் வண்ணம் பழங்குடியினருக்கு தகுந்த பயிற்சியளித்தல்.

(5) தொழிற் கல்வி கல்லூரிகளுக்கான நுழைவுத் தேர்வுக்கான பயிற்சி மற்றும் போட்டித் தேர்வுகளுக்கான முன்தேர்வு பயிற்சி அளித்தல்.

(6) பழங்குடியினர் வசிக்கும் இடங்களுக்குச் சென்று அவர்களது வேலைவாய்ப்புக்காக பதிவு செய்தல்.

(7) பழங்குடியினரை சுய வேலைவாய்ப்பிற்கு ஊக்கப்படுத்தி, தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள், இதர நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் வசதி பெற்றுத் தருதல்.

**பழங்குடியினருக்கான சிறப்பு திட்டத்தின் செயல்பாட்டு விவரம்**

| வரிசை எண் | 2001-2002 ஆம் ஆண்டில் செயல்பாட்டின் விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | நெடுந்தொலைவில் வசிக்கும் பழங்குடியின மனுதாரர்கள் பதிவு செய்தல். | 64 |
| 2 | பழங்குடியின மனுதாரர்கள் பதிவு மற்றும் வழிகாட்டும் பணி | 668 |
| 3 | தனிநபர் ஆலோசனை அளித்தல் | 1,621 |
| 4 | வழிகாட்டுதலுக்காக நடத்தப்பட்ட குழுக் கூட்டங்கள். | 302 |
| 5 | பழங்குடி மனுதாரர்களுக்காக நடத்தப்பட்ட கூட்டங்களில் கலந்து கொண்டு பயன்பெற்ற மனுதாரர்கள். | 6,450 |
| 6 | வாழ்க்கை தொழில்நெறி உரைகள் | 136 |
| 7 | வேலையளிப்போர் / நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ளப்பட்டது. | 161 |
| 8 | பள்ளி மற்றும் பழங்குடி மனுதாரர்கள் வசிக்கும் தங்கும் விடுதிகளுக்குச் சென்று பார்த்தல் | 104 |

[2002 மே 3

| வரிசை எண் | 2001-2002 ஆம் ஆண்டில் செயல்பாட்டின் விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 9 | பழங்குடியின மனுதாரர்கள் வேலைக்காக பணியமர்த்தப்பட்டவர்கள் | 14 |
| 10 | நடத்தப்பட்ட தொழில்நெறி வழிகாட்டும் கண்காட்சிகள். | 3 |

***சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் நிலையங்கள்)***

10.12 தமிழ்நாட்டில் கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, வேலூர் மற்றும் கடலூர் ஆகிய 5 இடங்களில் இம்மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இம்மையங்களின் செயல்பாட்டின் முக்கிய குறிக்கோள்கள் பின்வருமாறு :

(1) ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்த வேலை நாடுநருக்கு தொழில் பற்றிய விவரங்கள் அளித்தல்.

(2) திட்டம் வகுத்து தன்னம்பிக்கையூட்டும் பயிற்சி ஆதிதிராவிட மனுதாரர்களுக்கு அளித்தல்.

(3) பணி மேம்பாட்டுத் திட்டங்கள் பற்றிய விவரங்கள் அளித்தல்.

(4) ஆதிதிராவிட மனுதாரர்களுக்கு சுருக்கெழுத்து மற்றும் தட்டச்சு பயிற்சியளித்தல்.

(5) உள்ளூர் வேலைவாய்ப்பு அலுவலகங்களுடன் நெருக்கமான தொடர்பு கொண்டு இதுபோன்ற பிற தொழில்நெறி வழிகாட்டுதல் பணிகளை மேற்கொள்ளுதல்.

மேற்கண்ட பணிகள் தவிர, பல்வேறு தேர்வுக் குழுக்களால் நடத்தப்படும் போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்ளும் இந்து ஆதிதிராவிட மனுதாரர்களுக்கு பயிற்சியளிக்கும் பணியினையும் இம்மையங்கள் ஆற்றி வருகின்றன.

சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின்கீழ் இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி மூலம் பயனடைந்தவர்கள் விவரம் பின்வருமாறு:—



2002 மே 3]

| வரிசை எண் | 2001-2002 ஆம் ஆண்டில் செயல்பாட்டின் விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | மூத்த பதிவுதாரர்களின் பதிவுகளை ஆய்வுசெய்து அவர்களுக்கு வழிகாட்டுதல் வழங்குதல் | 2728 |
| 2 | ஆதிதிராவிட மனுதாரர்களுக்கு தன்னம்பிக்கை வளர்க்கும் நோக்கில் நடத்தப்பட்ட கூட்டங்கள். | 150 |
| 3 | வாழ்க்கைத் தொழில்நெறி உரைகள் | 195 |
| 4 | சுய வேலைவாய்ப்பிற்காக தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட ஆதிதிராவிட மனுதாரர்களின் மனுக்களின் எண்ணிக்கை. | 300 |

**வேலைவாய்ப்பு அலுவலகங்களின் செயல்பாடுகளை கணினிமயமாக்குதல்**

10.13 1986 ஆம் ஆண்டு முதல் வேலைவாய்ப்பு அலுவலகங்களின் பணிகள் அனைத்தும் கணினிமயமாக்கப்பட்டு வருகின்றன. ஏற்கெனவே 29 வேலைவாய்ப்பு அலுவலகங்களின் பணிகள் கணினிமயமாக்கப்பட்டு விட்டன.

**முதலமைச்சரின் சிறப்பு பிரிவிலிருந்து பெறப்படும் மனுக்கள் மீதான நடவடிக்கை**

10.14 மனுதாரர்களின் குறைகளைக் களைவது இத்துறையின் முக்கியமான பணிகளில் ஒன்றாகும். வேலைவாய்ப்புக் கோரி மாண்புமிகு முதலமைச்சர், அமைச்சர்கள், பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் வழியாக பெறப்படும் மனுக்கள் மிகவும் கவனத்துடனும், விரைவாகவும் பரிசீலிக்கப்படுகின்றன. 2001 ஆம் ஆண்டில் முதலமைச்சர் சிறப்பு பிரிவிலிருந்து பெறப்பட்ட 8,887 மனுக்களுள் 4,026 மனுக்களுக்கு இதுவரை பதில்கள் அனுப்பப்பட்டுள்ளன. மனுதாரர்களுக்கும், சிறப்பு பிரிவுக்கும் உரிய பதில்கள் அனுப்பப்பட்டு உள்ளன.

**மாவட்டங்களில் அமைந்துள்ள தன்னார்வ பயிலும் வட்டங்களின் செயல்பாடுகள்**

10.15 ஏற்கெனவே 24 மாவட்டங்களில் இயங்கி வந்த தன்னார்வ பயிலும் வட்டங்கள் தவிர சென்னை, திருச்சிராப்பள்ளி, சேலம், மதுரை, கோயம்புத்தூர் ஆகிய ஐந்து மாவட்டங்களிலும் தன்னார்வ பயிலும் வட்டங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. இத்துடன் அனைத்து 29 மாவட்டங்களிலும் தன்னார்வ பயிலும் வட்டங்கள் உள்ளன. 2001 ஆம் ஆண்டில் இவ்வட்டங்கள் மூலம் 110 மனுதாரர்கள் பயனடைந்து

போட்டித் தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியமர்த்தம் செய்யப்பட்டுள்ளனர்.

**தனியார் துறை பணியமர்த்தம்**

10.16 பொதுத் துறையில் வேலைவாய்ப்புகள் குறைந்து வரும் சூழ்நிலையில் வேலைவாய்ப்பற்ற மனுதாரர்களை தனியார் துறையிலுள்ள பணிகளில் பணியமர்த்தும் செயல்பாட்டை வேலைவாய்ப்பு அலுவலகங்கள் தீவிரமாக நிறைவேற்றி வருகின்றன. சேலம், கோயம்புத்தூர், தர்மபுரி, ஈரோடு, கரூர் ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம் தனியார் பணியமர்த்துதல் திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தப்படுகிறது. சேலம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் மாதத்தில் இரண்டாவது வெள்ளிக்கிழமை தனியார் நிறுவனங்களில் மனுதாரர்களை பணியமர்த்தும் நாளாக செயல்படுத்தப்படுகின்றது. 31-12-2001 வரை உள்ள காலத்தில் 1,771 மனுதாரர்கள் இதன் மூலம் தனியார் துறையில் பணியமர்த்தம் செய்யப்பட்டுள்ளனர்.

## அத்தியாயம்-11

**அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்**

11.1 அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் 1956 ஆம் ஆண்டின் கம்பெனிகள் சட்டத்தின்கீழ்ப் பதிவு செய்யப்பட்ட ஒரு நிறுவனமாகும். இது 30-11-1978 அன்று பதிவு செய்யப்பட்டது. இது முற்றிலும் தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமானதாகும். இந்நிறுவனத்தின் தலையாய நோக்கம் வேலைநாடும் இந்திய தொழிலாளர்கள் அயல்நாடுகளில் தகுந்த பணியமர்த்தங்களைப் பெற உதவி புரிவதாகும். இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ.50 இலட்சம் ஆகும்; வழங்கப்பட்ட மூலதனம் ரூ.15 இலட்சம் ஆகும்.

11.2 இலாபம் ஈட்டும் நிறுவனங்களில் இதுவும் ஒன்றாகும். 31-3-2001 நிலவரப்படி, இதன் மொத்த இலாபம் ரூ.14.69 இலட்சமாகும். இந்நிறுவனம் 2000-2001 நிதியாண்டில் 2 விழுக்காடு இலாபப் பங்கினை அரசுக்கு அளிக்க தீர்மானித்துள்ளது.

11.3 அதன் தொடக்கம் தொடங்கி 31-12-2001 வரை, இந்நிறுவனம் மொத்தம் 5,617 பேர்களை வேலைவாய்ப்புகளுக்காக அயல்நாடுகளுக்கு அனுப்பிவைத்துள்ளது. பயனாளிகளில் பெரும்பாலோர் முழுத் திறன்



அல்லது ஓரளவு திறன்படைத்த வேலையாட்களும், மருத்துவத் துறையைச் சார்ந்தோர்களுமே ஆவர். சவூதி அரேபியாவின் சுகாதார அமைச்சகம் மருத்துவர்களையும் மருத்துவ தொழில்நுட்பாளர்களையும் தேர்வு செய்வதற்கு இந்தியாவில் சார்ந்திருக்கும் முக்கியமான முகமை நிறுவனங்களுள் இதுவும் ஒன்றாகும்.

11.4 தன் செயல்பாடுகளைப் பலமுனைப்படுத்தும் நோக்கில், இந்நிறுவனம், கீழ்க்காணும் செயல்பாடுகளை செய்து வருகிறது:-

1. சென்னை மண்டல பாஸ்போர்ட் அலுவலரின் அதிகார எல்லைக்குள் வசிக்கும் மனுதாரர்கள் மற்றும் பொதுமக்களுக்கு பாஸ்போர்ட் தொடர்பான பணிகளை அளிப்பது.

2. வெளிநாடுகளில் உள்ள வேலையளிப்போரால் நேரடியாகத் தேர்வு செய்யப்பட்ட மனுதாரர்களுக்கும், தம் சொந்த முயற்சியால் வெளிநாட்டு வேலைவாய்ப்பைப் பெறும் மனுதாரர்களுக்கும் விசா முத்திரையிடும் பணியைச் செய்து தருவது.

3. உள்நாட்டு மற்றும் பன்னாட்டு விமானப் பயணச்சீட்டுகளை விற்பனை செய்வது.

11.5 இந்நிறுவனம் முழுமைபெற்ற ஒரு பயணப் பிரிவைக் கொண்டுள்ளது. அது IATA (பன்னாட்டு விமானப் போக்குவரத்துக் கழகம்) அமைப்பின் அங்கீகாரம் பெற்றது. மேலும், இந்தியன் ஏர்லைன்ஸ் மற்றும் அயல்நாட்டு விமானச்சீட்டுகளை கணினி மூலம் முன்பதிவு செய்யும் வசதிகளைப் பெற்றுள்ளது. இந்நிறுவனம், தன் அயல்நாட்டு பணியமர்த்தல் செயல்பாட்டை விரிவாக்கவும், விமானப் பயணச்சீட்டுகளின் விற்பனையைப் பெருக்குவதற்கும் தகுந்த திட்டங்களைத் தீட்டி வருகிறது.

11.6 அரசாணை (நிலை) எண் 12, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 9-2-2002-ல் தற்போது அயல்நாட்டில் வாழும் தமிழர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக் விபத்து மற்றும் மருத்துவ செலவு மற்றும் ஆயுள் பாதுகாப்பிற்காக சமூக பாதுகாப்புத் திட்டத்தினை, ஆயுள் பாதுகாப்பு நிறுவனத்துடன் இணைந்து செயல்படுத்த அரசு இந்நிறுவனத்திற்கு அனுமதி அளித்துள்ளது.

## அத்தியாயம்-12

### கைவினைஞர் பயிற்சித் திட்டம்

12.1 1963 ஆம் ஆண்டு முதல், வேலைவாய்ப்புப் பிரிவு மற்றும் பயிற்சிப் பிரிவு ஆகியவை ஒன்றாக்கப்பட்டு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை என்னும் புதிய துறை உருவாக்கப்பட்டது.

12.2 கைவினைஞர் பயிற்சித் திட்டமானது, திறமை வாய்ந்த கைவினைஞர்களை உருவாக்கித் தருவதில் முக்கிய பங்காற்றுகிறது.

கைவினைஞர் பயிற்சித் திட்டத்தின் ஆரம்ப மற்றும் நீண்டகால குறிக்கோள்கள்:—

1. பள்ளிக் கல்வி கற்ற ஏழை, எளிய இளைஞர்கள் பயனடைய வேலைவாய்ப்புகள் பெறும் வகையில் தொழிற்பயிற்சி அளித்தல்.

2. செயல்திறன் முன்னேற்றப் பயிற்சித் திட்டத்தை செயல்படுத்தத் தேவையான உள்ளமைப்புகளை உருவாக்குதல்.

3. தொழிற்சாலைகளின் தேவைக்கேற்ப பல்வேறு தொழிற்பிரிவுகளில் சிறந்த பணியாளர்களை உருவாக்குதல்.

4. ஊரக இளைஞர்கள் தொழில்நுட்பத் திறன் பெறவும், வேலைவாய்ப்புப் பெறவும் ஊரகப் பகுதிகளில் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் தோற்றுவிப்பதை ஊக்குவித்தல்.

5. தொழிற்சாலைகள் மற்றும் பயிற்சியாளர்கள் ஆகிய இரு தரப்பினரும் ஒருவருக்கொருவர் பயன்கருதி, பணிமனைகளில் தொழில்நுட்ப அறிவு மற்றும் அனுபவம் இவைகளை பரிமாற்றம் செய்ய தொழிற்சாலைகளுக்கிடையே நெருங்கிய தொடர்பினை தோற்றுவித்தல்.

6. பணிபுரியும் தொழிலாளர்களின் கருத்தியல் பாடம் மற்றும் தொழில்நுட்ப அறிவினை மேம்படுத்த பயிற்சி அளித்தல்.

7. தொழிற்பயிற்சி பெறாத நபர்களின் திறமையினை ஊக்குவிக்க கைவினைஞர் பயிற்சித் திட்டத்தில் செயல்படுத்தப்படாத தொழிற்பிரிவுகளில் அடிப்படைப் பயிற்சி அளித்தல்.

8. தொழிற் துறையின் முன்னேற்றத்தில் மகளிர் பங்கேற்பினை அதிகரிக்கச் செய்தல்.



### அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள்

12.3 கைவினைஞர் பயிற்சித் திட்டம் தமிழ்நாடெங்கும் அமைந்துள்ள அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களின் மூலம் கைவினைஞர்களை உருவாக்குகிறது. தமிழ்நாடெங்கும் 53 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில், 36 பொறியியல் மற்றும் 15 பொறியியல் அல்லாத தொழிற்பிரிவுகளில் மொத்தம் 17,200 பயிற்சியாளர்களுக்கு (மாணவர் மற்றும் மாணவியர் இருபாலரும் சேர்த்து) பயிற்சி அளிக்கப்படுகிறது. தொழிற்பிரிவின் இயல்புக்கேற்றவாறு பயிற்சியின் கால அளவு ஒரு வருடம் முதல் மூன்று வருடங்கள் வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இம்மாநிலத்திலுள்ள 53 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களுள், மகளிருக்கென 10 தொழிற் பயிற்சி நிலையங்களும், ஆதிதிராவிடருக்கென சிதம்பரத்தில் ஒன்றும், மலைவாழ் மக்களுக்கென சங்கராபுரத்தில் ஒன்றும் இயங்கி வருகின்றன. அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் இன, இட ஒதுக்கீட்டிற்கு உட்பட்டு, தகுதியின் அடிப்படையில் மாணவர்கள் பயிற்சிக்கு சேர்க்கப்படுகிறார்கள். 10 மகளிர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் நீங்கலாக, ஏனைய 43 தொழிற்பயிற்சி நிலையங்களிலும் 30 விழுக்காடு இருக்கைகள் மகளிருக்காகவே ஒதுக்கப்பட்டுள்ளன.

124 தொழிற்பிரிவுகள் மற்றும் பாடத் திட்டங்கள் ஆகியவை அகில இந்திய ரீதியில் ஒரே மாதிரியாக இருக்கும் வகையில் தேசிய வாழ்வியல் கல்வி பயிற்சித் திட்டக் குழுவால் வடிவமைக்கப்பட்டுள்ளன. 7 பொறியியல் தொழிற்பிரிவுகளின் கருத்தியல் மற்றும் செய்முறை குறித்த பாடப் புத்தகங்கள் தமிழாக்கம் செய்யப்பட்டு, தற்போது தமிழில் வகுப்புகள் நடத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. பயிற்சியின் முடிவில், தொழிற்தேர்வுகள் வருடத்திற்கு ஒரு முறை ஜூலை மாதம் அகில இந்திய அளவில் நடத்தப்பட்டு அதில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு தேசிய தொழிற்சான்றுகள் வழங்கப்படுகின்றன. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின பயிற்சியாளர்களுக்கு மாதாந்திர உதவித்தொகை ரூ.55-லிருந்து ரூ.150/- ஆகவும், பர்மா மற்றும் வியட்நாம் அகதி பயிற்சியாளர்களுக்கு மாதாந்திர உதவித்தொகை ரூ.82.50-லிருந்து ரூ.175/- ஆகவும், சீர்மரபினர் மற்றும் நாடோடி பழங்குடியின பயிற்சியாளர்களுக்கு மாதாந்திர உதவித்தொகை ரூ.45/-லிருந்து ரூ.140/- ஆகவும் உயர்த்தப்பட்டு வழங்கப்படுகிறது.

12.5 நவீன தொழில் நுட்பவியல் அடிப்படையில் எழும் தேவைக்கேற்ப செயல்திறன் மற்றும் மனித ஆற்றலினை வழங்கிடும்

நோக்குடன், உலக வங்கித் திட்டத்தின்கீழ் 31 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களும், மாநில திட்டத்தின்கீழ் 21 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களும், நவீனமயமாக்கப்பட்டுள்ளன.

### இணைக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள்

12.6 தொழிற்சாலைகளுக்குத் தேவையான தேர்ச்சி பெற்ற கைவினைஞர்களை உருவாக்கிடும் சீரிய முயற்சியை நிறைவு செய்திடும் வகையில் தொழிற்பயிற்சி அளிக்க, தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் தொடங்கிட ஊக்குவிக்கப்படுகிறது. இம்மாநிலத்தில் 603 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள், 58,805 பயிற்சியாளர் இருக்கைகளைக் கொண்டு, தேசிய வாழ்வியல் மேம்பாட்டு பயிற்சிக் குழுவுடன் இணைக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. 603 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களுள், 165 புதிய தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் 116 ஊராட்சி ஒன்றியங்களில் தொடங்கப் பெற்றுள்ளன. இதுவரை தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் தொடங்கப்படாத 79 ஊராட்சி ஒன்றியங்களிலும் ஒரு சில தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் தொடங்கவும், புதிதாக தொடங்கப்படவுள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் நவீன மற்றும் மேம்படுத்தப்பட்ட தொழிற் பிரிவுகளான தகவல் தொழில்நுட்பம் போன்ற பிரிவுகளை தொடங்குவது குறித்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### தொழிற்பள்ளிகள்

12.7. அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் தவிர, இம்மாநிலத்தில் 27,200 இருக்கைகள் கொண்ட 281 தொழிற்பள்ளிகள் இயங்குகின்றன. இத்தொழிற்பள்ளிகள் பெரும்பாலும் அறக்கட்டளைகளினால் நடத்தப்பட்டு வருகின்றன. 8 ஆம் வகுப்பு முதல் எஸ்.எஸ்.எல்.சி. வரையில் கல்வி பயின்றவர்கள் பல்வேறு பொறியியல் பிரிவுகள், பொறியியல் அல்லாத பிரிவுகள், உணவாக்கல் மற்றும் அழகுக் கலை தொழிற்பிரிவுகளில் பயிற்சி பெற சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். தேர்ச்சி பெறும் பயிற்சியாளர்களுக்கு மாநில அரசின் தொழிற்பள்ளிச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. 281 தொழிற்பள்ளிகளுள், 48 பள்ளிகள், 75 விழுக்காடு பணியாளர் ஊதியம் மற்றும் நிலை முதல் மானியம் அல்லது 75 விழுக்காடு நிகர இழப்பு, இதில் எது குறைவோ அதனை அரசின் பராமரிப்பு மானியமாகப் பெறுகின்றன.





### தொழிற்பழகுநர் பயிற்சித் திட்டம்

12.8. தொழிற்பயிற்சி நிலையங்களில் தேர்ச்சி பெற்ற பயிற்சியாளர்களுக்கு, தொழிற்பழகுநர் சட்டம் 1961ன்கீழ், தொழில் நிறுவனங்களில் ஆறு மாதம் முதல் நான்கு ஆண்டுகள் வரை தொழிற்பழகுநர் பயிற்சி அளிக்கப்பட்டு, தொழில் நிறுவனத்தில் தமது செயல் திறத்தை வெளிப்படுத்த அவர்களுக்கு வாய்ப்பளிக்கப்படுகிறது. தொழிற்பயிற்சி நிலையங்களினால் உருவாக்கப்படும் அனுபவம் குறைவான தொழிலாளர்களை, தொழிற்பழகுநர் பயிற்சி நிலையங்கள் அனுபவம் மிகுந்த திறமையான தொழிலாளர்களாக மாற்றுகின்றன. தொழிற்பழகுநர் இப்பயிற்சிக் காலத்தில், பணிமனை செய்முறை திறனை தொழில் நிறுவனங்களிலும், கருத்தியல் பாடத்திறனை தொடர் அறிவுரை மையங்களிலும் பெறுகின்றனர். தொழிற்பழகுநர் பயிற்சிக் காலத்தில், தொழிற்பழகுநர்களுக்கு மாதந்தோறும் தலா ரூ.820/- முதல் ரூ.1230/- வரை உதவித்தொகையாக சம்பந்தப்பட்ட தொழில் நிறுவனங்கள் வழங்குகின்றன.

12.9. தொழிற்பழகுநர் பயிற்சி 140 தொழிற்பிரிவுகளில் அளிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் தற்போது 2,082 தொழில் நிறுவனங்களில் சுமார் 14,648 தொழிற்பழகுநர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். அகில இந்திய தொழிற்தேர்வு ஆண்டுதோறும் ஏப்ரல் மற்றும் அக்டோபர் மாதங்களில் நடைபெறுகிறது. தேர்ச்சி பெற்ற தொழிற்பழகுநர்களுக்கு தேசிய தொழிற்பழகுநர் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. ஒவ்வோர் ஆண்டும் சுமார் 14,000 தொழிற்பழகுநர்கள் தொழிற்தேர்வில் கலந்து கொள்கின்றனர்.

12.10. தொழில் நிறுவனங்களால் அமர்த்தப்படும் தொழிற் பயிற்சியில்லா தொழிற்பழகுநர்களுக்கு அடிப்படை பயிற்சி தேவைப்படுகிறது. மேலும் கைவினைஞர் பயிற்சித் திட்டத்தில் இடம் பெறாத தொழிற்பிரிவுகளுக்கான அடிப்படைப் பயிற்சி, தொழிற்பழகுநர் திட்டத்தின்கீழ் உள்ள அடிப்படைப் பயிற்சி மையத்தில் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. உணவகம், உணவாக்கம் மற்றும் பரிமாறுதல் தொழிற்பிரிவிற்கான அடிப்படைப் பயிற்சி மையம் அம்பத்தூரிலும். இரசாயன தொழிற் பிரிவிற்கான அடிப்படை பயிற்சி மையம் இராணிப்பேட்டையிலும் தொடங்கப்பட்டுள்ளன. இதனால் தொழிற்பழகுநர்கள் உணவாக்கம் மற்றும் இரசாயன தொழிற்பிரிவுகளில் அடிப்படை பயிற்சி பெற்று பயன் அடைகின்றனர்.

[2002 மே 3

**ஆதிதிராவிட வகுப்பினர் மற்றும் பழங்குடியினர் நலத் திட்டம்**

12.11 ஆதிதிராவிட வகுப்பினர் மற்றும் பழங்குடியினர் சமூக, பொருளாதார நிலையை மேம்படுத்தும் வகையில், அவர்களுக்கு எளிதில் வேலைவாய்ப்பு கிடைக்க வழிகோலும் சில தொழில் பிரிவுகளில் தொழிற் பயிற்சி வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். சிதம்பரத்தில் இயங்கும் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் ஆதிதிராவிடர் வகுப்பினருக்கென்றே ஏற்படுத்தப்பட்டுள்ளது. 96 இருக்கைகளுடன் மூன்று தொழில் பிரிவுகளில் பயிற்சி நடத்தப்படுகின்றது. இத்திட்டத்திற்கென 2002-2003 ஆம் ஆண்டிற்கு ரூ.19.25 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

12.12. 'பழங்குடியினர் துணைத் திட்டம்' என்பது குறிப்பிட்ட பகுதியில் வாழும் மலை வாழ் பழங்குடியினருக்கு மட்டும் பயன் அளிக்கக் கூடிய தனிச் சிறப்புத் திட்டமாகும். பழங்குடியினர் துணைத் திட்டம், விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 80 இருக்கைகளுடன் மூன்று தொழில் பிரிவுகளில் பயிற்சி நடத்தப்படுகின்றது. இத்திட்டத்திற்கென 2002-2003 ஆம் ஆண்டிற்கு ரூ.11.22 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

12.13 1999 ஆகஸ்ட் முதல் ஆதிதிராவிட பயிற்சியாளர்களுக்கு மாதாந்திர உதவித்தொகை ரூ.55/-லிருந்து ரூ.150/- ஆகவும், பழங்குடியினருக்கு ரூ.82.50/-லிருந்து ரூ.175/- ஆகவும், உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. வரவு செலவுத் திட்டம் 2002-2003-ல் ரூ.53.00 இலட்சம் இதற்கென ஒதுக்கப்பட்டுள்ளது. இதைத் தவிர, அனைத்து தொழிற்பயிற்சி நிலையங்களிலும் 18 விழுக்காடு இருக்கைகள் ஆதிதிராவிடர் வகுப்பினருக்காகவும், ஒரு விழுக்காடு இருக்கைகள் பழங்குடியினருக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளன.

**தொழிலாளர்களுக்கான மாலை நேர வகுப்புகள்**

12.14. மாலை நேர வகுப்புகள் திட்டம், தொழிற்சாலைகள் அதிகமாக உள்ள அம்பத்தூர், கிண்டி, வடசென்னை, மதுரை, கோவை, திருச்சி, மேட்டூர் அணை மற்றும் ஓசூர் ஆகிய இடங்களில் உள்ள அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் 11 தொழிற்பிரிவுகளில் 1,085 தொழிலாளர்கள் பயிற்சி பெறும் வகையில் செயல்படுத்தப்படுகிறது. தாம் பணிபுரியும் தொழிற்சாலைகளில் போதிய அளவு பணிமனை



2002 மே 3]

செயல் திறனை அடையும் தொழிலாளர்களுக்கு, தொழிற்பிரிவுகளில் கருத்தியல் பாடங்கள் இந்த அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் மாலை நேர வகுப்புகளில் கற்பிக்கப்படுகின்றன. பயிற்சிக்குப் பின் தேர்வு நடத்தப் பெற்று, தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாநில அரசால் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

**பயிற்றுநர்களுக்கு பயிற்சி**

12.15 மிக விரைவாக முன்னேறி வரும் தொழில்நுட்ப வளர்ச்சியினை அறிந்து கொள்ளும் வண்ணம், மத்திய அரசினால் நடத்தப்படும் மத்திய பயிற்சி நிலையங்கள்/முன்னோடி பயிற்சி நிலையங்களுக்கு பயிற்றுநர்கள் பயிற்சிக்கு அனுப்பப்படுகின்றனர். ஒவ்வொரு ஆண்டும் 25 இளநிலை பயிற்சி அலுவலர்கள் மத்திய பயிற்சி நிலையங்களுக்கு பயிற்சியாளர் பயிற்சிக்காக அனுப்பப்பட்டு வருகின்றனர். இப்பயிற்சிக் காலம் ஓர் ஆண்டு ஆகும். இப்பயிற்சியினால், பயிற்றுநர்கள் தங்களது செயல் திறன் மற்றும் நவீன தொழில்நுட்ப அறிவினை மேம்படுத்திக்கொண்டு, அவற்றை பயிற்சியாளர்களுக்கு போதிப்பதற்கு ஏதுவாகின்றது. இளநிலை பயிற்சி அலுவலர், உதவி பயிற்சி அலுவலர் ஆகியோருக்கு ஒலி ஒளி சாதனங்களை உபயோகித்தல், வகுப்பறை மேலாண்மை, கல்வி கற்பிக்கும் நுணுக்கம் போன்றவற்றில் இரு வார கால பயிற்சி அம்பத்தூர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் அளிக்கப்படுகிறது. இந்த மறு பயிற்சி, அவர்களின் கல்வி கற்பிக்கும் திறனை மேலும் மேம்படுத்துகின்றது.

**வாழ்வியல் முன்னேற்ற பயிற்சித் திட்டம்**

12.16 தொழிற்சாலைத் தொழிலாளர்களின் பயிற்சிக்காக வாழ்வியல் முன்னேற்ற பயிற்சித் திட்டம், அம்பத்தூர் மற்றும் கோவையில் உள்ள அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் நடைபெற்று வருகிறது. நவீன இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் செயல்பாட்டினை தொழிற்சாலைப் பணியாளர்கள் தெரிந்து கொள்ளும் வகையில், இரண்டு அல்லது மூன்று வாரங்கள் வரை இப்பயிற்சி அவர்களுக்கு அளிக்கப்படுகின்றது. இதனால் தற்போதைய தொழில்நுட்பத் திறனுடன் தொழிலாளர்கள் பணிபுரிய ஏதுவாகின்றது.

[2002 மே 3

### இயந்திர பராமரிப்பு மையங்கள் மற்றும் பணிமனை

12.17 இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் பராமரிப்பு மிகவும் அவசியமானதொன்றாகும் எனவே, அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் உள்ள இயந்திரங்கள் மற்றும் கருவிகளை சீராக பராமரிப்பதற்கு வடசென்னை, சேலம், கோவை, மதுரை, திருச்சி மற்றும் பேட்டையில் உள்ள ஆறு அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் இயந்திர பராமரிப்பு மையங்களும், அம்பத்தூரில் மாநில அளவில் இயந்திர பராமரிப்பு பணிமனை ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### உயர் தொழில்நுட்பப் பயிற்சித் திட்டத்தை அறிமுகப்படுத்துதல்

12.18 உயர் தொழில்நுட்பத் திறன் முன்னேற்றம் தொழில் வளர்ச்சியிலும் தானியங்கி கருவிகளிலும் பெருகி வருகிறது. எனவே நவீன இயந்திரங்களை இயக்குவதிலும், பராமரிப்பதிலும் செயல்திறன் கொண்ட புதிய தலைமுறை தொழிலாளர்களை உருவாக்கும் பொருட்டு அம்பத்தூர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் கீழ்க்கண்ட தொழிற்பிரிவுகளில் உயர் தொழில்நுட்ப பயிற்சித் திட்டம் தொடங்கபபட்டுள்ளது :—

5. தானியங்கி இயந்திரத் தொழில்
6. கணினி சார் வரைவு
7. எழுத்து மற்றும் எண் மின்னணுவியல்
8. தனி கணினி பராமரிப்பு.

### அகில இந்திய திறனாய்வுப் போட்டி

12.19 அகில இந்திய திறனாய்வுப் போட்டியில் தமிழ்நாடு இதுவரை 17 முறை "சிறந்த மாநிலமாக" தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. மேலும், சனவரி 2001-ல் நடைபெற்ற 37-வது அகில இந்திய திறனாய்வுப் போட்டியில் சிறந்த மாநிலமாக தேர்ந்தெடுக்கப்பட்டு, இந்திய குடியரசுத் தலைவர் கேடயம் தமிழ்நாட்டுக்கு அளிக்கப்பட உள்ளது.



2002 மே 3]

## அத்தியாயம் - 13

## தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி

### முன்னுரை

13.1. 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி பல்வகை நிதி ஒதுக்கச் சட்டத்தின்கீழ், தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனத்திடம் மூன்று சமூக பாதுகாப்புத் திட்டங்களை நிர்வகிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவையாவன:—

1) தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டம்,
2) தொழிலாளர் வைப்பீடு இணைந்த காப்புறுதித் திட்டம்,
3) தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம்.

சமூகப் பாதுகாப்பு அளிப்பதும், தொழிலாளர்கள் பணியாற்றும் காலத்திலேயே அவர்களிடம் சேமிப்பு உணர்வினைத் தூண்டுவதும், அவர்கள் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் பயன்பெறவும், அவர்கள் பணியிலிருக்கும்போது இறந்தால் அவர்களுடைய குடும்பத்தினர் பயன்பெறும் வகையில் நிதி ஒதுக்கீடு செய்வதும் இம்மூன்று திட்டங்களின் முதன்மையான நோக்கங்களாகும். கடந்த 49 ஆண்டுகளில் இத்திட்டங்கள் செயல்பட்டு வந்த வரலாற்றினை நோக்கினால், அது படிப்படியாக முன்னேற்றம் கண்டு அடுத்தடுத்து வரும் ஆண்டுகளில் மென்மேலும் அதிகத் தொழிலாளர்களை இத்திட்டங்களின்கீழ் கொணர்ந்துள்ளதை உணரலாம். இம்மூன்று திட்டங்களும் வெவ்வேறு சமூகப் பாதுகாப்பினை அளிக்கின்றன. இதில் அரசு, தொழிலாளர், பணியமர்த்துவோர் ஒன்றிணைந்து செயல்படுகின்றனர். கடந்த ஆண்டுகளில் இம்மூன்று திட்டங்களின்கீழ் கிடைத்த பயன்கள் கணிசமாக அதிகரிக்கப்பட்டு, தொழிலாளர்களுக்கும் கூடுதல் பயன்கள் கிடைத்துள்ளன.

13.2 தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரியிலுள்ள வருங்கால வைப்பு நிதி உறுப்பினர்களுக்காக தமிழ்நாட்டிலுள்ள மண்டல வைப்பு நிதி நிறுவனம் சேவை செய்து வருகிறது.

[2002 மே 3

**மண்டல அலுவலகம், துணை மண்டல அலுவலகம் மற்றும் துணைக் கணக்கு அலுவலகங்களின் அமைப்பு**

13.3. தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரிக்கான வருங்கால வைப்பு நிதி நிறுவனத்தின் மண்டல அலுவலகம் சென்னையில் அமைந்துள்ளது. இதற்கு மண்டல வருங்கால வைப்பு நிதி ஆணையர் (நிலை-1) தலைவராவார். அவருக்கு உதவியாக 6 மண்டல வருங்கால வைப்பு நிதி ஆணையர்கள் (நிலை-2), 11 உதவி வருங்கால வைப்பு நிதி ஆணையர்கள் மற்றும் செயலாக்க அலுவலர்கள், உதவிக் கணக்கு அலுவலர்கள், உதவி செயல்முறைத் திட்ட அலுவலர்கள், புள்ளிவிவர பதிவாளர்கள், பிரிவு கண்காணிப்பாளர்கள், மேல்நிலை எழுத்தர், கீழ்நிலை எழுத்தர் மற்றும் 'டி' பிரிவு ஊழியர்கள் உள்ளிட்ட பிற 656 பணியாளர்களும் இவ்வலுவலகத்தில் பணிபுரிகின்றனர்.

13.4 வருங்கால வைப்பு நிதி ஆணையர் (நிலை-1)-ன் கட்டுப்பாட்டின் கீழ், மண்டல தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி ஆணையர்களை (நிலை-2)த் தலைவராகக் கொண்டு 6 துணை மண்டல அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. சென்னையின் புறநகர்களான அம்பத்தூர் மற்றும் தாம்பரத்தில் அமைந்துள்ள துணைக் கணக்கு அலுவலகங்கள், மண்டல வருங்கால வைப்பு நிதி ஆணையர் (நிலை-2) பொறுப்பின்கீழ் செயல்பட்டு வருகின்றன.

13.5 மண்டல அலுவலகம், துணை மண்டல அலுவலகங்கள் மற்றும் துணைக் கணக்கு அலுவலகங்கள் ஆகியவை அவற்றின் அதிகார வரம்பு எல்லைக்குட்பட்ட பகுதியிலுள்ள உறுப்பினர்களின் தேவைகளைக் கவனித்து வருகின்றன, விவரம் பின்வருமாறு:-

மண்டல அலுவலகங்கள் அமைந்துள்ள இடம்

| அலுவலகம் | நிறுவப்பட்ட நாள் | கவனிக்கப்படும் மாவட்டங்கள் | ஆய்வாளர் அலுவலகங்கள் |
|---|---|---|---|
| சென்னை (மண்டல அலுவலகம்) | 1-11-1952 | சென்னை மற்றும் புதுவை | சென்னை மற்றும் பாண்டிச்சேரி. |
| கோயமுத்தூர் (துணை மண்டல அலுவலகம்) | 15-11-1978 | கோவை, நீலகிரி | கோவை, திருப்பூர், பொள்ளாச்சி, குன்னூர், ஊட்டி |
| மதுரை (துணை மண்டல அலுவலகம்) | 1-4-1980 | மதுரை, திண்டுக்கல், இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், தேனி. | மதுரை, திண்டுக்கல், சிவகாசி. |



2002 மே 3]

| அலுவலகம் | நிறுவப்பட்ட நாள் | கவனிக்கப்படும் மாவட்டங்கள் | ஆய்வாளர் அலுவலகங்கள் |
|---|---|---|---|
| திருச்சி (துணை மண்டல அலுவலகம்) | 1-10-1980 | கடலூர், விழுப்புரம், கரூர், திருச்சி, நாகப்பட்டினம், திருவாரூர், புதுக்கோட்டை, அரியலூர், பெரம்பலூர். | திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், கரூர் மற்றும் கடலூர். |
| திருநெல்வேலி (துணை மண்டல அலுவலகம்) | 3-4-1993 | திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி. | திருநெல்வேலி, தூத்துக்குடி, நாகர்கோயில். |
| சேலம் (துணை மண்டல அலுவலகம்) | 6-3-1995 | சேலம், தருமபுரி, நாமக்கல், ஈரோடு. | சேலம், கிருஷ்ணகிரி, ஈரோடு. |
| வேலூர் (துணை மண்டல அலுவலகம்) | 5-12-1996 | வேலூர், திருவண்ணாமலை. | வேலூர். |
| அம்பத்தூர் (துணைக் கணக்கு அலுவலகம்) | 1-12-1997 | அண்ணாநகர் முதல் செங்குன்றம் வரை, பேசின்பாலம் சாலை முதல் கொளத்தூர் வரை/ ஸ்ரீபெரும்புதூர் முதல் ஆவடி வரை/ சென்னை - திருவள்ளூர் மாவட்டப் பகுதிகள். | அம்பத்தூர். |
| தாம்பரம் (துணைக் கணக்கு அலுவலகம்) | 6-11-1998 | கிண்டி தொழிற் பேட்டை முதல் மதுராந்தகம் வரை/ ஈக்காடுதாங்கல் முதல் மாங்காடு வரை/வேளச்சேரி முதல் சேலையூர் வரை/பம்மல் முதல் குன்றத்தூர் வரை/ சென்னை-காஞ்சிபுரம் மாவட்டங்களில் அமைந்துள்ள பகுதிகள். | தாம்பரம். |

[2002 மே 3

13.6 மேற்குறிப்பிட்டவை தவிர பாண்டிச்சேரி, ரங்காப்பிள்ளைத் தெரு அமலாக்க அலுவலர் அலுவலகத்தில், 31-8-1998 முதல் சேவை மையம் ஒன்று, மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட புதுவை மாநிலத்தில் இயங்கி வருகிறது. பாண்டிச்சேரி, காரைக்கால் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள பணியாளர்களின் தேவையினை இது நிறைவு செய்கிறது.

13.7 5-9-2001-ல் நடைபெற்ற மத்திய பொறுப்பாட்சியர்கள் (தொ.வ.வை.) செயற்குழுக் கூட்டத்தில் பாண்டிச்சேரியில் ஒரு துணை மண்டல அலுவலகம் திறப்பதற்கான கருத்துருவுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதற்கான நிர்வாக நடவடிக்கை ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளது.

**பணியாளர் நிலவரம்**

13.8 இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கையும் உறுப்பினர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து உள்ளதைத் தொடர்ந்து பணியாளர்களின் எண்ணிக்கையும் படிப்படியாக அதிகரித்து உள்ளது.

சென்னை மண்டல அலுவலகம், துணை மண்டல அலுவலகங்கள் மற்றும் துணைக் கணக்கு அலுவலகங்களில் 31-1-2002 ஆம் நாள் அன்று உள்ளவாறு பணியாளர்கள் எண்ணிக்கை நிலவரம் வருமாறு:

| தொடர் எண் | அலுவலகம் | பணியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | மண்டல அலுவலகம், சென்னை | 674 |
| 2. | துணை மண்டல அலுவலகம், கோவை | 357 |
| 3. | துணை மண்டல அலுவலகம், மதுரை | 346 |
| 4. | துணை மண்டல அலுவலகம், திருச்சி | 196 |
| 5. | துணை மண்டல அலுவலகம், திருநெல்வேலி | 362 |
| 6. | துணை மண்டல அலுவலகம், சேலம் | 159 |
| 7. | துணை மண்டல அலுவலகம், வேலூர் | 133 |
| 8. | துணைக் கணக்கு அலுவலகம், அம்பத்தூர் | 161 |
| 9. | துணைக் கணக்கு அலுவலகம், தாம்பரம் | 168 |
| | மொத்தம் | **2556** |



2002 மே 3]

**தொழிலாளர் வருங்கால வைப்புநிதிச் சட்டம், 1952**

13.9 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்புநிதி மற்றும் பல்வகை விதித் துறைகள் சட்டமானது, குறிப்பிட்ட 180 தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிற்சாலைகள் அல்லது நிறுவனங்களுக்கு, அவை 20 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களைப் பணிக்கமர்த்தியிருந்தால் பொருந்தும். முன்னர் இச்சட்டம், 3 ஆண்டுகளுக்கு மேற்பட்டு செயல்பாட்டிலுள்ள தொழிற்சாலைகள்/நிறுவனங்களுக்கு மட்டுமே பொருந்துவதாக இருந்தது. இந்தத் திட்டத்திற்கு 22-9-1997 முதல் கொண்டுவரப்பட்ட திருத்தத்தின்படி, அறிவிக்கை வெளியிடப்பட்ட தொழிற்சாலைகள் பட்டியலின் கீழுள்ள, 20 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணிக்கமர்த்தப்பட்டுள்ள தொழிற்சாலைகள்/தொழில் நிறுவனங்கள் அவை அமைக்கப்பட்ட நாள் முதல் இச்சட்டத்தின்கீழ் கொண்டு வரப்படும்.

**செயல்வரம்பு**

13.10 செயலாக்க அலுவலர்கள் நடத்தும் மதிப்பாய்வுகள் மூலமாக புதிய தொழில் நிறுவனங்கள் இச்சட்டத்தின் செயல்வரம்பின்கீழ் கொண்டுவரப்படுவதற்குப் பதிலாக, நிறுவனத்திற்குள்ளிருந்து தகவலறிவதன் மூலம் பிறழ்வோரை தெளிவாகக் கண்டறியும்வண்ணம், ''பணிவிணக்கம் 2001'' எனும் அதீத முன்னேற்பாடு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. செயல்வரம்பிற்குட்பட்ட அனைத்துத் தொழில் நிறுவனங்களையும் பணிவிணக்கத்திற்குள் கொணர வேண்டுமென்பதே இத்திட்டத்தின் முக்கிய உந்துகையாகும்.

13.11 இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, போதிய அமலாக்க அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுடன், வருங்கால வைப்பு நிதி உதவி ஆணையர் நிலையில் உள்ள ஓர் அலுவலரால் செயல்படுத்தப்படும் தகுந்த பணிவிணக்க வட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதைத் தவிர, நிறுவனத்திற்குள்ளிருந்தும், வெளியிலிருந்தும் ஆதாரங்களைத் திரட்டி புதிய தொழில் நிறுவனங்களை செயல்வரம்பிற்குள் கொணருவதற்காக ஓர் உளவுப் பிரிவும் அமைக்கப்பட்டுள்ளது.

**சந்தாதாரர்களுக்கு சேவை**

13.12 (அ) ஒவ்வொரு தொழிலாளருக்கும், அவரது கணக்கில் நிலுவையிலுள்ள அவரது சந்தாத் தொகைக்கு (வேலையளிப்போரின்

பங்கு உட்பட) ஆண்டு வருமானப் பங்கீட்டு பங்கு வட்டியாக வழங்கப்படுகிறது. 1952-53-ல் 3% ஆக இருந்த வட்டி வீதம் 1998-99 முதல் 31-6-2000 வரை 12% ஆக உயர்த்தப்பட்டது. இது மாதாந்திர நிலுவைத் தொகையில் 1-4-2001 முதல் 9.5% ஆகும்.

(ஆ) வருங்கால வைப்பு நிதியில் உறுப்பினராவதற்கு தேவையான குறைந்தபட்ச தகுதிகளைப் பூர்த்தி செய்த பின்னர், அவர்களுக்கு கீழ்க்கண்ட காரணங்களுக்காக வருங்கால வைப்பு நிதியிலிருந்து முன்பணம் வழங்கப்படுகிறது.

1. உறுப்பினரின் ஆயுள் காப்பீட்டுத் திட்டத்திற்கு சந்தா செலுத்துவதற்காக.
2. உறுப்பினர் மற்றும் அவருடைய குழந்தைகள், சகோதரர்/ சகோதரி ஆகியோரின் திருமணச் செலவுக்காக.
3. குழந்தைகளின் உயர் கல்வி.
4. வீடு அல்லது வீட்டு மனை வாங்க.
5. வீடு கட்டுவதற்காக பெற்ற கடன்களைத் திரும்பச் செலுத்த.
6. உடல் நலமின்மைச் செலவுக்காக.
7. தற்காலிகமாக வேலையில்லாதபோது ஏற்படும் செலவை ஈடுகட்ட.
8. உடல் ஊனமுற்ற உறுப்பினர் அவருக்குத் தேவையான சாதனங்களை வாங்குவதற்காகும் செலவிற்காக.
9. இயற்கைக் காரணங்களினால் ஏற்படும் சேதத்திற்கு ஈடுகட்ட ஆகும் எதிர்பாராத செலவுக்காக.

(இ) இத்திட்டத்தில் உறுப்பினராக உள்ள ஒருவர் கீழ்க்காணும் நேர்வுகளில் அவருடைய பங்குத் தொகையை இறுதியாக முழுவதுமாக திரும்பப் பெற உரிமையுடையவராகிறார் :—

1. 55 வயதான பின்னர் பணியிலிருந்து ஓய்வு பெறும்போது.
2. நிரந்தரமாக மற்றும் முழுவதுமாக பணி செய்ய இயலாதபோது.
3. தானாக முன்வந்து பணி ஓய்வு பெறும் திட்டத்தின்கீழ் பணி முடிவு செய்யப்படும்போது அல்லது ஆட்குறைப்புச் செய்யப்படும்போது.
4. சில சூழ்நிலை காரணமாக உறுப்பினர் தகுதியை இழந்துவிடும்போது.



## தொழிலாளர் வைப்பீடு இணைந்த காப்புறுதித் திட்டம், 1976

**செயல்வரம்பு**

13.13 இத்திட்டம் 1-8-1976 முதற்கொண்டு செயலுக்கு வந்தது. இது, 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி மற்றும் பல்வகை விதித் துறைகள் சட்டம் பொருந்தக்கூடிய அனைத்து தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்களின் தொழிலாளர்களுக்கும் பொருந்துகிறது.

**பங்களிப்பு**

13.14 காப்புறுதி நிதிக்கு, தொழிலாளர்கள் சந்தா தொகை செலுத்த வேண்டியதில்லை. வருங்கால வைப்புநிதி உறுப்பினர்களாக உள்ள தொழிலாளர்களின் ஊதியத்தில் 0.5 சதவீதம் என்ற வீதத்தில் வேலையளிப்போர் சந்தா தொகை செலுத்த வேண்டும். மத்திய அரசும் இந்தக் காப்புறுதி நிதிக்கு சந்தா செலுத்துகிறது. இது வேலையளிப்போர் சந்தா தொகையில் பாதிக்கு சமமான தொகையாக இருக்கும்.

**பயன்**

13.15 தொழிலாளர் வருங்கால வைப்புநிதித் திட்டத்தில் உறுப்பினராக இருக்கும் ஒருவர் இறந்து விடும் நேர்வில், இத்தொகையைக் கோரும் நபருக்கு, இறந்துவிட்டவரின் வருங்கால வைப்புநிதிக் கணக்கில் 12 மாத கால அளவில் இருப்பில் இருந்த சராசரி தொகைக்குச் சமமாக கூடுதல் தொகை வழங்கப்படும். இது அதிகபட்சமாக ரூ. 60,000 அளவிற்குக் கட்டுப்படுத்தப்பட்டிருக்கும்.

13.16 கடந்த ஆண்டுகளில், இறந்துவிட்ட உறுப்பினர்களின் வாரிசுகளுக்கு, தொழிலாளர் வைப்பீடு இணைந்த காப்புறுதித் திட்டப் பயன் வகையில், கீழே குறிப்பிட்டுள்ளவாறு தொகைகள் வழங்கி தீர்க்கப்பட்டுள்ளது.

| | 1998-1999 | 1999-2000 | 2000-2001 | 2001-2002 (ஜனவரி 2002 வரை) |
|---|---|---|---|---|
| தொகை வழங்கி தீர்க்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை. | 3222 | 3519 | 3258 | 2550 |
| பணம் பட்டுவாடா செய்யப்பட்டது (ரூ. இலட்சங்களில்) | 306.38 | 320.97 | 348.82 | 362.62 |

**தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம், 1995**

13.17 1971 ஆம் ஆண்டு தொழிலாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டத்தை மாற்றிவிட்டு உருவாக்கப்பட்ட 1995 ஆம் ஆண்டு தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம், தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி மற்றும் பல்வகை விதித் துறைகள் சட்டத்தின்கீழ் 16-11-1995 அன்று வகுக்கப்பட்டது. 1995 ஆம் ஆண்டு தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம் கீழ்க்காணும் பயன்களுக்கு வகை செய்கிறது.

| வ. எண் | தகுதி | ஓய்வூதிய வகை |
|---|---|---|
| அ. | பணியில் இருந்தாலும் இல்லாவிடினும் 58 வயது நிரம்பியதன்பேரில். | வயது முதிர்வு ஓய்வூதியம். |
| ஆ | 50 வயதுக்குமேல் 58 வயதுக்குக்கீழ் பணியை விட்டுச் சென்றுவிட்டிருந்தால். | குறைக்கப்பட்ட ஓய்வூதியம். |
| இ. | முழுமையாக மற்றும் நிரந்தரமாக இயலாமை அடைந்ததன் பேரில் பணியை விட்டுச் சென்றுவிட்டிருந்தால் | இயலாமை ஓய்வூதியம் |
| ஈ. | உறுப்பினர் இறந்து விடுவதன் பேரில். | விதவை-சிறார் ஓய்வூதியம். |
| உ. | பெற்றோர் இறந்து விடுவதன் பேரில்/அல்லது உறுப்பினர் இறந்த பிறகு தம்பதியர்களில் ஒருவர் மறுமணம் செய்து கொள்வதன் பேரில். | அனாதை ஓய்வூதியம். |
| ஊ. | உறுப்பினர் இறந்து விடுவதன் பேரில், உறுப்பினர் இறந்துவிடும் நாளன்று தம்பதியரில் ஒருவர் அல்லது 25 வயதுக்குக் குறைவாக உள்ள தகுதி வாய்ந்த சிறார் இல்லாதபோது. | நியமனதாரர் ஓய்வூதியம். |



13.18 1995 ஆம் ஆண்டு தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம், தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி மண்டலங்களில் மண்டல அலுவலகங்கள், துணை மண்டல அலுவலகங்கள் மற்றும் துணைக் கணக்கு அலுவலகங்கள் மூலம் திறம்பட செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1995 ஆம் ஆண்டு தொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட ஓய்வூதியங்களின் எண்ணிக்கை கீழ்வருமாறு:-

31-1-2002 ஆம் நாளன்று நிலவரப்படி ஓய்வூதியம் பெறுபவர்கள்.

| உறுப்பினர் ஓய் வூதியம் | விதவை/ மனைவியை இழந்தவர் ஓய் வூதியம் | குழந்தை ஓய் வூதியம் | அனாதை ஓய் வூதியம் | நியமன தாரர் ஓய் வூதியம் | ஊனம் உற்றோர் ஓய் வூதியம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 80215 | 45394 | 34854 | 582 | 1205 | 104 | 162354 |

13.19 1995 ஆம் ஆண்டு தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம் ஆண்டுதோறும் ஓய்வூதிய நிதியை மதிப்பிட வகை செய்கிறது. ஆண்டுதோறும் மதிப்பீடு செய்வதன் விளைவாக, ஓய்வூதியம் பெறுபவர்கள், அவர்களுடைய ஓய்வூதியத்தில் 16-11-1996 முதல் 4 விழுக்காடும், 16-11-1997 முதல் 5 விழுக்காடும், 1-4-1999 முதல் 4 விழுக்காடும் இடைக்கால நிவாரணத் தொகையாகப் பெற அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

13.20 நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலம் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. இதற்காக, தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரியிலுள்ள இந்தியன் வங்கி, பாரத ஸ்டேட் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி ஆகிய வங்கிகளுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டுள்ளது.

13.21 1995 ஆம் ஆண்டு தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம், நிறுவனம் ஒன்றை விட்டுச் செல்லும் உறுப்பினர்களுக்கு ஓய்வூதியப் பயன்களுடன் திட்டச் சான்றிதழ்கள் வழங்கவும் வகை செய்கிறது. வேறொரு நிறுவனத்தில் பணியில் சேரும்போது, அவர்களுடைய ஓய்வூதிய உறுப்பினர் தகுதியும் தொடரும். 10 ஆண்டுகளுக்குக் குறைவாக பணிபுரிந்த உறுப்பினர்கள், அவர்கள் பெற்ற சம்பளம், அவர்கள் பணியை விட்டுச் சென்ற நாளில் அவர்களுடைய பணிக்கால அளவு ஆகியவற்றின் அடிப்படையில் ஓய்வூதியப் பயனை திரும்பப் பெற அனுமதிக்கப்படுகின்றனர்.

[2002 மே 3

13.22. கடந்த மூன்று ஆண்டுகளில் ஓய்வூதியப் பயனை திரும்பப் பெற்றுள்ள உறுப்பினர்கள் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | 1998-99 | 1999-2000 | 2000-2001 | 2001-2002 (ஜனவரி 2002 வரை) |
|---|---|---|---|---|
| தீர்வு செய்யப்பட்ட நேர்வுகளின் எண்ணிக்கை | 1,55,246 | 2,07,787 | 2,36,697 | 1,94,106 |
| பட்டுவாடா செய்யப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்) | 3247.82 | 6233.57 | 7173.06 | 3890.22 |

**நிலுவை வசூல் நிர்வாகம்**

13.23 வேலையளிப்பவர்கள், ஒவ்வொரு மாதமும் பாரத ஸ்டேட் வங்கியில், செலுத்துச் சீட்டு ஒன்றின் மூலம் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி, தொழிலாளர் ஓய்வூதிய நிதி மற்றும் தொழிலாளர் வைப்பீட்டுத் தொகையுடன் இணைந்த ஈட்டுறுதி நிதி ஆகியவற்றுக்கான பங்குத் தொகைகளை அந்தந்தக் கணக்குகளில் செலுத்துகின்றனர். அவர்கள் அவ்வாறு செய்ய தவறும்போதெல்லாம், தொகை செலுத்தத் தவறியவர் கண்டறியப்பட்டு, நிலுவைத் தொகை மதிப்பீடு செய்யப்பட்டு, நிலுவைத் தொகையை வசூலிக்க, சட்டத்தின்கீழ் வகை செய்யப்பட்டுள்ள காப்புரைகளுக்கு உட்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஒரு நிதியாண்டின்போது இவ்வாறு மதிப்பீடு செய்யப்படுகின்ற கேட்புத் தொகை, வழக்கமாக அந்த நிதியாண்டிலேயே வசூலிக்கப்படுகிறது. அவ்வாறு வசூலிக்க சாத்தியமில்லாத சில நேர்வுகளில் அது, கேட்புத் தொகை நிலுவையாகக் கருதப்பட்டு வசூல் பணியாளரமைப்பினால் வசூலிக்கப்படுகிறது.

13.24 தொழிலாளர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்படுகின்ற வருங்கால வைப்புநிதித் தொகை மற்றும் இதர பிடித்தங்களை வேலையளிப்பவர் உடனுக்குடன் கட்டத்தவறிய நேர்வுகள் கண்டுபிடிக்கப்பட்டவுடன், சட்டப் பிரிவு 7-ஏ-யின்கீழ், அவ்வாறு செலுத்த வேண்டிய தொகை கணக்கீடு செய்யப்பட்டு, அத்தொகையை ஒரு குறிப்பிட்ட கால வரம்பிற்குள் செலுத்தி முடிக்குமாறு வேலையளிப்பவர் அறிவுறுத்தப்படுகிறார். இதற்கான நடவடிக்கை, தொழிலாளர் வருங்கால வைப்புநிதி உதவி ஆணையாளர் நிலையிலுள்ள ஓர் அலுவலரால் மேற்கொள்ளப்படுகிறது. மேலும், தொடர்ச்சியாக காலவரம்பு கடந்த



2002 மே 3]

பின்பும் கட்டத் தவறுகின்ற நிர்வாகத்தினருக்கு எதிராக சட்ட விதிகளின்படி கீழ்க்காணும் சட்ட நடவடிக்கைகள் மேற்கொண்டு, வசூல் செய்யப்படுகின்றது.

1. வேலையளிப்பவரின்/நிர்வாகத்தின் அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களை விற்பதை முடக்கி வைத்தல், வேலையளிப்பவரை குடியுரிமைச் சட்டத்தின்கீழ் கைது செய்து சிறைத் தண்டனை அளித்தல், வேலையளிப்பவரின்/நிர்வாகத்தின் அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களைப் பராமரித்து பரிபாலனம் செய்வதற்கு தகுந்த அலுவலரை நியமித்தல் மற்றும் வேலையளிப்பவரின்/நிர்வாகத்தின் வங்கி கணக்குகளை சட்ட விதி 8-ன்படி முடக்கிவைத்தல்.

2. சட்ட விதி 14-ன்கீழ் வேலையளிப்பவர்/நிர்வாகத்தின் மீது வழக்கு தொடர்தல்.

3. சட்ட விதிகள் 14(பி) மற்றும் 7 (க்யூ) வின்படி வேலையளிப்பவர் செலுத்தத் தவறிய தொகைக்கு உரிய வீதத்தில் வட்டி வசூலித்தல் மற்றும் தண்டனை வழங்குதல்.

4. இந்திய தண்டனை சட்ட விதி 405, 406 மற்றும் 409-ன்கீழ் காவல் துறையின் மூலம் வழக்கு தொடருவதற்காக, காவல் துறையிடம் புகார் கொடுத்தல்

5. குற்ற நடைமுறைச் சட்டப் பிரிவு 110-ன்கீழ் நீதிமன்றங்கள் மூலம் வழக்கு தொடருதல்.

இவ்வாறு, வேலையளிப்பவர் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையினை கீழ்க்காணும் முறைப்படி வகைப்படுத்தலாம்:

**(அ) நடப்பு கேட்பு**

13.25 நிலுவைத் தொகை கணக்கிடப்பட்டு அத்தொகை நடப்பு நிதியாண்டிற்குள் வசூல் செய்யப்படுகின்றது. நடப்பு நிதியாண்டில் வசூல் செய்வதற்குரிய நடப்பு கேட்புத் தொகை மற்றும் கடந்த மூன்றாண்டுகளில் வசூல் செய்த தொகை பற்றிய விவரங்கள் வருமாறு:

| வருடம் | நிலுவைத் தொகை | | |
|---|---|---|---|
| | திரும்பப் பெறத் தக்கது | திரும்பப் பெற முடியாதது | வசூலிக்கப்பட்ட தொகை |
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1998-1999 | 5046.76 | 1265.68 | 3655.12 |
| 1999-2000 | 6189.71 | 761.65 | 4499.83 |
| 2000-2001 | 7613.95 | 1208.63 | 5622.00 |
| 2001-2002 (ஜனவரி 2002 வரை) | 10293.29 | 790.01 | 5724.52 |

**(ஆ) நிலுவை கேட்பு**

13.26. நடப்பு நிதியாண்டில் வசூல் செய்ய இயலாத நடப்பு கேட்புகள், அடுத்த நிதியாண்டில் நிலுவை கேட்பாக வகைப்படுத்தப்படுகின்றன. கடந்த மூன்று ஆண்டுகளின் நிலுவை கேட்பு மற்றும் நிலுவை வசூல் ஆகிய விவரங்கள் கீழ்க்காணும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன:

| வருடம் | நிலுவைத் தொகை | | |
|---|---|---|---|
| | திரும்பப் பெறத் தக்கது | திரும்பப் பெற முடியாதது | வசூலிக்கப்பட்ட தொகை |
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1998-1999 | 1813.94 | 1968.44 | 1416.02 |
| 1999-2000 | 2485.60 | 2364.74 | 1561.37 |
| 2000-2001 | 2554.07 | 3218.95 | 1906.78 |
| 2001-2002 (ஜனவரி 2002 வரை) | 3014.76 | 4045.66 | 1559.31 |

13.27. நிலுவை வசூல் செய்ய இயலாததற்கான காரணங்கள் மற்றும் தொகை செலுத்தாதவர்களின் எண்ணிக்கை ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—



| வ. எண் | நிலுவைத் தொகை வகைப்பாடு | பிறண்ட நிறுவனங்கள் | வசூலிக்கப்படாத நிலுவைகள் (ரூபாய் இலட்சங்களில்) |
|---|---|---|---|
| 1. | கலைப்பின்கீழ் வரும் நிறுவனங்கள் | 55 | 287.05 |
| 2. | நீதிமன்றத்தால் தடை செய்யப்பட்டது | 359 | 1826.07 |
| 3. | BIFR/AAIFR இனங்கள் | 147 | 1373.11 |
| 4. | மற்றவை | 490 | 717.65 |

வசூல் செய்ய இயலாததற்கான பல்வேறு காரணங்கள் வருமாறு:-

1. தொழில் துறையில் ஏற்படுகின்ற பின்னடைவு.

2. தாராள இறக்குமதி மற்றும் உலகளாவிய வர்த்தகம்.

3. அதிகப்படியான நஷ்டத்தில் மூழ்கிய காரணத்தினால் மூடப்பட்டு, வசூலிப்பதற்கு எந்தவித அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள் இல்லாத நிலையில் உள்ள நிறுவனங்கள்.

4. ஜவுளித் துறை, மலைப் பயிர்சாகுபடி, மென்பொருள் தயாரிப்பு போன்ற தொழில் இனங்களில் ஏற்படுகின்ற நிதி நெருக்கடி.

*பொதுமக்கள் குறைகளைப் பற்றிக் கேட்டறியும் வழிமுறைகள்*

13.28. ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமை பொதுமக்கள் குறைகளைக் கேட்டறியும் நாளாக அனுசரிக்கப்பட்டு வருகிறது. பொதுமக்கள் குறைகளைக் கேட்டறியும் திட்டத்திற்குரிய ஒருங்கிணைப்பு அலுவலராக உதவி ஆணையாளர்/மண்டல அலுவலர் பதவித் தரத்தில் ஓர் அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார்.

13.29. மண்டல அலுவலகத்திலுள்ள பொதுமக்களின் குறைகள் பற்றிய தகவல் மையம் கணினிமயமாக்கப்பட்டுள்ளது. பொதுமக்களுக்கு சிறப்பான சேவை செய்வதற்காக குறைதீர்க்கும் பிரிவில் தற்போது கணினி முனையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. பொதுமக்களின் குறைகள் விரைவாகவும், தக்கவாறும் தீர்த்து வைக்கப்பட்டு வருகின்றன. இதன் காரணமாக, உறுப்பினர்கள் மிகுந்த மனநிறைவு அடைகின்றனர்.

ஒட்டு மொத்த மண்டலத்திலும் கடந்த மூன்றாண்டுகளில் குறை தீர்க்கப்பட்ட புகார்கள் பற்றிய விவரங்கள் வருமாறு:-

| ஆண்டு (1) | குறை தீர்க்கப்பட்ட புகார்களின் எண்ணிக்கை (2) |
|---|---|
| 1998-1999 | 27741 |
| 1999-2000 | 37194 |
| 2000-2001 | 38173 |
| 2001-2002 (ஜனவரி 2002 வரை) | 34582 |

13.30 பவிஷா நிதி அதாலத் கூட்டம் ஒவ்வொரு மாதமும் 10 ஆம் நாளில் மண்டல அலுவலகத்தில் மண்டல ஆணையாளர்-1 அவர்களாலும், துணை மண்டல அலுவலகங்கள் மற்றும் துணைக் கணக்கு அலுவலகங்களில் பொறுப்பு வகிக்கும் அலுவலர்களாலும் நடத்தப்பட்டு, தமிழ்நாடு, பாண்டிச்சேரி மண்டலம் குறித்த விவரங்கள் அடங்கிய தொகுப்பறிக்கை ஒன்று ஒவ்வொரு மாதமும் 20-ஆம் நாளில் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பப்படுகிறது.

**எதிர்காலத் திட்டம்**

13.31 உலகளாவிய பொருளாதாரம் மற்றும் தேசிய பொருளாதாரம் மாறுபட்டு வருவதற்கேற்ப, தொழிலாளர்களின் தேவைகளை நிறைவேற்றும் வண்ணம் "தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி மறு சிந்தனை" என்ற திட்டத்தை மூன்றாண்டுகளில் செயல்படுத்த வருங்கால வைப்பு நிதி நிறுவனம் முனைந்துள்ளது.

13.32 இத்திட்டத்தை முனைப்புடன் செயல்படுத்தவும், முன்னேற்றம் காணவும், செயல்பாடுகளை முழுமையாகக் கணினிமயமாக்க வேண்டியுள்ளது. இதனால் சந்தாதாரர், வேலை அளிப்பவர் மற்றும் பணியாளர் ஆகிய மூவரும் பயன்பெற ஏதுவாகின்றது. "தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி மற்றும் மறுசிந்தனை"த் திட்டத்தின் முக்கியக் குறிக்கோள்களாவன:—



1) சந்தாதாரரை உடனடியாக பதிவு செய்து ஒவ்வொருவருக்கும் தனியாக அடையாள எண் வழங்குவது.

2) இத்திட்டத்தில் ஏற்கெனவே பதிவுபெற்ற வேலையளிப்போருக்கு வருமானவரி செலுத்தும் கணக்கு எண்களுக்கு ஏற்றவாறு பிரத்தியேகமான எண் ஒதுக்கீடு செய்தல்.

3) சந்தாதாரர்களின் ஓய்வூதியம் மற்றும் இதர பலன்களை மின்னணு உதவியுடன் அனைத்து அலுவலகங்களிலும், ரிசர்வ் வங்கி மூலம் பட்டுவாடா செய்ய உதவுதல்.

4) வேலையளிப்போரால் மின்னணு கோப்பு முறையில் விவரங்கள் தொகுக்கப்படுதல்.

5) நிலுவையிலுள்ள கேட்புகள் தொடர்பாக சந்தாதாரர்களுக்கு தகவல் அளிப்பதற்காக பரஸ்பர தகவல் முறை.

6) கணினி உதவியால் தகவல் சேகரித்து, துரிதமாக தவறுகளைக் கண்டறிந்து நடவடிக்கை எடுக்கும் வண்ணம் கணினியில் கேட்பு வசூல் நிலுவைப் பதிவேடு பராமரித்தல்.

13.33. மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளால், இந்திய தொழிலாளர் வருங்கால வைப்பு நிதியின் வாயிலாக கீழ்க்காணும் முறையில் சந்தாதாரர்கள் பயனடைவார்கள்.

☐ நாட்டிலுள்ள 260 தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அலுவலகங்களில், ஓர் உன்னத அடையாள சிறப்பு அட்டையை அதாவது சமூக பாதுகாப்பு அட்டையை கணினியில் பொருத்தி, திரையில் நிலுவைக் கணக்கைப் பார்த்தறியலாம்.

☐ ஒரு சிறு கட்டணத்தைச் செலுத்தி, கணினியில் ஒரு நாணயத்தை நுழைத்து கடைசியாக முடிவடைந்த மாதத்திற்கான சந்தாதாரரின் வருங்கால வைப்பு நிதிக் கணக்கின் பிரதியை எடுத்துக்கொள்ள இயலும்.

☐ கணக்கிலிருந்து விரைவாக பணம் எடுப்பதற்கோ அல்லது இறுதித் தீர்விற்கோ, சந்தாதாரர் நாட்டில் உள்ள 260 அலுவலகங்களில் எந்தவொரு அலுவலகத்திலும் எந்தவொரு கேட்பினையும் தாக்கல் செய்யலாம்.

[2002 மே 3

☐ தொழிலாளர் வருங்கால வைப்பு நிதியின் அறிவிக்கப்பட்ட பணி கால அளவின்படி, கேட்பு பெறுவதற்கும், காசோலை வழங்குவதற்கும் அல்லது சந்தாதாரரின் வங்கிக் கணக்கில் தொகை வரவு வைப்பதற்கும் இடையே முறைக்காலம் 2-3 நாட்களாக இருக்கும்.

☐ வேலை மாற்றம் அல்லது இடமாற்றம் காரணமாக முந்தைய அலுவலகத்திலிருந்து கணக்கு மாற்றம் தேவையில்லை. நாட்டிலுள்ள எந்தவொரு தொழிலாளர் வருங்கால வைப்பு நல நிதி அலுவலகத்திலும் சந்தாதாரர் கணக்கு வைக்கப்படலாம். இதனால் கணக்கு மாற்றத் தாமதங்கள் களையப்படும்.

☐ தொழிலாளர் வருங்கால வைப்பு நல நிதி அலுவலகம், சந்தாதாரர் வாரியான தனித் தனிப் பதிவேட்டுக் கணக்கினை முறையாகப் பராமரிக்கும். இதனால் ஒவ்வொரு மாதமும் மாதாந்திர நிலுவையின் மீதான வட்டி வரவு வைக்கப்படும்.

☐ வேலையளிப்போர் எவராக இருந்தாலும், தொழிலாளர் எங்கு வேலை செய்தாலும், ஒவ்வொரு தொழிலாளரின் பிரத்தியேக அடையாள எண்ணைக் கொண்டிருக்கும் தனிக் கணக்குப் பதிவேடு மாறாமல் இருப்பதால், எந்தவொரு தொழிலாளர் நல நிதி அலுவலகத்திலிருந்தும் தொழிலாளர் தகவல் அறிந்து கொள்ளும் வகையில் அமைந்திருக்கும்.

☐ தொழிலாளர்கள் பயன் பெறும் வண்ணம் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி 'கியோஸ்க்' களை அருகிலுள்ள இதர பொது இடங்களுக்கும், தொழிற்பேட்டைகளுக்கு அருகில் உள்ள இடங்களுக்கும், தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனம் விரிவாக்கும்.

☐ சந்தாதாரர்களின் வசதிக்காகவும், செலவைக் குறைத்து சேவையை மேம்படுத்தவும் உறுப்பினர்களின் கேட்புகளை மின்னணுக் கோப்பு முறையில் பதிவு செய்ய தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனம் வேலையளிப்போர் மூலம் ஏற்பாடு செய்யும்.



2002 மே 3]

## அத்தியாயம் - 14

## தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம்

14.1 தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம், 1948 ஆம் ஆண்டு தொழிலாளர் அரசு ஈட்டுறுதிச் சட்டத்தின்கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள விதிமுறைகளின்படி இம்மாநிலத்தில் செயல்பட்டு வருகிறது. இத்திட்டம் தொழிலாளர்களுக்கும், அவர்தம் குடும்பத்தினருக்கும் பயனளிக்கும் வகையில் உருவாக்கப்பட்ட ஒரு சமூகப் பாதுகாப்புத் திட்டமாகும். இத்திட்டத்தின்கீழ், தொழிலாளர்களும், வேலையளிப்போரும் முறையே தொழிலாளரின் ஊதியத்தில் 1.75 சதவீதம் மற்றும் 4.75 சதவீதத்துக்கு ஈடான தொகையை அவர்தம் பங்காக அளிக்க வேண்டும். 1-1-1997 முதல் மாத வருமானம் ரூ.6,500/-க்கும் குறைவாகப் பெறும் தொழிலாளர்கள் அனைவரும் இத்திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

14.2 இத்திட்டத்தின்கீழ் தொழிலாளர்களுக்கு பின்வரும் உதவிகள் அளிக்கப்படுகின்றன :—

1. மருத்துவ உதவி : மருத்துவப் பொருட்களும் சிகிச்சையுமாக அளித்தல்.

2. உடல் நலமின்மைக்கான உதவி
3. நீண்டகால உடல் நலமின்மைக்கான உதவி
4. பேறுகால உதவி
5. தற்காலிக இயலாமையுற்றோருக்கான உதவி
6. நிரந்தரமாக இயலாமையுற்றோருக்கான உதவி
7. சார்ந்துள்ளோர்கள் நல உதவி
8. உடல் நலமின்மைக்கான கூடுதல் உதவி
9. இறுதிச் சடங்குக்குரிய செலவுத்தொகை

(2 முதல் 9 வரை) பணமாக அளித்தல்

14.3 இத்திட்டத்தின்கீழ் மருத்துவ உதவி அளிக்கும் பொறுப்பு மாநில அரசின் கடமையாகும். இதன் பொருட்டு ஏற்படக்கூடிய செலவினம், மாநில அரசு மற்றும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தினால், 1:7 என்னும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விகிதத்தில் பகிர்ந்து கொள்ளப்படுகிறது.

1-1-2002 அன்று நிலவரப்படி, இத்திட்டத்தின்கீழ் நன்மை அடைந்து வரும் நபர்களின் எண்ணிக்கை பின்வருமாறு:-

| | | |
|---|---|---|
| 1. | ஈட்டுறுதி செய்து கொண்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை | 15,67,074 |
| 2. | பயனடைவோரின் எண்ணிக்கை | 60,80,247 |

14.4 தமிழ்நாட்டில், ஈட்டுறுதித் திட்டம் செயல்படுத்தப்படுகின்ற அனைத்துப் பகுதிகளிலுள்ள தொழிலாளர்களின் குடும்பத்தினரும் முழு மருத்துவச் சிகிச்சைப் பெற தகுதியுடையவர்கள் ஆவர். தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம், மருத்துவ உதவிக்கான தொகைக்கு உச்சவரம்பு நிர்ணயித்துள்ளது. அதன்படி, 1-4-1999 முதல், ஈட்டுறுதி செய்யப்பட்டுள்ள ஒவ்வொரு தொழிலாளர் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஓர் ஆண்டிற்கு மருத்துவச் செலவிற்கான உச்சவரம்பு ரூ.600/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது. ஓர் ஆண்டிற்கு, ஒரு காப்பீட்டு நபருக்கு, நிர்வாகச் செலவின் பொருட்டு ரூ.360/-ம், மருத்துவச் செலவிற்கு ரூ.170/-ம், மீளப்பெறும் மருத்துவச் செலவிற்கு ரூ.50/-ம் மற்றும் கருவிகள் பராமரிப்பிற்கென ரூ.20/-ம் வழங்கப்படுகிறது.

14.5 இந்தச் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் மேலும் அதிகமான தொழிலாளர்களும் அவர்தம் குடும்பத்தினரும் பயன்பெறும் வகையில், தேவையான இடங்கள் கண்டறியப்பட்டு, அவ்விடங்களில் மருந்தகங்களும், மருத்துவமனைகளும் திறப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2001-2002-ல் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ள பகுதிகள் குறித்த விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

**(அ) 2001-2002-ல் திட்டம் விரிவுபடுத்தப்பட்ட பகுதிகள்—**

1. அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம் (1-8-2001)
2. வடமதுரை, திண்டுக்கல் மாவட்டம் (1-8-2001)
3. தாடிக்கொம்பு, திண்டுக்கல் மாவட்டம் (1-8-2001)
4. ஆலங்குளம், விருதுநகர் மாவட்டம் (20-1-2002)
5. இராசிபுரம், நாமக்கல் மாவட்டம் (1-2-2002)
6. சோளிங்கர், வேலூர் மாவட்டம் (1-3-2002)





**ஆ) திட்டம் விரிவுபடுத்தப்படவுள்ள புதிய பகுதிகள்—**

1. ஆமத்தூர், விருதுநகர் மாவட்டம்
2. தென்காசி, திருநெல்வேலி மாவட்டம்
3. பெரியநாயக்கன்பட்டி, விருதுநகர் மாவட்டம்
4. சிங்கம்புணரி, சிவகங்கை மாவட்டம்
5. சென்னிமலை, ஈரோடு மாவட்டம்
6. வானூர், விழுப்புரம் மாவட்டம்
7. சங்கரலிங்கபுரம், விருதுநகர் மாவட்டம்
8. நான்குநேரி, திருநெல்வேலி மாவட்டம்
9. காரைக்குடி, சிவகங்கை மாவட்டம்
10. கழுகுமலை, தூத்துக்குடி மாவட்டம்
11. வக்கனகுண்டு-காரியாப்பட்டி, விருதுநகர் மாவட்டம்
12. நல்லட்டிபாளையம், கோயம்புத்தூர் மாவட்டம்.

14.6 மேற்குறிப்பிட்ட அனைத்து இடங்களிலும், மருத்துவ ஏற்பாடுகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. இந்திய அரசு அறிவிக்கை வெளியிட்டதும், மருந்தகங்கள் செயல்படத் தொடங்கும்.

**தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் சித்த வைத்திய சிகிச்சை முறை**

14.7 தற்போது சென்னை மற்றும் கோயம்புத்தூர் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் சித்த வைத்திய பிரிவு இயங்கி வருகின்றது. இப்பிரிவினை சேலம், வேலூர், ஓசூர், சிவகாசி, மதுரை மற்றும் திருச்சி ஆகிய மாவட்டத் தலைநகரங்களில் அமைந்துள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளிலும் தொடங்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளது.

**மேம்படுத்தப்பட்ட சிறப்பு சிகிச்சை வசதிகள்**

14.8 சென்னை மற்றும் கோவை தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் இருதயவியல், நரம்பியல் மற்றும் சிறுநீரகவியல் துறைகள் ஏற்படுத்துவதற்கான கருத்துரு பரிசீலனையில் உள்ளது.

[2002 மே 3

**தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் 'யோகா' முறை அறிமுகப்படுத்துதல்**

14.9 முறையான யோகா பயிற்சியின் மூலம் குறிப்பிட்ட சில நோய்கள் குணமடைகின்றன. இதனைக் கருத்திற்கொண்டு, தமிழகத்தில் உள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் வழக்கமான சிகிச்சையுடன் 'யோகா' பயிற்சியையும் நோயாளிகளுக்கு அளிப்பதற்கான கருத்துரு தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**நோய் அறியும் மையங்கள் அமைத்தல்**

14.10 அம்பத்தூர், பல்லாவரம், இராசபாளையம், துடியலூர் மற்றும் இராணிப்பேட்டை ஆகிய இடங்களில் உள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களில் நோய் அறியும் மையங்கள் அமைத்திட புதுதில்லி தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்திற்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

**மருத்துவச் செலவினை ஈடுசெய்தல்**

14.11 நடப்பு ஆண்டில் (2001-2002), இருதய அறுவை சிகிச்சைகள், சிறுநீரக அறுவை சிகிச்சைகள், மூட்டு மாற்றும் அறுவை சிகிச்சைகள், தண்டுவட சிகிச்சை மற்றும் புற்றுநோய் சிகிச்சைகளுக்காக காப்பீட்டாளர் மற்றும் அவர்தம் குடும்ப அங்கத்தினர்களுக்காக செலவழித்த தொகையான ரூ.37,50,738/-ஐத் திரும்ப வழங்க செயல்முறை ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

225507
சென்னை-600 008

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.